THE

CURAL OF TIRUVALLUVAR,

SECOND PART;

WITH THE

COMMENTARY OF PARIMELARAGAR,

AN

AMPLIFICATION OF THAT COMMENTARY, AND A VERBAL INTERPRETATION OF THE TEXT,

BY

RAMANUJA CAVI-RAYAR;

AND

AN ENGLISH TRANSLATION OF THE TEXT,

BY

W. H. DREW,
OF THE LONDON MISSIONARY SOCIETY.

MADRAS:
PRINTED AT THE CHRISTIAN KNOWLEDGE SOCIETY'S PRESS,
CHURCH STREET, VEPERY.
1852.

D P L C CONNOR, PRINTER.

இதனுள்

திருவள்ளுவர் செய்த குறளின்

அறப்பாவில்துறவறமும், பொருட்பாவிலரசியலும்,

அவற்றிற்கு

பரிமேலழகர் செய்த இலக்கணவுரையும்,

இராமாநுசகவிராயர்

செய்த

வெள்ளுரையும், புத்துரையும்,

வி. துறுஐயர்செய்த

இங்கிலீஸ்மொழிபெயர்ப்பும்,

அடங்கியிருக்கின்றன.

௲௮௱௫௨௵
வேப்பேரிமிசியோன் அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

NOTICE.

In sending forth a Second Volume of this Edition of the Cural, the Translator desires to discharge a debt of gratitude, which he was prevented from acknowledging in the publication of the first Volume, by severe illness.

He desires to express his thankfulness to the Honorable J. F. Thomas, Esq , who first suggested the idea of the work, and whose kind promise of aid bore him over the first waters of difficulty: also to J. Walker, Esq., without whose generous assistance the work would probably not have been done: and also to the Rev. R. Caldwell, A. B. who kindly carried through the Press a considerable portion of the first Volume.

He also desires to express his sincere thanks to the Committee of the Christian Knowledge Society, who, by presenting him with a certain number of copies, free of charge, have relieved him from all pecuniary anxiety in Printing this Volume, and have secured for the Society, the Copy-right of both Volumes.

If his life be spared, he hopes to complete the work, in another Volume, in the course of three or four years.

He cannot however close this Notice without making mention of his late Tamil Teacher, Ramanuja Cavirâyar; whose death he mourns as a loss, not only to himself, but also to the interests of Tamil Literature generally. His thorough knowledge of the language; the native vigour of his mind; his power of long continued, patient labour; his delight in work; together with his manliness and integrity of character, so remarkable in a Hindoo, made him to me a helper in my Tamil studies and pursuits, whose value I could not over-estimate. But he is gone; and I shall enjoy his aid no more. Oh that I could feel that he has passed from this world to a better.

I am also much indebted to my present Moonshee, Sastriaiyar, for his care in reading the Tamil proofs, and for his aid in revising the English Translation.

W. H. DREW.

Vepery,
December 1852.

திருவள்ளுவர் குறளுரை.

THE CURAL OF TIRUVALLUVAR.

அறத்துப்பால். OF VIRTUE.

துறவறம். OF ASCETIC* VIRTUE.

பரி. இனிமுறையானே துறவறங்கூறிய தொடங்கினார். துறவறமாவது, மேற்கூறியவில்லறத்தின்வழுவாதொழுகியறிவுடையராய்ப்பிறப்பினையஞ்சிவீடுபேற்றின் பொருட்டுத்துறந்தார்க்குரித்தாகியவறம். அதுதான்வினைமாசுதீர்ந்தந்தக்கரணங்கடூயவாதற்பொருட்டவராற்காக்கப்படும்விரதங்களுமவற்றானவை தூயவாயவழியுதிப்பதாயஞானமுமென விருவகைப்படும். அவற்றுள்விரதங்களாவன இன்னவறஞ்செய்வலெனவுமின்னபாவமொழிவலெனவுந்தம்மாற்றலுக்கேற்பவரைந்துகொள்வன. அவைதாம்வரம்பிலவாகலிற்பெருகுமென்றஞ்சியவைதம்முள்ளே பலவற்றையுமகப்படுத்து நிற்குஞ்சிறப்புடையனசிலவற்றையீண்டுக்கூறுவான்றொடங்கிமுதற்கணருளுடைமைகூறுகின்றார்.

பு. அதாவது, மேலேசொல்லப்பட்ட இல்லறத்திலே தவறாமல்நடந்து அறிவுடையவராகிப்பிறவித்துன்பத்திற்கு அஞ்சி மோட்சத்தையடையும்பொருட்டு உலகப்பற்றுக்களையெல்லாம் வெறுத்துவிட்டவர்க்கு உரித்தாகியதருமமாம். அந்தத்தருமமானது, தீவினைமாசுதீர்ந்து அந்தக்கரணங்கள் பரிசுத்தமாகவேண்டியநிமித்தம் அவராற்காக்கப்படும் விரதங்களும், அந்தவிரதங்களாலவை பரிசுத்தமானபோது தோன்றுவதாகிய ஞானமுமென இருவகைப்படும். அவற்றுள் விரதங்களாவன, இன்னதருமஞ்செய்வேனெனவும் இன்னபாவம் ஒழி

---

* The duties of Ascetics.

வேனெனவும் தம்முடைய சத்திக்குப்பொருந்தும்படிவரையறுத்துக்கொள்ளப்படுவன. அவைதாம் அளவில, ஆதலால் விரிந்துபோமென்று அஞ்சி அவை பலவற்றையும் உள்ளடக்கி நிற்குஞ் சிறப்புடையனவாகிய சிலவற்றை யிங்கேசொல்லத்தொடங்கிவைத்து முதலிலே அருளுடைமை கூறுகின்றார்.

The Author has divided Virtue into two parts, viz. Domestic Virtue, இல்லறம், and Ascetic Virtue, துறவறம். He here* treats of the second part. This may be subdivided into two other parts; விரதம்† Vows, and ஞானம்,‡ Wisdom. With such an arrangement, the first nine Chapters of this part would be included under the first division, of Vows; and the remaining four under the second, or Wisdom; but the Author does not formally announce this distinction.

உரு. அதிகாரம். CHAPTER XXV.

அருளுடைமை. On Kindness.§

பரி. அஃதாவது, தொடர்புபற்றுதியல்பாகவெல்லாவுயிர்கண்மேலுஞ்செல்வதாகிய கருணை. இல்லறத்திற்கன்புடைமைபோலவிதுதுறவறத்திற்குச்சிறந்தமையின் முற்கூறப்பட்டது.

பு. அதாவது, காரணகாரியத்தொடர்ச்சி பற்றாமல் இயல்பாகவேயெல்லாவுயிர்கள் மேலுஞ்செல்வதாகிய கருணையுடையவராதல். இல்லறத்திற்கு அன்புடைமைபோலத் துறவறத்திற்கு இது சிறந்தமையால் அதுநோக்கி முன்வைக்கப்பட்டது.

---

* Domestic Virtue is the subject of Part I. of this work.

† விரதம், a vow; vowed observance; the line of conduct to which a man binds himself by vow.

‡ ஞானம். Wisdom, is said to be the fruit of the due observance of these vows.

§ The exhibtion of a kind, gentle and loving mind towards all creatures, and every thing that exists, down even to vegetables, which the Hindoos call creatures of *one* life. This disposition is said to hold the chief place among ascetic virtues, as love does among domestic virtues.

க. அருட்செல்வஞ்செல்வத்துட்செல்வம்பொருட்செல்வம்
பூரியார்கண்ணுமுள.

The wealth of kindness is wealth of wealth*; the wealth of property is possessed by the basest† of men, as well as (by the good). - - - - - - - - - 241

பரிமேலழகர்பதவுரை. செல்வங்கள்பலவற்றுள்ளுமாராய்ந்தெடுக்கப்பட்ட செல்வமாவதருளான்வருஞ்செல்வம். அஃதொழிந்தபொருளான்வருஞ்செல்வங் களிழிந்தார்கண்ணுமுளவாமாகலானென்றவாறு.

பரி. விரிவுரை. அருளான்வருஞ்செல்வமாவதுயிர்களையோம்பியவ்வறத்தான்மேம்படுதல் உயர்ந்தார்கண்ணேயல்லதில்லாதவருட்செல்வமேசிறப்புடையசெல்வம். ஏனைநீசர்கண்ணுமுளவாய்பொருட்செல்வங்கள் சிறப்பிலவென்பதாம்.

புதிதாகியபதவுரை. செல்வத்துட்செல்வம்-செல்வங்கள்பலவற்றுள்ளும் ஆராய்ந்தெடுக்கப்பட்டசெல்வமாவது, அருட்செல்வம்-அருள்காரணமாகத்தோன்றுஞ்செல்வமாம், (அது தவிர்ந்த) பொருட்செல்வம்-பொருள்காரணமாகவருஞ்செல்வங்கள், பூரியார்கண்ணுமுள-கீழ்மக்களிடத்துமுண்டாமாதலால், என்றவாறு.

புதுவிரிவுரை. அறிவுமுதலானவைகளாலே உயர்ந்தோரிடத்தேயிருப்பது, அருட்செல்வம். அவையின்மையால் தாழ்ந்தோரிடத்துமிருப்பது, பொருட்செல்வம். ஆதலால் எல்லாவுயிர்களையும் பாதுகாத்தற்கேதுவாகிய அருளினாலேவருஞ்செல்வமே சிறந்ததென்பதாயிற்று. ஆகவே, கீழ்மக்களிடத்திருந்த பொருட்செல்வம், அருளில்லாததினாலே பிறவுயிர்களைப் பாதுகாத்தற்கும் உபயோகப்படாது, அறிவில்லாததினாலே தம்மைப்பாதுகாத்தற்குமுபயோகப்படாது, இழிவாமென்பதாயிற்று.

உ. நல்லாற்றானாடியருளாள்கபல்லாற்றாற்
றேரினுமஃதேதுணை.

(Stand) in the good path, consider, and be kind; although you may perfectly study the rules of many different (sects), that

* Or, true wealth, the chief wealth.

† பூரியார். The mean, low; opposed to சீரியார், the great, illustrious.

(kindness) will be your best aid, (in the acquisition of heavenly bliss). - - - - - - - - - 242

பரி. அளவைகளானும்பொருந்துமாற்றானுநன்றாநெறியிலேநின்றுநமக்குத்துணையாமறம்யாதென்றாராய்ந்தருளுடையராகவொன்றையொன்றொவ்வாதசமையநெறிகளெல்லாவற்றானுமாராய்ந்தாலுந்துணையாவதவ்வருளேபிறிதில்லையென்றவாறு.

வி. அளவைகளாவன, பொறிகளாற்காணுங்காட்சியுங்குறிகளானுய்த்துணருமநுமானமுங்கருத்தாமொழியாகியவாகமமுமெனமூன்று. ஒப்புப்பற்றியுணருமுவமையுமிங்ஙனமன்றாயினிதுகூடாதென்றுணருமருத்தாபத்தியுமின்மைக்குமாறாகியவின்மையுமெனவிவற்றையுங்கூட்டியாறென்பாருமுளர். இவையுமொருவாற்றானவற்றுளடங்குதலின்மூன்றெனலேகருத்து. பொருந்துமாறாவதிது கூடுமிது கூடாதெனத்தன்கண்ணேதோன்றுவது. இதனைவடநூலார்யுத்தியென்ப. ஆற்றென்பதுவேற்றுமைமயக்கம். ஒன்றையொன்றொவ்வாமையாவது, மதவேறுபாட்டாலளவைகளும்பொருள்களுந்தம்முண்மாறுகோடல். அன்னவாயினுமருடுணையெனற்கொக்குமென்பதாம். உயிரைவிட்டுநீங்காதிருமையினுமுதவலிற்றுணையென்றார். இவையிரண்டுபாட்டானுமருளினதுசிறப்புக்கூறப்பட்டது.

பு. பல்லாற்றால்-(ஒன்றுக்கொன்றொவ்வாத)பலசமையமார்க்கங்களானும், தேரினும்-(உயிர்க்குறுதியாவதியாதென) ஆராய்ந்துதெளிந்தபோதும், அஃதேதுணை - அந்தஅருளே சகாயப்படுவது, (ஆதலால்) நல்லாற்றால்-ஒருநன்மார்க்கத்திலேநின்று, நாடி-(எல்லாநூல்களையும்) ஆராய்ந்து, அருளாள்க-அருளுடைமையையேயுறுதிப்பொருளாகஆள்க, எ-று.

வி. எல்லாச்சமையத்தாரும் உறுதியாகவிரும்பப்படுவதுஅருளாதலால் உயிர்க்குறுதிவேண்டினோர்அருளுடையராகவென்பதுகருத்து. இவையிரண்டுபாட்டானும்அருளின்சிறப்புக்கூறப்பட்டது.

௩. அருள்சேர்ந்தநெஞ்சினார்க்கில்லையிருள்சேர்ந்த
வின்னாவுலகம்புகல்.

They will never enter the world of darkness and wretchedness, whose minds* are the abode of kindness. - - 243

பரி. இருள்செறிந்ததுன்பவுலகத்துட்சென்றுபுகுதலருள்செறிந்தநெஞ்சினையுடையார்க்கில்லையென்றவாறு.

---

* அருள் சேர்ந்தநெஞ்சு. A mind with which kindness is united.

வி. இருள்செறிந்ததுன்பவுலகமென்றது, இணிந்தவிருளையுடைத்தாய்த்தன் கட்புக்கார்க்குத்துன்பஞ்செய்வதோர்நரகத்தை. அதுகீழுலகத்துளோரிடமாக வினுலகமெனப்பட்டது.

பு. இருள்சேர்ந்த-அந்தகாரந்துன்னிய, இன்னாவுலகம் புகல் - துன்பந்தரும் உலகமாகியநரகத்திலேசேர்வது, அருள் சேர்ந்தநெஞ்சினார்க்கில்லை-அருள்செறிந்தமனமுடையார்க்கு இல்லை, எ-று.

வி. அருளுடையார்க்குநரகவேதனையில்லையென்பதுகருத்து.

௪. மன்னுயிரோம்பியருளாள்வாற்கில்லென்ப
தன்னுயிரஞ்சும்வினை.

(The wise) say that the evils, which his soul* would dread, will never come upon the man who exercises kindness and protects the life† (of other creatures). - - - - - 244

பரி. நிலைபேறுடையவுயிர்களைப்பேணியவறத்ின்கணருளுடையனாவானுக்குத் தன்னுயிரஞ்சுதற்கேதுவாகியதீவினைகளுளவாகாவென்றுசொல்லுவரறிந்தோ ரென்றவாறு.

வி. உயிர்களெல்லாநித்தமாகலின்மன்னுயிரென்றார். அஞ்சுதல், துன்பநோக்கியஞ்சுதல். அன்னவறத்தினான்கொலைமுதலியபாவங்கள்செய்யானெனவேமறுமைக்கணரகம்புகாமைக்கேதுகூறியவாறாயிற்று.

பு. தன்னுயிரஞ்சும்வினை-தன்னுயிரஞ்சுதற்கேதுவாகவருந்தீவினைப்பயன்கள், மன்னுயிரோம்பியருளாள்வாற்கு - நிலைபேறுடையவெல்லாவுயிர்களையும்பாதுகாத்து அருளுடைமையாகியதருமத்தைக்கைக்கொள்வானுக்கு, இல்லென்ப-இல்லையென்றுசொல்லுவர்புலவர், எ-று.

வி. தீவினைப்பயன்களைத்தீவினையென்றது ஆகுபெயர். எனவேமறுமையிலேநரகவேதனையில்லாமைக்கு ஏதுகூறியவாறாயிற்று.

---

* உயிர் must here be rendered *soul.* It may mean both soul and life. The Hindoos regard the souls of men and beasts as of a similar nature.

† மன்னுயிர், enduring life. Life is so called, because the supposition is that no life can be destroyed; but that when it disappears in one form, it re-appears in another.

௫. அல்லலருளாள்வார்க்கில்லைவளிவழங்கு
மல்லன்மாஞாலங்கரி.

This* great rich earth,† over which the wind blows, is a witness that sorrow never comes upon the kind-hearted. - - 245

பரி. அருளுடையார்க்கிம்மையினுமொருதுன்பமுண்டாகாததற்குக்காற்றியங்குகின்றவளப்பத்தையுடையபெரியஞாலத்துவாழ்வார்சான்றென்றவாறு.

வி. சான்றாவார்தாங்கண்டுதேறியபொருளைக்காணாதார்க்குத்தேற்றுதற்குரியவர். அருளாள்வார்க்கல்லலுண்டாகவொருகாலத்துமோரிடத்துமொருவருங்கண்டறிவாரின்மைமுகத்தான்ஞாலத்தார்யாவருஞ்சான்றென்பார்வளிவழங்குமல்லன்மாஞாலங்கரியென்றார்.எனவேயிம்மைக்கணென்பதுபெற்றாம். ஞாலம் ஆகுபெயர். இவைமூன்றுபாட்டானுமத்துணையுடையார்க்கிருமையினுந்துன்பமில்லாமைகூறப்பட்டது.

பு. அல்லல்-துன்பமானது, அருளாள்வார்க்கில்லை-அருளுடைமையெனனுந்தருமத்தைக்கைக்கொண்டாள்வார்க்கு இல்லை, வளிவழங்கும்-காற்றடிக்கின்ற, மல்லல்-வளப்பொருந்திய, மாஞாலம்-பெரிதாகியபூமியிலுள்ளோர், கரி-அதற்குச்சாட்சியாவர், எ-று.

வி. சாட்சியாவார், தாங்கண்டுதேறியபொருளைக்காணாதவர்க்குத்தேற்றுதற்கு உரியோர். அருளாள்வார்க்குத்துன்பமுண்டாகவோரிடத்துமொருவருங் கண்டறிந்திலாமைபற்றியுலகத்தார்யாவருஞ்சாட்சியென்றுசொல்லவந்தவர், வளிவழங்குமல்லன்மாஞாலங்கரியென்றார். எனவே, இதுஇம்மையிலென்பதாயிற்று. ஞாலத்துள்ளவரைஞாலமென்றது ஆகுபெயர். இவைமூன்றுபாட்டாலும் அருளுடையார்க்கு, இருமையிலுந்துன்பமில்லையென்பதுகூறப்பட்டது.

---

* Another reading (which I prefer), which substitutes வழிவழங்கும் for வளி, will give the following rendering, "This great, rich earth, *with all its generations of men*, is witness that sorrow never comes upon the kind-hearted." வழிவழங்கும், where the descendants of men live. வழி, a way; those who have come in the way; descendants.

† ஞாலம். The earth, an ஆகுபெயர் for the inhabitants of the earth. They will be a witness to this, by seeing that the kind-hearted are always happy.

௬. பொருணீங்கிப்பொச்சாந்தாரென்பாருணீங்கி
யல்லவைசெய்தொழுகுவார்.

(The wise) say that, those, who neglect kindness and practice cruelties, neglected virtue* (in their former birth), and forgot (the sorrows which they must suffer). - - - - - 246

பரி. உயிர்கண்மாட்டுச்செய்யப்படுமருளைத்தவிர்ந்துதவிரப்படுங்கொடுமைகளைச்செய்தொழுகுவாரைமுன்னுமுறுதிப்பொருளைச்செய்யாதுதாந்துன்புறுகின்றமையைமறந்தவரென்றுசொல்லுவர்நல்லோரென்றவாறு.

வி. உறுதிப்பொருள், அறம். துன்புறுதல், பிறவித்துன்பமூன்றனையுமநுபவித்தல். மறந்திலராயினவ்வாறொழுகாரென்பது கருத்து.

பு. அருணீங்கி-உயிர்களிடத்துக்கருணைவைப்பதையொழிந்து, அல்லவைசெய்தொழுகுவார்-கொடுமைமுதலியபாவங்களைச்செய்துதிரிவாரை, பொருணீங்கி-உறுதிப்பொருளாகியதருமத்தைச்செய்யாதொழிந்து பொச்சாந்தாரென்பர்-முற்பிறப்பினுந்தாந்துன்புறுகின்றதன்மையைமறந்தவரென்றுசொல்லுவர் நல்லோர், எ-று.

வி. உறுதிப்பொருள், தருமம். துன்புறுதல், பிறவித்துன்பங்கள்மூன்றையுமநுபவித்தல். மறவாராயின் அப்படி நடவாரென்பது கருத்து.

௭. அருளிலார்க்கவ்வுலகமில்லைப்பொருளிலார்க்
கிவ்வுலகமில்லாகியாங்கு.

As† this world is not for those who are without wealth; so, that world is not for those who are without kindness. - - 247

பரி. உயிர்கண்மேலன்பிலாதார்க்குவீட்டுலகத்தின்பமில்லை, பொருளில்லாதார்க்கிவ்வுலகத்தின்பமில்லையாயினாற்போலவென்றவாறு.

வி. அவ்வுலகமிவ்வுலகமென்பனவாகுபெயர். இவ்வுலகத்தின்பத்திற்குப்பொருள்காரணமானாற்போலவவ்வுலகத்தின்பத்திற்கருள்காரணமென்பதாயிற்று.

பு. பொருளிலார்க்கு-திரவியமில்லாதவர்க்கு, இவ்வுலகமி

---

* பொருள், a thing; the true thing; virtue; as the one true thing which men should seek.

† Or, as those who have no money cannot enjoy this world, so those who have no kindness will not obtain that world.

ல்லாதியாங்கு, இந்தவுலகத்தின்பமில்லாததுபோல, அருளிலா ர்க்கு- கிருபையில்லாதவர்க்கு, அவ்வுலகமில்லை- அவ்வுலகத்தி ன்பமாகியமோட்சவின்பமில்லை, எ-று.

வி. உலகமென்பனவிரண்டும் ஆகுபெயர். இவ்வுலகத்தின் பத்திற்குப்பொருள்காரணமானாற்போல அவ்வுலகத்தின்பத் திற்கு அருள்காரணமென்பதாயிற்று.

அ. பொருளற்றார்பூப்பரொருகாலருளற்றா
ரற்றார்மற்றாதலரிது.

Those who are without wealth may, at some future time, become prosperous; those who are destitute of kindness are utterly destitute; for them there is no change. - - - - 248

பரி. ஊழான்வறியராயினாரதுநீங்கிப்பின்னொருகாலத்துச்செல்வத்தாற் பொலிவர். அவ்வாறன்றியருளிலாதார்பாவமறுமையினழிந்தாரே.பின்னொருகா லத்துமாதலில்லையென்றவாறு.

வி. மற்று வினைமாற்றின்கண்வந்தது. மேற்பொருளின்மையோடொருவாற் றானொப்புமைகூறினாராகலினதுமறுத்துப்பிறவாற்றானதனினுங்கொடிதென்பது கூறியவாறு.

பு. பொருளற்றார்- திரவியமில்லாதவர், பூப்பரொருகால்- ஒருகாலத்துச்செல்வமுடையவராவர், அருளற்றார் - அருளில் லாதவர், அற்றார்- (பாவம்வளர்தலாலே) அழிந்தவரே, மற் றாதலரிது - பின்னொருகாலத்தும்விருத்தியடைவதில்லை, எ-று.

வி. அழியாதுஎனநிற்றலால், மற்று, வினைமாற்றிலேவந் தது. மேலேபொருளின்மையோடொப்புமைகூறினாராதலால தைமறுத்து அதினினுங்கொடிது அருளின்மையென்பதுகூறி யவாறு.

௯. தெருளாதான்மெய்ப்பொருள்கண்டற்றாற்றேரி
னருளாதான்செய்யுமறம்.

If* you consider the virtue of him who is without kindness; it is

* The meaning is, that the one cannot truly know God, and the other cannot be truly virtuous.

like the perception of the true* being by him who is without wisdom. - - - - - - - - - - - 249

பரி. உயிர்கண்மாட்டருள்செய்யாதவன்செய்கின்றவறத்தையாராயின்ஞான மில்லாதவனொருகான்மெய்ப்பொருளையுணர்ந்தாற்போலுமென்றவாறு.

வி. மெய்ப்பொருள்மெய்ந்நூலிற்சொல்லும்பொருள்-நிலைபெற்றஞானமில் லாதவனிடையேமெய்ப்பொருளையுணர்ந்தாலதனைத்தன்ஞானமின்மையாற்ற னேயழித்துவிடும். அதுபோலவருளாதானிடையேயறஞ்செய்தாலதனைத்தன் னருளிலாமையாற்றனேயழித்துவிடுமென்பதாயிற்று. ஆகவேபிறவறங்கட்கெ ல்லாமருளுடைமைமூலமென்பதுபெற்றும். இவைநான்குபாட்டானுமத்துணை யிலாதார்க்குவருங்குற்றங்கூறப்பட்டது.

பு. தேரினருளாதான்செய்யுமறம்- (உயிர்களிடத்து) அருளைச்செய்யாதவன்செய்கின்றதருமத்தையாராயின், தெருளாதான்மெய்ப்பொருள்கண்டற்று ஞானமில்லாதவன்(ஒருபோது) மெய்ப்பொருளையுணர்ந்ததுபோலும், எ-று.

வி. ஆல், அசைநிலை. மெய்ப்பொருள், மெய்ந்நூலிலேசொல்லியபொருள். நிலைத்தஞானமில்லாதவன் இடையிலேமெய்ப்பொருளையுணர்ந்தானாயின் அதைத்தன்பேதைமையால்தானேயழித்துவிடுவான், அதுபோலவேஅருளில்லாதவன் இடையிலேதருமஞ்செய்வானாயின் அதைத்தன் அருளின்மையாகியவன்கண்மையினாலேதானேயழித்துவிடுவானென்பதாயிற்று. ஆகவே, மற்றத்தருமங்களுக்கெல்லாம் அருளுடைமையென்கின்றதருமம் மூலமென்பது பெறப்பட்டது. இவை நான்கு பாட்டாலும் அருளாகிய துணையில்லாதார்க்கு வருங்குற்றங் கூறப்பட்டது.

ம. வலியார்முற்றன்னை நினைக்கதான்றன்னின்
மெலியார்மேற்செல்லுமிடத்து.

When a man is about to rush upon those who are weaker than

---

* மெய்ப்பொருள், the true thing ; God. All else is said to be delusion, a lie, a non-existence, a dream. This is the Tattuva Philosophy ; the Adwaitha system, which maintains that there are *not two beings*, but only one being, God.

himself, let him remember how he has stood (trembling) before those who are stronger than himself. - - - - 250

பரி. தன்னின்வலியார்தன்னை நலியவரும்பொழுதவர்முன்றானஞ்சிநிற்குநிலையினைநினைக்கவருளிலாதவன்றன்னினெளியார்மேற்றனலியச்செல்லும்பொழுதென்றவாறு.

வி. மெலியாரெனச்சிறப்புடைய வுயர்திணைமேற்கூறினாராயினுமேனையஃறிணையுங்கொள்ளப்படும். அதனைநினைக்கவேயிவ்வுயிர்க்குமவ்வாறேயச்சமாமென்றறிந்ததன்மேலருளுடையனாமென்பதுகருத்து. இதனாலருள்பிறத்தற்குபாயங்கூறப்பட்டது.

பு. தான்றன்னின்மெலியார்மேற்செல்லுமிடத்து-அருளில்லாதவன்றனக்கு எளியவர்மேற்கோபித்துத்தண்டனைசெய்யப்போம்போது, வலியார்முற்றன்னை நினைக்க - தன்னின்வலியாராயினோர் தன்னைவருத்தப்படுத்தவரும்போது அவர்முன்னேதானஞ்சிநின்றநிலையைநினைக்க, எ-று.

வி. மெலியார்மேலெனவுயர்திணைப்பலர்பால் மேல்வைத்துக்கூறினாராயினும் "ஒருமொழியொழிதன்னினங் கொளற்குரித்து" என்பதனால் ஒழிந்தநான்குபாலினுங்கொள்ளப்படும். அவற்றையவ்வாறுநினைக்கவே இவற்றிற்குமிவ்வாறேயச்சமாமென்றறிந்துஅவ்வுயிர்களிடத்தருளுடையவனாவனென்பது கருத்து. இதனால் அருள்பிறத்தற்குபாயங்கூறப்பட்டது.

உ௬. அதிகாரம். CHAPTER XXVI.

புலான்மறுத்தல். ABSTINENCE FROM FLESH.*

ப-ம். அஃதாவது-ஊனுண்டலையொழிதல்-கொலைப்பாவத்தைப்பின்னுளதாக்கலினதற்குக்காரணமாதலையுமுன்னுமதனால்வருதலினதன்காரியமாதலையுமொருங்குடைத்தாயவூனுண்டலருளுடையார்க்கியைவதன்றாகலினதனைவிலக்குதற்கிஃதருளுடைமையின்பின்வைக்கப்பட்டது.

---

* மறுத்தல். The *rejection* of flesh, as food.

அதாவது, புலாலுண்பதைவிலக்கல். கொலைப்பாவத்தைப் பின்உளதாக்கலின் அதற்குக்காரணமாவதையும், முன்னுமக் கொலையாலன்றிப்புலால்தின்னக்கிடையாமையினக்கொலைக்கு க்காரியமாவதையுமொருமித்துடையதாகிய புலாலுணல் அருளுடையார்க்குப் பொருந்தாமையாலதை விலக்குதற்பொருட்டு இது அருளுடைமையின்பின்வைக்கப்பட்டது.

க. தன்னூன்பெருக்கற்குத்தான்பிறிதூனுண்பா
னெங்ஙனமாளுமருள்.

How can he be possessed of kindness,* who to increase his own flesh, eats the flesh of other (creatures). - - 251

பரி. தன்னுடம்பைவீக்குதற்பொருட்டுத்தான்பிறிதோருயிரினுடம்பைத் தின்பவனெவ்வகையானருளுடையனுமென்றவாறு.

வி. பயனிலாதவூன்பெருக்கலைப்பயனெனக்கருதிக் கொடுமைசெய்வானே யறிவிலாதகொடியோனென்றவாறாயிற்று. எங்ஙனமாளுமருளென்பதானானெ ன்பதுபயப்பநின்றவிகழ்ச்சிக்குறிப்பு.

பு. தன்னூன் பெருக்கற்கு-தன்னுடம்பைப்பெருக்கச்செய்தற்பொருட்டு, தான் பிறிதூனுண்பான்-தான்மற்றோருயிரினுடம்பைத்தின்பவன், எங்ஙனம்-எப்படி, ஆளுமருள்-அருளைத்தனக்குடைமையாக ஆள்வான், எ-று.

வி. பயனிலாதவுடல் வீங்குதலைப்பயனென்றெண்ணிக்கொடுமைசெய்பவனே கொடியரிற்கொடியோனென்றவாறாயிற்று. எங்ஙனமாளுமருளென்றது, ஆளானென்பதுபடநின்ற இகழ்ச்சிக்குறிப்பு.

உ. பொருளாட்சிபோற்றாதார்க்கில்லையருளாட்சி
யாங்கில்லையூன்றின்பவர்க்கு.

As those possess no property who do not take care of it, so those possess no kindness* who feed on flesh. - - 252

---

* அருள்.

பரி. பொருளாற்பயன்கோடலதனைக்காவாதார்க்கில்லையதுபோலவருளாற் பயன்கோடலூன்றின்பார்க்கில்லையென்றவாறு.

வி. பொருட்பயனிழத்தற்குக்காரணங்காவாமைபோலவருட்பயனிழத்தற் கூன்றினல்காரணமென்பதாயிற்று ஊனின்றோராயினுமுயிர்கட்கொருதீங்குநி னையாதார்க்கருளாடற்கிழுக்கில்லையென்பாரைமறுத்தஃதுண்டென்பதிவ்விர ண்டுபாட்டானுங்கூறப்பட்டது.

பு. பொருளாட்சி - பொருளாற்பயன்கொள்ளுமுரிமை, போற்றாதார்க்கில்லை - அதனைக்காவாதவர்க்கில்லை, ஆங்கு - அது போலவே, அருளாட்சி - அருளாற்பயன்கொள்ளுமுரிமை, ஊன்றின்பவர்க்கில்லை - புலால்தின்பவர்க்கில்லை, எ-று.

வி. பொருளின்பயன் இழந்துபோதற்குக்காரணம் போற்றாமைபோல, அருட்பயனிழத்தற்கு ஊனுணல்காரணமென்பதாயிற்று. ஊனுண்பாராயினும்உயிர்களுக்கொருதீங்கு நினையாதார் அருளாளுதற்குக்குற்றமில்லையென்பவரைநோக்கி மறுத்துக்குற்றமுண்டென்பது இந்த இரண்டுபாட்டானுங் கூறப்பட்டது.

௩. படைகொண்டார்நெஞ்சம்போனன்றூக்காதொன்றி
னுடல்சுவையுண்டார்மனம்.

Like the (murderous) mind of him who carries a weapon (in his hand), the mind, of him who feasts with pleasure on the body of another (creature), has no regard for goodness. - 253

பரி. கொலைக்கருவியைத்தங்கையிற்கொண்டவர்மனமதனாற்செய்யுங்கொ லையைநோக்குவதல்லதருளைநோக்காதவாறுபோலப்பிறிதோருயிரினுடலைச்சு வைபடவுண்டவர்மனமவ்வூனையேநோக்குவதல்லதருளைநோக்காதென்றவாறு.

வி. சுவைபடவுண்டல்காயங்களானினியசுவைத்தாக்கியுண்டல் - இதனானூன்றி ன்றார்மனந்தீங்குநினைத்தலுவமவளவையாற்சாதித்துமேலதுவலியுறுத்தலுங் கூறப்பட்டது.

பு. படைகொண்டார்நெஞ்சம்போல் - கொலைக்கருவியாகிய ஆயுதத்தைக்கையிலேகொண்டவருடையமனமானது (அதனாற்செய்யுங்கொலையைநோக்குவதன்றியருளைநோக்காதவாறு)

போல, ஒன்றினுடல்சுவையுண்டார்மனம்-மற்றோருயிரினுட லையினிய சுவையுண்டாக உண்டவர்மனமானது, நன்றாக்காது-அந்தவூனையேநோக்குவதன்றியருளைநோக்காது, எ-று.

வி. சுவைபடவுண்டல், பலகாயங்களாலின்சுவையுண்டாகச் செய்துண்டல். இதினாலே புலாலுண்பார்மனந்தீங்குநினைத்த லையுவமானப்பிரமாணத்தால், மெய்ப்பித்துமேற்கூறியவருளி ன்மையை வலியுறுத்துதலுங் கூறப்பட்டது.

௪. அருளல்லதியாதெனிற்கொல்லாமைகோறல்
பொருளல்லதவ்வூன்றினல்.

Is it asked what is kindness* and its opposite? It is the preservation of life, and its destruction. (Therefore) it is not right to eat that flesh, (from which life has been taken away). - 254

பரி. அருள்யாதெனிற்கொல்லாமை அருளல்லதியாதெனிற்கோறலாகலான க்கோறலான்வந்தவூனைத்தின்கைபாவமென்றவாறு.

வி. உபசாரவழக்காற்கொல்லாமைகோறலாகியகாரியங்களையருளல்லதென க்காரணங்களாக்கியுமூன்றின்கையாகியகாரணத்தைப்பாவமெனக்காரியமாக் கியுங்கூறினார் அருளல்லது கொடுமைசிறப்புப்பற்றியறமும்பொருளெனப்படுத லிற்பாவம்பொருளல்லதெனப்பட்டது கோறலெனமுன்னின்றமையினவ்வூனெ ன்றாரினியிதனையிவ்வாறன்றியருளல்லதென்பதனையுமொன்றாக்கிக்கொல்லாமை கோறலென்பதற்குக்கொல்லாமையென்னும்விரதத்தையழித்தலென்றுரைப் பாருமுளர்.

பு. அருளல்லதியாதெனின் கருணைப்பண்பல்லாதது யாதென்றுவினவின், கொல்லாமைகோறல்-கொல்லாமையென்கின்ற தருமத்தைக்கெடுப்பதாம், பொருளல்லது-தருமமல்லாதது யாதெனின், அவ்வூன்றினல்-அந்தக்கொலையினாலேவந்தமாமி சத்தையுண்பதுதானென்க, எ-று.

வி. யாதெனின்என்னும்வினைவைப்பின்னுங்கூட்டுக. அற முதலியநான்கையும் பொருளெனப்படுதலாலிங்கேபொருள்

---

* அருள்.

அறமெனப்பட்டது. பொருளல்லது, பாவமெனப்பட்டது. இனி-அருள்யாதெனின் அல்லதுயாதெனின் எனவிரண்டுவினாவாக்கி அதற்குவிடை கொல்லாமையுங் கொலையுமாமெனப் பொருள் கூறுவாருமுண்டு. அங்ஙனமாயின் பின்பு, பொருளல்லதென்பதையும், பொருள் யாதெனின்பொருளல்லதியாதெனின் எனப்பகுக்கவேண்டும். அங்ஙனம்பகுக்கப்பொருள்படாமையாற் பொருந்தாதென்க.

ரு. உண்ணாமையுள்ள துயிர்நிலை யூனுண்ண
வண்ணாத்தல்செய்யா தளறு.

Not to eat flesh contributes to the continuance of life; (therefore) if a man eat flesh, hell* will not open its mouth (to let him escape out, after he has fallen in). - - 255

பரி. ஒருசாருயிருடம்பின்கண்ணே நிற்றலூனுண்ணாமையென்கின்றவறத்தின்கணதாகலானந்நிலைகுலையவொருவனதனையுண்ணுமாயினவனை விழுங்கிய நிரையம்பின்னுமிழ்தற்கங்காவாதென்றவாறு.

வி. உண்ணப்படும்விலங்குகளதனூற்றேய்ந்துசிலவாகவேனையபலவாய்வருதலினுண்ணாமையுள்ளதுயிர்நிலையென்றார் உண்ணினென்பதுண்ணவெனத்திரிந்துநின்றது ஊனுண்டவனப்பாவத்தானெடுங்காலநிரயத்துளழுந்துமென்பதாம் கொலைப்பாவங்கொன்றார்மேனிற்றலிற்பின்னூனுண்பார்க்குப்பாவமில்லையென்பாரைமறுத்தஃதுண்டென்பதிவ்விரண்டுபாட்டானுங்கூறப்பட்டது.

பு. உண்ணாமையுள்ளதுயிர்நிலை-ஊனுண்ணாமையாகியதருமங்காரணமாகவே நிலைத்திருப்பதுசரீரம், ஆதலால், ஊனுண்ண-(ஒருவனந்தத்தருமத்தைக்கெடுத்து) அவ்வுடம்பினைச்சுவைபடவுண்பானாயின், அளறு-(மறுமையிலவனைவிழுங்கிய) நரகமானது, அண்ணாத்தல் செய்யாது-(பின்பு அவன்வெளியேவரும்படிக்கு) வாயைத்திறவாது, எ-று.

வி. உயிர்நிலைதேகம் ஆதலால் உடலில்லாவிடினுயிர்நில்லா

* That is, I suppose, hell will eat him in return. An absurd sentiment, as indeed is the whole of this Chapter. Such teaching nullifies what is really good.

தென்பதாயிற்று. ஆகவேயவ்வாறுசெய்து அந்தப்புலாலுண் பவனே மறுமையிலே நரகவாசியென்பதாம். கொலைப்பாவ ங்கொன்றார்மேல் நிற்றலால் அதுசெய்யாது ஊனுண்பார்க் குப்பாவமில்லையென்பாரைத்தடுத்து அது உண்டென்பதிந்த இரண்டுபாட்டானுங் கூறப்பட்டது.

கா. தினற்பொருட்டாற்கொல்லாதுலகெனின்யாரும்
விலைப்பொருட்டாலூன்றருவாரில்.

If* you say that the world does not destroy life for the purpose of eating; (then) no one would sell flesh for the sake of money. 256

பரி. பேதைமைகாரணமாகவல்லதூன்றின்கைகாரணமாகவுலகங்கொல்லா தாயிற்பொருள்காரணமாகவூன்விற்பார்யாவருமில்லையென்றவாறு.

வி. உலகென்பதிஙகுயிர்ப்பன்மைமேனின்றது. பின்னிகழுந்தின்கைமுன்னி கழுங்கொலைக்குக்காரணமாகாமையிற்றின்பார்க்குக்காரணத்தான்வரும்பாவமி ல்லையென்றவாதியைநோக்கியருத்தாபத்தியளவையாற்காரணமாதல்சாதித்த விதனான்மேலதுவலியுறுத்தப்பட்டது.

பு. தினற்பொருட்டாற் கொல்லாதுலகெனின் - (தின்பது காரணமாகவுலகங் கொலைசெய்வதாயிருக்க, அதைமறுத்து) தின்பது காரணமாக வுலகங் கொலைசெய்யாதென்றுசொல்லு வாயாயின், யாரும்விலைப்பொருட்டாலூன்றருவாரில்-யாரும் விலைப்பொருள்காரணமாகவூனைக்கொடுப்பவரில்லை, எ-று.

வி. உலகுஎன்றது, இங்கேஉயிர்ப்பன்மையெனநின்றது. பின்னுவதாகியதின்கை, முன்னுனதாகிய கொலைக்குக்காரணமா காமையால் தின்பார்க்குப்பாவமில்லையென்றவாதியைநோக்கி அருத்தாபத்திப்பிரமாணத்தால் புலாலுணல்கொலைக்குக்கார ணமாதல்சாதித்த இக்குறளினாலேமேற்கூறியநாகவேதனைவலி யுறுத்தப்பட்டது.

---

* Another reading gives—If the world did not buy (கொள்ளல்) flesh for the purpose of eating, no one would (kill and) sell it for the sake of money.

௭. உண்ணாமைவேண்டும்புலாஅல்பிறிதொன்றன்
புண்ணதுணர்வார்ப்பெறின்.

Since the wise consider flesh as the (unclean) ulcer of a body, let it not be eaten. - - - - - - - 257

பரி. புலாலாவதுபிறிதோருடம்பின்புண்ணது தூய்தன்மையறிவாரைப்பெறினதனையுண்ணாதொழியல்வேண்டுமென்றவாறு.

வி. அஃதென்னல்வேண்டுமாய்தம்விகாரந்தாற்றொக்கது-அம்மெய்ம்மையுணராமையினதனையுண்கின்றாரென்பதாம்-பொருந்துமாற்றானூஉனுண்டலிழிந்ததென்பதிதனாற்கூறப்பட்டது.

பு. புலாஅல்பிறிதொன்றன்புண்-புலாலாவதுவேறோருடம்பின் புண்ணாம், அதுணர்வார்ப்பெறின்-அத்தூய்மையன்றென்றறிவாரைப்பெறின், உண்ணாமைவேண்டும்-அதனையுண்ணாதொழிதல்வேண்டும், எ-று.

வி. அஃது என்பது, ஆய்தங் கெட்டுநின்றது. புலால்புண்ணெனப்பெயர்பெற்றதினாலும்பரிசுத்தமன்றாதலாலும் அந்த உண்மையையுணராமையாலதனையுண்கின்றாரென்பதாம் பொருந்தியவுலகநீதியாலும் ஊனுண்டல் இழிவென்பது இதனாற்கூறப்பட்டது.

௮. செயிரிற்றலைப்பிரிந்தகாட்சியாருண்ணா
ருயிரிற்றலைப்பிரிந்தவூன்.

The wise, who have freed themselves from mental delusion, will not eat the flesh which has been severed from an animal. 258

பரி. மயக்கமாகியகுற்றத்தினீங்கியவறிவினையுடையாரோருயிரினீங்கிவந்த வூனையுண்ணாரென்றவாறு.

வி. தலைப்பிரிவென்பதொருசொல்,பிணமெனவூனின்மெய்ம்மைதாமேயுணர்தலினுண்ணாரென்றார்.

பு. செயிரிற்றலைப்பிரிந்தகாட்சியார்-குற்றத்தில்நீங்கிய அறிவுடையோர், உயிரிற்றலைப்பிரிந்தவூனுண்ணார்-ஓருயிரில்நீங்கிவந்த விடக்கைத்தின்னார், எ-று.

வி. தலைப்பிரிதல், நீங்குதல். உயிர்நீங்கியபொழுதே பிண மென்றுணர்வராதலாலறிவுடையோர் உண்ணாரென்றார்.

௯. அவிசொரிந்தாயிரம்வேட்டலினொன்றி
னுயிர்செகுத்துண்ணாமைநன்று.

Not to kill and eat (the flesh of) an animal, is better than the pouring forth of ghee in a thousand sacrifices. - - 259

பரி. தீயின்கண்ணெய்முதலியவவிகளைச்சொரிந்தாயிரம்வேள்விவேட்டலினு மொருவிலங்கினுயிரைப்போக்கியதுநின்றவூனையுண்ணாமைநன்றென்றவாறு.

வி. அவ்வேள்விகளான்வரும்பயனினுமிவ்விரதத்தான்வரும்பயன்பெரிதெ ன்பதாம்.

பு. அவிசொரிந்தாயிரம்வேட்டலின்-நெருப்பிலே நெய்மு தலாகிய தேவருணவுகளைப்பெய்து ஆயிரம்யாகங்களைச் செய் வதைப்பார்க்கிலும், ஒன்றினுயிர்செகுத்துண்ணாமைநன்று- மிருகமுதலியவற்றுளொன்றினுயிரைப்போக்கி யந்தவுயிர்நி லையாகிய வூனையுண்ணாமைநன்று, எ-று.

வி. அவி, தேவருணவு. ஆயிரம்வேள்விப்பயனினும் ஓருயி ரைக்கொன்றுதின்னாமையின்பயன் அதிகநன்மை, என்பதாம்.

௰. கொல்லான்புலாலைமறுத்தானைக்கைகூப்பி
யெல்லாவுயிருந்தொழும்.

All creatures will join their hands together, and worship him who has never taken away life, nor eaten* flesh. - - 260

பரி. ஒருயிரையுங்கொல்லாதவனுமாய்ப்புலாலையுமுண்ணாதவனையெல்லாவு யிருங்கைகுவித்துத்தொழுமென்றவாறு.

வி. இவ்விரண்டறமுமொருங்குடையார்க்கல்லதொன்றேயுடையார்க்கதனா ற்பயனில்லையாகலிற்கொல்லாமையுமுடன்கூறினார்--இப்பேரருளுடையான்ம றுமைக்கட்டேவரின்மிக்கானுமெனவப்பயனதுபெருமைகூறியவாறு-இவைமூ ன்றுபாட்டானுமுண்ணாமையதுயர்ச்சிகூறப்பட்டது.

பு. கொல்லான்-ஓருயிரையுங் கொலைசெய்யாதவனுமாகி,

* மறுத்தல். Rejected.

புலாலைமறுத்தானை - புலாலுண்பதையும் விலக்கியிருப்பவனை, கைகூப்பியெல்லாவுயிருந்தொழும்-எல்லாவுயிர்களுங்கைகுவித்துத்தொழும், எ-று.

வி. நெல்முதலியவிதைகளெல்லாமுளைத்துக்காய்த்தலாலவற்றைக்கொன்றுதின்பதுங்கொலையும்புலாலுணவுமாதலாலிஃதுறவறத்தாருள்ளுங் காய்கனி கிழங்குமுதலிய புசிப்பார்க்குப்பொருந்தாது. சருகுமுதலிய புசிப்பவரையே நாடிற்று. அப்படிப்புசித்துத்தவஞ்செய்வோரெல்லாவுயிர்களிடத்துங்கருணையுடையவராவர், ஆகவேயவரையெல்லாவுயிர்களுங்கைகூப்பித்தொழுமென்பதுய்த்துணரநின்றமையினிதுவுய்த்துணர்வைப்பென்னும் உத்தி. இவைமூன்றுபாட்டாலும்புலாலுண்ணாமையினுயர்வுகூறப்பட்டது.

௨௭. அதிகாரம். CHAPTER XXVII.

தவம். On Austerities.*

பரி. அஃதாவதுமனம்பொறிவழிபோகாமனிற்றற்பொருட்டுவிரதங்களானுண்டிசுருக்கலுங்கோடைக்கண்வெயினிலைநிற்றலுமாரியினும்பனியினுநீர்நிலைநிற்றலுமுதலியசெயல்களைமேற்கொண்டுதம்முயிர்க்குவருந்துன்பங்களைப்பொறுத்துப்பிறவுயிர்களையோம்புதல். புலான்மறுத்துயிர்கண்மேலருண்முதிர்ந்துழிச்செய்யப்படுவதாகலினிதுபுலான்மறுத்தலின்பின்வைக்கப்பட்டது.

அதாவது, மணம் இந்திரியவழியிலேசெல்லாமற்பொருட்டு விரதாதிகளால் உண்டிசுருக்குதலும் கோடைகாலத்திலேவெயிலிலே நிலைநிற்றலும்மழைகாலத்திலும்பனிக்காலத்திலும்நீரி

* தவம். The practice of austerities; severe religious discipline: that is, the diminishing of food, and the infliction on oneself of various other bodily sufferings, in order to fix the mind, and prevent it from wandering in the path of the senses.

லே நிலைநிற்றலுமுதலியசெயல்களைமேற்கொண்டு அவற்றால் தம்முயிர்க்கு வருந்துன்பங்களைப்பொறுத்துப்பிறவுயிர்களைப்பாதுகாத்தல். புலான்மறுத்தெல்லாவுயிர்களின்மேல் அருள் முதிர்ந்தபோது செய்யப்படுவதாதலாலிதுபுலான்மறுத்தலின் பின்வைக்கப்பட்டது.

க. உற்றநோய்நோன்றலுயிர்க்குறுகண்செய்யாமை
யற்றேதவத்திற்குரு.

The nature* of religious discipline consists, in the endurance (by the ascetic) of the sufferings which it brings on himself, and in abstaining from giving pain to others. - - - - 261

பரி. தவத்தின்வடிவுண்டிசுருக்கன்முதலியவற்றாற்றம்முயிர்க்குவருந்துன்பங்களைப்பொறுத்தலுந்தாம்பிறவுயிர்கட்குத்துன்பஞ்செய்யாமையுமாகியவவ்வளவிற்றென்றவாறு.

வி. மற்றுள்ளனவெல்லாமிவற்றுள்ளேயடங்குதலினற்றேயெனத்தேற்றேகாரங்கொடுத்தார். தவத்திற்குருவற்றேயென்பதியானையதுகோடுகூரிதென்பதனையானைக்குக்கோடுகூரிதென்றாற்போலவாறாந்தன்பொருட்கணான்காவதுவந்தமயக்கம். இதனாற்றவத்திலக்கணங்கூறப்பட்டது.

பு. தவத்திற்குரு-தவத்திற்குவடிவாவது, உற்றநோய்நோன்றல்-உண்டிசுருக்கல் (முதலியவற்றால்) தமக்குவருந்துன்பங்களைப்பொறுத்தலும்,உயிர்க்குறுகண்செய்யாமை-பிறவுயிர்களுக்குத்துன்பஞ் செய்யாதிருத்தலும், அற்று-ஆகியஅவ்வளவையுடையதாம், எ-று.

வி. மற்றுள்ளதவத்தின் அங்கங்களெல்லாமிவற்றுள்ளேயடங்குதலால், அற்றே எனத்தேற்ற ஏகாரங்கொடுத்தார். தவத்திற்குருவற்றேயென்றது, யானையதுகோடுகூரிது என்பதை யானைக்குக்கோடுகூரிதென்றாற்போலஆறாவதன்பொருளிலே நான்காம்வேற்றுமையுருபுமயங்கிநின்ற பொருளின்மயக்கம். இதனாலே தவத்திற்கு இலக்கணங்கூறப்பட்டது.

---

* உரு. The form; characteristic; nature.

உ. தவமுந்தவமுடையார்க்காகுமவமதனை
யஃதிலார்மேற்கொள்வது.

Austerities can only be borne, and their benefits enjoyed, by those who have practised them (in a former birth*) ; it will be useless for those who have not done so, to attempt to practise them (now). - - - - - - - - - - 262

பரி. பயனேயன்றித்தவந்தானுமுண்டாவதுமுற்றவமுடையார்க்கேயாகலா னத்தவத்தையம்முற்றவமில்லார்முயல்வதுபயனின்முயற்சியாமென்றவாறு.

வி. பரிசயத்தாலறிவுமாற்றலுமுடையராய்முடிவுபோக்கலிற்றவமுடையார்க்காகுமென்றுமஃதில்லாதார்க்கவையின்மையின்முடிவுபோகாமையினவமாமென்றுங்கூறினார்.

பு. தவமுந்தவமுடையார்க்காகும்-இப்பிறப்பிற்செய்யத் தொடங்கிய தவந்தானும்முற்பிறப்பிற்செய்ததவமுடையார்க் கேஇடையூறில்லாமல் நிறைவேறும், (ஆதலால்) அதனை-அத் தத்தவத்தை, அஃதிலார்-அந்தமுன்செய்ததவமில்லாதவர், மே ற்கொள்வது-பூண்டுகொள்வது, அவம்-வீண், எ-று.

வி. பயனேயன்றித்தவந்தானுமெனநிற்றலால் உம்மையி றந்ததுதழுவியது, நன்மைசெய்தற்குப் பாவங்காரணமாகா மையால் நன்மைசெய்தற்கு நன்மையேகாரணமென்பதாம்.

௩. துறந்தார்க்குத்துப்புரவுவேண்டிமறந்தார்கொன்
மற்றையவர்கடவம்.

Is it to provide food for (the ascetics) who have abandoned (the desire of earthly possessions) that other persons have forgotten (to practise) austerity ? - - - - - - 263

பரி. இல்லறத்தையேபற்றிநிற்பார்துறந்தார்க்குண்டியுமருந்துமுறையுளு முதலவிலவிரும்பித்தாந்தவஞ்செய்தலைமறந்தார்போலுமென்றவாறு.

வி. துப்புரவு அநுபவிக்கப்படுவன. வேண்டியவேண்டியாங்கெய்தற்பயத்த வாகலின்யாவராலுஞ்செய்யப்படுவதாயதவத்தைத்தாஞ்செய்யுந்தானத்தின்

* So says the Commentator.

மேல்விருப்பமிகுதியான்மறந்தார்போலுமெனவேதானத்திற்றவமிக்கதென்பதுபெற்றாம்.

பு. மற்றையவர்கள்-இல்லறத்தையே பற்றிநிற்பவர், துறந்தார்க்குத்துப்புரவுவேண்டி-சந்நியாசிகளுக்கு உணவும்மருந்தும் இருப்பிடமும் உதவுதலைவிரும்பி, தவமறந்தார்கொல்-தாங்கள்தவஞ்செய்தலை மறந்தார்போலும், எ-று.

வி. துப்புரவு இங்கேயநுபவிக்கப்படுவனவாகிய எல்லாவற்றின்மேலும்நின்றது. விரும்பியவற்றைவிரும்பியவாறே எய்துதற்பயனையுடையதாகலின் அவர்செய்யுந்தானத்தைப்பார்க்கிலுந்தவம் மிக்கதென்பதாம்.

௪. ஒன்னார்த்தெறலுமுவந்தாரையாக்கலு
மெண்ணிற்றவத்தான்வரும்.

If* (the ascetic) desire the destruction of his enemies, or the aggrandizement of his friends, it will be effected by (the power) of his austerities. . - - - - - - - - - 264

பரி. தம்மறத்திற்குப்பகையாயழிவுசெய்தாரைக்கெடுத்தலுமதனையுவந்தாரையுயரச்செய்தலுமாகியவிவ்விரண்டையுந்தவஞ்செய்வார்நினைப்பராயினவர் தவ்வலியானவையவர்க்குளவாமென்றவாறு.

வி. முற்றத்துறந்தார்க்கொன்னாருமுவந்தாருமுண்மைகூடாமையிற்றவத்திற்கேற்றியுரைக்கப்பட்டது. எண்ணினென்றதனாலவர்க்கவையெண்ணாமையியல்பென்பதுபெற்றாம். ஒன்னார்பெரியராயினுமுவந்தார்சிறியராயினுங்கேடுமாக்கமுநினைத்ததுணையானேவந்துநிற்குமெனத்தவஞ்செய்வார்மேலிட்டுத்தவத்தினதாற்றல்கூறியவாறு.

பு. ஒன்னார்த்தெறலும்-பகைவரைக்கெடுத்தலும், உவந்தாரையாக்கலும்-தனக்கு உவந்தவராகியநட்பினரைப்பெருகச்செய்தலும், எண்ணின்-எதினாலுண்டாமென்றாராயின், தவத்தான்வரும்-அதுதவஞ்செய்தலாலுண்டாம், எ-று.

வி. முற்றத்துறந்தவர்க்குப்பகையுமுறவுங்கூடாமையால் தவத்தின்மேலேற்றிக்கூறினார். சாபாநுக்கிரகசத்திகளிரண்

* This means, say the Commentators, the friends and enemies of his austerities; because an ascetic can neither have friends nor enemies to himself, personally; he should be dead to all but God.

டுந்தவஞ்செய்வோர்க்குண்டாமென்று சொல்லவந்தவர் தவத்தான் வருமென்றார்.

௫. வேண்டியவேண்டியாங்கெய்தலாற்செய்தவ
மீண்டுமுயலப்படும்.

Religious discipline is practised in this world, because it secures the attainment of whatever one may wish to enjoy (in the next world). - - - - - - - - - 265

பரி. முயன்றோர் மறுமைக்கட்டாம்வேண்டியபயன்கள் வேண்டியவாறேபெறலாமாதலாற்செய்யப்படுவதாயதவமிம்மைக்கணறிவுடையோரான்முயலப்படுமென்றவாறு.

வி. ஈண்டென்பதனான் மறுமைக்கணென்பது பெற்றாம். மேற்கதிவீடுபேறுகடவத்தானன்றியெய்தப்படாவென்பதாம். இவைநான்குபாட்டானுந்தவத்தது சிறப்புக்கூறப்பட்டது.

பு. வேண்டியவேண்டியாங்கெய்தலால்-மறுமையிலேதாம் வேண்டியபிரயோசனங்களைவேண்டியபடியேயடைவது உறுதியாதலால், செய்தவம்-செய்யப்படுவதாகிய தவமானது, ஈண்டுமுயலப்படும்-இம்மையிலேயறிவுடையோராற் செய்யப்படும், எ-று.

வி. தவத்தாலெல்லாப்பேறும்பெறலாமென்பதாம். இவை நான்குபாட்டானுந்தவத்தின்சிறப்புக்கூறப்பட்டது.

௬. தவஞ்செய்வார்தங்கருமஞ்செய்வார்மற்றல்லா
ரவஞ்செய்வாராசையுட்பட்டு.

Those discharge their duty* who perform austerities; all others accomplish their own destruction, through the entanglement of the desire (of riches and sensual pleasure). - - 266

பரி. தங்கருமஞ்செய்வாராவார் துறந்துதவத்தைச்செய்வாரவரையொழிந்தபொருளின்பங்களைச்செய்வாரவற்றின்கணாசையாகியவலையுட்பட்டுத்தமக்குக்கேடுசெய்வாரென்றவாறு.

வி. அநித்தியமாய்மூவகைத்துன்பத்தாய்வுயிரின்வேறாகியவுடம்பிற்குவருத்தம் வருமென்றொழியாது தவத்தினைச்செய்யப்பிறப்புப்பிணிமூப்பிறப்புக்களானநா

* The duties which it behoves them to fulfil in order to obtain the bliss of heaven.

தியாகத்துன்பமெய்திவருகின்றவுயிர்ஞானம்பிறந்துவீடுபெறுமாகலிற்றவஞ்செய்வாரைத்தங்கருமஞ்செய்வாரொன்றுங்கணத்துளழிவதாயசிற்றின்பத்தின்பொருட்டுப்பலபிறவியுந்துன்புறத்தக்கபாவஞ்செய்துகொடலினல்லாதாரையவஞ்செய்வாரொன்றுங்கூறினார். மற்று வினைமாற்றின்கண் வந்தது.

பு. தவஞ்செய்வார் தங்கருமஞ்செய்வார் - தங்கருமஞ்செய்வார் தவஞ்செய்வோரேயாம், அல்லார் - மற்றையோர், ஆசையுட்பட்டு - ஆசையென்னும்வலையிற்சிக்கி, அவஞ்செய்வார் - தமக்குரிமையாகாதவீண்காரியத்தைச்செய்பவராம், எ-று.

வி. மற்று, அசைநிலை. பிறவித்துன்பத்தையொழித்துப்பேரின்பந்தருதலால், தவஞ்செய்தலைத்தங்கருமமென்றும், மற்றப்பொருளின்பங்களைக்குறித்தமுயற்சிகளெல்லாம் அந்தத்துன்பத்தைமிகச்செய்துக்கேடுதருதலால் அவஞ்செய்வாரென்றுங்கூறினார்.

எ. சுடச்சுடரும்பொன்போலொளிவிடுந்துன்பஞ்
சுடச்சுடநோற்கிற்பவர்க்கு.

Bright as gold which has been purified in the fire will those shine, who have endured the burning of pain (in frequent austerities). - - - - - - - - 267

பரி. தீயின்கண்ணோடும்பொன்னுக்குச்சுடச்சுடத்தன்னோடுகலந்தகுற்றநீங்கியொளிமிகுமாறுபோலத்தவஞ்செய்யவல்லார்க்குத்தம்மால்வருந்துன்பம்வருத்தவருத்தத்தம்மோடுகலந்தபாவநீங்கிஞானமிகுமென்றவாறு.

வி. சுடச்சுடரும்பொன்போலென்றதாயினுங்கருத்துநோக்கியிவ்வாறுரைக்கப்பட்டது. ஒளிபோலப்பொருள்களைவிளக்கலினொளியென்றார்.

பு. துன்பஞ் சுடச்சுடநோற்கிற்பவர்க்கு - துன்பமானது தம்மைவருத்தவருத்தவிடாமற்பொறுத்திருந்து தவஞ்செய்யவல்லவர்க்கு, சுடச்சுடரும்பொன் போலொளிவிடும் - புடம்போடப்போட ஒளிவிடும்பொன்னைப்போலவே ஞானவொளிவீசும், எ-று.

வி. சுடச்சுடவெனப்பின்பொருளிலேயடுக்கிநிற்றலால்முன்னுவமையிலுஞ் சுடச்சுடச்சுடரும்பொன்போலெனவருவிக்கப்பட்டது.

௮. தன்னுயிர்தானறப்பெற்றானையேனைய
மன்னுயிரெல்லாந்தொழும்.

All other creatures will worship him who has attained the control of his own soul. - - - - - - 268

பரி. தன்னுயிரைத்தனக்குரித்தாகப்பெற்றவனைப்பெறாதனவாகியமன்னுயிர்களெல்லாந்தொழுமென்றவாறு.

வி. தனக்குரித்தாதல்தவமாகியதங்கருமஞ்செய்தல். அதனினூங்குப்பெறுதற்கரியதின்மையினறப்பெற்றானையென்றார். அதுபெறாதனவென்றதாசையிற்பட்டவஞ்செய்யுமுயிர்களை. சாபமுமருளுமாகியவிரண்டாற்றலுமுடைமையிற்றொழுமென்றார்.

பு. தன்னுயிர்தானறப்பெற்றானை-தன்னுயிரைத்தனக்கேயுரித்தாகப்பெற்றவனை, ஏனைய-அப்படிப்பெறாதனவாகிய மன்னுயிரெல்லாம்-நிலைபெற்றவுயிர்களெல்லாம், தொழும்-கைகூப்பிவணங்கிநிற்கும், எ-று.

வி. பாவஞ்செய்தவெல்லாவுயிர்களையும் வருத்த அதிகாரிகளுளராதலால், அந்தவுயிர்களெல்லாமவ்வதிகாரிகளுக்கு உரிமைபூண்டுநிற்கும். தங்கருமஞ்செய்யுந் துறவறத்தானுக்குப் பாவமில்லையாதலால்தன்னுயிர்தனக்கேயுரிமைபூண்டுநிற்கும். நிற்கவே எல்லாவுயிர்களுமிவனைத்தொழத்தக்கசாபாநுக்கிரக சத்தியுண்டாமென்பதாயிற்று.

௯. கூற்றங்குதித்தலுங்கைகூடுநோற்றலி
னாற்றறலைப்பட்டவர்க்கு.

Those who have attained the power which religious discipline confers, will be able also to pass* the limit of Yaman,† (the God of death). - - - - - - - - 269

பரி. கூற்றத்தைக்கடத்தலுமுண்டாவதாந்தவத்தான்வருமாற்றலைத்தலைப்பட்டார்க்கென்றவாறு.

---

* To leap over Yaman. They will be able to prolong their own life, and keep off death.

† கூற்று, a limit; the limiter; Yaman.

வி. சிறப்பும்மையதுகூடாமைவிளக்கிற்று. மன்னுயிரெல்லாந்தொழுதலே யன்றியிதுவுங்கைகூடுமெனவெச்சவும்மையாகவுரைப்பினுமமையும். ஆற்றல் சாபவருள்கள். இவைநான்குபாட்டானுமத்தவஞ்செய்வாரதுயர்ச்சிகூறப்பட்டது.

பு. நோற்றலினாற்றல்-தவஞ்செய்தலால்வரும்வல்லமையை, தலைப்பட்டவர்க்கு-மேற்கொண்டவர்க்கு, கூற்றங்குதித்தலுங் கைகூடும் - கடக்கக்கூடாத நமனைக்கடந்துவிடலுமுளதாகும், எ-று.

வி. குதித்தலுமென்ற சிறப்பும்மை அதுகூடலரிதென்பது விளக்கிநின்றது. இனியதையிறந்ததுதழுவிய எச்சவும்மையாகக்கொண்டு எல்லாவுயிர்களுந்தொழுதலேயன்றியிதுவுங்கை கூடுமெனப்பொருள்கூறினும் அமையும். ஆற்றல்சாபாநுக்கிரகசத்தி. இவைநான்குபாட்டாலும்தவஞ்செய்வாரதுஉயர்வுகூறப்பட்டது.

ώ. இலர்பலராகியகாரணநோற்பார்
சிலர்பலர்நோலாதவர்.

Because there are few who practise austerity and many who do not, there are many destitute (and few rich men in the world). - - - - - - - - - - 270

பரி. உலகத்துச்செல்வர்கள்சிலராகநல்கூர்வார்பலராதற்குக்காரணம்யாதெனினதுதவஞ்செய்வார்சிலராகவதுசெய்யார்பலராதலானென்றவாறு.

வி. செல்வநல்குரவெனவீண்டறிவினதுண்மையின்மைகளையுங்குறித்துநின்றன. என்னை. நுண்ணுணர்வின்மைவறுமையஃதுடைமைபண்ணப்பணைத்தபெருஞ்செல்வமென்றாராகவின். நோற்பார்சிலரெனக்காரணங்கூறினமையாற்காரியம்வருவித்துரைக்கப்பட்டது. தவஞ்செய்யார்க்கிம்மையின்பமுமில்லையெனவிதனலவரதுதாழ்வுகூறப்பட்டது.

பு. இலர்பலராகியகாரணம் - உலகத்திலேவறுமையாளர்பலராயிருத்தற்குஞ்செல்வமுடையவர்சிலராயிருத்தற்குங் காரணம், நோற்பார்சிலர்பலர்நோலாதவர்-தவஞ்செய்வோர்சிலராகத்தவஞ்செய்யாதவர்பலராதலாம், எ-று.

வி. நோற்பார்சிலரென்றதனாற் செல்வர்சிலரென்பதுவருவிக்கப்பட்டது. இலர்பலர்செல்வர்சிலர், எனநின்றஇதற்கியை

யப்பலர்நோலாதவர் சிலர்நோற்பாரெனநோலாததினாலேயிது எதிர்நிரனிறைப்பொருள்கோள். வறுமைசெல்வமென்பன, இங்கே அறிவின்மையறிவுடைமையுங்குறித்து நின்றன. உம்- நுண்ணுணர்வின்மைவறுமைபஃதுடைமைபண்ணப்பணைத்தபெருஞ்செல்வம், எனக்காண்க. தவஞ்செய்யாதவர்க்குஇம்மையின்பமுமில்லையென்பது இதனாற்கூறப்பட்டது.

௨௮. அதிகாரம். CHAPTER XXVIII.

கூடாவொழுக்கம். ON INCONSISTENT* CONDUCT.

பரி. அஃதாவது தாம்விட்டகாமவின்பத்தையுரனின்மையிற்பின்னும்விரும்புமாறுதோன்றவவ்வாறேகொண்டுநின்றதவத்தோடுபொருந்தாததாயதீயவொழுக்கம். அதுவிலக்குதற்கிது தவத்தின்பின் வைக்கப்பட்டது.

அதாவது, தாம்நீக்கிவிட்டகாமஇன்பத்தைத்தவவலியில்லாததினாலே பின்னும்விரும்புவதுதோன்றவத்தோற்றமுன்பு கொண்டிருந்ததவத்தோடு பொருந்தாததாகிய தீயவொழுக்கம். அதனைவிலக்குதற்கு இது தவத்தின்பின்வைக்கப்பட்டது.

௧. வஞ்சமனத்தான்படிற்றொழுக்கம்பூதங்க
ளைந்துமகத்தேநகும்.

The five† elements (of his body) will laugh within him, at the feigned conduct of the deceitful minded man. - - - 271

பரி. வஞ்சம்பொருந்தியமனத்தையுடையானதுமறைந்தவொழுக்கத்தையுடம்பாயவனோடுகலந்துநிற்கின்றபூதங்களைந்துங்கண்டுதம்முள்ளேநகுமென்றவாறு.

---

* The practice of such vices as an ascetic ought not, and *cannot*, commit consistently with his profession.

† The five elements, according to the Hindoos, are, earth, water, fire, air, and space. The idea is, that these, being within him, will be privy to his falsity and laugh at his pretensions.

வி. காமந்தன்கண்ணேதோன்றிநலியாநிற்கவுமதனதின்மைகூறிப்புறத்தாரைவஞ்சித்தலின்வஞ்சமனமென்றுமந்நலிவுபொறுக்கமாட்டாதொழுகுங்கள்ளவொழுக்கத்தைப்படிற்றொழுக்கமென்றுமுலகத்துக்களவுடையார்பிறரறியாமற்செய்வனவற்றிற்கைம்பெரும்பூதங்கள்சான்றாகலினவ்வொழுக்கத்தையுமவன்மறைக்கின்றவாற்றையுமறிந்தவனறியாமற்றம்முள்ளேநகுதலினகத்தேநகுமென்றுங்கூறினார். செய்தகுற்றமறையாதாகலினவ்வொழுக்கமாகாதென்பதுகருத்து.

பு. வஞ்சமனத்தான்-வஞ்சனைபொருந்திய மனத்தையுடையவனது, படிற்றொழுக்கம்-கள்ளநடையைப் (பார்த்து), பூதங்களைந்தும்-அவனுக்கு உடம்பாகியவற்றோடு கலந்துநின்ற ஐம்பூதங்களும், அகத்தேநகும்-தம்முள்ளேநகும், எ-று.

வி. புறத்துள்ளார் நகைசெய்வதுமன்றி யென்பதுகுறைத்துநின்றது. தானறிந்துசெய்யுந் தீமையைப்பிறரறியாரென்னும் பேதைமையைநோக்கி அவ்வாறேபிறரறியாவகை தமக்குள்ளே நகுமெனவுய்த்துணர்க. அவ்வாறுவஞ்சித்து ஒழுகுதல்பாவமாதலால் வெளிப்பட்டுப்பின்பு வருத்தஞ்செய்தலினதுகூடாதென்பதுகருத்து.

௨. வானுயர்தோற்றமெவன்செய்யுந்தன்னெஞ்சந்
தானறிகுற்றப்படின்.

What avails an appearance (of sanctity) high as heaven, if the mind suffer (the indulgence) of conscious sin? - - 272

பரி. ஒருவனுக்குவான்போலுயர்ந்ததவவேடமென்னபயனைச்செய்யுந்தான்குற்றமென்றறிந்தவதன்கண்ணேதன்னெஞ்சுதாழுமாயினென்றவாறு.

வி. வானுயர்தோற்றமென்பதுவான்றோய்குடியென்றாற்போலவிலக்கணவழக்கு. அறியாதுசெய்தகுற்றமல்லதறிந்துவைத்துச்செய்தகுற்றங்கழுவப்படாமையினெஞ்சுகுற்றத்ததாயேவிடும். விடவேநின்றவேடமாத்திரத்திற்குப்புறத்தாரைவெருட்டுதலேயல்லதுவேறுபயனில்லையென்பதாம்.

பு. தன்னெஞ்சந்தானறிகுற்றப்படின்-தானிதுகுற்றமென்றறிந்ததிலே தன்மனமானதுதங்குமாயின், வானுயர்தோற்றமெவன்செய்யும்-வான்போலுயர்ந்த அவனதுதவவேடமானதுஎன்னபயனைச்செய்யும், எ-று.

வி. அறியாதுசெய்தகுற்றமன்றியறிந்துசெய்தகுற்றம் போக்கப்படாததினாலே நெஞ்சுகுற்றமாகியேவிடும். விடவே கொண்டதவவேடத்திற்குப்பயன் பிறரைப்பயமுறுத்துதலே யாமென்பதாம்.

௩. வலியினிலைமையான்வல்லுருவம்பெற்றம்
புலியின்றோல்போர்த்துமேய்ந்தற்று.

The assumed appearance of power, by a man who has no power (to restrain his senses and perform austerity), is like a cow feeding on grass covered with a tiger's skin. - - 273

பரி. மனத்தைத்தன்வழிப்படுத்தும்வலியில்லாதவியல்புடையான்வலியுடையார்வேடத்தைக்கொண்டுதானதன்வழிப்படுதல்பசுக்காவலர்கடியாமற்புலியின்றோலைப்போர்த்துப்பைங்கூழைமேய்ந்தாற்போலுமென்றவாறு.

வி. இல்பொருளுவமை. வலியினிலைமையானென்றவுடைமையானுமேய்ந்தற்றென்னுந்தொழிலுவமையாலும்வல்லுருவத்தோடுமனவழிப்படுதலென்பதுபெறும். காவலர்கடியாமைபுலியின்றோலென்பதனானுமச்சத்தானுமாம். ஆகவேவல்லுருவங்கோடற்குப்பயனன்னகாரணங்களாலுலகத்தாரயிராமையாயிற்று. இவ்வாறுதனக்குரியவில்லாளையுந்துறந்துவலியுமின்றிப்பிறரயிராதவல்லுருவமுங்கொண்டுநின்றவன்மனவழிப்படுதலாவதுதன்மனமோடியவழியேயோடிமறைந்துபிறர்க்குரியமகளிரைவிழைதலாம். அவ்வாறுதல்பெற்றந்தனக்குரியபுல்லைவிட்டுப்பிறர்க்குரியபைங்கூழைமேய்ந்தாற்போலுமென்றவுவமையானறிக.

பு. வலியினிலைமையான்-மனத்தைத்தன்வசப்படுத்தத்தக்கவல்லமையில்லாதவன், வல்லுருவம் - அந்தவல்லமையுடையவரதுதவவேடத்தைக்கொண்டு தானதன்வழியிலேநடப்பது, பெற்றம்-வலிமையில்லாதபசுவானது, புலியின்றோல்போர்த்து - வலிமையுடைய புலியின்றோலைப்போர்த்துக்கொண்டு, மேய்ந்தற்று-(காவலர்பயந்தோடிப்போகப்) பயிரைமேய்ந்ததுபோலும், எ-று.

வி. இது அபூதவுவமை. இவ்வாறுகூறவேமனமடங்கப்பெறாதவன் திருட்டளவாகமனமடங்கினவர் வேடத்தைப்பூண்டு அவர்க்குரிய சருகுகாய்கனிகிழங்குகளைவிட்டு இல்லறத்தார்க்குரிய சிற்றின்பங்களையநுபவித்தல் பசுத்தனக்குரியபுல்லைவிட்டுப்பிறர்க்குரியபயிரைமேய்ந்ததுபோலுமென்பதாயிற்று.

௪. தவமறைந்தல்லவைசெய்தல்புதன்மறைந்து
வேட்டுவன்புட்சிமிழ்த்தற்று.

He who hides himself under the mask of an ascetic and commits sins,* is like a sportsman who conceals himself in the thicket to catch† birds. - - - - - - 274

பரி. அவ்வலியினிலைமையான்றவவேடத்தின்கண்ணேமறைந்துநின்றுதவமல்லவற்றைச்செய்தல்வேட்டுவன்புதலின்கண்ணேமறைந்துநின்றுபுட்களைப்பிணித்தாற்போலுமென்றவாறு.

வி. தவம்ஆகுபெயர். தவமல்லவற்றைச்செய்தலாவதுபிறர்க்குரியமகளிரைத்தன்வயத்தராக்குதல். இதுவுமித்தொழிலுவமையானறிக.

பு. தவமறைந்து-மனமடங்காதவன் அடங்கினவர்கொண்ட தவவேடத்தைக்கொண்டு அதிலே மறைந்துநின்று, அல்லவைசெய்தல் - அதற்குத்தகாதபாவங்களைச்செய்வது, வேட்டுவன்-வேடனானவன், புதன்மறைந்து-செடியிலேமறைந்திருந்து, புட்சிமிழ்த்தற்று - பறவைகளைப்பிடித்ததுபோலும், எ-று.

வி. தவம், ஆகுபெயர். தகாதபாவங்களைச்செய்தலாவது, பிறர்க்குரியமங்கையரைத்தன்வசப்படுத்தல்வஞ்சித்தல்முதலியவாம்.

௫. பற்றற்றேமென்பார்படிற்றொழுக்கமெற்றெற்றென்
றேதம்பலவுந்தரும்.

The false conduct of those who say they have renounced all desire, will one day bring them sorrows that will make them cry out, "oh, what have we done, what have we done." - 275

பரி. தம்மைப்பிறர்நன்குமதித்தற்பொருட்டியாம்பற்றற்றேமென்றுசொல்லுவாரதுமறைந்தவொழுக்கமப்பொழுதினிதுபோலத்தோன்றுமாயினும்பின்னென்செய்தேமென்செய்தேமென்றுதாமேயிரங்கும்வகையவர்க்குப்பலதுன்பங்களையுங்கொடுக்குமென்றவாறு.

---

* அல்லவை. Things which are not *fit*; sins.

† Because women are caught in his snares, and drawn by him into vice.

வி. சொல்லளவல்லதுபற்றறுமையிற்பற்றற்றேமென்பாரொன்றுஞ்சிறிதாய்க்கணத்துளேயழிவதாயவின்பத்தின்பொருட்டுப்பெரிதாய்நெடுங்காலநிற்பதாயபாவத்தைச்செய்வாராதன்விளைவின்கணந்தோவந்தோவினையேயென்றழுங்குவராகலினெற்றெற்றென்றுங்கூறினார். இவையைந்துபாட்டானுங்கூடாவொழுக்கத்தினிழுக்கங்கூறப்பட்டது.

பு. பற்றற்றேமென்பார்-(பிறர்மதித்தற்பொருட்டு)இருவகைப்பற்றுக்களையுமறவிட்டோமென்பவருடைய, படிற்றொழுக்கம்-திருட்டொழுக்கமானது, எற்றெற்றென்று - எத்தன்மைத்து எத்தன்மைத்தென்று (பின்னரழும்படியாக,)ஏதம் பலவுந்தரும்-பல துன்பங்களையுங்கொடுக்கும், எ-று.

வி. இந்தத்திருட்டொழுக்கமானது மிக்கபாவமாதலால் முடிவிலே நெடுங்காலமநுபவிக்கப்படுங்கொடிய துன்பங்களையேதருமென்பதாம். இவையைந்துபாட்டானுங் கூடாவொழுக்கத்தின்குற்றங்கூறப்பட்டது.

௬. நெஞ்சிற்றுறவார் துறந்தார்போல்வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணாரில்.

Amongst living men there are none so hard-hearted* as those, who without forsaking (desire) in their heart, falsely take the appearance of those who have forsaken (it). - - - 276

பரி. நெஞ்சாற்பற்றறுதுவைத்துப்பற்றற்றார்போன்று தானஞ்செய்யுமவரைவஞ்சித்துவாழுமவரைப்போலவன்கண்மையுடையாருலகத்தில்லையென்றவாறு.

வி. தானஞ்செய்வாரைவஞ்சித்தலாவதுயாமறுமைக்கட்டேவராதற்பொருட்டிவ்வருந்தவர்க்கின்னதீதுமென்றறியாதீந்தாரையதுகொண்டிழிபிறப்பினராக்குதல். அவரிழிபிறப்பினராதல். விருத்தம். அடங்கலர்க்கீந்ததானப்பயத்தினாலழுந்தித்தடங்கடனடுவுட்டீவுபலவுளவற்றுட்டோன்றி, யுடம்பொடுமுகங்களொவ்வாரூழ்கனிமாந்திவாழ்வர் மடங்கலஞ்சீறறத்துப்பின்மானவேன்மன்னரேறே. என்பதனானறிக. தமக்காவனசெய்தார்க்காகாதனவிளைத்தலின்வன்கணாரில்லென்றார்.

---

* வன்கண்ணர், hard-eyed; cruel. Kindness should be the special virtue of the ascetic, as we have seen; and it is here meant that none are so destitute of this as the feigned ascetic, who takes money from the benevolent with this false pretence, and so deprives the giver of the reward he expected to get by helping a good man in his path to heaven.

பு. நெஞ்சிற்றுறவார்-மனத்திற் பற்றறாதுவைத்து, துறந்தார்போல்வஞ்சித்து-பற்றுவிட்டவர்போல இல்லறத்தாரைமயக்கி,வாழ்வாரின்வன்கணாரில்-வாழுங்கூடாவொழுக்கத்தாரைப்போலக்கொடியவரில்லை, எ-று.

வி. இல்லறத்தாரைவஞ்சித்தலாவது, அவர் துறந்தாரென்றெண்ணிச்செய்யுமுபசாரங்களைக்கைக்கொண்டு அதினாலேயவர்க்கொருபிரயோசனமுமில்லாமற்செய்தலுமன்றியவரையுமிழிந்தோராக்குதலாம். தமக்குஆவனசெய்தார்க்கு ஆகாதனசெய்தலால் அவரின்வன்கணாரில்லென்றார்.

எ. புறங்குன்றிகண்டனையரேனுமகங்குன்றி
மூக்கிற்கரியாருடைத்து.

(The world) contains persons whose outside appears (as fair) as the (red*) berry of the Abrus, but whose inside is as black as the nose of that berry. - - - - - - 277

பரி. குன்றியின்புறத்தைப்போலவேடத்தாற்செம்மையுடையாராயினுமதன் மூக்குப்போலமனமிருண்டிருப்பாரையுடைத்துலகமென்றவாறு.

வி. குன்றியாகுபெயர். செம்மைகருமையென்பனபொருளின்கணிறத்தைவிட்டுச்செப்பத்தினுமறியாமையினுஞ்சென்றனவாயினும்பண்பாலொத்தலின் பண்புவமை. கூழின்மலிமனம்போன்றிருளாதின்றகோகிலமேயென்பதுமது.

பு. புறங்குன்றிகண்டனையரேனும்-குன்றிமணியின்புறத்தைப்போலவேடத்தினாலே செம்மையுடையவராயினும், குன்றிமூக்கினகங்கரியாருடைத்து-அதன்மூக்கைப்போல மனமிருண்டிருப்பவரையுடைத்திவ்வுலகம், எ-று.

வி. குன்றியினிறத்தைக்குன்றியென்றது ஆகுபெயர். செம்மைகருமைகள் உவமிக்கப்படும்பொருளிலே நிறத்தைவிட்டுச்செப்பத்திலுமஞ்ஞானத்திலுஞ் சென்றனவாயினும்பண்பாலொத்திருத்தலாற்பண்புவமை.

---

* குன்றிமணி. The Kundimani.

௮. மனத்தது மாசாக மாண்டார் நீராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்.

There are many men of masked conduct, who perform their ablutions, and (make a show) of greatness, while their mind is defiled (with guilt). - - - - - - 278

பரி. மாசுதம்மனத்தின்கண்ணதாகப்பிறர்க்குத்தவத்தான்மாட்சிமையுடையாராய்நீரின்மூழ்கிக்காட்டித்தாமதன்கண்மறைந்துசெல்லுமாந்தருலகத்துப்பலரென்றவாறு.

வி. மாசு, காமவெகுளிமயக்கங்கள். அவைபோகற்கன்றிமாண்டாரென்றுபிறர்கருதுதற்குநீராடுதலானத்தொழிலையவர்மறைதற்கிடனாக்கினார். இனிமாண்டார்நீராடியென்பதற்கு மாட்சிமைப்பட்டாரது நீர்மையையுடையாராயென்றுரைப்பாருமுளர். இவைமூன்றுபாட்டானுமவ்வொழுக்கமுடையாரதுகுற்றமுமவரையறிந்துநீக்கல்வேண்டுமென்பதுங்கூறப்பட்டன.

பு. மாசுமனத்ததாக-குற்றந்தம்மனத்திலிருக்கத்தக்கதாக, மாண்டார்நீராடி-மாட்சிமையுடையவராகத்தம்மைக்காட்டி, மறைந்தொழுகுமாந்தர்பலர் - தவவேடத்திலேமறைந்துநடப்பவருலகத்திற்பலர், எ-று.

வி. குற்றம், காமவெகுளிமயக்கங்கள். அக்குற்றநீங்குதற்கன்றித்துறந்தாரென்று பிறர்நினைத்தற்கு நீராடுதலால் அத்தொழிலும் வேடமுமவர்மறைதற்கு இடமாக்கினார். இனிநீர் என்பதைக்குணமாக்கி மாட்சிமைப்பட்டவருடைய குணமுடையவராயெனினும்அமையும். இவைமூன்றுபாட்டாலும்அவ்வொழுக்கமுடையவரது குற்றமுமக்குற்றமறிந்தவரைநீக்கல்வேண்டுமென்பதுங்கூறப்பட்டன.

௯. கணைகொடிதியாழ்கோடுசெவ்விதாங்கன்ன
வினைபடுபாலாற்கொளல்.

As, in its use, the arrow* is crooked, and the curved lute is straight; so by their deeds, (and not by their appearance) let (the uprightness or crookedness of) men be estimated. - - 279

பரி. அம்புவடிவாற்செவ்விதாயினுஞ்செயலாற்கொடிதுயாழ்கோட்டால்வ

* Because the arrow in its use kills, and the lute gives pleasure.

னைந்ததாயினுஞ்செயலாற்செவ்விதவ்வகையேதவஞ்செய்வாரையுங்கொடியர் செவ்வியரென்பதுவடிவாற்கொள்ளாதவர்செயல்பட்டகூற்றானே யறிந்துகொள்கவென்றவாறு.

வி. கணைக்குச்செயல்கொலை. யாழுக்குச்செயலிசையாவின்பம்பயத்தல். அவ்வகையேசெயல்பாவமாயிற்கொடியரெனவுமறமாயிற்செவ்வியரெனவுங்கொள்கவென்பதாம். இதனாலவரையறியுமாறுகூறப்பட்டது.

பு. கணைகொடிது-அம்பானதுவடிவினாலே செவ்விதாயிருந்தாலுஞ்செயலினாலேகொடுமையையுடையதாம், யாழ்கோடு செவ்விது - வீணையானதுவடிவினாலே கோணலாயிருந்தாலுஞ் செயலினாலே செப்பத்தையுடையதாம், ஆங்கன்னவினைபடு பாலாற்கொளல்-அவ்வகையே தவஞ்செய்வாரையும்அவர்செயலாற்செவ்வியர்கொடியரென்றறிந்துகொள்க, எ-று.

வி. அவர்செயல்பாவமாயிற் கொடியரெனவும், அறமாயிற் செவ்வியரெனவுங் கொள்கவென்பதாம். இதினாலேயவரையறியுந்திறங்கூறப்பட்டது.

௰. மழித்தலு நீட்டலும்வேண்டாவுலகம்
பழித்ததொழித்துவிடின்.

There is no need of a shaven crown, nor of tangled hair, if a man abstain from those deeds which the wise have condemned. - - - - - - - - - - 280

பரி. தவஞ்செய்வார்க்குத்தலைமயிரைமழித்தலுஞ்சடையாக்கலுமாகிய வேடம்வேண்டாவுயர்ந்தோர்தவத்திற்காகாதென்றுகுற்றங்கூறியவொழுக்கத்தைக்கடிந்துவிடினென்றவாறு.

வி. பறித்தலும்மழித்தலுளடங்கும். மழித்தலென்பதேதலைமயிரையுணர்த்தலினதுகூறாராயினர் இதனாற்கூடாவொழுக்கமில்லார்க்குவேடமும் வேண்டாவெனவவாதுசிறப்புக்கூறப்பட்டது.

பு. மழித்தலும் - (தவஞ்செய்வோர்க்குத்தலைமயிரைச்)சிரைத்தலும், நீட்டலும்-அதனைச்சிரையாமலே சடையாக்கிநீளச்செய்தலும், வேண்டா-ஆகிய வேடங்கள்வேண்டாதனவாம், உலகம்பழித்தது-உயர்ந்தோர்தவத்திற்கு ஆகாதென்றுகுற்றங்கூறியநடையை,ஒழித்துவிடின்-நீக்கிவிடுவாராயின், எ-று.

வி. மழித்தல், தலைமயிரைமொட்டையடித்தல். இதினாலே தவவிரோதமான செயல்களைவிட்டுவிட்டவர்க்குவேடம்வேண்டாவென்று அவர் சிறப்புக்கூறப்பட்டது.

---

௨௯. அதிகாரம். CHAPTER XXIX.

கள்ளாமை. AGAINST FRAUD.*

பரி. அஃதாவதுபிறருடைமையாயிருப்பதியாதொருபொருளையுமவனைவஞ்சித்துக்கொள்ளக்கருதாமை. கருதலுஞ்செய்தலோடொத்தலிற்கள்ளாமையென்றார். இல்வாழ்வார்க்காயிற்றமரொடுவிளையாட்டுவகையாலவனைவஞ்சித்துக்கோடற்கிசைந்தபொருள்களையங்ஙனங்கொள்ளினுமமையுந்துறந்தார்க்காயினதனைக்கருதியவழியும்பெரியதோரிழுக்காமாகலினிதுதுறவறமாயிற்று. புறத்துப்போகாதுமடங்கியொருதலைப்பட்டுயிரைநோக்கற்பாலதாயவவர்மனமஃதொழிந்துபுறத்தேபோந்துபலதலைப்பட்டுடம்பின்பொருட்டுப்பொருளைநோக்குதலேயன்றியதுதன்னையும்வஞ்சித்துக்கொள்ளக்கருதுதலவர்க்குப்பெரியதோரிழுக்காதலறிக. இவ்வாறுவாய்மைமுதற்கொல்லாமையீறாயநான்கதிகாரத்திற்குமொக்கும். பொருள்பற்றிநிகழுங்குற்றத்தைவிலக்குகின்றதாகலினிதுகாமம்பற்றிநிகழ்வதாயகூடாவொழுக்கத்தின்பின்வைக்கப்பட்டது.

அதாவது, பிறருடைமையாயிருக்கின்ற யாதொருபொருளையும் அவனைவஞ்சித்துக்கொள்ள நினையாமை. இல்லறத்தார்க்காயின் இதுவிளையாட்டின் பொருட்டுத்தமது சுற்றத்தோடு ஒரோரிடத்தமையுமாயினுந் துறந்தோர்க்குப்பிறர்பொருளை நினைத்தலும்பெருங்குற்றமாதலாலிது துறவறமாயிற்று. புறத்திலேசெல்லாமலடங்கியுயிரையே நோக்கவேண்டிய அவர் மனப்புறஞ்செல்லுதலேகுற்றமாம், அன்றியும்பிறர்பொருளையும் வஞ்சித்துக்கொளக்கருதுமாயினதுபெருங்குற்றமெனக் காண்க. பொருளைப்பற்றிவருங்குற்றம்விலக்குதலாகலின் இது காமம் பற்றிவருங்கூடாவொழுக்கத்தின்பின்வைக்கப்பட்டது.

---

* The desire of defrauding others of their property.

க. எள்ளாமைவேண்டுவானென்பானெனைத்தொன்றுங்
கள்ளாமைகாக்கதன்னெஞ்சு.

Let him, who desires not to be despised,* keep his mind from (the desire of) defrauding another of the smallest thing. - 281

பரி. வீட்டினையிகழாதுவிரும்புவானிவனென்றுதவத்தோரானன்குமதிக்கப்படுவான்யாதொருபொருளையும்பிறரைவஞ்சித்துக்கொள்ளக்கருதாவகைதன்னெஞ்சினைக்காக்கவென்றவாறு.

வி. எள்ளாதென்னுமெதிர்மறைவினையெச்சமெள்ளாமையெனத்திரிந்துநின்றது. வீட்டினையிகழ்தலாவதுகாட்சியேயளவையாவதென்றுநிலநீர்தீவளியெனப்பூதநான்கேயென்றுமவற்றதுபுணர்ச்சிவிசேடத்தாற்றோன்றிப்பிரிவான்மாய்வதாயவுடம்பின்கண்ணேயறிவுமதுவின்கட்களிப்புப்போலவெளிப்பட்டழியுமென்றுமிறந்தவுயிர்பின்பிறவாதென்றுமின்பமும்பொருளுமொருவனாற்செய்யப்படுவதென்றுஞ்சொல்லுமுலகாயதமுதலியமயக்கநூல்களைத்தெளிந்தவற்றிற்சேற்பவொழுகுதல். ஞானத்திற்கேதுவாயமெய்ந்நூற்பொருளையேனுமாசிரியனைவழிப்பட்டன்றியவனைவஞ்சித்துக்கொள்ளினதுவுங்களவாமாகலினெனைத்தொன்றுமென்றார். நெஞ்சுகள்ளாமற்காக்கவெனவேதுறந்தார்க்குவிலக்கப்பட்டது. கள்ளுதல்கள்ளக்கருதுதல்.

பு. எள்ளாமைவேண்டுவானென்பான் - (முத்தியை) இகழாமலேவிரும்பப்பட்டவனென்றுதவத்தோரால்மதிக்கப்படுபவன், எனைத்தொன்றும் - யாதொருபொருளையும், கள்ளாமைகாக்கதன்னெஞ்சு - பிறரைவஞ்சித்துக்கொள்ளநினையாவகைதன்மனத்தைக்காக்கவேண்டும், எ-று.

வி. முத்தியென்பது வருவிக்கப்பட்டது. இகழாமல்முத்தியைவிரும்புதலாவது, உலகாயதமுதலிய மயக்கநூல்களைக்கற்றுமயங்காமல் முத்தியையேவிரும்புதலாம். ஞானநூற்பொருளையாயினும் ஆசிரியனைவஞ்சித்துக்கொளின் அதுவுங்களவாதலாலெனைத்தொன்றுமென்றார். கள்ளுதல் திருடுதல்.

உ. உள்ளத்தாலுள்ளலுந்தீதேபிறன்பொருளைக்
கள்ளத்தாற்கள்வேமெனல்.

Even the thought (of sin) is sin; think not then of craftily stealing the property of another. - - - - - - - 282

* கள்ளாமை. The usual meaning given is, "he who *not despising* (the heavenly bless) desires to obtain it," &c. I prefer the rendering I have given.

பரி. குற்றங்களைத்தன்னெஞ்சத்தாற்கருதுதலுந்துறந்தார்க்குப்பாவமாதலாற்பிறனொருவன்பொருளையவனறியாவகையால்வஞ்சித்துக்கொள்வேமென்றுகருதற்கவென்றவாறு.

வி. உள்ளத்தாலெனவேண்டாதுகூறினார். அவருள்ளமேனையாருள்ளம்போலாதுசிறந்ததென்பதுமுடித்தற்கு உள்ளுமென்பதிழிவுசிறப்பும்மை. அவ்விகுதிவியங்கோளெதிர்மறைக்கண்வந்தது. இவையிரண்டுபாட்டானுமிந்நடைக்குக்களவாவதிதுவென்பதூஉமதுகடியப்படுமென்பதூஉங்கூறப்பட்டன.

பு. உள்ளத்தாலுள்ளலுந்தீதேபிறன்பொருளை-துறந்தோர்பிறன்பொருளைமனத்திலேநினைப்பதுந்தீதாம்,(ஆதலால்)கள்ளத்தாற்கள்வேமெனல்-வஞ்சனையினாலே திருடுவோமென்றுவாயினாலுஞ்சொல்லாதொழிக, எ-று.

வி. தவஞ்செய்வோர்தம்முயிரைநாடாது உலகப்பொருளைநினைப்பதுகுற்றமதன்மேலும்நினைத்துடன்பட்டுவாயாற்சொல்லுதல் பெருங்குற்றமெனக்கிடத்தலால் அவ்வாறுசொல்லாதொழிகவென்றார். நினைத்தல்குற்றமுஞ்சொல்லுதல்பெருங்குற்றமுமாய்முடிதலிற்செயல்சொல்லாதொழிந்தார். இதனிற்பொருளென்பது இருமருங்குஞ்சென்று பொருள்படுதலால்தாப்பிசைப்பொருள்கோள். இதன்கருத்துவிளங்கிற்று.

ரு. களவினாலாகியவாக்கமளவிறந்
தாவதுபோலக்கெடும்.

The property, which is acquired by fraud, will pass all bounds and perish, even while it seems to increase. - - - 283

பரி. களவினுலுளதாயபொருள்வளர்வதுபோலத்தோன்றித்தன்னெல்லையைக்கடந்துகெடுமென்றவாறு.

வி. ஆக்கத்திற்கேதுவாகவினுக்கமெனப்பட்டது. எல்லையைக்கடந்துகெடுதலாவதுதான்போங்காற்பாவத்தையும்பழியையுநிறுத்திச்செய்தவறத்தையுமுடன்கொண்டுபோதல்-அளவறிந்தென்றுபாடமோதியவர்பயன்கொள்ளுமளவறிந்தவ்வளவிற்குதவாதுகெடுமென்றுரைப்பாருமுளர்.

பு. களவினாலாகியவாக்கம்-களவுசெய்தலாலாகிய செல்வமானது, ஆவதுபோல-வளர்வதுபோலத்தோன்றி, அளவிறந்துகெடும்-தானின்றவெல்லையைக்கடந்துகெடும், எ-று.

வி. எல்லையைக்கடந்துகெடுதலாவது, தான்போம்போது பாவத்தையும்பழியையும்வைத்து முன்செய்ததருமத்தையுமுடன்கொண்டுபோவதாம்.

௪. களவின்கட்கன்றியகாதல்விளைவின்கண்
வீயாவிழுமந்தரும்.

The eager desire of defrauding others, when it has brought forth its fruit, will produce undying sorrow. - - - 284

பரி. பிறர்பொருளைவஞ்சித்துக்கோடற்கண்ணேமிக்கவேட்கைபொழுதினிதுபோலத்தோன்றித்தான்பயன்கொடுக்கும்பொழுதுதொலையாதவிடும்பையைக்கொடுக்குமென்றவாறு.

வி. கன்றுதலானெஞ்ஞான்றுமக்களவையேபயில்வித்தலாற்பாவமும்பழியும்வருதலின்வீயாவிழுமந்தருமென்றார். இவையிரண்டுபாட்டானுமதுகடியப்படுதற்குக்காரணங்கூறப்பட்டது.

பு. களவின்கட்கன்றியகாதல் - பிறர்பொருளைவஞ்சித்துக்கொள்வதிலேமிகுந்த இச்சையானது, விளைவின்கண்- தான்பயனைத்தரும்போது, வீயாவிழுமந்தரும்- நீங்காததுன்பத்தைத்தரும், எ-று.

வி. அந்த இச்சைமுதிர்தலாலெப்போதுங்களவுசெய்யப்பழக்கி அதினாலேபாவமும்பழியும்வருதலால் நீங்காததுன்பந்தருமென்றார். இவையிரண்டுபாட்டானுமதனைநீக்குதற்குக்காரணங்கூறப்பட்டது.

௫. அருள்கருதியன்புடையராதல்பொருள்கருதிப்
பொச்சாப்புப்பார்ப்பார்கணில்.

The study of kindness,* and the attainment of love (to it), is not with those who, watch for another's forgetfulness, through desire of his property. - - - - - - - - 285

பரி. அருளினதுயர்ச்சியையறிந்ததன்மேலன்புடையராயொழுகுதல்பிறர்

---

* Benevolence.

பொருளைவஞ்சித்துக்கொள்ளக்கருதியவரதுசோர்வுபார்ப்பார்மாட்டுண்டாகா தென்றவாறு.

வி. தமக்குரியபொருளையுமதனதுகுற்றநோக்கித்துறந்துபோந்தவர்பின்பிற ர்க்குரியபொருளைநன்குமதித்தவனைவஞ்சித்துக்கோடற்கவரதுசோர்வுபார்க்கு மருட்சியராகுலவர்மாட்டுயிர்கண்மேலருள்செய்தனமக்குறுதியென்றறிந்தவ் வருளின்வழுவாதொழுகுந்தெருட்சிகூடாதென்பதாம்.

பு. அருள்கருதி-அருளினதுமேன்மையையறிந்து, அன்புடையராதல் - அதன்மேலன்புடையராகநடப்பது, பொருள்கருதி - பிறருடைய பொருளை வஞ்சித்துக்கொள்ளநினைத்து, பொச்சாப்புப்பார்ப்பார்கணில் - அவர்மறந்திருக்குஞ் சோர்வுபார்ப்பவரிடத்தில்லை, எ-று.

வி. குற்றம்விளைப்பதைநோக்கிவெறுப்புண்டாகித்தமக்குரியபொருளையும்நீக்கித்தவஞ்செயவந்தவர் பின்புபிறர்க்குரிய பொருளைவிரும்பி யதை வஞ்சித்துக்கொள்ளச்சோர்வுபார்க்குமஞ்ஞானமுடையராகுல், மற்றவுயிர்களிடத்து அருள்செய்வதுநன்மையென்றறிந்து அந்த அருளினிடத்துக்குற்றமில்லாமலேநடக்கின்றஞானமவர்க்கில்லையென்பதாம்.

௬. அளவின்கணின்றொழுகலாற்றார்களவின்கட்
கன்றியகாதலவர்.

They cannot walk steadfastly, according to rule, who eagerly desire to defraud others. - - - - - - 286

பரி. உயிர்முதலியவற்றையளத்தலாகியநெறியின்கணின்றதற்கேற்பவொழுகமாட்டார்களவின்கண்ணேமிக்கவேட்கையையுடையாரென்றவாறு.

வி. உயிர்முதலியவற்றையளத்தலாவதுகாட்சிமுதலாகச்சொல்லப்பட்டவளவைகளாலுயிர்ப்பொருளையுமதற்கநாதியாய்வருகின்றகுற்றவினைவிளைவுகளையுமவற்றுனதுநாற்கதியுட்பிறந்திறந்துவருதலையுமதுசெய்யாமலவற்றைக்கெடுத்தற்குபாயமாகியயோகஞானங்களையுமவற்றுனஃதெய்தும்வீட்டினையுமளந்துள்ளவாறறிதல். இதனையாருகதர்தருமத்தியானமென்ப. அதற்கேற்பவொழுகுதலாவதவ்வளக்கப்பட்டவற்றுட்டீயவற்றினீங்கிநல்லவற்றின்வழிநிற்றல்.

பு. களவின்கட்கன்றியகாதலவர்-களவிலேமிகுந்தஆசையையுடையவர், அளவின்கணின்றொழுகலாற்றார்-உயிர்முதலியவ

ற்றையளப்பதாகிய வழியிலேநின்று அதற்குப்பொருந்தநடக்கமாட்டார், எ-று.

வி. அளத்தலாவது, பிரத்தியட்சமுதலாகச்சொல்லப்பட்ட பிரமாணங்களால் உயிரையும், அதற்கு அநாதியாய்வருகின்றகுற்றத்தைத்தரும்வினைவிளைவுகளையும், அவ்வினைகளால்அந்தவுயிர்நால்வகைக்கதிகளிலே பிறந்திறந்துவருவதையும், அதுசெய்யாமலவற்றைக்கெடுப்பதற்குஉபாயமாகியயோகஞானங்களையும், அவற்றாலடையுமுத்தியையும், அளந்துஉள்ளபடியறிதல். அதற்குப்பொருந்தநடத்தலாவது, அப்படியளக்கப்பட்டவைகளில் தீயவைகளைவிட்டு நீங்கிநல்லவைகளோடுகூடிநிற்பது.

௭. களவென்னுங்காரறிவாண்மையளவென்னு
மாற்றல்புரிந்தார்கணில்.

That black knowledge which is called fraud, is not in those who desire that greatness which is called rectitude. - - 287

பரி. களவென்றுசொல்லப்படுகின்றவிருண்டவறிவினையுடையராதலுயிர்முதலியவற்றையளத்தலென்னும்பெருமையைவிரும்பினார்கணில்லையென்றவாறு.

வி. இருள்மயக்கம். காரியத்தைக்காரணமாகவுபசரித்துக்களவென்னுங்காரறிவாண்மையென்றுங்காரணத்தைக்காரியமாக்கியளவென்னுமாற்றலென்றுங்கூறினார். களவுந்துறவுமிருளுமொளியும்போலத்தம்முண்மாறாகலினொருங்குநில்லாதென்பதிவைமூன்றுபாட்டானுங்கூறப்பட்டது.

பு. களவென்னுங்காரறிவாண்மை-களவென்றுசொல்லப்படுகின்றஇருண்டஅறிவினதுஆட்சி, அளவென்னுமாற்றல்-மேற்சொல்லியவற்றையளக்கும் அளவென்று சொல்லப்பட்டவல்லமையை, புரிந்தார்கணில்-விரும்பினவரிடத்து உண்டாகாது, எ-று.

வி. இருள், மயக்கம். களவென்னுங்காரறிவென்றதில், காரறிவுகாரணம், களவுகாரியம். அளவென்னுமாற்றலென்றதில்அளவுகாரணம், ஆற்றல்காரியம். என்னெனின், காரறிவினாலேகளவுசெய்தலும் அளவினாலேவல்லமையுண்டாதலுமாமாதலாலென்க. இருளும்ஒளியுமொன்றுபட்டு நில்லாததுபோலக்களவுந்

தவறுமொன்றுபட்டுநில்லாதென்பது இவைமூன்றுபாட்டா லுஞ்சொல்லப்பட்டது.

௮. அளவறிந்தார்நெஞ்சத்தறம்போனிற்குங்
களவறிந்தார்நெஞ்சிற்கரவு.

Deceit dwells in the mind of those who are conversant with fraud, even as virtue in the minds of those who are conversant with rectitude. - - - - - - - - - 288

பரி. அவ்வளத்தலையேபயின்றவர்நெஞ்சத்தறநிலைபெற்றாற்போலநிலைபெறுங்களவையேபயின்றவர்நெஞ்சத்துவஞ்சனையென்றவாறு.

வி. உயிர்முதலியவற்றையளந்தறிந்தார்க்குத்துறவறஞ்சலியாதுநிற்குமென்பதவ்வுவமையாற்பெற்றும். களவோடுமாறின்றிநிற்பதிதனாற்கூறப்பட்டது.

பு. களவறிந்தார்நெஞ்சிற்கரவு-களவையேபழகினவர்நெஞ்சிலேவஞ்சனையானது, அளவறிந்தார்நெஞ்சத்தறம்போலநிற்கும் - முன்சொன்ன அளவைகளிலேபழகினவர்மனதில்தருமம்நிலைநிற்பதுபோலநிலைநிற்கும், எ-று.

வி. அளவை,பிரமாணம். உயிர்முதலியவற்றையளந்தறிவாரிடத்துத்துறவறநிலைநிற்குமென்பது உவமையாற்பெறப்பட்டது. களவோடுமாறுபடாமல்நிற்பது இதனாற்கூறப்பட்டது.

௯. அளவல்லசெய்தாங்கேவீவர்களவல்ல
மற்றையதேற்றாதவர்.

Those, who are acquainted with nothing but fraud, will perish in the very commission of transgression. - - - - 289

பரி. அவ்வளவல்லாததீயநினைவுகளைநினைத்தப்பொழுதேகெடுவர் களவல்லாதபிறவற்றையறியாதவரென்றவாறு.

வி. தீயநினைவுகளாவன. பொருளுடையாரைவஞ்சிக்குமாறுமவ்வஞ்சனையாலதுகொள்ளுமாறுமக்கொண்டவதனாற்கரும்புலன்களைநுகருமாறுமுதலாயின. நினைத்தலுஞ்செய்தலாகலிற்செய்தென்றுமஃதுள்ளவறங்களைப்போக்கிக்கரந்தசொற்செயல்களைப்புகுவித்தப்பொழுதேகெடுக்குமாகலினுங்கேவீவொன்றுங்கூறினர். மற்றையவாவன துறந்தார்க்குணவாகயோதப்பட்டகாய்கனிகிழங்குசருகுமுதலாயினவுரில்வாழ்வார்செய்யுந்தானங்களுமாம். தேற்றுமையவற்றை

பெறுகர்ந்தவ்வளவானிறைந்திருத்தலையறியாமை.இதனாற்கள்வார்கெடுமாறுகூறப்பட்டது.

பு. களவல்லமற்றையதேற்றாதவர்-களவல்லாதபிறவற்றையறியாதவர், அளவல்லசெய்தாங்கேவீவர்-அந்தஅளவையல்லாததீயநினைவுகளைநினைத்து அப்பொழுதேகெடுவர், எ-று.

வி. தீயநினைவுகளாவன, பொருளுடையவனைவஞ்சிக்கும்விதமும், அந்தவஞ்சனையால் அப்பொருளைக்கைக்கொள்ளும்விதமும், அப்படிக்கொள்ளப்பட்ட பொருளைத்தாமநுபவிக்கும்விதமும், முதலியவாம். அளவல்லநினைத்தென்னாதுசெய்தென்றார் நினைத்தலுஞ்செய்தலாமென்பதுகருதி, அந்தநினைப்புமுன்னிருந்த தருமங்களையும்போக்கிமறைந்தசொல்லையும் மறைந்த நடையையும் வரப்பண்ணிப்பொழுதே தம்மைக்கெடுக்குமாதலின் ஆங்கேவீவரென்றார். மற்றையவாவன, துறந்தார்க்கு உணவாகியகாய்கனிகிழங்குமுதலாயினவும், இல்லறத்தார்செய்யுந்தானதருமங்களுமாம். தேற்றாமை, அந்தக்காய்கனிமுதலாயினவற்றைப்புசித்து அதினாலே திருத்தியடைந்திருப்பதையுணராமை. இதினாலே களவுசெய்வோர்கெடுங்கேடு கூறப்பட்டது.

ம. கள்வார்க்குத்தள்ளுமுயிர்நிலைகள்ளார்க்குத்
தள்ளாதுபுத்தேளுலகு.

Even their body* will fail the fraudulent; but even the world of the gods will not fail those who are free from fraud. - 290

பரி. களவினைப்பயில்வார்க்குத்தம்மின்வேறல்லாதவுடம்புந்தவறுமதுசெய்யாதார்க்குநெடுஞ்சேணதாகியபுத்தேளுலகுந்தவறாதென்றவாறு.

வி. உயிர்நிற்றற்கிடனாவினுயிர்நிலையெனப்பட்டது. சிறப்பும்மைகளிரண்டும்விகாரத்தாற்றொக்கன. இம்மையினுமரசனாலொறுக்கப்படுதலினுயிர்நிலையுந்தள்ளுமென்றுமறுமையினுந்தேவராதல்கூடுதலிற்புத்தேளுலகுந்தள்ளாதென்றுங்கூறினார். மற்றது தள்ளினுந்தள்ளாமைநீர்த்தென்புழியுந்தள்ளுதலிப்பொருட்டாதலறிக. இதற்குப்பிறவாறுரைப்பாருமுளர்.இதனாலிருவர்பயனுமொருங்குகூறப்பட்டது.

---

* Suffering the punishment inflicted by the law.

பு. கள்வார்க்குத்தள்ளுமுயிர்நிலை-களவுசெய்வார்க்குத்தம் மோடுகூடிநின்றேவேறுகாததேகமுந்தவறிப்போம், கள்ளார்க்குத்தள்ளாதுபுத்தேளுலகு-அதுசெய்யாதவர்க்குத்தம்மின் வேறுபட்டுநெடுந்தூரத்திலிருக்கின்றதேவருலகமுந்தவறாது, எ-று.

வி. தேகமுமுலகமுமென்றவுயர்வுசிறப்பு உம்மைகளிரண்டும் செய்யுள்விகாரத்தால் தொக்குநின்றன. கள்வார்இம்மையில் அரசனுலேகொல்லப்படுதலாலும், கள்ளார்மறுமையிலே தேவராகப்பிறப்பதுகூடுமாதலாலும், தள்ளுமென்றுந் தள்ளாதென்றுங்கூறினூர். தள்ளுதல்தவறுதல். இதிலுலேயிருவர் பயனுங்கூறப்பட்டது.

௩௰. அதிகாரம். CHAPTER XXX.

வாய்மை. On Truthfulness.

பரி. அஃதாவது-மெய்யினதுதன்மை. பெரும்பான்மையுங்காமமும்பொருளும்பற்றிநிகழ்வதாயபொய்மையைவிலக்குதலினிதுகூடாவொழுக்கங்கள்ளாமைகளின்பின்வைக்கப்பட்டது.

அதாவது, மெய்யினதுதன்மை. இதுபெரும்பாலுங்காமமும் பொருளும்பற்றிநடப்பதாகிய பொய்மையை விலக்குதலாலிது கூடாவொழுக்கங் கள்ளாமைகளின்பின்வைக்கப்பட்டது.

க. வாய்மையெனப்படுவதியாதெனின்யாதொன்றுந்
தீமையிலாதசொலல்.

Is it asked what is truth? It is the speaking of such words as are without the least degree of evil (to others). - - 291

பரி. மெய்ம்மையென்றுசிறப்பித்துச்சொல்லப்படுவதியாதென்றுவினவினது பிறிதோருயிர்க்குச்சிறிதுந்தீங்குபயவாதசொற்களைச்சொல்லுதலென்றவாறு.

வி. தீமையாதொன்றுமில்லாதவெனவிசையும். எனப்படுவதென்பதாரெனப் படுவதுரைபூரொன்றற்போலநின்றது. அதனுணிகழ்ந்ததுகூறலென்பதுநீக்கப் பட்டது. அதுதானுந்தீங்குபயவாதாயின்மெய்ம்மையாம்பயப்பிற்பொய்ம்மையா மென்பதுகருத்து.

பு. வாய்மையெனப்படுவது-மெய்ம்மையென்றுசிறப்பித்து ச்சொல்லப்படுவது, யாதெனின்-எதுவென்றுவினவினால், யா தொன்றுந்தீமையிலாத-யாதொருதீமையுமில்லாதசொற்களை, சொலல்-சொல்லுதலாம், எ-று.

வி. அந்தச்சொல்லுதல் தீங்குதராதாயின் மெய்ம்மையாம். தரின் பொய்ம்மையென்பதுகருத்து. இதனாலேநடந்தது சொல் லுதல் மெய்ம்மையென்பது நீக்கப்பட்டது.

உ. பொய்ம்மையும்வாய்மையிடத்தபுரைதீர்ந்த
நன்மைபயக்குமெனின்.

Even falsehood* has the nature of truth, if it confer a benefit that is free from fault. - - - - - - 292

பரி. பிறர்க்குக்குற்றந்தீர்ந்தநன்மையைப்பயக்குமாயிற்பொய்ம்மைச்சொற் களுமெய்ம்மைச்சொற்களின்பாலவாமென்றவாறு.

வி. குற்றந்தீர்ந்தநன்மையறம். அதனைப்பயத்தலாவதுகேடாதல்சாக்கா டாதலெய்திநின்றதோருயிரச்சொற்களின் பொய்ம்மையானேயதுநீங்கியின்புறு தல். நிகழாததுகூறலுநன்மைபயவாதாயிற்பொய்ம்மையாம்பயப்பின்மெய்ம்மை யாமென்பதுகருத்து. இவையிரண்டுபாட்டானுந்தீங்குபயவாதநிகழ்ந்ததுகூ றலுநன்மைபயக்குநிகழாததுகூறலுமெய்ம்மையெனவுநன்மைபயவாதநிகழா ததுகூறலுந்தீங்குபயக்குநிகழ்ந்ததுகூறலும்பொய்ம்மையெனவுமவற்றதிலக்க ணங்கூறப்பட்டது.

பு. புரைதீர்ந்த - குற்றமற்ற, நன்மைபயக்குமெனின் - நன் மையைத்தருமாயின், பொய்ம்மையும்வாய்மையிடத்த - பொய் மொழிகளுமெய்ம்மொழிகளினிடத்திலேசேரும், எ-று.

---

* The Jesuit doctrine, that the end sanctifies the means. A most pernicious error, and pregnant with evil.

வி. குற்றந்தீர்ந்த நன்மையாவது தருமம். அதைத் தருதலாவது, கேடாயினுஞ் சாவாயினும் பொருந்தி நின்றதோருயிர் அந்தப்பொய்மொழிகளாலேயவற்றில் நீங்கியின்பத்தையடைவது. நடவாததைச்சொல்லுதலும் நன்மைதராதாயின் பொய்மையாம், தருமாயின்மெய்மையாமென்பதுகருத்து. இவையிரண்டுபாட்டாலும் நன்மைதருகின்றநடந்தது நடவாதது சொல்லுதலிரண்டும் மெய்ம்மையென்பதும், தீமைதருகின்ற நடந்ததுநடவாதது சொல்லுதலிரண்டும் பொய்மையென்பதும், விளக்கியவற்றினிலக்கணங்கூறப்பட்டது.

௩. தன்னெஞ்சறிவதுபொய்யற்கபொய்த்தபின்
றன்னெஞ்சேதன்னைச்சுடும்.

Let not a man knowingly tell a lie; for after he has told the lie, his mind will burn him (with the memory of his guilt). - 293

பரி. ஒருவன்றன்னெஞ்சறிவதொன்றனைப்பிறரறிந்திலரென்றுபொய்யாதொழிகபொய்த்தானாயினதனையறிந்ததன்னெஞ்சேயப்பாவத்திற்குக்கரியாய் நின்றுதன்னையதன்பயனாயதுன்பத்தையெய்துவிக்குமென்றவாறு.

வி. நெஞ்சுகரியாதல்கண்டவரில்லெனவுலகத்துணராதார்தங்காதுதகையின்றித்தாஞ்செய்யும்வினைகளுணெஞ்சறிந்தகொடியவைமறைப்பவுமறையாவாநெஞ்சத்திற்குறுகியகரியில்லையாகவினென்பதனானுமறிக. பொய்மறையாமையினதுகூறலாகாதென்பதிதனாற்கூறப்பட்டது.

பு. தன்னெஞ்சறிவது-ஒருவன்தன்மனமறிவதாகியவொன்றை, பொய்யற்க - (பிறரறிந்திலரென்றுமறைத்தும்) பொய் சொல்லாதொழிக, பொய்த்தபின்-பொய்சொன்னானாயின், தன்னெஞ்சேதன்னைச்சுடும் - (அதையறிந்திருந்த) தன்மனந் தானேயந்தப்பாவத்திற்குச்சாட்சியாகநின்று அவனைச்சுடும், எ-று.

வி. சுடுதலாவது, அப்பாவத்தின்பயனாகியதுன்பத்தையவனுக்குப்பொருத்துவிப்பது. பொய் மறைபடாதாதலாவது சொல்லலாகாதென்பது இதனாற்சொல்லப்பட்டது.

௪. உள்ளத்தாற்பொய்யாதொழுகினுலகத்தா
ருள்ளத்துளெல்லாமுளன்.

He, who in his conduct preserves a mind free from deceit, will dwell* in the minds of all men. - - - - - 294

பரி. ஒருவன்றன்னுள்ளத்திற்கேற்பப்பொய்யாதொழுகுவானாயினவனுயர்ந்தோருள்ளத்தின்கணெல்லாமுளனாமென்றவாறு.

வி. உள்ளத்தாலென்பதுவேற்றுமைமயக்கம். பொய்கூறாதொழுகுதலாவது மெய்கூறியொழுகுதல்.] அவனதறத்தினதருமைநோக்கியுயர்ந்தோரெப்பொழுதுமவனையேநினைப்பரென்பதாம். இதனாலிம்மைப்பயன்கூறப்பட்டது.

பு. உள்ளத்தாற்பொய்யாதொழுகின் - ஒருவன்தன்மனத்திற்குஏற்கும்படிபொய்சொல்லாமல் நடப்பானாயின், உலகத்தார் - உயர்ந்தோருடைய, உள்ளத்துளெல்லாமுளன் - மனங்களிலேயெல்லாமிருப்பான், எ-று.

வி. உள்ளத்தாலென்றவிடத்து ஆனுருபுமயங்கிநின்றது, உள்ளத்துக்குப்பொருந்தவெனக்குவ்வுருபுமதனது நேர்ச்சிப்பொருளுந்தொக்குநிற்றலின். பொய்சொல்லாததருமத்தினருமைநோக்கியுயர்ந்தோரவனையெப்பொழுதும்நினைப்பரென்பதுகருத்து. இதனாலிம்மைப்பயன்சொல்லப்பட்டது.

௫. மனத்தொடுவாய்மைமொழியிற்றவத்தொடு
தானஞ்செய்வாரிற்றலை.

He, who speaks truth with all his heart, is superior to those who make gifts and practise austerities. - - - - 295

பரி. ஒருவன்றன்மனத்தோடுபொருந்தவாய்மையைச்சொல்லுவனாயினவன் றவமுந்தானமுமொருங்குசெய்வாரினுஞ்சிறப்புடையனென்றவாறு.

வி. மனத்தொடுபொருந்துதல்மனத்திற்கேறுதல். புறமாயமெய்யாற்செய்யுமவற்றினுமகமாயமனமொழிகளாற்செய்யுமதுபயனுடைத்தென்பதாம்.

பு. மனத்தொடுவாய்மைமொழியின் - ஒருவன்தன்மனத்தொடுபொருந்தமெய்சொல்லுவானாயின், தவத்தொடுதான

* Through their admiration of his virtue.

ஞ்செய்வாரிற்றலை - தவமுந்தானமுமொருமிக்கச்செய்வாரினு மவன்சிறந்தவன், எ-று.

வி. மனத்தொடுபொருந்துதல்,மனத்திற்கு ஒத்திருத்தல். புறமாகியதேகத்தாற்செய்யுஞ்செயல்களிலும் அகமாகிய மனமொழிகளாற்செய்வதுபயனுளதென்பதாம்.

௬. பொய்யாமையன்னபுகழில்லையெய்யாமை
யெல்லாவறமுந்தரும்.

There is no praise like the praise of never uttering a falsehood; without giving any suffering, it will lead to every virtue.* - 296

பரி. ஒருவனுக்கிம்மைக்குப்பொய்யாமையொத்தபுகழ்க்காரணமில்லை.மறுமைக்குமெய்வருந்தாமலவனுக்கெல்லாவறங்களையுந்தானேகொடுக்குமென்றவாறு.

வி. புகழீண்டாகுபெயர். இல்லறத்திற்குப்பொருள்கூட்டன்முதலியவற்றுனுந்துறவறத்திற்குண்ணாமைமுதலியவற்றுனும்வருந்தவேண்டுமன்றேயவ்வருத்தங்கள்புகுதாமலவ்விருவகைப்பயனையுந்தானேதருமென்பாரெய்யாமையெல்லாவறமுந்தருமென்றார்.

பு. எய்யாமை-(மறுமையிலே) சரீரவருத்தமில்லாமல், எல்லாவறமுந்தரும்-எல்லாத்தருமங்களையுந்தானேதரும், (ஆதலால்) பொய்யாமையன்னபுகழில்லை - (இம்மைக்கு) பொய்சொல்லாமையையொத்தபுகழாகிய காரணமொருவனுக்குவேறேயில்லை, எ-று.

வி. புகழாகியகாரணத்தைப்புகழென்றது ஆகுபெயர். இல்லறத்திற்குப்பொருள்தேடுதல்காத்தல் முதலியவற்றுலும் துறவறத்திற்கு உண்டிசுருக்குதல்நோய்முதலிய பொறுத்தலாலும்வருத்தப்படவேண்டும், அப்படிவருத்தப்படாமலேயந்தவிருவகைத்தருமப்பிரயோசனங்களையுந்தானேதருமென்று சொல்லவந்தவர் எய்யாமையெல்லாவறமுந்தருமென்றார்.

---

* Confer the advantages which flow from the exercise of all virtues, say the Commentators.

எ. பொய்யாமைபொய்யாமையாற்றினறம்பிற
செய்யாமைசெய்யாமைநன்று.

If* a man has the power to abstain from falsehood, to abstain from falsehood, (I say;) then, though he practise no other virtue, (yea) though he practise no other virtue, it will be well with him. - - - - - - - - - 297

பரி. ஒருவன்பொய்யாமையைச்செய்யவல்லனாயினவன்பிறவறங்களைச்செய்யாமைநன்றென்றவாறு.

வி. அடுக்கிரண்டனுண்முதலதிடைவிடாமைமேற்றேனையதுதுணிவின்மேற்று.பலவறங்களையுமேற்கொண்டுசெய்தற்கருமையாற்சிலதவறிற்குற்றப்படுதலினவையெல்லாவற்றின்பயனையுந்தானேதரவற்றாயவிதனையேமேற்கொண்டுதவறுமற்செய்தனன்றென்பார் செய்யாமைசெய்யாமைநன்றென்றார். இதனையிவ்வாறன்றிப்பொய்யாமையைப்பொய்யாமற்செய்யிற்பிறவறஞ்செய்கை நன்றெனப்பொழிப்பாக்கிப்பொய்கூறிற்பிறவறஞ்செய்கைநன்றாகாதென்பதனாற்போந்தபொருளாக்கியுரைப்பாருமுளர். பிரவறங்களெல்லாந்தரும்பயனைத்தானேதருமாற்றலுடைத்தெனமறுமைப்பயனதுமிகுதியிவைமூன்றுபாட்டானுங்கூறப்பட்டது.

பு. பொய்யாமைபொய்யாமையாற்றின் - ஒருவன்பொய்யாமையைச்செய்யவல்லனாயின், (பொய்சொல்லாதிருக்கப்பெறுவானாயின்), அறம்பிறசெய்யாமை செய்யாமைநன்று - வேறேதருமங்களைச்செய்யாதிருத்தல்நன்று, எ-று.

வி. பொய்யாமைபொய்யாமைசெய்யாமைசெய்யாமையென்னுமடுக்குகளிரண்டினுள்முன்னையது இடையறாமையென்னும்பொருளிலும் பின்னையதுதுணிவென்னும் பொருளிலுமடுக்கிநின்றது. பலதருமங்களையுஞ்செய்வதற்குஅருமையாதலாற் சிலதவறின்குற்றமாம். ஆதலாலவையெல்லாவற்றின்பயனையுமிதுதானே தரவல்லதாகியபொய்யாமையைமேற்கொண்டுதவறாமற்செய்வது நன்றென்றுசொல்லவந்தவர், அறம்பிறசெய்யாமைசெய்யாமை நன்றென்றார். இதனையிவ்வாறன்றிப்பொய்யாமையைப் பொய்யாமற்செயின், பிறவறஞ்செய்

---

* This is a poor specimen of moral teaching : it is to knock down with one hand what is built up with the other.

கைநன்றெனப் பொழிப்புரையாக்கிப்பொய்சொன்னற்பிறதருமங்களைச்செய்தல் நன்றாகாதென்பது அதனாற்கிடைத்த பொருளென்று உரைப்பாருமுண்டு. எல்லாத்தருமங்களையுஞ் செய்தபயனையிப்பொய்யாமையென்னுமொருதருமமேதரவல்லதென மறுமைப்பயனதுமிகுதியிவைமூன்றுபாட்டானுஞ் சொல்லப்பட்டது.

அ. புறந்தூய்மைநீரானமையுமகந்தூய்மை
வாய்மையாற்காணப்படும்.

Purity of body is produced by water; purity of mind* comes from truthfulness. - - - - - - - 298

பரி. ஒருவனுக்குடம்புதூய்தாந்தன்மைநீரானேயுண்டாமதுபோலமனந்தூய்தாந்தன்மைவாய்மையானுண்டாமென்றவாறு.

வி. காணப்படுவதுண்டாவதுள்ளதாகலினுண்டாமென்றுரைக்கப்பட்டது. உடம்புதூய்தாதல்வாலாமைநீங்குதல். மனந்தூய்தாதல்மெய்யுணர்தல். புறந்தூய்மைக்குநீரல்லதுகாரணமில்லாதாற்போலவகந்தூய்மைக்குவாய்மையல்லதுகாரணமில்லையென்றவாறாயிற்று. இதனானேதுறந்தார்க்கிரண்டுதூய்மையும்வேண்டுமென்பதூஉம்பெற்றாம்.

பு. புறந்தூய்மைநீரானமையும்-ஒருவனுக்குச்சரீரபரிசுத்தஞ்சலத்தினாலேயுண்டாகும், அகந்தூய்மைவாய்மையாற்காணப்படும்-(அதுபோல) மனப்பரிசுத்தம்மெய்சொல்லுதலாலுண்டாம், எ-று.

வி. காணப்படுவதுஉள்ளதாகலின் உண்டாமென்றுரைக்கப்பட்டது. உடம்புபரிசுத்தமாவதுஅழுக்குநீங்குவது. மனம்பரிசுத்தமாவதுமெய்யுணர்வது. சரீரபரிசுத்தத்துக்குநீரின்றியமையாததுபோலவேமனப்பரிசுத்தத்துக்குமெய்மையின்றியமையாதென்பதாயிற்று. ஆகவேதுறவறத்தோர்க்கு இருவகைப்பரிசுத்தங்களும்வேண்டுமென்பதுபெறப்பட்டது.

---

* காணப்படும், *will be seen* from its truthfulness.

௯. எல்லாவிளக்கும்விளக்கல்லசான்றோர்க்குப்
பொய்யாவிளக்கேவிளக்கு.

All lamps are not lamps; the lamp of truth is the lamp of the wise. - - - - - - - - - 299

பரி. புறத்திருள்கடியுமுலகத்தார்விளக்குகளெல்லாம்விளக்காகாது. துறவறமமைந்தார்க்குவிளக்காவது மனத்திருள்கடியும்பொய்யாமையாகியவிளக்கேவிளக்கென்றவாறு.

வி. உலகத்தார்விளக்காவன ஞாயிறுதிங்கடீயென்பன. இவற்றிற்குப்போகாதவிருள்போகவிற்பொய்யாவிளக்கேவிளக்கென்றார். அவ்விருளாவதறியாமை பொய்யாதவிளக்கென்பதுகுறைந்ததுபொய்கூறாததாகியவிளக்கென்றவாறு. இனியிதற்குக்கல்விமுதலியவற்றான்வரும்விளக்கமெல்லாம்விளக்கமல்ல வமைந்தார்க்குவிளக்கமாவது பொய்யாமையான்வரும்விளக்கமே விளக்கமென்றுரைப்பாருமுளர்.

பு. எல்லாவிளக்கும்விளக்கல்ல-வெளியிருளைப்போக்குகின்றவுலகத்துவிளக்குகளெல்லாம்விளக்குகளல்லவாம், சான்றோர்க்குப்பொய்யாவிளக்கேவிளக்கு-துறவறத்தோர்க்கு மனத்திருளையோட்டுகின்ற பொய்சொல்லாமையாகிய விளக்கேவிளக்காம், எ-று.

வி. உலகத்துவிளக்குகளாவன, சூரியன்சந்திரன் அக்கினியென்பன. இவற்றினுக்குப்போகாதமனத்திருள்போதலாற்பொய்யாவிளக்கேவிளக்கென்றார். மனத்திருள் அஞ்ஞானம். பொய்யாதவென்னும் பெயரெச்சப்பொய்யாவெனக்கடைக்குறைந்துநின்றது. இனியிதற்குக்கல்விமுதலியவற்றால்வரும் விளக்கமெல்லாம் விளக்கமல்ல சான்றோர்க்குப்பொய்கூறாமையால்வரும் விளக்கமேவிளக்கமென்றுரைப்பாருமுண்டு.

௰. யாமெய்யாக்கண்டவற்றுளில்லையெனைத்தொன்றும்
வாய்மையினல்லபிற.

Amidst all that we have seen (described) as real (excellence), there is nothing so good as truthfulness. - - - 300

பரி. யாமெய்ந்நூல்களாகக்கண்டநூல்களுள்யாதொருதன்மையானும்வாய்மையின்மிக்கனவாகச்சொல்லப்பட்டபிறவறங்களில்லையென்றவாறு.

வி. மெய்யுணர்த்துவனவற்றைமெய்யென்றார். அவையாவன தங்கண்மயக்கமின்மையிற்பொருள்களையுள்ளவாறுணரவல்லராய்க்காமவெகுளிகளின்மையினவற்றையுணர்ந்தவாறேயுரைக்கவும்வல்லராயிறைவரருளானுலகத்தாருறுதியெய்துதற்பொருட்டுக்கூறியவாகமங்கள். அவையெல்லாவற்றினுமிஃதொப்பமுடிந்ததென்றவாறு. இவைமூன்றுபாட்டானுமிவ்வறத்தினதுதலைமைகூறப்பட்டது.

பு. யாமெய்யாக்கண்டவற்றுள் - நாமெய்ந்நூல்களாகக்கண்டநூல்களுக்குள்ளே, எனைத்தொன்றும் - யாதொருதன்மையினாலும், வாய்மையினல்ல - சத்தியத்தின்மிக்கவைகளாகச்சொல்லப்பட்ட, பிறவில்லை - வேறுதருமங்களில்லை, எ-று.

வி. மெய்யையுணர்த்துநூல்களைமெய்யென்றது ஆகுபெயர். மெய்ந்நூல்களாவன, தம்மிடத்துமயக்கமில்லாததினாலே பொருள்களையுள்ளபடியேயுணரவல்லவராகிக்காமக்குரோதங்களில்லாததினாலே யறிந்தபடியேசொல்லவும் வல்லவராகியிறைவனுடைய அருளினாலேயுலகத்தார்நன்மைபெறுதற்பொருட்டுச்சொல்லியஆகமங்களாம். அந்தஆகமங்களெல்லாவற்றிலுமிதுவேமிக்க நலமுடையதென்பதுஒத்திருந்தது. இவைமூன்றுபாட்டாலும் இந்தத்தருமத்தின் உயர்வுகூறப்பட்டது.

---

௩௧. அதிகாரம். CHAPTER XXXI.

வேகுளாமை. AGAINST ANGER.

பரி. அஃதாவதுசினத்திற்குக்காரணமொருவன்மாட்டுளதாயவிடத்துமதனைச்செய்யாமை. இதுபொய்மைபற்றிநிகழ்வதாயவெகுளியைவிலக்கலின்வாய்மையின்பின்வைக்கப்பட்டது.

அதாவது, கோபத்திற்குக்காரணம் ஒருவனிடத்துண்டானபோதும் அதுசெய்யாதிருத்தல். இதுபொய்பற்றிநடப்பதாகிய கோபத்தைவிலக்குதலால் வாய்மையின் பின்வைக்கப்பட்டது.

க. செல்லிடத்துக்காப்பான்சினங்காப்பானல்லிடத்துக்
காக்கிலென்காவாக்காலென்.

He restrains his anger who restrains it when it can injure;* when it cannot injure, what does it matter whether he restrain it, or does not restrain it? - - - - - - 301

பரி. தன்சினம்பலிக்குமிடத்ததனையெழாமற்றடுப்பானேயருளாற்றடுப்பானாவானேனைப்பலியாதவிடத்ததனைத்தடுத்தாலென்றடாதொழிந்தாலென்னென்றவாறு.

வி. செல்லிடமல்லிடமென்றது தவத்தாற்றன்னின்மெலியாரையும்வலியாரையும். வலியார்மேற்காவாவழியுமதனாலவர்க்குவருவதோர்தீங்கின்மையிற்காத்தவழியுமறனில்லையென்பார்காக்கிலென்காவாக்காலென்னென்றார். இதனால்வெகுளாமைக்கிடங்கூறப்பட்டது.

பு. செல்லிடத்துக்காப்பான் - தன்கோபம்பலிக்கத்தக்கவிடத்திலதைத்தலையெடாமலேதடுத்துக்காப்பவனே, சினங்காப்பான் - அருளினாலேதடுத்துக்காப்பவனாவான், அல்லிடத்து - பலியாதவிடத்து, காக்கிலென்காவாக்காலென் - அதனைத்தடுத்துக்காத்தாலென்னகாவாதொழிந்தாலென்ன, எ-று.

வி. செல்லிடம்அல்லிடமென்றதுமெலியாரையும்வலியாரையும். வலியார்முன்கோபத்தைக்காவாதபோதும் அதினாலேயவர்க்குவருவதொருதீங்கில்லாததினாலே காத்தபோதுந்தருமமில்லையென்றுசொல்லவந்தவர், காக்கிலென்காவாக்காலென் என்றார். இதினாலேகோபஞ்செய்யாமைக்கு இடங்கூறப்பட்டது.

உ. செல்லாவிடத்துச்சினந்தீதுசெல்லிடத்து
மில்லதனிற்றீயபிற.

Anger is bad, even when it cannot injure; when it can injure, there is no greater evil. - - - - - - 302

பரி. ஒருவன்வெகுளிதன்னின்வலியார்மேலெழிற்றனக்கேதீதாமற்றையெளியார்மேலெழினுமதனிற்றீயனபிறவில்லையென்றவாறு.

* செல்லிடத்து, where it can go: take effect.

வி. செல்லாவிடத்துச்சினம்பயப்பதிம்மைக்கண்ணவரான்வருமேதமேயேனை யதிம்மைக்கட்பழியுமறுமைக்கட்பாவமும்பயத்தலினதனிற்றீயனபிறவில்லை யென்றார். ஓரிடத்துமாகாதென்பதாம்.

பு. செல்லாவிடத்துச்சினந்தீது-ஒருவன்தனக்குவலியார் மேற்கோபத்தைச்செலுத்துவானாயினது அவனுக்கேதீமைதரும், செல்லிடத்தும் - அதனைச்செலுத்தத்தக்கமெலியாரிடத்தும், இல்லதனிற்றீயபிற-அதுபோற்கொடுமையையுடையன வேறேயில்லை, எ-று.

வி. வலியாரிடத்திற்செய்தகோபம் இம்மையிலேதருவன, அவரால்வருந்துன்பங்களே. எளியாரிடத்திற்செய்தகோபம் இம்மையிற்பழியும்மறுமையிற்பாவமுந்தருமாதலாலதனிற்றீயபிறவில்லையென்றார்.கோபமோரிடத்துமாகாதென்பதாம்.

௩. மறத்தல்வெகுளியையார்மாட்டுந்தீய
பிறத்தலதனான்வரும்.

Forget anger, towards every one; fountains* of evil come from it. - - - - - - - - - - 303

பரி. யாவர்மாட்டும்வெகுளியையொழிக. ஒருவற்குத்தீயனவெல்லாமுளவாதலதனால்வருமாதலாலென்றவாறு.

வி. வலியாரொப்பாரெளியாரென்னுமூவர்மாட்டுமாகாமையின்யார்மாட்டுமென்றுமனத்தாற்றுறந்தார்க்காகாததீச்சிந்தைகளெல்லாவற்றையும்பிறப்பித்தலிற்றீயபிறத்தலதனால்வருமென்றுங்கூறினார்.

பு. மறத்தல்-மறக்கக்கடவது, வெகுளியையார்மாட்டும்-கோபத்தையாவரிடத்தும், தீயபிறத்தல்-ஒருவனுக்குளெல்லாத்தீங்குகளுமுண்டாதல், அதனால்வரும்-அக்கோபங்காரணமாகவருமாதலால், எ-று.

வி. வலியாரெளியார்ஒப்பார்என்னும்மூன்றிடத்துமாகாதிருலேயார்மாட்டுமென்றும், மனத்தாலேஎல்லாப்பற்றுக்களையும்விட்டவர்க்கு ஆகாததீயநினைப்புகளையெல்லாம் பிறப்பிக்குமாதலால்தீயபிறத்தலதனால்வருமென்றுங்கூறினார்.

---

* பிறத்தல், "the giving birth to."

௪. நகையுமுவகையுங்கொல்லுஞ்சினத்திற்
பகையுமுளவோபிற.

Is there a greater enemy than anger, which kills both laughter and joy? - - - - - - - - - 304

பரி. துறந்தார்க்கருளானுளவாயமுகத்தின்கணகையுமனத்தின்கணுவகையுங் கொன்றெழுகின்றசினமேயல்லததனிற்பிறவாயபகைகளுமுளவோவில்லையென்றவாறு.

வி. துறவார்ப்புறப்பகையிலராயினுமுட்பகையாய்நின்றுகுணமுதலியநட்பினையும்பிரித்துப்பிறவித்துன்பமுமெய்துவித்தலாற்சினத்தின்மிக்கபகையில்லையாயிற்று. இவைமூன்றுபாட்டானும்வெகுளியதுதீங்குகூறப்பட்டது.

பு. நகையுமுவகையுங்கொல்லுஞ்சினத்தின் - (அருந்தவர்க்கு) அருளினாலுண்டானமுகத்தினிடத்துநகையையும் மனத்தினிடத்துண்டானமகிழ்ச்சியையுங்கெடுத்துஎழாநின்றகோபத்தைக்காட்டிலும், பகையுமுளவோபிற-வேறுபகைகளுமுண்டோ இல்லை, எ-று.

வி. தவத்தால்வெளிப்பகையில்லாதவராயினும் உட்பகையாய்நின்றுநற்குணமுதலியசிநேகங்களையெல்லாம் பிரித்துப்பிறவித்துன்பத்தையடைவித்தலால்சினத்தின்மிக்கபகைவேறில்லையாயிற்று. இவைமூன்றுபாட்டாலுங்கோபத்தினதுதீங்குகூறப்பட்டது.

௫. தன்னைத்தான்காக்கிற்சினங்காக்ககாவாக்காற்
றன்னையேகொல்லுஞ்சினம்.

If a man would guard himself, let him guard against anger; if he do not guard it, anger will kill him. - - - - 305

பரி. தன்னைத்தான்றுன்பமெய்தாமற்காக்கநினைத்தானாயிற்றன்மனத்துச்சினம்வாராமற்காக்ககாவானாயினச்சினந் தன்னையேகடுந்துன்பங்களையெய்துவிக்குமென்றவாறு.

வி. வேண்டியவேண்டியாங்குசெய்தற்பயத்தவாயதவத்தைப்பிறர்மேற்சாபம்விடுதற்காகவிழந்ததவத்துன்பத்தோடுபழையபிறவித்துன்பமுமொருங்கேயெய்துதலிற்றன்னையேகொல்லுமென்றார். கொல்லச்சுரப்பதாங்கீழென்புழிப் போலக்கொலைச்சொல்லீண்டுத்துன்பமிகுதியுணர்த்திநின்றது.

பு. தன்னைத்தான்காக்கின் - (ஒருவன் துன்பம்வாராமலே) தன்னைக்காக்கநினைப்பானாயின், சினங்காக்க - தன்மனத்திலே கோபம்வாராமலேகாக்கக்கடவது, காவாக்கால்-காக்கமாட்டானாயின், தன்னையேகொல்லுஞ்சினம் - அந்தக்கோபம்அவனையேகொடிய துன்பங்களையடைவித்துக்கெடுக்கும், எ-று.

வி. பிறனைச்சபித்தற்காக அரியபயனைத்தருந்தவத்தையிழந்து அந்தத்தவத்துன்பத்தோடுபழையபிறவித்துன்பத்தையுமொருமிக்கஉடைதலாலேதன்னையேகொல்லுமென்றார். கரும்புபோற்கொல்லப்பயன்படுங்கீழ் என்றாற்போலக்கொலைச்சொல் இங்கேதுன்பமிகுதியைக்காட்டிநின்றது.

௬. சினமென்னுஞ்சேர்ந்தாரைக்கொல்லியினமென்னு
மேமப்புணையைச்சுடும்.

The fire* of anger will burn up the pleasant raft of friendship.† - - - - - - - - - - 306

பரி. சினமென்னுநெருப்புத்தனக்கிடமானவரையேயன்றியவரினமாகிய வேமப்புணையைச்சுடுமென்றவாறு.

வி. சேர்ந்தாரைக்கொல்லியென்பதேதுப்பெயர். தான்சேர்ந்தவிடத்தைக்கொல்லுந்தொழிலதென்றவாறு. சேர்ந்தாரையெனவுயர்திணைப்பன்மைமேல்வைததேனைநான்குபாலுங்கருத்தோடுகூடியபொருளாற்றலாற்கொண்டார். ஈண்டுருவகஞ்செய்கின்றது துறந்தார்சினத்தையாகலின் சினமென்னுநெருப்பென்றவிதப்புலகத்துநெருப்புச்சுடுவது தான்சேர்ந்தவிடத்தையேயிந்நெருப்புச்சேராதவிடத்தையுஞ்சுடுமென்னும்வேற்றுமைதோன்றநின்றது. ஈண்டினமென்றது முற்றத்துறந்துதவஞானங்களாற்பெரியராய்க்கேட்டார்க்குறுதிமொழிகளையினியவாகச்சொல்லுவாரை. உருவகநோக்கிச்சுடுமென்னுந்தொழில்கொடுத்தாராயினுமகற்றுமென்பதுபொருளாகக்கொள்க. ஏமப்புணையேமத்தையுபதேசிக்கும்புணை. இனமென்னுமேமப்புணையென்றவேகதேசவுருவகத்தாற்பிறவிக்கடலுளழுந்தாமல்வீடென்னுங்கரையேற்றுகின்றதெனவருவித்துரைக்க. எச்சவும்மைவிகாரத்தாற்றொக்கது. தன்னையும்வீழ்த்தெடுப்பாரையுமகற்றுமென்பதாம்.

பு. சினமென்னுஞ்சேர்ந்தாரைக்கொல்லி-கோபமென்னு

---

* சேர்ந்தாரைக்கொல்லி, fire. Lit: a destroyer of associates.

† Viz. of those by whose instructions he might cross the sea of births.

ம்நெருப்பானது, (தனக்குஇடமாகியவரைச்சுடுவதுமன்றி) இனமென்னும்-அவருக்கினமாகிய, ஏமப்புணையைச்சுடும்-இரட்சகத்தோணியையுஞ்சுடும், எ-று.

வி. சேர்ந்தாரைக்கொல்லியென்பது நெருப்புக்குக்காரணப்பெயர். இங்கேயுருவகஞ்செய்தது, தவஞ்செய்வோர்கோபத்தையாதலால் அந்தநெருப்புஉலகத்துநெருப்புப்போலாகாமல்தான்சேராதவிடத்தையுஞ் சுடுமென்கின்றவேற்றுமைதோன்றநின்றது. இங்கேஇனமென்றது, எல்லாப்பற்றுக்களையும் பற்றறவிட்டுத்தவஞானங்களாலே பெரியோராகிக்கேட்டார்க்குஉறுதியாகிய நன்மொழிகளையினிமையாகச்சொல்லுவாரை. உருவகவலங்காரநோக்கிச்சுடுமென்னுந்தொழில்கொடுத்தாராயினும் ஏமப்புணையை நீக்குமென்பது பொருளாகக்கொள்க. இப்படியுருவகஞ்செய்ததினாலேபிறவிக்கடலுளழுந்தாமல் வீடென்னுங்கரைசேர்ப்பிக்கின்றவரிவரெனவுய்த்துணர்ந்துகொள்க. ஏமப்புணையையும் என்னுமெச்சவும்மைவிகாரத்தாற்றொக்கது. தன்னையும்வீழ்த்து எடுப்பாரையும்விலக்குமென்பதுகருத்து.

எ. சினத்தைப்பொருளென்றுகொண்டவன்கேடு
நிலத்தறைந்தான்கைபிழையாதற்று.

Destruction will come upon him who regards anger as a good thing, as surely as the hand of him who strikes the ground will not fail. - - - - - - - - - 307

பரி. சினத்தைநம்மாற்றலுணர்த்துவதோர்குணமென்றுதன்கட்கொண்டவனவ்வாற்றலிழத்தனிலத்தின்கணறைந்தவன்கையந்நிலத்தையுறுதறப்பாதவாறுபோலத்தப்பாதென்றவாறு.

வி. வைசேடிகப்பொருள்பண்புதொழில்சாதிவிசேடமியையென்பனவற்றையிறுவகைப்பொருளென்றாற்போலவீண்டுக்குணம்பொருளெனப்பட்டது. பிழையாதவற்றென்பதுகுறைந்துநின்றது. இவைமூன்றுபாட்டானும்வெகுண்டார்க்குவருந்தீங்குகூறப்பட்டது.

பு. சினத்தை - கோபத்தை, பொருளென்று-தன்வல்லமையைக்காட்டுகின்றகுணமென்று, கொண்டவன்-தன்னிடத்தில்

வைத்தவன், கேடு-பின்பு அதினாலேகெடுவது, நிலத்தறைந்தான்கை - நிலத்திலேயறைந்தவனுடையகையானது, பிழையாதற்று- அந்தநிலத்திற்படுவது தப்பாததுபோலத்தப்பாது, எ-று.

வி. பொருளிடங்காலஞ்சினைகுணந்தொழிலென்றஆறையும்பொருளென்றுவழங்கலால் இங்கேகோபமென்னுங்குணத்தைப்பொருளென்றார். பிழையாதவற்றென்பது பிழையாதற்று எனக்குறைந்துநின்றது. இவைமூன்றுபாட்டானுங்கோபஞ்செய்தோர்க்குவருந்தீங்கு கூறப்பட்டது.

அ. இணரெரிதோய்வன்னவின்னாசெயினும்
புணரின்வெகுளாமைநன்று.

Though one commit things against you as painful (to bear) as if a bundle of fire had been thrust upon you; if it be possible not to be angry, it will be well. - - - - - 308

பரி. பலசுடரையுடைத்தாயபேரெரிவந்துதோய்ந்தாலொத்தவின்னாதவற்றை யொருவன்செய்தானாயினுமவனைவெகுளாமையொருவற்குக்கூடுமாயினதுநன்றென்றவாறு.

வி. இன்னாமையின்மிகுதிதோன்றவிணரெரியென்றுமதுதன்னைமேன்மேலுஞ்செய்தறோன்றவின்னாவென்றுமச்செயன்முனிவரையும்வெகுள்விக்குமென்பதுதோன்றப்புணரினென்றுங்கூறினார். இதனால்வெகுளாமையதுநன்மைகூறப்பட்டது.

பு. இணரெரி-பலசுடர்ச்சிகைகளையுடையபெருந்தீயானது, தோய்வன்ன - தன்னைவந்துதீண்டினதையொத்த, இன்னாசெயினும் - துன்பங்களையொருவன்செய்தானாயினும், புணரின் வெகுளாமை - அவனைக்கோபஞ்செய்யாதிருக்கக்கூடுமாயின், நன்று- அது நன்று, எ-று.

வி. துன்பத்தின்மிகுதிதோன்றஇணரெரியென்றும், மேன்மேலுஞ் செய்தல்தோன்றத்துன்பங்களென்றும், அச்செயல்பொறையுடைத்தவத்தோரையுங்கோபிக்கச்செய்யுமென்பது தோன்றவெகுளாமைபுணரினென்றுங்கூறினார். இதனாற்கோபஞ்செய்யாமையினதுநன்மைசொல்லப்பட்டது.

௯. உள்ளியதெல்லாமுடனெய்துமுள்ளத்தா
னுள்ளான்வெகுளியெனின்.

If a man never indulges anger in his heart, he will at once obtain all he has thought of. - - - - - - 309

பரி. தவஞ்செய்யுமவன்றன்மனத்தால்வெகுளியையொருக்காலுநினையானாயிற்றன்கருதியபேறெல்லாமொருங்கேபெறுமென்றவாறு.

வி. உள்ளத்தானெனவேண்டாதுகூறியவதனாலருளுடையுள்ளமென்பதமுடிந்தது. அதனாலுள்ளாமையாவதவ்வருளாகியபகையைவளர்த்ததனான்முற்றக்கடிதல். இம்மைமறுமைவீடென்பனவேறுவேறுசிறத்தவாயினுமவையெல்லாமிவ்வொன்றனெய்துமென்பாருள்ளியதெல்லாமுடனெய்துமென்றார். இதனால் வெகுளார்க்குவருநன்மைகூறப்பட்டது.

பு. உள்ளத்தானுள்ளான்வெகுளியெனின் - மனதினாலேயொருவன்கோபத்தைநினையானாயின், உள்ளியதெல்லாம் - நினைத்தபேறுகளையெல்லாம், உடனெய்தும் - உடனேயொருமிக்கப்பெறுவான், எ-று.

வி. உள்ளத்தாலெனவேண்டாது சொன்னதினாலே அவ்வுள்ளம்அருளுடையதென்பதுதோன்றநின்றது. அம்மனத்தாலுள்ளாமையாவது, அந்தஅருளாகிய சினப்பகையைவளர்த்துஅதினாலேயச்சினமுழுமையும்நீக்கிவிடுதல். இம்மையின்பம் மறுமையின்பம்வீடுஎன்பன, வேறுவேறுகுணங்களையுடையனவாயினும் அவையெல்லாமிந்தவொன்றினாலே யடையப்படுமென்றுசொல்லவந்தவர், உள்ளியதெல்லாமுடனெய்துமென்றார். உள்ளியதெல்லாமென்றது, பன்மையிலொருமைவந்தபால்வழுவமைதி. இதினாலேகோபஞ்செய்யாதவர்க்குவரும்நன்மைகூறப்பட்டது.

௰. இறந்தாரிறந்தாரனையர்சினத்தைத்
துறந்தார்துறந்தார்துணை.

Those, who give way to excessive anger, are no better than dead men;* but those, who are freed from anger, are equal to those who are freed (from death†). - - - - 310

---

* Because their body is of no use to them in the pursuit of virtue, through the confusion of mind produced by anger.

† Because they shall certainly be absorbed into deity, it is said.

பரி. சினத்தின்கண்ணேமிக்காருயிருடையாராயினுஞ்செத்தாரோடொப்பர் சினத்தைத்துறந்தார்சாதற்றன்மையராயினுமதனையொழிந்தாரளவினரொன்றவாறு.

வி. மிக்கசினத்தையுடையார்க்குஞானமெய்துதற்குரியவுயிர்நின்றதாயினுங் கலக்கத்தானஃதெய்தாமையொருதலையாகவினவரையிறந்தாரனையரொன்றுஞ்சினத்தைவிட்டார்க்குச்சாக்காடெய்துதற்குரியயாக்கைநின்றதாயினுஞ்ஞானத்தால்வீடுபெறுதலொருதலையாகவினவரைவீடுபெற்றாரோடொப்பரொன்றுங்கூறினார். இதனாலவ்விருவர்பயனுமொருங்குகூறப்பட்டது.

பு. இறந்தார்-கோபத்திலேமிக்கவர், இறந்தாரனையர் - (உயிருடையவராயினும்) செத்தவரோடொப்பர், சினத்தைத் துறந்தார்-கோபத்தைநீக்கினவர், (சாங்குணமுடையவராயினும்) துறந்தார்துணை - அந்தச்சாக்காட்டையொழிந்தோரளவினராம், எ-று.

வி. மிகுந்தகோபமுடையவர்க்குஞானமடைதற்குரிய உயிரிருந்ததாயினுங்கலக்கத்தினாலே யதை யடையக்கூடாமைநிச்சயமாதலால், அவரையிறந்தாரனையரொன்றும், கோபத்தைவிட்டவர்க்குச்சாவுக்குரிய தேகமிருந்ததாயினும் ஞானத்தினாலே முத்திபெறுவதுநிச்சயமாதலால், அவரைமுத்திபெற்றவரோடொப்பரொன்றுங்கூறினார். இதினாலே அவ்விருவர்பயனுமொருமிக்கச்சொல்லப்பட்டது.

---

௩௨. அதிகாரம். CHAPTER XXXII.

இன்னாசெய்யாமை. AGAINST INFLICTING SUFFERING.

பரி. அஃதாவதுதனக்கொருபயனோக்கியாதல்செற்றம்பற்றியாதல்சோர்வானாதலோருயிர்க்கின்னாதவற்றைச்செய்யாமை. இன்னாசெய்தல்வெகுளியையொழியவுநிகழுமென்பதறிவித்தற்கிஃதுவெகுளாமையின்பின்வைக்கப்பட்டது.

அதாவது, தனக்கு ஒருபயனைநோக்கியாவது பகைபற்றியாவது சோர்வினாலேயாவது ஒருயிர்க்குந்தீயவைகளைச்செய்

யாமை. தீங்குசெய்தல் கோபமின்றியும் நடக்குமென்பது தோன்றற்கு இதுவெகுளாமையின் பின்வைக்கப்பட்டது.

௧. சிறப்பீனுஞ்செல்வம்பெறினும்பிறர்க்கின்னா
செய்யாமைமாசற்றார்கோள்.

It is the determination of the spotless not to give sorrow to others, although they could obtain (by it) the wealth* which confers greatness. - - - - - - - - 311

பரி. யோகமாகியசிறப்புத்தருமணிமாமுதலியசெல்வங்களைப்பிறர்க்கின்னா செய்துபெறலாமாயினுமதனைச்செய்யாமையாகமங்கள்கூறியவாற்றான்யாவர்க்குந்துணிபென்றவாறு.

வி. உம்மைபெருமைமேற்று. சிறப்புடையதனைச்சிறப்பென்றுமதன்பயிற்சியான்வாயுவைவென்றெய்தப்படுதலினெட்டுச்சித்திகளையுஞ்சிறப்பீனுஞ்செல்வமென்றுமயக்கங்காமவெகுளியென்னுங்குற்றங்களற்றமையான்மாசற்றாரென்றுங்கூறினார். இதனாற்றனக்கொருபயனோக்கிச்செய்தல்விலக்கப்பட்டது.

பு. சிறப்பீனுஞ்செல்வம்பெறினும்-யோகமாகியசிறப்பைத்தரும்அணிமாமுதலாகிய அஷ்ட சித்திகளைப்பிறர்க்குத்தீங்குசெய்து பெறலாமாயினும், பிறர்க்கின்னாசெய்யாமை-அவர்க்கு அத்தீங்குகளைச்செய்யாதிருத்தல், மாசற்றார்கோள் - குற்றமற்றவராகியயாவர்க்குந்துணிவு, எ-று

வி. பெறினுமென்றவும்மை உயர்வுசிறப்பு. சிறப்புடைய யோகத்தைச்சிறப்பென்றது ஆகுபெயர். அந்தயோகப்பழக்கத்தால்வாயுவைவென்றுபெறப்படுதலால்அட்டசித்திகளைச்சிறப்பீனுஞ்செல்வமென்றார். காமவெகுளிமயக்கங்களாகியமும்மலங்களுமற்றதினாலே மாசற்றாரென்றார். கோளென்றது இங்கேதுணிவின்மேல்நின்றது. மாசற்றாரென்றவிடத்துக்குவ்வுருபும் எல்லாமென்னுமெஞ்சாப்பொருட்டாயதோருரிச்சொல்லுந்தொக்குநின்றன. இதினாலேதனக்கொருபயனோக்கித்தீங்குசெய்தல் விலக்கப்பட்டது.

* செல்வம், wealth is said, by the Commentators, to mean here the ashta sitti, or eight powers, anima, mahims, &c. See Ellis' Cural, p. 18.

௨. கறுத்தின்னாசெய்தவக்கண்ணுமறுத்தின்னா
செய்யாமைமாசற்றார்கோள்.

It is the determination of the spotless not to do evil in return, even to those who have been at enmity with and done evil to them. - - - - - - - - - - 312

பரி. தம்மேற்செற்றங்கொண்டொருவனின்னாதவற்றைச்செய்தவிடத்துமீண்டுதாமவனுக்கின்னாதவற்றைச்செய்யாமையுமவர்துணிபென்றவாறு.

வி. இறந்ததுதழீஇயவெச்சவும்மைவிகாரத்தாற்றொக்கது. அவ்வின்னாதவற்றையுட்கொள்ளாதுவிடுதல்செயற்பாலவென்பதாம்.

பு. கறுத்தின்னாசெய்தவக்கண்ணும்-தம்மிடத்திற்பகையை வைத்துஒருவன்தீங்குகளைச்செய்தவிடத்தும், மறுத்தின்னாசெய்யாமை-தடுத்துத்தாமவனுக்குத்தீங்குகளைச்செய்யாதிருத்தலும், மாசற்றார்கோள்-அவருடையதுணிவாம், எ-று.

வி. மறுத்தின்னாசெய்யாமையுமென்றஇறந்ததுதழுவியஎச்சவும்மைதொக்குநின்றது. அவன்செய்ததீங்குகளைமனத்துவ்வையாதுவிடுதலே செயத்தக்கதென்பதாம்.

௩. செய்யாமைசெற்றார்க்குமின்னாதசெய்தபி
ன்னுய்யாவிழுமந்தரும்.

If a man inflict suffering even on those who hate him,* without having been injured by him, it will afterwards give him irremoveable sorrow. - - - - - - - - - 313

பரி. தான்முன்போரின்னாதசெய்யாதிருக்கத்தன்மேற்செற்றங்கொண்டவர்க்குமின்னாதவற்றைத்துறந்தவன்செய்யுமாயினச்செயலவனுக்குக்கடக்கமுடியாதவிடும்பையைக்கொடுக்குமென்றவாறு.

வி. இடும்பையாவதுதவமிழந்துபழியும்பாவமுமெய்துதல்.

பு. செய்யாமை-தான்முன்னொருதீங்குஞ்செய்யாதிருக்க,

* செய்யாமை. *Not having done* evil to them.

செற்றார்க்கும்-தன்மேற்பகைவைத்தவர்க்கும், இன்னாதசெய்தபின்-தீங்குகளைத்தவஞ்செய்வோன்செய்வானாயின், (அது) உய்யாவிழுமந்தரும்- அவனாற்கடக்கக்கூடாததுக்கத்தைத்தரும், எ-று.

வி. இங்கேதுக்கமாவது, தவத்தையிழந்துபழியும்பாவமும்பொருந்துதலாம்.

௪. இன்னாசெய்தாரையொறுத்தலவர்நாண
நன்னயஞ்செய்துவிடல்.

The (proper) punishment of those who have done evil (to you), is to put them to shame by showing great kindness to them.* - - - - - - - - - 314

பரி. தமக்கின்னாதவற்றைச்செய்தாரைத்துறந்தாரொறுத்தலாவதவர்தாமேநாணுமாறவர்க்கினியவுவகைகளைச்செய்தவ்விரண்டனையுமறத்தலென்றவாறு

வி. மறவாதவழிப்பின்னும்வந்துகிளைக்குமாகலின்மறக்கற்பாலவாயினவவைவெல்லுமுபாயங்கூறியவாறு. இவைமூன்றுபாட்டானுஞ்செற்றம்பற்றிச்செய்தல்விலக்கப்பட்டது.

பு. இன்னாசெய்தாரை - தமக்குத்தீங்குகளைச்செய்தவரை, ஒறுத்தல்-தண்டித்தலாவது, அவர்நாண-அவர்தாமேநாணும்படியாக, நன்னயஞ்செய்து-இனியமகிழ்ச்சிகளைச்செய்து, விடல்-அவர்செய்ததீங்குகளையுந் தாஞ்செய்தமகிழ்ச்சியையுமறந்துபோதல், எ-று.

வி. மறவாவிடிற்பின்னும்பின்னும்வந்துபெருகுமாதலால் மறக்கவேண்டிற்று. அதனாலவரைவெற்றிகொளற்கு உபாயங்கூறியபடி. இவைமூன்றுபாட்டாலும் பகைமைபற்றிச்செய்தல்விலக்கப்பட்டது.

---

* விடல். And to forget (say the Sholiasts) both the evil and the good done on both sides.

௫. அறிவினானாகுவதுண்டோபிறிதினோய்
தந்நோய்போற்போற்றாக்கடை.

What benefit has he derived from his knowledge, who does not endeavour to keep off pain from another as much as from himself? - - - - - - - - - - 315

பரி. துறந்தார்க்குயிர்முதலியவற்றையுள்ளவாறறிந்தவறிவினாலாவதொரு பயனுண்டோபிறிதோருயிர்க்குவருமின்னாதவற்றைத்தம்முயிர்க்குவந்தனபோலக்குறிக்கொண்டுகாவாவிடத்தென்றவாறு.

வி. குறிக்கொண்டுகாத்தலாவதுநடத்தலிருத்தல்கிடத்தனிற்றலுண்டன்முதலியதந்தொழில்களாலும் பிறவாற்றாலுமுயிர்களுறுவனவற்றைமுன்னேயறிந்துறாமற்காத்தல். இதுபெரும்பான்மையுமஃறிணைக்கண்ணுண்ணியவுடம்புடையவற்றைப்பற்றிவருதலிற்பொதுப்படப்பிறிதினோயென்றுமறப்பாலதுதுன்புறில்நமக்கின்னாதசெய்தலாமென்றறிந்துகாத்தல்வேண்டுமாகலினதுசெய்யாதவழியறிவாற்பயனில்லையென்றுங்கூறினார். இதனாற்சோர்வாற்செய்தல்விலக்கப்பட்டது.

பு. பிறிதினோய் - மற்றோருயிர்க்குவருந்தீங்குகளை, தந்நோய்போல் - தம்முயிர்க்குவந்ததீங்குகளைப்போலக்கொண்டு, போற்றாக்கடை-காவாதவிடத்து, அறிவினான்-தவஞ்செய்வோர்க்கு (உயிர்முதலியவற்றையுள்ளபடியேயளந்துநிச்சயித்த) அறிவினாலே, ஆகுவதுண்டோ - ஆகக்கிடந்ததொருபயனுண்டோஇல்லை, எ-று.

வி. காத்தலாவது, நடத்தல்இருத்தல்படுத்தல்நிற்றல் உண்டல்முதலியதந்தொழில்களாலும் பிறவகைகளாலும் உயிர்கள் அடையுந்துன்பங்களை முன்னாடியறிந்துகொண்டு அவற்றையடையாமற்காத்தல். இதுபெரும்பாலும் அஃறிணையிலேநுண்ணியவுடம்புடையவற்றைப்பற்றி வருதலாற் பொதுப்படப்பிறிதினோயென்றும், மறதியினாலேயது துன்பப்பட்டாலும்நமக்குத்தீங்குசெய்தலாமென்றறிந்து காத்தல்வேண்டுமாகலினதுசெய்யாதபோது அறிவினாலே பயனில்லையென்றுங்கூறினார். இதனாற்சோர்வுபற்றித்தீங்குசெய்தல் விலக்கப்பட்டது.

௬. இன்னாவெனத்தா னுணர்ந்தவை துன்னாமை
வேண்டும்பிறன்கட்செயல்.

Let not a man consent to do those things to another which he knows will give sorrow. - - - - - - 316

பரி. இவைமக்கட்கின்னாதனவெனவநுமானத்தாற்றானறிந்தவற்றைப்பிறன் மாட்டுச்செய்தலைமேவாமைதுறந்தவனுக்குவேண்டுமென்றவாறு.

வி. இன்பதுன்பங்களுயிர்க்குணமாகலினவைகாட்சியளவையானறியப்படா மையறிக. அறமும்பாவமுமுளவாவதுமனமுளனாயவழியாகலானுணர்ந்தவை யென்றார்.

பு. இன்னாவெனத்தானுணர்ந்தவை-இவைமனிதர்க்குத்தீங் காவனவென்று அநுமானத்தால் தானறிந்தவற்றை, பிறன்க ட்செயல்-பிறனிடத்துச்செய்வதை, துன்னாமைவேண்டும்-மே ற்கொள்ளாமை (தவஞ்செய்வோனுக்கு) வேண்டும், எ-று.

வி. இன்பதுன்பங்கள் உயிர்க்குணமாதலினவைகாட்சியள வையாலறியப்படாமையால் அநுமானத்தாலறிந்தெனக்கூற வேண்டிற்று. தருமமும் பாவமும்உள்ள அளவுமனமுள்ளவள வேயாதலாலுணர்ந்தவையென்றார்.

௭. எனைத்தானுமெஞ்ஞான்றும்யார்க்குமனத்தானா
மாணாசெய்யாமைதலை.

It is the chief (of all virtucs) not knowingly to do mean things, in the least degree, at any time, towards any person. - - - - - - - - - - 317

பரி. மனத்தோடுளவாகின்றவின்னாதசெயல்களையெக்காலத்தும்யாவர்க்குஞ் சிறிதாயினுஞ்செய்யாமைதலையாயவறமென்றவாறு.

வி. ஈண்டுமனத்தானாகாதவழிப்பாவமில்லையென்பதுபெற்றாம். ஆற்றலுண் டாகியகாலத்துமாகாமையினெஞ்ஞான்றுமென்றுமெளியார்க்குமாகாமையி ன்யார்க்குமென்றுங்கூறினார்.

பு. மனத்தானாம்-மனத்தோடுஉண்டாகின்ற, மாணா-மாட்சி மைப்படாதனவாகியதீங்குகளை, எஞ்ஞான்றும்-எக்காலத்து ம், யார்க்கும்-எவரிடத்தும், எனைத்தானும்-எவ்வளவுசிறிதாயி

னும், செய்யாமைதலை-செய்யாதிருத்தல் தலைமையாகியதரும மாம், எ-று.

வி. இங்கேமனத்தாலாகாதபோது பாவமில்லையென்பது பெறப்பட்டது. வலிமையுண்டானகாலத்துமாகாததினாலே எஞ்ஞான்றுமென்றும், எளியவர்க்குமாகாததினாலேயார்க்குமென்றுங் கூறினார்.

அ. தன்னுயிர்க்கின்னாமைதானறிவானென்கொலோ
மன்னுயிர்க்கின்னாசெயல்.

Why does a man inflict upon others* those sufferings, which he has found by experience are sufferings to himself?† - 318

பரி. பிறர்செய்யுமின்னாதனதன்னுயிர்க்கின்னாவாந்தன்மையையநுபவித்தறிகின்றவனிலைபேறுடையபிறவுயிர்கட்குத்தானவற்றைச்செய்தலென்னகாரணத்தானென்றவாறு.

வி. இவ்வாறேயிவைபிறவுயிர்க்குமின்னாவென்பதநுமானத்தானுமறிந்துவைத்துச்செய்கின்றபாவங்கழுவப்படாமையினின்னாதனவானவைவருந்தப்பின்னேவந்துவருத்துமென்பதாகமத்தானுமறிந்தொழியற்பாலானென்பதுதோன்றத்தானென்றுமதத்தன்மையானொழியாமைக்குக்காரணமயக்கமென்பதுதோன்றவென்கொலோவென்றுங்கூறினார். இவைமூன்றுபாட்டானும்பொதுவகையானவிலக்கப்பட்டது.

பு. தன்னுயிர்க்கின்னாமை - (பிறர்செய்யுந்தீங்குகள்) தன்னுயிர்க்குத்துன்பமாந்தன்மையை, தானறிவான் - தானநுபவித்தறிகின்றவன், மன்னுயிர்க்கு-நிலைபெற்றமற்றவுயிர்களுக்கு, இன்னாசெயல்-தீங்குகளைச்செய்வது, என்கொலோ-என்னகாரணத்தால், எ-று.

வி. இப்படியேபிறவுயிர்கட்குந்துன்பமாமென்பது அநுமானப்பிரமாணத்தாலறிந்திருந்துஞ் செய்கின்றபாவம்போக்கப்படாததினாலே யவைபின்வந்துவருத்துமென்பதை ஆகமப்பிரமாணத்தானுமறிந்து அதைவிட்டுவிடவேண்டுமென்பது

* மன்னுயிர், enduring life; a creature; other creatures.
† தன்னுயிர், his own life, or soul; himself.

தோன்றத்தானென்றும், அங்ஙனம்விடாமைக்குக்காரணமயக்கமென்பதுதோன்றவென்கொலோவென்றுங்கூறினார். இவை மூன்றுபாட்டானும் பொதுவகையால்விலக்கப்பட்டது.

௯. பிறர்க்கின்னமுற்பகற்செய்யிற்றமக்கின்னா
பிற்பகற்றாமேவரும்.

If a man inflict sorrow upon others in the morning, sorrow, will come upon him in the evening, unsought. - - - 319

பரி. துறந்தவர்பிறர்க்கின்னாதனவற்றையொருபகலதுமுற்கூற்றின்கட்செய்வாராயிற்றமக்கின்னாதனவதன்பிற்கூற்றின்கண்ணவர்செய்யாமற்றாமே வருமென்றவாறு.

வி. முற்பகல்பிற்பகலென்பனபின்முன்னாகத்தொக்கவாறும்வேற்றுமைத்தொகை. தவமழிதலிங்ஙனங்கடிதினுமெளிதினும்வருமதனாலவைசெய்யற்கவென்பதாம். இனித்தானேவருமென்பாடமாயினச்செயறானேதமக்கின்னாதனவாய்வருமெனவுபசாரவழக்காக்கியாக்கம்வருவித்துரைக்க.

பு. பிறர்க்கின்னாமுற்பகற்செய்யின்-(தவஞ்செய்வோர்) பிறர்க்குத்தீங்குகளை யொருபகலின் முற்பங்கிலேசெய்வாராயின, தமக்கின்னா-செய்தஅவருக்குத்தீங்குகள், பிற்பகல்-அப்பகலின்பிற்பங்கிலே, தாமேவரும்-பிறர்செய்யவேண்டாமலேவரும், எ-று.

வி. முற்பகல்பிற்பகலென்பனபின்முன்னாகமாறியுருபுதொக்குநின்ற ஆறும்வேற்றுமைத்தொகைச்சொற்கள். தவத்திற்குஅழிவு இப்படிச்சீக்கிரமாகவும் எளிதாகவும்வரும், ஆனதினாலே அவைசெய்யாதொழிகவென்பதாம்.

ம. நோயெல்லாநோய்செய்தார்மேலவாநோய்செய்யார்
நோயின்மைவேண்டுபவர்.

Every sorrow will come upon those who give pain to others; therefore those, who desire to be free from sorrow, give no pain to others. - - - - - - - - - 320

பரி. இன்னாதனவெல்லாம்பிறிதோருயிர்க்கின்னாதனசெய்தார்மேலவாமதனாற்றம்முயிர்க்கின்னாதனவேண்டாதார்பிறிதோருயிர்க்கின்னாதனசெய்யாரென்றவாறு.

வி. உயிர்நிலத்துவினைவித்திட்டார்க்குவினையுமதுவேயாகலின்றெல்லாநோய் செய்தார்மேலவாமென்றார். இதுசொற்பொருட்பின்வருநிலை. இவையிரண்டு பாட்டானுமதுசெய்தார்க்குவருந்தீங்குகூறப்பட்டது.

பு. நோயெல்லாம் - துன்பங்களெல்லாம், நோய்செய்தார் மேலவாம் - மற்றோருயிர்க்குத்துன்பங்களைச்செய்தவரிடத்த னவாம், (ஆனதினாலே)நோயின்மைவேண்டுபவர் - தம்முயிர்க் குத்துன்பங்களைவிரும்பாதவர், நோய்செய்யார் - பிறவுயிர்க ளுக்குத்துன்பங்களைச்செய்யார். எ-று.

வி. உயிராகியநிலத்திலே எந்தவிதவித்தைநடுவார்களோ அ ந்தவிளைவேயவர்க்குவிளையுமாதலால் நோயெல்லாநோய்செய் தார்மேலவாமென்றார். இதுசொற்பொருட்பின்வருநிலையலங் காரம். இவையிரண்டுபாட்டாலும் அதுசெய்தார்க்குவருந்தீ ங்குகூறப்பட்டது.

---

௩௩. அதிகாரம். CHAPTER XXXIII.

கொல்லாமை. Against destroying life.

பரி. அஃதாவதையறிவுடையனமுதலோரறிவுடையனவீறாகியவுயிர்களைச் சோர்ந்துங்கொல்லுதலைச்செய்யாமை இதுமேற்கூறியவறங்களெல்லாவற்றினு ஞ்சிறப்புடைத்தாய்க்கூறாதவறங்களையுமகட்படுத்திநிற்றலினிறுதிக்கண்வைக் கப்பட்டது.

அதாவது, ஐயறிவுடையவுயிர்முதல்ஓரறிவுடையவுயிர்கடை யாகவுள்ளவுயிர்களைமறந்துங்கொலைசெய்யாமை. இதுமேலே சொல்லிய தருமங்களெல்லாவற்றினுஞ் சிறப்புடையதாய்ச் சொல்லாததருமங்களையும் உட்படுத்திநிற்பதினாலே கடைசி யிலேவைக்கப்பட்டது.

க. அறவினையாதெனிற்கொல்லாமைகோறல்
பிறவினையெல்லாந்தரும்.

Is it asked, what is the sum of all virtuous conduct? It is, never to destroy life. On the contrary (the destruction of life) leads to every evil deed. - - - - - - 321

பரி. அறங்களெல்லாமாகியசெய்கையாதென்றுவினவினஃதோருயிரையுங் கொல்லாமையாமவற்றைக்கொல்லுதல்பாவச்செய்கைகளெல்லாவற்றையுந் தானேதருமாதலானென்றவாறு.

வி. அறம்,சாதியொருமை.விலக்கியதொழிதலுமாஞ்செய்தலாமாகலிற்கொல்லாமையையறவினையென்றார்.ஈண்டுப்பிறவினையென்றதவற்றின்வினையை.கொலைப்பாவம்விளைக்குந்துன்பமேனைப்பாவங்களெல்லாங்கூடியும்விளைக்கமாட்டாவென்றவாறு. கொல்லாமைதானேபிறவறங்களெல்லாவற்றின்பயனையுந்தருமென்றுமேற்கோள்கூறியதற்கேதுவெதிர்மறைமுகத்தாற்கூறியவாறாயிற்று.

பு. அறவினையாதெனின் - தருமங்களெல்லாமாகியசெயல்யாதென்று வினவினால், கொல்லாமை-மற்றோருயிரையுங்கொலை செய்யாதிருத்தலாம், கோறல்-அவற்றைக்கொல்லுதல், பிறவினையெல்லாந்தரும் - எல்லாப்பாவச்செயல்களையுந்தானேதருமாதலால், எ-று.

வி. அறமென்றது, சாதியொருமை.விலக்கியதைவிலக்கலுந் தருமச்செயலாமாகலிற்கொல்லாமையை அறவினையென்றார். இங்கேபிறவினையென்றது அக்கொல்லாமைக்கெதிராகிய பிறவற்றின்வினைகளை. கொலைப்பாவந்தருந்துன்பம் மற்றப்பாவங்களெல்லாங்கூடியுந் தரமாட்டாவென்பதாம். கொல்லாமைதானே மற்றத்தருமங்களெல்லாந்தரும்பயனைத்தருமென எடுத்துக்கூறியதற்கு ஏது எதிர்மறைமுகத்தாற்சொன்னபடியாயிற்று.

உ. பகுத்துண்டுபல்லுயிரோம்புதனூலோர்
தொகுத்தவற்றுளெல்லாந்தலை.

The chief of all (the virtues) which authors have summed up, is to eat of food that has been shared with others, and to preserve the manifold life of other creatures. - - - - 322

பரி. உண்பதனைப்பசித்தவுயிர்கட்குப்பகுத்துக்கொடுத்தைவகையுயிர்களையு மோம்புதலறநூலுடையார்துறந்தார்க்குத்தொகுத்தவறங்களெல்லாவற்றினுந் தலையாயவறமென்றவாறு.

வி. பல்லுயிருமென்னுமும்மைவிகாரத்தாற்றொக்கது. ஓம்புதல்சோர்ந்துங் கொலைவாராமற்குறிக்கொண்டுகாத்தல். அதற்குப்பகுத்துண்டலின்றியமையாவு றுப்பாகலினச்சிறப்புத்தோன்ற அதனையிறந்தகாலவினையெச்சத்தாற்கூறினார். எல்லாநூல்களினுநல்லனவெடுத்தெல்லார்க்கும்பொதுப்படக்கூறுதலிவர்க்கி

யல்பாதலினீண்டும்பொருப்படாலோரென்றுமவரெல்லார்க்குமொப்பமுடிதலானேயிதுதலையாயவறமென்றுங்கூறினார்.

பு. பகுத்துண்டு-உண்பதைப்பசித்தவுயிர்களுக்குப்பகுத்துக்கொடுத்துத்தானுமுண்டு, பல்லுயிரோம்புதல்-ஐவகைப்பட்டவுயிர்களையுங்காப்பாற்றுவது, நூலோர் தருமசாத்திரமுடையோர்கள், தொகுத்தவற்றுளெல்லாந்தலை-தவஞ்செய்வோர்க்கென்று திரட்டிச்சொன்னதருமங்களெல்லாவற்றிலுந் தலைமையாகியதருமமாம், எ-று.

வி. பல்லுயிரும் என்னும்முற்றும்மை தொக்குநின்றது. ஓம்புதல்மறந்துங்கொலைநேரிடாமற்குறிக்கொண்டுகாப்பாற்றுதல். அதற்குப்பகுத்துண்பது இருந்தேதீரவேண்டிய அங்கமாதலால் அச்சிறப்புத்தோன்ற அதனைக்காரணப்பொருட்டாகிய வினையெச்சத்தாற்கூறினார்.

௩. ஒன்றாகநல்லதுகொல்லாமைமற்றதன்
பின்சாரப்பொய்யாமைநன்று.

Not to destroy life, is the one (great) good; next in goodness to that, is freedom from falsehood. - - - - 323

பரி. நூலோர்தொகுத்தவறங்களுட்டன்றோடிணையொப்பதின்றித்தானேயாகநல்லதுகொல்லாமை;அஃதொழிந்தாற்பொய்யாமையதன்பின்னேநிற்கநன்றென்றவாறு.

வி. நூலோர்தொகுத்தவற்றுளென்பததிகாரத்தான்வந்தது.அதிகாரங்கொல்லாமையாயினுமேற்பொய்யாமைபொய்யாமையாற்றினெனவும்யாமெய்யாக்கண்டவற்றுளில்லையெனவுங்கூறினாராகலினிரண்டறத்துள்ளும்யாதுசிறந்ததென்றையநிகழுமன்றேயதுநிகழாமற்பொருட்டீண்டதன்பின்சாரப்பொய்யாமைநன்றென்றார். முற்கூறியதிற்பிற்கூறியதுவலியுடைத்தாகலினதனைப்பின்சாரநன்றென்றதுநன்மையயக்கும்வழிப்பொய்யுமெய்யாயுந்தீமையயக்கும்வழிமெய்யும்பொய்யாயுமிதனைப்பற்றவதுதிரிந்துவருதலானெனவுணர்க. இவைமூன்றுபாட்டானுமில்லறத்தினதுசிறப்புக்கூறப்பட்டது.

பு. ஒன்றாகநல்லது-(அறிவுடையோர்தொகுத்துச்சொல்லியதருமங்களுள்) தனக்குநிகர்வேறின்றித்தனக்குத்தானேநிகராகநல்லது,கொல்லாமை-கொலைசெய்யாமையாம்,அதன்

பின்சார-அதன்பின்னிற்க, பொய்யாமைநன்று-பொய்சொல்லாதிருத்தலுநன்று, எ-று.

வி. அறிவுடையோர்சொல்லிய தருமங்களுள்என்பது அதிகாரத்தால்வந்தது. அதிகாரங் கொல்லாமையாயினும்மேலே பொய்யாமையைப்போற் சிறந்ததருமமில்லையென்றார், இங்கேயொன்றாக நல்லதுகொல்லாமையென்றார், இரண்டினுள்ளுஞ்சிறந்ததுயாதென்றுசந்தேகந்தோன்றுமல்லவா, அதனை நீக்குதற்பொருட்டுஅதன்பின்சாரப்பொய்யாமை நன்றென்றார். முன்னேசொன்னபொய்யாமையிற்பின்சொன்னகொல்லாமைவலியுடைத்தாதலால்அதனைப்பின்சாரநன்றென்றது, நன்மைதருமாயிற்பொய்யுமெய்யாகியுந் தீமைதருமாயின்மெய்யும் பொய்யாகியுமாறிவருதலாலெனவுணர்க. இவைமூன்றுபாட்டாலுங்கொல்லாமையின் சிறப்புக்கூறப்பட்டது.

௪. நல்லாறெனப்படுவதியாதெனின்யாதொன்றுங்
கொல்லாமைசூழுநெறி.

Is it asked what is the good way? It is the path which considers how it may avoid killing any creature. - - - - 324

பரி. மேற்கதிவீடுபேறுகட்குநல்லநெறியென்றுசொல்லப்படுவதியாதென்றுவினவினஃதுயாதோருயிரையுங்கொல்லாமையாகியவறத்தினைக்காக்கக்கருதுநெறியென்றவாறு.

வி. யாதுமென்றதோரறிவுயிரையுமகப்படுத்தற்கு. காத்தல்வழுவாமற்காத்தல். இதனாலிவ்வறத்தினையுடையதேநன்னெறியென்பதுகூறப்பட்டது.

பு. நல்லாறெனப்படுவதியாதெனின்-(சுவர்க்கபதவிமோட்சங்களுக்கு) நல்வழியென்றுசொல்லப்படுவதுயாதென்றுவினவினால், யாதொன்றும்-யாதோருயிரையும், கொல்லாமை-கொலைசெய்யாமையாகியதருமத்தைக்காக்க, சூழுநெறி-நினைக்குமார்க்கம், எ-று.

வி. யாதுமென்றதுஓரறிவுயிரையுமுள்ளிடுதற்கு. காத்தல் குற்றம்வாராமற்காப்பது. இதனால்இந்தத்தருமநெறியேநன்னெறியென்பதுகூறப்பட்டது.

௫. நிலையஞ்சி நீத்தாருளெல்லாங்கொலையஞ்சிக்
கொல்லாமைசூழ்வான்றலை.

Of all those who, fearing the permanence (of earthly births*), have abandoned desire, he is the chief who, fearing (the guilt of) murder, considers how he may avoid the destruction of life. 325

பரி. பிறப்புநின்றநிலையையஞ்சிப்பிறவாமைப்பொருட்டுமனைவாழ்க்கையைத்துறந்தாரெல்லாருள்ளுங்கொலைப்பாவத்தையஞ்சிக்கொல்லாமையாகியவறத்தைமறவாதவனுயர்ந்தவனென்றவாறு.

வி. பிறப்புநின்றநிலையாவதியங்குவநிற்பவென்னுமிருவகைப்பிறப்பினுமின்பமென்பதொன்றின்றியுள்ளனவெல்லாந்துன்பமேயாயநிலைமை. துறவொன்றேயாயினுஞ்சமயவேறுபாட்டாற்பலவாமாகலினீத்தாருளெல்லாமென்றார். இதனாலிவ்வறமறவாதவனுயர்ச்சிகூறப்பட்டது.

பு. நிலையஞ்சி-பிறப்புநின்றநிலைக்குப்பயந்து, நீத்தாருளெல்லாம்-(பிறவாமையின்பொருட்டு) இல்வாழ்க்கையை நீக்கினவருளெல்லாம், கொலையஞ்சி-கொலைப்பாவத்திற்குப்பயந்து, கொல்லாமைசூழ்வான்றலை-கொல்லாமையாகிய தருமத்தைமறவாதுநினைப்பவன்உயர்ந்தவன், எ-று.

வி. பிறப்புநின்றநிலையாவது, நடப்பனநிற்பனவென்னுமிருவகையுயிர்களிலும் இன்பமென்பது ஒன்றுமின்றியுள்ளனவெல்லாந்துன்பமேயாகியநிலைமை. துறவறமொன்றேயாயினுஞ்சமயங்களின் வேறுபாட்டாற்பலவாமாகலின் நீத்தாருளெல்லாமென்றார். இதனாலிந்தத்தருமத்தை மறவாதவனுடையவுயர்வுசொல்லப்பட்டது.

௬. கொல்லாமைமேற்கொண்டொழுகுவான்வாழ்நாண்மேற்
செல்லாதுயிருண்ணுங்கூற்று.

Yaman, the destroyer† of life, will not attack the life-time of him, who acts under the determination never to destroy life.‡ - 326

---

* Being fixed in the perpetual chain of births and deaths, according to their doctrine of the transmigration of souls.

† உண்ணும். The *eater* of life.

‡ Or, who acts (according to the vow of) not destroying life, which he has taken upon him.

பரி. கொல்லாமையைவிரதமாகமேற்கொண்டொழுகுவானதுவாழ்நாளின் மேலுயிருண்ணுங்கூற்றுச்செல்லாதென்றவாறு.

வி. மிகப்பெரியவறஞ்செய்தாருமிகப்பெரியபாவஞ்செய்தாருமுறையானன்றியிம்மைதன்னுள்ளேயவற்றின்பயனநுபவிப்பாரென்னுமறநூற்றுணிபுபற்றியிப்பேறறஞ்செய்தான்றானுங்கொல்லப்படான் படானாகவேயடியிற்காட்டியவாழ்நாளிடையூறின்றியெய்துமென்பார்வாழ்நாண்மேற்கூற்றுச்செல்லாதென்றார். செல்லாதாகவேகாலநீட்டிக்குநீட்டித்தான்ஞானம்பிறந்துவீடுபெறுமென்பதுகருத்து. இதனாலவர்க்குவருநன்மைகூறப்பட்டது.

பு. கொல்லாமைமேற்கொண்டொழுகுவான்-கொல்லாமையென்னுந்தருமத்தைவிரதமாகக்கொண்டு நடப்பவனுடைய, வாழ்நாண்மேல்-சீவகாலதினத்தின்மேல்,உயிருண்ணுங்கூற்று-உயிர்குடிக்குங்கூற்றமானது, செல்லாது-கொலைகுறித்துநடவாது, எ-று.

வி. மிகவும்பெரிதாகிய தருமஞ்செய்தவரும் மிகவும்பெரிதாகிய பாவஞ்செய்தவரும் முறைதப்பியிம்மையிலேதானேயவற்றின்பயனையநுபவிப்பாரென்கின்ற தருமநூலின் நிச்சயத்தைப்பற்றியிந்தப்பெரிதாகியதருமத்தைச் செய்தவனுங் கொல்லப்படான். படானாகவேயடிநாளில் அமைத்தசீவகாலதினங்கள் இடையூறில்லாமலிருக்குமென்று சொல்லவந்தவர் வாழ்நாண்மேற்கூற்றுச்செல்லாதென்றார். சீவகாலதினங்களுக்குஇடையூறில்லாதாகவே காலம்நீட்டிக்கும், அது நீட்டித்தால்ஞானம்பிறந்துமோட்சம்பெறுவானென்பதுகருத்து. இதினாலவர்க்குவரும்தன்மைகூறப்பட்டது.

எ. தன்னுயிர்நீப்பினுஞ்செய்யற்கதான்பிறி
தின்னுயிர்நீக்கும்வினை.

Let no one do that which would destroy the life of another, although he should lose his own life. - - - - 327

பரி. அதுசெய்யாதவழித்தன்னுயிருடம்பினீங்கிப்போமாயினுந்தான்பிறிதோரின்னுயிரையதனுடம்பினீக்குந்தொழிலைச்செய்யற்கவென்றவாறு.

வி. தன்னையதுகொல்லினுந்தானதனைக்கொல்லற்கவென்றதுபாவங்கொலையுணவழித்தேய்தலுங்கொன்றவழிவளர்தலுநோக்கி.இனித்தன்னுயிர்நீப்பினு

மென்பதற்குச்சார்தியாகச்செய்யாதவழித்தன்னுயிர்போமாயினுமென்றுரை ப்பாருமுளர். பிறர்செய்தலுமாகாமையினுரையன்மையறிக.

பு. தன்னுயிர் நீப்பினும்-அதுசெய்யாதபோது தன்னுயிரு டம்பிலேநின்று நீங்கிப்போமாயினும், தான்பிறிதின்னுயிர்-தான்மற்றென்றினுடையஇன்பமாகியவுயிரை, நீக்கும்வினை-அவ்வுடம்பினின்றும்பிரிக்குந்தொழிலை, செய்யற்க-செய்யாதொழிக, எ-று.

வி. தன்னையதுகொல்லினுந்தானதைக்கொல்லாதொழிக வென்றது, கொலைசெய்யாவிடத்துப்பாவந்தேய்தலையுஞ்செய் தவிடத்துப்பாவம்வளர்தலையுங்குறித்து. இனித்தன்னுயிர் நீப் பினுமென்பதற்குச்சார்தியாகக்கொல்லாவழித்தன்னுயிர்போ மாயினுமெனக்கூறுவாருமுண்டு. பிறர்சார்த்திசெய்தலுமாகா மையாலதுபொருளன்றென்க.

அ. நன்றாகுமாக்கம்பெரிதெனினுஞ்சான்றோர்க்குக் கொன்றாகுமாக்கங்கடை.

The advantage* which might flow from destroying life is dishonourable to the wise, even although it should be said to be great and good. - - - - - - - - 328

பரி. தேவர்பொருட்டுவேள்விக்கட்கொன்றவின்பமிகுஞ்செல்வம்பெரிதாமெ ன்றில்வாழ்வார்க்குக்கூறப்பட்டதாயினுந்துறவானமைந்தோர்க்கோருயிரைக் கொல்லவருஞ்செல்வங்கடையென்றவாறு.

வி. இன்பமிகுஞ்செல்வமாவது தாமுந்தேவராய்த்துறக்கத்துச்சென்றெய்து ஞ்செல்வம். அதுசிறிதாகலானும்பிறத்தற்கேதுவாகலானும்வீடாகியவீறிலின் பமெய்துவார்க்குக்கடையெனப்பட்டது. துறக்கமெய்துவார்க்காமாயினும்வீ டெய்துவார்க்காகாதென்றமையின்விதிவிலக்குகடம்முண்மலையாமை விளக்கி யவாறாயிற்று. இஃதில்லறமன்மைக்குக்காரணம். இவையிரண்டுபாட்டானுங் கொலையதுகுற்றங்கூறப்பட்டது.

---

* He is said to be speaking here of destroying life for sacrifice: even this is dishonourable to the perfect ascetic, who should not seek the inferior advantages of such worship, viz. becoming a god and obtaining the power and felicity of Swerga, and such *petty dignities*, but should give himself entirely up to the one act of meditation on God, by which he may attain the highest benefit, viz. absorption.

பு. நன்றாகும் - (தேவர்பொருட்டாகவேள்வியிலேகொன்றால்) இன்பமானதுமிகும், ஆக்கம்பெரிதெனினும்-செல்வம்பெரிதாமென்று இல்லறத்தார்க்குச்சொல்லப்பட்டதாயினும், சான்றோர்க்கு-தவத்தால்நிறைந்ததுறவறத்தார்க்கு, கொன்றாகுமாக்கங்கடை- ஓருயிரைக்கொலைசெய்ததினால்வருஞ்செல்வங்கடைப்பட்டதாம், எ-று.

வி. இன்பமிகுதலுஞ்செல்வம்பெரிதாதலுமாவன, தாமுந்தேவராகிச்சுவர்க்கபதத்திற்சென்றின்புறுதலும் ஆண்டுநெடுங்காலமநுபவிக்கப்படுஞ்செல்வமுமாம். அவ்வின்பமுஞ்செல்வமுஞ்சிறியவாதலாலும் பிறப்பிற்குக்காரணமாதலாலும் மோட்சமாகிய முடிவில்லாதவின்பத்தையடைவார்க்குக்கடையென்றார். சுவர்க்கபதவியிற்சேர்வார்க்கு ஆகுமாயினும்மோட்சபதவியிற்சேர்வார்க்குஆகாதென்றதினாலேவிதித்தலும் விலக்கலுமாகிய தருமங்கள் தங்களில்மாறுபட[illegible]மையைத்தெரிவித்தபடியாயிற்று. இது இல்லறமன்றென்பதற்குக்காரணம். இவையிரண்டுபாட்டாலுங்கொலையினதுகுற்றங்கூறப்பட்டது.

௯. கொலைவினையராகியமாக்கள்புலைவினையர்
புன்மைதெரிவாரகத்து.

Men who destroy life are base men, in the estimation of those who know the nature of meanness. - - - - 329

பரி. கொலைத்தொழிலையுடையராகியமாந்தரத்தொழிலின்கீழ்மையையறியுநெஞ்சத்தரல்லராயினுமறிவார்நெஞ்சத்துப்புலைத்தொழிலினரென்றவாறு.

வி. கொலைவினையரென்றதனால்வேள்விக்கட்கொலையன்மையறிக. புலைவினையரென்றதுதொழிலாற்புலையரென்றவாறு. இம்மைக்கட்கீழ்மையெய்துவரென்பதாம்.

பு. கொலைவினையராகியமாக்கள் - கொலைத்தொழிலைச்செய்பவராகியமனிதர், புன்மைதெரிவாரகத்து-அத்தொழிலின்புன்மையையறிவாருடையநெஞ்சினிடத்து, புலைவினையர் - இழிதொழிலாளராம், எ-று.

வி. இழிதொழிலாளர்சண்டாளர், கொலைவினையரென்றதி

னாலேயேவெள்கிக்கொலையைவிலக்கிநின்றது. இம்மையிலேகீழ்சாதிப்பண்படைவனென்பதாம்.

௰. உயிருடம்பினீக்கியாரென்பர்செயிருடம்பிற்
செல்லாத்தீவாழ்க்கையவர்.

(The wise) will say that men of diseased bodies, who live in degradation and in poverty, are those who separated the life from the body of animals (in a former birth). - - - 330

பரி. நோக்கலாகாநோயுடம்புடனேவறுமைகூர்ந்தவிழிதொழில்வாழ்க்கையினையுடையாரையிவர்முற்பிறப்பின்கண்ணுயிர்களையவைநின்றவுடம்பினின்றுநீக்கினவரென்றுசொல்லுவர்வினைவிளைவுகளையறிந்தோரென்றவாறு.

வி. செல்லாவாழ்க்கைதீவாழ்க்கையெனக்கூட்டுக. செயிருடம்பினராதல் அக்கேபோலங்கையொழியவிரலழுகித் துக்கத்தொழுநோயெழுபவே என்பதனானுமறிக. மறுமைக்கண்ணிவையுமெய்துவனென்பதாம். இவையிரண்டுபாட்டானுங்கொல்வார்க்குவருந்தீங்குகூறப்பட்டது.

அருளுடைமைமுதற்கொல்லாமையீறாகச்சொல்லப்பட்டவிவற்றுள்ளே சொல்லப்படாதவிரதங்களுமடங்குமஃதறிந்தடக்கிக்கொள்க. ஈண்டுரைப்பிற் பெருகும். இனியவற்றின்பயனாகியஞானங்கூறியதொடங்கினர். ஞானமாவது வீடுபயக்குமுணர்வு. அதுநிலையாமைமுதலவாவறுத்தலீறாகியநான்கதிகாரத்துளடக்கப்பட்டது. அவற்றுள்.

பு. செயிருடம்பின்-பார்க்கக்கூடாதநோயுடம்புடனே,செல்லாத்தீவாழ்க்கையவர்- தரித்திரமிகுந்தஇழிதொழிற்சீவனத்தாரை,உயிருடம்பினீக்கியாரென்பர்-(இவர்முந்தினசென்மத்திலே) உயிர்களையந்தந்தவுடம்பிலேநின்று நீக்கினவரென்று சொல்லுவர்வினைப்பயனையறிந்தோர், எ-று.

வி. செல்லாவாழ்க்கையென்றுந் தீவாழ்க்கையென்றுங்கூட்டுக. செயிருடம்பினராவதை,அக்கேபோலங்கையொழியவிரலழுகித் துக்கத்தொழுநோயெழுபவே என்னும்நாலடியார்ச்செய்யுளாலுமறிக. மறுசென்மத்திலிவற்றையுமடைவனென்பதாம். இவையிரண்டுபாட்டாலுங் கொலைசெய்வார்க்குவருந்தீங்குகூறப்பட்டது.

அருளுடைமை முதலாகக்கொல்லாமை கடையாகச்சொல்லப்பட்ட இவற்றுள்ளேசொல்லப்படாத விரதங்களும் அடங்

ரும். அவற்றை யறிந்தடக்கிக்கொள்க. இங்கேசொல்லப்புகுந்தால்விரியும். இனியவற்றின்பயனாகிய ஞானத்தைச்சொல்லத்தொடங்கினார். ஞானமாவது மோட்சத்தைத்தருகிற அறிவு. அது நிலையாமைமுதலாக அவாவறுத்தல்கடையாகநான்கு அதிகாரத்துள் அடக்கப்பட்டது. அவற்றுள்,

---

௩௪. அதிகாரம். CHAPTER XXXIV.

நிலையாமை. INSTABILITY.*

பரி. அஃதாவதுதோற்றமுடையனயாவையுநிலையுதலிலவாந்தன்மை.மயங்கியவழிப்பேய்த்தேரிற்புனல்போலத்தோன்றிமெய்யுணர்ந்தவழிக்கயிற்றிலரவுபோலக்கெடுதலிற்பொய்யென்பாரும்.நிலைவேறுபட்டுவருதலாற்கணந்தோறும்பிறந்திறக்குமென்பாரும். ஒருவாற்றான்வேறுபடுதலுமொருவாற்றான்வேறுபடாமையுமுடைமையினிலையுதலுநிலையாமையுமொருங்கேயுடையவென்பாருமெனப்பொருட்பெற்றிகூறுவார்பலதிறத்தராயினுமவரெல்லார்க்குமவற்றது நிலையாமையுடம்பாடாகலினீண்டதனைக்கூறுகின்றார். இஃதுணர்ந்துழியல்லது பொருள்களிற்பற்றுவிடாதாகலினிது முன்வைக்கப்பட்டது.

அதாவது, பிறப்பையுடையனவெல்லாம் நிலைத்திராதனவாகியதன்மை. இனிமயங்கியபோது கானலிலே நீர்போலத்தோன்றிமெய்யுணர்ந்தபோது பழுதையிலே பாம்புபோலக்கெடுதலாற்பொய்யென்றுசொல்லுவோரும், நிலைவேறுபட்டுவருவதினாலே நிமிஷந்தோறும் பிறந்திறக்குமென்பாரும், ஒருவிதத்திலே வேறுபடுதலுமொருவிதத்திலே வேறுபடாமையுமுடையதினாலே நிலைத்தலும் நிலையாமையுமொருமித்துடையன வென்பாரும்,எனப்பொருளின்றன்மைகூறுவார்பலராயினும் அவரெல்லார்க்கும் அவற்றின் நிலையாமையுடம்பாடாதலால் இங்கேயதைக்கூறுகின்றார். இதையறிந்தாலல்லது உலகப்பொருள்களிலேயுள்ள மனப்பற்றுவிடாதாகலினிது முன்வைக்கப்பட்டது.

---

* The unstable nature of all visible things.

க. நில்லாதவற்றை நிலையினவென் றுணரும்
புல்லறிவாண்மை கடை.

That contemptible opinion, which considers those things to be enduring which are not enduring, is dishonourable (to the wise). - - - - - - - - - - 331

பரி. நிலையுதலிலவாகிய பொருள்களை நிலையுதலுடையனவென்று கருதுகின்ற புல்லியவறிவினையுடையராதலுறந்தார்க்கிழிபென்றவாறு.

வி. தோற்றமுடையவற்றைக்கேடிலவென்று கருதும்புல்லறிவாலவற்றின் மேற்பற்றுச்செய்தல்பிறவித்துன்பத்திற்கேதுவாகலினதுவீடெய்துவார்க்கிழுக்கென்பதிதனாற்கூறப்பட்டது. இனிப்புல்லறிவாளர்பெரும்பான்மையும்பற்றுச் செய்வதுசிற்றின்பத்திற்கேதுவாயசெல்வத்தின்கண்ணுமதனையநுபவிக்கும்யாக்கையின்கண்ணுமாகலின்வருகின்றபாட்டுக்களாலவற்றதுநிலையாமையைவிதந்துகூறுப.

பு. நில்லாதவற்றை - நிலைத்திராதனவாகியபொருள்களை, நிலையினவென்றுணரும் - நிலைத்திருப்பனவென்றுநினைக்கின்ற புல்லறிவாண்மை - சிற்றறிவுடையராவது, கடை - தவத்தோர்க்குத்தாழ்வு, எ-று.

வி. பிறந்துள்ளனவற்றைபிறந்து கெடாதனவென்று நினைக்கின்ற சிற்றறிவால் அவற்றின்மேலன்புவைத்தல் பிறவித்துன்பத்திற்குக்காரணமாதலால் அதுமுத்தியைவிரும்பினோர்க்குக்குற்றமென்பது இதனாற்சொல்லப்பட்டது. இனிச்சிற்றறிவாளர்பெரும்பாலும் அன்புசெய்வது சிற்றின்பத்திற்குக் காரணமாகிய செல்வத்தின்மேலும் அதையநுபவிக்குந்தேகத்தின்மேலுமாதலால்வருகின்றபாட்டுக்களாலவற்றினிலையாமையையெடுத்துக்கூறுவார்.

உ. கூத்தாட்டவைக்குழாத்தற்றே பெருஞ்செல்வம்
போக்குமதுவிளிந்தற்று.

The acquisition of wealth is like the gathering together of an assembly for dancing; its expenditure is like the breaking up of that assembly.* - - - - - - - - 332

* The one is by slow degrees; the other is rapid—in a moment.

பரி. ஒருவன்மாட்டுப்பெரியசெல்வம்வருதல்கூத்தாடுதலைச்செய்கின்றவரங்கின்கட்காண்போர்குழாம்வந்தாற்போலுமதனதுபோகலுமக்கூத்தாட்டுமுடிந்தவழியக்குழாம்போயினாற்போலுமென்றவாறு.

வி. பெருஞ்செல்வமெனவேதுறக்கச்செல்வமுமடங்கிற்று. போக்குமென்றவெச்சவும்மையான்வருதலென்பதுபெற்றும். அக்குழாங்கூத்தாட்டுக்காரணமாகவரங்கின்கட்பலதிறத்தாற்றானேவந்துகாரணம்போயவழித்தானும்போமாறுபோலச்செல்வமுமொருவனல்வினைகாரணமாகவவன்மாட்டுப்பலதிறத்தாற்றானேவந்துகாரணம்போயவழித்தானும்போமென்பதாயிற்று.

பு. பெருஞ்செல்வம்-ஒருவனிடத்திற்பெரியசெல்வம்வருவது, கூத்தாட்டு-கூத்தாடுகின்ற, அவைக்குழாத்தற்று-அரங்கத்திலேகாண்போர்கூட்டம்வந்துசேர்வதுபோலும், போக்கும்-அச்செல்வமவனைவிட்டுப்போதலும், அதுவிளிந்தற்று - (அக்கூத்தாடல் முடிந்தபோது) அக்கூட்டங்கலைந்ததுபோலும், எ-று.

வி. பெருஞ்செல்வமெனவேசுவர்க்கச்செல்வமுமடங்கிற்று. போக்குமென்ற எச்சவும்மையால் வருதலென்பதுபெறப்பட்டது. அக்கூட்டம்கூத்தாட்டுக்காரணமாக அரங்கத்திலே பலவகையால் தானேவந்துகூடி அக்கூத்தாட்டுமுடிந்தபோது தானும்போவதுபோலச் செல்வமுமொருவனுடைய நல்வினைகாரணமாக அவனிடத்திலே பலவகைகளாலே தானேவந்துசேர்ந்து அக்காரணம்போனபோது தானும்போமென்பதாயிற்று.

௩. அற்காவியல்பிற்றுச்செல்வமதுபெற்றா
லற்குபவாங்கேசெயல்.

Wealth is perishable; let those who obtain it immediately practise those (virtues) which are imperishable. - - - 333

பரி. நில்லாதவியல்பினையுடைத்துச்செல்வமதனைப்பெற்றாலதனாற்செய்யப்படுமறங்களையப்பெற்றபொழுதேசெய்கவென்றவாறு.

வி. அற்காவென்பதுதிரிந்துநின்றது. ஊழுளவழியல்லதுஅறத்தாராற்பெறப்படாமையினதுபெற்றாலென்றும் அஃதிவ்வழிநில்லாமையினாங்கேயென்றுங் கூறினார். அதனாற்செய்யப்படுமறங்களாவனபயனோக்காதுசெய்யுங்கடவுட்பூசையுந்தானமுமுதலாயின, அவைஞானவேதுவாய்வீடுபயத்தலினவற்றைப்த

குபவென்றுஞ்செய்கவென்றுங்கூறினார். இவையிரண்டுபாட்டாலுஞ்செல்வ நிலையாமைகூறப்பட்டது.

பு. அற்காவியல்பிற்றுச்செல்வம்-நில்லாதசுபாவத்தையுடையதுசெல்வம், அதுபெற்றால் - அப்படிப்பட்டசெல்வத்தை யொருவன்பெறுவானாயின், அற்குப-நிலைத்திருப்பனவாகிய தருமங்களை, ஆங்கே-அப்பெற்றகாலத்திலேதானே, செயல்-செய்க, எ-று.

வி. அல்காவென்பது அற்காவெனத்திரிந்துநின்றது. விதியுண்டானபோதல்லது தவத்தோராற் பெறப்படாமையின் அதுபெற்றாலென்றும் அவ்விதியிலதாயின் நில்லாமையின் ஆங்கேயென்றுங்கூறினார். அச்செல்வத்தாற் செய்யப்படுந் தருமங்களாவன, பயனைநினையாமற்செய்யுந் தேவபூசையுந் தானமுமுதலாயின. அவைஞானகாரணமாய் முத்தியைத்தருதலால் அவற்றை அற்குபவென்றுஞ்செய்கவென்றுங்கூறினார். இவையிரண்டுபாட்டாலும் செல்வநிலையாமைசொல்லப்பட்டது.

ச. நாளெனவொன்றுபோற்காட்டியுயிரீரும்
வாளதுணர்வார்ப்பெறின்.

Time,* which shows itself (to the ignorant) as if it were something (real), in the estimation of the wise is (only) a saw which cuts down life. - - - - - - - - 334

பரி. நாளென்றறுக்கப்படுவதொருகாலவரையறைபோலத்தன்னைக்காட்டியீர்ந்துசெல்கின்றவாளினதுவாயதுயிரஃதுணர்வாரைப்பெறினென்றவாறு.

வி. காலமென்னும்பருவப்பொருளுலகியனடாத்தற்பொருட்டாதித்தன்முதலியவனவைகளாற்கூறப்பட்டதாகிவழங்கப்படுவதல்லதுதானாகக்கூறப்படாமையினுளனவொன்றுபோலென்றுமதுதன்னைவாளென்றுணரமாட்டாதார் நமக்கிப்பொழுதுபோகாநின்றதென்றின்புறுமாறுமயக்கவிற்காட்டியென்றுமிடைவிடாதீர்தலான்வாளின்வாயதென்றுமஃதீர்கின்றமையையுணர்வாரரியராகலினுணர்வார்ப்பெறினென்றுங்கூறினார். உயிரென்னுஞ்சாதியொருமைப் பெயரீண்டுடம்பின்மேனின்றதீரப்படுவததுவேயாகலின். வாளென்பதாகுபெயர். இனியிதனைநாளென்பதொருபொருள்போலத்தோன்றியுயிரையீரும்வாளா

* நாள், day.

மென்றுரைப்பாருமுளர். எனவென்பதொருபெயரன்றியிடைச்சொல்லாகலானுமொன்றுபோற்காட்டியென்பதற்கொருபொருட்சிறப்பின்மையானுமது துவென்பதுகுற்றியலுகரமன்மையானுமஃதுரையன்மையறிக.

ப. நாளெனவொன்றுபோற்காட்டி - நாளென்றெண்ணப்படுவதொருகால எல்லைபோலத்தன்னைக்காண்பித்து, ஈரும் வாளதுயிர் - பிளந்துசெல்கின்றவாளின்வாயுள்ளதுஉயிர், உணர்வார்ப்பெறின் - அதையறிகிறவரைப்பெறின், எ-று.

வி. காலமென்றபருவப்பொருள் உலகியல் நடத்தற்பொருட்டுச்சூரியன்முதலாகிய அளவைகளாலே சொல்லப்பட்டதாகி வழங்கப்படுவதேயன்றித் தானாகச்சொல்லப்படாததினாலே நாளெனவொன்றுபோலென்றும், அதுதன்னைவாளென்று உணரமாட்டாதவர் நமக்கு இப்பொழுது போகாநின்றதென்று இன்பப்படும்படிமயக்குதலால் காட்டியென்றும், இடைவிடாது பிளந்துசெல்லுதலால் வாளின்வாயதென்றும், அது உயிரைப்பிளந்துபோகிறதையறிபவர் அரியராதலால் உணர்வார்ப்பெறினென்றுங்கூறினார். உயிரொன்றுஞ் சாதியொருமைப்பெயர், இங்கேயுடலின்மேல்நின்றது ஈரப்படுவது அதுவேயாதலால். வாள் ஆகுபெயர். இனியிதைநாளென்பது ஒருபொருள்போலத்தோன்றியுயிரையீரும்வாளாமென்றுரைப்பாருமுண்டு. எனவென்பது இடைச்சொல்லானதினாலும் ஒன்றுபோற்காட்டியென்பதற்கு ஒருபொருட்சிறப்பில்லாததினாலும் அது என்பதுகுற்றியலுகரமன்றாதலாலுமது உரையன்றெனவுணர்க.

௫. நாச்செற்றுவிக்குண்மேல்வாராமுனல்வினை
மேற்சென்றுசெய்யப்படும்.

Let virtuous deeds be done quickly, before the hiccup comes, making the tongue silent. - - - - - - 335

பரி. உரையாடாவண்ணநாவையடக்கிவிக்குளெழுவதற்குமுன்னேவீட்டிற்கேதுவாயவறம்விரைந்துசெய்யப்படுமென்றவாறு.

வி. மேனோக்கிவருதலொருதலையாகலானும்வந்துழிச்செய்தலேயன்றிச்சொல்லுமாகாமையானும்வாராமுன்னென்றுமதுதானின்னபொழுதுவருமென்பதி

ன்மையின்மேற்சென்றென்றுங்கூறினார். மேற்சேறல்மண்டுதல். நல்வினைசெய்யுமாற்றின்மேல்வைத்து நிலையாமைகூறியவாறு.

பு. நாச்செற்று- (வார்த்தையெழாதபடி) நாவையடக்கி, விக்குண்மேல்வாராமுன் - விக்கலெழுவதற்குமுன்னே, நல்வினை-முத்திக்கேதுவாகியதருமத்தை, மேற்சென்று-விரைந்து, செய்யப்படும்-செய்யத்தகும், எ-று.

வி. மேலெழுந்துவருவது நிச்சயமாதலாலும்வந்தபோது செய்தல்கூடாததுமன்றிச் சொல்லுதலுங்கூடாமையாலும்வாராமுன்னென்றும், அதுஇன்னபொழுதுவருமென்பது தெரியாதாதலால் மேற்சென்றென்றுங்கூறினார். மேற்செல்லல்விரைந்துசெல்லல். நல்வினைசெய்தலின்மேல்வைத்து நிலையாமைகூறியவாறு.

௬. நெருநலுளனொருவனின்றில்லையென்னும்
பெருமையுடைத்திவ்வுலகு.

This world possesses the greatness of one who yesterday was and to-day is not. - - - - - - - - 336

பரி. ஒருவனெருநலுளனாயினானவனேயின்றில்லையாயினானென்றுசொல்லுநிலையாமைமிகுதியுடைத்திவ்வுலகமென்றவாறு.

வி. ஈண்டுண்மைபிறத்தலையுமின்மையிறத்தலையுமுணர்த்திநின்றன. அவைபெண்பாற்குமுளவாயினுஞ்சிறப்புப்பற்றியாண்பாலையேகூறினார். இந்நிலையாமையேயுலகின்மிக்கதென்பதாம்.

பு. நெருநலுளனொருவன்-நேற்றைத்தினமிருந்தவொருவன், இன்றில்லையென்னும் - இன்றைத்தினமில்லையாயினானென்று சொல்லப்பட்ட, பெருமையுடைத்திவ்வுலகு - மிகுந்தநிலையாமையையுடையதிவ்வுலகம், எ-று.

வி. இங்கேயுண்மைபிறப்பதையும், இன்மையிறப்பதையுமுணர்த்திநின்றன. இவையுயர்திணைப்பெண்பாலஃறிணைமுதலியாவற்றிற்குமுளவாயினுஞ்சிறந்தவுயர்திணையாண்பால்மேல்வைத்துக்கூறினார். ஒருபான்மொழியேயேனைப்பாற்கண்ணும்வருவனதாமேவழக்கெனமொழிப என்பதிலக்கணமாத

லாவென்க. பெருமையென்பது குறிப்புப்பொருள்படநின்றகுறிப்புச்சொல். இந்நிலையாமையே உலகத்தில் மிக்கதென்பதுகருத்து.

எ. ஒருபொழுதும்வாழ்வதறியார்கருதுப
கோடியுமல்லபல.

Innumerable millions of thoughts occupy the mind of (the unwise), who know not that they shall live another moment. - 337

பரி. ஒருபொழுதளவுந்தம்முடம்புமுயிருமியைந்திருத்தலைத்தெளியமாட்டார்மாட்டாதுவைத்துக்கோடியளவுமன்றியதனினும்பலவாயநினைவுகளை நினையாநிற்பரறிவிலாதாரென்றவாறு.

வி. இழிவுசிறப்பும்மையானீண்டுப்பொழுதென்பதுகணத்தின்மேனின்றது. காரணமானவினையினளவேவாழ்தற்குமளவாகலினஃதறியப்படாததாயிற்று. பலவாயநினைவுகளாவன. பொறிகளானுகரப்படுமின்பங்கடமக்குரியவாமாறுமதற்குப்பொருடுணைக்காரணமாமாறுமதுதம்முயற்சிகளான்வருமாறுமவற்றைத்தாமுயலுமாறுமவற்றிற்குவருமிடையூறுகளுமவற்றைநீக்குமாறுநீக்கியபொருள்களைக்கூட்டுமாறுமதனைப்பிறர்கொள்ளாமற்காக்குமாறுமதனானட்டாரையாக்குமாறுநள்ளாரையழிக்குமாறுந்தாமவ்வின்பங்கணுகருமாறுமுதலாயின. அறிவிலாரியல்பின்மேல்வைத்துநிலையாமைகூறியவாறு. இனிக்கருதுபவென்பதனையஃறிணைப்பன்மைப்பெயராக்கியுரைப்பாருமுளர்.

பு. ஒருபொழுதும்வாழ்வதறியார் - ஒருபொழுதளவாயினுந்தம்முடம்புமுயிருமியைந்திருப்பதையுணரமாட்டாதார், (அது அப்படியிருக்க) கோடியுமல்ல-கோடியளவுமன்றி, பல-அதன்மேலும்பலகோடிநினைவுகளை, கருதுப-நினையாநிற்பரறிவிலாதார், எ-று.

வி. ஒருபொழுதுமென்ற இழிவுசிறப்பு உம்மையினாலேபொழுதென்றது நிமிஷத்தின் மேல்நின்றது. காரணமானவினையினளவேசீவித்திருத்தலுக்குமளவாதலால் அதுதெரியப்படாததாயிற்று. அந்நினைவுகளாவன, ஐம்பொறிகளாலேயநுபவிக்கப்படுமின்பங்கள் தமக்குமுரிமையாம்படிக்கும் அதற்குத்திரவியந்துணைக்காரணமாம்படிக்கும் அந்தத்திரவியந்தங்களுடைய முயற்சிகளால்வரும்படிக்கும் அந்தமுயற்சிகளைத்தாங்கள்செய்யும்படிக்கும் அவற்றிற்குவரும் விக்கினங்களையும்

அவ்விக்கினங்களை நீக்கும்படிக்கும் நீக்கியபொருளைக்கடை சேர்க்கும்படிக்கும் அதைப்பிறர்கொண்டுபோகாமற்காக்கும் படிக்கும் அதினாலேயடுத்தவரைக்காக்கும்படிக்கும் சத்துருக்களையழிக்கும்படிக்கும் தாமந்த இன்பங்களையநுபவிக்கும் படிக்கும் நினைப்பனமுதலாயின. அறிவிலார்குணத்தின்மேல் வைத்து நிலையாமையைச்சொல்லியவாறு. இனிக்கருதுப என் பதைஅஃறிணைப்பன்மைப்பெயராக்கியுரைப்பாருமுண்டு.

அ. குடம்பைதனித்தொழியப்புட்பறந்தற்றே
யுடம்போடுயிரிடைநட்பு.

The love of the soul to the body is like (the love of) a bird to its egg which it flies away from and leaves empty. - 338

பரி. முன்றனியாதமுட்டைதனித்துக்கிடப்பவதனுளிருந்தபுள்ளுப்பருவம் வந்துழிப்பறந்துபோயதன்மைத்துடம்பிற்குமுயிர்க்குமுளதாயநட்பென்ற வாறு.

வி. தனித்தொழியவென்றதனான்முன்றனியாமைபெற்றும். அஃதாவதுகருவுந்தானுமொன்றாய்ப்பிறந்துவேறாந்துணையுமதற்காதாரமாய்நிற்றல். அதனாலஃதுடம்பிற்குவமையாயிற்று. அதனுள்வேற்றுமையின்றிநின்றேபின்புகாமற்போதலிற்புள்ளுயிர்க்குவமையாயிற்று. முட்டையுட்பிறப்பனபிறவுமுள்வேனும் புள்ளையேகூறினார் பறந்துபோதற்றொழிலானுயிரோடொப்புமையெய்துதலா வேயாகலின். நட்பென்றதிண்டுக்குறிப்புமொழியாய்நட்பின்றிப்போதலுணர்த்திநின்றது. சேதனமாயருவாய்நித்தமாயவுயிரும்அசேதனமாயுருவாயனித்தமாயவுடம்புந்தம்முண்மாறாகலின்வினைவயத்தாற்கூடியதல்லதுநட்பிலவென்பதறிக. இனிக்குடம்பையென்பதற்குக்கூடென்றுரைப்பாருமுளர். அதுபுள்ளுடன்றோன்றாமையானுமதன்கண்ணதுமீண்டுபுகுதலுடைமையானுமுடம்பிற்குவமையாகாமையறிக.

பு குடம்பைதனித்தொழிய-முன்னேதனித்திராதமுட்டை தனித்துக்கிடக்க, புட்பறந்தற்று - அதனுள்ளிருந்தபறவை (பருவகாலம்வந்தபோது) பறந்துபோனதன்மையையுடையது, உடம்போடுயிரிடைநட்பு-உடலுக்குமுயிருக்குமுள்ளதாகியசிநேகம், எ-று.

வி. தனித்தொழியவென்றதினாலே முன்தனியாமைபெறப் பட்டது. அத்தனியாமையாவது கருவுந்தானும் ஒன்றாய்ப்பிறந்துவேறாகுமளவும் அதற்கு ஆதாரமாகியேநிற்பது. அத

ளுவது உடம்பிற்கு உவமையாயிற்று. அந்தமுட்டையுள்வேற்
றுமையின்றே நின்றுபின்பு அதிலேநுழையாமற்போவதினு
லே பறவையுயிர்க்குவமையாயிற்று. முட்டையுட்பிறப்பனபிற
வுமுளவாயினும் பறந்துபோகுந் தொழிலானுயிரோடொப்
பாவது அதுவேயாதலாற் பறவையையேகூறினர். நட்பென்
றதிங்கேகுறிப்புச்சொல்லாய் நட்பிலாமையையுணர்த்திநின்ற
து. சேதனமாய் அருவாகிநித்தியமாகியவுயிரும் அசேதனமா
யுருவாயநித்தியமாகிய உடம்பும் தங்களில் மாறுபாடாதலால்
வினைவசத்தாற்கூடியதல்லது நட்பில்லையென்பதுணர்க. இனி
க்குடம்பையென்பதற்குப் பொருள்கூடு என்றுரைப்பாருமு
ண்டு. அதுபறவையுடன்தோன்றுதலினாலும் அக்கூட்டில்அது
திரும்பவும் நுழைவதுண்டாகையாலும் உடம்பினுக்கு உவ
மையாகாமையையுணர்க.

௯. உறங்குவதுபோலுஞ்சாக்காடுறங்கி
விழிப்பதுபோலும்பிறப்பு.

Death is like sleep ; birth is like awaking from sleep. - 329

பரி. ஒருவனுக்குச்சாக்காடுவருதலுறக்கம்வருதலோடொக்குமதன்பின்பி
றப்புவருதலுறங்கிவிழித்தல்வருதலோடொக்குமென்றவாறு.

வி. உறங்குதலும்விழித்தலும்உயிர்கட்கியல்பாய்க்கடிதின்மாறிமாறிவருகின்
றாற்போலச்சாக்காடும்பிறப்புமியல்பாய்க்கடிதின்மாறிமாறிவருமென்பதுகரு
த்து. நிலையாமையேநிலைபெற்றவாறறிவித்தற்குப்பிறப்புமுடன்கூறினர்.

பு. உறங்குவதுபோலுஞ்சாக்காடு - ஒருவனுக்குச்சாவுவரு
வதுஉறக்கம்வருவதுபோலும், உறங்கிவிழிப்பதுபோலும்பிற
ப்பு - அதன்பின்பிறப்புவருவதுஉறங்கிவிழிப்புவருவதுபோலு
ம், எ-று.

வி. உறங்குதலும்விழித்தலும் உயிர்களுக்குச்சுபாவமாகிச்
சீக்கிரஞ்சீக்கிரமாய் மாறிமாறிவருவதுபோலச்சாவும் பிறப்
பும் சுபாவமாகிச்சீக்கிரஞ் சீக்கிரமாறிமாறிவருமென்பதுகரு
த்து. நிலையாமையேநிச்சயமென்பதறிவித்தற்குப்பிறப்புமுட
ன்கூறினர்.

௰. புக்கிலமைந்தின்றுகொல்லோவுடம்பினுட்
டுச்சிலிருந்தவுயிர்க்கு.

It seems as if the soul, which takes shelter* in a body, had not attained a home.† - - - - - - - 340

பரி. வாதமுதலியவற்றினில்லாயவுடம்புகளுள்ளொதுக்கிருந்தேபோந்தவுயிர்க்கென்றுமிருப்பதோரில்லிதுகாறுமமைந்ததில்லைபோலுமென்றவாறு.

வி. அந்நோய்களமைந்தஞான்றிருந்தும்வெகுண்டஞான்றுபோயுமொருடம்பினிலைபெறுதுவருதலாற்றுச்சிலிருந்தவென்றார். பின்புறப்படாதுபுக்கேவிடுமில்லமைந்ததாயிற்பிறரிற்குள்ளொதுக்கிராதென்பதாம். ஆகவேயுயிரோடுகூடிநிற்பதோருடம்புமில்லையென்பதுபெறப்பட்டது. இவையெழுபாட்டானுமுறையேயாக்கைகட்குவரைந்தநாள்கழிகின்றவாறுங்கழிந்தாலுளதாநிலையாமையுமவையொரோவழிப்பிறந்தவளவிலேயிறத்தலுமொருகணமாயினுநிற்குமென்பதுதெளியப்படாமையுமுயிர்நீங்கியவழிக்கிடக்குமாறுமவற்றிற்கிறப்பும்பிறப்புமாறிமாறிவருமாறுமவைதாமுயிர்க்குரியவன்மையுமென்றிவ்வாற்றால்யாக்கைநிலையாமைகூறியவாறுகண்டுகொள்க.

பு. உடம்பினுள்-(வாதபித்தமுதலியவற்றிற்குவீடாகிய) உடம்புகளுக்குள்ளே, துச்சிலிருந்தவுயிர்க்கு - ஒதுக்கிடத்திருந்துபோகின்றவுயிர்க்கு, புக்கிலமைந்தின்றுகொல்லோ - எந்நாளைக்குமிருப்பதொருவீடு இதுவரையும் அமைந்ததில்லைபோலும், எ-று.

வி. அந்தவாதபித்தமுதலியநோய்கள் அமைவுற்றிருந்தபோது குடியிருந்தும், அமைவில்லாது கோபித்தபோது குடிபோயும், ஓருடம்பிலும் நிலைகொள்ளாதுவருதலால் துச்சிலிருந்தவென்றார். துச்சில் ஒதுக்கிடம். பின்வெளிப்படாது நுழைந்தேயிருக்கும்வீடு அமைந்ததாயின் பிறர்வீடுகளுக்குள்ளே ஒதுக்கிடத்திராதென்பதாயிற்று. ஆகவேஉயிரோடுகூடிநிற்பதோருடம்புமில்லையென்பது பெறப்பட்டது. இவையேழுபாட்டாலும் முறையே உடல்களுக்கு அமைத்தநாள்கழிகி

---

* துச்சில், a temporary shelter. புக்கில், a perpetual dwelling.

† Or rather, Is it that there is no home prepared for the soul which takes shelter in bodies?

ன்றவிதமும், கழிந்தாலுண்டாகிய நிலையாமையும், அவைஒரோரிடத்துப்பிறந்த அளவிலேயிறத்தலும், ஒருகணமாயினுநிற்குமென்பதுதெளியப்படாமையும், உயிர் நீங்கியபோது உண்டாம்விதமும், இறப்பும்பிறப்பும் மாறிமாறிவரும்விதமும், அவையுயிர்க்குரிமையன்றென்பதும், என்றிவ்விதத்தினாலேயாக்கை நிலையாமைகூறியவாறு கண்டுகொள்க.

---

௩௫. அதிகாரம். CHAPTER XXXV.

துறவு. ON RENUNCIATION.*

பரி. அஃதாவதுபுறமாகியசெல்வத்தின்கண்ணுமகமாகியயாக்கையின்கண்ணுமுளதாயபற்றினையவற்றது நிலையாமைநோக்கிவிடுதல். அதிகாரமுறைமையுமிதனானேவிளங்கும்.

அதாவது, புறமாகிய செல்வத்திலும் அகமாகிய தேகத்திலுமுண்டாகிய பற்றை அவற்றினுடைய நிலையாமையைநோக்கி விடுவது. அதிகாரமுறைமையுமிதினாலே விளங்கும்.

௧. யாதனின்யாதனினீங்கியானோத
லதனினதனினிலன்.

Whatever thing, whatever thing (I say), a man has renounced; by that thing, by that thing (I say), he cannot suffer pain. 341

பரி. ஒருவன்யாதொருபொருளின்யாதொருபொருளினீங்கினானவனப்பொருளாலப்பொருளாற்றுன்பமெய்துதலிலனென்றவாறு.

வி. அடுக்குகள்பன்மைகுறித்துநின்றன. நீங்குதல்துறத்தல். ஈண்டுத்துன்பமென்றதிம்மைக்கண்ணவற்றைத்தேடுதலானுங்காத்தலானுமிழத்தலானும்வருவனவுமறுமைக்கட்பாவத்தான்வருவனவுமாயவிருவகைத்துன்பங்களையுமாம். எல்லாப்பொருளையுமொருங்கேவிடுதலலையஃதன்றியொரோவொன்றாக விடினுமவற்றான்வருந்துன்பமிலனென்பதுகருத்து.

---

* The renunciation of all desire.

பு. யாதனின்யாதனினீங்கியான்-ஒருவன்யாதொருபொருளின் யாதொருபொருளினின்று நீங்கினனோ, அதனினதனின் - அவன் அப்பொருளாலப்பொருளால், நோதலிலன் - துன்பப்படுதலிலனாம், எ-று.

வி. அடுக்குகள்பன்மைகுறித்துநின்றன. நீங்குதல்விடுதல். இங்கேதுன்பமென்றது இம்மையிலே யப்பொருளைத்தேடுதலாலுங் காத்தலாலும் இழத்தலாலும்வருவனவும் மறுமையிலேபாவத்தால் வருவனவுமாகிய விருவகைத்துன்பங்களையுமாம். எல்லாப்பொருள்களையுமொருமிக்கவிடுவதே முதலாந்தன்மை. அன்றி ஒவ்வொன்றாகவிடினும் அவற்றால்வருந்துன்பமில்லாதவனாவானென்பதுகருத்து.

உ. வேண்டினுண்டாகத்துறக்கதுறந்தபி
னீண்டியற்பாலபல.

After a man has renounced (all things), there will still be many things in this world (which he may desire); if he should desire these, let him, while it is time, abandon (that desire). - 342

பரி. எல்லாப்பொருளையுந்துறந்தாலொருவற்கிம்மைக்கண்ணேயுளவாமுறைமையையுடையவின்பங்கள்பலவவ்வின்பங்களைவேண்டினவற்றைக்காலம் பெறத்துறக்கவென்றவாறு.

வி. அவ்வின்பங்களாவன அப்பொருள்காரணமாகமனமொழிமெய்களலையாதுநிற்றலாலுமவைநன்னெறிக்கட்சேறலாலும்வருவன. இளமைக்கட்டுறந்தானவற்றைநெடுங்காலமெய்துமாகலினுண்டாகத்துறக்கவென்றார். இன்பங்கள் காலமென்பனவருவிக்கப்பட்டன. இம்மைக்கட்டுன்பங்களிலவாதலேயன்றியின்பங்களுளவாதலுமுண்டென்பதாம்.

பு. துறந்தபின்-எல்லாப்பொருள்களையும்பற்றறவிட்டால், ஈண்டியற்பாலபல - ஒருவனுக்குஇம்மையிலேயுண்டாகும்வரிசைக்கிரமத்தையுடையஇன்பங்கள்பலவாம், வேண்டின் - அவ்வின்பங்களைவிரும்பினால், உண்டாக-(அப்பொருள்களைக்) காலம்பெறவே, துறக்க-பற்றறவிடுக, எ-று.

வி. அவ்வின்பங்களாவன, அப்பொருள்காரணமாக மனமொழிமெய்கள் அலையாமல்நிற்பதினாலும் அம்மூன்றும் நல்

வழியிலே செல்லுதலாலும்வருவனவாம். இளமையிலேதானே துறந்தவன் அந்தஇன்பங்களைநெடுங்காலமாக அடைந்திருப்பானாதலால் உண்டாகத்துறக்கவென்றார். இன்பங்கள்,காலம், என்பனவருவிக்கப்பட்டன. இம்மையிலே துன்பங்களில்லாமற் போவதுமன்றி இன்பங்களுண்டாதலுமாமென்பதாம்.

௩. அடல்வேண்டுமைந்தின்புலத்தைவிடல்வேண்டும்
வேண்டியதெல்லாமொருங்கு.

Let the five senses be destroyed; and at the same time, let every thing be abandoned that (the ascetic) has (formerly) desired. - - - - - - - - - - 343

பரி. வீடெய்துவார்க்குச்செவிமுதலியவைம்பொறிகட்குரியவாயவோசைமுதலியவைம்புலன்களையுங்கெடுத்தல்வேண்டுங்கெடுக்குங்காலவற்றைநுகர்தற்பொருட்டுத்தாம்படைத்தபொருண்முழுதையுமொருங்கேவிடுதல்வேண்டுமென்றவாறு.

வி. புலமென்பதவற்றைநுகர்தலை.அதுதன்மனத்தைத்துன்பத்தானும்பாவத்தானுமன்றிவாராதபொருண்மேலல்லது வீட்டுநெறியாகியயோகஞானங்களிற்செலுத்தாமையினதனையடல்வேண்டுமென்றும்அஃதப்பொருண்மேற்செல்லினந்நுகர்ச்சிவிறகுபெற்றதழல்போன்முறுகுவதல்லதடப்படாமையின் வேண்டியதெல்லாமொருங்கேவிடல்வேண்டுமென்றுங்கூறினார்.

பு. ஐந்தின் புலத்தை-(முத்திபெறுவார்க்கு) காதுமுதலாகியஐம்பொறிகளுக்குஉரிமையாகிய ஒலிமுதலியஐம்புலன்களையும், அடல்வேண்டும் - கெடுத்தல்வேண்டும், வேண்டியதெல்லாம்-(கெடுக்கும்போது)முன்னேயநுபவித்தற்பொருட்டுத்தாம்விரும்பிச்சேர்த்துவைத்தவெல்லாப்பொருள்களையும், ஒருங்குவிடல்வேண்டும்-ஒருமிக்கவிட்டுவிடல்வேண்டும், எ-று.

வி. புலமென்றது அவற்றையநுபவித்தலை. அந்தஅநுபவந்தன்மனத்தைத்துன்பத்தினாலும்பாவத்தினாலும்வரும்பொருள்மேலல்லது வீட்டுநெறியாகியயோகஞானங்களிலே செலுத்தாததினாலே யதனையடல்வேண்டுமென்றும்,அந்தமனம் அப்பொருளின்மேற்சென்றால் கலந்தஅநுபவம்விறகிட்டநெருப்பைப்போலே பின்னுமுதிர்ந்துபோவதல்லது அடப்படாமையால் வேண்டியதெல்லாமொருங்குவிடல்வேண்டுமென்றுங்கூறினார்.

௪. இயல்பாகுநோன்பிற்கொன் றின்மையுடைமை
மயலாகுமற்றும்பெயர்த்து.

To be altogether destitute is the proper condition of those who perform austerities; if they possess anything, it will change (their resolution) and bring back coufusion of mind. - - 344

பரி. பற்றப்படுவதொருபொருளுமில்லாமைதவஞ்செய்வார்க்கியல்பாம்.அஃதன்றியொன்றாயினுமுடைமையத்தவத்தைப்போக்குதலான் மீண்டுமயங்குதற்கேதுவாமென்றவாறு.

வி. இழிவுசிறப்பும்மைவிகாரத்தாற்றொக்கது. நோன்பென்பதாஉமயலென்பதாஉமாகுபெயர். பெயர்த்தலானென்பதுதிரிந்துநின்றது. நோன்மைப்பெயர்த்தலானென வேற்றுமைப்படுத்திக்கூட்டுக. எல்லாப்பொருளையும்விட்டொருபொருளைவிடாதவழியுமதுசார்பாகவிட்டனவெல்லாமீண்டுவந்துதவத்திற்கிடையீடாய்ப்பின்கலக்கஞ்செய்யுமென்பதுகருத்து. இவைநான்குபாட்டானுமெனதென்னும்புறப்பற்றுவிடுதல்கூறப்பட்டது.

பு. ஒன்றின்மை-பற்றப்படுவதொருபொருளுமில்லாமை, நோன்பிற்கு-தவஞ்செய்வார்க்கு, இயல்பாகும் - சுபாவகுணமாம், (அப்படியன்றி) உடைமை-ஒன்றாயினுமுடைத்தாதல், பெயர்த்து-அத்தவத்தைப்பேர்த்துக்கெடுப்பதினாலே,மற்றும் மயலாகும்-மறுபடியுமயங்குதற்கேதுவாம், எ-று.

வி. ஒன்றுமின்மையென்னும் இழிவுசிறப்புஉம்மைதொக்குநின்றது. நோன்பினைநோன்பென்றதும் மயலுக்குநிமித்தத்தைமயலென்றதும் ஆகுபெயர். பெயர்த்தலால் என்பது பெயர்த்து எனத்திரிந்துநின்றது. நோன்மைப்பெயர்த்தலாலென வேற்றுமைவிரித்துக்கூட்டிக்கொள்க. எல்லாப்பொருளையும்விட்டு ஒருபொருளைவிடாதவழியும் அதுசார்பாகவிட்டனவெல்லாமறுபடியும்வந்து தவசுக்குவிக்கினமாய்க்கலக்கஞ்செய்யுமென்பதுகருத்து. இவைநான்குபாட்டாலும் என்னுடையதென்கின்றபுறப்பற்றுவிடுதல்கூறப்பட்டது.

௫. மற்றுந்தொடர்ப்பாடெவன்கொல்பிறப்பறுக்க
லுற்றார்க்குடம்புமிகை.

What means the addition of other things to those who are at-

tempting to cut off (future) births, when even their body is too much (for them)? - - - - - - - 345

பரி. பிறப்பறுத்தலைமேற்கொண்டார்க்கதற்குக்கருவியாகியவுடம்புமிகையாமானபினதற்குமேலேயியைபில்லனவுஞ்சிலதொடர்ப்பாடுளவாகலென்னுமென்றவாறு.

வி. உடம்பென்றபொதுமையானுருவுடம்புமருவுடம்புங்கொள்ளப்படும். அவற்றுள். அருவுடம்பாவது பத்துவகையிந்திரியவுணர்வோடுமைவகைவாயுக்களோடுங்காமவினைகளோடுங்கூடியமனம். இதுதன்னுடம்பெனவும்படும். இதன்கண்பற்றுநிலையாமையுணர்ந்ததுணையான்விடாமையினதற்குபாய முன்னர்க்கூறுப. இவ்வுடம்புகளாற்றுன்பமிடையறுவருதலையுணர்ந்திவற்றினியகட்டினையிறைப்பொழுதும்பொறுதுவீட்டின்கண்ணே விரைதலினுடம்புமிகையென்றார். இன்பதுன்பங்களானுயிரோடொற்றுமையெய்துதலினிவ்வுடம்புகளும் யானெனப்படும். இதனாலகப்பற்றுவிடுதல்கூறப்பட்டது.

பு. பிறப்பறுக்கலுற்றார்க்கு-பிறவியைநீக்கவேண்டுமென்கிறஎண்ணத்தைமேற்கொண்டவர்க்கு, உடம்புமிகை-அதற்குக்காரணமாகியதேகமிகுதியாம், (அப்படியானபோது) மற்றும்-அதற்குமேலும், தொடர்ப்பாடு-சிலதொடர்ந்துநிற்பன, எவன்-என்னும், எ-று.

வி. உடம்பென்றபொதுமையால்உருவுடம்பும்அருவுடம்புங்கொள்ளப்படும். அவற்றுள் அருவுடம்பாவதுபத்துவகையிந்திரியவுணர்வோடும் ஐவகைவாயுக்களோடுங்காமவினைகளோடுங்கூடியமனம். இதுசூக்குமவுடம்பெனவும்படும். நிலையாமையையறிந்தமாத்திரமேஇதினிடத்திற்பற்றுவிடாமையின் அதற்குஉபாயமேலேசொல்லுவார். இவ்வுடம்புகளாலேதுன்பம்இடைவிடாமலேவருவதையுணர்ந்து இவற்றாலாகியகட்டைக்கணப்பொழுதும்பொறுக்காமல் முத்திநெறியிலே விரைந்துசெல்வதினாலேஉடம்புமிகையென்றார். இன்பதுன்பங்களாலேஉயிரோடொருமைப்பட்டிருப்பதினாலேயிவ்வுடம்புகளும் யானென்றுசொல்லப்படும். இதினாலேஅகப்பற்றுவிடுதல்சொல்லப்பட்டது.

௬. யானெனதென்னுஞ்செருக்கறுப்பான்வானோர்க்
குயர்ந்தவுலகம்புகும்.

He who destroys the pride* which says "I," "mine," will enter a world which is even above the gods. - - - 463

* செருக்கு, pride; confusion of mind; ignorance.

பரி. தானல்லாதவுடம்பையானென்றுந்தன்னோடியைபில்லாதபொருளையெனதென்றுங்கருதியவற்றின்கட்பற்றுசெய்தற்கேதுவாகிய மயக்கத்தைக்கெடுப்பான்வானோர்க்குமெய்துதற்கரியவீட்டுலகத்தையெய்துமென்றவாறு.

வி. மயக்கமறியாமை. அதனைக்கெடுத்தலாவது, தேசிகர்பாற்பெற்றவுறுதிமொழிகளாலும்யோகப்பயிற்சியாலுமவையானெனதன்மைதெளிந்தவற்றின்கட்பற்றைவிடுதல். சிறப்பும்மைவிகாரத்தாற்றொக்கது. இதனாலிவ்விருவகைப்பற்றினையும்விட்டார்க்கேவீடுளதென்பதுகூறப்பட்டது.

பு. யானெனதென்னும்-(தானல்லாதவுடம்பை) நானென்றும் (தன்னோடேகலந்திராதபொருளை) எனதென்றும்எண்ணியவற்றினிடத்திலேயன்புசெய்தற்கேதுவாகிய, செருக்கு-மயக்கத்தை, அறுப்பான் - ஒட்டறுப்பவன், வானோர்க்குயர்ந்த-தேவர்கட்குமெட்டாத, உலகம்புகும்-மோட்சவுலகத்தையடைவான், எ-று.

வி. மயக்கம்அறியாமை. அதைஒட்டறுத்தலாவது, ஆசாரியரிடத்திற் பெற்றவுறுதிமொழிகளாலும் யோகப்பயிற்சியாலும் அந்த இருவகைப்பொருள்களும்யானென்பதும் எனதென்பதுமல்லவென்றுதெளிந்து அவற்றினிடத்தில்வைத்தபற்றைவிடுதல். வானோர்க்குமென்றவுயர்வுசிறப்பு உம்மைதொக்குநின்றது. இதினாலேயிவ்விருவகைப்பற்றுக்களையும் விட்டவர்க்கே மோட்சமென்பது சொல்லப்பட்டது.

எ. பற்றிவிடாஅ விடும்பைகள்பற்றினைப்
பற்றிவிடாஅதவர்க்கு

Sorrows* will never let go their hold of those who give not up their hold of desire. - - - - - - - 347

பரி. இருவகைப்பற்றினையுமிறுகப்பற்றிவிடாதாரைப்பிறவித்துன்பங்களிறுகப்பற்றிவிடாவென்றவாறு.

வி. இறுகப்பற்றுதல்காதல்கூர்தல். விடாதவர்க்கென்பதுவேற்றுமைமயக்கம். இதனாலவைவிடாதார்க்குவீடில்லையென்பதுகூறப்பட்டது.

பு. பற்றினை-இருவகைப்பற்றுக்களையும், பற்றிவிடாஅதவர்

* *i. e.* The sorrows which are connected with a state of change, of births and deaths.

க்கு-இறுகப்பற்றிவிடாதவனை, இடும்பைகள் - பிறவித்துன்பங்கள், பற்றிவிடா-இறுகப்பற்றிவிட்டு நீங்காவாம், எ-று.

வி. இறுகப்பற்றுதல் மிகவும்ஆசைசெய்தல். விடாதவர்க்கு என்பது விடாதவனை எனநிற்றலாலுருபுமயக்கம். இதனாலவற்றைவிடாதவர்க்கு முத்தியில்லையென்பதுசொல்லப்பட்டது.

௮. தலைப்பட்டார்தீரத்துறந்தார்மயங்கி
வலைப்பட்டார்மற்றையவர்.

Those who have entirely renounced (all things and all desire) have* obtained (absorption into God); all others wander in confusion, entangled in the net of (many) births. - - - 348

பரி. முற்றத்துறந்தார்வீட்டினைத்தலைப்பட்டாரங்ஙனந்துறவாதார்மயங்கிப்பிறப்பாகியவலையுட்பட்டாரென்றவாறு.

வி. முற்றத்துறத்தலாவது.பொருள்களையுமிருவகையுடம்பினையுமுவர்த்துப்பற்றுவிடுதல். அங்ஙனந்துறவாமையாவதவற்றுளியாதானுமொன்றின்கட்சிறிதாயினும் பற்றுசெய்தல். துணிபுபற்றித்தலைப்பட்டாரென்றும் பொய்நெறிகண்டேபிறப்புவலையுளசப்படுதலின் மயங்கியென்றுங்கூறினர்.

பு. தீரத்துறந்தார்-முழுவதும்விட்டவர், தலைப்பட்டார்-(மோட்சத்தை) அடைந்தார், மற்றையவர்-அவ்வாறுமுழுமையுந்துறவாதவர், மயங்கிவலைப்பட்டார்-மருண்டுபிறவியாகியவலையினுள்ளேயகப்பட்டார், எ-று.

வி. முழுவதுந்துறத்தலாவது, உலகப்பொருள்களையும்இருவகையுடல்களையும்வெறுத்துநிராசைசெய்தல். அப்படிமுழுவதுந்துறவாமையாவது, அவற்றுள்யாதாகினுமொன்றினிடத்திலேசிறிதாகினும்ஆசைவைத்தல். தெளிவுபற்றித்தலைப்பட்டாரென இறந்தகாலத்தாலும் பொய்நெறியைமெய்நெறியென்றுகண்டுபிறப்பாகிய வலையுளகப்படுதலால் மயங்கியென்றுங்கூறினர்.

---

* "Will certainly obtain," say the Scholiasts; the past tense being used to express certainty.

கூ. பற்றற்றகண்ணேபிறப்பறுக்குமற்று
நிலையாமைகாணப்படும்.

At the moment in which desire has been abandoned, (other) births will be cut off; when that has not been done, instability will be seen.* - - - - - - - - - 349

பரி. ஒருவனிருவகைப்பற்றுமற்றபொழுதே யப்பற்றறுதியவன்பிறப்பையறுக்குமவையறாதபொழுதவற்றாற்றான்பிறந்திறந்துவருகின்றநிலையாமைகாணப்படுமென்றவாறு.

வி. காரணமற்றபொழுதேகாரியமுமற்றதாமுறைமைபற்றிப்பற்றற்றகண்ணேயென்றார். அற்றதுபற்றெனினுற்றதுவீடென்பதுமதுபற்றிவந்தது. இவையிரண்டுபாட்டானுமவ்விருமையுமொருங்குகூறப்பட்டது.

பு. பற்றற்றகண்ணே-ஒருவனுடையஇருவகைப்பற்றுமற்றபொழுதே, பிறப்பறுக்கும்-அப்பற்றுஅறுதலானது அவன்பிறப்பையறுக்கும், மற்று - அவையறாதபொழுது, நிலையாமைகாணப்படும் - அவற்றினாலேதான்பிறந்திறந்து திரிகின்றநிலையாமைகாணப்படும், எ-று.

வி. காரணமற்றபொழுதேகாரியமுமற்றதாமென்னுமுறைபற்றிப்பற்றற்றகண்ணேபிறப்பறுக்குமென்றார். அற்றதுபற்றெனினுற்றது வீடெனப்பிறர்கூறுதலும் அதுபற்றிவந்தது. இவையிரண்டுபாட்டானுமவ்விருவகையுமொருமிக்கக்கூறப்பட்டது.

ω. பற்றுகபற்றற்றான்பற்றினையப்பற்றைப்
பற்றுகபற்றுவிடற்கு.

Desire the desire of him† who is without desire; in order to renounce desire, desire *that* desire.‡ - - - - 350

பரி. எல்லாப்பொருளையும்பற்றிநின்றேபற்றற்றவிறைவனோதியவீட்டுநெறியையிறுவேதன்னெறியென்றுமனத்துக்கொள்கவொண்டதன்கணுபாயத்தையம்மனத்தாற்செய்கவிடாதுவந்தபற்றுவிடுதற்கென்றவாறு.

---

* There will be a perpetual succession of births and deaths.

† God.

‡ As the English admitted of it, I have in this distich preserved, for the sake of the English reader, the play upon words which too often disfigures the Cural.

வி. கடவுள்வாழ்த்திற்கேற்பவீண்டும்பொதுவகையாற்பற்றற்றானென்றார். பற்றற்றான்பற்றென்புழியாறாவதுசெய்யுட்கிழமைக்கண்வந்தது. ஆண்டுப்பற்றென்றதுபற்றப்படுவதனை. அதன்கணுபாயமென்பதுதியானசமாதிகளை. விடாதுவந்தபற்றென்றது அநாதியாய்வருமுடம்பிற்பற்றினை. அப்பற்றுவிடுதற்குபாயமிதனாற்கூறப்பட்டது.

பு. பற்றற்றான்பற்றினை-எல்லாப்பொருள்களையும்பற்றிநின்றேபற்றற்றகடவுள்சொல்லியமோட்சமார்க்கத்தை, பற்றுக-இதுவேநன்மார்க்கமென்று மனத்துட்கொள்க, அப்பற்றைப்பற்றுக-(கொண்டதனிடத்தில்) உபாயத்தையந்தமனதினாலே செய்க, பற்றுவிடற்கு - விடாதுவந்தபற்றுவிட்டுநீங்குதற்கு, எ-று.

வி. முன்புகூறியகடவுள்வாழ்த்திற்குப்பொருந்த இங்கேயும்பொதுவகையாற்பற்றற்றானென்றார். பற்றற்றான்பற்றென்றவிடத்து, பற்றற்றானது என்னும் ஆறும்வேற்றுமையுருபு செய்யுட்கிழமையிலேவந்தது. பற்றற்றான்சொல்லியவேதாந்தசாத்திரம், பற்றற்றானதுவேதாந்தசாத்திரம்,எனவிரிந்துசெய்யுட்கிழமைப்பொருள்படநின்றது ஆறும்வேற்றுமையெனக்காண்க. அங்கேபற்றென்பதுபற்றப்படுவதனை. அதனிடத்து உபாயமென்றது தியானசமாதிகளை. விடாதுவந்தபற்றென்றது, அநாதியாய்வரும்உடம்பிற்பற்றினை. அப்பற்றுவிடுதற்கு உபாயமிதனாற்கூறப்பட்டது.

---

௩௬. அதிகாரம். CHAPTER XXXVI.

மெய்யுணர்தல். TRUE KNOWLEDGE.*

பரி. அஃதாவதுபிறப்புவீடுகளையுமவற்றின்காரணங்களையும் விபரீதவையங்களானன்றியுண்மையானுணர்தல். இதனைவடநூலார்தத்துவஞானமென்ப. இதுவும்பற்றற்றான்பற்றினைப்பற்றியவழியுளதாவதாகலினக்காரணவொற்றுமைபற்றித்துறவின்பின்வைக்கப்பட்டது.

---

* *i. e.* The knowledgo of the true nature of things.

அதாவது, பிறப்புவீடுகளையும் அவற்றின்காரணங்களையும் விபரீதஞ்சந்தேகமென்பவையொழிய வுண்மையாலுணர்வது. இதைவடநூலார்தத்துவஞானமென்றுசொல்லுவர். இதுவும்பற்றற்றான்பற்றினைப்பற்றியவழியுண்டாவதாதலால்அக்காரணஒருமைப்பாடுபற்றித்துறவின்பின்வைக்கப்பட்டது.

௧. பொருளல்லவற்றைப்பொருளென்றுணரு
மருளானாமாணாப்பிறப்பு.

Inglorious births are produced by the confusion (of mind) which considers those things to be real which are not real. - 351

பரி. மெய்ப்பொருளல்லவற்றைமெய்ப்பொருளென்றுணரும்விபரீதவுணர்வானேயுளதாமின்பமில்லாதபிறப்பென்றவாறு.

வி. அவ்விபரீதவுணர்வாவது. மறுபிறப்புமிருவினைப்பயனுங்கடவுளுமில்லையெனவுமற்றுமித்தன்மையனவுஞ்சொல்லுமயக்கநூல்வழக்குகளை மெய்நூல்வழக்கெனத்துணிதல். குற்றியைமகனென்றுமிப்பியைவெள்ளியென்றுமிவ்வாறேயொன்றனைப்பிறிதொன்றாகத்துணிதலுமது. மருள்மயக்கம் விபரீதவுணர்வு அவிச்சையென்பனவொருபொருட்கிளவி. நரகர்விலங்குமக்கடேவரென்னு நால்வகைப்பிறப்பினுமுள்ளது துன்பமேயாகலின்மாணாப்பிறப்பென்றார். இதனாற்பிறப்புத்துன்பமென்பதூஉமதற்குமுதற்காரணமவிச்சையென்பதூஉங்கூறப்பட்டது.

பு. பொருளல்லவற்றை - மெய்ப்பொருளல்லனவற்றை, பொருளென்றுணரும் - மெய்ப்பொருளென்றறிகின்ற, மருளான் - விபரீதஞானத்தினாலே, மாணாப்பிறப்பாம் - இன்பமில்லாதபிறப்புண்டாம், எ-று.

வி. அந்தவிபரீதஞானமாவது, மறுபிறப்பும் இருவினைப்பயன்களுங் கடவுளுமில்லையெனவுமற்றுமிவைபோல்வனவுஞ் சொல்லுமயக்கநூல்வழக்குகளை மெய்நூல்வழக்கென்றுதுணிவது. குற்றியைப்புருடனென்றும் இப்பியை வெள்ளியென்றும் ஒன்றை மற்றொன்றாகத்துணிதலுமது. மருள்மயக்கம் விபரீதஞானம் அவிச்சையென்பன ஒருபொருள்மொழி. நரகர் விலங்கு மக்கள் தேவர் என்னும் நால்வகைப்பிறப்பினுமுள்ளது துன்பமேயாதலால் மாணாப்பிறப்பென்றார். இதினாலேபிறப்புத்துன்பமென்பதும், அதற்குமுதற்காரணம் விபரீதஞானமென்பதுங்கூறப்பட்டது.

௨. இருணீங்கியின்பம்பயக்குமருணீங்கி
மாசறுகாட்சியவர்க்கு.

A clear, undimmed vision (of things) will deliver its possessors from the darkness (of future births), and confer the felicity (of heaven*). - - - - - - - - - 352

பரி. அவிச்சையைநீங்கிமெய்யுணர்வுடையராயினார்க்கம்மெய்யுணர்வுபிறப்பினைநீக்கிவீட்டினைக்கொடுக்குமென்றவாறு.

வி. இருள்நரகம்.அஃதாகுபெயராய்க்காரணத்தின்மேனின்றது.நீங்கியெனத்தொடைநோக்கிமெலித்துநின்றது. நீங்கவென்பதன்றிரிபெனினுமமையும். மருணீங்கியென்னும்வினையெச்சங்காட்சியவரென்னுங்குறிப்புவினைப்பெயர் கொண்டது. மாசறுகாட்சியென்றதுகேவலவுணர்வினை. இதனால்வீடாவது நிரதிசயவின்பமென்பதூஉமதற்கு நிமித்தகாரணங்கேவலப்பொருளென்பதூஉங்கூறப்பட்டது.

பு. மருணீங்கி-அஞ்ஞானத்தைநீங்கி, மாசறுகாட்சியவர்க்கு-மெய்யுணர்வுடையராயினவர்க்கு, இருணீங்கி-(அந்தவுணர்வுபிறவியைநீக்க) நீங்கி, இன்பம்பயக்கும்-முத்தியைத்தரும், எ-று.

வி. இருள் நரகம். அதுவிங்கே ஆகுபெயராய்க்காரணத்தின்மேல்நின்றது. நீக்கி என்றது தொடைநோக்கி நீங்கியென மெலிந்துநின்றது. மருணீங்கியென்னும்வினையெச்சம் மாசறு என்னுங்காலங்கரந்தபெயரெச்சவினைகொண்டுமுடிந்தது. மாசறுகாட்சியென்றது மோட்சஞானத்தை. இதினாலே மோட்சமாவதுநிரதிசய இன்பமென்பதும், அதற்குநிமித்தகாரணங் கேவலப்பொருளென்பதுங் கூறப்பட்டது.

௩. ஐயத்தினீங்கித்தெளிந்தார்க்குவையத்தின்
வானநணியதுடைத்து.

Heaven is nearer than earth to those men of purified minds who are freed from doubt.† - - - - - - - 353

* "Heaven" *i.e.* freedom from births, and (as some say) absorption into the Deity.

† And who have attained (it is added) a true knowledge of births, of the fruit of action, and of God.

பரி. ஐயத்தினின்றுநீங்கிமெய் யுணர்ந்தார்க்கெய்திநின்றநிலவுலகத்தினுமெய்தக்கடவதாயவீட்டுலகநணித்தாதலுடைத்தென்றவாறு.

வி. ஐயமாவது பலதலையாயவுணர்வு. அஃதாவதுமறுபிறப்புமிருவினைப்பயனுங்கடவுளுமுளவோவிலவோவெனவொன்றிற்றுணிவுபிறவாதுநிற்றல். பேய்த்தேரோபுனலோகயிறேரவோவென்றுதுணியாதுநிற்பதுமது. ஒருவாற்றாற்பிறர்மதங்களைந்துதம்மதநிறுததலெல்லாச்சமையநூல்கட்குமியல்பாகலினவைகூறுகின்றபொருள்களுள்யாதுமெய்யெனநிகழுமையத்தினையோகமுதிர்ச்சியுடையார்தம்மநுபவத்தானீங்கி மெய்யுணர்வாராகலினவரையையத்தினீங்கித்தெளிந்தாரொன்றுமவர்க்கவ்வநுபவவுணர்வடிப்பட்டு வரவரப்பன்டையுலகியலுணர்வுதூர்ந்துவருமாகலினதனைப்பயன் மேலிட்டுவையத்தின்வானநணியதுடைத்தென்றுங்கூறினார். கூறவேயையவுணர்வும்பிறப்பிற்குக்காரணமாதல்கூறப்பட்டது.

பு. ஐயத்தினீங்கி-சந்தேகத்திலேநின்றுநீங்கி, தெளிந்தார்க்கு-மெய்ப்பொருளையுணர்ந்தவர்க்கு, வையத்தில்-அடைந்துநின்றபூவுலகத்தினும், வானம் - அடையப்போவதாகியமுத்தியுலகம், நணியதுடைத்து-சமீபித்திருத்தலையுடைத்து, எ-று.

வி. சந்தேகமாவது, பலபிரிவுகளாகியுணர்வது. அதாவது மறுபிறப்பும் இருவினைப்பயனும் கடவுளும் இல்லையோ வுண்டோ என ஒன்றிலுந்துணிவுபிறவாமல்நிற்பது. கானலோ நீரோ கயிறோ பாம்போ எனத்துணிவுபிறவாதுநிற்பதுமது. ஒருவிதத்தினாலே பிறர்மதத்தைத்தள்ளித் தமதுமதத்தைநிறுத்துதல்எல்லாச்சமையசாத்திரங்களுக்குமியல்பாதலால், அந்தச்சாத்திரங்கள்சொல்லுகின்றபொருள்களுள் எதுமெய்யோவென்று நடக்குஞ்சந்தேகத்தை முதிர்ந்தயோகப்பயிற்சியையுடையவர் தம்மநுபவத்தினாலே நீங்கி மெய்யையுணர்வாராகலின் அவரை ஐயத்தினீங்கித்தெளிந்தாரென்றும், அவர்க்கு அந்த அநுபவவுணர்வுமுதற்றொடங்கிவரவரப்பழையவுலகியலுணர்வுதூர்ந்துவருமாதலால் அதைப்பயன்மேலிட்டுவையத்தினவானநணியதுடைத்தென்றுங்கூறினார். கூறவே சந்தேகஞானமும்பிறப்பிற்குக்காரணமென்பதுங் கூறியவாறாயிற்று.

ச. ஐயுணர்வெய்தியக்கண்ணும்பயமின்றே
மெய்யுணர்வில்லாதவர்க்கு.

Even those who have all the knowledge* which can be attained

---

* ஐயுணர்வு, five-fold knowledge.

by the five senses, will derive no benefit from it, if they are without a knowledge of the true nature of things. - 354

பரி. செல்லப்படுகின்றபுலன்வேறுபாட்டாலைந்தாகியவுணர்வவற்றைவிட்டுத்தம்வயத்ததாயவழியுமதனாற்பயனில்லையாமெய்யினையுணர்தலில்லாதார்க்கென்றவாறு.

வி. ஐந்தாகியவுணர்வுமனம்.அஃதைப்பதுதலாவதுமடங்கியொருதலைப்பட்டுத்தாரணைக்கண்ணிற்றல். அங்ஙனநின்றவழியும்வீடுபயவாமையிற்பயனின்றென்றார். சிறப்புடைமையெய்துதற்கருமைவிளக்கிநின்றது. இவையிரண்டுபாட்டானுமெய்யுணர்வுடையார்க்கேவீடுளதெனமெய்யுணர்வின்சிறப்புக்கூறப்பட்டது.

பு. ஐயுணர்வு-புலன்வேறுபாட்டாலைந்தாகியவுணர்வு, எய்தியக்கண்ணும்-(அவற்றின்வசமாதலொழிந்து) தம்வசத்ததாகியவிடத்தும், பயமின்று-அதனாற்பயனில்லையாம், மெய்யுணர்வில்லாதவர்க்கு-மெய்யையறிதலில்லாதவர்க்கு, எ-று.

வி. ஐந்தாகியவுணர்வு, மனம். அதுஎய்துதலாவது, மடங்கியொருவழிப்பட்டுத்தாரணையிலேநிற்பது. அப்படிநின்றவிடத்தும்முத்திதாராமையிற்பயனின்றுஎன்றார். கண்ணுமென்ற சிறப்பும்மை அடைதற்கு அருமையைவிளக்கிநின்றது. இவையிரண்டுபாட்டானும்மெய்யுணர்வுடையார்க்கேமுத்தியுண்டாமென்றுமெய்யுணர்வின்சிறப்புக்கூறப்பட்டது.

௫. எப்பொருளெத்தன்மைத்தாயினுமப்பொருள்
மெய்ப்பொருள்காண்பதறிவு.

(True) knowledge is the perception concerning every thing of whatever kind, that *that* thing is the true thing.* - 355

பரி. யாதொருபொருள்யாதோரியல்பாய்த்தோன்றினுமத்தோன்றியவாற்

---

* The true thing, *i. e.* God. This is the (தத்துவம்) Tattuva system, which regards God as the only real existence, and all else as illusion. The Scholiasts render, "*in* that thing is the true thing." This is another form of the same system.

றைக்கண்டொழியாதப்பொருளின்கணின்று மெய்யாயபொருளைக்காண்பதே மெய்யுணர்வாவதென்றவாறு.

வி. பொருடோறுமுலகத்தார்கற்பித்துக்கொண்டுவழங்குகின்ற கற்பனைகளைக்கழித்துநின்றவுண்மையைக்காண்பதென்றவாறாயிற்று. அஃதாவது கோச்சேரமான்யானைக்கட்சேய்மாந்தரஞ்சேரலிரும்பொறையென்றவழியரசனென்பதோர்சாதியுஞ்சேரமானென்பதொருகுடியும்வேழநோக்கினையுடையானென்பதோர்வடிவுஞ்சேயென்பதோரியற்பெயருமாந்தரஞ்சேரலிரும்பொறையென்பதோர்சிறப்புப்பெயருமொருபொருளின்கட்கற்பனையாகலினவ்வாறுணர்ந்து நிலமுதலுயிரீறாகிய தத்துவங்களின்றொகுதியென்றுணர்ந்தவற்றைநிலமுதலாகத்தத்தங்காரணங்களுளொடுக்கிக்கொண்டுசென்றாற்காரணகாரியமிரண்டுமின்றிமுடிவாய்நிற்பதனையுணர்தலாம். எப்பொருளென்றபொதுமையானியங்குதிணையுநிலைத்திணையுமாகியபொருள்களெல்லாமிவ்வாறேயுணரப்படும். இதனான் மெய்யுணர்வினதிலக்கணங்கூறப்பட்டது.

பு. எப்பொருளெத்தன்மைத்தாயினும்-யாதொருபொருள் யாதொருதன்மையையுடையதாய்த்தோன்றினும், அப்பொருள்- (அத்தோற்றத்தைக்கண்டு நீங்காமல்) அந்தப்பொருளிலேநின்றும், மெய்ப்பொருள்காண்பதறிவு-மெய்யாகியபொருளைக்காண்பதேமெய்யுணர்வாம், எ-று.

வி. பொருள்கள்முழுமையிலும் உலகத்தார்கற்பித்துக்கொண்டுவழங்கப்பட்ட கற்பனைகளையொழித்துநின்ற உண்மையைக்காண்பதென்றவாறாயிற்று. அதாவது கோச்சேரமான் யானைக்கட்சேய்மாந்தரஞ்சேரலிரும்பொறை என்றவிடத்து அரசன் என்பதொருசாதியும்சேரமான் என்பதொருகுடிப்பெயரும்யானைக்கண்ணையுடையவன் என்பதொருவடிவும்சேய்என்பதொரு இயற்பெயரும் மாந்தரஞ்சேரலிரும்பொறை என்பதொருசிறப்புப்பெயரும் ஒருபொருளிடத்துக்கற்பனையாதலால் அவ்வாறேயுணர்ந்துபூமிமுதல் உயிர்முடிவாகியதத்துவங்களின்கூட்டமென்றுணர்ந்து அவற்றைப்பூமிமுதலாகத்தத்தங்காரணங்களுளொடுக்கிக்கொண்டேபோனாற்காரணகாரியமிரண்டுமில்லாமலே முடிவாய்நிற்பதையுணர்வதாம். எப்பொருளென்றபொதுமையினாலேசரம்அசரம்என்றபொருள்களெல்லாமிப்படியேயுணரப்படும். இதினாலே மெய்யுணர்வின் இலக்கணங்கூறப்பட்டது.

௬. கற்றீண்டுமெய்ப்பொருள்கண்டார்தலைப்படுவர்
மற்றீண்டுவாராநெறி.

They, who in this birth have learned to know* the true being, enter the road which returns not into this world.† - - 356

பரி. இம்மைக்கட்பிறப்பின்கண்ணேயுபதேசமொழிகளையநுபவமுடையதேசிகர்பாற்கேட்டதனுன்மெய்ப்பொருளையுணர்ந்தவர்மீண்டிப்பிறப்பின் கண்வாராதநெறியையெய்துவரென்றவாறு.

வி. கற்றென்றதனாற்பலர்பக்கலும்பலகாலும்பயிறலும். ஈண்டென்றதனால் வீடுபெறுதற்குரியமக்கட்பிறப்பினதுபெறுதற்கருமையும்பெற்றும். ஈண்டுவாராநெறிவீட்டுநெறி. வீட்டுக்குநிமித்தகாரணமாயமுதற்பொருளையுணர்தற்குபாயமூன்று. அவைகேள்விவிமரிசம்பாவனையென்பன. அவற்றுட்கேள்விஇதனாற்கூறப்பட்டது.

பு. ஈண்டு-இம்மையிலே, கற்று-(உபதேசமொழிகளையநுபவமுடையதேசிகரிடத்தில்) கேட்டு, மெய்ப்பொருள்கண்டார்-(அதினாலே) மெய்ப்பொருளையுணர்ந்தவர், மற்றீண்டுவாராநெறி-மறுபடியுமிப்பிறப்பிலேவாராதநெறியை, தலைப்படுவர்-அடைவர், எ-று.

வி. கற்றுஎன்றதினாலே பலரிடத்திலும்பலகாலமும் நூற்பொருளோடுபழகலும், ஈண்டுஎன்றதினாலே முத்திபெறுதற்கு உரிமையுள்ளமானிடப்பிறப்பிலென்பதும் பெறப்படும். ஈண்டுவாராநெறி,முத்திநெறி. முத்திக்குநிமித்தகாரணமாகிய முதற்பொருளையுணர்வதற்கு உபாயங்கள்மூன்று. அவை கேள்வி விமரிசம்பாவனையென்பன. அவற்றுள் கேள்வியிதனாற் கூறப்பட்டது.

௭. ஓர்த்துள்ளமுள்ளதுணரினொருதலையாப்
பேர்த்துள்ளவேண்டாபிறப்பு.

Let it not be thought that there is another birth for the mind

* Lit : who have learned and seen.
† Or birth, *i. e.* They will be freed from future births, being absorbed into the Deity.

which, having thoroughly considered (all it has been taught), has known the true being.* - - - - - - 357

பரி. அங்ஙனங்கேட்டவுபதேசமொழிப்பொருளையொருவனுள்ளமளவைகளானும்பொருந்துமாற்றானுந்தெளியவாராய்ந்ததனான்முதற்பொருளையுணருமாயினவனுக்குமாறிப்பிறப்புளதாகநினைக்கவேண்டாவென்றவாறு.

வி. ஒருதலையாவோர்த்தெனவியையும். அளவைகளும்பொருந்துமாறுமேலேயுரைத்தாம். இதனால் விமரிசங்கூறப்பட்டது.

பு. ஒருதலையாஓர்த்துள்ளம் - (அப்படிக்கேட்டவுபதேசப்பொருளைப்பிரமாணங்களாலும்பொருந்தியநெறிகளாலுந்தெளிவுபிறக்கும்படி) நிச்சயமாகவொருவனுடையமனமானது ஆராய்ந்து, உள்ளதுணரின் - முதற்பொருளையுணருமாயின், பேர்த்து-மாறி, பிறப்பு-அவனுக்குப்பிறப்புண்டென்று, உள்ளவேண்டா - நினைக்கவேண்டா, எ-று.

வி. ஒருதலையாவோர்த்தெனக்கூட்டுக. பிரமாணங்களும்பொருந்தியநெறிகளுமேலேசொன்னோம். இதனால் விமரிசங்கூறப்பட்டது.

௮. பிறப்பென்னும்பேதைமைநீங்கச்சிறப்பென்னுஞ்
செம்பொருள்காண்பதறிவு.

True knowledge consists in the removal of ignorance, which is (the cause of) births, and the perception of the true being,† who is (the bestower of) heaven. - - - - - - 358

பரி. பிறப்பிற்குமுதற்காரணமாயவவிச்சைகெடவீட்டிற்குநிமித்தகாரணமாயசெவ்வியபொருளைக்காண்பதேயொருவர்க்குமெய்யுணர்வாவதென்றவாறு.

வி. பிறப்பென்னும்பேதைமையெனவுஞ்சிறப்பென்னுஞ்செம்பொருளெனவுங்காரியத்தைக்காரணமாகவுபசரித்தார். ஐவகைக்குற்றங்களுளவிச்சையேனைநான்கிற்குங்காரணமாதலுடைமையினச்சிறப்புப்பற்றியதனையே பிறப்பிற்குக்காரணமாகக்கூறினார். எல்லாப்பொருளினுஞ்சிறத்தலான்வீடுசிறப்பெனப்பட்டது. தோற்றக்கேடுகளின்மையினித்தமாய்நோன்மைபாற்றன்னையொன்றுங்கலத்தலின்மையிற்றூயதாய்த்தானெல்லாவற்றையுங்கலந்துநிற்கின்றமுதற்பொருள்விகாரமின்றியென்றுமொருதன்மைத்தாதல்பற்றியதனைச்செம்பொருளென்றார். மேன்மெய்ப்பொருளெனவுமுள்ளதெனவுங்கூறியதூஉமிதுப

---

* உள்ளது, that which is, *i. e.* God. *He* is—all else is not.

† செம்பொருள், the right being.

ற்றியெனவுணர்க. அதனைக்காண்கையாவதுயிர்தன் னவிச்சைகெட்டதனோடொற்றுமையுறவிடைவிடாதுபாவித்தல் இதனைச்சமாதியெனவுஞ்சுக்கிலத்தியானமெனவுங்கூறுப. உயிருடம்பினீங்குங்காலத்ததனால்யாதொன்றுபாவிக்கப்பட்டதஃததுவாய்த்தோன்றுமென்பதெல்லாவாகமங்கட்குந்துணிபாதலின்வீடெய்துவார்க்கக்காலத்துப்பிறப்பிற்கேதுவாயபாவனைகெடுதற்பொருட்டுக்கேவலப்பொருளையேபாவித்தல்வேண்டுதலானதனை முன்னேபயிறலாயவிதனின்மிக்கவுபாயமில்லையென்பதறிக. இதனாற்பாவனைகூறப்பட்டது.

பு. பிறப்பென்னும்பேதைமைநீங்க - பிறப்பிற்குஆதிகாரணமாகிய அஞ்ஞானங்கெட, சிறப்பென்னுஞ்செம்பொருள் - முத்திக்குநிமித்தகாரணமாகியசெவ்வியபொருளை, காண்பதறிவு - காண்பதேயொருவனுக்குமெய்யறிவாம், எ - று.

வி. பிறப்பென்னும்பேதைமையெனவும், சிறப்பென்னுஞ்செம்பொருளெனவும், காரியங்களைக்காரணங்களாக வுபசரித்தார். ஐவகைக்குற்றங்களுள் அஞ்ஞானமேமற்றநான்கிற்குங்காரணமாதலால் அந்தச்சிறப்பினாலேயதனையே பிறப்பிற்குக்காரணமாகக்கூறினார். எல்லாப்பொருளினுஞ் சிறந்ததினாலே முத்திசிறப்பெனப்பட்டது. பிறப்பு இறப்பு இல்லாததினாலே. நியித்தமாகி.பெருமையினாலேதன்னையொன்றுங்கலக்கக்கூடாததினாலேபரிசுத்தமாகி, தானேயெல்லாவற்றையுங்கலந்து நிற்கின்றமுதற்பொருளானதுவிகாரமில்லாமல் எக்காலத்துமொரேதன்மையாயிருத்தலாலேயதைச்செம்பொருளென்றார். மேலேமெய்ப்பொருளெனவும் உள்ளதெனவுங்கூறியதும் இதினாலேயெனக்காண்க. அதைக்காண்பதாவது, உயிரானதுதனது அஞ்ஞானங்கெட்டு அதனோடு ஒன்றுபட்டிருக்க இடைவிடாமலேதியானித்தல். இதைச்சமாதியென்றும் சுக்கிலத்தியானமென்றுங்கூறுவார். உயிருடம்பைவிட்டு நீங்குங்காலத்தில் அந்தவுயிரினாலேயாதொன்றுபாவிக்கப்படுமோ அதுவாகவேயந்தவுயிர்தோன்றுமென்பது எல்லாநூல்களினுடையநிச்சயமாதலால்முத்தியடைவோர்க்கு அந்தக்காலத்திலே பிறப்பிற்குக்காரணமாகியநினைப்புக்கெடுதற்பொருட்டு முதற்பொருளையேதியானித்தல்வேண்டும். ஆதலாலதைமுன்னேதானேபயிற்சிசெய்தலாகிய இதைக்காட்டிலுமிக்கவுபாயமில்லையென்பதறிக. இதினாலேபாவனைகூறப்பட்டது.

௯ சார்புணர்ந்துசார்புகெடவொழுகின்மற்றழித்துச்
சார்தராசார்தருநோய்.

He, who so lives as to know him who is the support of all things and abandon all desire, will be freed from the evils which would otherwise cleavc to him and destroy (his efforts after absorption).* - - - - - - - - 359

பரி. ஒருவனெல்லாப்பொருட்குஞ்சார்பாயவச்செம்பொருளையுணர்ந்திருவகைப்பற்றுமறவொழுகவல்லனாயினவனைமுன்சாரக்கடவனவாய்நின்றதுன்பங்களவ்வுணர்வொழுக்கங்களையழித்துச்சாரமாட்டாவென்றவாறு.

வி. ஆகுபெயராற்சாருமிடத்தையுஞ்சார்வனவற்றையுஞ்சார்பென்றார்.ஈண்டொழுக்கமென்றது யோகநிலையொழுகுதலை. அஃதியமநியமமிருப்புயிர்நிலை மனவொருக்கந்தாரணைதியானஞ்சமாதியெனவெண்வகைப்படும். அவற்றின்பரப்பெல்லாமீண்டுரைப்பிற்பெருகும்யோகநூல்களுட்காண்க. மற்றுச்சார்தரா வெனவியையும். சாரக்கடவனவாய்நின்றதுன்பங்களாவனபிறப்பநாதியாய்வருதலினுயிர்தானளவின்றீட்டப்பட்ட வினைகளின் பயன்களுளிறந்தவுடம்புகளானுபவித்தனவும் பிறந்தவுடம்புகளான் முகந்துநின்றனவுமொழியப்பின்னுமநுபவிக்கக்கடவனவாய்க்கிடந்தன. அவைவிளக்கின்முன்னிருள்போல ஞானயோகங்களின்முன்னர்க்கெடுதலானழித்துச்சார்தராவென்றார். இதனையாருகதருவர்ப்பென்ப. பிறப்பிற்குக்காரணமாகலானல்வினைப்பயனுநோயெனப்பட்டது. மேன்மூன்றுபாயத்தானும்பரம்பொருளையுணரப்பிறப்பறுமென்றார். அஃதறும்வழிக்கிடந்ததுன்பங்களெல்லாமென்செய்யுமென்னுங்கடாவையாசங்கித்தவை ஞானயோகங்களின்முதிர்ச்சியுடையவுயிரைச்சாரமாட்டாமையானும்வேறுசார்பின்மையானுங்கெட்டுவிடுமென்பதிதனாற்கூறப்பட்டது.

பு. சார்புணர்ந்து-ஒருவனெல்லாப்பொருள்கட்கு(மாதாரமாகிய) அந்தச்செம்பொருளையுணர்ந்து, சார்புகெடவொழுகின்-இருவகைப்பற்றுக்களுமற்றுப்போம்படி நடக்கவல்லனாயின், சார்தருநோய்-அவனையினிச்சாரக்கிடந்தனவாகிய துன்பங்கள், அழித்து-அந்தவுணர்வையுமொழுக்கத்தையுங்கெடுத்து, மற்றுச்சார்தரா-மறுபடிசாரமாட்டாவாம், எ-று.

வி. ஆகுபெயரினாலே சாருமிடத்தையுஞ்சார்வனவற்றை

---

* By entangling him again in the net of desire.

யுஞ்சார்பென்றார். இங்கேயொழுக்கமென்றது, யோகவொழுக்கத்தை. அது இயமம்நியமம்இருப்புஉயிர்நிலைமனவொடுக்கம்தாரணைதியானம்சமாதியென எட்டுவகைப்படும். அவற்றின்விரியெல்லாமிங்கேசொல்லப்புகுந்தாற்பெருகும் அவற்றையெல்லாம்யோகசாத்திரங்களுட்காண்க. மற்றுச்சார்தராவெனக்கூட்டுக. சாரக்கடவனவாகிநின்றதுன்பங்களாவன, பிறப்புஅநாதியாய்வருதலின் உயிர்தானளவில்லாமற் செய்துசேர்த்துவைத்தவினைகளின்பயன்களுள்போனவுடம்புகளாலே யநுபவித்தனவும்இடைநின்றபிறந்தவுடம்புகளாலேயேற்றுநின்றனவும்ஒழிய இனிவருமுடம்புகளாலேயநுபவிக்கக்கடவனவாகிக்கிடந்தன. அவைவிளக்கின்முன்னிருள்போலவேயோகஞானங்களின்முன்கெடுமாதலால் அழித்துச்சார்தராவென்றார். இதை ஆருகதர்உவர்ப்பென்றுசொல்லுவர். பிறப்பினுக்குக்காரணமாதலால் நல்வினைப்பயனையும்நோயென்றார். மேலேமூன்று உபாயத்தினாலும் பரம்பொருளையுணரப்பிறப்புஅறுமென்றார். அப்பிறப்புஅறும்போதுநின்றதுன்பங்களெல்லாம் எவ்வாறுமென்னும்வினாவை ஆசங்கித்துஅவையோகஞானங்களில்முதிர்ந்தவுயிரைச்சாரமாட்டாததினாலும்வேறேசார்பில்லாததினாலும் கெட்டுப்போமென்பது இதனாற்கூறப்பட்டது.

௰. காமவெகுளிமயக்கமிவைமூன்றி
நாமங்கெடக்கெடுநோய்.

If the very names* of these three things, desire, anger, and confusion of mind, be destroyed; then will also perish the evils (which flow from them). - - - - - - 360

பரி. ஞானயோகங்களின்முதிர்ச்சியுடையார்க்குவிழைவுவெறுப்பவிச்சையென்னுமிக்குற்றங்கண்மூன்றனுடையபெயருங்கெடக்கெடுதலானவற்றின்காரியமாயவினைப்பயன்களுளவாகாவென்றவாறு.

வி. அநாதியானவவிச்சையுமதுபற்றியானெனமதிக்குமகங்காரமுமதுபற்றியெனக்கிதுவேண்டுமென்னுமவாவுமதுபற்றியப்பொருட்கட்செல்லுமாசையுமதன்மறுதலைக்கட்செல்லுங்கோபமுமெனவடநூலார்குற்றமைந்தென்றாரிவ

ரவற்றுளகங்காரமவிச்சைக்கண்ணுமவாவுங்லாசைக்கண்ணுமடங்குதலான் மூன்றென்றார். இடையறாத ஞானயோகங்களின் முன்னிக்குற்றங்கண் மூன்றுங் காட்டுத்தீமுன்னர்ப்பஞ்சுபோலுமாகவினம்மிகுதி தோன்றவிவைமூன்றினுமங் கெடவென்றார். இழிவுசிறப்பும்மைவிகாரத்தாற்றொக்கது.கெடவென்பதெச்சத்திரிவு.நோயென்பதுசாதியொருமை.காரணமாயவக்குற்றங்களைக்கெடுத்தார் காரியமாயவிருவினைகளைச்செய்யாமையினவர்க்குவரக்கடவதுன்பங்களுமில்லையென்பதிதனாற்கூறப்பட்டது. முன்கிடந்ததுன்பங்களுமேல்வருந்துன்பங்களுமிலவாதன்மெய்யுணர்வின்பயனாகவினிவை யிரண்டுமிவ்வதிகாரத்தினவாயின. இவ்வாற்றானே மெய்யுணர்ந்தார்க்கு நிற்பனவெடுத்தவுடம்புமதுகொண்டவினைப்பயனுமேயென்பதுபெற்றாம்.

பு. காமவெகுளிமயக்கமிவைமூன்றின் - (யோகஞானங்களில்முதிர்ந்தவர்க்கு) ஆசைவெறுப்புஅஞ்ஞானமென்னுமிக்குற்றங்கள்மூன்றினுடைய, நாமங்கெட-பெயருங்கூடக்கெடுதலால், கெடுநோய்- (அவற்றின்காரியமாகிய) வினைப்பயன்கள்கெடும், எ-று.

வி. அநாதியாகியஅஞ்ஞானமும் அதுபற்றிநானெனமதிக்கும் அகங்காரமும்அதுபற்றி எனக்குஇதுவேண்டுமென்னும் விருப்பமும் அதுபற்றியப்பொருளின்மேற்செல்லும் ஆசையும் அதின்மறுதலையிற்செல்லுங்கோபமும்எனவடநூலார்கூற்றமைந்தென்றார். இவர்அவற்றுள் அகங்காரமஞ்ஞானத்திலும் அவாவுதல்ஆசையிலும்அடங்கிப்போவதினாலேமூன்றென்றார். இடையறாதயோகஞானங்களின்முன் இக்குற்றங்கள்மூன்றுங் காட்டுத்தீமுன்னேபஞ்சுபோலாமாதலால் அந்தமிகுதிதோன்றஇவைமூன்றினுமங்கெடவென்றார். நாமமும்என்னுமிழிவுசிறப்புஉம்மை,தொக்குநின்றது.கெடவென்பது,எச்சத்திரிபு. நோய்என்றது, சாதியொருமை. காரணமாகிய அக்குற்றங்களைக்கெடுத்தவர்காரியமாகிய இருவினைகளைச்செய்யாததினாலே அவர்க்குவரக்கடவனவாகிய துன்பங்களுமில்லையென்பது இதனாற்கூறப்பட்டது. முன்கிடந்ததுன்பங்களும்மேல் வருந்துன்பங்களுமில்லாதொழிதல்மெய்யுணர்வின்பயனாதலால்இவையிரண்டுமிவ்வதிகாரத்திற்குரியவாயின. இந்த நெறியினாலே மெய்யுணர்ந்தார்க்குநிற்கின்றன,எடுத்ததேகமும்அதுகொண்டவினைப்பயனுமேயென்பதுபெறப்பட்டது.

௩௭. அதிகாரம். CHAPTER XXXVII.

அவாவறுத்தல். THE DESTRUCTION* OF DESIRE.

பரி. அஃதாவது முன்னும்பின்னும்வினைத்தொடர்பறுத்தார்க்குநடுவுநின்றவுடம்புமதுகொண்டவினைப்பயன்களுநின்றமையின் வேதனைபற்றியோரோவழித்துறக்கப்பட்டபுலன்கண்மேற் பழையபயிற்சிவயத்தானினைவுசெல்லுமன்றேயந்நினைவுமவிச்சையென்னும்பிறவிக்குவித்தாமாகலினதனையிடைவிடாதமெய்ப்பொருளுணர்வானறுத்தல். அதிகாரமுறைமையுமிதனானேவிளங்கும்.

அதாவது, முன்னும்பின்னும் வினைத்தொடர்ச்சியையறுத்தவர்க்குநடுநின்றதேகமும் அதுகொண்டவினைப்பயன்களும் அறுதுநின்றமையால் வேதனைபற்றியோரோரிடங்களிலே நீக்கப்பட்டபுலன்களின்மேற் பழையபழக்கத்தினாலே நினைவுசெல்லுமல்லவா அந்தநினைவும் அஞ்ஞானமென்னும் பிறப்பிற்குவித்தாகுமாதலால் அதைஇடைவிடாதமெய்ப்பொருளின்தியானத்தினாலே அறுத்தல். அதிகாரமுறையுமிதினாலே விளங்கும்.

௧. அவாவென்பவெல்லாவுயிர்க்குமெஞ்ஞான்றுந்
தவாஅப்பிறப்பீனும்வித்து.

(The wise) say that the seed, which produces unceasing births, at all times, to all creatures, is desire. - - - 361

பரி. எல்லாவுயிர்கட்குமெக்காலத்துங்கெடாதுவருகின்றபிறப்பினைவிளைக்கும்வித்தவாவென்றுசொல்லுவர்நூலோரென்றவாறு.

வி. உடம்புநீங்கிப்போங்காலத்தடுத்தவினையுமதுகாட்டுங்கதிநிமித்தங்களுமக்கதியின்கணவாவுமுயிரின்கண்முறையேவந்துதிப்பவறிவைமோகமறைப்பவவ்வுயிரையவ்வவாக்கதிக்கட்கொண்டுசெல்லுமாகலானதனைப்பிறப்பீனும்வித்தென்றுங்கதிவயத்தானுளதாய்வவ்வுயிர்வேறுபாட்டினுமவைதன்மைதிரியவுற்சர்ப்பிணியவசர்ப்பிணியென்னுங்காலவேறுபாட்டினுமதுவித்தாதல்வேறுபடாமையினெல்லாவுயிர்க்குமெஞ்ஞான்றுமென்றுமிஃதெல்லாச்சமயங்கட்குமொத்தலானென்பவென்றுங்கூறினார். இதனாற்பிறப்பிற்கவாவித்தாதல்கூறப்பட்டது.

பு. எல்லாவுயிர்க்குமெஞ்ஞான்றும்-எல்லாவுயிர்களுக்குமெ

* அறுத்தல், cutting off.

க்காலத்தும், தவா-கெடாத, பிறப்பீனும்வித்து-பிறப்பையுண்டாக்குகின்றவினை, அவாவென்ப - ஆசையென்றுசொல்லுவர் புலவர், எ-று.

வி. தேகம்நீங்கிப்போங்காலத்தில் அடுத்தவினையும் அது காட்டுகின்றகதிநிமித்தங்களும் அந்தக்கதியினிடத்திலே யாசையும் உயிரினிடத்திலே முறையேவந்துதோன்றவும் அறிவைமோகம்மறைக்கவும் அந்தவுயிரை அந்தஆசைஅதற்குரிய கதியிலேகொண்டுபோமாதலால் அதைப்பிறப்பீனும்வித்தென்றும், கதிக்குப்பொருந்தும்படியமைந்த அந்தவுயிர்வேறுபாட்டாலும் அவைகுணம்வேறுபட உற்சர்ப்பிணி அவசர்ப்பிணியென்றகாலவேறுபாட்டாலும் அதுவித்தாயிருத்தல் வேறுபடாமையால் எல்லாவுயிர்க்குமெஞ்ஞான்றுமென்றும், இதுஎல்லாச்சமயங்களுக்கு மொத்திருத்தலால் என்பவென்றுங்கூறினார். இதனாலே ஆசைபிறப்பிற்குவித்தென்பதுகூறப்பட்டது

உ. வேண்டுங்கால்வேண்டும்பிறவாமைமற்றது
வேண்டாமைவேண்டவரும்.

If any thing be desired, freedom from births should be desired; that (freedom from births) will be attained by desiring to be without desire.* - - - - - - - 362

பரி. பிறப்புத்துன்பமாதலறிந்தவனொன்றைவேண்டிற்பிறவாமையையேவேண்டும்பிறவாமைதானொருபொருளையும்வாவாமையைவேண்டவவனுக்குத்தானேயுண்டாமென்றவாறு.

வி. அநாதியாகத்தான்பிறப்புப்பிணிப்பூப்பிறப்புக்களாற்றுன்பமுற்றுவருகின்றமையையுணர்ந்தவனுக்காசையின்பத்தின்கண்ணேயாகலிற்பிறவாமையையே வேண்டுமென்றுமீண்டிச்சிற்றின்பங்கருதியொருபொருளையவாவினது பிறப்பீனும்வித்தாய்ப்பின்னுமுடிவில்லாததுன்பமேவிளைத்தலினது வேண்டாமைவேண்டவருமென்றுங்கூறினார். பிறவாமையின்சிறப்புக்கூறியபின்னதுவருவழிகூறத்தொடங்குகின்றமையின்மற்றுவினைமாற்றின்கண்வந்தது.

பு. வேண்டுங்கால்-(பிறப்புத்துன்பமென்றறிந்தவன்)ஒன்

---

* i. e. Liberation from births can be attained by those alone whose minds are purged from all desire.

றைவேண்டுவானாயின், வேண்டும்பிறவாமை - பிறவாமையை வேண்டுவான், மற்றது - அப்பிறவாமையோ, வேண்டாமை - ஒருபொருளையும் ஆசைப்படாமையை, வேண்டவரும் - விரும்ப அவனுக்குத்தானேயுண்டாம், எ-று.

வி. அநாதியாகத்தான்பிறப்புபிணிமூப்புஇறப்புக்களாலே துன்பத்தையேயநுபவித்து வருகின்றமையையறிந்தவனுக்கு ஆசைஇன்பத்தினிடத்திலே யேயாதலாற்பிறவாமையைவேண்டுமென்றும், மறுபடியுமிந்தச்சிற்றின்பத்தை நினைத்து ஒருபொருளையாசைப்படுவானாயின் அதுபிறப்பைத்தருகின்றவித்தாகிப்பின்னு முடிவில்லாத துன்பங்களையே யுண்டுபண்ணலால்வேண்டாமைவேண்டவருமென்றுங்கூறினார். பிறவாமையின்சிறப்புக்கூறியபின் அதுவரும்வழிகூறத்தொடங்கினமையால்மற்றுவினைமாற்றிலேவந்தது.

௩. வேண்டாமையன்னவிழுச்செல்வமீண்டில்லை
யாண்டுமஃதொப்பதில்.

There is in this world no excellence equal to freedom from desire; and even in that world,* there is nothing like it. 363

பரி. ஒருபொருளையுமவாவாமையையொக்கும்விழுமியசெல்வங்காணப்படுகின்றவிவ்வுலகின்கணில்லையினியவ்வளவையன்று கேட்கப்படுகின்றதுறக்கத்தின்கண்ணுமதனையொப்பதில்லையென்றவாறு.

வி. மக்கள்செல்வமுந்தேவர்செல்வமுமேன்மேலுக்கக்கீழாதலுடைமையிற்றனக்குமேலில்லாதவேண்டாமைய விழுச்செல்வமென்றுமதற்கீரண்டுலகினுமொப்பதில்லையென்றுங்கூறினார். ஆகமவளவைபோலாது காட்சியளவையெல்லாராலுந்தெளியப்படுதலின் மக்கள்செல்வமும்வகுத்து முற்கூறப்பட்டது.

பு. வேண்டாமையன்ன - ஒருபொருளையும் ஆசைப்படாமையையொத்த, விழுச்செல்வம் - சிறந்தசெல்வமானது, ஈண்டில்லை - காணப்படுகின்றஇவ்வுலகத்திலேயில்லை, ஆண்டும் - கேட்கப்படுகின்றசுவர்க்கத்திலும், அஃதொப்பதில் - அதையொப்பதுவேறேயில்லை, எ-று.

* The upper world.

வி. மனிதர்செல்வமுந்தேவர்செல்வமும் ஒன்றுக்கொன்று உயர்வைநோக்கக்கீழ்ப்படுதலால்தனக்குஉயர்ந்ததில்லாதவேண்டாமையைவிழுச்செல்வமென்றும், அதற்குஇாண்டுலகத்திலுமொப்பதில்லையென்றுங்கூறினார். சாத்திரப்பிரமாணம்போலாகாது பிரத்தியட்சப்பிரமாணமெல்லாராலுந் தெளியப்படுதலால் மனிதர்செல்வமும் பிரித்துமுன்சொல்லப்பட்டது.

ச. தூஉய்மையென்பதவாவின்மைமற்றது
வாஅய்மைவேண்டவரும்.

Purity (of mind) consists in freedom from desire; and that (freedom from desire) is the fruit* of the love of truth. 364

பரி. ஒருவர்க்குவீடென்றுசொல்லப்படுவதவாவில்லாமை. யவ்வவாவில்லாமைமெய்மையை வேண்டத்தானேயுண்டாமென்றவாறு.

வி. வீடாவதுயிரவிச்சைமுதலியமாசினீங்குதலாதலினதனைத்தூய்மையென்றுமக்காரணத்தைக்காரியமாகவுபசரித்துத்தூய்மையென்பதவாவின்மையென்று மெய்மையையுடையபரத்தையாகுபெயரான் மெய்மையென்றுங்கூறினார். மற்றுமேலையதுபோல வினைமாற்றின்கண்வந்தது. வேண்டுதலிடைவிடாதுபாவித்தல். அவாவறுத்தல் வீட்டிற்குப்பரம்பரையானன்றிநேரேயேதுவென்பதூஉமதுவரும்வழியுமிதனாற்கூறப்பட்டது.

பு. தூய்மையென்பது-(ஒருவனுக்கு) முத்தியென்றுசொல்லப்படுவது, அவாவின்மை-ஆசையில்லாமையாம், மற்றது-மற்றந்தஆசையின்மையானது, வாய்மைவேண்டவரும்-சத்தியத்தைவிரும்பத்தானேயுண்டாம், எ-று.

வி. முத்தியாவதுஉயிர்அவிச்சைமுதலியகளங்கத்தினின்றும் நீங்குதலால்அதைத்தூய்மையென்றும், அத்தக்காரியத்தைக் காரணமாக உபசரித்துத்தூய்மையென்பது அவாவின்மையென்றும், சத்தியத்தையுடையபாத்தைஆகுபெயரினாலேவாய்மையென்றுங்கூறினார். மற்றுமேற்சொல்லியதுபோலவேவினைமாற்றிலேவந்தது. வேண்டுதல் இடைவிடாமல் தியானித்தல். அவாவறுத்தல் முத்திக்குப் பாம்பரைநியாயத்தாலன்றிநேரேயேதுவென்பதும் அதுவரும்வழியுமிதனாற் கூறப்பட்டது.

---

* Comes by desiring truth.

௫. அற்றவரென்பாரவாவற்றார்மற்றையா
ரற்றாகவற்றதிலர்.

They are said to be free* who are freed from desire; all others (who, whatever else they may be free from, are not freed from desire) are not thus free.† - - - - - 365

பரி. பிறவியற்றவரென்றுசொல்லப்படுவாராதற்குநேரேயதுவாகியவவா வற்றவர்கள் பிறவேதுக்களற்றுஃதொன்றுமறாதவர்களவற்றுற் சில துன்பங்களற் றதல்லதவரைப்போற்பிறவியற்றிலரென்றவாறு.

வி. இதனாலவாவறுத்தாரதுசிறப்புவிதிமுகத்தானுமெதிர்மறைமுகத்தானுங்கூறப்பட்டது.

பு. அற்றவரென்பார்-பிறவியற்றவரென்றுசொல்லப்படுபவர், அவாவற்றார்-(அதற்குநேரேயதுவாகிய) ஆசையற்றவர்களாம், மற்றையார் - (வேறேயேதுக்களாய்நின்றவையற்று) அதுவொன்றுமறாதவர்கள், அற்றாக - (அவைகளாற்சிலதுன்பங்களற்றதேயல்லாமல்) அவரைப்போல, அற்றதிலர்-பிறவியற்றிலர், எ-று.

வி. இதினாலேஅவாவறுத்தவருடையசிறப்புஉடன்பாட்டினாலுமெதிர்மறையினாலுங்கூறப்பட்டது.

௬. அஞ்சுவதோருமறனேயொருவனை
வஞ்சிப்பதோருமவா

It is the chief duty of (an ascetic) to watch against desire with (jealous) fear; for it has power to deceive (and destroy) him.‡ 366

பரி. மெய்யுணர்தலீறுகியகாரணங்களெல்லாமெய்தியவற்றுக்வீடெய்தற் பாலனாயவொருவனைமறவிவழியாற்புகுந்தபின்னும்பிறப்பின்கண்ணேவீழ்த்து க்கெடுக்கவல்லதவாவாகலானவ்வவாவையஞ்சிக்காப்பதேதுறவறமாவதென்றவாறு.

---

* From future births.

† *i. e.* They alone, are freed from passing into other births, who are freed from desire.

‡ If through carelessness, it should be permitted to take possession of his mind.

வி. ஒருமென்பனவசைநிலை. அநாதியாய்ப்போந்தவவாவொரோவழிவாய்மையை வேண்டலையொழித்துப்பார்க்காற்காவாறுயினஃதிடமாகவவனறியாமற்புகுந்துபழையவியற்கையாய்நின்றுபிறப்பிறப்பினையுண்டாக்குதலானதனை வஞ்சிப்பதென்றார். காத்தலாவது வாய்மையை வேண்டலையிடைவிடாதுபயின்றதுசெய்யாமற்பரிகரித்தல். இதனாலவாவின்குற்றமுமதனைக்காப்பதேயறமென்பதூஉங்கூறப்பட்டது.

பு. ஒருவனை - (மெய்யுணர்தல்இறுதியாகியகாரணங்களெல்லாம்பொருந்திஅவற்றால்முத்தியடையஇருந்த) ஒருவனை, வஞ்சிப்பது-மறப்புவழியினாலேநுழைந்துமறுபடியும்பிறப்பிலேவிழச்செய்துகெடுக்கவல்லது, அவா-ஆசையாதலால், அஞ்சுவது-அந்தஆசைக்குப்பயந்துகாப்பதுவே, அறன்-துறவறமாவது, எ-று.

வி. ஒருமென்பனவிரண்டுமசைநிலை. அநாதியாகவந்தஆசைஒரோரிடத்துச்சத்தியத்தைவேண்டலைநீக்கிப்பாராமுகமாகக்காக்காறுயின்அதுவேயிடமாகஅவனறியாமலேநுழைந்துபழையசுபாவமாகநின்றுபிறப்பையும் இறப்பையும் உண்டாக்குதலால் அதைவஞ்சிப்பதென்றார். காத்தலாவது சத்தியத்தைவிரும்புதலைஇடைவிடாமல் மனமுன்பழகியதைச்செய்யாமலேபரிகரிப்பது. இதினாலே ஆசையின்குற்றமும்அதைக்காப்பதேதருமமென்பதுஞ் சொல்லப்பட்டது.

எ. அவாவினையாற்றவறுப்பிற்றவாவினை
தான்வேண்டுமாற்றான்வரும்.

If a man thoroughly cut off all desire, the deeds, which confer immortality, will come to him, in the path in which he seeks them. - - - - - - - - - 367

பரி. ஒருவனவாவினைவஞ்சித்தும்வாராமற்கெடுக்கவல்லனாயினவனுக்குக்கெடாமைக்கேதுவாகியவினைதான்விரும்புநெறியானேயுண்டாமென்றவாறு.

வி. கெடாமைபிறவித்துன்பங்களாலழியாமை. அதற்கேதுவாகியவினையென்றது மேற்சொல்லியதுறவறங்களை. வினைசாதியொருமை. தான்விரும்புநெறிமெய்வருந்தாநெறி. அவாவினைமுற்றவறுத்தானுக்குவேறறஞ்செய்யவேண்டா செய்தனவெல்லாமறமென்பதுகருத்து.

பு. அவாவினை-ஒருவனுசையினை, ஆற்ற-மிகவும், அறுப்பி

ன்-(வஞ்சித்தும்வாராமற்) கெடுக்கவல்லனாயின், தவாவினை-கெடாமைக்குக்காரணமாகியவினை, தான்வேண்டுமாற்றான்-தான்விரும்புகின்றநெறியினாலே, வரும்-அவனுக்குஉண்டாகும், எ-று.

வி. கெடாமைபிறவித்துன்பங்களாலேஅழியாமை. அதற்குஏதுவாகியவினையென்றது, மேலேசொல்லப்பட்டதுறவறங்களை. வினை, சாதியொருமை. தான்விரும்புநெறி, தேகவருத்தமில்லாதநெறி. ஆசையைமுற்றஅறுத்தவனுக்கு வேறேதருமஞ்செய்யவேண்டுவதில்லைசெய்தனவெல்லாந்தருமங்களென்பதுகருத்து.

அ. அவாவில்லார்க்கில்லாகுந் துன்பமஃதுண்டேற்
றவா அதுமேன்மேல்வரும்.

There is no sorrow to those who are without desire ; but where *that* is, (sorrow) will incessantly come, more and more. - 368

பரி. அவாவில்லாதார்க்கு வரக்கடவதொருதுன்பமுமில்லையொருவர்க்குப்பிறகாரணங்களெல்லாமின்றியஃதொன்றுமுண்டாயினதனானெல்லாத்துன்பங்களுமுடிவின்றியிடைவிடாமல்வருமென்றவாறு.

வி. உடம்புமுகந்துநின்றதுன்பமுன்பேசெய்துகொண்டதாகவின்வேண்டுத்துன்பமென்றதுபொழுதவாவாற் செய்துகொள்வனவற்றை. தவாதுமேன்மேல்வருமென்றதனால்மூவகைத்துன்பங்களுமென்பதுபெற்றும். இதனாலவாவே துன்பத்திற்குக்காரணமென்பதுகூறப்பட்டது.

பு. அவாவில்லார்க்கு-ஆசையில்லாதவர்க்கு, இல்லாகுந்துன்பம்-துன்பமில்லையாம், அஃதுண்டேல்-(ஒருவனுக்குத்துன்பமுண்டாதற்குக்காரணமாகியமற்றையவையெலலாம் நீங்கி) அந்தஆசையொன்றுமாத்திரமிருக்குமானால், தவாஅது-(அதினாலேயெல்லாத்துன்பங்களும்) ஒழிவில்லாமல், மேன்மேல்வரும்-இடையறாமல்வரும், எ-று.

வி. உடம்புமேற்கொண்டுநின்றதுன்பம் முன்னேசெய்துகொண்டது. ஆதலால்இங்கேதுன்பமென்றது இப்பொழுதுஆசையினாலேயுண்டாக்கிக்கொள்வனவற்றை. தவாதுமேன்

மேல்வருமென்றதினாலே மூவகைத்துன்பங்களுமென்பதுபெ
றப்பட்டது.

௯. இன்பமிடையறாதீண்டுமவாவென்னுந்
துன்பத்துட்டுன்பங்கெடின்.

Even while in this body, joy will never depart (from the mind, in which) desire, that sorrow of sorrows, has been destroyed. 369

பரி. அவாவென்றுசொல்லப்படுகின்றமிக்கதுன்பமொருவற்குக்கெடுமாயி னவன் வீடுபெற்றவழியேயன்றியுடம்பொடுநின்றவழியுமின்பமிடையறாதென்ற வாறு.

வி. துன்பத்துட்டுன்பமெனைத்துன்பங்களெல்லாமின்பமாகவருந்துன்பம்வி னையின்கண்ணேயன்றித்தோற்றத்தின்கண்ணுந்துன்பமாகலினிவ்வாறுகூறப்பட் டது. காரணத்தைக்காரியமாகவுபசரித்தவாவென்னுந்துன்பத்துட்டுன்பமெ ன்றமையதுகெட்டார்க்குமனந்தடுமாறுதுநிரம்பிநிற்றலானீண்டுமின்பமிடையறு தென்றுங்கூறினார். இனியீண்டுமென்பதற்குப்பெருகுமென்றுரைப்பாருமுள ர். இதனாலவாவறுத்தார்வீட்டின்பமுடம்பொடுநின்றேயெய்துவரென்பதுகூ றப்பட்டது.

பு. அவாவென்னும் - ஆசையென்றுசொல்லப்படுகின்ற, துன்பத்துட்டுன்பங்கெடின் - மிகுந்ததுன்பமொருவனுக்குக் கெடுமாயின், ஈண்டும்-(முத்திபெற்றபோதன்றி) உடம்போ டுகூடியிவ்வுலகத்துநின்றபோதும், இன்பமிடையறாது-இன்ப மொழியாது, எ-று.

வி. துன்பத்துட்டுன்பம் மற்றத்துன்பங்களெல்லாமின்ப மாகவருந்துன்பம், அநுபவிக்குமிடத்திலேயல்லாமலுந்தோ ன்றும்போதுந்துன்பமாகலின் இங்ஙனஞ்சொல்லப்பட்டது. காரியத்தைக்காரணமாகவுபசரித்து அவாவென்னுந்துன்பத் துட்டுன்பமென்றும், அதுகெட்டார்க்குமனந்தடுமாறுமலேநி றைந்து நிற்பதினாலே யீண்டுமின்பமிடையறாதென்றுங்கூறி னார். இனியீண்டுமென்பதற்குப்பெருகுமென்றுரைப்பாருமு ண்டு. இதினாலே ஆசையற்றவர் முத்தியின்பத்தையுடம்பொடு நின்றபோதும் அடைவரென்பதுகூறப்பட்டது.

௰. ஆராவியற்கையவா நீப்பினந்நிலையே
பேராவியற்கைதரும்.

The removal of desire, whose nature it is never to be satisfied, will immediately confer a nature that can never be changed.* - 370

பரி. ஒருகாலுநிரம்பாதவியல்பினையுடை யவவாவினையொருவனீக்குமாயி னந்நீப்பவனுக்கப்பொழுதேயெஞ்ஞான்றுமொருநிலைமையனாமியல்பைக்கொடுக்குமென்றவாறு.

வி. நிரம்பாமையாவதுதாமேயன்றித்தம்பயனுநிலையாமையின்வேண்டாதனவாயபொருள்களைவேண்டிமேன் மேல்வளர்தல். வளர்ச்சிக்களவின்மையினீத்தலேதக்கதென்பதுகருத்து. களிப்புக்கவற்சிகளும்பிறப்புப்பிணிமூப்பிறப்புகளுமுதலாயினவின்றியுயிர்நிரதிசயவின்பத்ததாய் நிற்றலின் வீட்டினைப்பேராவியற்கையென்றுமவாநீத்தவழிப்பெறுதலொருதலையாகலினந்நிலையேதருமென்றுங்கூறினார். விருத்தம். நன்றுநாலங்கடந்துபோய்நல்லிந்திரியமெலாநீத்து, மொன்றாய்க்கிடந்தவரும்பெரும்பாழுலப்பிலதனையுணர்ந்துணர்ந்து, சென்றுங்கின்பதுன்பங்கள்செற்றுக்களைந்துபசையற்று,லன்றேயப்போழ்தேவீடதுவேவீடுபேறுமே. என்றாதுமக்கருத்தேபற்றிவந்தது. இந்நிலைமையுடையவனைவடநூலார்சீவன்முத்தனென்ப. இதனால் வீடாவதிதுவென்பதூஉமஃதவாவறுத்தார்க்கப்பொழுதேயுளவாமென்பதூஉங்கூறப்பட்டது.

பு. ஆராவியற்கையவா - ஒருகாலுநிரம்பாதசுபாவத்தையுடையஆசையை, நீப்பின் - ஒருவனீக்குவானாயின், அந்நிலையே - (அந்தநீக்கமானதுஅவனுக்கு) அப்பொழுதே, பேராவியற்கைதரும் - எப்போதும் ஒரேநிலைமையனாகுந்தன்மையைக்கொடுக்கும், எ-று.

வி. நிரம்பாமையாவது பொருள்களையன்றியப்பொருள்களாலேவரும்பயனும்நிலையாமையின் விரும்பப்படாதனவாகிய அப்பொருள்களைவிரும்பிமேன்மேலும்வளர்வது. அந்த வளர்ச்சிக்குஅளவில்லையாதலால்நீக்குவதேதக்கதென்பதுகருத்து. களிப்புதுயரம்பிறப்புபிணிமூப்பு இறப்புமுதலியவையில்லாமலேயுயிரானது இடையறாதஇன்பமுடையதாக நிற்றலால்முத்தியைப்பேராவியற்கையென்றும், அந்தமுத்திஆசை

* Absorption into the Deity The man becomes one with God, it is said.

யற்றபோது உண்டாவதுநிச்சயமாதலால் அந்நிலையேதருமமென்றுங்கூறினார். நன்றாஞாலங்கடந்துபோய் நல்லிந்திரியமெலாநீத்து, மொன்றாய்க்கிடந்தவரும்பெரும்பாழலப்பிலதனையுணர்ந்துணர்ந்து,சென்றாங்கின்பதுன்பமெலாஞ்செற்றுக்களைந்துபசையற்றா, லன்றேயப்போழ்தேஎயதுவே வீடுபேறாமே. எனப்பிறருமிக்கருத்தேபற்றிக்கூறுதல்காண்க. இந்நிலைமையுடையவனைவடநூலார் சீவன்முத்தனென்றுசொல்லுவர். இதினாலேமுத்தியாவது இதுவென்பதும் அந்தமுத்தியாசையற்றவர்க்கு அப்பொழுதேயுண்டாமென்பதுங்கூறப்பட்டது.

---

௩௮. அதிகாரம். CHAPTER XXXVIII.

ஊழ். On Fate.

இவ்வாற்றானிம்மைமறுமைவீடென்னுமூன்றனையும்பயத்தற்சிறப்புடைத்தாயவறங்கூறினாரினிப்பொருளுமின்பமுங்கூறுவாரவற்றின் முதற்காரணமாகியவூழின்வலிகூறுகின்றார்

அஃதாவது, இருவினைப்பயன்செய்தவனைச்சென்றடைதற்கேதுவாகியநியதி. ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், நியதி, விதி, என்பனவொருபொருட்கிளவி இது, பொருளின்பங்களிரண்டிற்கும்பொதுவாயொன்றனுள்வைக்கப்படாமையானு மேற்கூறியவறத்தோடியைபுடைமையானுமதனதிறுதிக்கண்வைக்கப்பட்டது.

அதாவது, இருவினைப்பயன்கள் செய்தவனைப்போய்ச்சேர்வதற்குக்காரணமாகியநியதி. ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம்,நியதி, விதி, என்பனவெல்லாமொருபொருண்மொழிகள். இதுபொருளின்பங்களிரண்டிற்கும்பொதுவாகியொன்றினுள்ளே வைக்கப்படாமையாலும் மேலேசொல்லியதருமத்தோடேயியைந்திருப்பதினாலும் அதின்பின்வைக்கப்பட்டது.

க. ஆகூழாற்றோன்றுமசைவின்மைகைப்பொருள்
போகூழாற்றோன்றுமடி.

Perseverance* comes from a prosperous fate, and idleness from an adverse fate.† - - - - - - - 371

பரி. ஒருவனுக்குக்கைப்பொருளாதற்குக்காரணமாகியவூழான்முயற்சியுண்டாம். அஃதழிதற்குக்காரணமாகியவூழான்மடியுண்டாமென்றவாறு.

வி. ஆகூழ்போகூழென்னும்வினைத்தொகைகளெதிர்காலத்தான்விதிக்கப்பட்டுக்காரணப்பொருளவாய்நின்றன. அசைவுமடி. பொருளினாக்கவழிவுகட்குத்துணைக்காரணமாய முயற்சிமடிகளையுந்தானே தோன்றுவிக்குமென்பதுகருத்து.

பு. ஆகூழால்-(ஒருவனுக்குக்கைப்பொருள்) ஆதற்குக்காரணமாகியவிதியினாலே, தோன்றுமசைவின்மை-முயற்சியுண்டாகும், கைப்பொருள்போகூழால் - அதுஅழிதற்குக்காரணமாகியவிதியினாலே,தோன்றுமடி-சோம்பலுண்டாகும்,எ-று.

வி. ஆகூழ்போகூழ்என்னும் வினைத்தொகைச்சொற்கள், இங்கேயெதிர்காலம்பற்றிக்காரணப்பொருட்டாய்நின்றன. அசைவுசோம்பல். பொருளின்விருத்திக்குங்கேட்டிற்குந்துணைக்காரணமாகிய முயற்சியையுஞ்சோம்புதலையுந்தானேதோன்றச்செய்யுமென்பதுகருத்து.

உ. பேதைப்படுக்குமிழவூழறிவகற்று
மாகலூழுற்றக்கடை.

An adverse fate produces folly, and a prosperous fate produces enlarged knowledge.‡ - - - - - - - 372

பரி. ஒருவனுக்கெல்லாவறிவுமுளவாயினுங்கைப்பொருளிழத்தற்கேதுவாகிய ஊழ்வந்துற்றவிடத்தவனைப்பேதையாக்குமினியவனறிவுசுருங்கியிருப்பினுங்கைப்பொருளாதற்கேதுவாகிய ஊழ்வந்துற்றவிடத்ததனை விரிக்குமென்றவாறு.

---

* Immoveability ; a perseverance which cannot be moved from its purpose.

† Lit. Perseverance springs from a fate which confers wealth, and idleness from a fate which destroys the property in hand.

‡ Lit. A destroying fate produces folly, and an enriching fate enlarges knowledge, wherever they are found.

வி. கைப்பொருளென்பததிகாரத்தான்வந்தது. இழவூழாகலூழென்பனவிரண்டும்வேற்றுமைத்தொகை. உற்றக்கடையென்பதுமுன்னுங்கூட்டப்பட்டது. இயற்கையாளுயவறிவையும்வேறுபடுக்குமென்பதாம்.

பு. இழவூழ்-(ஒருவனுக்குஎல்லாவறிவுகளுமுண்டாயிருப்பினுங்கைப்பொருள்) இழந்துபோவதற்குஏதுவாகியவூழ்வந்தடுத்தபோது, பேதைப்படுக்கும்-அவனைப்பேதையாகச்செய்யும், ஆகலூழுற்றக்கடை-(கைப்பொருள்)விருத்தியாதற்குஏதுவாகியவிதிவந்தடுத்தபோது, அறிவகற்றும்-அவனறிவுசுருங்கியிருந்தாலும் அந்தவறிவைவிரியச்செய்யும், எ-று.

வி. கைப்பொருளென்பது அதிகாரத்தால்வந்தது. இழவூழ்ஆகலூழ் என்பனவிரண்டும்வேற்றுமைத்தொகை. உற்றக்கடைஎன்பதை இழவூழென்பதனோடுங்கூட்டுக. இயற்கையறிவையும்வேறுபடுக்குமென்பதுகருத்து.

௩. நுண்ணியநூல்பலகற்பினுமற்றுந்தன்
னுண்மையறிவேமிகும்.

Although (a man) may study the most polished treatises, the knowledge* which fate has decreed to him will still prevail.† 373

பரி. பேதைப்படுக்குமூழுடையானொருவனுண்ணியபொருள்களையுணர்த்துநூல் பலவற்றையுங்கற்றானாயினுமவனுக்குப்பின்னுந்தன்னூழினாகிய பேதைமையுணர்வேமேற்படுமென்றவாறு.

வி. பொருளினுண்மைநாவின் மேலேற்றப்பட்டது. மேற்படுதல் கல்வியறிவைப்பின்னிரங்குதற்காக்கிச்செயலுக்குத்தான்முற்படுதல். காதன்மிக்குழிக்கற்றவுங்கைகொடாவாதல்கண்ணகத்தஞ்சனம்போலுமாவென்பதுஉமது. செயற்கையானாகியவறிவையுங்கீழ்ப்படுத்துமென்பதாம்.

பு. நுண்ணியநூல்பலகற்பினும்-(அறிவில்லாதவனாகச்செய்யும்விதிவந்தடுத்தவொருவன்) நுட்பமாகியபொருள்களைத்தெரிவிக்கின்றபலசாத்திரங்களையுங்கற்றிருப்பானாயினும், மற்றும்-பின்னும், தன்னுண்மையறிவேமிகும்-தன்விதியினாலாகியபேதைமையறிவேமேற்பட்டுநிற்கும், எ-று.

---

* Or rather, the ignorance.

† *i. e.* He will still be a fool, if he is fated to be a fool!

வி. பொருளினது நுட்பத்தை நுண்ணியநூலெனநூலின் மேலேற்றப்பட்டது. மேற்படுதல் கல்வியறிவைப்பின்புநினைத்து இரங்குதற்பொருட்டுவைத்துச்செயலுக்கு விதியறிவுமுற்படுவது. காதன்மிக்குழிக்கற்றவுங்கைகொடா வாதல்கண்ணகத்தஞ்சனம்போலுமால்என்பதுமஃது. இதன்பொருள், ஆசைமிகுந்தவிடத்தில் ஒருவன்கற்றிருந்தசாத்திரங்களுமவன்வழிவிலங்கிவிழும்போது அவனைக்கைதூக்கிவிடாவென்பதுயாதுபோலுமெனின், கண்ணுக்குஉத்திரம்வந்தபோது அழகுசெய்தற்பொருட்டு அடுத்திருந்த அஞ்சனத்தைப்போலுமென்றவாறு. இனிக்கண்ணுக்குவெளிப்படாதபொருள்களைவெளிப்படுத்துதற்குப்போட்டஅஞ்சனந்தெளிவாகக்காட்டுவதுபோலுமெனினும் அமையும். செயற்கையாலாகிய அறிவையுங்கீழ்ப்படுத்துமென்பதுகருத்து.

௪. இருவேறுலகத்தியற்கைதிருவேறு
தெள்ளியராதலும்வேறு.

There are (through fate) two different natures* in the world; hence the difference (observable in men) in (their acquisition of) wealth, and in their attainment of knowledge.† - - 374

பரி. உலகத்தூழினையவியற்கையிரண்டுகூறுகலாற்செல்வமுடையராதலும்வேறு அறிவுடையராதலும்வேறென்றவாறு.

வி. செல்வத்தினைப்படைத்தலுங்காத்தலும்பயன்கோடலுமறிவுடையார்க்கல்லதியலாவன்றேயவ்வாறன்றியறிவுடையார்வறியராகவுமேனையார்செல்வராகவுங்காண்டலானறிவுடையார்க்காகுமூழ்செல்வமுடையார்க்காகாது செல்வமுடையார்க்காகுமூழறிவுடையார்க்காகாதுஎன்பதாயிற்று. ஆகவேசெல்வஞ்செய்யுங்காலறிவாகியதுணைக்காரணமும்வேண்டாவென்பதுபெற்றும்.

பு. உலகத்தியற்கையிருவேறு-உலகத்திலேவிதியினாலாகிய இயற்கையிரண்டுபேதம், (ஆனதினாலே) திருவேறு - செல்வமுடையவராவதும்வேறு, தெள்ளியராதலும்வேறு- அறிவுடையவராவதும்வேறு, எ-று.

* இயல்பு, nature; peculiar property.

† *i. e.* Some receive from fate the power of acquiring wealth, and others the power of acquiring knowledge.

வி. செல்வத்தைப்படைப்பதுங்காப்பதும்பயனைக்கொள்வதும்அறிவுடையவர்க்கேயன்றிக்கூடாதாயிருக்க, அதுமாறிஅறிவுடையவர்தரித்திரராகவும் மற்றையவர் செல்வமுடையவராகவுங்காண்பதினாலே, அறிவுடையவர்க்கு ஆகும்விதிசெல்வமுடையவர்க்கு ஆகாது, செல்வமுடையவர்க்கு ஆகும்விதிஅறிவுடையவர்க்கு ஆகாதுஎன்பதாயிற்று. ஆகவேசெல்வமுண்டாங்காலத்து அறிவாகியதுணைக்காரணமும்வேண்டாவென்பது பெறப்பட்டது.

௫. நல்லவையெல்லாந்தீயவாந்தீயவு
நல்லவாஞ்செல்வஞ்செயற்கு.

In the acquisition of property, every thing favourable becomes unfavourable, and (on the other hand) every thing unfavourable becomes favourable, (through the power of fate). - - 375

பரி. செல்வத்தையாக்குதற்குநல்லவையெல்லாந்தீயவாயழிக்குமதுவேயன்றித்தீயவைதாமுநல்லவாயாக்குமூழ்வயத்தானென்றவாறு.

வி. நல்லவைதீயவையென்பனகாலமுமிடனுங்கருவியுந்தொழிலுமுதலியவற்றை. ஊழானென்பததிகாரத்தாற்பெற்றும். அழிக்குமூழுற்றவழிக்காலமுதலியநல்லவாயினுமழியுமாக்குமூழுற்றவழியவை தீயவாயினுமாமென்பதாயிற்று. ஆகவேகாலமுதலியதுணைக்காரணங்களையும்வேறுபடுக்குமென்பதுபெற்றும்.

பு. செல்வஞ்செயற்கு-செல்வத்தையுண்டாக்குதற்கு, நல்லவையெல்லாந்தீயவாம் - நன்மையுடையனவாயினவெல்லாந்தீமையுடையனவாம், (அதுவன்றி) தீயவுநல்லவாம்-தீமையுடையனவுநன்மையுடையனவாகும்விதியால், எ-று.

வி. காலம்,இடம்,கருவி,தொழில், முதலியவை,இங்கேநல்லவைதீயவையென்றுசொல்லப்பட்டவை. விதியாலென்பதுஅதிகாரத்தாற்பெறப்பட்டது. அழிக்கும் விதியடுத்தபோது காலமுதலியவைநல்லவையாயினும் தீயனவாயழிக்கும், ஆக்கும்விதிவந்தடுத்தபோது அவைதீயனவாயினுநல்லவையாக்குமென்பதாயிற்று.ஆகவேகாலமுதலியதுணைக்காரணங்களையும்விதிவேறுபடுக்குமென்பதுபெறப்பட்டது.

௬. பரியினுமாகாவாம்பாலல்லவுய்த்துச்
சொரியினும்போகாதம.

Whatever is not conferred by fate cannot be preserved, although it be guarded with most painful care ; and that, which fate has made his, cannot be lost, although one should even take it and throw it away. - - - - - - - - - - 376

பரி. தமக்கூழல்லாதபொருள்கள்வருந்திக்காப்பினுந்தம்மிடத்துநில்லாவாமூழாற்றமவாயபொருள்கள்புறத்தேகொண்டுபோய்ச்சொரிந்தாலுந்தம்மைவிட்டுப்போகாவென்றவாறு.

வி. பொருள்களினிலையும்போக்குமூழினானவதல்லதுகாப்பிகழ்ச்சிகளானாகாவென்பதாம். இவையாறுபாட்டானும்பொருட்குக்காரணமாயவூழினதுவலிகூறப்பட்டது.

பு. பாலல்ல-(தமக்கு) விதியல்லாதபொருள்கள், பரியினும்-வருத்தப்பட்டுக்காத்தாலும், ஆகாவாம்-தம்மிடத்துநில்லாவாம், தம- (விதியினாலே) தமக்குரியனவாகியபொருள்கள், உய்த்து-புறத்திலேகொண்டுபோய், சொரியினும்-கொட்டிப்போட்டாலும், போகா-தம்மைவிட்டுநீங்காவாம், எ-று.

வி. பொருள்களின்நிலையும் நீக்கமும்விதியினாலாவதன்றிக் காத்தல்காவாமைகளாலே ஆகாவென்பதாம். இவையாறுபாட்டாலும் பொருளுக்குக்காரணமாகியவிதியினது வலிமைகூறப்பட்டது.

௭. வகுத்தான்வகுத்தவகையல்லாற்கோடி
தொகுத்தார்க்குந்துய்த்தலரிது.

Even those who gather together millions will only enjoy them, as it has been determined by the disposer (of all things). 377

பரி. ஐம்பொறிகளானுகரப்படும்பொருள்கள்கோடியைமுயன்றுதொகுத்தார்க்குந்தெய்வம்வகுத்தவகையானல்லதுநுகர்தலுண்டாகாதென்றவாறு.

வி. ஒருயிர்செய்தவினையின்பயன்பிறிதோருயிரின்கட்செல்லாமலவ்வுயிர்க்கேவகுத்தலின்வகுத்தானென்றார். இசைத்தலுமுரியவேறிடத்தானவென்பதனானுயர்திணையாயிற்று. படையாதார்க்கேயன்றிப் படைத்தார்க்குமென்றமையானும்மையெச்சவும்மை. வேறுமுயற்சிகளாற் பொருள்களைப்படைத்தலல்லது நுகர்தலாகாததற்கூழ்வேண்டுமென்பதாயிற்று.

பு. கோடிதொகுத்தார்க்கும்-(பஞ்சேந்திரியங்களாலநுபவிக்கப்படும்பொருள்கள்) கோடியளவாகமுயற்சிசெய்துசேர்த்துவைத்தவர்க்கும், வகுத்தான்-தெய்வம், வகுத்தவகையல்லால்-அமைத்தபடியல்லது, துய்த்தலரிது-அநுபவித்தலரிதாம், எ-று.

வி. ஒருயிர்செய்தவினையின்பயன் மற்றோருயிரினிடத்திலேசெல்லாமல் அந்தவுயிர்க்கேயமைத்தலால் வகுத்தான்என்றார். இசைத்தலுமுரியவேறிடத்தான என்னுஞ்சூத்திரத்தாலுயர்திணையாயிற்று. படையாதார்க்கேயன்றிப்படைத்தார்க்குமெனவருதலால் உம்மை யெச்சவும்மை. வேறுவேறுமுயற்சிகளாலேபொருள்களைப்பெருக்குவதல்லது அநுபவிக்கக்கூடாது அதற்குவிதிவேண்டுமென்பதுகருத்து.

அ. துறப்பார்மற்றுப்புரவில்லாருறற்பால
ஊட்டாகழியுமெனின்.

The destitute will renounce desire (and become ascetics), if (fate) do not make them suffer the hindrances to which they are liable, and they pass away. * - - - - - - - 378

பரி. வறுமையானுகர்ச்சியில்லாதார் துறக்குங்கருத்துடையராவருழ்களுறற்பாலவாய துன்பங்களையுறுவியாதொழியுமாயினென்றவாறு.

வி. துறப்பாரொன்பதாரீற்றெதிர்காலமுற்றுச்சொல். தம்மால்விடப்படுவனதாமேவிடப்பெற்றுவைத்துங்கருத்துவேறுபாட்டாற்றுன்பமுறுகின்றதாழின்வலியானென்பதெஞ்சிநிற்றலின் மன்னொழிபிசைக்கண்வந்தது.

பு. துப்புரவில்லார்-(தரித்திரத்திறைலே) அநுபவித்தற்கு உணவுமுதலாயினவில்லாதவர், துறப்பார்-(தவசைமேற்கொண்டு) இருவகைப்பற்றுக்களையும் நீக்குங்கருத்துடையவராவர், உறற்பால-அடையக்கிடந்தனவாகிய துன்பங்களை, ஊட்டாகழியுமெனின்-விதிகள் அடைவியாமலொழியுமாயின், எ-று.

வி. துறப்பார்என்பது முற்றுவினைச்சொல். தம்மாலேநீக்

---

* *i. e.* Even beggars, though entirely destitute, will not renounce desire, except fate remove the hindrances which prevent them.

கப்படுபவைதாமே நீங்கப்பெற்றிருந்தும் நினைப்புவேறுபாட்டிஞலே துன்பப்படுகிறது விதியின்பலத்திஞலென்பதுகுறைந்துநிற்பதிஞலே மன்என்பது ஒழியிசைப்பொருளிலே வந்த இடைச்சொல்.

கூ. நன்றுங்கானல்லவாக்காண்பவரன்றுங்கா
லல்லற்படுவதெவன்.

How is it that those, who are pleased* with good fortune, trouble themselves when evil comes, (since both are equally the decree of fate)? - - - - - - - - - - 379

பரி. நல்வினைவிளையுங்காலதன்விளைவாயவின்பங்களைத்துடைக்குந்திறனுடாதிவைநல்லவென்றியைந்தநுபவிப்பாரோனைத்திவினைவிளையுங்காலதன்விளைவாயதுன்பங்களையுமவ்வாறநுபவியாதுதுடைக்குந்திறனுடியல்லலுழப்பதென்கருதியென்றவாறு.

வி. தாமேமுன்செய்துகொண்டமையாலூட்டாதுகழியாமையாலுமிரண்டுமியைந்தநுபவிக்கற்பாலவற்றுளொன்றற்கியைந்தநுபவித்தேனையதற்கதுசெய்யாதுவருந்துதலறிவன்றென்பதாம். இவைமூன்றுபாட்டானுமின்பதுன்பங்கட்குக்காரணமாயவூழின்வலிகூறப்பட்டது.

பு. நன்றுங்கால்-நல்வினையுண்டாங்காலத்தில், நல்லவாக்காண்பவர் - (அதிஞலுண்டாகியஇன்பங்களைப்போக்கும் வகைதேடாமலே) இவைநல்லனவென்றுபொருந்தியநுபவிப்பவர், அன்றுங்கால்-மற்றத்தீவினையுண்டாங்காலத்தில், அல்லற்படுவதெவன்-(அதிஞலுண்டாகிய துன்பங்களையுமப்படியேயநுபவியாமல் அதைப்போக்கும்வகைதேடி) துன்பப்படுவதெப்படி, எ-று.

வி. தாமேமுன்செய்துகொண்டதிஞலும் விதியூட்டாதுவிடாமையாலும் இரண்டையுங்கூட்டியேயநுபவிக்கவேண்டியவற்றுள் ஒன்றிற்கு இசைந்து ஒன்றிற்கு இசையாதுவருந்துவதுஅறிவன்றென்பதாம். இவைமூன்றுபாட்டாலும் இன்பதுன்பங்களுக்குக்காரணமாகிய விதியின்வல்லமைகூறப்பட்டது.

---

* Lit. Regard good things as good.

௰. ஊழிற்பெருவலியாவுள மற்றொன்று
சூழினுந்தான் முந்துறும்.

What is stronger than fate? If we think of an expedient (to avert it), it will itself be with us before (the thought). - 380

பரி. தன்னைவிலக்குதற்பொருட்டுத்தனக்குமறுதலையாவதோருபாயத்தைச் சூழினுந்தானவ்வுபாயமேயாயினும்பிறிதொன்றாயினுமவ்வழியாகவந்தச்சூழ்ச்சியின்முறபட்டுநிற்குமதனாலூழ்போலமிக்கவலியுடையனயாவையுளவென்றவாறு.

வி. பெருவலியாகுபெயர். சூழ்தல்பலருடனும்பழுதறவெண்ணல். செய்தற்கேயன்றிச்சூழ்தற்குமவதிகொடாதென்றமையினும்மையெச்சவும்மை. எல்லாம்வழியாகவருதலுடைமையின்ஊழேவலியென்பதாம். இதனாலிவ்விருவகையூழின்வலியும்பொதுவாகக்கூறப்பட்டது.

பு. மற்றொன்றுசூழினும்-(அதைவிலக்கும்பொருட்டு)அதற்குவிரோதமானவொரு உபாயத்தை எண்ணினாலும், தான் முந்துறும்-தானந்தஉபாயமாகவேயாயினுமற்றொன்றினாலேயாயினும்வந்து அந்த எண்ணத்தின்முற்பட்டுநிற்கும், (ஆதலால்) ஊழிற்பெருவலி-விதியைப்போலேமிகுந்தவல்லமையுடையவை, யாவுள-எவையுண்டு, எ-று.

வி. பெருவலியுடையவற்றைப்பெருவலியென்றது, ஆகுபெயர். சூழல், உயர்ந்தோருடனிருந்துகுற்றமறவெண்ணுதல். செயற்குஅன்றிஎண்ணுதற்குஞ் சமயங்கொடாது எனப்பொருள்படுதலால்உம்மை,எச்சவும்மை. எல்லாந்தனக்குவழியாகவே வருந்தன்மையுடையது ஆதலால் விதியேவலியுடையதென்பதாம். இதினால் இவ்விருவகைவிதியின் வல்லமையுமொருமித்துக்கூறப்பட்டது.

ஆகக்கவி-௩௱௮௰-அறப்பால்முற்றிற்று.

பொருட்பால்.

OF PROPERTY.

பரி. இனியில்லறத்தின்வழிப்படுவனவாயபொருளின்பங்களுளிருமையும்பயப்பதாயபொருள்கூறுவானெடுத்துக்கொண்டாரதுதன்றுணைக்காரணமாயவரசனீதிகூறவேயடங்கும். அரசனீதியாவனகாவலைநடாத்துமுறைமை. அதனை அரசியலங்கவியலொழிபியலெனமூவகைப்படுத்துமலர்தலையுலகிற்குயிரெனச் சிறந்தவரசியலிருபத்தைந்ததிகாரத்தாற் கூறுவான்றொடங்கி முதற்கணிறைமாட்சிகூறுகின்றார்.

பு. இனியில்லறத்தின்பிற்படுவனவாகியபொருளின்பங்களுளிம்மைமறுமையிரண்டையுந்தருவதாகியபொருளைக்கூறும் பொருட்டுத்தொடங்கினார். இப்பொருள் அதன் துணைக்காரணமாகிய அரசனீதிகூறவேயதனுளடங்கும். அரசனீதியாவன, பாதுகாத்தலைநடத்தும்முறைமை. அதைஅரசியல், அங்கவியல், ஒழிபியல்எனமூன்றுபிரிவாக்கிஉலகிற்குஉயிர்போற்சிறந்த அரசியலையிருபத்தைந்து அதிகாரத்தாற் சொல்லத்தொடங்கிமுன்னே இறைமாட்சிகூறுகின்றார்.

The Hindoos divide all possible human attainments into the four parts of, அறம் Virtue, பொருள் Property, இன்பம் Sexual enjoyment, and வீடு Liberation, or Heavenly bliss.* This last Tiruvalluvar says is indescribable, and that therefore he does not attempt to describe it. It is indeed indescribable, for it means absorption into the Deity, when the consciousness of the individual would be swallowed up in the mind of God, just as a river is absorbed into and lost in the sea. It is a destruction, and not an existence; a negation, and therefore not to be described. The other three parts, or rather the duties which relate to these, Tiruvalluvar has undertaken to describe in this work. Under the head of அறம், virtue, he has shown the duties of *married life*, and of *ascetic life*. Under the head of பொருள், property, he now describes the

---

* அறம்பொருளின்பம்வீடு, or in Sankskrit, தர்மார்த்தகாமமோட்சம்.

duties of *civil life.* These are arranged under the three divisions of அரசியல், the duties of a *King*; அங்கவியல், the duties and characteristics of the different *Members* of the state; and ஒழிபியல், or a *Supplementary* part. The division is awkward. The அங்கவியல், section on the state, may be again divided into six parts, under which he treats of அமைச்சு, the ministers of the king; நாடு, the country; அரண், fortifications; பொருள்செயல்வகை, the mode of acquiring wealth; படை, the army; and நட்பு, friendship. The ஒழிபியல், supplementary part, takes up those duties which are not included in the other divisions.

அரசியல்.

THE DUTIES OF A KING.*

௩௯. அதிகாரம். CHAPTER XXXIX.

இறைமாட்சி. ON KINGLY EXCELLENCE.†

பரி. அஃதாவதவனது நற்குணநற்செய்கைகள். உலகபாலருருவாய்நின்றுலகங்காத்தலினிறையென்றார்.

பு. இறைமாட்சி-அதாவது, அரசனது நற்குணநற்செய்கைகள். இறைவன் அரசனுருவாய்நின்று உலகத்தைக்காப்பதினாலேயவனை இறையென்றார்.

க. படைகுடிகூழமைச்சுநட்பரணாறு
முடையானரசருளேறு.

He who possesses these six things, an army, a people, wealth, ministers, friends, and a fortress, is a lion among kings. - 381

---

* The reason assigned for treating, under the title of "King," of duties which are incumbent also on others, is that they are especially incumbent on him. This remark will also apply to other divisions of the work.

† The Virtues which constitute the true greatness of a king.

பரி. படையுங்குடியுங்கூழுமமைச்சுநட்புமரணுமென்று சொல்லப்பட்டவா றங்கங்களையுமுடையவனரசருளேறு போல்வானென்றவாறு.

வி. ஈண்டுக்குடியென்றததனையுடையநாட்டினை.கூழென்றததற்கேதுவாய பொருளை. அமைச்சுநாடரண்பொருள்படைநட்பென்பதேமுறையாயினுமீ ண்டுச்செய்யுளுக்கேற்பிறழவைத்தார்.ஆறுமுடையானென்றதனுலிவற்றுளொ ன்றில்வழியுமரசனீதிசெல்லாதென்பதுபெற்றும்-வடநூலாரிவற்றிற்கங்கமென ப்பெயர்கொடுத்ததுமதுநோக்கி. ஏறென்பதுபசாரவழக்கு.இதனுரைசற்கங் கமாவனவிவையென்பதூஉமிவைமூற்றுமுடைமையேயவன் வெற்றிக்கேதுவென் பதூஉங்கூறப்பட்டது.

பு. படைகுடிகூழமைச்சுநட்பரணுறும்-சேனையுங்குடியுந் தனதானியங்களும் மந்திரியும்இருவகைச்சுற்றமும்கோட்டையும்ஆகியஆறுவகையங்கமும், உடையானரசருளேறு-உடையவன் அரசர்களாகியயானைகளுக்குள்ளேதானொருசிங்கத்தைப் போல்வான், எ-று.

வி. இங்கேகுடியென்றது, குடிகளையுடையநாட்டினை. கூழென்றது,தானியத்தையும்அதற்குஏதுவாகியபொருளையும். அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு, என்பதே வரிசைக்கிரமமாயினும் இங்கேமுறைபிறழச்சொன்னது பாட்டைக்குறித்து. ஆறுமுடையவன்ஏறெனவேஇவற்றுளொன்றில்லாதகாலத்தும்அரசனீதிசெல்லாதென்பதுபெறப்பட்டது. வடநூலார்இவற்றிற்குஅங்கமெனப்பெயர்கொடுத்ததும் ஒன்றுகுறையினும்நீதிநடவாதென்பது நோக்கியேயெனக்காண்க. இதிஞலேஅரசனுக்குஅங்கமாவனவிவையென்பதும் இவ்வாறங்கமும்அவன்வெற்றிக்குஏதுவென்பதுங்கூறப்பட்டது.

உ. அஞ்சாமையீகையறிவூக்கமிந்நான்கு
மெஞ்சாமைவேந்தற்கியல்பு.

Never to fail in these four things, fearlessness, liberality, wisdom, and energy, this is the kingly character. - - 382

பரி. அரசனுக்கியல்பாவது திண்மையுங்கொடையுமறிவுமூக்கமுமென்னுமி ந்நான்குகுணமுமிடைவிடாதுநிற்றலென்றவாறு.

வி. ஊக்கம்வினைசெய்தற்கண்மனவெழுச்சி. இவற்றுளறிவாறங்கத்திற்குமுரி த்துஈகைபடைக்குரித்து.ஏனையவினைக்குரிய.உயிர்க்குணங்களொன்றுதோன்ற

வேனையவடங்கிவருமவற்றுளிவையடங்கினரசற்குக்கெடுவனபலவாமாகலினிவை யெப்பொழுதுந்தோன்றிநிற்றலியல்பாகவேண்டுமென்பாரெஞ்சாமைவேந்தற் கியல்பென்றார்.

பு. வேந்தற்கியல்பு-அரசனுக்குஇயல்பாவது, அஞ்சாமை-திண்மையென்னும்வீரமும், ஈகை-கொடையும், அறிவு-விவேகமும், ஊக்கம்-தைரியமும், இந்நான்கும்-ஆகியஇந்தநான்கு குணங்களும், எஞ்சாமை-குறைபடாதுநிற்பனவாம்,எ-று.

வி. ஊக்கம்வினைசெய்தலில்விரியுமனவெழுச்சி. இவற்றுள் அறிவுஆறங்கத்திற்குமுரியது. ஈகைசேனைக்குரியது. மற்றையவை வினைக்குரியவை. உயிரின்குணங்கள் ஒன்றுதலையெடுக்க மற்றையவையடங்கிநிற்கும். ஆதலால்அரசனுக்குஇவையடங்கிநின்றாற்கெடுதிபலவாமென்று நினைத்து இவையெப்பொழுதுந்தலையெடுத்துநிற்பதே இயல்பாகவேண்டுமென்றுசொல்லவந்தவர் எஞ்சாமைவேந்தற்கியல்பென்றார்.

௩. தூங்காமைகல்விதுணிவுடைமையிம்மூன்று
நீங்காநிலனாள்பவர்க்கு.

Vigilance,* learning and bravery, these three things, should never be absent from the ruler of a country. - - 383

பரி. நிலத்தினையாளுந்திருவுடையார்க்கக்காரியங்களில்விரைவுடைமையும வையறிதற்கேற்றகல்வியுடைமையுமாண்மையுடைமையுமாகியவிம்மூன்றுகுண முமொருகாலுநீங்காவென்றவாறு.

வி. கல்வியதுகூறுபாடுமுன்னர்க்கூறப்படும்.ஆண்மையாவதொன்றனையும் பாராதுகடிதிற்செய்வதாகலினஃதீண்டுபசாரவழக்காற்றுணிவெனப்பட்டது. உம்மைஇறந்ததுதழீஇயவெச்சவும்மை. இவற்றுட்கல்வியாறங்கத்திற்குமுரித்து.ஏனையவினைக்குரிய.நீங்காவென்பதற்குமேலெஞ்சாமைக்குரைத்தாங்குரைக்க.

பு. நிலனாள்பவர்க்கு-பூமியையாளுஞ்செல்வமுடையவர்க்கு,(அந்தக்காரியங்களிலே)தூங்காமை-தாமசப்பட்டிராமையும், கல்வி-(அவற்றையறிதற்குப்பொருந்திய) கல்வியறிவும், துணிவுடைமை-ஆண்மையுடைமையும், இம்மூன்றும் - ஆகிய

* தூங்காமை, sleeplessness.

இந்தமூன்றுகுணங்களும், நீங்கா-(ஒருபோதும்) நீங்கிநில்லாவாம், எ-று.

வி. கல்வியின்கூறுபாடுபின்புகூறப்படும். ஆண்மையாவது ஒன்றையும்பாராமல் விரைந்துசெய்வது ஆதலால் அதையிங்கேயுபசாரவழக்காகத் துணிவுடைமையெனப்பட்டது. மேற்சொல்லிய குணங்களன்றியுமெனநிற்பதிறாலே இம்மூன்றுமென்றமுற்றும்மை இறந்ததுதழுவிநின்ற எச்சவும்மையுமாயிற்று. இவற்றுட்கல்வியறிவு ஆறங்கத்திற்குமுரியது. மற்றையவை வினைசெயற்குரியவை. நீங்காஎன்பதற்குமேலே எஞ்சாமையென்பதற்குச்சொன்னபடிசொல்லிக்கொள்க.

> ௪. அறனிழுக்காதல்லவைநீக்கிமறனிழுக்கா
> மானமுடையதரசு.

He is a king who, with manly modesty, swerves not from virtue, and refrains from vice.* - - - - - - 384

பரி. தனக்கோதியவறத்தின்வழுவாதொழுகியறனல்லவைதன்னாட்டின்கண்ணுநிகழாமற்கடிந்துவீரத்தின்வழுவாததாழ்வின்மையினையுடையானரசனென்றவாறு.

வி. அவ்வறமாவது-ஓதல்வேட்டலீதலென்னும்பொதுத்தொழிலினும் படைக்கலம்பயிற்றல்,பல்லுயிரோம்பல்,பகைத்திறந்தெறுதலென்னுஞ்சிறப்புத்தொழிலினும்வழுவாதுநிற்றல். மாண்டவறநெறிமுதற்றேயரசன்கொற்றமென்பதனாலிவ்வறம்பொருட்குக்காரணமாதலறிக. அல்லவைகொலைகளவுமுதலாயின. குற்றமாயமானத்தினீங்குதற்குமறனிழுக்காமானமென்றார். அஃதாவது,வீறின்மையின்விலங்காமெனமதவேழமுமெறியான்,எறுண்டவர்நிகராயினும்பிறர்க்கிலென்றெறியான், மாறின்மையின்மறம்வாடுமென்றிளையாரையுமெறியான், ஆறன்மையின்முதியாரையுமெறியானயிலுழவன்.எனவும்—"அழியுநர்புறக்கொடையயில்வேலோச்சான்"—எனவுஞ்சொல்லப்படுவதுஅரசுஅரசனதுதன்மை.அஃதுபசாரவழக்காலவன்றன்மேனின்றது.

பு. அறனிழுக்காது-தனக்குச்சொன்ன தருமந்தப்பாமல் நடந்து, அல்லவைநீக்கி-தருமமல்லாதபாவங்கள் தன்தேசத்திலடிவையாமலேநீக்கி, மறனிழுக்கா-வீரத்திலேதப்பாத, மானமுடையது-பெருமையுடையவன், அரசு-அரசனும், எ-று.

---

* அல்லவைநீக்கி, puts away sinful deeds.

வி. அந்தத்தருமமாவது, வேதமோதல்,வேள்விசெய்தல்,ஈதல், என்கின்றபொதுத்தொழிலும்,ஆயுதப்பயிற்சி,பல்லுயிர்காத்தல்,பகைவரைத்துணித்தல்என்னுஞ்சிறப்புத்தொழிலுந்தப்பாதுநிற்பது. அறநெறிமுதற்றேயரசன்கொற்றம் என்னுஞ்சூத்திரத்தால் தருமம்பொருளுக்குக்காரணமாவதறிக. அல்லவை கொலைகளவுமுதலாயின. குற்றமாகியமானத்திலே நின்றுநீங்குதற்குமறனிழுக்காமானமென்றார்.அதாவது(கலிவிருத்தம்) வீறின்மையின் விலங்காமெனமதவேழமுமெறியான், ஏறுண்டவர்நிகராயினும் பிறர்மிச்சிலென்றெறியான், மாறின்மையின் மறம்வாடுமென்றிளையாரையுமெறியான்,ஆறன்மையின் முதியாரையுமெறியானயிலுழவன்-எம்,அழியுநர்புறக்கொடையயில்வேலோச்சான் எம்,சொல்லப்படுவது. அரசு, அரசனதுதன்மை.அதுஉபசாரவழக்காகஅவன்மேல்நின்றது.

௫. இயற்றலுமீட்டலுங்காத்தலுங்காத்த
வகுத்தலும்வல்லதரசு.

He is a king who is able to acquire (wealth), to lay it up, to guard, and to distribute it. - - - - - - 385

பரி. தனக்குப்பொருள்கள்வரும்வழிகளைமேன்மேலுளவாக்கலுமங்ஙனம்வந்தவற்றையொருவழித்தொகுத்தலுந்தொகுத்தவற்றைப்பிறர்கொள்ளாமற்காத்தலுங்காத்தவற்றையறம்பொருளின்பங்களின்பொருட்டுவிடுத்தலும்வல்லவனரசனென்றவாறு.

வி. ஈட்டல்காத்தல்வகுத்தலென்றவற்றிற்கேற்பவியற்றலென்பதனைச்செயப்படுபொருளாகவருவிக்கப்பட்டது. பொருள்களாவனமணிபொன்னென்முதலாயின. அவைவரும்வழிகளாவன. பகைவரையழித்தலுந்திறைகோடலுந்தன்னூடுதலையளித்தலுமுதலாயின. பிறவொன்றதுபகைவர்களவர்கூற்றத்தார்வினைசெய்வார்முதலாயினர்.கடவுளரந்தணர்வறியோரென்றியர்கட்குப்புகழ்க்குங்கொடுத்தலையறப்பொருட்டாகவும்யானைகுதிரைபடைநாடரணென்றிவற்றிற்கும்பகையோடுகூடவிற்பிரிக்கப்படுவார்க்குந்தன்னிற்பிரிதலிற்கூட்டப்படுவார்க்குங்கொடுத்தலைப்பொருட்பொருட்டாகவுமண்டபம்வாவிசெய்குன்றிளமரக்காமுதலியசெய்தற்குமைம்புலன்களானுகர்வனவற்றிற்குங்கொடுத்தலையின்பப்பொருட்டாகவுங்கொள்க. இயற்றன்முதலியதவறுமற்செய்தலரிதாகலின்வல்லதென்றார். இவைநான்குபாட்டானுமாட்சியேகூறப்பட்டது.

பு. இயற்றலும் - (பொருள்வரும்வழிகளை) மேன்மேலுமு

ண்டுபண்ணுதலும், ஈட்டலும்-(அப்படிச்செய்ததினால்வந்த) பொருள்களையோரிடத்திற் சேர்த்துவைத்தலும், காத்தலும்-அப்படிச்சேர்த்துவைத்தவற்றைப் பிறர்கொண்டுபோகாமற் பாதுகாத்தலும்,காத்த-அப்படிப்பாதுகாத்தபொருள்களை, வகுத்தலும் - அறம்பொருளின்பங்களின்பொருட்டுச்செலவு செய்தலும், வல்லதரசு-வல்லவன் அரசன், எ-று.

வி. ஈட்டல், காத்தல், வகுத்தல், என்றவற்றிற்குப்பொருந்த இயற்றலென்பதற்குச்செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. பொருள்களாவன, மணி, பொன், நெல்முதலாயின. அவைவரும்வழிகளாவன, பகைவரையழித்தலும்திறைகொள்ளுதலும் (திறை,கப்பம்) தன்நாட்டைப்பாதுகாத்தலும்முதலாயின. பிறர், பகைவர், கள்வர், சுற்றத்தார், வினைசெய்வார் முதலாயினோர். தேவர் வேதியர் தரித்திரர் என்பவர்க்கும் புகழினுக்குங்கொடுப்பதைத்தருமத்தின்பொருட்டாகவும், யானை குதிரை சேனை நாடு அரண் என்பனவற்றிற்கும்பகையோடுகூடாமற் பிரிக்கப்படுவார்க்கும் தன்னைவிட்டு நீங்காமற்கூட்டப்படுவார்க்குங்கொடுப்பதைஅர்த்தத்தின்பொருட்டாகவும், மண்டபம்தடாகம் செயற்கைமலை பூஞ்சோலைமுதலியவற்றிற்கும் ஐம்புலன்களாலநுபவிப்பதற்குங்கொடுப்பதைக்காமத்தின்பொருட்டாகவுங்கொள்க. இந்த இயற்றல்முதலாயினவற்றைத்தவறாமற்செய்தல்அரிதாதலால்வல்லதரசென்றார். இவை நான்குபாட்டாலும் இறைமாட்சியேசொல்லப்பட்டது.

௬. காட்சிக்கெளியன்கடுஞ்சொல்லனல்லனேன்
மீக்கூறுமன்னனிலம்.

The whole world will exalt the country of the king who is easy of access, and whose words are without harshness. - - 386

பரி. முறைவேண்டினார்க்குங்குறைவேண்டினார்க்குங்காண்டற்கெளியனுயாவர்மாட்டுங்கடுஞ்சொல்லனல்லனுமாயினம்மன்னனது நிலத்தை யெல்லாநிலங்களினுமுயர்த்திக்கூறுமுலகமென்றவாறு.

வி. முறைவேண்டினார்வலியரானலிவெய்தினார். குறைவேண்டினார்வறுமை

யுத்திரந்தார். காண்டற்கெளிமையாவது பெரியவத்தாணிக்கணத்தணர்சான்றோருள்ளிட்டாரொடு செவ்வியுடையனாயிருத்தல். கடுஞ்சொல்கேள்வியினும்வினையினுங்கடியவாயசொல். நிலத்தைமீக்கூறுமெனவேமன்னனைமீக்கூறுதல் சொல்லவேண்டாவாயிற்று. மீக்கூறுதலிவன்காக்கின்றநாடுபசிபிணிபகைமுதலியவின்றியாவர்க்கும் பேரின்பந்தருதலிற்றேவருலகினுநன்றென்றல். உலகமென்னுமெழுவாய்வருவிக்கப்பட்டது.

பு. காட்சிக்கெளியன்-(முறையிடவந்தவர்க்கும் தமதுகுறைசொல்லவந்தவர்க்கும்)எளிதாகக்காணத்தக்கவனாகி, கடுஞ்சொல்லனல்லனேல்-எல்லாரிடத்துங்கடுஞ்சொற்சொல்லாதவனுமாயின், மன்னனிலம்-அந்தஅரசனுடையபூமியை, மீக்கூறும்-எல்லாப்பூமிகளிலும்உயர்வாகச்சொல்லும்உலகம், எ-று.

வி. முறையிடவந்தவர், வலியோராலேவருத்தப்பட்டுவந்தவர். குறைசொல்லவந்தவர், வறுமையாலிரக்கவந்தவர். காண்பதற்கு எளியவனாவது, சமயமுண்டாகயாவருங்காணவெளிப்பட்டிருத்தல். கடுஞ்சொல்,கேள்வியினுந்தொழிலினும்வருங்கடுமையாகியசொல். நிலத்தைமீக்கூறுமெனவேயவ்வரசனையுயர்த்திச்சொல்லுதல் சொல்லவேண்டாதாயிற்று. மீக்கூறுதல், இவனாளுகின்றநிலமானது பசிபிணி பகைமுதலாயினவையின்றியெல்லார்க்கும்பெரிய இன்பத்தைத்தருவதினாலே தேவருலகினும் நன்றென்றுசொல்லுதல். உலகமென்றஎழுவாய்வருவிக்கப்பட்டது.

எ. இன்சொலாலீத்தளிக்கவல்லார்க்குத்தன்சொலாற்
றான்கண்டனைத்திவ்வுலகு.

The world will praise and submit itself to the mind of the king who is able to give with affability, and to protect all who come to him. - - - - - - - - - - - 387

பரி. இனியசொல்லுடனேயீதலைச்செய்தளிக்கவல்லவரசனுக்கிவ்வுலகந்தன்புகழோடுமேவித்தான்கருதியவளவிற்றாமென்றவாறு.

வி. இன்சொல்கேள்வியினும்வினையினுமினியவாயசொல். ஈதல்வேண்டுவோர்க்குவேண்டுவனகொடுத்தல். அளித்தறன்பரிவாரத்தானும்பகைவரானுந்நலிவுபடாமற்காத்தல். இவையரியவாகலின்வல்லார்க்கென்றுமவன்மண்முழுதுமாரு

மாகவினிவ்வுலகென்றுங்கூறினார்.கருதியவளவிற்றருதல்கருதியபொருள்களெல்லாஞ்சுரத்தல்.

பு. இன்சொலால்-இனியசொல்லுடனே, ஈத்து-வேண்டியவற்றைக்கொடுத்து, அளிக்கவல்லாற்கு-பாதுகாக்கவல்லஅரசனுக்கு, இவ்வுலகு-இந்தஉலகமானது, தன்சொல்லால்-தன்புகழோடுபொருந்தி, தான்கண்டனைத்து - தான்நினைத்த அளவினையுடையதாம், எ-று.

வி. இன்சொல், கேள்வியிலுந் தொழிலிலுமின்பந்தருஞ்சொல். அளித்தல், தன்பரிவாரங்களாலும்பகைவராலும்வருத்தப்படாமற்பாதுகாத்தல். இவையரியனவாதலால் வல்லாற்கென்றும் அவன்பூமிமுழுமையும் ஆள்வானாதலால் இவ்வுலகென்றுங்கூறினார். நினைத்தஅளவினையுடையதாவது நினைத்தபொருள்களெல்லாஞ் சுரந்துநிற்பது. சுரத்தல், தருதல்.

அ. முறைசெய்துகாப்பாற்றுமன்னவன்மக்கட்
கிறையென்றுவைக்கப்படும்.

That king, will be esteemed a God among men, who performs his own duties, and protects (his subjects). - - - 388

பரி. தான்முறைசெய்து பிறர்நலியாமற்காத்தலையுஞ்செய்யுமரசன்பிறப்பான்மகனேயாயினுஞ் செயலான்மக்கட்குக்கடவுளென்றுவேறுவைக்கப்படுமென்றவாறு.

வி. முறையறநூலுநீதிநூலுஞ் சொல்லுநெறி.பிறரென்றதுமேற்சொல்லியாரை.வேறுவைத்தல்மக்களிற்பிரித்துயர்த்திவைத்தல்.

பு. முறைசெய்து - நீதியைச்செய்து, காப்பாற்றுமன்னவன்-பிறர்வருந்தாமற்காப்பாற்றுதலையுஞ்செய்யும்அரசன், மக்கட்கிறையென்றுவைக்கப்படும் - (பிறப்பினாலேமானிடனேயாயினுஞ்செயலினாலே) மானிடர்க்குக்கடவுளென்றுவேறாகவைக்கப்படுவான், எ-று.

வி. முறை, தருமசாத்திரமும் நீதிசாத்திரமுஞ் சொல்லப்பட்டநெறி. பிறர்என்றது, மேற்சொல்லப்பட்டவரை. வேறாகவைத்தல், மனிதரிற்பிரித்துஉயர்வாகவைத்தல்.

௯. செவிகைப்பச்சொற்பொறுக்கும்பண்புடைவேந்தன்
கவிகைக்கீழ்த்தங்குமுலகு.

The whole world will dwell under the umbrella of the king, who can bear words that embitter the ear. - - - 389

பரி. இடிக்குந்துணையாயினார்சொற்களைத்தன்செவிபொறாதாகவுமவ்விளைவு நோக்கிப்பொறுக்கும்பண்புடையவரசன்குடைநிழற்கண்ணேதங்குமுலகமென்றவாறு.

வி. செவிகைப்பவென்றதற்கேற்பவிடிக்குந்துணையென்பதுவருவிக்கப்பட்டது. நாவின்புலத்தைச்செவிமேலேற்றிக்கைப்பவென்றார். பண்புடைமைவிசேடவுணர்வினனாதல். அறநீதிகளாற்றவறாமையின் மண்முழுதுந்தானேயாளுமென்பதாம்.

பு. செவிகைப்ப-தன்செவிபொறுக்கக்கூடாதாகவும்,சொற்பொறுக்கும்பண்புடையாளன் - உறுதிகூறுவோர்சொற்களைக் காரியத்தைக்குறித்துப்பொறுக்கின்றநற்குணமுடைய அரசனது, கவிகைக்கீழ்த்தங்குமுலகு-குடைநிழலின்கீழேதரித்து நிற்குமுலகம், எ-று.

வி. செவிகைப்பவென்றதற்குப்பொருந்த உறுதிகூறுவோரென்பதுவருவிக்கப்பட்டது. நாவின்அறிவைச்செவிமேலேற்றிக்கைப்பவென்றார். அதனாற் செவிபொறுக்கக்கூடாதாகவெனப்பட்டது. பண்புடைமை, நற்குணநற்செயல்களும்விசேடஅறிவுமுடையவனாதல். தருமநீதிகளிலே தவறாததினாலே பூமிமுழுவதுந்தானேயாளுவானென்பதாம்.

௰. கொடையளிசெங்கோல்குடியோம்பனான்கு
முடையானாம்வேந்தர்க்கொளி.

He is the light of kings who has these four things, beneficence, benevolence, rectitude, and care for his people. - - 390

பரி. வேண்டுவார்க்குவேண்டுவனகொடுத்தலும்யாவர்மாட்டுந்தலையளிசெய்தலுமுறைசெய்தலுந்தளர்ந்தகுடிகளைப்பேணலுமாகியவிந்நான்குசெயலையுமுடையவன்வேந்தர்க்கெல்லாம்விளக்காமென்றவாறு.

வி. தலையளிமுகமலர்ந்தினியகூறல். செவ்வியகோல்போறலிற்செங்கோலெனப்பட்டது. குடியோம்பலெனவெடுத்துக்கூறினமையாற்றளாச்சிபெற்றாம். அஃதாவதாறிலொன்றுபொருடன்னையும்வறுமைநீங்கியவழிக்கொள்ளவேண்டி

னவ்வாறுகோடலுமிழக்கவேண்டிவிழத்தலுமாம். சாதிமுழுவதும்விளக்கலான் விளக்கென்றார். ஒளியாகுபெயர். இவையைந்தாபாட்டானுமாட்சியும்பயனுமுடன்கூறப்பட்டது.

பு கொடை-வேண்டுவார்க்குவேண்டியவற்றைக்கொடுத்தலும், அளி-(யாவரிடத்தும்) அன்புசெய்தலும், செங்கோல்-நீதிசெய்தலும், குடியோம்பல்-மெலிந்தகுடிகளைப்பாதுகாத்தலும், நான்கும்-ஆகியஇந்தநான்குசெயல்களையும், உடையான்வேந்தர்க்கொளியாம் - உடையவன் அரசர்க்கெல்லாம்விளக்காம், எ-று.

வி. நீதி, செவ்வியகோல். கோல்போன்றிருத்தலால் செங்கோலெனப்பட்டது. பொதுமையிற்குடியோம்புதலாயிருக்கவும்குடியோம்பலெனவெடுத்துச்சொன்னதினாலே மெலிந்தகுடியென்பதுபெறப்பட்டது. அக்குடியையோம்புதலாவது, அம்மெலிவுதீருமளவுந்தன்வரி ஆறிலொன்றையுந்தள்ளியதன்மேலும் உதவிசெய்தல். அரசர்சாதிமுழுதையும் அவன்விளங்கச்செய்வதினாலேவிளக்கென்றார். ஒளி ஆகுபெயர். இவையைந்துபாட்டானும்இறைமாட்சியும் பயனுமுடன்கூறப்பட்டன.

௪௰. அதிகாரம். CHAPTER XL.

கல்வி. ON LEARNING.

அஃதாவது, அவ்வரசன்றன்னாற்கற்றற்குரிய நூல்களைக்கற்றல். அவையாவன, அறநூலுநீதிநூலும்யானைகுதிரைதேர்படைக்கலமென்றிவற்றினூல்களுமுதலாயின அரசனறிவுடையனாய்க்கற்றறன்னுயிர்க்கேயன்றிமன்னுயிர்க்கும்பயன்படுதலானிக்கியஃதரசியலுள்வைக்கப்பட்டதாயினும் யாவர்க்குமுறுசிபயத்தற்சிறப்புடைமையிற்பொதுப்படக்கூறுகின்றார் மேற்றாங்காமை கல்வியெனத்தோற்றுவாய் செய்தமாட்சியைவிரித்துக்கூறுகின்றமையினிஃதிறைமாட்சியின்பின்வைக்கப்பட்டது.

அதாவது, அந்தஅரசன்தன்னாலே கற்கவேண்டியநூல்களைக்கற்றல். அவையாவன, தருமசாத்திரமும்நீதிசாத்திரமும்

யானையேற்றம்குதிரையேற்றம்தேரூர்தல் ஆயுதப்பயிற்சிஎன் றிவற்றின்சாத்திரங்களுமுதலாயின. அரசன் அறிவுடையவனா கிக்கற்பது,தன்னுயிர்க்கேயன்றி மன்னுயிர்க்கும்பயன்படுத லைக்குறித்து. இது அரசியலுள்ளேவைக்கப்பட்டதாயினும்எல் லார்க்கும் நன்மைதருஞ்சிறப்புடைமையாற் பொதுப்படக்கூ றுகின்றார். மேலேதாங்காமைகல்விஎனத்தோற்றுவாய்செய்த மாட்சியைவிரித்துச்சொல்வதனாலேயிது இறைமாட்சியின்பின் வைக்கப்பட்டது.

க. கற்ககசடறக்கற்பவைகற்றபி
னிற்கவதற்குத்தக.

Let a man learn thoroughly* whatever he may learn, and let his conduct be worthy of his learning.† - - - - 391

பரி. ஒருவன்கற்கப்படுநூல்களைப்பழுதறக்கற்கவங்ஙனங்கற்றா லக்கல்விக்குத்தகவவைசொல்லுகின்றநெறிக்கண்ணேநிற்கவென்றவாறு.

வி. கற்பவையென்றதனானறம்பொருள்வீடென்னு முறுதிப்பொருளுணர்த்துவனவன்றிப்பிறபொருளுணர்த்துவனசின்னாட்பல்பிணிச்சிற்றறிவினர்க்காகா தென்பது பெற்றாம். கசடறக்கற்றலாவதுவிபரீதவையங்களைநீக்கிமெய்ப்பொருளைநல்லோர்பலருடனும்பலகாலும்பயிறல். நிற்றலாவதில்வாழ்வுழிக்கருமமுமுள்படாபோகமுந்துவ்வாதருமமுந்தக்கார்க்கேசெய்தலினுந்துறந்துழித்தவத்தான்மெய்யுணர்ந்தவாவறுத்தலினும்வழுவாமை. சிறப்புடையமகற்காயிற்கற்றல்வேண்டுமென்பதூஉமவனாற்கற்கப்படுநூல்களுமவற்றைக்கற்குமாறுங்கற்றதனாற்பயனுமிதனாற்கூறப்பட்டன.

பு. கற்பவை-ஒருவன்கற்கப்படும் நூல்களை, கசடறக்கற்க-குற்றமறக்கற்கக்கடவது,கற்றபின்-அப்படிக்கற்றுக்கொண்ட பின்பு, அதற்குத்தகநிற்க-அந்தக்கல்வியறிவிற்குப்பொருந்த அவைசொல்லுகின்றவழியிலேநிற்கக்கடவது, எ-று.

வி. கற்பவையென்றதினால்அறம்பொருள்வீடென்னும்உறுதிப்பொருளையுணர்த்துவனவேயன்றிவேறுபொருளுணர்த்து நூல்கள்சில்வாழ்நாட்பல் பிணிச்சிற்றறிவினர்க்கு ஆகாதென்

---

* கசடற, without fault; accurately; perfectly.

† Literally. After having learnt let him abide in such (a course of conduct) as shall become it.

பதுபெறப்பட்டது. கசடறக்கற்பதாவது, விபரீதத்தையுஞ் சந்தேகத்தையுநீக்கி மெய்ப்பொருளை நல்லோர்பலருடன் கூடிப்பலகாலும்பழகுதல். நிற்றலாவது, இல்லறத்திலிருந்த போதுமுயற்சிசெய்து இன்பத்தையநுபவித்துநல்லோர்க்கே தருமஞ்செய்தலிலும், துறவறத்தில்வந்தபோது தவசினாலே மெய்ப்பொருளையுணர்ந்து ஆசையையறுத்தலிலும், குற்றம்வ ராமலேநிலைநிற்பது. சிறந்தவனுக்குக் கல்விவேண்டுமென்ப தும் அவனாலேகற்கப்படுகின்றசாத்திரங்களும் அவற்றைக்கற் கும்விதமுங்கற்றதனாற்பயனும் இதனாற்சொல்லப்பட்டன.

௨. எண்ணென்பவேனையெழுத்தென்பவிவ்விரண்டுங்
கண்ணென்பவாழுமுயிர்க்கு.

Letters and numbers are the two eyes of man.* - - 392

பரி. அறியாதாரெண்ணென்றுசொல்லுவனவுமற்றையெழுத்தென்றுசொல்லுவனவுமாகியகலையிரண்டினையுமறிந்தார்சிறப்புடையுயிர்கட்குக்கண்ணென்றுசொல்லுவரென்றவாறு.

வி. எண்ணென்பதுகணிதமதுகருவியுஞ்செய்கையுமெனவிருவகைப்படுமவை யேரம்பமுதலியநூல்களுட்காண்க. எழுத்தெனவேயதனோடொற்றுமையுடையசொல்லுமடங்கிற்று. இவ்விருதிறமுமறமுதற்பொருளைக்காண்டற்குக் கருவியாகலிற்கண்ணெனப்பட்டன. அவைகருவியாதல், ஆதிமுதலொழியவல்லாதனவெண்ணினீதிவழுவாநிலை மையவான்மாதேயமாம்பொருளின் பம்வீ டென்றிவற்றின்றிறமாமோவெண்ணிறந்தாற்செப்பு.

எழுத்தறியத்தீருமிழிதகைமைதீர்ந்தான்மொழித்திறத்தின்முட்டறுப்பானாகுமொழித்திறத்தின்முட்டறுத்தநல்லோன்மறைநூற்பொருளுணர்ந்துகட்டறுத்துவீடுபெறும்.

இவற்குனறிக. என்பவென்பவற்றுண்முன்னையவஃறிணைப்பன்மைப்பெயர்பின்னையதுயர்திணைப்பன்மைவினை. அறியாதாரறிந்தாரென்பனவருவிக்கப்பட்டன. சிறப்புடையுயிரென்றதுமக்களுயிருள்ளுமுணர்வுமிகுதியுடையதனை. இதனாற்கற்கப்படுநூல்கட்குக்கருவியாவனவுமவற்றதின்றியமையாமையுங் கூறப்பட்டன.

பு. எண்ணென்ப - (ஆய்ந்துணராதார்)கணக்கென்றுசொல்வனவும்,ஏனையெழுத்தென்ப-மற்றையெழுத்தென்றுசொல்

* Lit. These two things are the eye of man.

வனவும், இவ்விரண்டும்-ஆகியஇந்தவிரண்டுசாத்திரங்களையும், வாழுமுயிர்க்கு - (ஆய்ந்துணர்ந்தோர்) வாழ்க்கைச்சிறப்புடையுயிர்களுக்கு, கண்ணென்ப-இரண்டுகண்ணென்றுசொல்லுவர், எ-று.

வி. எண்ணென்பது,சோதிடம்.அதுகருவியுஞ்செய்கையும் எனவிருவகைப்படும். அவற்றை ஏரம்பமுதலியநூல்களிற்காண்க. எழுத்தெனவேஅதனோடொருமைப்பாடுடையசொல்லுமடங்கிற்று. இந்த இருவகையுந்தருமமுதலாகிய பொருள்களைக் காண்பதற்குக்காரணமாதலாற் கண்ணென்று சொல்லப்பட்டன.அவைகாரணமாதலை, ஆதிமுதலொழியவல்லாதனவெண்ணிவீதிவழுவாநிலைமையவான்-மாதே - யறமாம்பொருளின்பம் வீடென்றிவற்றின்-றிறமாமோவெண்ணிறந்தாற்செப்பு.எம். எழுத்தறியத்தீருமிழிதகைமைதீர்ந்தான்- மொழித்திறத்தின் முட்டறுப்பானாகும்மொழித்திறத்தின்-முட்டறுத்தநல்லோன் முதனூற்பொருளுணர்ந்து கட்டறுத்துவீடுபெறும். எம்- வருமிவற்றாலுணர்க. என்பஎன்றுசொல்லப்பட்டமூன்றினுள் முன்னிரண்டும் அஃறிணைப்பன்மைப்பெயர்கள். பின்னையது உயர்திணைப்பன்மைவினை. சிறப்புடையுயிரொன்றது, மனிதருயிருள்ளும் உணர்வுமிகுந்திருந்ததை. இதிறுமேலகற்கப்படும் நூல்களுக்குக்காரணமாவனவும் அவையில்லாமற்கூடாதென்பதுங்கூறப்பட்டன.

௩. கண்ணுடையரென்பவர்கற்றோர்முகத்திரண்டு
புண்ணுடையர்கல்லாதவர்.

The learned are said to have eyes, but the unlearned have (merely) two sores* in their face. - - - - - - 393

பரி. கண்ணுடையரென்றுயர்த்துச்சொல்லப்படுவார்கற்றவரே. மற்றைக்கல்லாதவர்முகத்தின்கணிரண்டுபுண்ணுடையர்கண்ணிவரொன்றவாறு.

வி. தெய்வமிடையிட்டவற்றையுங்காலமிடையிட்டவற்றையுங்காணுஞானக்கண்ணுடைமையிற்கற்றாரைக்கண்ணுடையரென்றுமஃதின்றிநோய்முதலியவற்

* புண், an ulcer.

ருற்றுன்பஞ்செய்யுமூனக்கண்ணேயுடைமையிற்கல்லாதவரைப்புண்ணுடைய ரொன்றுங்கூறினார். மேற்கண்ணன்மையுணரநின்றவூன்கண்ணின்மெய்மைகூறியவாற்றாற்பொருணூல்களையுங்கருவிநூல்களையுங்கற்றாருயர்வுங்கல்லாதாரிழிவுமிதனாற்றொகுத்துக்கூறப்பட்டன.

பு. கண்ணுடையரென்பவர்கற்றோர்-கண்ணுடையவரென்றுயர்த்திச்சொல்லப்பட்டவர்கற்றவரோ, கல்லாதவர் முகத்திரண்டுபுண்ணுடையர் - மற்றைக்கல்லாதவர் முகத்தினிடத்திலிரண்டுபுண்ணுடையவரோகண்ணிலர், எ-று.

வி. எல்லாவிடங்களிலுமெல்லாக்காலங்களிலுமுள்ளனவற்றையுங்காண்கின்றஞானக்கண்ணுடைத்தாயிருத்தலாற்கற்றவரைக்கண்ணுடையரென்றும், அந்தக்கண்ணில்லாமலேநோய்முதலியவைகளாலேதுன்பப்படுகிற ஊனக்கண்ணேயுடைத்தாயிருத்தலாற் கல்லாதவரைப்புண்ணுடையரென்றுஞ்சொன்னார். மேலேகண்ணல்லாத,தன்மைதெரியநின்ற ஊனக்கண்ணினது உண்மைகூறியவிதத்தினாலே அருத்தசாத்திரங்களையுங் கருவிநூல்களையுங்கற்றவருடையவுயர்வுங்கல்லாதவருடையஇழிவுமிதனாலேசொல்லப்பட்டன.

ச. உவப்பத்தலைக்கூடியுள்ளப்பிரிதல்
லனைத்தேபுலவர்தொழில்.

It is the part* of the learned to give joy to those whom they meet, and on leaving, to make them think (oh, when shall we meet them again). - - - - - - 394

பரி. யாவரையுமவருவக்குமாறுதலைப்பெய்து இனியிவரையாமெங்ஙனங்கூடுதுமெனநினையுமாறு நீங்குதலாகியவத்தன்மைத்துகற்றறிந்தாரதுதொழிலென்றவாறு.

வி. தாம்நல்வழியொழுகல்பிறர்க்குறுதிகூறலென்பனவிரண்டுந்தொழிலெனவொன்றுயடங்குதலின்த்தன்மைத்தென்றார். அத்தன்மையப்பயனைத்தருந்தன்மை. நல்லவொழுக்கங்காண்டலாலுமதுரமுமுறுதியுமாயகூற்றுகணிகழ்வெதி

* தொழில், work.

ர்வுகளிலின்பம்பயத்தலானுங்கற்றார்மாட்டெல்லாருமன்புடையராவரென்பதாம். இதனாற்கற்றாருயர்வுவகுத்துக்கூறப்பட்டது.

பு. உவப்ப-மகிழும்படியாக, தலைக்கூடி-யாவரையுஞ்சேர்ந்து, உள்ள-இனியிவரைநாமெவ்விடத்திற் கூடுவோமென்று நினைக்கும்படியாக, பிரிதலைத்து-பிரிவதாகியஅந்தக்குணத்தையுடையது, புலவர்தொழில்-கற்றுணராதவருடையதொழிலாம், எ-று.

வி. தாங்கள்நல்வழிச்செல்லுதலும்பிறர்க்குறுதிகூறுதலுமாகியவிரண்டுந்தொழிலெனவொன்றாகஅடங்குதலால் அத்தன்மைத்தெனஒருமையாற்கூறினார். அத்தன்மை, அந்தப்பயனைத்தருந்தன்மை. நல்லொழுக்கத்தைக்காண்பதினாலும், மதுரமும் உறுதியுமாகிய அவர்மொழிகள்நிகழ்காலத்திலுமெதிர்காலத்திலும்இன்பந்தருதலாலும், கற்றவரிடத்துயாவருமன்புடையராவாரென்பதாம். இதனாலேகற்றவருடையஉயர்வுபிரித்துக்கூறப்பட்டது.

ரு. உடையார்முன்னில்லார்போலேக்கற்றுங்கற்றார்
கடையரேகல்லாதவர்.

The unlearned are inferior to the learned, before whom they stand begging, as the destitute before the wealthy. - 395

பரி. பிற்றைநிலைமுனியாதுகற்றனன்றுதலான்மேற்றலையாயினார் செல்வர்முன்னல்கூர்ந்தார்நிற்குமாறுபோலத்தம்மாசிரியர்முன்னேக்கற்றுநின்றுங்கற்றார்நிலைக்குநாணிக்கல்லாதவரொஞ்ஞான்றுமிழிந்தாரேயாவரென்றவாறு.

வி. உடையாரில்லாரென்பனவுலகவழக்கு. ஏக்கறுதலாசையாற்றாழ்தல். கடையரென்றதனைதன்மறுதலைப்பெயர்வருவிக்கப்பட்டது. பொய்யாயமானநோக்கிமெய்யாயகல்வியிழந்தார்பின்னொருஞான்றுமறிவுடையராகாமையிற்கடையரேயென்றார். இதனாற்கற்றாருயர்வுங்கல்லாதாரதிழிவுங்கூறப்பட்டன.

பு. உடையார்முன்-செல்வர்முன், இல்லார்போல்-வறுமையாளர்நிற்பதுபோல், ஏக்கற்றும்-(தமக்குஆசிரியராயினார்முன்) ஏக்கற்றுநின்றும், விருப்பமுடையராய்த்தாழ்ந்துநின்றும், கற்றார்-கற்றவர்தலையாயினார், கடையரேகல்லாதவர் - அ

ந்தநிலைக்குநாணிக்கல்லாதவரெப்போதுமிழிந்தோரேயாவர், எ-று.

வி. உடையார் இல்லாரென்பன, உலகவழக்கு. ஏக்கறுதல், ஆசையாற்றாழ்தல். கடையரென்றதனால் அதன்மறுதலைப்பெயரும், முன்என்றதனால் நின்றென்பதும், வருவிக்கப்பட்டன. பொய்யாகியமானத்தைக்குறித்து மெய்யாகியகல்வியையிழந்தவர்பின்னொருகாலத்தும் அறிவுடையராகாமையால் கடையரேயென்றார், இதனாற் கற்றாரது உயர்வுங்கல்லாதவரது இழிவுங்கூறப்பட்டன.

௬. தொட்டனைத் தூறுமணற்கேணிமாந்தர்க்குக்
கற்றனைத் தூறுமறிவு.

Water will flow from a well in the sand in proportion to the depth to which it is dug, and knowledge will flow from a man in proportion to his learning. - - - - - - 396

பரி. மணலின்கட்கேணிதோண்டியவளவிற்றாகவூறுமதுபோலமக்கட்கறிவு கற்றவளவிற்றாகவூறுமென்றவாறு.

வி. ஈண்டுக்கேணியென்றது தன்கணீரை. அளவிற்றாகவென்றது தனளவுஞ்செல்லவென்றவாறு. சிறிதுகற்றதனையானமையாதுமேன்மேற்கற்றல் வேண்டுமென்பதாம். இஃதூழ்மாறுகொள்ளாவழியாகலின்மேலுண்மையறிவேமிகுமென்றதனோடுமலையாமையறிக.

பு. மணற்கேணி-மணலினிடத்திற்கேணியானது, தொட்டனைத்தூறும்-தோண்டிய அளவையுடையதாகநீரூறும், (அதுபோல) மாந்தர்க்கு-மனிதர்க்கு, கற்றனைத்தூறுமறிவு - கற்ற அளவையுடையதாக அறிவுஊறும், எ-று.

வி. அளவிற்றாகவென்றது, அக்கேணியளவுந்நிரம்பவெனக் காண்க. சிறிது கற்றமாத்திரத்தால் அமையாமல் மேன்மேற் கற்கவேண்டுமென்பதாம். இதுவிதிமாறுபடாதபோது ஆதலால் மேலேயுண்மையறிவேமிகுமென்றதனோடுமாறுகொளாமையுணர்க.

௭. யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாதவாறு.

How is it that any one can remain without learning, even until his death, when (to the learned man) every country is his own (country), and every town his own (town)? - - - 397

பரி. கற்றவனுக்குத் தன்னாடுந் தன்னூருமேயன்றி யாதானுமொரு நாடு நாடாம். யாதானுமொரூருமூராமிங்ஙனமாயி னொருவன்றானிறக்குமளவுங் கல்லாதுகழிகின்றதென் கருதியென்றவாறு.

வி. உயிரோடு சேறலிற் சாந்துணையுமென்றார். பிறநாடுமூர்களுந் தமபோலவுத் தப்பொருட்கொடையும் பூசையுமுவந்து செய்தற்கேதுவாகலிற் கல்விபோலச் சிறந்ததுபிறிதில்லையதனையே யெப்பொழுதுஞ் செய்கவென்பதாம்.

பு. யாதானும் - (கற்றவனுக்குத் தன்னாடுந் தன்னூருமேயன்றி) ஏதாகினுமோர் நாடும் ஏதாகினுமோரூரும், நாடாமாலூராமால் - தன்னாடுந் தன்னூருமாகும், (இப்படியாயின்) என்னொருவன் சாந்துணையுங் கல்லாதவாறு - ஒருவன் தானிறக்குமளவுங் கல்லாத தன்மையென், எ-று.

வி. கல்வியுயிரொடு செல்லுமாதலாற் சாந்துணையுமென்றார். ஆலிரண்டுமசைநிலையிடைச்சொற்கள். பிறநாடும் ஊர்களுந் தன்னாடுந் தன்னூரும்போலுவந்து பொருள்கொடுக்கவும் பூசிக்கவும் ஏதுகல்வியாதலால் அதுபோற்சிறந்தது வேறேயில்லை அதனையேயெப்பொழுதுங் கற்கவென்பதாம்.

௮. ஒருமைக்கட்டான்கற்றகல்வியொருவற்
கெழுமையுமேமாப்புடைத்து.

The learning, which a man has acquired in one birth, will yield him pleasure during seven births. - - - - 398

பரி. ஒருவனுக்குத் தானொருபிறப்பின்கட் கற்றகல்வி யெழுபிறப்பினுஞ் சென்றுதவுதலையுடைத்தென்றவாறு.

வி. வினைகள்போலவுயிரின்கட்கிடந்து புக்குழிப்புகுமாகலி னெழுமையுமேமாப்புடைத்தென்றார். எழுமைமேலேகூறப்பட்டது. உதவுதல் நன்னெறிக்கணுய்த்தல்.

பு. ஒருவற்குஒருமைக்கண்-ஒருவனுக்குஒருபிறப்பிலே, தான்கற்றகல்வி-தான்படித்தவித்தையானது, எழுமையும் - எழுவகைப்பிறப்பிலும், ஏமாப்புடைத்து - இன்பமாதலையுடைத்து, எ-று.

வி. வினைகளைப்போலவேயுயிரினிடத்திலே தங்கி அவ்வுயிர் போன இடத்திலேபோமாதலால் எழுமையுமேமாப்புடைத்தென்றார். எழுமையென்பது, மேலேசொல்லப்பட்டது. அக்கல்விநல்வழியிலே செலுத்துமாதலால் இன்பஞ்செய்தற்கேதுவாயிற்று.

௯. தாமின்புறுவதுலகின்புறக்கண்டு
காமுறுவர்கற்றறிந்தார்.

The learned will long (for more learning), when they see that while it gives pleasure to themselves, the world also derives pleasure from it. - - - - - - - - 399

பரி. தாமின்புறுதற்கேதுவாகியகல்விக்குலகமின்புறுதலாலச்சிறப்புநோக்கிக்கற்றறிந்தார்பின்னுமதனையேவிரும்புவரென்றவாறு.

வி. தாமின்புறுதலாவதுநிகழ்வின்கட்சொற்பொருள்களின்சுவைநுகர்வானும்புகழ்பொருள்பூசைபெறுதலானுமெதிர்விின்கணறம்வீடுபயத்தலானுமதனானிடையறாதவின்பமெய்துதல். உலகின்புறுதலாவதிம்மிக்காரொடுதலைப்பெய்தறியாதனவெல்லாமறியப்பெற்றேமென்றும்யாண்டுபலவாகநரையிலமாயினேமென்றுமுவத்தல். செல்வமாயினீட்டல்காத்தலிழத்தலென்றிவற்றாற்றுன்புறுதலும்பலரையும்பகையாக்கலுமுடைத்தெனவறிந்ததனைக்காமுறாமையிற் கற்றறிந்தாரென்றுங்கரும்பயிற்றற்குக்கூலிபோலத்தாமின்புறுதற்குலகமின்புறுதல்பிறவாற்றானின்மையினதனையேகாமுறுவரென்றுங்கூறினார்.

பு. தாமின்புறுவது-தாமின்பப்படுதற்கேதுவாகிய கல்விக்கு, உலகின்புற-உலகமுமின்பப்படுதலால், கண்டு-அந்தச்சிறப்பைநோக்கி, கற்றறிந்தார்காமுறுவர்-கற்றுணர்ந்தோர்பின்னுமந்தக்கல்வியையேவிரும்புவர், எ-று.

வி. தாமின்புறுதலாவது, நிகழ்காலத்திலே சொற்சுவை பொருட்சுவையுணர்தலாலும், புகழும்பொருளும் பூசையும் பெறுதலாலும், எதிர்காலத்திலே தருமமுத்தியைத்தருதலா

னும் இடையறாதவின்பமெய்துதல். உலகின்புறுதலாவது இப்பெரியாரோடுகூடியறியாதனவெல்லாமறியப்பெற்றோமென்றும் வருடம்பலவாகநரையிலமாயினோமென்றும், மகிழ்தல். செல்வமானால் பொருளைக்கூட்டுவதுகாப்பது இழந்துபோவது என்னுமிவற்றினாலே துன்பப்படுவதும் பலரையும்பகைப்பதும் உண்டென்று அறிந்து அதைவிரும்பாமையாய்க் கற்றறிந்தாரொன்றும் கரும்புதினற்குக்கூலிபோலத்தாமின்புறுதற்கு உலகமின்புறுதல் மற்றொருவிதத்திலுமில்லாததினாலே அதனையேகாமுறுவரென்றுங்கூறினார்.

௪௱. கேடில்விழுச்செலவங்கல்வியொருவற்கு
மாடல்லமற்றையவை.

Learning is the true* imperishable riches; all other things† are not riches. - - - - - - - - - 400

பரி. ஒருவனுக்கழிவில்லாதசிரியசெல்வமாவதுகல்வியஃதொழிந்தமணியும் பொன்னுமுதலாயினசெல்வமல்லவென்றவாறு.

வி. அழிவின்மையாவதுதாயத்தார்கள்வர்வலியாரரசரென்றிவராற்கொள்ளப்படாமையும்வழிப்பட்டார்க்குக்கொடுத்துழிக்குறையாமையுமாம். சீர்மை தக்கார்கண்ணே நிற்றல். மணிபொன்முதலியவற்றிற்கிவ்விரண்டுமின்மையினதனைமாடல்ல வென்றாரிவையைத்துபாட்டானுங்கல்வியதுசிறப்புக்கூறப்பட்டது.

பு. ஒருவற்கு-ஒருவனுக்கு, கேடில்-அழிவில்லாத, விழுச்செல்வங்கல்வி-சிறந்தசெல்வமாவதுகல்வியாம், மற்றையவை-அதுதவிர்ந்தபொன்னுமணியும்முதலானவை, மாடல்ல-செல்வமல்ல, எ-று.

வி. அழிவில்லாமையாவது, தாயாதிகள்,கள்வர், வலியார், அரசர், என்றிவர்களாலே கொள்ளப்படாமையும், வழிபாடுசெய்தவர்க்குக்கொடுத்தபோது குறைபடாமையுமாம். சிறப்பு நல்லோரிடத்திலேயேநிற்பது.மணிபொன்முதலியவற்றிற்கு இவ்விரண்டுமில்லாததினாலே அதைமாடல்லவென்றார். இவையைந்துபாட்டானுங் கல்வியின் சிறப்புக்கூறப்பட்டது.

---

* விழு, excellent.

† Such as jewels, gold &c.

௪௧. அதிகாரம். CHAPTER XLI.

கல்லாமை. ON THE NEGLECT OF LEARNING.

பரி. அஃதாவதுகற்றலைச்செய்யாமை. என்றதனாயவிழிபினை. கல்விச் சிறப்புமேல்விதிமுகத்தாற்கூறியதுணையான்முற்றுப்பெறுமைநோக்கியெதிர்ம றைமுகத்தானுங்கூறுகின்றதாகலினிதுகல்வியின்பின்வைக்கப்பட்டது.

அதாவது, நூல்களைக்கற்பது செய்யாமை. கல்விச்சிறப்பு மேல்விதிமுகத்தாற் கூறியமாத்திரத்தால் முற்றுப்பெறுமை யால் அதைக்குறித்து எதிர்மறைமுகத்தாலுங்கூறுகின்றாராக லின் இதுகல்வியின் பின்வைக்கப்பட்டது. விதி உடன்பாடு.

௧. அரங்கின்றிவட்டாடியற்றேநிரம்பிய
நூலின்றிக்கோட்டிகொளல்.

To speak in an assembly (of the learned) without fullness of knowledge,* is like playing at chess (on a board) without squares. - - - - - - - - - 401

பரி. அரங்கினையிழையாதுவட்டாடினாற்போலுந்தாநிரம்புதற்கேதுவாகிய நூல்களைக்கல்லாதொருவனவையின்கணொன்றனைச்சொல்லுதலென்றவாறு.

வி. அரங்குவகுத்ததானம். வட்டாடலுண்டையுருட்டல். இவைகட்டளை யன்னவிட்டரங்கிழைத்துக்கல்லாச்சிறார்நெல்லிட்டாடுமென்பதனானுமறிக. நிரம்புதலறியவேண்டுவனவெல்லாமறிதல். கோட்டியென்பதீண்டாகுபெயர். புல்லாவெழுத்திற்பொருளில்வறுங்கோட்டியென்புழிப்போலச்சொல்லும்பொ ருளுநெறிப்படாதென்பதாம்.

பு. அரங்கின்றி-வீடில்லாமல், வட்டாடியற்று-சூதாடினது போலும், நிரம்பியநூலின்றி-தான்குறைதீர்தற்கேதுவாகிய நூல்களைக்கல்லாமல், கோட்டிகொளல் - ஒருவன்சவையிலே யொன்றைச்சொல்வது, எ-று.

---

* *நிரம்பியநூலின்றி*, without (the previous study of) works full (of knowledge).

வி. அரங்கு, சூதாடுதற்குவகுத்தஅறை. வட்டு, சூதாடுகருவி, நிரம்புதல், அறியவேண்டுவனவெல்லாமறிதல். கோட்டி அவை, அது இங்கேயாகுபெயராய் அதனிடத்துநிகழுந்தொழிலின்மேல்நின்றது. புல்லாவெழுத்திற்பொருளில்வழுங்கோட்டியெனப்பிறர்கூறுதலுங்காண்க. சொல்லும்பொருளும்நெறிப்பட்டு நில்லாதென்பதாம்.

௨. கல்லாதான்சொற்காமுறுதன்முலையிரண்டு
மில்லாதாள்பெண்காமுற்றற்று.

The desire of the unlearned to speak (in an assembly), is like a woman without breasts desiring (the enjoyment of) womanhood.* - - - - - - - - - 402

பரி. கல்வியில்லாதானொருவனவையின்கணொன்றுசொல்லுதலையவாவுதலியல்பாகமுலையிரண்டுமில்லாதாளொருத்திபெண்மையையவாவினாற்போலுமென்றவாறு.

வி. இனைத்தென்றறிந்தசினையாகலிற்றொகையோடுமுற்றும்மைகொடுத்தார். சிறிதுமில்லாதாளென்பதாம். அவாவியவழிக்கடைபோகாதுபோகினுநகைவிளைக்குமென்றவாறு.

பு. கல்லாதான்-கல்வியில்லாதவொருவன், சொற்காமுறுதல் - சவையிலே யொன்றுசொல்லவிரும்புதல், முலையிரண்டுமில்லாதாள்-இயல்பாகவேதனங்களிரண்டுமில்லாதவொருத்தி, பெண்காமுற்றற்று-பெண்ணின்றன்மையைவிரும்பினதுபோலும், எ-று.

வி. சிறிதுமில்லாதவளென்று சொல்லவந்தவர் முலையிரண்டுமில்லாதாளென்றார். விரும்பினபோது உண்டாகமாட்டாது, ஒருவேளையுண்டாயினுமது நகைப்பினுக்கு இடமாம். கற்றவரைப்போலாகக்கல்லாதவன் விரும்புவது பேதைப்ப

* Or rather, to desire (to listen to) the words of an unlearned man, is like desiring the womanhood of one without breasts.

ருவத்தாள் மங்கைப்பருவத்தாளாக விரும்புவதுபோலுமெ
ன்றவாறாயிற்று.

௩. கல்லாதவருநனிநல்லர்கற்றார்முற்
சொல்லாதிருக்கப்பெறின்.

The unlearned also are very excellent men ; if they know how to keep silence* before the learned. - - - - 403

பரி. கல்லாதாருமிகநல்லராவர்தாமேதம்மையறிந்துகற்றாரவையின்கணொ
ன்றனையுஞ்சொல்லாதிருத்தல்கூடுமாயினென்றவாறு.

வி. உம்மையிழிவுசிறப்பும்மை. தன்மைத்தாமறியாமையினதுகூடாதென்
பார்பெறினென்றுங்கூடினுணடுத்தம்மைவெளிப்படுத்தாமையாலும்பின்கல்வி
யைவிரும்புவராகலானுநனிநல்லரென்றுங்கூறினார். இவைமூன்றுபாட்டாலு
ங்கல்லாதாரவைக்கட்சொல்லுதற்குரியரன்மைகூறப்பட்டது.

பு. கல்லாதவருநனிநல்லர்-கல்வியில்லாதவரும் மிகநல்லவ
ராவார், கற்றார்முற்சொல்லாதிருக்கப்பெறின்-(தாமேதம்மை
யறிந்துகொண்டு) கற்றவருடையசபையிலே யொன்றையுஞ்
சொல்லாதிருக்கப்பெறுவாராயின், எ-று.

வி. கல்லாதவருமென்றவும்மை, இழிவுசிறப்பும்மை. தம்
மைத்தாமறியாமையால் அப்படியிருக்கக்கூடாதென்று சொ
ல்லவந்தவர் பெறினென்றும், கூடுமாயின் தம்மைவெளிப்ப
டுத்தாராதலாலும் பின்பு கல்வியைவிரும்புவாராதலாலும்நனி
நல்லரென்றுங்கூறினார். இவைமூன்றுபாட்டாலுங் கல்வியில்
லாதவர்கற்றவர்சபையிலே பேசுதற்குரியவரல்லரென்பதுகூ
றப்பட்டது.

௪. கல்லாதானொட்பங்கழியநன்றாயினுங்
கொள்ளாரறிவுடையார்.

Although the natural knowledge of an unlearned man may be very good, the wise will not attend† to it. - - - 404

---

* சொல்லாதிருக்கப்பெறின், if they obtain (the power) of not speaking.

† கொள்ளார், will not receive it.

பரி. கல்லாதவனதொண்மையொரோவழிமிகநன்றாயிருப்பினுமறிவுடையாரதனையொண்மையாகக்கொள்ளாரென்றவாறு.

வி. ஒண்மையறிவுடைமை. அதுநன்றாயிற்றாயினுநீர்மேலெழுத்துப்போல்வதோர்விழுக்காடாகவினிலைபெற்றநூலறிவுடையாரதனைமதியாரென்பதாம்.

பு. கல்லாதானொட்பம்-கல்வியில்லாதவனுடைய வறிவுடைமை, கழியநன்றாயினும் - (ஓரோரிடத்து) மிகநன்றாயிருப்பினும், கொள்ளாரறிவுடையார்-கற்றோரதனையறிவுடைமையாகக்கொள்ளார், எ-று.

வி. ஒண்மை, அறிவுடைமை. அதுநுண்மைநுட்பமென்றாற்போல ஒட்பமெனநின்றது, அதுநன்றாகாது ஆயினும்நீர்மேலெழுத்துப்போலாவதொருகுணமாகவின்நிலைபெற்றநூலறிவையுடையவர் அதைமதிக்கமாட்டாரென்பதாம்.

௫. கல்லாவொருவன்றகைமைதலைப்பெய்து
சொல்லாடச்சோர்வுபடும்.

'The self-conceit of an unlearned man will fade away, as soon as he speaks in an assembly* (of the learned). - - - 405

பரி. நூல்களைக்கல்லாதவொருவன்யானறிவுடையனெனத்தன்னைமதிக்குமதிப்பவற்றைக்கற்றவன்கண்டுரையாடக்கெடுமென்றவாறு.

வி. கற்றவனென்பதுவருவிக்கப்பட்டது யாதானுமோர்வார்த்தைசொல்லுந்துணையுமேநிற்பது சொல்லியவழிவழூப்படுதலினழிந்துவிடுமென்பதாம். இவையிரண்டுபாட்டானுங்கல்லாதாரதியற்கையறிவின்குற்றங்கூறப்பட்டது.

பு. கல்லாவொருவன்-நூல்களைக்கல்லாதவொருவனுடைய, தகைமை-நானறிவுடையனென்று தன்னைத்தானேமதித்திருக்கின்றமதிப்பு, தலைப்பெய்து-(கற்றவன்கண்டு) நேர்ந்து, சொல்லாட-வார்த்தைசொல்ல, சோர்வுபடும்-மறுத்துச்சொல்லநூற்பழக்கமில்லாதநிலையிலேதானேகெடும், எ-று.

வி. கற்றவனென்பது,வருவிக்கப்பட்டது. அத்தகைமைஅ

* Lit. when he meets (the learned) and speaks.

வன்யாதாகிலுமொருவார்த்தைசொல்லுமளவுமே நிற்குமென்பதாம். இவையிரண்டுபாட்டாலுங்கல்லாதவருடையஇயற்கையறிவின்குற்றங்கூறப்பட்டது.

௬. உளரென்னுமாத்திரையரல்லாற்பயவாக்
களரனையர்கல்லாதவர்.

The unlearned are like worthless barren land: all that can be said of them is, that they exist. - - - - - 406

பரி. கல்லாதவர்காணப்படுதலானில்லரல்லருளரென்றுசிலர்சொல்லுமளவினராதலன்றித்தமக்கும்பிறர்க்கும்பயன்படாமையால்விளையாதகளர்நிலத்தோடொப்பரென்றவாறு.

வி. களர்தானும்பேணற்பாடழிந்துயிர்கட்குணவுமுதவியவுதவாதுபோலத்தாமுநன்குமதிக்கற்பாடழிந்துபிறர்க்குமறிவுமுதவியவுதவாரென்பதாம்.இதனாற்கல்லாதாரதுபயன்படாமைகூறப்பட்டது.

பு. உளரென்னுமாத்திரையரல்லால்-(காணப்படுதலினாலே) கல்லாதவர் இல்லாதவரல்லர்உளரென்றுசிலர் சொல்லுமளவினரேயன்றி, பயவாக்களரனையர்கல்லாதவர்-தமக்கும்பிறர்க்கும் பயன்படாததினாலே விளைவில்லாதகளர்நிலத்தை யொப்பர்கல்லாதவர், எ-று.

வி. களர்நிலமானது தானும்பேணப்படாது, உயிர்களுக்கும்உணவுமுதலாயினவற்றையுதவாது, அதுபோலத் தாமுங் கற்றவராலே நன்குமதிக்கப்படாமல் பிறர்க்கும் அறிவுமுதலாயினவற்றையுதவமாட்டாரென்பதாம். இதனாற் கல்லாதவருடையபயன்படாததன்மைகூறப்பட்டது.

எ. நுண்மாணுழைபுலமில்லானெழினல
மண்மாண்புனைபாவையற்று.

The beauty and goodness of one who is destitute of knowledge, gained by the study* of great and exquisite works, is like (the beauty and goodness) of a painted earthen doll. - - 407

---

* நுழை, entering into; intermeddling with.

பரி. நுண்ணிதாய்மாட்சிமைப்பட்டுப்பல நூல்களினுஞ்சென்றவறிவிலாதவனுடையவெழுச்சியுமழகுஞ்சுதையான்மாட்சிமைப்படப்புனைந்த பாவையுடையவெழுச்சியுமழகும்போலுமென்றவாறு.

வி. அறிவிற்குமாட்சியாவது பொருள்களைக்கடிதிற்காண்டலுமறவாமையுமுதலாயின. பாவையாகுபெயர். உருவின்மிக்கதோருடம்புபெறுதலுமரிதாகலானெழினலங்களுமோர்பயனேயெனினுநூலறிவில்வழிச்சிறப்பிலவென்பதாம் இதனுலவர்வடிவழகாற்பயனின்மைகூறப்பட்டது.

பு. நுண்-நுண்ணிதாகி, மாண்-மாட்சிமைப்பட்டு, நுழை-எல்லாநூல்களிலுஞ்சென்ற, புலமில்லான் - அறிவில்லாதவனுடைய, எழில்-எழுச்சியும், நலம்-அழகும், மண்-சுண்ணாம்புமண்ணினாலே, மாண்-மாட்சிமைப்பட, புனை-செய்த, பாவையற்று-பாவையினுடைய எழுச்சியுமழகும்போலும், எ-று.

வி. விசேடிக்கப்பட்டஅறிவுக்குமாட்சிமையாவது,பொருள்களைச்சீக்கிரத்திற் காண்பதும் மறவாமையுமுதலாயின. பாவையின்குணங்களையுவமித்தலால்பாவை, ஆகுபெயர். அழகிலேமிகுந்ததொருஉடம்புபெறுதலும் அருமையாதலால், எழில், அழகுகளும் ஒருபிரயோசனமேயானாலும் நூலறிவில்லாதபோது சிறப்பிலவென்பதாம். இதினாலே கல்லாதவருடையவடிவுஅழகுகளாற்பயன்படாமைகூறப்பட்டது.

அ. நல்லார்கட்பட்டவறுமையினின்னாதே
கல்லார்கட்பட்டதிரு.

Wealth, gained by the unlearned, will give more sorrow than the poverty which may come upon the learned. - - - 408

பரி. கற்றார்மாட்டுநின்றவறுமையினுமின்னாதுகல்லாதார்மாட்டுநின்றசெல்வமென்றவாறு.

வி. இழிவுசிறப்பும்மைவிகாரத்தாற்றொக்கது. தத்தநிலையினன்றிமாறிநிற்றலாற்றூமிடுக்கட்படுதலுமுலகிற்குத்துன்பஞ்செய்தலுமிவண்டற்குமொக்குமாயினுந்திருக்கல்லாரைக்கெடுக்கவறுமைநல்லாரைக்கெடாதுநிற்றலான்வறுமையினுந்திருவின்னாதென்றுரிதனுலவர்திருவின்குற்றங்கூறப்பட்டது.

பு. நல்லார்கட்பட்டவறுமையின்-கற்றவரிடத்திலுண்டாகி

யதரித்திரத்தைக்காட்டிலும்,இன்னாது-இன்பமாகாது, (துன்பமாம்) கல்லார்கட்பட்டதிரு-கல்வியில்லாதவரிடத்திலுண்டாகியசெல்வம், எ-று.

வி. வறுமையினுமென்ற இழிவுசிறப்புஉம்மை, தொக்குநின்றது. தந்தம் நிலையைவிட்டுமாறிநின்றதினாலே தாந்துன்பப்படுதலும் உலகிற்குத்துன்பஞ் செய்தலுமிரண்டினுக்கும் ஒக்குமாறுனும் செல்வங்கல்லாதவனைக்கெடுக்க வறுமை நல்லானைக்கெடாதுநிற்பதினாலே வறுமையினுந் திருவின்னாதென்றார்.இதினாலேகல்லாதவர்செல்வத்தின்குற்றங்கூறப்பட்டது.

௯. மேற்பிறந்தாராயினுங்கல்லாதார்கீழ்ப்பிறந்துங்
கற்றாரனைத்திலர்பாடு.

The unlearned, though born in a high caste, are not equal in dignity to the learned, though they may have been born in a low caste.* - - - - - - - - - 409

பரி. கல்லாதாருயர்ந்தசாதிக்கட்பிறந்தாராயினுந்தாழ்ந்தசாதிக்கட்பிறந்துவைத்துங்கற்றாரதுபெருமையளவிற்றாயபெருமையிலரென்றவாறு.

வி. உடலோடொழியுஞ்சாதியுயர்ச்சியினுயிரோடுசெல்லுங்கல்வியுயர்ச்சிசிறப்புடைத்தென்பதாமிதனாலவர்சாதியுயர்ச்சியாற்பயனின்மைகூறப்பட்டது.

பு. கல்லாதார் மேற்பிறந்தாராயினும் - கல்வியில்லாதவர் உயர்ந்தகுலத்திலேபிறந்தாராலும், கீழ்ப்பிறந்தும்-தாழ்ந்தகுலத்திலே பிறந்திருந்தும், கற்றாரனைத்திலர்பாடு - கற்றவருடையபெருமையவ்வளவுபெருமையிலர், எ-று.

வி. உடலொடுஒழிந்துபோகின்றகுலத்தினுயர்வினும்உயிரோடுகூடவே நீங்காதுசெல்கின்றகல்வியுயர்வுசிறப்புடையதென்பதாம். இதினாலே கல்லாதவருடைய குலத்தின்மேன்மையாற்பயனில்லையென்பதுகூறப்பட்டது.

---

* *i. e.* Learning, not caste, gives true dignity.

௰. விலங்கொடுமக்களனையரிலங்குநூல்
கற்றாரோடேனையவர்.

As beasts by the side of men, so are other men* by the side of those who are learned in celebrated works. - - 410

பரி. விலங்கொடுநோக்கமக்களெத்துணைநன்மையுடையாரத்துணைத்தீமையுடையர்விளங்கியநூலைக்கற்றாரோடுநோக்கக்கல்லாதவரென்றவாறு.

வி. இலங்குநூலென்பனசாதியொருமைப்பெயர். விளங்குதன்மேம்படுதல். விலங்கின்மக்கட்கேற்றமாயவுணர்வுமிகுதிகாணப்படுவதுகற்றார்கண்ணேயாகவிற்கல்லாதாருமவருமொத்தபிறப்பினரல்லரென்பதாம். மயக்கநிரனிறை-இதனுலவர்மக்கட்பிறப்பாற்பயனெய்தாமைகூறப்பட்டது.

பு. விலங்கொடுமக்களனையர் - மிருகத்தொடுபார்க்கமனிதரெவ்வளவுநன்மையுடையவராவாரோ அவ்வளவுதீமையுடையவராவார், இலங்குநூல்கற்றாரோடேனையவர் - விளங்கியநூல்களைக்கற்றவரோடுநோக்கக்கல்லாதவர், எ-று.

வி. நூலென்றது, சாதியொருமை. மிருகத்தினுணர்வினும் மனிதர்க்கு உணர்வுமிகுதிகாணப்படுவது கற்றவரிடத்தேயாகலாற் கல்லாதவருங்கற்றவருமொத்தபிறப்பினரல்லரென்பதாம். விலங்கு, மக்கள், கற்றார் (கல்லார்) எனவைத்தது, மயக்கநிரனிறைப்பொருள்கோள். விலங்குமக்கள் கல்லார்கற்றார் எனச்சேர்ப்பின்முறைநிரனிறைப்பொருள்கோளாதலாலிதற்கு அதுமறுதலையெனக்காண்க. இதனாற்கல்லாதவர் பிறப்பின்பயன்படாமைகூறப்பட்டது.

---

௪௨. அதிகாரம். CHAPTER XLII.

கேள்வி. On Hearing (instruction).

பரி. அஃதாவதுகேட்கப்படுநூற்பொருள்களைக்கற்றறிந்தார்கூறக்கேட்டல். கற்றவழியதனைத்துணிவறிவைவலியுறுத்தலானுங்கல்லாதவழியுமதனையுண்டாக்குதலானுமிதுகல்விகல்லாமைகளின்பின்வைக்கப்பட்டது.

---

* The unlearned.

அதாவது, கேட்கவேண்டிய நூற்பொருள்களைக்கற்றவர் சொல்லக்கேட்பது. கற்றபோது அதனாலாகிய கல்வியறிவைக் கேள்வியுறுத்துதலாலும் கல்லாதபோதும் அக்கேள்வியக்கல் வியறிவையுண்டாக்குதலாலும் இது கல்விகல்லாமைகளின்பின் வைக்கப்பட்டது.

க. செல்வத்துட்செல்வஞ்செவிச்செல்வமச்செல்வஞ்
செல்வத்துளெல்லாந்தலை.

Wealth (gained) by the ear* is wealth of wealth; that wealth is the chief of all wealth. - - - - - 411

பரி. ஒருவற்குச்சிறப்புடையசெல்வமாவதுசெவியான்வருஞ்செல்வமச்செல்வம்பிறசெல்வங்களெல்லாவற்றினுந்தலையாகலானென்றவாறு

வி செவியான்வருஞ்செல்வங்கேள்வியானெல்லாப்பொருளையுமறிதல்.பிறசெல்வங்கள்பொருளான்வருவன. அவைநிலையாவாகலானுந்துன்பவிளைவினவாகலானுமிதுதலையாயிற்று. அவற்றையொழிந்திதனையேசெய்கவென்பதுகுறிப்பெச்சம்.

பு. செல்வத்துட்செல்வம்-ஒருவனுக்குச்சிறப்புடைய செல்வமாவது, செவிச்செல்வம் - செவியினாலேவருஞ்செல்வமாம், அச்செல்வஞ்செல்வத்துளெல்லாந்தலை - அந்தச்செல்வமற்றைச்செல்வங்களெல்லாவற்றினுந் தலைமையாதலால், எ-று.

வி. செவியால்வருஞ்செல்வம், கேள்வியினாலே யெல்லாப்பொருள்களையுமறிவது. பிறசெல்வங்களாவன,பொருள்களால்வருவன. அவைநிலையாமையாலும் துன்பம் விளைப்பனவாதலாலும் இச்செல்வந்தலையாயிற்று. அவற்றையொழித்து இதனையே விரும்புகவென்பது குறைந்துநின்றது. இக்குறைவு குறிப்பெச்சமெனப்படும்.

உ. செவிக்குணவில்லாதபோழ்துசிறிது
வயிற்றுக்குமீயப்படும்.

When there is no food for the ear, give a little also to the stomach. - - - - - - - - - - 412

---

* செவிச்செல்வம் ; Ear wealth ; instruction.

பரி. செவிக்குணவாகியகேள்வியில்லாதபொழுது வயிற்றுக்குஞ்சிறிதுணவி டப்படுமென்றவாறு.

வி. சுவைமிகுதியும்பிற்பயத்தலுமுடையகேள்வியுள்ளபொழுது வெறுக்கப்ப டுதலானில்லாதபொழுதென்றும்பெரிதாயவழித்தேடற்றுன்பமேயன்றி நோ யுங்காமமும் பெருகுதலாற்சிறிதென்றுமது தானும்பின்னிருந்தகேட்டற்பொ ருட்டாகலானீயப்படுமென்றுங்கூறினார். ஈதல்வயிற்றதிழிவுதோன்றநின்றது. இவையிரண்டுபாட்டானுங்கேள்வியதுசிறப்புக்கூறப்பட்டது.

பு. செவிக்குணவில்லாதபோழ்து-செவியாலுண்ணப்படுவ தாகிய கேள்வியில்லாதகாலத்தில், சிறிதுவயிற்றிற்குமீயப்ப டும்-வயிற்றிற்குஞ்சிறிதுஉணவிடப்படும், எ-று.

வி. மிக்கசுவையும் மற்றைப்பயன்களைத்தருதலுமுடைய கேள்வியுள்ளபொழுது வெறுக்கப்படுதலால் இல்லாதபோழ் தென்றும், உணவுபெரிதானபோது தேடுந்துன்பமுமல்லா மல் நோயுங்காமமும் பெருகுதலாற் சிறிதென்றும் அச்சிறி தையும் வயிறுபின்னின்று இரத்தலின்பொருட்டாதலால் ஈய ப்படுமென்றுங் கூறினார். ஈயென்பதுஇழிந்தோன் இரப்புரை யாதலால் ஈதலிங்கேவயிற்றினிழிவுதோன்றநின்றது. இவை யிரண்டுபாட்டாலுங்கேள்வியின்சிறப்புக்கூறப்பட்டது.

௩. செவியுணவிற்கேள்வியுடையாரவியுணவி
னான்றாரோடொப்பர்நிலத்து.

Those who in this world enjoy instruction which is the food of the ear, are equal to the Gods, who enjoy the food* of the sacrifices. - - - - - - - - - 413

பரி. செவியுணவாகியகேள்வியினையுடையார்நிலத்தின்கண்ணராயினுமவியு ணவினையுடையதேவரோடொப்பரென்றவாறு.

வி. செவியுணவுசெவியாலுண்ணுமுணவு. அவ்வழிக்கண்வந்தவின்சாரியை யகரங்கெட்டுநின்றது. அவியாகியவுணவுதேவர்க்குவேள்வித்தீயிற்கொடுப் பன. அறிவானிறைந்தமையானான்றோரென்றுந்துன்பமறியாமையாற்றேவரோ டொப்பரென்றுங்கூறினார். இதனாலதனையுடையாரதுசிறப்புக்கூறப்பட்டது

---

* The materials of these offerings are, ghee, milk, buttermilk, rice. sugar, &c.

பு. செவியுணவிற்கேள்வியுடையார்-செவியுணவாகிய கேள்வியையுடையவர், நிலத்து-நிலவுலகத்தாராயினும், அவியுணவினான்றோரோடொப்பர்-அவியுணவையுடைய தேவரோடொப்பர், எ-று.

வி. செவியுணவு, செவியாலுண்ணுமுணவு. உணவிற்கேள்வி என்றவிடத்து இன்சாரியையதனிறுதினகரம்றகரமாகவலித்தல் விகாரமேற்றுநின்றது. அவியுணவு,தேவர்க்குவேள்வித்தீயிலே கொடுக்கப்படுவன. அறிவினாலே நிறைந்தமையால் ஆன்றோரென்றும், துன்பமறியாமையால் தேவரோடொப்பரென்றுங்கூறினார். இதினாலேகேள்வியுடையவரது சிறப்புக்கூறப்பட்டது.

௪. கற்றிலனாயினுங்கேட்கவஃதொருவற்
கொற்கத்தினூற்றாந்துணை.

Although a man be without learning, let him listen (to the teaching of the learned); that will be to him a staff in adversity. 414

பரி. உறுதிநூல்களைத்தான்கற்றிலனாயினுமவற்றின்பொருள்களைக்கற்றார்சொல்லக்கேட்கவக்கேள்வியொருவற்குத்தளர்ச்சியந்துழிப்பற்றுக்கோடாந்துணையாகலானென்றவாறு.

வி. உம்மைகற்கவேண்டுமென்பதுபடநின்றது. தளர்ச்சிவறுமையானுதலறிவின்மையானுதவிடுக்கட்பட்டுமனந்தளர்தல். அதனைக்கேள்வியினுயவறிவு நீக்குமாகவினூற்றுந்துணையென்றார். ஊன்றென்னுமாகுபெயரினகரந்திரிந்து நின்றது.

பு. கற்றிலனாயினுங்கேட்க-நன்மைதருகின்றநூல்களைத்தான்கல்லாதவனாயினும் அவற்றின்பொருள்களைக்கற்றவர் சொல்லக்கேட்கக்கடவது, அஃது-அக்கேள்வி, ஒருவற்கு-ஒருவனுக்கு,ஒற்கத்தின்-தளர்ச்சிவந்தபோது, ஊற்றாந்துணை-ஊன்றுகோலாகிய துணையாதலால், எ-று.

வி. கற்றிலனாயினுமென்றவும்மை, கற்கவேண்டுமென்பதுபடநின்றது. தளர்ச்சி, தரித்திரத்தினாலாவது அறிவில்லாததினாலாவது துன்பப்பட்டுமனங்குழைதல். அதைக்கேள்வியினால

கிய அறிவு நீக்குமாதலால் ஊற்றாந்துணையென்றார். ஊன்றுஎன்பது, ஊற்றுஎனத்திரிந்து இங்கேஆகுபெயராய்நின்றது.

௫. இழுக்கலுடையுழியூற்றுக்கோலற்றே
லொழுக்கமுடையார்வாய்ச்சொல்.

The words of the good* are like a staff in a slippery place. 415

பரி. வழுக்குதலையுடையசேற்றுநிலத்தியங்குவார்க்கூன்றுகோல்போலுதவுங்காவற்சாகாடுகைப்பார்க்கொழுக்கமுடையார்வாயிற்சொற்களென்றவாறு.

வி. அவாய்நிலையான்வந்தவுவமையடையாற்பொருளடைவருவிக்கப்பட்டது. ஊற்றாகியகோல்போலுதவுதல்தளர்ந்துழியதனைநீக்குதல். கல்வியுடையோனுமொழுக்கமில்லாதாரறிவிலாராகலினவர்சொற்கேட்கப்படாவென்பது தோன்றவொழுக்கமுடையார்வாய்ச்சொல்லென்றார். வாயென்பதுதீச்சொல்லறியாமையாகிய சிறப்புணரநின்றது. அவற்றைக்கேட்கவென்பதுகுறிப்பெச்சம்.

பு. இழுக்கலுடையுழி-வழுக்குதலையுடையசேற்றுநிலத்தில், (நடப்பவர்க்கு) ஊற்றுக்கோலற்று-ஊன்றுகோல்போலுதவிசெய்யும், ஒழுக்கமுடையார்வாய்ச்சொல்-(அரசர்க்கு) கல்வியினொழுக்கமுடையவர்வாய்ச்சொற்கள், எ-று.

வி. அவாய்நிலையினாலேவந்த நடப்பவர்க்குஎன்னும் உவமையடையினாலே அரசர்க்குஎன்னும்பொருளடைவருவிக்கப்பட்டது. ஊன்றுகோல்போலுதவுதல், சோர்வுவந்தபோது நீக்குதல். கல்வியுடையவராயினும்ஒழுக்கமில்லாதவர் அறிவில்லாதவரேயாதலால் அவர்சொல்லைக் கேட்கப்படாவென்பது தோன்ற ஒழுக்கமுடையார்வாய்ச்சொல்லென்றார். வாயென்பதுவேண்டாதாயினும் இங்கேதீச்சொற்பழக்கமில்லாதவாயென்னுஞ்சிறப்புத்தோன்றநின்ற விதப்புக்கிளவி. (அதிகவார்த்தை) அவற்றைக்கேடகக்கடவதென்பதுகுறைந்துநின்ற குறிப்பெச்சம்.

---

* ஒழுக்கமுடையார், men of good conduct.

௬. எனைத்தானு நல்லவைகேட்கவனைத்தானு
மான்றபெருமைதரும்.

Let a man listen, never so little, to good (instruction), even that will bring him great dignity. - - - - - 416

பரி. ஒருவன் சிறிதாயினுமுறுதிப்பொருள்களைக்கேட்கவக்கேள்வியத்துணையானுநிறைந்தபெருமையைத்தருமாகலானென்றவாறு.

வி. எனைத்தனைத்தென்பனகேட்கும்பொருண் மேலுங்காலத்தின் மேலுநின்றன. அக்கேள்விமழைத்துளிபோலவந்தீண்டியெல்லாவறிவுகளையுமுளவாக்கலிற்சிறிதென்றிகழற்கவென்பதாம்.

பு. எனைததானு நல்லவைகேட்க - ஒருவன் சிறிதாயினும் உறுதிப்பொருளைக்கேட்கக்கடவது, அனைத்தானும் - அந்தக்கேள்வியவ்வளவினுலும், ஆன்றபெருமைதரும் - நிறைந்தபெருமையைத்தருமாதலால், எ-று.

வி. எனைத்து அனைத்துஎன்பன, கேட்கும்பொருளின்மேலுங்காலத்தின்மேலும் நின்றன. அந்தக்கேள்வி மழைத்துளிபோலவந்துபெருகியெல்லாஅறிவுகளையும் உண்டாகச்செய்தலாற்சிறிதென்றுஅதைஇகழ்ச்சிசெய்யாதொழிகவென்பதாம்.

௭. பிழைத்துணர்ந்தும்பேதைமைசொல்லா
ரிழைத்துணர்ந்தீண்டியகேள்வியவர்.

Not even when they have imperfectly understood (a matter), will those men speak foolishly, who have profoundly studied, and diligently listened (to instruction). - - - - 417

பரி. பிறழவுணர்ந்தவழியுந்தமக்குப்பேதைமையயக்குஞ்சொற்களைச்சொல்லார்பொருள்களைத்தாமுநுண்ணிதாகவாராய்ந்தறிந்ததன்மேலுமீண்டியகேள்வியினையுடையாரென்றவாறு.

வி. பிழைப்பவென்பதுதிரிந்துநின்றது,பேதைமையாகுபெயர். ஈண்டுதல்பலவாற்றுன்வந்துநிறைதல். பொருள்களின்மெய்மையைத்தாமுமறிந்தறிந்தாரோடொப்பிப்பதுஞ்செய்தார்தாமதருணத்தான்மயங்கினாராயினுமவ்வாறல்லதுசொல்லாரென்பதாம்.இவைநான்குபாட்டானுங்கேள்வியாற்றிடப்பட்டார்க்குவருநன்மைகூறப்பட்டது.

பு. பிழைத்துணர்ந்தும்-பிறழ்வாகவுணர்ந்தபோதும்,பேதைமைசொல்லார் - தமக்குப்பேதைமையைத்தருஞ்சொற்களைச்சொல்லமாட்டார், இழைத்துணர்ந்து - பொருள்களைத் (தாமும்) நுட்பமாகஆராய்ந்தறிந்து, ஈண்டியகேள்வியவர்-(அதன்மேலும்) திரண்டகேள்விகளையுடையவர், எ-று.

வி. பிழைப்பஎன்பது,பிழைத்துஎனத்திரிந்துநின்றது.பேதைமையைத்தருஞ்சொற்களைப்பேதைமையென்றது, ஆகுபெயர். ஈண்டுதல்,பலவிதத்தினாலும்வந்துநிறைதல்.பொருள்களின்உண்மையைத்தாமுமறிந்து அறிந்தவர்க்குஒப்பிப்பதுஞ்செய்தவர்தாமதகுணத்தினாலே யொருவேளைமயங்கினராயினும் அம்மாத்திரமேதவிர வாயாற்சொல்லாரென்பதாம். இவைநான்குபாட்டாலும்கேள்வியினாலேதிடப்பட்டவர்க்குவருந்தன்மைகூறப்பட்டது.

௮. கேட்பினுங்கேளாத்தகையவேகேள்வியாற்
றோட்கப்படாதசெவி.

The ear which has not been bored by instruction, although it hears, is deaf.* - - - - - - - - - 418

பரி. தம்புலமாயவோசைமாத்திரத்தைக்கேட்குமாயினுஞ் செவிடாந்தன்மையவேயாங்கேள்வியாற்றுளைக்கப்படாதசெவிகளென்றவாறு.

வி. ஏகாரந்தேற்றத்தின்கண்வந்தது.ஓசைமாத்திரத்தானுறுதியெய்தாமையிற்கேளாத்தகையவென்றுமனத்தின்கணூற்பொருள்கணுழைதற்குவழியாகலிற்கேள்வியைக்கருவியாக்கியுங்கூறினார்.பழையதுளைதுளையன்றென்பதாம்.

பு. கேட்பினும்-(தமது அறிவாகியஒலியைமாத்திரம்) கேட்குமாயினும், கேளாத்தகையவே-செவிடாந்தன்மையையுடையனவே,கேள்வியால்-(நூற்பொருளைக்கேட்கும்) கேள்வியாகியகருவியினாலே, தோட்கப்படாதசெவி-துளைக்கப்பட்டிராதசெவிகள், எ-று.

---

* கேளாத்தகையது, it has the nature of not hearing.

வி. ஏகாரம், தெளிவுப்பொருள்படநின்றது. ஒலிமாத்திர த்தால் நன்மையடையாததினாலே கேட்பினுங் கேளாத்தகைய வென்றும், மனத்தினிடத்திலே நூற்பொருள்நுழைதற்குவழி யாதலால் (கேள்வியைஏகதேசவுருவமாகக்) கருவியாக்கியுஞ் சொன்னார். செவியினிடத்துப்பழைய துளைதுளையன்றென்ப தாம்.

௯. நுணங்கியகேள்வியரல்லார்வணங்கிய
வாயினராதலரிது.

It is a rare thing to find modesty of speech,* with those who have not received choice instruction. - - - - 419

பரி. நுண்ணிதாகியகேள்வியுடையவரல்லாதார் பணிந்தமொழியினையுடை யராதல் கூடாதென்றவாறு.

வி. கேட்கப்படுபொருளினது நுண்மைகேள்விமேலேற்றப்பட்டது. வாயாகு பெயர். பணிந்தமொழிபணிவைப்புலப்படுத்தியமொழி. கேளாதாருணர்வின் மையாற்றம்மைவியந்துகூறுவரொன்பதாம். அல்லாவென்பதூஉம்பாடம்.

பு. நுணங்கியகேள்வியரல்லார்-நுண்ணிதாகியகேள்வியையு டையவரல்லாதவர், வணங்கிய-பணிந்த, வாயினராதல்-மொ ழியினையுடையவராவது, அரிது-கூடாது, எ-று.

வி. கேட்கப்படும்பொருளினது நுண்மை, கேள்வியின்மே லேற்றப்பட்டது. மொழியைவாயென்றது, ஆகுபெயர். பணி ந்தமொழி, பணிவைத்தெரிவித்தமொழி. கேள்வியில்லாதவர் அறிவின்மையினாலே தம்மைப்புகழ்ந்து கூறுவரென்பதாம். நுணங்கிய கேள்வியரல்லால் என்பதும்பாடம்.

௰. செவியிற்சுவையுணராவாயுணர்வின்மாக்க
ளவியினும்வாழினுமென்.

What does it matter whether those men live or die, who can judge of tastes by the mouth, and not by the ear?† - - 420

---

* வணங்கியவாய், a reverent mouth.

† i. e. who have no taste in the discernment of words and thoughts.

பரி செவியானுகரப்படுஞ்சுவைகளையுணராதவாயுணர்வினையுடையமாந்தர்சாவினும்வாழினுமுலகிற்குவருவதென்னையென்றவாறு.

வி. செவியானுகரப்படுஞ்சுவைகளாவனசொற்சுவையும பொருட்சுவையுமவற்றுட்சொற்சுவைகுணமலங்காரமெனவிருவகைத்து. பொருட்சுவைகாமம் நகை கருணைவீரமுருத்திரமச்சமிழிப்புவியப்புச்சாந்தம எனவொன்பதுவகைத்து. அவையெல்லாமீண்டுரைப்பிற்பெருகும். வாயுணர்வென்பதிடைப்பதங்கடொக்குநின்றமூன்றும்வேற்றுமைத்தொகை. வாயானுகரப்படுஞ்சுவைகளையுணருமுணர்வெனவிரியும் அவைகைப்புக்கார்ப்புப்புளிப்புவர்ப்புத்துவர்ப்புத்தித்திப்பெனவாறும். செத்தாலிழப்பதுமவாழ்ந்தாற்பெறுவதுமின்மையினிரண்டுமொக்குமென்பதாம். வாயுணவினென்றுபாடமோதுவாருமுளர். இவைமூன்றுபாட்டானுங்கேளாதவழிப்படுங்குற்றங்கூறப்பட்டது.

பு. செவியிற்சுவை-செவியினாலே யுண்ணப்படுஞ் சுவைகளை, உணரா-உணராத, வாயுணர்வின்மாக்கள்-வாயாலுண்ணப்படும்பொருள்களின் சுவைகளையுணர்ந்தமானிடர், அவியினும்வாழினுமென்-செத்தாலும்வாழ்ந்தாலும் உலகத்துக்குவரும் பிரயோசனமென்ன, எ-று.

வி. செவியாலுண்ணப்படுஞ்சுவைகளாவன, சொற்சுவைபொருட்சுவையெனவிருவகைப்படும். அவற்றுள் சொற்சுவை, குணம் அலங்காரமெனவிருவகைப்படும். பொருட்சுவை, காமம் நகை கருணை வீரம் உருத்திரம் அச்சம் இழிப்பு ஆச்சரியம் சாந்தம் எனவொன்பதுவகைப்படும். அவற்றையெல்லாமிங்கே சொல்லப்புகுந்தால் விரிந்துபோம் அணியியலிலேகண்டுகொள்க. வாயுணர்வென்பது, வாயாலுண்ணப்படுஞ்சுவைகளையுணருமுணர்வெனவிரிந்து இடையிலே சிலமொழிகள்தொக்குநின்ற மூன்றும்வேற்றுமைத்தொகை. வாயாலுண்ணப்படுஞ் சுவைகளாவன, கைப்பு கார்ப்பு புளிப்பு உவர்ப்பு துவர்ப்பு தித்திப்பு எனஅறுவகைப்படும். செத்தால் இழப்பதும், வாழ்ந்தால் பெறுவதுமில்லாததினாலே யிரண்டுஞ் சமமென்பதாம். வாயுணவினென்றுபாடமோதுவாருமுண்டு. இவைமூன்றுபாட்டாலுங் கேள்வியில்லாதபோது உண்டாகுங்குற்றங் கூறப்பட்டது.

சங. அதிகாரம். CHAPTER XLIII.

அறிவுடைமை. On Wisdom.*

பரி. அஃதாவது கல்வி கேள்விகளினுய அறிவோடுண்மையறிவுமுடையனாதல், அதிகாரமுறைமையுமிதனானேவிளங்கும்.

அதாவது, கல்விகேள்விகளினாலாகிய அறிவோடு உண்மையறிவையுமுடையவனாவது. அதிகாரமுறையுமிதினாலேவிளங்கிற்று.

க. அறிவற்றங்காக்குங்கருவிசெறுவார்க்கு
முள்ளழிக்கலாகாவரண்.

Wisdom is a weapon to ward off destruction; it is an inner fortress which enemies cannot destroy. - - - - 421

பரி. அரசர்க்கறிவென்பதிறுதிவாராமற்காக்குங்கருவியாமதுவேயுமன்றிப்பகைவர்க்கழிக்கலாகாதவுள்ளரணுமாமென்றவாறு.

வி. காத்தன்முன்னறிந்துபரிகரித்தல். உள்ளரண்-உள்ளாயவரண். உள்புக்கழிக்கலாகாவரணென்றுமாமிதனாலறிவினதுசிறப்புக்கூறப்பட்டது.

பு. அறிவற்றங்காக்குங்கருவி - (அரசனுக்கு) அறிவுதான் கெடுதிவாராமற்காக்குங்கருவியாம், (அதுவுமன்றி) செறுவார்க்கும்-பகைவர்க்கும், அழிக்கலாகாவுள்ளரண்-அழிக்கக்கூடாதவுட்கோட்டையாம், எ-று.

வி. அற்றம், சோர்வினாலேவருங்கெடுதி. அதைக்காத்தலாவது, முன்னறிந்துபரிகரிப்பது. உள்ளரண், உள்ளாகியஅரண். இனிஉள்ளழிக்கலாகாவரண் எனநின்றபடியேவைத்து உள்ளேபுகுந்து அழிக்கக்கூடாதஅரண்எனப்பொருள்கொளினும் அமையும். இதினாலேயறிவினதுசிறப்புச்சொல்லப்பட்டது.

---

* The possession of wisdom.

௨. சென்றவிடத்தாற்செலவிடாதீதொரீஇ
நன்றின்பாலுய்ப்பதறிவு.

Not to permit (the mind) to go where it lists, to keep it from evil, and to employ it in good, this is wisdom. - - 422

பரி. மனத்தையது சென்றபுலத்தின்கட் செல்லவிடாதப்புலத்தினன்மைதீமைகளையாராய்ந்துதீயவற்றைநீக்கி நல்லவற்றின்கட்செலுத்துவதறிவாவதென்றவாறு.

வி. வினைக்கேற்றசெயப்படுபொருள்வருவிக்கப்பட்டது. ஓசையூறொளிசுவைநாற்றமெனப்புலமைந்தாயினுமொருகாலத்தொன்றின்கணல்லது செல்லாமையினிடத்தாலென்றார். விடாதென்பது கடைக்குறைந்துநின்றது. குதிரையைநிலமறிந்துசெலுத்தும்வாதுவனைப்போலவேறுக்கி மனத்தைப்புலமறிந்து செலுத்துவதறிவென்றார். அஃதுயிர்க்குணமாகலின்.

பு. சென்றவிடத்தால்-மனத்தையது போனவழியிலே, செலவிடாது-போகவிடாமல், தீதொரீஇ- (அவ்வழியின்நன்மை தீமைகளையாராய்ந்து) தீயவற்றைநீக்கி, நன்றின்பாலுய்ப்பதறிவு-நல்லவற்றிலே செலுத்துவது அறிவாம், எ-று.

வி. மனத்தையென்னுஞ்செய்ப்படுபொருள், வருவிக்கப்பட்டது. வழி, இங்கேபுலன்களின்வழி. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், எனப்புலன்கள்ஐந்தாயினும்ஒருகாலத்து ஒன்றினிடத்தல்லது செல்லாது ஆதலால்இடத்தாலென ஒருமையாற் கூறினார். விடாதென்பது, விடாஎனக்கடைகுறைந்துநின்றது. குதிரையை நிலமறிந்துசெலுத்துங்குதிரைப்பாகனைப்போல் வேறுக்கிமனத்தைச்செல்லுமிடமறிந்து செலுத்துவது அறிவென்றார். அதுஉயிரின்தொழிற்குணமாதலாலெனக்காண்க. இடமென்றது, ஐம்புலன்களை.

௩. எப்பொருள்யார்யார்வாய்க்கேட்பினுமப்பொருண்
மெய்ப்பொருள்காண்பதறிவு.

To discern the truth in every thing, by whomsoever spoken,* this is wisdom. - - - - - - - - - 423

* யார்யார்வாய்க்கேட்பினும்; from whosesoever mouth it may be heard.

பரி. யாதொருபொருளையாவர்யாவர்சொல்லக்கேட்பினுமப்பொருளின் மெய்யாயபயனைக்காணவல்லதறிவென்றவாறு.

வி. குணங்கண்மூன்றுமாறிமாறிவருதல்யாவர்க்குமுண்மையினுயர்ந்தபொருளிழிந்தார்வாயினுமிழிந்தபொருளுயர்ந்தார்வாயினுமுறுதிப்பொருள் பகைவர்வாயினுங்கெடுபொருணட்டார்வாயினுமொருவழிக்கேட்கப்படுதலானெப்பொருள்யார்யார்வாய்க்கேட்பினுமென்றார். அடுக்குபன்மைபற்றிவந்தது வாயென்பதவரப்பொருளின்கட்பயிலாமையுணர்த்திநின்றது. மெய்யாதனிலைபெறுதல். சொல்லுவாரியல்புநோக்கா தப்பொருளின் பயனோக்கிக்கொள்ளுதலொழிதல்செய்வதறிவென்பதாம்.

பு. எப்பொருள்-யாதொருபொருளை, யார்யார்வாய்க்கேட்பினும்-யாவர்யாவர் சொல்லக்கேட்டாலும், அப்பொருள்-அந்தப்பொருளினது, மெய்ப்பொருள்-மெய்யாகியபயனை, காண்பதறிவு-காணவல்லது அறிவு, எ-று.

வி. குணங்கள்மூன்றும்மாறிமாறிவருவதுயாவர்க்கும்உண்மையாதலால், உயர்ந்தபொருள்இழிந்தவர்வாயிலும், இழிந்தபொருள் உயர்ந்தவர்வாயிலும், உறுதிப்பொருள்பகைவர்வாயிலும், கெடுதிப்பொருள்நட்பினர்வாயிலும், ஓரோரிடங்களிற்கேட்கப்படுமாதலால், எப்பொருள் யார்யார்வாய்க்கேட்பினுமென்றார். யார்யார்என்றஅடுக்கு, பன்மைபற்றிநின்றது. வாய்என்றது, அவர்அப்பொருளிலே பழகாமையையுணர்த்திநின்றது. மெய்யாவது, அழிவிலாதுநிற்பது. சொல்வோர்தன்மையைக்குறியாமல் சொல்லப்பட்டபொருளின்பயனைக்குறித்துக்கொள்வதாயினுந் தள்ளுவதாயினுஞ்செய்வது அறிவென்பதாம்.

சு. எண்பொருளவாகச்செலச்சொல்லித்தான்பிறர்வாய்
நுண்பொருள்காண்பதறிவு.

To speak so as that the meaning may easily enter (the mind of the hearer); and to discern the subtlest thought (which may lie hidden) in the words of others; this is wisdom. - 424

பரி தான்சொல்லுஞ்சொற்களையரியபொருளவாயினுங்கேட்போர்க்கெளிய

பொருளவாமாறுமனங்கொள்ளச்சொல்லிப்பிறர்வாய்க்கேட்குஞ்சொற்களினு ண்பொருள்காணவரிதாயினுமதனைக்காணவல்லதறிவென்றவாறு.

வி. உடையவன்றொழிலறிவின்மேலேற்றப்பட்டது. சொல்லுவனவழுவின்றி யினிதுவிளங்கச்சொல்லுகவென்பார்சொன்மேல்வைத்துங்கேட்பனவழுவினு மினிதுவிளங்காவாயினும்பயனைக்கொண்டொழிகவென்பார்பொருண்மேல் வைத்துங்கூறினார்.

பு. எண்பொருளவாக-தான்சொல்லுஞ்(சொற்களை அரிய பொருளுடையனவாயினுங்கேட்போர்க்கு)எளியபொருளன வாக, செலச்சொல்லி-அவர்மனங்கொள்ளும்படியாகச்சொல் லி, ஞான்பிறர்வாய் - தான்பிறர்வாய்க்கேட்குஞ்சொற்களின், நுண்பொருள்காண்பதறிவு-காணவரிதாகிய நுட்பமானபொ ருளைக்காணவல்லது அறிவாம், எ-று.

வி. அறிவுடையவனது தொழிலையறிவின்மேலேற்றப்பட் டது. சொல்லுவனவற்றைவழுவிலாது இனிதுவிளங்கச்சொல் லுகவென்றுசொல்லவந்தவர்செலச்சொல்லியெனச்சொல்லின் மேல்வைத்தும், கேட்பனவழுவினும் இனிதுவிளங்காவிடி னும் பயனைமாத்திரங்கொள்கவென்று சொல்லவந்தவர் நுண் பொருள்காண்பது எனப்பொருளின்மேல்வைத்துங்கூறினார்.

௫. உலகந்தழீஇயதொட்பமலர்தலுங்
கூம்பலுமில்லதறிவு.

To secure the friendship of the great* is true wisdom ; it is (also) wisdom to keep (that friendship unchanged, and) not opening and closing (like the lotus-flower). - - - - 425

பரி. உலகத்தைநட்பாக்குவதொருவனுக்கொட்பமாமந்நட்பின்கண்முன்ம லர்தலும்பின்கூம்புதலுமின்றியொருநிலையனாவதறிவாமென்றவாறு.

வி. தழீஇயதில்லதென்பனவவ்வத்தொழின்மேனின்றன. உலகமென்பதீண்டு யர்ந்தோரை.அவரோடுகயப்பூப்போலவேறுபடாதுகோட்டுப்பூப்போலவொரு

---

* உலகம், the world ; the great; a striking similarity to the English idiom.

நிலையேநட்பாயினுனெல்லாவிடமுமெய்துமாதலின்அதனையறிவென்றார். காரியங்களைக்காரணமாகவுபசரிக்கப்பட்டன. இதனைச்செல்வத்தின்மலர்தலுநல்குரவிற்கூம்பலுமில்லதென்றுரைப்பாருமுளர்.

பு. உலகந்தழீஇயது-உலகத்தைநட்பாக்குவது, ஒட்பம்-ஒருவனுக்குநன்மையாம், மலர்தலுங்கூம்பலுமில்லதறிவு-(அந்தநட்பினிடத்திலே) முன்விரிதலும் பின்குவிதலுமில்லாமலொருநிலைமையனுவது அறிவாம், எ-று.

வி. தழீஇயதுஇல்லதுஎன்பன, அந்தந்தத்தொழிலின்மேல் நின்றன. இங்கேயுலகமென்றது, உயர்ந்தோரை. அவரோடு நீர்ப்பூவைப்போலவேறுபடாமல் கிளைகளின் பூவைப்போல வொருநிலைமையனுகிச்சிநேகிப்பானுனுல் எல்லாவின்பங்களையுமடைவானுதலால் அதனையறிவென்றார். தழீஇயதுஇல்லதுஎன்னுங்காரியங்களை அறிவெனக்காரணமாகஉபசரித்தார். இனியிதற்குச்செல்வத்திலேமலர்தலும் வறுமையிலே குவிதலுமில்லாதது என்றுரைப்பாருமுண்டு.

௬. எவ்வதுறைவதுலகமுலகத்தோ
டவ்வதுறைவதறிவு.

To live as the world lives, this is wisdom.* - - 426

பரி உலகம்யாதொருவாற்றானொழுகுவதாயிற்றவ்வுலகத்தோடுமேவித்தானுமவ்வாற்றானொழுகுவதரசனுக்கறிவென்றவாறு.

வி. உலகத்தையெல்லாம்யானியமித்தலானென்னைநியமிப்பாரில்லெனக்கருதித்தானினைத்தவாறேயொழுகிற்பாவமும்பழியுமாமாகலானவ்வாறொழுகுதலறிவன்றெனவிலக்கியவாறாயிற்று. இவையைந்துபாட்டானுமதனிலக்கணங்கூறப்பட்டது.

பு. எவ்வதுறைவதுலகம்-உலகம்யாதொருநெறியாலொழுகுவதாயிற்று, உலகத்தோடு-அந்தவுலகத்தோடேபொருந்தி, அவ்வதுறைவதறிவு-தானுமந்தநெறிபற்றியேயொழுகுவது அரசனுக்குஅறிவு, எ-று.

---

*Which *morality* is very much like the convenient maxim, "when you are at Rome, do as Rome does."

வி. உலகத்தையெல்லாம் நானியமிப்பதினாலே என்னை நியமிப்பவரில்லையென்று நினைத்துத்தான் நினைத்தபடியே நடந்தால் பாவமும் பழியுமுண்டாதலால் அப்படி நடப்பது அறிவன்று எனவிலக்கியபடியாயிற்று. இவையைந்துபாட்டாலும் அறிவினது இலக்கணங்கூறப்பட்டது.

எ. அறிவுடையா ராவ தறிவா ரறிவிலா
ரஃதறி கல்லா தவர்.

The wise are those who know beforehand what will happen; those who do not know this are the unwise. - - - 427

பரி. அறிவுடையராவாராவக்கடவதனைமுன்னறியவல்லாரறிவிலாராவாரதனைமுன்னறியமாட்டாதாரென்றவாறு.

வி. முன்னறிதல்முன்னேயெண்ணியறிதல். அஃதறிகல்லாமையாவதுவந்தாலறிதல். இனியாவதறிவாரென்பதற்குத்தந்தமக்குநன்மையறிவாரென்றுரைப்பாருமுளர்.

பு. அறிவுடையாராவதறிவார் - அறிவுடையவர் ஆகக்கடவதை முன்னாடியறியவல்லவராவர், அறிவிலாரஃதறிகல்லாதவர் - அறிவில்லாதார் அதனைமுன்னாடியறியமாட்டாதவராம், எ-று.

வி. முன்னாடியறிதல், முன்னே தானே யோசித்தறிதல். அஃதறிகல்லாமையாவது, வந்தபின்னறிதல். இனியாவதறிவாரென்பதற்கு, நன்மையறிவாரென்றுரைப்பாருமுண்டு.

அ. அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ
தஞ்ச லறிவார் தொழில்.

Not to fear what ought to be feared, is folly; it is the work of the wise to fear what should be feared. - - - - 428

பரி. அஞ்சப்படுவதனையஞ்சாமைபேதைமையாமஞ்சப்படுவதனையஞ்சுவதறிவார்தொழிலாமென்றவாறு.

வி. பாவமும்பழியுங்கேடுமுதலாகவஞ்சப்படுவனபலவாயினுமஞ்சாதிடத்தியஞ்சுவதென்றார். அஞ்சாமையென்றதுசெய்துநிற்றல். அஞ்சலெண்ணித்தவி

ர்தல். அதுகாரியமன்றென்றிகழப்படாதென்பாரறிவார்தொழிலென்றார். அஞ்சாமையிறைமாட்சியாகச்சொல்லப்பட்டமையினீண்டஞ்சவேண்டுமிடங்கூறியவாறு. இவையிரண்டுபாட்டானுமதனையுடையாரதிலக்கணங்கூறப்பட்டது.

பு. அஞ்சுவதஞ்சாமைபேதைமை - அஞ்சவேண்டியதற்கஞ்சாதிருப்பதுஅறிவின்மையாம், அஞ்சுவதஞ்சலறிவார்தொழில் - அஞ்சவேண்டியதற்கு அஞ்சுவது அறிவுடையோர்தொழிலாம், எ-று.

வி. பாவமும்பழியுங்கேடும்முதலியவாக அஞ்சவேண்டுவன பலவாமாயினுமஞ்சாதிபற்றியஞ்சுவதென ஒருமையாகக்கூறினார். அஞ்சாமை, எண்ணுமலேசெய்துநிற்பது. அஞ்சல், எண்ணிவிலகல். அதுகாரியமன்றென்று இகழப்படாதென்று சொல்லவந்தவர், அறிவார்தொழிலென்றார். அஞ்சாமைஇறைமாட்சியாகச்சொல்லப்பட்டமையால், இங்கேயஞ்சவேண்டுமிடங்கூறியவாறு. இவையிரண்டுபாட்டாலும் அவ்வறிவுடையவரது இலக்கணங்கூறப்பட்டது.

௯. எதிர்தாக்காக்குமறிவினார்க்கில்லை
யதிரவருவதோர்நோய்.

No terrifying calamity will happen to the wise, who (foresee) and guard against coming evils. - - - - - 429

பரி. வரக்கடவதாகியவதனைமுன்னறிந்துகாக்கவல்லவறிவினையுடையார்க்கவர்நடுங்கவருவதொருதுன்பமுமில்லையென்றவாறு.

வி. நோயெனவருகின்றமையின்வாளாவெதிர்தரவென்றார். இதனாற்காக்கலாங்காலமுணர்த்தப்பட்டது. காத்தலதன்காரணத்தைவிலக்குதல். அவர்க்குத்துன்பமின்மையிதனாற்கூறப்பட்டது.

பு. எதிர்தர - (வரக்கடவது) எதிர்காலத்தையுடையதாக, காக்குமறிவினார்க்கு - (அதைமுன்னாடியறிந்து) காக்கவல்ல அறிவுடையோர்க்கு, அதிரவருவதோர்நோயில்லை - அவர்நடுங்கலாவதொருதுன்பமுமில்லை, எ-று.

வி. பின்புநோயெனவருதலால்முன்பு எதிர்தரவெனவேண்டாதுகூறினார். காத்தல், அதன்காரணத்தைவிலக்குதல். இதினாலே காக்கலாகுங்காலமும் அங்ஙனங்காத்தவர்க்குத்துன்பமில்லையென்பதுங்கூறப்பட்டது.

௰. அறிவுடையரெல்லாமுடையரறிவில்லா
ரென்னுடையரேனுமிலர்.

Those who possess wisdom, possess every thing; those who have not wisdom, whatever they may possess, have nothing. - 430

பரி. அறிவுடையார்பிறிதொன்றுமிலராயினுமெல்லாமுடையராவரறிவிலாதாரெல்லாமுடையராயினுமொன்றுமிலராவரென்றவாறு.

வி. செல்வங்களெல்லாமறிவாற்காக்கவும்படைக்கவுமபடுதலினஃதுடையாரையெல்லாமுடையரென்றுமவையெல்லாமுன்னே யமைந்துகிடப்பினுமழியாமற்காத்தற்குந்தெய்வத்தானழிந்துழிப்படைத்தற்குங்கருவியுடையரன்மையினஃதில்லாரையென்னுடையரேனுமிலரென்றுங்கூறினார். என்னுமென்புழியும்மைவிகாரத்தாற்றொக்கது. இதனாலவாதுடைமையுமேனையாரதின்மையுங்கூறப்பட்டது.

பு. அறிவுடையரெல்லாமுடையர்-அறிவுடையார்(மற்றொன்றுமில்லாதவராயினும்) எல்லாமுடையவராவார், அறிவில்லாரென்னுடையரேனுமிலர்-அறிவில்லாதவர் எல்லாமுடையவராயினும் ஒன்றுமில்லாதவராவர், எ-று.

வி. செல்வங்களெல்லாம் அறிவினாலேகாக்கவும் படைக்கவும்படுதலால்அதையுடையவனையெல்லாமுடையரென்றும்,அவையெல்லாமுன்னேவிதியினாலமைந்திருந்தாலும் அழியாமற்காப்பதற்கும் அழிந்தபோதுபடைப்பதற்குங் கருவியுடையவரல்லராதலாலதுஇல்லாதவனையென்னுடையரேனுமிலரொன்றுஞ்சொன்னார். என்னென்றஇடத்துஉம்மை,குறைந்துநின்றது. இதினாலே அவரது உடைமையும் மற்றையவரது இன்மையுங்கூறப்பட்டது.

சச. அதிகாரம். CHAPTER XLIV.

குற்றங்கடிதல். ON THE CORRECTION OF FAULTS.

பரி. அஃதாவது. காமம்வெகுளிகடும்பற்றுள்ளமானமுவகைமதமென்னப்பட்டகுற்றங்களாறனையுமரசன்றன்கணிகழாமற்கடிதல். இவற்றைவடநூலார்பகைவர்க்கமென்ப. இவைகுற்றமென்றறிதலுங்கடிதலுமறிவுடையார்க்கல்லதுகூடாமையினதன்பின்வைக்கப்பட்டது.

அதாவது, காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம் என்னப்பட்ட அறுவகைக்குற்றங்களையும் அரசன் தன்னிடத்திலே தலையெடாமற்கண்டித்தல். இவற்றைவடநூலார் அரிசட்வர்க்கமென்பார். இவைகுற்றமென்றறிவதுங்கண்டிப்பதும் அறிவுடையார்க்கல்லது கூடாமையால் இது அறிவுடைமையின் பின்வைக்கப்பட்டது.

க. செருக்குஞ்சினமுஞ்சிறுமையுமில்லார்
பெருக்கம்பெருமிதநீர்த்து.

Truly great is the excellence of those (kings) who are free from pride, anger, and lust. - - - - - 431

பரி. மதமும்வெகுளியுங்காமமுமாகியகுற்றங்களில்லாதவரசரதுசெல்வமேம்பாட்டுநீர்மையினையுடைத்தென்றவாறு.

வி. மதஞ்செல்வக்களிப்பு. சிறியோர்செயலாகலினளவிறந்தகாமமுஞ்சிறுமையெனப்பட்டது. இவைநீதியல்லனசெய்வித்தலானிவற்றைக்கடிந்தார்செல்வநல்வழிப்படுமாறுநிலைபேறுடைமையின்மதிப்புடைத்தென்பதாம். மிகுதிபற்றியிவைமூன்றுங்கூறப்பட்டன.

பு. செருக்குஞ்சினமுஞ்சிறுமையுமில்லார் - மதமுங்கோபமுங்காமமுமாகியகுற்றங்களில்லாத அரசருடைய, பெருக்கம் - செல்வமானது, பெருமிதநீர்த்து - மேம்பாட்டுக்குணத்தையுடையது, எ-று.

வி. மதம், செல்வக்களிப்பு. சிறியோர் செய்கையாதலால் மிகுந்தகாமமுஞ்சிறுமையெனப்பட்டது. இக்குற்றங்கள் நீதியல்லாதனவற்றைச்செய்விக்குமாதலால்இவற்றைக்கடிந்தவரு

டையசெல்வம் நல்வழிப்பட்டு நிலைபெறுதலால் மதிப்புடையதென்பதாம். மிகுதிபற்றியிவை முன்சொல்லப்பட்டன.

உ. இவறலுமாண்பிறந்தமானமுமாணா
உவகையுமேதமிறைக்கு.

Avarice, undignified pride, and low* pleasures, are faults in a king. - - - - - - - - - - 432

பரி. வேண்டும்வழிப்பொருள்கொடாமையுநன்மையினீங்கியமானமுமளவிறந்தவுவகையுமரசனுக்குக்குற்றமென்றவாறு.

வி. மாட்சியானமானத்தினீக்குதற்குமாண்பிறந்தமானமென்றார். அஃதாவதந்தணர்சான்றோரருந்தவத்தோர்தம்முன்னோர்தந்தைதாயென்றிவரைவணங்காமையுமுடிக்கப்படாதாயினுங்கருதியதுமுடித்தேவிடுதலுமுதலாயின. அளவிறந்தவுவகையாவது கழிகண்ணோட்டம். பிறருஞ்சினனேகாமங்கழிகண்ணோட்டமென்றிவற்றை யறந்தருதிகிரிக்குவழியடையாகுந்தீதென்றாரிவையிரண்டுபாட்டானுங்குற்றங்களாவனவிவையென்பதுகூறப்பட்டது.

பு. இவறலும்-வேண்டியபோதுபொருள்கொடாதஉலோபமும், மாண்பிறந்தமானமும்-நன்மையில்நீங்கியமானமும், மாணாவுவகையும்-அளவிறந்தமகிழ்ச்சியும், இறைக்கேதம்-அரசனுக்குக்குற்றமாம், எ-று.

வி. மாட்சிமையானமானத்தில் நீக்குதற்கு மாண்பிறந்த மானமென்றார். அதாவது, அந்தணர்சான்றோர் அருந்தவத்தோர் தம்முன்னோர் தந்தைதாய் என்றிவரைவணங்காமையும் முடிக்கப்படாதாயினும் நினைத்ததுமுடித்தேவிடுதலும் முதலாயின. அளவிறந்தமகிழ்ச்சியாவது, மிகக்கண்ணோட்டம். (தாக்ஷண்ணியம்) சினனேகாமங்கழிகண்ணோட்ட மறந்தருதிகிரி வழியடையாகும்என்றார்பிறரும். இதன்பொருள்கோபமுங் காமமும் மிகுந்ததாக்ஷண்ணியமுமாகிய விம்மூன்றும் அரசனுக்குத்தருமத்தைத்தருகிற சக்கரஞ்செல்லும்வழியைச்செல்லாமலடைக்கின்றவழியடைப்பாமென்றது. இவைஇரண்டுபாட்டாலுங்குற்றங்களாவன இவையென்பது சொல்லப்பட்டது.

---

* The Scholiasts give, "excessive pleasure."

௩. தினைத்துணையாங்குற்றம்வரினும்பனைத்துணையாக்
கொள்வர்பழிநாணுவார்.

Those who fear guilt, if they commit a fault small as a millet seed, will consider it to be as large as a palmyra tree. - 433

பரி. பழியஞ்சுவார்தங்கட்டினையளவாங்குற்றம்வந்ததாயினுமதனையவ்வளவாகவன்றிப்பனையினளவாகக்கொள்வரென்றவாறு.

வி. குற்றஞ்சாதிப்பெயர். தமக்கேலாமையிற்சிறிதென்றுபொறார்பெரிதாகக்கொண்டுவருந்திப்பின்னரதுவாராமற்காப்பரென்பதாம்.

பு. பழிநாணுவார்-பழிக்குஅஞ்சுபவர், தினைத்துணையாங்குற்றம்வரினும்-தம்மிடத்துத்தினையளவுகுற்றம்வந்ததாயினும், பனைத்துணையாக்கொள்வர் - அதையவ்வளவாகவேகொள்ளாமற்பனையினளவாகக்கொள்வர், எ-று.

வி. குற்றஞ்,சாதியொருமை. தமக்குப்பொருந்தாமையினாலே சிறிதென்று பொறுக்கமாட்டாராகிப்பெரிதாகக்கொண்டுவருந்திப்பின்புமதுவாராமற்காப்பரென்பதாம்.

ச. குற்றமேகாக்கபொருளாகக்குற்றமே
யற்றந்தரூஉம்பகை.

Guard against faults as a matter (of great consequence; for) faults are a deadly* enemy. - - - - - 434

பரி. தனக்கிறுதிபயக்கும்பகைகுற்றமேயாகலானக்குற்றந்தன்கண்வாராமையேபயனாகக்கொண்டுகாக்கவேண்டுமென்றவாறு.

வி. இவைபற்றியல்லதுபகைவரற்றந்தாராமையினிவையேபகையாவனவென்னும்வடநூன்மதம்பற்றிக்குற்றமேயற்றந்தரும்பகையென்றுமிவற்றதின்மையேகுணங்களதுண்மையாகக்கொண்டென்பார்பொருளாகவென்றுங்கூறினார். குற்றமேகாக்கவென்பதரும்பண்பினாற்றீமைகாத்தவரென்பதுபோலநின்றது.

பு. குற்றமேயற்றந்தரூஉம்பகை - தனக்குக்கேட்டைத்தரும்பகைகுற்றமேயாதலால், பொருளாக - அதுதன்னிடத்தி

* An enemy that will bring destruction.

லேவாதிருப்பதேபிரயோசனமாகக்கொண்டு, குற்றமேகாக்க-குற்றத்தையேகாக்கவேண்டும், எ-று.

வி. இக்குற்றங்களைப்பற்றியல்லது பகைவர்கெடுதிசெய்யலாகாமையால் இவையேபகையாவனவென்றவடநூலார்மதம்பற்றிக்குற்றமேயற்றந்தரும்பகையென்றும், இவற்றினது இன்மையேகுணங்களினதுஉண்மையாகக்கொண்டுஎன்றுசொல்லவந்தவர், பொருளாகவென்றுஞ்சொன்னார். குற்றமேகாக்கவென்பது-தீமைகாத்தவொன்றுற்போலநின்றது.

௫. வருமுன்னர்க்காவாதான்வாழ்க்கையெரிமுன்னர்
வைத்தூறுபோலக்கெடும்.

The prosperity, of him who does not timely* guard against faults, will perish like straw before fire. - - - 435

பரி. குற்றம்வரக்கடவதாகின்றமுற்காலத்திலேயதனைக்காவாதவரசன்வாழ்க்கையதுவந்தாலெரிமுகத்தினின்றவைக்குவைபோலழிந்துவிடுமென்றவாறு.

வி. குற்றமென்பததிகாரத்தான்வந்தது முன்னரென்றதனீற்றதுபகுதிப்பொருள்விகுதி.வருமென்னும்பெயரெச்சமுன்னரென்னுங்காலப்பெயர்கொண்டது. அதனாற்காக்கலாங்காலம்பெறப்பட்டது. குற்றஞ்சிறிதாயினுமதனாற்பெரியசெல்வமழிந்தேவிடுமென்பதுவமையாற்பெற்றும்.

பு. வருமுன்னர் - குற்றம்வருமுன்னேதானே, காவாதான்வாழ்க்கை-அதைக்காக்கமாட்டாதஅரசனுடையவாழ்வானது,(அக்குற்றம்வந்தபின்) எரிமுன்னர்வைத்தூறுபோலக்கெடும் - அக்கினிமுற்பட்ட வைக்கோலின்கூளைபோல வழிந்து போம், எ-று.

வி. குற்றமென்பது, அதிகாரத்தால் வருவிக்கப்பட்டது. முன்னர்என்பதினீற்றிலேநின்றஅர், பகுதிப்பொருள்விகுதி. குற்றஞ்சிறிதாயினும்அதனாற்பெரியதோர்செல்வம்அழிந்தேபோமென்பது, உவமையாற்பெறப்பட்டது.

---

* வருமுன்னர், before they come.

௬. தன்குற்றநீக்கிப்பிறர்குற்றங்காண்கிற்பி
னென்குற்றமாகுமிறைக்கு.

What fault will remain, in the king who has put away his own evils, and looks after the evils of others. - - - 436

பரி. முன்னர்த்தன்குற்றத்தைக்கண்டுகடிந்துபின்னர்ப்பிறர்குற்றங்காணவ ல்லனாயினரசனுக்குக்காக்கக்கடவகுற்றம்யாதென்றவாறு.

வி. அரசனுக்குத்தன்குற்றங்கடியாவழியேபிறர்குற்றங்கடிதல்குற்றமாமது கடிந்தவழிமுறைசெய்தலாமென்பாரென்குற்றமாகுமென்றார். எனவேதன்குற்ற ங்கடிந்தவனேமுறைசெய்தற்குரியவனென்பதாயிற்று. இவைநான்குபாட்டா னுமவற்றைக்கடிதற்பாடுபொதுவகையாற்கூறப்பட்டது. இனிச்சிறப்புவகையா ற்கூறுப.

பு. தன்குற்றநீக்கி-முன்னேதன்குற்றத்தைக்கண்டு அதனை ப்பரிகரித்து, பிறர்குற்றங்காண்கிற்பின்-பிற்பாடுபிறர்குற்றத் தையாராயவல்லவனானால், என்குற்றமாகுமிறைக்கு - அரசனு க்குக்காக்கவேண்டியகுற்றமேது, எ-று.

வி. அரசனுக்குத்தன்குற்றத்தைப்போக்காதபோதுபிறர் குற்றத்தைப்போக்குதல்குற்றமாம். தன்குற்றத்தைப்போக் கியபோது நீதிசெய்தலாமென்றுசொல்லவந்தவர் என்குற்ற மாகுமென்றார். எனவேதன்குற்றங்கடிந்தவனே நீதிசெய்தற் கு உரியவனென்பதாயிற்று. இவைநான்குபாட்டானுங்குற் றங்கடியும் விதம்பொதுவகையாற்சொல்லப்பட்டது. இனிச் சிறப்புவகையாற்சொல்லுவர்.

௭. செயற்பாலசெய்யாதிவறியான்செல்வ
முயற்பாலதன்றிக்கெடும்.

The wealth of the avaricious man, who does not expend it for the purposes for which he ought to expend it,* will waste away and not continue. - - - - - - - 437

* Lit. who does not do the things he ought to do.

பரி. பொருளாற்றனக்குச்செய்துகொள்ளப்படுமவற்றைச்செய்துகொள்ளாததன்கட்பற்றுள்ளஞ்செய்தானதுசெல்வம்பின்னுளதாம்பான்மைத்தன்றியவறிதேகெடுமென்றவாறு.

வி. செயற்பாலவாவனவறம்பொருளின்பங்கள். பொருளாற்பொருள்செய்தலாவதுபெருக்குதல். அதுபொன்னினாகும்பொருபடையப்படை தன்னினாகுந் தரணிதரணியிற்பின்னையாகும் பெரும்பொருளப்பொருடுன்னுங்காலைத்துன்றாதனவில்லையேயென்பதனானறிக. அறஞ்செய்யாமையானும்பொருள்பெருக்காமையானுமுயற்பாலதன்றியென்றுமின்பப்பயன்கொள்ளாமையிற்கெடுமென்றுங்கூறினார். உயற்பாலதன்றியென்றுபாடமோதுவாருமுளர்.

பு. செயற்பாலசெய்யாது-(பொருளினாலே) தனக்குச்செய்துகொள்ளவேண்டியவற்றைச்செய்யாமல், இவறியான்செல்வம்-அதனிடத்திலேயுலோபத்தன்மைசெய்தவனுடையசெல்வமானது, உயற்பாலதன்றி-பிழைத்துப்போகின்றகுணமில்லாமல், கெடும்-வீணேகெடும், எ-று.

வி. பொருளாற்செய்துகொள்ளவேண்டுவனவாவன, அறம், பொருள், இன்பங்கள், பொருளாற்பொருள்செய்தலாவது, பொருளைப்பெருக்குதல். அதை பொன்னினாகும்பொருபடையப்படை தன்னினாகுந் தரணிதரணியிற் பின்னையாகும் பெரும்பொருளப்பொருடுன்னுங்காலைத்துன்றாதன வில்லையே என்னும் இலக்கியத்தினாலேயறிக. தருமஞ்செய்யாததினாலும் பொருளைப்பெருக்காமையினாலும் உயற்பாலதன்றியென்றும், இன்பப்பயனைக்கொள்ளாமையினாலேகெடுமென்றுஞ்சொன்னார்.

அ. பற்றுள்ளமென்னுமிவறன்மையெற்றுள்ளு
மெண்ணப்படுவதொன்றன்று.

Griping avarice* is not to be reckoned as one among other faults; (it stands alone—greater than all). - - - 438

பரி. பொருளைவிடத்தகுமிடத்துவிடாதுபற்றுதலைச்செய்யுமுள்ளமாகியவு

* Lit. "Avarice, which is called a griping mind;" or more freely, "a griping, avaricious mind."

லோபத்தினது தன்மை குற்றத்தன்மைகளெல்லாவற்றுள்ளும் வைத்தெண்ணப்படுவதொன்றன்று மிக்கதென்றவாறு.

வி. இவறலது தன்மையாவது குணங்களெல்லாமொருங்குளவாயினுமவற்றைக் கீழ்ப்படுத்துத்தான் மேற்படவல்லவியல்பு ஒழிந்தனவது மாட்டாமையினெற்றுள்ளுமெண்ணப்படுவதொன்றன்றென்றார். எயற்றுள்ளுமென்பதிடைக்குறைந்துநின்றது. இவையிரண்டுபாட்டானுமுலோபத்தினதுநிலைமைகூறப்பட்டது.

பு. பற்றுள்ளமென்னும்-பொருளைவிடவேண்டியவிடத்து விடாதுபிடித்திருப்பதைச்செய்யுமனமாகிய, இவறன்மை-உலோபத்தினதுகுணம், எற்றுள்ளும்-எல்லாக்குற்றங்களுள்ளும், எண்ணப்படுவதொன்றன்று. வைத்தெண்ணப்படுவதொருகுற்றமன்றுமிகப்பெரிது, எ-று.

வி. உலோபத்தின்தன்மையாவது, எல்லா நற்குணங்களுமுளவாயினும் அவற்றைக்கீழாக்கித்தான் மேலாகவல்லதன்மை. ஒழிந்தகுணங்கள் அதுசெய்யமாட்டாமையால் எற்றுள்ளுமெண்ணப்படுவதொன்றன்றென்றார். எவற்றுள்ளுமென்பது,எற்றுள்ளுமென இடைக்குறைந்துநின்றது. இவையிரண்டுபாட்டாலும் உலோபத்தினது தீமைசொல்லப்பட்டது.

௯. வியவற்கவெஞ்ஞான்றுந்தன்னை நயவற்க
நன்றிபயவாவினை.

Let not (a king) praise himself, at any time; let him not desire to do useless things. - - - - - - - 439

பரி. தானிறப்பவுயர்ந்தஞான்றுமதத்தாற்றன்னைநன்குமதியாதொழிக தனக்குநன்மைபயவாவினைகளைமனத்தால்விரும்பாதொழிகவென்றவாறு.

வி. தன்னைவியந்துழியிடனுங்காலமும்வலியுமறியப்படாமையானுமறனும்பொருளுமிழப்படுதலானுமெஞ்ஞான்றும்வியவற்கவென்றுங்கருதியது முடித்தேவிடுவலென்றற்பொருளின்பங்கள்பயவாவினைகளைநயப்பினவற்றாற்பாவமும்பழியுங்கெடுவருமாதலினவற்றைநயவற்கவென்றுங்கூறினார். இதனான்மதமானங்களின்குற்றங்கூறப்பட்டது.

பு. எஞ்ஞான்றும்-தானதிகமாகவுயர்ந்தகாலத்திலும், வியவற்கதன்னை-மதத்தினாலேதன்னைமேன்மையாகப்பேசுதலொ

ழிக, நன்றிபயவாவினை-தனக்கு நன்மைதராதவினைகளை, நயவற்க-மனசினாலேவிரும்புதலொழிக, எ-று.

வி. தன்னைத்தானே மேன்மைப்படுத்தியபோது இடமும் காலமும்வலியும் அறியப்படாமையாலும் அறமும்பொருளும் இகழப்படுதலாலும் எஞ்ஞான்றும் வியவற்கவென்றும், நினைத்ததுமுடித்தே விடுவனென்று அறம்பொருளின்பங்கள் பயவாதவினைகளை நயப்பாராயின் அவற்றினாலே பாவமும்பழியுங்கேடும்வருமாதலால் அவற்றை நயவற்கவென்றுஞ்சொன்னார். இதினாலே மதமானங்களின் குற்றங்கூறப்பட்டது.

௰. காதலகாதலறியாமையுய்க்கிற்பி
னேதிலவேதிலார் நூல்.

If (a king) enjoys privately* the things which he desires, the designs of his enemics will be useless. - - - - 440

பரி. தான்காதலித்தபொருள்களையவர்க்காதலறியாமலநுபவிக்கவல்லனாயின் பகைவர்தன்னைவஞ்சித்தற்கெண்ணுமெண்ணம்பழுதாமென்றவாறு.

வி. அறிந்தவழிப்பகைவரவைவாயிலாகப்புகுந்துவஞ்சிப்பாராகலினறியாமலுய்த்தால்வாயிலின்மையின்வஞ்சிக்கப்படாதென்பதாம். காமம்வெகுளியுவகையென்பன முற்றக்கடியுங்குற்றமன்மையினிதனாற்பெரும்பான்மைத்தாகியகாமநுகருமாறு கூறியேனைச்சிறுபான்மையவற்றிற்பொதுவகைவிலக்கினையே கொண்டொழிந்தார்.

பு. காதல-தானாசைப்பட்டபொருள்களை, காதலறியாமை-அவரந்த ஆசையையறியாமல், உய்க்கிற்பின்-அநுபவிக்கவல்லவனாயின், ஏதிலார் நூல்-பகைவர்தன்னைவஞ்சிப்பதற்கு எண்ணுமெண்ணம், ஏதில-பழுதாம், எ-று

வி. அறிந்தபோது அதுகாரணமாக நுழைந்துவஞ்சிப்பாராதலால் அறியாமலநுபவித்தால் வஞ்சிக்கப்படாதென்பதாம். காமம், குரோதம், களிப்பு, என்பனமுழுதுங்களையவேண்டியகுற்றமல்லவாதலால் இதினாலே பெரும்பான்மையாகி

* அறியாமை, so as that others may not know.

யகாமம் அநுபவிக்குந்தன்மைசொல்லி மற்றச்சிறுபான்மை யாகியவுயிர்க்குப்பொதுவகைவிலக்கையேவைத்தொழிந்தார்.

---

௪௫. அதிகாரம். CHAPTER XLV.

பெரியாரைத்துணைக்கோடல்.

ON PROCURING THE AID OF GREAT MEN.*

பரி. அஃதாவது, மூவிருகுற்றமுமுறைமையிற்கடிதலிற்காவற்சாகாடுகைத்தற்குரியனாயவரசன்றீநெறிவிலக்கிநன்னெறிச்செலுத்தப்பேரறிவுடையாரைத்தனக்குத்துணையாகக்கோடல் அதிகாரமுறைமையுமிதனானேவிளங்கும். பேரறிவுடையராவாரரசர்க்குமங்கங்கட்குமானிடத்தெய்வக்குற்றங்கள்வாராமற்காத்தற்குரியவமைச்சர்புரோகிதர்.

அதாவது, அறுவகைக்குற்றங்களுமுறையே விலக்குதலால் அரசனீதியாகிய இரதத்தைச்செலுத்துதற்கு உரியவனாகிய அரசன் தீதாகிய நெறியைவிலக்கி நன்னெறியிலே நடப்பிக்கும் பேரறிவுடையாரைத்தனக்குத் துணையாகக்கொள்ளுதல். அதிகாரமுறையுமிதனாலேவிளங்கும். பேரறிவுடையராவார், அரசர்க்கும் அங்கங்களுக்கும் மானிடக்குற்றம் தெய்வக்குற்றம் வாராமற்காத்தற்கு உரிய அமைச்சர் புரோகிதராம்.

௧. அறனறிந்துமூத்தவறிவுடையார்கேண்மை
திறனறிந்துதேர்ந்துகொளல்.

Let (a king) ponder well its value, and† secure the friendship of men of virtue and of mature knowledge.‡ - - - 441

பரி. அறத்ததுநுண்மையையறிந்துதன்னின்மூத்தவறிவுடையாரதுகேண்மையையரசனதனதருமையையோர்ந்துகொள்ளுந்திறமறிந்துகொள்கவென்றவாறு.

---

* i. e. says the Scholiast, "men great in knowledge."

† The Scholiasts add "after having known the best means (of accomplishing it)."

‡ Men acquainted with the nature of duty and of virtue.

வி அறநுண்மைநூலானேயன்றியுய்த்துணர்வானுமறியவேண்டுதலினறனறிந்தென்றார் மூத்தல்உருவானுஞ்சீலத்தானுங்காலத்தானுமுதிர்தல் அறிவுடையார் நீதியையுமுலகியலையுமறிதலையுடையார் திறனறிதலாவதுநன்குமதித்தலுயரச்செய்தலவர்வழிநிற்றலென்பனமுதலாகவவர்பிணிப்புண்ணுந்திறமறிந்துசெய்தல்.

பு. அறனறிந்து-தருமத்தினதுநுட்பத்தையறிந்து, மூத்தவறிவுடையார்கேண்மை-தன்னைப்பார்க்கிலுமுதிர்ந்த அறிவுடையவரதுநட்பை, தேர்ந்து-அரசனதினுடைய அருமையையோர்ந்து,திறனறிந்துகொளல்-கொள்ளும்வகையறிந்துகொள்க, எ-று.

வி. தருமத்தினதுநுட்பம், சாத்திரங்களாலன்றிநுண்ணறிவானுமறியவேண்டுதலால் அறனறிந்தென்றார். மூத்தல், உருவத்தினும் ஆசாரத்தினுங்காலத்தினும் முதிர்தல். அறிவுடையார், நீதியையும்உலகநடையையும் அறிதலையுடையவர். திறனறிதலாவது,உபசரித்தல், உயரச்செய்தல், அவர்வழிநிற்றல் என்பவைமுதலாக அவர்கட்டுப்பட்டு நிற்குந்திறமறிந்து செய்வது.

உ உற்றநோய்நீக்கியுறாஅமைமுற்காக்கும்
பெற்றியார்ப்பேணிக்கொளல்.

Let (a king) procure and kindly care* for men who can† overcome‡ difficulties when they occur, and guard against them before they happen. - - - - - - - - 442

பரி. தெய்வத்தானுமக்களானுந்தனக்குவந்ததுன்பங்களைநீக்குமாறறிந்துநீக்கிப்பின்னப்பெற்றியனயாராவன முன்னறிந்துகாக்கவல்லதன்மையினையுடையாரையரசனுவப்பனசெய்துதுணையாகக்கொள்கவென்றவாறு.

வி. தெய்வத்தான்வருந்துன்பங்களாவனமழையின்மைமிகுதிகளானுங்காற்றுத்தீபிணியென்றிவற்றானும்வருவன. அவை கடவுளையுந்தக்கோரையு

---

* பேணல், desire; keep; protect. Let him act so as to please them, say the Scholiasts.

† பெற்றியார், whose disposition (enables them), &c.

‡ நீக்குப், remove

நோக்கிச்செய்யுஞ்சாந்திகளானீக்கப்படும். மக்களான்வருந்துன்பங்களாவனபகைவர்கள்வர்சுற்றத்தார்வினைசெய்வாரென்றிவர்களான்வருவன அவைசாமபேததானதண்டங்களாகியநால்வகையுபாயத்துளேற்றதனானீக்கப்படும். முற்காத்தலாவதுதெய்வத்தான்வருமவற்றையுற்பாதங்களானறிந்துசாந்திகளாற்காத்தலுமக்களான்வருமவற்றையவர்குணமிங்கிதமாகாரஞ்செயலென்பனவற்றானறிந்தவ்வுபாயங்களுளொன்றாற்காத்தலுமாம் ஆகவேபுரோகிதரையுமமைச்சரையுங்கூறியவாறாயிற்று இங்கிதங்குறிப்பானிகழுமுறுப்பின்றொழில் ஆகாரங்குறிப்பின்றிநிகழும்வேறுபாடு. உவப்பனநன்குமதித்தன்முதலாயின இவையிரண்டுபாட்டானும்பெரியாரதிலக்கணமுமவரைத்துணையாகக்கோடல்வேண்டுமென்பதுங்கொள்ளுமாறுங்கூறப்பட்டன.

பு. உற்றநோய்நீக்கி-தெய்வத்தினாலாவது மனிதராலாவது தனக்குவந்த துன்பங்களை நீக்கும்வகையறிந்து நீக்கி, உறாமை- பின்பு அவைவாராதபடிக்கு, முற்காக்கும்பெற்றியார் - முன்னேதானேயறிந்துகாக்கவல்லகுணத்தையுடையவரை, பேணிக்கொளல்-அரசன் அவர்மகிழ்ச்சிகூர்தற்குஉரியனவற்றைச்செய்து துணையாகக்கொள்க, எ-று.

வி. தெய்வத்தால் வருந்துன்பங்களாவன, மழையில்லாமையினாலும் மிகுமழையாலும் காற்றுத் தீபிணியென்றிவற்றாலும்வருவன. அவை, கடவுளரையும் பெரியோரையும் குறித்துச்செய்யுஞ்சாந்திகளாலேநீக்கப்படும். மனிதரால்வருந்துன்பங்களாவன, பகைவர்கள்வர்சுற்றத்தார்தொழில்செய்வோரென்றிவர்களால்வருவன. அவை, சாமபேததானதண்டங்களாகிய நால்வகையுபாயத்துள் ஏற்றதினாலேநீக்கப்படும். முற்காத்தலாவது, தெய்வத்தினால்வருந்துன்பங்களைத்தூமகேதுமுதலாகியமுன்னடையாளங்களாலறிந்துசாந்திகளாற்காத்தலும், மனிதரால்வருந்துன்பங்களைஅவருடையகுணம் இங்கிதம் ஆகாரம்செயல் என்பனவற்றாலறிந்து உபாயங்களாற்காத்தலுமாம். ஆகவேஇதுபுரோகிதரையும்மந்திரிகளையுங்குறித்துச்சொன்னபடியாயிற்று. இங்கிதம், குறிப்பினாலேயுண்டாகின்றஅவயவத்தின்தொழில். ஆகாரம், குறிப்பின்றியுண்டாகின்றசரீரவேறுபாடு. உவப்பன, நன்குமதித்தல்முதலாயின. இவையிரண்டுபாட்டாலும்பெரியாரது இலக்கணமும் அவரைத்துணை

யாகக்கொளல்வேண்டுமென்பதுங்கொள்ளுந்திறமுங் கூறப்பட்டன.

௩. அரியவற்றுளெல்லாமரிதேபெரியாரைப்
பேணித்தமராக்கொளல்.

To cherish great men and make them his own, is the most difficult of all difficult things. - - - - - - 443

பரி. அப்பெற்றியவர்களையவருவப்பனவறிந்துசெய்துதமக்குச்சிறந்தாராகக்கொள்ளுதலரசர்க்கரியபேறுகளெல்லாவற்றுள்ளுமரிதென்றவாறு.

வி. உலகத்தரியனவெல்லாம்பெறுதற்குரியவரசர்க்கிப்பேறுசிறந்ததென்றதிதனாலவையெல்லாமுளவாதனோக்கி.

பு. பெரியாரை-அந்தக்குணமுடையவர்களை,பேணி-அவர் மகிழ்தற்குரியனவற்றைச்செய்து, தமராக்கொளல்-தமக்குச் சிறந்தவராகக்கொள்வது, அரியவற்றுளெல்லாமரிது-அரசர்க் கு அருமையாகியபேறுகளெல்லாவற்றுள்ளும்அரிது, எ-று.

வி. உலகத்திலே யருமையாயினவற்றையெல்லாம் பெறு தற்குரிய அரசர்க்கு இப்பேறுசிறந்ததென்றது இதினாலேயவை யெல்லாமுண்டாதலைக்குறித்தெனக்காண்க.

௪. தம்மிற்பெரியார்தமராவொழுகுதல்
வன்மையுளெல்லாந்தலை.

So to act as to make those men, his own, who are greater than himself, is of all power the highest. - - - - 444

பரி. அறிவுமுதலியவற்றாற் றம்மின்மிக்காரைத்தமக்குச்சிறந்தாராகக்கருதித்தாமவர்வழிநின்றொழுகுதலரசர்க்கெல்லாவலியுடைமையினுந்தலையென்றவாறு.

வி. பொருள்படையரண்களாகியவலியினுமித்துணை வலிசிறந்ததென்றதிவரவற்றானீக்கப்படாததெய்வத்துன்பமுதலியநீக்குதற்குரியராகலின்.

பு. தம்மிற்பெரியார் - (அறிவுமுதலியவற்றாலே) தம்மி லுயர்ந்தோர், தமராவொழுகுதல்-தமக்குச்சிறந்தவராகநினை

த்துத்தாமவர்வழியிலேநடப்பது, வன்மையுளெல்லாந்தலை-அரசர்க்கு எல்லாவலியுடைமைகளினுந்தலைமையாகிய வலியுடைமையாம், எ-று.

வி. பொருள், படை, அரண்களாலாகியவலிமையினும் இப்பெரியாரைத்துணைக்கோடலாகியவலிமை சிறந்ததென்றது, அவற்றாலே நீக்கப்படாததெய்வத்துன்பமுதலியவற்றையிவர் நீக்குதற்கு உரியவராதலாலெனக்காண்க.

ரு. சூழ்வார்கண்ணாகவொழுகலான்மன்னவன்
சூழ்வாரைச்சூழ்ந்துகொளல்.

As a king must use his ministers as eyes (in managing his kingdom), let him well examine their (character and qualifications) before he engages them. - - - - - - 445

பரி. தன்பாரமமைச்சரைக்கண்ணாகக்கொண்டுநடத்தலானரசனத்தன்மையராயவமைச்சரையாராய்ந்துதனக்குத்துணையாகக்கொள்கவென்றவாறு.

வி. இரண்டாவதுவிகாரத்தாற்றொக்கது. தானேசூழவல்லனாயினுமளவிறந்ததொழில்களானாகுலமெய்துமரசன்பாரமதுவேதொழிலாயவமைச்சரானல்லதினிதுநடவாமைபற்றியவரைக்கண்ணாக்கிக்கூறினார். ஆராய்தலமைச்சியலுட்சொல்லுமிலக்கணத்தொன்பதனையாராய்தல். இவைமூன்றுபாட்டானும்பெரியாரைத்துணைக்கோடலின்சிறப்புக்கூறப்பட்டது.

பு. சூழ்வார்கண்ணாகவொழுகலான்-தன்பாரமந்திரிகளைக் கண்ணாகக்கொண்டுநடத்தலால், சூழ்வாரை-அத்தன்மையராகியமந்திரிகளை, மன்னவன்சூழ்ந்துகொளல்-அரசனாராய்ந்து தனக்குத்துணையாகக்கொள்க, எ-று.

வி. சூழ்வாரைக்கண்ணாகவென்னும் ஐயுருபு, விகாரத்தாற்றொக்கது. தானேயாராயவல்லவனாயினும் அளவற்றதொழில்களினாலே துன்பமடையும் அரசனதுபாரம் அதுவேதொழிலாகியமந்திரிகளாலல்லதுஇனிதுநடவாமைநோக்கி அவரைக்கண்ணாக்கிக்கூறினார். ஆராய்தல், அமைச்சியலிலேசொல்லுமிலக்கணத்தொன்பதை ஆராய்தல். இவைமூன்றுபாட்டானும்பெரியாரைத்துணைக்கொள்ளுதலின் சிறப்புக்கூறப்பட்டது.

௬. தக்காரினத்தனாய்த்தானொழுகவல்லானைச்
செற்றார்செயக்கிடந்ததில்.

There will be nothing left for enemies to do, against him who has the power of acting (so as to secure) the fellowship of worthy men. - - - - - - - - - 446

பரி. தக்காராகியவினத்தையுடையனாய்த்தானுமறிந்தொழுகவல்லவரசனைப் பகைவர்செய்யக்கிடந்ததொருதுன்பமுமில்லையென்றவாறு.

வி. தக்காரறிவொழுக்கங்களாற்றகுதியுடையார் ஒழுகலறநீதிகளினெறிவழுவாமனடத்தல். வஞ்சித்தல்கூடினரைப்பிரித்தல்வேறுபகைவிளைத்தலென்றிவற்றானும்வலியானும்பகைவர்செய்யுந்துன்பங்கள்பலதிறத்தவாயினுந்தானுமறிந்தறிவார் சொல்லுங்கொண்டொழுகுவான்கணவற்றுளொன்றும்வாராவென்பார்செற்றார்செயக்கிடந்ததில்லென்றார்.

பு. தக்காரினத்தனாய்-பெரியோராகியஇனத்தையுடையவனாகி, தானொழுகவல்லானை-தானுமறிந்துநடக்கவல்லஅரசனை, செற்றார்-பகைவர், செயக்கிடந்ததில்-செய்யவிருந்ததொருதுன்பமுமில்லை, எ-று.

வி. ஒழுகல், தருமநீதிகளிலேவழுவாதுநடத்தல். வஞ்சித்தல்,கூடியவரைப்பிரித்தல்,வேறுபகைவிளைத்தல்,எனவிவற்றினானும் வலிமையானும் பகைவர்செய்யுந் துன்பங்கள்பலவகையாயினும் தானுமறிந்துஅறிவார்சொல்லையுங்கொண்டுநடப்பவனிடத்தில் அவற்றுளொன்றாயினும் வாராதென்றுசொல்லவந்தவர், செற்றார்செயக்கிடந்ததில்லென்றார்.

௭. இடிக்குந்துணையாரையாள்வாரையாரே
கெடுக்குந்தகைமையவர்.

Who are great enough to destroy him who rules over servants that (have power to) rebuke him? - - - - 447

பரி. தீயனகண்டாலெருங்கிச்சொல்லுந்துணையாந்தன்மையையுடையாரை யிவர்நமக்குச்சிறந்தாரென்றாளுமரசரைக்கெடுக்கும்பெருமையுடையபகைவருலகத்தியாவரென்றவாறு.

வி. தீயனபாவங்களுநீதியல்லனவும். துணையாந்தன்மையாவதுதமக்கவையின்

மையுமரசன்கணன்புடைமையுமாம். அத்தன்மையார்நெறியினீங்கவிடாமை யினவரையாளுமரசனொருவராற்றுனுங்கெடானென்பதாம். நெருங்கிச்சொல் லுமளவினேரையென்றுரைப்பாருமுளர். இவையிரண்டுபாட்டானுமதன்பய ன் கூறப்பட்டது.

பு. இடிக்குந்துணையாரை-(தீயவைகண்டால்) நெருங்கிச் சொல்லுந்துணையாந்தன்மையையுடையவரை, ஆள்வாரை-(இ வர்நமக்குச்சிறந்தவரென்று) ஆளுமரசனை, கெடுக்குந்தகை மையவர்யார்-கெடுக்கும்பெருமையையுடையபகைவர் உலகத் திலேயாவர், எ-று.

வி. தீயவை,பாவங்களும்நீதியல்லனவும். துணையாந்தன்மை யாவது, தம்மிடத்தவையில்லாமையும் அரசனிடத்தன்புடை மையுமாம். அந்தத்தன்மையையுடையவர் நன்னெறிவிலகவி டாமையால் அவரையாளுமரசர் ஒருவிதத்தினுலுங்கெடாரென் பதாம். இடிக்குந்துணையாரையென்பதற்குநெருங்கிச்சொல் லுமளவினேரையென்றுரைப்பாருமுண்டு. இவையிரண்டுபா ட்டாலும்பெரியாரைத்துணைக்கோடலின்பயன்கூறப்பட்டது.

அ. இடிப்பாரையில்லாதவேமராமன்னன்
கெடுப்பாரிலானுங்கெடும்.

The king, who is without the guard of men who can rebuke him, will perish, even though there be no one to destroy him. - 448

பரி. கழறுதற்குரியாரைத்தனக்குத்துணையாகக்கொள்ளாமையிற்காவலற்ற வரசன்பகையாய்க்கெடுப்பாரில்லையாயினுந்தானேகெடுமென்றவாறு.

வி. இல்லாதவேமராதவென்பனபெயரெச்சவடுக்கு. கெடுப்பாருளராவரென் பதுதோன்றவில்லாயினுமென்றார். தானேகெடுதலாவதுபாகனில்லாதயானை போலநெறியல்லாநெறிச்சென்றுகெடுதல்.

பு. இடிப்பாரை-உறுதிகூறுதற்கு உரியவரை, இல்லாத-த னக்குத்துணையாகக்கொள்ளாததினலே, ஏமராமன்னன்-காவ லற்றவரசன், கெடுப்பாரிலானும்-பகையாய்க்கெடுப்பவரில்லை யாயினும், கெடும்-தானேகெடுவான், எ-று.

வி. இல்லாத, ஏமாராத, வென்பன பெயரெச்சவினைகள் அடுக்கிநின்றன. கெடுப்பாருளராவரென்பதுதோன்ற, கெடுப்பாரிலானுமென்றார். இல்லாயினுமென்பது, இலானுமென விகாரப்பட்டுநின்றது. தானேகெடுதலாவது, பாகனில்லாதயானைபோலவழியல்லாத வழியிலேபோய்க்கெடுதல்.

௯. முதலிலார்க்கூதியமில்லைமதலையாஞ்
சார்பிலார்க்கில்லைநிலை.

There can be no gain to those who have no capital ; and there can be no permanence to those who are without the support of adherents. - - - - - - - - - 449

பரி. முதற்பொருளில்லாதவணிகர்க்கதனால்வருமூதியமில்லையாமதுபோலத்தம்மைத்தாங்குவதாந்துணையில்லாதவரசர்க்கதனால்வருநிலையில்லையென்றவாறு.

வி. முதலைப்பெற்றேயிலாபம்பெறவேண்டுமாறுபோலத்தாங்குவாரைப்பெற்றேநிலைபெறவேண்டுமென்பதாம். நிலையரசர்பாரத்தோடுசலியாதுநிற்றல்.

பு. முதலிலார்க்கு - முதற்பொருளில்லாதவணிகர்க்கு, ஊதியமில்லை-(அதனாலுண்டாகப்பட்ட) ஆதாயமில்லையாம், (அதுபோல) மதலையாஞ்சார்பிலார்க்கு-தம்மைத்தாங்குவதாகிய துணையில்லாதவரசர்க்கு, இல்லைநிலை - அதனால்வரும்நிலையில்லை, எ-று.

வி. முதலைப்பெற்றே யிலாபம் பெறவேண்டுவதுபோலத் தாங்குவாரைப்பெற்றே நிலைபெறவேண்டுமென்பதாம். நிலையாவது, அரசர்பாரத்தோடுசலியாது நிற்பது.

௰. பல்லார்பகைகொளலிற்பத்தடுத்ததீமைத்தே
நல்லார்தொடர்கைவிடல்.

It is tenfold more injurious to abandon the friendship of the good, than to incur the hatred of the many. - - 450

பரி. நான்றனியனாய்வைத்துப்பலரோடும்பகைகொள்ளுதலிற்பதிற்றுமடங்கு தீமையுடைத்தரசன்பெரியாரோடுநட்பினைக்கொள்ளாதொழிதலென்றவாறு.

வி. பலர்பகையாயக்கான்மோதிமுள்ளொடுமுட்பகைகண்டிடல்பேதுசெய்துபிளந்திடலென்பவையல்லதொருங்குவினையாக்குதறீதுசெய்தாலுமொருவாற்றானுய்தல்கூடுநல்லோர்தொடர்கைவிட்டாலொருவாற்றானுமுய்தல்கூடாமையினிதுசெய்தலதனினுந்தீதென்பதாம். இவைமூன்றுபாட்டானுமது செய்யாதவழிப்படுங்குற்றங்கூறப்பட்டது.

பு. பல்லார்பகைகொளலின்-(தான்தனியனாயிருந்து) பலரோடும்பகைகொள்ளுதலினும், பத்தடுத்ததீமைத்து-பத்துப்பங்குஅதிகமானதீமையையுடையது, நல்லார்தொடர்கைவிடல்-அரசன்பெரியோருடைய நட்பினைவிட்டிருத்தல், எ-று.

வி. பலர்பகையாயினபோது மொருவிதத்தாற்பிழைக்கக்கூடும். நல்லோர்தொடர்கைவிட்டாலொருவிதத்தினாலும்பிழைக்கக்கூடாமையாற் பல்லார்பகையினுமிதுதீதென்பதாம். இவைமூன்றுபாட்டாலும்பெரியாரைத்துணைக்கொள்ளாதபோது உண்டாகுங்குற்றங்கூறப்பட்டது.

௪௬. அதிகாரம். CHAPTER XLVI.

சிற்றினஞ்சேராமை.

AGAINST ASSOCIATING WITH EVIL PERSONS.*

அஃதாவது சிறியவினத்தோடுபொருந்தாமை. சிறியவினமாவதுநல்லதனலனுந்தீயதன்தீமையுமில்லென்பொரும்விடருந்தூர்த்தருமுதலாயினகுழு. அறிவைத்திரித்திருமையுங்கெடுக்குமியல்பிற்றாயவதனைப்பொருந்திற் பெரியாரைத்துணைக்கோடல்பயனின்றென்பதுணர்த்துதற்கிஃததன்பின்வைக்கப்பட்டது.

அதாவது, சிறிய இனத்தோடுபொருந்தாமை. சிறிய இனமாவது, நல்லதில் நன்மையும் தீயதில்தீமையும் இல்லையென்பாரும்,விடரும், தூர்த்தருமுதலாயினகூட்டம். அறிவைக்கெ

---

* சிற்றினம், little, mean associates. These are said to be such as say, "there is no good in goodness, and no evil in vice; the licentious; the vile."

டுத்து இம்மைமறுமையின்பங்களையுங் கெடுக்குந்தன்மையை யுடையதாகிய அதனைப்பொருந்தினும் பெரியாரைத் துணைக் கொள்வதுபயனின்று என்பதுதெரிவித்தற்கு இது அதன்பின் வைக்கப்பட்டது.

க. சிற்றினமஞ்சும்பெருமைசிறுமைதான்
சுற்றமாச்சூழ்ந்துவிடும்.

(True) greatness fears the society of the base; it is only the low-minded* who will regard them as friends. - - 451

பரி. பெரியோரியல்புசிறியவினத்தையஞ்சாநிற்குமேனைச்சிறியோரியல்பது சேர்ந்தபொழுதேயதனைத்தனக்குச்சுற்றமாகவெண்ணியொழியுமென்றவாறு.

வி. தத்தமறிவுதிரியுமாறுமதனாற்றமக்குவருந்துன்பமுநோக்கலினறிவுடையாரஞ்சுவரொன்றுமறிவொற்றுமையாற்பிறிதுநோக்காமையினறிவிலார்தமக்குச்சுற்றமாகத்துணிவரென்றுங்கூறினார். பொருளின்றொழில்கள்பண்பின்மேனின்றன. இதனாற்சிறியவினம்பெரியார்க்காகாதென்பதுகூறப்பட்டது.

பு. சிற்றினமஞ்சும்பெருமை-பெரியோருடைய சுபாவகுணமானது சிறியவினத்தைக்கண்டு அஞ்சாநிற்கும், சிறுமைதான்-மற்றச்சிறியோருடையசுபாவகுணமானது,' சுற்றமாச் சூழ்ந்துவிடும் - அந்தச்சிற்றினஞ்சேர்ந்தவுடனேயதைத்தனக்குச்சுற்றமாகவேயெண்ணித்தழுவிக்கொளல், எ-று.

வி. தங்கள் தங்களறிவுவேறுபடுகின்றவிதமும், அதினாலே தங்களுக்குவருகின்றதுன்பமும்நோக்கலால் அறிவுடையாரஞ்சுவரொன்றும், அறிவுஒருமைப்பட்டிருத்தலால் வேறுபாடறியாமையின் அறிவிலார் சுற்றமாகச்சூழ்வரென்றுங்கூறினார். பெருமைசிறுமையென்னும் பண்பின்மேல் அப்பண்புடைய பொருள்களின்றொழில்கள் நின்றன. இதினாலே சிற்றினம்பெரியார்க்கு ஆகாதென்பதுகூறப்பட்டது.

---

* சிறுமை, littleness.

௨. நிலத்தியல்பானீர்திரிந்தற்றுமாந்தர்க்
கினத்தியல்பதாகுமறிவு.

As water changes (its nature) from the nature of the soil (in which it flows), so will the character* of men resemble the character† of their associates. - - - - - - 452

பரி. தான்சேர்ந்தநிலத்தினதியல்பானே நீர்தன்றன்மைதிரிந்தந்நிலத்தின் றன்மைத்தாமதுபோல மாந்தர்க்குத் தாஞ்சேர்ந்த வினத்தியல்பானே யறிவுந் தன்றன்மைதிரிந்தவ்வினத்தின்றன்மைத்தாமென்றவாறு.

வி. எடுத்துக்காட்டுவமை. விசும்பின்கட்டன்றன்மைத்தாயநீர்நிலத்தோடுசேர்ந்தவழிநிறஞ்சுவைமுதலியபண்புகடிரிந்தாற்போலத்தனிநிலைக்கட்டன்றன்மைத்தாயவறிவுபிறவினத்தொடுசேர்ந்தவழிக் காட்சிமுதலியதொழில்கடிரியுமென விதனாலதனதுகாரணங்கூறப்பட்டது.

பு. நிலத்தியல்பான்-தான்சேர்ந்த நிலத்தினுடையகுணத்தினாலே, நீர்திரிந்தற்றாகும்-நீர்தன்குணம்வேறுபட்டு அந்த நிலத்தினுடையகுணமாகும்அதுபோல, மாந்தர்க்குஇயல்பறிவுஇனத்தாகும்-மனிதர்க்குத்தாஞ்சேர்ந்த இனத்தினுடையகுணத்தினாலேசுபாவஅறிவுதன்குணம்வேறுபட்டு அந்தஇனத்தின்குணத்தையுடைத்தாம், எ-று.

வி. இது, எடுத்துக்காட்டு உவமை. ஆகாயத்திலே தன்குணத்தையுடையதாகிய நீர்நிலத்தோடுகூடியபோது நிறம் சுவை முதலியபண்புகள் வேறுபட்டாற்போலத்தனித்தபோது தன் குணத்தையுடைய அறிவுபிறவினத்தோடுசேர்ந்தபோது காண்பதுமுதலியதொழில்கள் வேறுபடுமென இதினாலேயதினுடைய காரணஞ்சொல்லப்பட்டது.

௩. மனத்தானாமாந்தர்க்குணர்ச்சியினத்தானா
மின்னானெனப்படுஞ்சொல்.

The power of knowing is from the mind; (but) from a man's associates will be determined what sort of a man he is.‡ - 453

பரி. மாந்தர்க்குப்பொதுவுணர்வுதம்மனங்காரணமாகவுண்டாமிவனித்தன்

---

* அறிவு, knowledge. † இயல்பு, nature.

‡ *i. e.* The general faculty of knowledge is from the mind; the special character of a man is known by his associates.

Y

மையனென்றுலகத்தாராற்சொல்லப்படுஞ்சொல்லினங்காரணமாகவுண்டாமெ
ன்றவாறு.

வி. இயற்கையாயபுலனுணர்வுமாத்திரத்திற்கினம்வேண்டாமையினதனைம
னத்தானுமென்றுஞ்செயற்கையாயவிசேடவுணர்வுபற்றிநல்லனென்றுகத்திய
னென்றுகநிகழுஞ்சொற்கினம்வேண்டுதலினதனையினத்தானுமென்றுங்கூறினார்.
உவமையளவைகொள்ளாத்திரிபுமனத்தானுமென்பாரைநோக்கியிதனைமா
றுத்துக்கூறப்பட்டது

பு. மனத்தானுமாந்தர்க்குணர்ச்சி-மனிதர்க்குப்பொதுவா
கியவுணர்வுதங்களுடைய மனங்காரணமாகவுண்டாகும், இனத்
தானுமின்றனெனப்படுஞ்சொல் - இவனித்தன்மையனென்று
உலகத்தாராலேசொல்லப்படுஞ் சொல்லினங்காரணமாகவுண்
டாகும், எ-று.

வி. இயற்கையாகிய ஐம்புலவுணர்வுமாத்திரத்திற்கு இனம்
வேண்டாததினாலேயதைமனத்தானுமென்றும், செயற்கைவி
சேடவுணர்வுபற்றி நல்லவனென்றுவது தீயவனென்றுவதுந
டக்குஞ்சொல்லுக்கு இனம்வேண்டுமாதலால் அதையினத்தா
னுமென்றுஞ்சொன்னார். உவமையளவைகொள்ளாதவேறுபா
டுமனத்தாலாமென்பாரைநோக்கி இதினாலேயதை மறுத்துச்
சொல்லப்பட்டது.

௪. மனத்துளதுபோலக்காட்டியொருவற்
கினத்துளதாகுமறிவு.

The knowledge* of a man, while it appears to be from his mind is (really) from his associates. - - - - - 454

பரி அவ்விசேடவுணர்வு ஒருவற்குமனத்தின்கண்ணேயுள்ளதாவதுபோலத்
தன்னைப்புலப்படுத்தியவன்சேர்ந்தவினத்தின்கண்ணேயுளதாமென்றவாறு.

வி. மெய்ம்மைநோக்காதமுன்மனத்துளதுபோன்றுகாட்டியும்பின்னோக்கிய
வழிப்பயின்றவினத்துள்ளதாயுமிருத்தலிற்காட்டியெனவிறந்தகாலத்தாற்கூறி
னார். விசேடவுணர்வுதானுமனத்தின்கண்ணேயன்றேயுள்ளதாவதென்பாரை
நோக்கியாண்டுப்புலப்படுந்துணையேயுள்ளததற்குமூலமினமென்பதிதனாற்கூற
ப்பட்டது.

---

* His special character.

பு. அறிவு-அந்தவிசேடவுணர்வு, மனத்துளதுபோலக்காட்டியொருவற்கு - ஒருவனுக்குமனத்திலேயுண்டாவதுபோலத் தன்னைத்தெரிவித்து, இனத்துளதாகும் - அவன்சேர்ந்தஇனத்திலேயுளதாம், எ-று.

வி. உண்மைகுறியாதமுன் மனத்துள்ளதுபோலே காட்டியும் பின்குறித்தபோது பழகியவினத்துள்ளதாகியுமிருத்தலாற்காட்டியெனஇறந்தகாலத்தாற்சொன்னார். விசேடவுணர்வு கூடமனத்திலேயல்லவா உண்டாவதென்பாரை நோக்கி அங்கேவெளிப்படுமளவுமேயுள்ளது அதற்குமூலம் இனமென்பது இதனாற்சொல்லப்பட்டது.

ரு. மனந்தூய்மைசெய்வினை தூய்மையிரண்டு
மினந்தூய்மை தூவாவரும்.

Chaste company is the staff on which come, these two things, purity of mind and purity of conduct. - - - - 455

பரி. அவ்விசேடவுணர்வுபுலப்படுத்தற்கிடனாயமனந்தூயனாதற்றன்மையுஞ் செய்யும்வினை தூயனாதற்றன்மையுமாகியவிரண்டுமொருவற்கினந்தூயனாதற்றன்மைபற்றுக்கோடாகவுளவாமென்றவாறு.

வி. மனந்தூயனாதலாவது விசேடவுணர்வுபுலப்படுமாறியற்கையாயவறியாமையினீங்குதல். செய்வினைதூயனாதலாவதுமொழிமெய்களாற்செய்யுநல்வினையுடையனாதல். தூயவெனபதப்பொருட்டாதல்தூவறத்துறந்தாரையென்பதனானுமறிக. ஒருவனினந்தூயனாகவேயதனோடுபயிற்சியைத்தான்மனந்தூயனாய தன்கண்விசேடவுணர்வுபுலப்பட்டதனாற்சொல்லுஞ்செயலுந்தூயனாமெனவிதனானினத்துள்ளதாமாறுகூறப்பட்டது.

பு. மனந்தூய்மை - (அந்தவிசேடவுணர்வுவெளிப்படுதற்கு இடமாகிய) மனம்பரிசுத்தமாகுந்தன்மையும், செய்வினைதூய்மை-செய்யுந்தொழில்பரிசுத்தமாகுந்தன்மையும், இரண்டும்-ஆகியவிவ்விரண்டும்,(ஒருவனுக்கு)இனந்தூய்மை-இனம்பரிசுத்தமாந்தன்மை, தூவாவரும்-பற்றுக்கோடாகவுண்டாம்,எ-று

வி. மனந்தூய்மையாவது,விசேடவுணர்வுவெளிப்படும்படிக்கு இயற்கையாகிய அறியாமையில்நீக்குதல். செய்வினைதூய்

மையாவது, வார்த்தையினாலுஞ் சரீரத்தினாலுஞ்செய்யும் நல்வினையுண்டாவது. தூயபற்றுக்கோடு என்பதை தூவறத்துறந்தாரென்பதினாலும் தூத்தூய்தூன்பற்றுக்கோடாமென்பது நிகண்டாதலாலுமுணர்க. ஒருவன் இனந்தூய்மையாகவேயத னொடுபழகுதலாலே மனந்தூய்மையாகியம்மனதிலே விசேடவுணர்வுவெளிப்பட்டு அதினாலேசொல்லுஞ்செயலுந் தூயனவாகவாவானெனவிதனாலினத்துள்ளதாந்தன்மைகூறப்பட்டது.

௬. மனந்தூயார்க்கெச்சநன்றாகுமினந்தூயார்க்
இல்லைநன்றாகாவினை.

To the pure-minded there will be a good posterity; by those whose associates are pure, no deeds will be done that are not good. - - - - - - - - - - - 456

பரி. மனந்தூயராயினோர்க்குமக்கட்பேறுநன்றாகுமினந்தூயராயினோர்க்குநன்றாகாதவினையாதுமில்லையென்றவாறு.

வி. காரியங்காரணத்தின்வேறுபடாமையினெச்சநன்றாகுமென்றுநல்வினத்தோடெண்ணிச்செய்யப்படுதலினெல்லாவினையுநல்லவாமென்றுங்கூறினார்.

பு. மனந்தூயார்க்கு-மனம்பரிசுத்தமாயினவர்க்கு, எச்சநன்றாகும்-மக்கட்பேறுநன்றாகும், இனந்தூயார்க்கு - இனம்பரிசுத்தமானவர்க்கு, நன்றாகாவினையில்லை - நனறாகாதவினையொன்றுமில்லை, எ-று.

வி. காரியமானதுகாரணத்தில் வேறுபடாமையால் எச்சநன்றுமென்றும், நல்வினத்தோடெண்ணிச்செய்யப்படுதலால் நன்றாகாவினையில்லையென்றுங்கூறினார்.

எ. மனநலமன்னுயிர்க்காக்கமினநல
மெல்லாப்புகழுந்தரும்.

Goodness of mind will give wealth, and good society will bring all praise, to men. - - - - - - - - 457

பரி நிலைபெற்றவுயிர்கட்குமனத்ததுநன்மைசெல்வத்தைக்கொடுக்குமினத்ததுநன்மையதனோடெல்லாப்புகழையுங்கொடுக்குமென்றவாறு.

வி. மன்னுயிரொன்றதீண்டுயர்திணைமேனின்றது. தருமென்னுமிடவழுவமைதிச்சொன் முன்னுங்கூட்டப்பட்டது. உம்மையிறந்ததுதழீஇயவெச்சவும்மை. மனநன்றுதருமேயமமாகலினதனையாக்கந்தருமென்றும்புகழ்கொடுத்தற்குரிய நல்லோர்தாமேயினமாகலினினநலமெல்லாப்புகழுந்தருமென்றுங்கூறினார். மேன்மனநன்மையினநன்மைபற்றிவருமென்பதனையுட்கொண்டஃதியல்பாகவே யுடையார்க்கவ்வினநன்மைவேண்டாவென்பாரைநோக்கியதுவேயன்றியத்தன் மையபலவற்றையுந்தருமெனவவர்க்குமதுவேண்டுமென்பதிவ்விரண்டுபாட்டானுங்கூறப்பட்டது.

பு. மன்னுயிர்க்கு-நிலைபெற்றவுயிர்களுக்கு, மனநலம்-மனத்தினுடையநன்மையானது. ஆக்கந்தரும் - செல்வத்தைக் கொடுக்கும், இனநலம்-இனத்தினதுநன்மையானது, எல்லாப் புகழுந்தரும்-(அதனோடே) எல்லாப்புகழையுங்கொடுக்கும், எ-று.

வி. மன்னுயிரொன்றது,இங்கேவுயர்திணைமேல்நின்றது. தருமென்றது,இடவழுவமைதியாய்ப்படர்க்கையிலேவந்தது. அது ஆக்கந்தருமென முன்னுங்கூட்டப்பட்டது. புகழும்என்றவும்மை, முன்போனஆக்கமுமன்றியெனநிற்றலால்இறந்ததுதழீஇயஎச்சவும்மை. மனம்நன்றுதலேதருமமாதலால், அதைஆக்கந்தருமென்றும், புகழ்கொடுப்பதற்கு உரியநல்லோர்தாமேயினமாதலால், இனநலமெல்லாப்புகழுந் தருமென்றுங்கூறினார். மேலேமனநன்மையினநன்மைபற்றிவருமென்றதையுட்கொண்டு அதுஇயல்பாகவேயுடையார்க்கு அந்தஇனநன்மை வேண்டாவென்பாரைநோக்கி அதுவேயன்றி அத்தன்மையுடையனபலவற்றையுந்தரும் என்று அவர்க்கும் அதுவேண்டுமென்பது இந்தவிரண்டுபாட்டானுங்கூறப்பட்டது.

அ. மனநலனன்குடையராயினுஞ்சான்றோர்க்
கினநலமேமாப்புடைத்து.

Although they may have great (natural) goodness of mind, yet good society is an advantage to the wise. - - - 458

பரி. மனநன்மையைமுன்னைநல்வினையாற்றாமேயுடையராயினுமமைந்தார்க்கினநன்மையதற்குவலியாதலையுடைத்தென்றவாறு.

வி. நன்காலென்னுமூன்றனுருபுவிகாரத்தாற்றொக்கது. அந்நல்வினையுளவழியுமனநலத்தைவளர்த்துவருதலானதற்கேமாப்புடைத்தாயிற்று.

பு. மனநலநன்குடையராயினும்-மனநன்மையைமுன்செய்தநல்வினையினாலேதாமேயுடையவராயினும்,* சான்றோர்க்கு-அமைந்தோர்க்கு, இனநன்மையேமாப்புடைத்து-இனத்தினதுநன்மையதற்குவலிமையாதலையுடைத்து, எ-று.

வி. நன்கானுடையராயினுமென்னுமூன்றனுருபுவிகாரத்தால்தொக்குநின்றது. அந்தநல்வினையுள்ளபோதும் மனநலத்தைவளர்த்துவருதலால் அதற்கேமாப்புடைத்தென்றார்.

௯. மனநலத்தினாகுமறுமைமற்றஃது
மினநலத்தினேமாப்புடைத்து.

Future bliss is (the result) of goodness of mind; and even this acquires strength from the society of the good. - - 459

பரி ஒருவற்குமனநன்மையானேமறுமையின்பமுண்டாமதற்கச்சிறப்புத்தானுமினநன்மையான்வலிபெறுதலையுடைத்தென்றவாறு.

வி. மனநலத்தினாகுமறுமையென்றதுமறுமைபயப்பதுமனநன்மைதானேபிறிதொன்றன்றென்னுமதத்தையுடம்பட்டுக்கூறியவாறு. மற்றுவினைமாற்று உம்மையிறந்ததுதழீஇயவெச்சவும்மை ஓரோவழித்தாமதகுணத்தான்மனநலந்திரியினுநல்லினமொப்பநிறுத்திமறுமைபயப்பிக்குமெனநிலைபெறச்செய்யுமாறு கூறப்பட்டது. இவையைந்துபாட்டானுஞ்சிற்றினஞ்சேராமையதுசிறப்புநல்லினஞ்சேர்தலாகியவெதிர்மறைமுகத்தாற்கூறியவாறறிக.

பு. மனநலத்தினாகுமறுமை-ஒருவனுக்குமனநன்மையினாலேமறுமையின்பமுண்டாகும், அஃதும்-அதனுக்குஅந்தச்சிறப்புத்தானும், இனநலத்தினேமாப்புடைத்து - இனநன்மையினாலேவலிபெறுதலையுடைத்து, எ-று.

வி. மனநலத்தினாகுமறுமையென்றது, மறுமையின்பந்தருவதுமனநன்மையேவேறொன்றுஅன்றென்னும் மதத்திற்கு உடம்படக்கூறியது. மற்று,வினைமாற்றிலேவந்தது. அஃதும்

என்றவும்மை, இறந்ததுதழூஇநின்ற எச்சவும்மை, ஒரோரிடத்திலே தாமதகுணத்தினாலே மனநன்மைவேறுபடினும் அதை நல்லினம் ஒத்திருக்கும்படிநிறுத்தி மறுமையின்பத்தைத்தருவிக்குமென நிலைபெறச்செய்யும்வழிகூறப்பட்டது. இவையைந்துபாட்டாலுஞ் சிற்றினஞ்சேராமையின் சிறப்பைநல்லினஞ்சேர்தலாகிய விதிமுகத்தாற்கூறியவாறறிக.

௰. நல்லினத்தினூங்குந் துணையில்லை தீயினத்தி
னல்லற்படுப்பதூஉ மில்.

There is no greater help than the company of the good; there is no greater source of sorrow than the company of the wicked. - - - - - - - - - 460

பரி. ஒருவனுக்குநல்லவினத்தின்மிக்க துணையுமில்லைதீயவினத்தின்மிக்கபகையுமில்லையென்றவாறு.

வி. ஐந்தனுருபுகளுறழ்பொருளவின்கண்வந்தன. ஊங்கென்பதுபின்னுங் கூட்டியும்மைமாற்றியுரைக்கப்பட்டது. நல்லினமறியாமையினீக்கித்துயருறுமற்காத்தலினதனைத் துணையென்றுந்தீயினமறிவினீக்கித்துயருறுவித்தலினதனைப்பகையென்றுங்கூறினார். அல்லற்படுப்பதென்பதேதுப்பெயர். இதனால்விதியெதிர்மறைகளுடன்கூறப்பட்டன.

பு. நல்லினத்தினூங்குந்துணையில்லை - ஒருவனுக்குநல்லஇனத்தின்மிக்கதுணையுமில்லை, தீயினத்தின் - தீயஇனத்தின்மிக்க, அல்லற்படுப்பதூஉமில் - பகையுமில்லை, எ-று.

வி. இன்னுருபிரண்டும், உறழ்பொருளிலேவந்தன. உறழ்வு, உயர்வுதாழ்வுகள். (அதிற்பெரிது, அதைப்பார்க்கிலும்பெரிது, அதிற்சிறிது. அதைப்பார்க்கிலுஞ்சிறிது, எனவரும்.) ஊங்கு என்பதைத்தீயினத்தினென்றவிடத்தும், அல்லற்படுப்பதுமென்றவும்மையைத் துணையென்றவிடத்துங்கூட்டியுரைக்கப்பட்டது. நல்லினமானது அறியாமையின் நீக்கித்துன்பம்வாராமற்காத்தலால் அதைத்துணையென்றும், தீயவினம் அறிவிலே நீக்கித்துன்பப்படுத்தலால்அதைப்பகையென்றுஞ்சொன்

ஞர். அல்லற்படுப்பது என்றது, அல்லற்படுப்பதாலெனவிங்கேநிற்றலால்ஏதுப்பெயர். இதிலேவிதியெதிர்மறைகளிரண்டுங்கூறப்பட்டன. விதி, உடன்பாடு.

---

௪௭. அதிகாரம். CHAPTER XLVII.

தெரிந்துசெயல்வகை. On acting with fore-thought.

பரி. அஃதாவது அரசன்றான்செய்யும்வினைகளையாராய்ந்துசெய்யுந்திறம். அச்செயல்பெரியாரைத்துணைக்கோடல்பயனுடைத்தாயவழியவரோடுஞ்செய்யப்படுவதாகலினிதுசிற்றினஞ்சேராமையின்பின்வைக்கப்பட்டது.

அதாவது, அரசன் தான்செய்யும் வினைகளையாராய்ந்து செய்யுந்திறம். அச்செயல் பெரியாரைத் துணைக்கோடல் பலித்தபோது அவரோடுஞ்செய்யப்படுதலால் இதுசிற்றினஞ் சேராமையின் பின்வைக்கப்பட்டது.

௧. அழிவதூஉமாவதூஉமாகிவழிபயக்கு
மூதியமுஞ்சூழ்ந்துசெயல்.

Let a man reflect on what will be lost, what will be acquired, and (from these) what will be his ultimate gain, and (then, let him) act. - - - - - - - - - 461

பரி. வினைசெய்யுங்காலப்பொழுததனாலழிவதனையுமழிந்தாற்பின்னாவதனையுமாய்நின்றுபிற்பொழுது தருமூதியத்தையுஞ்சீர்தூக்கியுற்றதாயிற்செய்கவென்றவாறு.

வி. உறுதலாவதுநிகழ்வின்கணழிவதனிலாவதுமிக்கெதிர்வினுமதுவளர்ந்துவருதல் அழிவதின்மையினெதிர்வின்கண்வருமாக்கத்தையூதியமென்றார். எனவேயவ்வூதியம்பெறினிகழ்வின்கணழிவதுமாவதுந்தம்முளொத்தாலுமொழிதற்பாற்றன்றென்பதுபெற்றும். இரண்டுகாலத்தும்பயனுடைமைதெரிந்துசெய்கவென்பதாம்.

பு. அழிவதூஉம்-(வினைசெய்யும்போது) அதினாலேயழிவதையும், ஆவதூஉம்-(அழிந்தாற்பின்)ஆவதையும், ஆகி-ஆகிநின்று, வழிபயக்கும்-பின்புதருகின்ற, ஊதியமும்-ஆதாயத்தையும், சூழ்ந்துசெயல் - ஆராய்ந்துஆதாயமதிகப்பட்டாற்செய்க, எ-று.

வி. அதிகப்படலாவது, அப்போது அழிவதிலேஆவதுமேற்பட்டு எதிர்விலும் வளர்ந்துவருதல். அழிவதில்லாததினாலேயெதிர்காலத்தில்வரும்ஆக்கத்தை,ஊதியமென்றார். எனவேயந்தவூதியம்பெறுவதாயிருந்தால் அப்போது அழிவதுமாவதுமொத்திருந்தாலும் விடலாகாதென்பதும்பெறப்பட்டது. நிகழ்காலத்துமெதிர்காலத்தும் பயன்படுவதறிந்து செய்கவென்பதாம்.

உ. தெரிந்தவினத்தொடுதேர்ந்தெண்ணிச்செய்வார்க்
கரும்பொருள்யாதொன்றுமில்.

There is nothing too difficult to (be attained by) those who, before they act, reflect well themselves, and thoroughly consider (the matter) with chosen friends. - - - - - 462

பரி தாந்தெரிந்துகொண்டவினத்துடனேசெய்யத்தகும்வினையையாராய்ந்துபின்றுமேயுமெண்ணிச்செய்துமுடிக்கவல்லவரசர்க்கெய்துதற்கரியபொருள்யாதொன்றுமில்லையென்றவாறு.

வி. ஆராயப்படுவனவெல்லாமாராய்ந்துபோந்தவினமென்றுமாம். செய்வாரென்றதனால்வினையென்னுஞ்செயப்படுபொருள்வருவிக்கப்பட்டது. வினையாவதுமேற்செலவுமுதல்வேறவீறுயதொழில். பொருள்கட்கேதுவாயவதனிற்றவருமையினரியபொருள்களெல்லாமெளிதினெய்துவவென்பதாம். இவையிரண்டுபாட்டானுஞ்செய்யத்தகும்வினையுமதுசெய்யுமாறுங்கூறப்பட்டன.

பு. தெரிந்தவினத்தொடு-தாந்தெரிந்துகொண்டஇனத்துடனே, தேர்ந்து - செய்யத்தகும்வினையையாராய்ந்து, எண்ணி -பின்புதாமுந்தனித்துயோசனைபண்ணி, செய்வார்க்கு-செய்துமுடிக்கவல்ல அரசர்க்கு, அரும்பொருள்யாதொன்றுமில்-அடைதற்குஅரியபொருள்யாதொன்றுமில்லை, எ-று.

வி. தெரிந்தவினமென்பதற்கு, ஆராயப்படுவனவெல்லா மாராய்ந்துவந்த இனமென்றுரைப்பினும் அமையும். செய்வார்க்கென்றதினால், வினையென்னுஞ்செயப்படுபொருள்வருவிக்கப்பட்டது. வினையாவது, மேற்செலவுமுதல்வெல்லுதல் இறுதியாகியதொழில்கள். பொருள்களுக்கு எதுவாகிய அதிலேத வருதலினாலே, அரியபொருள்களையெல்லாமெளிதாகப்பெறுவ தொன்பதாம். இவையிரண்டுபாட்டானுஞ் செய்யத்தகும்வினையும் அதுசெய்யும்விதமுங்கூறப்பட்டன.

௩. ஆக்கங்கருதிமுதலிழக்குஞ்செய்வினை
யூக்கா ரறிவுடையார்.

Wise men will not, for the sake of profit, undertake works that will consume their principal. - - - - - 463

பரி. மேலெய்தக்கடவவூதியத்தினைநோக்கிமுன்னெய்திநின்றமுதற்றன்னையுமிழத்தற்கேதுவாயசெய்வினையையறிவுடையார்மேற்கொள்ளாரென்றவாறு.

வி. கருதியென்னும்வினையெச்சமிழக்குமென்னும்பெயரெச்சவினைகொண்டது. எச்சவும்மைவிகாரத்தாற்றொக்கது. ஆக்கமேயன்றிமுதலையுமிழக்கும்வினைகளாவனவலியுங்காலமுமிடனுமறியாதுபிறர்மண்கொள்வான்சென்று தம்மண்ணுமிழத்தல்போல்வன. முன்செய்துபோந்தவினையாயினுமென்பார்செய்வினையென்றார்.

பு. ஆக்கங்கருதி-மேற்பெறப்படுவதாகியஇலாபத்தைநினைத்து, முதலிழக்குஞ்செய்வினை-முன்பெற்றிருந்தமுதலையுமிழந்துவிடுதற்கேதுவாகியசெய்வினையை, ஊக்காரறிவுடையார்-அறிவுடையார்மேற்கொள்ளார், எ-று.

வி. கருதியென்னும்வினையெச்சம், இழக்குமென்னும்பெயரெச்சவினைகொண்டது. முதலுமென்ற எச்சவும்மை, விகாரத்தாற்றொக்குநின்றது. ஆக்கமேயன்றிமுதலையுமிழக்குஞ்செய்வினைகளாவன, வலியையுங்காலத்தையுமிடத்தையுமறியாமலே பிறர்நிலத்தைக்கைக்கொள்ளும்பொருட்டுச்சென்றுதமது நிலத்தையும் இழப்பதுபோல்வன. முன்செய்துவந்தவினையாயினுமென்றுசொல்லவந்தவர், செய்வினையென்றார்.

௪. தெளிவிலதனைத்தொடங்காரிளிவென்னு
மேதப்பாடஞ்சுபவர்.

Those who fear reproach* will not commence any thing which has not been (thoroughly considered) and made clear to them. 464

பரி. இனத்தோடுந்தனித்துமாராய்ந்துதுணிதலில்லாதவினையைத்தொடங்கார்தமக்கிளிவரவென்னுங்குற்றமுண்டாதலையஞ்சுவாரென்றவாறு.

வி. தொடங்கினவிடையின் மடங்கலாகாமையிற்றொடங்காரென்றார். இளிவரவு அவ்வினையாற்பின்னழிவெய்தியவழிய தன்மேலுமறிவுமானமுமிலனொன்றுலகத்தாரிகழுமிகழ்ச்சி. அஃதுண்டாதலொருதலையாகலிற்றெளிவுள்ளவழித்தொடங்குகவென்பதாம்.

பு. தெளிவிலதனைத்தொடங்கார்-இனத்தோடுந்தனித்துமாராய்ந்துதெளியாதவினையைச்செய்யத்தொடங்கமாட்டார், இளிவென்னும்-தமக்குஇழிவென்றுசொல்லப்பட்ட, ஏதப்பாடஞ்சுபவர்-குற்றமுண்டாவதற்குப்பயப்படுவோர், எ-று.

வி. தொடங்கினாலிடையிலே மடங்கல்கூடாதாதலால் தொடங்காரென்றார். இளிவாவது, அந்தவினையினாலே பின்பு அழிவுவந்தபோது அவ்வினையின்மேலும் அறிவும்மானமுமிலனொன்று தம்மேலும்வைத்து உலகத்தாரிகழும் இகழ்ச்சி. அது உண்டாவது நிச்சயமாதலால், தெளிவுள்ளவினையைத்தொடங்குகவென்பதாம்.

௫. வகையறச்சூழாதெழுதல்பகைவரைப்
பாத்திப்படுப்பதோராறு.

One way to promote the prosperity† of an enemy, is (for a king) to set out (to war) without having thoroughly weighed his ability (to cope with its chances). - - - - - - 465

பரி. சென்றுழிநிகழுந்திறங்களையெல்லாமுற்றவெண்ணாது சிலவெண்ணியதுணை

---

* இளிவென்னுமேதப்பாடு, the fault which is called reproach.

† பாத்திப்படுப்பது, to place him in a well-watered and fruitful soil.

யானேயரசன்பகைவர்மேற்செல்லுதலவனைவளருநிலத்திலேநிலைபெறச்செய்வதொருநெறியாமென்றவாறு.

வி. அத்திறங்களாவனவலிகாலமிடனென்றிவற்றாற்றனக்கும்பகைவர்க்குமுளவாநிலைமைகளும்வினைதொடங்குமாறுமதற்குவருமிடையூறுகளுமவற்றைநீக்குமாறும்வெல்லலாமாறுமதனாற்பெறும்பயனுமுதலாயின. அவற்றுட் சில வெஞ்சினும்பகைவர்க்கிடனாமாகலான்முற்றுப்பெறவெண்ணவேண்டுமென்பதாம். இவைமூன்றுபாட்டானுமொழியத்தகும்வினையுமொழியாவழிப்படுமிழுக்குங்கூறப்பட்டன.

௫. வகையறச்சூழாது-சென்றாலங்கே நடக்குந்திறங்களையெல்லாமுடிவாகவெண்ணாமல், எழுதல் - (சிலவற்றையெண்ணினமாத்திரமே) அரசன்பகைவர்மேற்போர்செய்யச்செல்லுதல், பகைவனைப்பாத்திப்படுப்பதோராறு-பகைவனைவளரும்நிலத்திலே நிலைபெறச்செய்வதொருநெறியாம், எ-று.

வி. அத்திறங்களாவன, வலியுங்காலமும் இடமுமென்றிவற்றினாலே தனக்கும் பகைக்குமுளவாகும் நிலைமைகளும், வினைசெய்யத்தொடங்குகின்றவிதமும், அதற்குவருகின்ற இடையூறுகளும், அவற்றைநீக்கும்விதமும், வெல்லும் விதமும், அவ்வெற்றியினாலே வரப்பட்டபிரயோசனமும் முதலாயினவாம். இவற்றுள், சிலகுறைந்தபோதும் பகைவர்க்கு இடமாமாதலால், முடியவெண்ணவேண்டுமென்பதாம். இவைமூன்றுபாட்டாலும் ஒழியத்தகும் வினையுமொழியாதபோதுண்டாகும் இழிவுங் கூறப்பட்டன.

௬. செய்தக்கவல்லசெயக்கெடுஞ்செய்தக்க
செய்யாமையானுங்கெடும்.

He will perish who does what it is not fit to do; and he also will perish who does not do what it is fit to do. - - 466

பரி. அரசன்றன்வினைகளுட்செய்யத்தக்கனவல்லவற்றைச்செய்தலாற்கெடுமியதனேயன்றிச்செய்யத்தக்கனவற்றைச்செய்யாமைதன்னானுங்கெடுமென்றவாறு.

வி. செய்யத்தக்கவல்லவாவனபெரியமுயற்சியனவுஞ்செய்தாற்பயனில்லனவுமதுசிறிதாயினவுமையமாயினவும்பின்றுயர்விளைப்பனவுமெனவிவை செய்ய

த்தக்கவாவனவற்றின் மறுதலையாயின. இச்செய்தல்செய்யாமைகளானறிவாண்மைபெருமையென் னுமூவகையாற்றலுட்பொருள்படையெனவிருவகைத்தாயபெருமைசுருங்கிப்பகைவர்க்கெளியனுமாகலானிரண்டுங்கேட்டிற்கேதுவாயின. இதனாற்செய்வனசெய்தொழிவனவொழிகவெனவிருவகையனவுமுடன்கூறப்பட்டன.

பு. செய்தக்கவல்ல - (அரசன் தன்வினைகளுள்) செய்யத்தக்கனவல்லாதவற்றை, செயக்கெடும்-செய்தலாலே கெடுவான், (அன்றியும்) செய்தக்க-செய்யத்தகுவனவற்றை, செய்யாமையானுங்கெடும்-செய்யாததினாலுங்கெடுவான், எ-று.

வி. செய்தக்கவல்லவாவன, பெரியமுயற்சியுடையனவும், செய்தாற்பயனில்லாதனவும், பயன் சிறியனவும், சந்தேகமாயினவும், பின்புதுயர்விளைப்பனவும்எனவிவை. செய்தக்கவாவன, இவற்றிற்கெல்லாமறுதலைப்பட்டவை. இச்செய்தல்செய்யாமைகளாலே அறிவு ஆண்மை பெருமையென்னுமூவகை ஆற்றலுள் பொருள் படை என்னுமிருவகையாகிய பெருமைசுருங்கிப்பகைவர்க்கு எளியவனுவானுதலால் இரண்டுங் கேட்டிற்கு ஏதுவாயின. ஆனதினாலே செய்வனசெய்க ஒழிவன ஒழிகவெனவிரண்டுமிதினாற் கூறப்பட்டன.

எ. எண்ணித்துணிககருமந்துணிந்தபி
னெண்ணுவமென்பதிழுக்கு.

Think (first, and then) begin your work ; after you have begun, to say, "let us consider," is a reproach. - - - 467

பரி. செய்யத்தக்ககருமத்தையுமுடிக்குமுபாயமுமெண்ணித்தொடங்குக தொடங்கிவைத்துப்பின்னெண்ணக்கடவேமென்றெழிதல்குற்றமாதலானென்றவாறு.

வி. துணிவுபற்றிநிகழ்தலிற்றுணிவெனப்பட்டது. சிறப்பும்மைவிகாரத்தாற்றொக்கது. உபாயமென்பதவாய்நிலையான்வந்தது. அதுகொடுத்தலின்சொற்சொல்லுதல்வேறுபடுத்தலொறுத்தலெனநால்வகைப்படும். இவற்றைவடநூலார்தானசாமபேததண்டமென்ப. அவற்றுண்முன்னையவிரண்டுமைவகைய. ஏனையமூவகைய. அவ்வகைகளெல்லாமீண்டுரைப்பிற்பெருகுமிவ்வுபாயமெல்லாமெண்ணாதுதொடங்கினவ்வினைமாற்றாரால்விலக்கப்பட்டுமுடியாமையானுமிடையி

றொழிதலாகாமையானுமரசன்றுயருறுதலினவ்வெண்ணாமையையிழுக்கென்றார். செய்வனவற்றையுமுபாயமறிந்தேதொடங்குகவென்பதாம்.

பு. கருமம்-செய்யத்தக்ககருமத்தையும், எண்ணித்துணிக-(முடிக்குமுபாயத்தையும்) எண்ணிப்பார்த்தறிந்ததன்பின்பு தொடங்குக, துணிந்தபின்-தொடங்கிவைத்துப்பின்பு, எண்ணுவமென்பதிழுக்கு - ஆலோசிக்கக்கடவோமென்று விடுவது குற்றமாதலால், எ-று.

வி. துணிவுபற்றிநடத்தலால், தொடக்கத்தைத் துணிவெனப்பட்டது. கருமமுமென்றவும்மை, விகாரத்தால் தொக்குநின்றது. உபாயமென்பதவாய் நிலையால்வந்தது. அது, கொடுத்தல், இன்சொற்சொல்லுதல்,வேறுபடுத்தல்,ஒறுத்தலென நால்வகைப்படும்.இவற்றை,வடநூலார்தான,சாம,பேத,தண்டமென்றுசொல்லுவர்.அவற்றுள்முன்னின்றவிரண்டும்ஐவகைப்படும். ஒழிந்தனமூன்றுவகைப்படும். அவ்வகைகளெல்லாமிங்கேசொன்னால் விரிந்துபோம். இந்தவுபாயங்களையெல்லாமெண்ணாமல்தொடங்கினால் அவ்வினைபகைவரால் விலக்கப்பட்டுமுடியாததினாலும்,இடையிலேவிடக்கூடாமையானும், அரசன் துயரப்படுதலால் அந்த எண்ணாமையையிழுக்கென்றார். செய்வனவற்றையுமுபாயமறிந்தே தொடங்குகவென்பதாம்.

அ. ஆற்றின்வருந்தாவருத்தம்பலர்நின்று
போற்றினும்பொத்துப்படும்.

The work, which is not done by suitable methods, will fail, although many stand up to protect it. - - - 468

பரி. முடியுமுபாயத்தாற்கருமத்தைமுயலாதமுயற்சி துணைவர்பலர்நின்று புரைபடாமற்காப்பினும்புரைபடுமென்றவாறு.

வி. முடியுமுபாயத்தான்முயறலாவது கொடுத்தலைப்பொருணசையாளன்கண்ணுமின்சொல்லைச்செப்பமுடையான்மடியாளன்பிறரோடுபொருதுநொந்தவனெனவிவர்கண்ணும்வேறுபடுத்தலைத்துணைப்படையாளன்றன்பகுதியோடுபொருந்தாதவனெனவிவர்கண்ணுமொறுத்தலையிவற்றின்வழிவாராதவழியிவர்கண்ணுந்தேறப்படாதகீழ்மக்கள்கண்ணுஞ்செய்துவெல்லுமாற்றான்முயறல்.

புரைபடுதல்கருதியநன்மையன்றிக்கருதாததீமைபயத்தல். உபாயத்தது சிறப்புக்கூறியவாறு.

பு. ஆற்றின்-முடியுமுபாயத்தால், வருந்தாவருத்தம்-கருமத்தைமுயலாதமுயற்சி, பலர்நின்றுபோற்றினும்-துணைவர் பலர்கூடிநின்று புரைபடாமற்காப்பினும், பொத்துப்படும்-புரைபடும், எ-று.

வி. புரை, குற்றம். முடியுமுபாயத்தால் முயலுதலாவது, கொடுப்பதைப்பொருளாசைக்காரனிடத்தும், இன்சொல்லை நீதியாளன்சோம்பலுடையோன் பிறரோடுயுத்தஞ்செய்துநொந்தவனெனவிவர்களிடத்தும், பேதப்படுத்தலைத்துணைப்படையாளன் தன்பகுதியோடுபொருந்தாதவனெனவிவர்களிடத்தும், தண்டத்தைஇவற்றின்வழிவாராதபோழ்து மேற்சொல்லப்பட்டவர்களிடத்துந், தேற்றக்கூடாதகீழ்மக்களிடத்துஞ், செய்துவெல்லும்நெறியால்முயலுதல். புரைபடுதலாவது,கருதியநன்மைதாராதுகருதாததீமைதருவது. உபாயத்தின் சிறப்புக்கூறியபடி.

> ௯. நன்றாற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்
> பண்பறிந் தாற்றாக் கடை.

There are failures even in acting well, when it is done without knowing the various dispositions of men. - - - 469

பரி. வேற்றுவேந்தர்மாட்டுநன்றானவுபாயஞ்செய்தற்கண்ணுங்குற்றமுண்டாமவரவர்குணங்களையாராய்ந்தறிந்தவற்றிற்கியையச்செய்யாவிடினென்றவாறு.

வி. நன்றானவுபாயமாவதுகொடுத்தலுமின்சொற்சொல்லுதலுமாம். அவையாவர்கண்ணுமினியவாதற்சிறப்புடைமையினும்மைசிறப்பும்மை. அவற்றையவரவர்பண்பறிந்தாற்றாமையாவதவற்றிற்குரியரல்லாதார்கண்ணேசெய்தல். தவறுவினைமுடியாமை.

பு. நன்றாற்றலுள்ளும்-(வேற்றரசரிடத்திலே) நன்றாகியவுபாயத்தைச்செய்யுமிடத்தும், தவறுண்டு-குற்றமுண்டு, அவரவர்பண்பறிந்து-அவரவர்குணங்களையாராய்ந்தறிந்து, ஆற்

ருக்கடை - அக்குணங்களுக்கு இயையும்படிசெய்யார்க்கால், எ-று.

வி. நன்றாகியஉபாயமாவது, கொடுத்தலும், இன்சொற்சொல்லுதலுமாம். அவையாவரிடத்தும் இனியனவாதலால் நன்றாற்றலுள்ளுமென்றவும்மை, சிறப்பும்மை. அவரவர்பண்பறிந்தாற்றாமையாவது, அவற்றிற்கு உரியவரல்லாரிடத்துச்செய்தல். தவறு, வினைமுடியாமை.

௰. எள்ளாதவெண்ணிச்செயல்வேண்டுந் தம்மொடு
கொள்ளாதகொள்ளாதுலகு.

Let a man reflect, and do things which bring no reproach, the world will not approve, with him, of things, which should not be approved of. - - - - - - - - - 470

பரி· அரசர்வினைமுடித்தற்பொருட்டுத்தத்தநிலைமையோடுபொருந்தாதவுபாயங்களைச்செய்வாராயினுலகந்தம்மையிகழாநிற்குமாகலானஃதிகழாவுபாயங்களை நாடிச்செய்கவென்றவாறு.

வி. தம்மென்பதாகுபெயர். தந்நிலையோடுபொருந்தாதவுபாயங்களைச்செய்தலாவது தாம்வலியராய்வைத்துமெலியார்க்குரியகொடுத்தன்முதலிய மூன்றனைச்செய்தலுமெலியராய்வைத்துவலியார்க்குரியவொறுத்தலைச்செய்தலுமாம் இவையிரண்டுமறிவிலார்செய்வனவாகவினுலகங்கொள்ளாதென்றார் அஃதெள்ளாதனசெய்தலாவதவற்றைத்தத்தம்வன்மைமென்மைகட்கேற்பச்செய்தல். மேவிடவகையானுரிமைகூறியவுபாயங்கட்குவினைமுதல்வகையானுரிமைகூறியவாறு இவைநான்குபாட்டானுஞ்செய்வனவற்றிற்குபாயமுமதனதுரிமையுங்கூறப்பட்டன.

பு. தம்மொடுகொள்ளாத - (அரசன்வினைமுடித்தற்பொருட்டு) தந்தம்நிலைமையோடுபொருந்தாதவுபாயங்களைச்செய்வாராயின், கொள்ளாதுலகு-உலகந்தம்மையிகழுமாதலால், எள்ளாத - அதுஇகழாதவுபாயங்களை, எண்ணிச்செயல்வேண்டும்-நாடிச்செய்க, எ-று.

வி. தம்நிலையொடு என்றதற்குத்தம்மொடுஎன்றது, ஆகுபெயர். தமதுநிலையொடு பொருந்தாதவுபாயங்களைச்செய்தலாவது, தாம்வலியராயிருந்து மெலியோர்க்குரியகொடுத்தல்மு

தவிபமூன்றைச்செய்வதும், தாம்மெலியராயிருந்துவலியார்க்குரியதண்டத்தைச்செய்வதுமாம். இவையிரண்டும்அறிவிலார்செயல்களாதலால், உலகங்கொள்ளாதென்றார். உலகமேள்ளாதனசெய்தலாவது, அவற்றைத்தங்கள் தங்கள் வலிமைமெலிமைகளுக்குப்பொருந்தச்செய்வது. மேலேயிடவகையாலுரிமைசொன்னவுபாயங்களுக்கு வினைமுதல் வகையாலுரிமைசொல்லியபடி. இவைநான்குபாட்டாலுஞ்செய்வனவற்றிற்கு உபாயமும், அதற்கு உரிமையுஞ்சொல்லப்பட்டன.

சஅ. அதிகாரம். CHAPTER XLVIII.

வலியறிதல். ON THE KNOWLEDGE OF RESOURCES.*

பரி. அஃதாவது, அவ்வுபாயங்களுளொறுத்தல்குறித்தவரசனல்வகைவலியையுமளந்தறிதல். அதிகாரமுறைமையுமிதனானேவிளங்கும்.

அதாவது, அந்தவுபாயங்களுள் தண்டத்தைக்குறித்த அரசனானவன் நால்வகைவலிமையும்அளந்தறிதல். அதிகாரமுறையுமிதனால் விளங்கும்.

க. வினைவலியுந்தன்வலியுமாற்றான்வலியுந்
துணைவலியுந்தூக்கிச்செயல்.

Let (a king) weigh well the strength of the deed (he purposes to do); (let him consider) his own strength, the strength of his enemy, and the strength of the allies (of both), and then let him act. - - - - - - - . - - 471

பரி. தான்செய்யக்கருதியவினைவலியையுமதனைச்செய்துமுடிக்குந்தன்வலி

---

* வலி, strength.

யையுமதனைவிலக்கலுறுமாற்றான்வலியையுமிருவர்க்குந்துணையாவார்வலி யையுஞ்சீர்தூக்கித்தன்வலிமிகுமாயினவ்வினையைச்செய்கவென்றவாறு.

வி. இந்நால்வகைவலியுள்வினைவலியரண்முற்றலுங்கோடலுமுதலியதொழிலானுமேனையமூவகையாற்றலானுங்கூறுபடுத்துத்தூக்கப்படும். தன்வலிமிகவின்கட்செய்கவென்றவிதியாற்றேற்றவொருதலையாயகுறைவின்கண்ணும்வேறலையமாயவொப்பின்கண்ணுமொழிகவென்பதுபெற்றாம்.

பு. வினைவலியும்-தான்செய்யநினைத்தவினையின் வலிமையையும், தன்வலியும்-அதைச்செய்து முடிக்குந்தன்வலிமையையும், மாற்றான்வலியும்-அதைவிலக்கவரும்பகைவன்வலிமையையும், துணைவலியும்-இருவர்க்குந்துணையாவாரதுவலிமையையும், தூக்கி-மதித்துப்பார்த்து, செயல்-(தன்வலிமிகுமாயின்) அவ்வினையைச்செய்க, எ-று.

வி. இந்தநால்வகைவலியுள்வினைவலி கோட்டையைவளைத்தல் கொள்ளுதல்முதலியதொழில்களாலும், ஒழிந்தவை, மூவகைவலிமையாலுங்கூறிட்டுமதிக்கப்படும். தன்வலிமிகிற்செய்கவென்றவிதியிலேலே தோற்புநிச்சயமாகியகுறைவினும் வெல்வதுசந்தேகமாகியசமநிலையினுமொழிகவென்பதுதானேபெறப்படும்.

உ. ஒல்வதறிவதறிந்ததன்கட்டங்கிச்
செல்வார்க்குச்செல்லாததில்.

There is nothing which may not be accomplished by those who, before they attack (an enemy), make themselves acquainted with their own ability, and with whatever else is (needful) to be known, and apply themselves wholly to their object. - - - 472

பரி. தமக்கியலும்வினையையுமதற்கறியவேண்டுவதாயவலியையுமறிந்தெப்பொழுதுமனமொழிகளையதன்கண்வைத்துப்பகைமேற்செல்லுமரசர்க்குமுடியாதபொருளில்லையென்றவாறு.

வி. ஒல்வதெனவேவினைவலிமுதலாயமூன்றுமடங்குதலினீண்டறிவதென்றது துணைவலியேயாயிற்று. எல்லாப்பொருளுமெய்துவதொன்பதாமிவையிரண்டு பாட்டானும்வலியின்பகுதியுமஃதறிந்துமேற்செல்வாரெய்தும்பயனுங்கூறப்பட்டன.

பு. ஒல்வது-தமக்குஇயலுங்கருமத்தையும், அறிவது-அத னுக்குஅறியவேண்டுவதாகியவலிமையையும், அறிந்ததன்கட் டங்கி-அறிந்துஎப்பொழுதுமனத்தையும் மொழியையும் அத னிடத்துவைத்து, செல்வார்க்குச்செல்லாததில்-பகைமேற்செ ல்லுமரசர்க்குமுடியாதபொருளில்லை, எ-று.

வி. ஒல்வதுஎனவே வினைவலிமுதலியமூன்றும் அடங்கலின் இங்கேயறிவதென்றது துணைவலியேயாயிற்று. இப்படியறிந் துசெல்வோர் எல்லாப்பொருளுமடைவரென்பதாம். இவை யிரண்டுபாட்டாலும் வலிமையின்வகையும் அதையறிந்துமே ற்செல்வோரடையும் பயனுங்கூறப்பட்டன.

ஈ. உடைத்தம்வலியறியாரூக்கத்தினூக்கி
யிடைக்கண்முரிந்தார்பலர்.

There are many who, ignorant of their (want of) power (to meet it), have haughtily set out to war, and broken down in the midst of it. - - - - - - - - - - - 473

பரி. கருத்தாவாதலையுடையதம்வலியினளவறியாதேமனவெழுச்சியாற்றம்மி ன்வலியாரோடுவினைசெய்தலைத்தொடங்கியவரடர்த்தலானதுசெய்துமுடிக்க ப்பெறுதிடையேகெட்டவரசருலகத்துப்பலரென்றவாறு.

வி. உடையவென்றதவாய்நிலையானின்றமையிற்செயப்படுபொருள்வருவிக் கப்பட்டது.மூவகையாற்றலுள்ளுஞ்சிறப்புடையவறிவுடையார்சிலராதலின் முரிந்தார்பலரென்றார். அதனாற்றம்வலியறிந்தேதொடங்குகவென்பதெஞ்சிநி ன்றது.

பு. உடைத்தம்வலியறியார் - கருத்தாவாவதையுடையதம துவலிமையினளவையறியாமலே, ஊக்கத்தினூக்கி-மனமெழு ந்தபடியேயவ்வெழுச்சியால்தம்மிலும்வலியவரோடுபோர்செ ய்யத்தொடங்கி, இடைக்கண்முரிந்தார்பலர் - அவர்மேவிட்டு முரியவடிப்பதினாலே தாமுமதைச்செய்து முடிக்கப்பெறாது இடையிலேகெட்டுப்போன அரசருலகத்திற்பலர், எ-று.

வி. உடையவென்றது அவாய்நிலையாகநிற்றலாற்,செயப்படுபொருள்வருவிக்கப்பட்டது. மூவகைவலிமையுள்ளுஞ்சிறப்புற்ற அறிவுடையார் சிலராதலால் முரிந்தார்பலரென்றார். ஆதலால் தம்வலியறிந்தேதொடங்குகவென்பது,குறைந்துநின்றது.

௪. அமைந்தாங்கொழுகானளவறியான்றன்னை
வியந்தான்விரைந்துகெடும்.

He will quickly perish who, ignorant of the measure (of his resources), flatters himself (with an idea of his greatness), and does not live in peace with his neighbours. - - - - 474

பரி. அயல்வேந்தரோடுபொருந்தியொழுகுவதுஞ்செய்யாதுதன்வலியளவறிந்துஞ்செய்யாதுதன்னைவியந்தவரோடுபகைத்தவரசன்விரையக்கெடுமென்றவாறு.

வி. காரியத்தைக்காரணமாகவுபசரித்துவியந்தானென்றார். விரையவென்பதுதிரிந்துநின்றது. நட்பாயொழுகுதல்வலியறிந்துபகைத்தலென்னுமிரண்டனுளொன்றேயயல்வேந்தரோடுசெயற்பாலவவையின்றித்தான்மெலியனாய்வைத்தவரோடுபகைகொண்டானுக்கொருபொழுதுநிலையின்மையின்விரைந்துகெடுமென்றாரிவையிரண்டுபாட்டானுந்தன்வலியறியாவழிப்படுமிழுக்குக்கூறப்பட்டது.

பு. அமைந்தாங்கொழுகான்-அயல்அரசரோடுபொருந்திநட்டதுஞ்செய்யாதவனாய், அளவறியான்-தன்வலிமையினளவையறிவதுஞ்செய்யாதவனாய், தன்னைவியந்தான் - தன்னைத்தானேமெச்சிஅவரோடுபகைத்தவரசன், விரைந்துகெடும்-சீக்கிரத்திலேகெடுவான், எ-று.

வி. வியத்தல்காரணமாக வருங்காரியமாகிய பகைத்தலை வியந்தானெனக்காரணமாகவுபசரித்தார். நட்பாயொழுகுதல் வலியறிந்துபகைத்தலென்னுமிரண்டினுள் ஒன்றே அயல்வேந்தரோடுசெயல்வேண்டும். அவையின்றித்தான் மெலியனாயிருந்து அவரோடுபகைகொண்டவனுக்கு ஒருபோதும் நிலையில்லாததினாலே விரைந்துகெடுமென்றார். இவையிரண்டு

பாட்டாலும் தன்வலியறியாதபோது உண்டாகுங்குற்றங்கூறப்பட்டது.

௫. பீலிபெய்சாகாடுமச்சிறும்பண்டஞ்
சாலமிகுத்துப்பெயின்.

The wheel of a bandy loaded only with peacocks' feathers will break, if it be greatly overloaded. - - - - - 475

பரி. பீலியேற்றியசகடமுமச்சுமுறியுமப்பீலியையதுபொறுக்குமளவன்றிமிகுத்தேற்றினென்றவாறு.

வி. உம்மைசாகாட்டதுவலிச்சிறப்பேயன்றிபீலியதுநொய்மைச்சிறப்புந்தோன்றநின்றது. இறுமென்னுஞ்சினைவினைமுதன்மேனின்றது. எளியவொன்றுபலரொடுபகைகொள்வான்றன்வலியனேயாயினுமவர்தொக்கவழியழியுமென்னும்பொருடோன்றநின்றமையினிதுபிறிதுமொழிதலென்னுமலங்காரம். இதனைநுவலாநுவற்சியென்பாருமொட்டென்பாருமுளர். தொகுவார்பலரொடுபகைகொளற்கவென்றமையினிதனான்மாற்றான்வலியுமவன்றுணைவலியுமறியாவழிப்படுமிழுக்குக்கூறப்பட்டது.

பு. பீலிபெய்-மயிலின்பீலியையேற்றிய, (பீலி-மயிலிறகு,) சாகாடுமச்சிறும், வண்டியுமச்சுமுறியும், அப்பண்டம்-அப்பீலியென்னும்பொருளை, சாலமிகுத்துப்பெயின்-அதுபொறுக்குமளவுக்குமேற்படமிகுத்தேற்றினால், எ-று.

வி. சாகாடும்என்றவும்மை, உயர்வுசிறப்பும்மை. அது, பீலியின்மென்மையுந் தனதுவன்மையுந்தோன்றநின்றது. அச்சிறுமென்ற சினைவினை, சாகாடென்றமுதலின்மேல்நின்றது. எளியவொன்றெண்ணிப்பலரோடுபகைத்தவன் தானெத்தனைபலசாலியாயினும் அவர்கள் ஏகமாய்த்திரண்டபோது அழிந்துபோவானென்னும்பொருள்படநின்றதினாலே, இது ஒட்டலங்காரம். இதைநுவலாநுவற்சியென்பாரும் பிறிதுமொழிதலென்பாருமுண்டு. திரண்டபலரொடுபகைகொள்ளாதொழிகவென்றமையால்இதினாலேமாற்றான்வலியும் அவனதுதுணைவலியுமறியாதவழிப்படுங்குற்றங்கூறப்பட்டது.

௬. நுனிக்கொம்பரேறினா ரஃதிறந் தூக்கி
னுயிர்க்கிறுதியாகிவிடும்..

There will be an end to his life who, having climbed out to the end of a branch, ventures to go further. - - - 476

பரி. ஒருமரக்கோட்டினது நுனிக்கண்ணே யேறிநின்றார் தம்மூக்கத்தாலவ்வளவினைக்கடந்து மேலுமேறலூக்குவாராயினவ்வூக்கமவருயிர்க்கிறுதியாய்முடியுமென்றவாறு.

வி. நுனிக்கொம்பரென்பது கடைக்கணென்பதுபோலப்பின்முன்னாகத்தொக்கவாறாம்வேற்றுமைத்தொகை. பன்மையறிவின்மைபற்றியிழித்தற்கண் வந்தது. இறுதிக்கேதுவாவதனையிறுதியாமென்றார். பகைமேற்செல்வான்றொடங்கித்தன்னாற்செல்லலாமளவுஞ்சென்றுநின்றான்பின்னவ்வளவினில்லாதுமனவெழுச்சியான் மேலுஞ்செல்லுமாயினவ்வெழுச்சி வினைமுடிவிற்கேதுவாகாதவருயிர்முடிவிற்கேதுவாமென்னும்பொருடோன்றநின்றமையினிதுவுமேலையலங்காரம். அளவறிந்துநிற்றல்வேண்டுமென்றமையினிதனால்வினைவலியறியாவழிப்படுமிழுக்குக் கூறப்பட்டது.

பு. நுனிக்கொம்பரேறினார் - ஒருமரக்கொம்பினது நுனியிலேயேறிநின்றவர், அஃதிறந்தூக்கின் - (தமது வலிமையால்) அவ்வளவைக்கடந்துமேலுமேறவலிமைகொள்வாராயின், (அவ்வலிமை) உயிர்க்கிறுதியாகிவிடும் - அவருயிர்க்குமுடிவாய் முடியுமென்றவாறு.

வி. நுனிக்கொம்பரென்பது, கடைக்கண் என்றாற்போலப் பின்முன்னாகநின்ற ஆறாம்வேற்றுமைத்தொகை. இறுதிதருதற்கு ஏதுவாவதைஇறுதியென்றது, ஆகுபெயர். பகையின் மேற்செல்லத்தொடங்கித்தன்னாற் செல்லலாமளவுஞ் சென்று நின்றவன்பின்பு அந்த அளவிலேதானே நில்லாமல் மனம்போனபடியேமேலுஞ் செல்வானாயின் அச்செலவுவினைமுடிதற்கு ஏதுவாகாமல் அவருயிர்முடிதற்கு ஏதுவாகுமென்னும்பொருள் தோன்றநின்றதினாலே, இதுவுமேற்கூறியவலங்காரமாம். அளவறிந்துநிற்கவேண்டுமென்பதாயிற்று. இதினாலே வினைவலியறியாதபோது உண்டாகுங்குற்றங்கூறப்பட்டது.

எ. ஆற்றினளவறிந்தீகவதுபொருள்
போற்றிவழங்குநெறி.

Let a man know the measure of his ability* (to give), and let him give accordingly; such giving is the way to preserve his property. - - - - - - - - - 477

பரி. ஈயுநெறியாலே தமக்குள்ளபொருளினெல்லையையறிந்ததற்கேற்பவீக வங்ஙனமீதல்பொருளைப்பேணிக்கொண்டொழுகுநெறியாமென்றவாறு.

வி. ஈயுநெறிமேலிறைமாட்சியுள்வகுத்தலும்வல்லதரசென்புழியுரைத்தாம். எல்லைக்கேற்பவீதலாவதொன்றனையெல்லையைநான்குகூறாக்கியவற்றுளிரண்டனைத்தன்செல்வமாக்கியொன்றனைமேலிடர்வந்துழியதனைநீக்குதற்பொருட்டு வைப்பாக்கிநின்றவொன்றனையீதல். பிறரும்வருவாயுட்கால்வழங்கிவாழ்தலென்றார். பேணிக்கொண்டொழுகுதலொருவரோடுநட்பிலாதாரைத்தம்மோடு நட்புண்டாக்கிக்கொண்டொழுகுதல். முதலிற்செலவுசுருங்கிற்பொருளொருகாலு நீங்காவென்பதாம்.

பு. ஆற்றினளவறிந்தீக-கொடுக்கிறநெறியினாலேதமக்குள்ளபொருளினளவையறிந்து அதற்குப்பொருந்தும்படிகொடுக்கக்கடவது, அது-அப்படிக்கொடுப்பது, பொருள்போற்றிவழங்குநெறி-பொருளைப்பாதுகாத்துநடக்கின்றவழியாம், எ-று.

வி. ஈயும்நெறி மேலேயிறைமாட்சியுள்வகுத்தலும்வல்லதரசு என்றபோதுசொல்லித்தீர்ந்தது. பொருளினளவுக்குப்பொருந்த ஈதலாவது, ஒன்றைநாலுகூறாக்கியிரண்டுகூறைத்தனதுசெல்வமாக்கி ஒன்றையிடர்வந்தபோது அதைநீக்குதற்பொருட்டு இருப்பாக்கிநின்றவொருகூறைத்தருமத்தின்பொருட்டுச்செலவுசெய்தல். வருவாயுட்கால்வழங்கி எனப்பிறர்கூறுதலுங்காண்க. முதலிற்செலவுசுருங்கினும் பொருளொருபோதும் நீங்காதென்பதாம்.

---

* ஆறு, way.

௮. ஆகாறளவிட்டிதாயினுங்கேடில்லை
போகாறகலாக்கடை.

Even though the income (of a king) be small, it will be no loss (to him), if his outgoings be not large. - - - - 478

பரி. அரசர்க்குப்பொருள்வருகின்றநெறியளவுசிறிதாயிற்றாயினுமதனாற் கேடில்லையாம்போகின்றநெறியளவதனிற்பெருகாதாயினென்றவாறு.

வி. இட்டிதெனவுமகலாதெனவும்வந்தபண்பின்றொழில்கள்பொருண்மேனின்றன. பொருளென்பததிகாரத்தான்வருவித்தளவென்பதுபின்னுங்கூட்டியுரைக்கப்பட்டன. முதலுஞ்செலவுந்தம்முளொப்பினுங்கேடில்லையென்பதாம்.

பு. ஆகாறளவு-அரசர்க்குப்பொருள்வருகிறவழியினளவு, இட்டிதாயினும்-சிறிதாயினும், கேடில்லை-அதினாலேகேடில்லையாம், போகாறு-செலவாகிறவழி, அகலாக்கடை-அதனில்மிகாதாயின், எ-று.

வி. இட்டிது எனவும் அகலாது எனவும்வந்தபண்பின்தொழில்கள் பொருளின்மேல்நின்றன. பொருளென்பது, அதிகாரத்தால்வருவிக்கப்பட்டது. அளவுஎன்றதைப்போகாறு என்றதனோடுங்கூட்டுக. முதலுஞ்செலவுமொத்திருந்தபோதுங்கேடில்லையென்பதும் பெறப்பட்டது.

௯. அளவறிந்துவாழாதான்வாழ்க்கையுளபோல
வில்லாகித்தோன்றாகெடும்.

The prosperity, of him who lives without knowing the measure (of his property), will vanish away and perish, even while it seems to continue. - - - - - - - - 479

பரி. தனக்குள்ளபொருளினெல்லையையறிந்ததற்கேற்பவாழமாட்டாதவன் வாழ்க்கைகளுள்ளனபோலத்தோன்றிமெய்மையாயினில்லையாய்ப்பின்னத்தோற்றமுமின்றிக்கெட்டுவிடுமென்றவாறு.

வி. அவ்வெல்லைக்கேற்பவாழ்தலாவததனிற்சுருங்கக்கூடாதாயினொக்கவாயினுமீத்துந்துய்த்தும்வாழ்தல். தொடக்கத்திற்கேடுவெளிப்படாமையினுளபோலத்தோன்றியென்றார் முதலிற்செலவுமிக்கால்வருமேதங்கூறியவாறு.

பு. அளவறிந்து-தனக்குள்ளபொருளினளவையறிந்து,வாழாதான்வாழ்க்கை - அதற்குப்பொருந்தவாழமாட்டாதவன் வாழ்க்கைகளானவை, உளபோல-உள்ளனபோலத்தோன்றி, இல்லாகி - (மெய்ம்மையாராயின்) இல்லையாகி, தோன்றாகெடும்-பின் அந்தத்தோற்றமுமில்லாமற்கெடும், எ-று.

வி. அந்தப்பொருளினளவுக்குப்பொருந்தவாழ்தலாவது, அதனில்மேற்படாமலாயினும் ஒப்பவாயினும் ஈந்தும்அநுபவித்தும்வாழ்வது. தொடக்கத்திலேகேடுவெளிப்படாது ஆதலால் உளபோலவென்றார். முதலிற்செலவுமிகுந்தால்வருங் குற்றங்கூறப்பட்டது.

௰. உளவரை தூக்காதவொப்புரவாண்மை
வளவரைவல்லைக்கெடும்.

The measure of his wealth will quickly perish, whose liberality weighs not the measure of his property. - - - 480

பரி. தனக்குள்ளவளவு தூக்காமைக்கேதுவாயவொப்புரவாண்மையானொருவன்செல்வத்தினெல்லைவிரையக்கெடுமென்றவாறு.

வி. ஒப்புரவேயாயினுமிகலாகாதென்றமையானிதுவுமது. இவைநான்குபாட்டானுமூவகையாற்றலுட்பெருமையின்பகுதியாயபொருள்வலியறிதற்சிறப்பு நோக்கிவகுத்துக்கூறப்பட்டது.

பு. உளவரை தூக்காத-தனக்குள்ளபொருளினளவையாராயாமைக்குஏதுவாகிய, ஒப்புரவாண்மை - உபகாரஆட்சியினாலே, வளவரை-ஒருவன்செல்வத்தினெல்லை,வல்லைக்கெடும்-விரைந்துகெடும், எ-று.

வி. உபகாரத்தன்மையேயாயினும் மிகலாகாது என்றதினாலே, இதுவுமேற்கூறியகருத்தே. இவைநான்குபாட்டாலும்மூவகைவலிமையுள்பெருமையின் பாற்பட்டதாகிய பொருள்வலியறிதற்சிறப்புநோக்கி வகுத்துக்கூறப்பட்டது.

சச. அதிகாரம். CHAPTER XLIX.

காலமறிதல். ON THE DISCERNMENT OF (A SUITABLE) TIME.*

பரி. அஃதாவது. வலியான்மிகுதியுடையனாய்ப்பகைமேற்சேறலுற்றவரசன ச்செலவிற்கேற்றகாலத்தினையறிதல். அதிகாரமுறைமையுமிதனானேவிளங்கும்

அதாவது, வலிமையினாலே மிகுத்தவனாகிப்பகைமேற்செல் லத்தொடங்கிய அரசன் அந்தச்செலவுக்குப்பொருந்தியகால த்தையறிதலாம். அதிகாரமுறையு மிதினாலே விளங்கிக்கிடந் தது.

க. பகல்வெல்லுங்கூகையைக்காக்கையிகல்வெல்லும்
வேந்தர்க்குவேண்டும்பொழுது.

A crow will overcome an owl† in the day time: the king who would conquer his enemy must have (a suitable) time. - 481

பரி. தன்னின்வலிதாயகூகையைக் காக்கைபகற்பொழுதின்கண்வெல்லாநி ற்குமாதலாற்பகைவரதிகலைவெல்லக்கருதுமரசர்க்கதற்கேற்றகாலமின்றியமை யாதென்றவாறு.

வி. எடுத்துக்காட்டுவமை. காலமல்லாவழிவலியாற்பயனில்லையென்பதுவிளக் கிநின்றது. இனிக்காலமாவதுவெம்மையுங்குளிர்ச்சியுந்தம்முளொத்துநோய்செ ய்யாதுதண்ணீருமுணவுமுதலியவுடைத்தாய்த்தானைவருந்தாதுசெல்லுமியல் பினதாம். இதனாற்காலத்ததுசிறப்புக்கூறப்பட்டது.

பு. பகல்வெல்லுங்கூகையைக்காக்கை-தன்னைப்பார்க்கிலு ம்வலிமையுள்ளதாகியகூகையைக்காக்கையானதுபகற்பொழு திலேவெல்லும், இகல்வெல்லும்வேந்தர்க்கு-(ஆதலால்) பகை வருடையபோர்த்தொழிலைவெல்லநினைத்தஅரசர்க்கு, பொழு துவேண்டும்-அதற்கேற்றகாலம்வேண்டும், எ-று.

வி. இந்த எடுத்துக்காட்டு உவமையானது, காலமில்லாத போது வலியுடைமையினாலேபயனில்லையென்பதை விளக்கிநி

---

* For setting out to war.

† கோட்டான், a large kind of owl, much stronger than a crow.

ன்றது. இனிக்காலமாவது, வெப்பமுங்குளிருந்தம்முளொத்துநோய்செய்யாமல், தண்ணீருமுணவுமுதலியனவுமுடைத்தாகிச்சேனைவருந்தாமற்செல்லுந்தன்மையையுடையதாம். இதினாலே காலத்தின் சிறப்புச்சொல்லப்பட்டது.

உ. பருவத்தோடொட்டவொழுகறிருவினைத்
தீராமையார்க்குங்கயிறு.

Acting at the right scason, is a cord that will immoveably bind success (to a king). - - - - - - - 482

பரி. அரசன்காலத்தோடுபொருந்தவினைசெய்தொழுகுதலொருவர்கண்ணுநில்லாதுநீங்குஞ்செல்வத்தைத்தன்கண்ணீங்காமற்பிணிக்குங்கயிறுமென்றவாறு.

வி. காலத்தோடுபொருந்துதல்காலந்தப்பாமற்செயல். தீராமையென்றததனாற்றீர்தன்மாலையதென்பதுபெற்றாம் வினைவாய்த்துவருதலானதனினாகுஞ்செல்வமெஞ்ஞான்றுநீங்காதென்பதாம்

பு. பருவத்தோடொட்டவொழுகல்-அரசன்காலத்தோடு பொருந்த(வினைசெய்து) நடத்தல், திருவினை-(ஒருவரிடத்துநில்லாமலேநீங்குஞ்)செல்வத்தை, தீராமையார்க்குங்கயிறு-தன்னைவிட்டுநீங்காமற் கட்டுங்கயிறும், எ-று.

வி. காலத்தோடுபொருந்துதலாவது, காலந்தப்பாமல் வினைசெய்வது. தீராமையென்றதினாலே, தீர்தல் இயல்பென்பதுபெறப்பட்டது. வினைநலமாய்வருவதினாலே அதனாலாகுஞ் செல்வமெப்போதும் நீங்காதென்பதாம்.

ங. அருவினையென்பவுளவோகருவியாற்
காலமறிந்துசெயின்.

Is there any thing difficult (for him to do), who acts, with (the right) instruments, at the right time ?* - - - - 483

பரி. அரசராற்செய்தற்கரியவினைகளென்றுசொல்லப்படுவனவுளவோவவற்

* Knowing the time.

றைமுடித்தற்காங்கருவிகளுடனேசெய்தற்காங்காலமறிந்துசெய்வாராயினென்றவாறு.

வி. கருவிகளாவன மூவகையாற்றலுநால்வகையுபாயங்களுமாம். அவையுளவாயவழியுங்காலம்வேண்டுமென்பதறிவித்தற்குக்கருவியானென்றார். எல்லாவினையுமெளிதின்முடியுமென்பதாம்.

பு. கருவியால்-அவற்றைமுடித்தற்குஅமைந்தகாரணங்களுடனே, காலமறிந்துசெயின்-செய்தற்குப்பொருந்தியகாலத்தையுமறிந்துசெய்வாராயின், அருவினையென்பவுளவோ-அரசர்க்குச்செய்தற்கு அரியவினைகளென்று சொல்லப்படுவனவுளவோ, எ-று.

வி. கருவிகளாவன, மூவகைவலியும்நால்வகையுபாயங்களுமாம். அவையுண்டானபோதுங்காலம் வேண்டுமென்பதறிவித்தற்குக்கருவியாற் காலமறிந்துசெயினென்றார். எல்லாவினைகளுமெளிதாகமுடியுமென்பதாம்.

௪. ஞாலங்கருதினுங்கைகூடுங்காலங்
கருதியிடத்தாற்செயின்.

Though (a man) should meditate (the conquest of) the world, he may accomplish it, if he acts in the right time,* at the right place. - - - - - - - - - - - - - 484

பரி. ஒருவன்ஞாலமுழுதுந்தானேயாளக்கருதினானாயினுமஃதவன்கையகத்ததாமதற்குச்செய்யும்வினையைக்காலமறிந்திடத்தோடுபொருந்தச்செய்வானாயினென்றவாறு.

வி. இடத்தானென்பதற்குமேற்கருவியென்பதற்குரைத்தாங்குரைக்க.கைகூடாதனவுங்கூடுமென்பதாம். இவைமூன்றுபாட்டானுங்காலமறிதற்பயன்கூறப்பட்டது.

பு. ஞாலங்கருதினும்-ஒருவன்பூவுலகமுழுமையுந்தானேயாளநினைத்தானாயினும், கைகூடும்-அதுஅவன்கைக்குள்ளிருந்ததாம், காலங்கருதி - அதற்காகச்செய்யும் வினையையதற்குப்

* After having considered the time, he acts in (the right place.)

பொருந்தியகாலத்தைநோக்கி, இடத்தாற்செயின்-இடத்தோடுபொருந்தச்செய்வானாயின், எ-று.

வி. இடத்தானென்றதற்கு, மேற்கருவியானென்பதற்கு உரைத்தபடியுரைத்துக்கொள்க. கைகூடாதனவுங் கூடுமென்பதாம். இவைமூன்றுபாட்டாலுங் காலமறிதலின் பயன்கூறப்பட்டது.

௫. காலங்கருதியிருப்பர்கலங்காது
ஞாலங்கருதுபவர்.

They who thoughtfully consider and wait for the (right) time (for action), may successfully meditate (the conquest of) the world. - - - - - - - - - 485

பரி. தப்பாமன்ஞாலமெல்லாங்கொள்ளக்கருதுமரசர்தம்வலிமிகுமாயினுமதுகருதாததற்கேற்றகாலத்தையேகருதியதுவருந்துணையும்பகைமேற்செல்லாரென்றவாறு.

வி. தப்பாமைகருதியவழியேகொள்ளுதல். வலிமிகுதிகாலங்கருதியென்றதனாற்பெற்றும். அதுகருதாதுசெல்லினிருவகைப்பெருமையுந்தேய்ந்துவருத்தமுமுறுவராகலினிருப்பரென்றார். இருத்தலாவதுநட்பாக்கல் பகையாக்கன்மேற்சேறலிருத்தல்பிரித்தல்கூட்டலென்னுமறுவகைக்குணங்களுண்மேற்செலவிற்குமாறாயது. இதனாற்காலம்வாராவழிச்செய்வதுகூறப்பட்டது.

பு. கலங்காது-தப்பாமலே, ஞாலங்கருதுபவர்-பூமிமுழுதையுங்கைக்கொள்ள. நினைக்குமரசர், (தம்வலிமிக்கிருந்தாலுமதைநினையாமல்) காலங்கருதியிருப்பர் - அதற்கேற்றகாலத்தைநினைத்து அதுவருமளவும் பகைவர்மேற்செல்லாதுகாத்திருப்பர், எ-று.

வி. தப்பாமையாவது, நினைத்தவழியேகொள்ளுதல். வலிமிகுதி, காலங்கருதியென்றதினாலேவருவிக்கப்பட்டது. அதைநினையாமற்சென்றால் இருவகைப்பெருமையுந் தேய்ந்துவருத்தப்படுவாராதலால், இருப்பரென்றார். இருத்தலாவது, நட்பாக்கல், பகையாக்கல், மேற்செல்லல், இருத்தல், பிரித்தல், கூட்டல்என்னும் அறுவகைக்குணங்களுள் மேற்செல்லலுக்கு

மறுதலையாகியது. இதினாலே காலம்வாராதபோது காத்திருக்கவேண்டுமென்பதுகூறப்பட்டது.

௬. ஊக்கமுடையானொடுக்கம்பொருதகர்
தாக்கற்குப்பேருந்தகைத்து.

The self-restraint of the energetic (while waiting for a suitable time to act), is like the drawing back of the foot of a fighting-ram in order to butt. - - - - - - - - 486

பரி. வலிமிகுதியுடையவரசன்பகைமேற்செல்லாதுகாலம்பார்த்திருக்கின்ற விருப்புப்பொருகின்றதகர்தன்பகைகெடப்பாய்தற்பொருட்டுப்பின்னேகால் வாங்குந்தன்மைத்தென்றவாறு.

வி. உவமைக்கட்டாக்கற்கென்றதனாற்பொருளினும்வெற்றியெய்தற்பொருட்டென்பதுகொள்க. இதனாலவ்விருப்பின்சிறப்புக்கூறப்பட்டது.

பு. ஊக்கமுடையானொடுக்கம்-மிக்க வலிமையுடைய அரசன் பகைமேற்செல்லாமற் காலம்பார்த்திருக்கின்ற இருப்பு, பொருதகர் - சண்டைசெய்கின்ற ஆட்டுக்கிடாய், தாக்கற்கு-(தன்பகைகெடப்) பாய்தற்பொருட்டு, பேருந்தகைத்து-பின்னேகால்வாங்கிப்போந்தகைமைத்து, எ-று.

வி. உவமையிலே தாக்கற்கு என்றதினாலே, பொருளினும் வெற்றியாதற்பொருட்டு எனவருவித்துக்கொள்க. இதினாலே அந்த இருப்பின் சிறப்புச்சொல்லப்பட்டது.

௭. பொள்ளெனவாங்கேபுறம்வேரார்காலம்பார்த்
துள்வேர்ப்பரொள்ளியவர்.

The wise will not immediately and hastily show their anger; they will watch their time, and keep their anger within. - 487

பரி. அறிவுடையவரசர்பகைவர்மிகைசெய்தபொழுதேயவரறியப்புறத்து வெகுளார்தாமவரைவெல்லுதற்கேற்றகாலத்தினையறிந்ததுவருந்துணையுமுள் ளேவெகுள்வரென்றவாறு.

வி. பொள்ளெனவென்பதுகுறிப்புமொழி.வேரார்வேர்ப்பரெனக்காரணத்தைக்காரியமாகவுபசரித்தார். அறியவெகுண்டுழித்தம்மைக்காப்பராகலிற்புறம்

வேராரொன்றுஞ்செய்யாமலடக்குதல்கூடாமையினுள்வேர்ப்பரொன்றுங்கூறினர்.

பு. ஒள்ளியவர்-அறிவுடையஅரசர், பொள்ளென-பகைவர் குற்றஞ்செய்தவுடனே, புறம்வேரார் - அவரறியவெளியிலே கோபஞ்செய்யார், காலம்பார்த்து-அவரைவெல்லுதற்கேற்ற காலத்தை நோக்கி யதுவருமளவும், உள்வேர்ப்பர்-மனதிலே கோபத்தைவைத்திருப்பார், எ-று.

வி. பொள்ளெனஎன்பது,விரைவுக்குறிப்பு. வேரார்வேர்ப்பர் எனக்காரணத்தைக்காரியமாக வுபசரித்தார். வேர்த்தல், கோபத்தால்வருங்காரியம். அறியக்கோபித்தபோது தம்மைக்காத்துக்கொள்வாராதலால் புறம்வேராரொன்றும், கோபஞ்செய்யாமலடக்குதல் கூடாததினாலே உள்வேர்ப்பரொன்றுங் கூறினர்.

அ. செறுநரைக்காணிற்சுமக்கவிறுவரை
காணிற்கிழக்காந்தலை.

If (a king) meets his enemy, let him show him all respect, until the time for his destruction is come; when that is come, his head will be easily brought low. - - - - - - 488

பரி. தாம்வெல்லக்கருதியவரசர்பகைவர்க்கிறுதிக்காலம்வருந்துணையுமவரைக்கண்டாற்பணிகபணியவேயக்கால்வந்திறும்வழியவர்தலைகீழ்ந்தியிறுவரொன்றவாறு.

வி. பகைமையொழியும்வகைமிகவுந்தாழ்கவென்பார்சுமக்கவென்றுமங்ஙனந்தாழவேயவர்தம்மைக்காத்தலிகழ்வாராகவிற்றப்பாமற்கெடுவரென்பாரவர்தலைகீழாமென்றுங்கூறினர். தலைமேற்கொண்டவொருபொருளைத்தள்ளுங்காலதுதன்றலைகீழாகவிழுமாகவினவ்வியல்புபெறப்பட்டது. இவையிரண்டுபாட்டானுமிருக்கும்வழிப்பகைமைதோன்றாமலிருக்கவென்பதுகூறப்பட்டது.

பு. செறுநரைக்காணிற்சுமக்க - (வெற்றியைநினைத்த அரசர்) பகைவர்க்குஒடுங்குங்காலம்வருமளவும்அவரைக்கண்டாற்பணிக, இறுவரைகாணின்-(அக்காலம்வந்து) ஒடுங்கும்போது, கிழக்காந்தலை-தலையின்றிமுறிவர், எ-று.

வி. பகைமை நீங்கும்படி மிகவுந்தாழ்கவென்று சொல்ல வந்தவர்சுமக்கவென்றும், அப்படிவணங்கவேயவர் தம்மைக் காவாமலிறுமாப்பாராதலால் தப்பாமற்கெடுவரென்று சொல்லவந்தவர் தலைகீழாமென்றுஞ்சொன்னார். தலையின்மேற் கொண்டசுமையைத்தள்ளும்போது அது தலைகீழாகவிழுமாதலாலவ்வாறுகூறப்பட்டது. இவையிரண்டுபாட்டாலுங்காத்திருக்கும்போது பகைவரறியாமலே நட்பாகவேயிருக்கவேண்டுமென்பதுகூறப்பட்டது.

௯. எய்தற்கரியதியைந்தக்காலந்நிலையே
செய்தற்கரியசெயல்.

If a rare opportunity occurs, while it lasts, let a man do that which is rarely done (without such an opportunity). - 489

பரி. பகையைவெல்லக்கருதுமரசர்தம்மாலெய்துதற்கரியகாலம்வந்துகூடியக்காலதுகழிவதற்குமுன்பேயதுகூடாதவழித்தம்மாற்செய்தற்கரியவினைகளைச்செய்கவென்றவாறு.

வி. ஆற்றன்முதலியவற்றாற்செய்துகொள்ளப்படாமையினெய்தற்கரியதென்றுமதுதானேவந்தெய்தலரிதாகவினியைந்தக்காலென்றுமியைந்தவழிப்பின்னில்லாதோடுதலினந்நிலையேயென்றுமதுபெறுதவழிச்செய்யப்படாமையிற்செய்தற்கரியவென்றுங்கூறினாரிதனாற்காலம்வந்துழிவிரைந்துசெய்கவென்பதுகூறப்பட்டது.

பு. எய்தற்கரியதியைந்தக்கால்- (பகைவெல்லக்கருதியஅரசர்) தம்மாலடைதற்கரியகாலம்வந்தடைந்தால், அந்நிலையே- அதுகழிவதற்குமுன்னமே, செய்தற்கரியசெயல்-அக்காலம்வாராதபோது தம்மாற்செய்தற்கரியவினைகளைச்செய்க, எ-று.

வி. வலிமைமுதலியவற்றாற்செய்துகொள்ளப்படாமையால்எய்தற்கரியதென்றும், அதுதானேவந்தெய்துதலரிதாதலால் இயைந்தக்காலென்றும், இயைந்தபோது பின்னில்லாதோடுதலால் அந்நிலையேயென்றும், அதுபெறுதவழிச்செய்யக்கூடாமையால் செய்தற்கரியசெயலென்றுங்கூறினார். இதினாலேகாலம் வாய்த்தபோது விரைந்துசெய்கவென்பதுகூறப்பட்டது.

௰. கொக்கொக்ககூம்பும்பருவத்துமற்றதன்
குத்தொக்கசீர்த்தவிடத்து.

At the time when (a king) should use self-control, let him restrain himself like a heron; and, like it, let him strike, when there is a favorable opportunity. - - - - - - 490

பரி. வினைமேற்செல்லாதிருக்குங்காலத்துக்கொக்கிருக்குமாறுபோலவிருக்க மற்றைச்செல்லுங்காலம்வாய்த்தவழியதுசெய்துமுடிக்குமாறுபோலத்தப்பா மற்செய்துமுடிக்கவென்றவாறு.

வி. மீன்கோடற்கிருக்கும்வழியதுவந்தெய்துந்துணையுமுன்னறிந்துதப்பாம ற்பொருட்டுயிரில்லதுபோன்றிருக்குமாகலானுமெய்தியவழிப்பின்றப்புவதற்கு முன்பேவிரைந்துகுத்துமாகலானுமிருப்பிற்குஞ்செயலிற்குங்கொக்கேயுவமை யாயிற்று. கொக்கொக்கவென்றாராயினுமதுகூம்புமாறுபோலக்கூம்புகவென்று ங்குத்தொக்கவென்றாராயினுமதுகுத்துமாறுபோலக்குத்துகவென்றுமுரைக் கப்படுமிதுதொழிலுவமமாகலின்உவமமுகத்தாலிருப்பிற்குஞ்செயலிற்குமிலக்க ணங்கூறியவாறுயிற்று.

பு. கூம்பும்பருவத்து- தான்வினைமேற்செல்லாதிருக்குங்காலத்து, கொக்கொக்க - கொக்குஇருப்பதுபோலிருக்க, சீர்த்தவிடத்து - மற்றச்செல்லுங்காலம்வாய்த்தபோது, அதன்குத்தொக்க-அதுசெய்துமுடிப்பதுபோலத் தப்பாமலேசெய்துமுடிக்க, எ-று.

வி. கொக்கு மீனைப்பிடித்தற்கு இருக்கும்போது அது வந்துசேருமளவும் முன்னுடியறிந்து தப்பிப்போகாமல் தான் உயிரில்லாததுபோலே யிருக்குமாதலாலும், தனக்கு அமைந்தமீன்வந்தபோது மறுபடி தப்புவதற்கு முன்னேதானேவிரைந்து குத்தி விழுங்குமாதலாலும், இருப்பினுக்குஞ் செயலிற்குங் கொக்கே யுவமையாயிற்று. கொக்கொக்கவென்றாராயினும் அது ஒடுங்கியிருப்பதுபோல ஒடுங்குகவென்றும், குத்தொக்கவென்றாராயினும் அதுகுத்துவதுபோலக் குத்துக வென்று முரைத்துக்கொள்க. இது தொழிலுவமையாதலால் இருப்பினுக்குஞ் செயலினுக்கு மிலக்கணங்கூறியபடியாயிற்று.

௫௰. அதிகாரம். CHAPTER L.

இடனறிதல். ON THE CHOICE OF (A SUITABLE) PLACE.

பரி. அஃதாவது, வலியுங்காலமுமறிந்துபகைமேற்செல்வான்றான்வெல்லுதற்கேற்றநிலத்தினையறிதல். அதிகாரமுறைமையுமிதனானேவிளங்கும்.

அதாவது, வலிமையுங்காலமுமறிந்து பகையின்மேற்செல்பவன் தான்வெல்லுதற்குப்பொருந்திய இடத்தையறிவது. அதிகாரமுறையுமிதினாலே விளங்கிற்று.

க. தொடங்கற்கவெவ்வினையுமெள்ளற்கமுற்று
மிடங்கண்டபின்னல்லது.

Let not (a king) despise (an enemy), nor undertake any thing (against him), until he has obtained (a suitable) place for besieging him. - - - - - - - - - - 491

பரி. பகைவரைமுற்றுதற்காவதோரிடம்பெற்றபின்னல்லதவர்மாட்டியாதொருவினையையுந்தொடங்காதொழிகவவரைச்சிறியரென்றிகழாதொழிகவென்றவாறு.

வி. முற்றுதல்வளைத்தல். அதற்காமிடமாவதுவாயில்களானுநாழில்களானுமவர்புகலொடுபுக்கொழியும்வகையரணினைச்சூழ்ந்தொன்றற்கொன்றுதுணையாய்த்தம்முணவில்லாதபலபடையிருப்பிற்குமதிலுமகழுமுதலியவரண்செய்யப்பட்டவாசிருப்பிற்குமேற்றநிலக்கிடக்கையுநீருமுடையது. அதுபெற்றாலிரண்டுஞ்செய்கவென்பதாம்.

பு. முற்றுமிடங்கண்டபின்னல்லது - பகைவரைவளைத்துக்கொள்வதற்கானதோரிடம் பெற்றுக்கொண்ட பின்னன்றி, தொடங்கற்கவெவ்வினையும் - அவரிடத்திலே யாதொருகருமத்தையுந்தொடங்காதொழிக, எள்ளற்க-(அவரைச்சிறியரென்றெண்ணி) இகழாதொழிக, எ-று.

வி. முற்றுதல், வளைத்தல். அதற்கானவிடமாவது, வாயில்களாலும் சுருங்கைகளாலும் அவர் நுழைவொடு நுழைந்து ஒழித்துபோம்படி கோட்டையைச்சூழ்ந்து ஒன்றுக்கொன்றுதுணையாகித்தங்களிலே வருத்தமில்லாமலே பலபடையிருப்

பதற்கும்மதிலும்அகழியுமுதலாகியகாப்புச்செய்யப்பட்டஅரணிருப்பினுக்குமேற்ற நிலப்பரப்பும் நீருமுடையது. அதைப்பெற்றபோது எள்ளுதல் தொடங்குதலென்றவிரண்டுஞ்செய்கவென்பதாம்.

உ. முரண்சேர்ந்தமொய்ம்பினவர்க்குமரண்சேர்ந்தா
மாக்கம்பலவுந்தரும்.

Even to those who are men of power and expedients, an attack* in connection with a fortification will yield many advantages. - - - - - - - - - 492

பரி. மாறுபாட்டோடுகூடியவலியினையுடையார்க்குமரணைச்சேர்ந்தாகின்றவாக்கம்பலபயன்களையுங்கொடுக்குமென்றவாறு.

வி. மாறுபாடாவதுஞாலம்பொதுவெனப்பொறுதவரசர்மனத்தின்கணிகழ்வதாகலானும்வலியுடைமைகூறியவதனானுமிதுபகைமேற்சென்றவரசர்மேற்றுயிற்று. உம்மைசிறப்பும்மை. அரண்சேர்ந்தாமாக்கமுமுண்மையினீண்டாக்கம்விசேடிக்கப்பட்டது. ஆக்கமென்றததற்கேதுவாயமுற்றினை. அதுகொடுக்கும்பயன்களாவனபகைவராற்றமக்குநலிவின்மையுந்தாம்நிலைபெற்றுநின் றவரைநலிதலுமுதலாயின.

ப. முரண்சேர்ந்த-மாறுபாட்டோடுகூடிய,மொய்ம்பினவர்க்கும்-வலிமையையுடையவர்க்கும்,அரண்சேர்ந்தாமாக்கம்-கோட்டையைச்சேர்ந்தாகின்ற ஆக்கமானது, பலவுந்தரும்-பலபயன்களையுங்கொடுக்கும், எ-று.

வி. மாறுபாடு பூமி பொதுவெனப்பொறுத அரசர் மனத்தினிடத்துண்டாவதாதலானும், வலியுடைமை கூறியதினாலும், இதுபகைமேற்சென்ற அரசர் மேலாயிற்று. மொய்ம்பினவர்க்குமென்றவும்மை,சிறப்பும்மை. அரண்சேர்ந்தாம் ஆக்கமுமுண்டாதலால் இங்கே ஆக்கம், விசேடிக்கப்பட்டது. ஆக்கமென்றது, அதற்குக்காரணமாகியவனைத்தலை. அதுகொடுக்கும் பயன்களாவன, பகைவராலேதமக்கு வருத்தமில்லாமையும், தாம்நிலைபெற்றுநின்று அவரைவருத்துதலுமுதலியன.

---

* Or, the 'siege of a fort,' as some say.

௩. ஆற்றுருமாற்றியடுபவிடனறிந்து
போற்றார்கட்போற்றிச்செயின்.

Even the powerless will become powerful and conquer, if they select a proper field (of action), and guard themselves, while they make war on their enemies. - - - - - 493

பரி. வலியரல்லாதாரும்வலியராய்வெல்வரதற்கேற்றவிடத்தினையறிந்துதம்மைக்காத்துப்பகைவர்மாட்டுவினையைச்செய்வாராயினென்றவாறு.

வி. வினையையென்பதூஉந்தம்மையென்பதூஉமவாய்நிலையான்வந்தன. காத்தல்பகைவரானலிவுவாராமலரணானும்படையானுங்காத்தல். இவ்வாற்றான்வினைசெய்வாராயின்மேற்சொல்லியவலியின்றியும்வெல்வரென்பதாம்.

பு. இடனறிந்து-வெல்லுதற்கேற்றஇடத்தையறிந்து, போற்றி-தம்மைப்பாதுகாத்துக்கொண்டு, போற்றார்கட்செயின்-பகைவரிடத்து வினையைச்செய்வாராயின், ஆற்றாரும் - பலமில்லாதவரும், ஆற்றி - பலமுடையவராகி, அடுப - வெல்லுவார், எ-று.

வி. வினையையென்பதும், தம்மையென்பதும், அவாய்நிலையால்வந்தன. காத்தல், பகைவரால்வருத்தமுண்டாகாமல் கோட்டையினாலும் படையினாலுங்காத்துக்கொள்வது. இப்படி வினைசெய்வாராயின், மேலேசொல்லப்பட்ட வலிமையில்லாமலும் வெல்வரென்பதாம்.

௪. எண்ணியாரெண்ணமிழப்பரிடனறிந்து
துன்னியார்துன்னிச்செயின்.

If they who draw near (to fight) choose a suitable place to approach* (their enemy), those who have thought they will conquer them, will lose that thought. - - - - - 494

பரி. தாம்வினைசெய்தற்கேற்றவிடத்தினையறிந்துசென்றவரசராணைப்பொரு

* துன்னி, The Scholiasts say அரணைத்துன்னி; but there seems to be no reason for introducing அரண், seeing that the speciality of the chapter has been already given in இடமறிந்து.

ந்திநின்றதனைச்செய்வாராயினவரைவெல்வதாகவெண்ணியிருந்தபகைவரவ் வெண்ணத்தினையிழப்பரதன்றியேதாம்நிற்றலாற்றுவிடத்துச்செல்வாராயின வர்க்கெளியராவரென்றவாறு.

வி. அரணென்பதவாய்நிலையான்வந்தது எண்ணமென்றதெண்ணப்பட்ட தம்வெற்றியை. அதனையிழப்பரென்றாரவர்வினைசெய்யாமற்றம்மைக்காத்த மையின். இதனாலவர்பகைவர்தோற்பரென்பதாயிற்று. இவைநான்குபாட்டா னும் பகைவரரணின்புறத்திருப்பாரதற்காமிடமறிதல்கூறப்பட்டது.

பு. இடனறிந்து-தாம்வினைசெய்தற்கேற்ற விடத்தையறிந்து, துன்னியார் - சென்றவரசர், துன்னிச்செயின் - கோட்டையைப்பொருந்திநின்று வினையைச்செய்வாராயின், எண்ணியார்-அவரைவெல்வதாக நினைத்திருந்தபகைவர், எண்ணமிழப்பர் - அவ்வெண்ணத்தையிழந்து அவர்க்கெளியராவர், எ-று.

வி. அரண்என்பது, அவாய்நிலையாய்வந்தது. எண்ணம்என்பது, எண்ணப்பட்டதமதுவெற்றியை. அதனையிழப்பரென்றார், அவர்வினைசெய்யாமல் தம்மைக்காத்து எளியவராவராதலால் இதனால் அவர்பகைவர் தோற்பரென்பதாயிற்று. இவைநான்குபாட்டானும் பகைவர்கோட்டையின் புறத்திறங்குவார் அதற்காகுமிடமறிதல் சொல்லப்பட்டது.

௫. நெடும்புனலுள்வெல்லுமுதலையடும்புனலி
னீங்கினதனைப்பிற.

In deep water, a crocodile will conquer (all other animals); but if it leave the water, other animals will conquer it. - - 495

பரி. முதலையாழமுடையநீரின்கணுயிற்பிறவற்றையெல்லாந்தான்வெல்லாநிற்குமப்புனலைநீங்குமாயினதனைப்பிறவெல்லாம்வெல்லாநிற்குமென்றவாறு.

வி. எனவே,எல்லாருந்தன்னிலத்துவலியரென்பதுகூறப்பட்டது. பிறவென்பதுமுன்னுங்கூட்டுக. நிலைப்படாநீரின்கட்பிறநிற்றலாற்றுமையினவையெல்லாமுதலைக்கெளியவாடவையியங்குதற்குரியநிலத்தின்கணஃதியங்கலாற்றுமையினவற்றிற்கெல்லாமெளிதாமென்றது, மேற்செல்லுமரசர்பகைவர்நிற்றலாற்றுவிடனறிந்துசெல்வாராயினவர்தமக்கெளியராவரன்றியேதாம்நிற்றலாற்றுவிடத்துச்செல்வாராயினவர்க்கெளியராவரென்னும்பொருடோன்றநின்றமையி

ன்பிறிதுமொழிதலென்னுமலங்காரம். அவரையவர்நிற்றலாற்றாவிடத்துச்செ ன்றுவெல்கவென்பதாம்.

பு. நெடும்புனலுள் - ஆழமுடைய நீரிலேயானால், வெல்லு முதலை-பிறவற்றையெல்லாமுதலை வெல்லாநிற்கும், புனலைநீங் கின்-அந்தநீரைவிட்டது நீங்குமானால், அதனைப்பிறவும்-அ தைப்பிறவெல்லாம்வெல்லும், எ-று.

வி. எனவே, எல்லாருந் தங்களுடைய நிலத்திலேவலியவ ராவரொன்பதுபெறப்பட்டது. பிறவென்பதை, முன்னுங்கூ ட்டுக. நிலைக்கொள்ளா நீரிலே பிறநிற்கமாட்டாமையால் அ வையெல்லாமுதலைக்கு எளியவையாம் அவையெல்லாஞ் சஞ் சரித்தற்குரியநிலத்திலே அதுசஞ்சரிக்கமாட்டாததினாலேயவ ற்றிற்கெல்லாமெளியதாமென்றுசொன்னது, பகைவர்மேற் செல்லுமரசர் அவர்நிற்கமாட்டாத இடமறிந்துசெல்வராயின் அவர்தமக்கெளியராவார் அன்றித்தாம்நிற்கமாட்டாத இடத் திற்செல்வராயின் அவருக்கு எளியவராவாரொன்னும் பொரு ள்தோன்றநின்றதினாலே, இது ஒட்டலங்காரம். பின்வருஞ் செய்யுளுமவ்வலங்காரமாமெனக்காண்க. பகைவரையவர்நிற் கமாட்டாதவிடத்திற்சென்றுவெல்கவென்பதாம்.

௬. கடலோடாகால்வனெடுந்தேர்கடலோடு
நாவாயுமோடாநிலத்து.

The strong-wheeled, lofty, chariot cannot run on the sea; and ships, which sail on the sea, cannot run on the land. - - 496

பரி. நிலத்தின்கணோடுங்கால்வலியநெடுந்தேர்கள்கடலின்கணோடமாட்டாவி னியக்கடலின்கணோடுநாவாய்கடாநிலத்தின்கணோடமாட்டாவென்றவாறு.

வி. கடலோடாவென்றமுதலையடையானிலத்தோடுமென்பதுவருவிக்கப் பட்டது. கால்வனெடுந்தேரென்பதோடுதற்கேற்றகாலும்பெருமையுமுடைய வாயினுமென்பதுபடநின்றது. மேற்சென்றுன்பகைவரிடங்களையறிந்தவற்றிற் கேற்றகருவிகளான்வினைசெய்கவென்பதுதோன்றநின்றமையினிதுவுமவ்வல ங்காரமாயிற்று.

பு. கால்வனெடுந்தேர்-நிலத்திலேயோடுகின்ற வலிமையுள்ளவுருளைகளையுடைய பெரியதேர்கள், கடலோடா-கடலிலேயோடமாட்டாவாம், கடலோடுநாவாயும்-இனியந்தக்கடலிலேயோடுகின்றதோணிகளும், ஓடாநிலத்து -நிலத்திலேயோடமாட்டாவாம், எ-று.

வி. கடலோடாவென்றமறுதலைவிசேடணத்தினாலே, நிலத்தோடுமென்பது வருவிக்கப்பட்டது. கால்வனெடுந்தேரென்றது, ஓடுதற்கேற்றகால்களும்பெருமையுமுடையவாயினுமென்பதுபடநின்றது. மேற்சென்ற அரசன் பகைவரிடங்களையறிந்து அவ்விடங்களுக்கேற்ற கருவிகளாலே வினைசெய்கவென்னும் பொருள்தோன்றநின்றதினாலே, இதுவுமவ்வலங்காரமாமெனக்காண்க.

எ. அஞ்சாமையல்லாற்றுணை வேண்டாவெஞ்சாமை
யெண்ணியிடத்தாற்செயின்.

You will need no other aid than fearlessness, if you thoroughly reflect (on what you are to do), and select (a suitable) place for your operations. - - - - - - - - 497

பரி. பகையிடத்துவினைசெய்யுந்திறங்களையெல்லாமொழியாதெண்ணியவற்றையரசரிடத்தோடுபொருந்தச்செய்வாராயினச்செயற்குத்தந்திண்மையல்லதுபிறிதொருதுணைவேண்டுவதில்லையென்றவாறு.

வி. திண்ணியராய்நின்றுசெய்துமுடித்தலேவேண்டுவதல்லதுதுணைவேண்டாவென்றூரவ்வினைதவறுதற்கேதுவின்மையின். இவைமூன்றுபாட்டானும்வினைசெய்தற்காமிடனறிதல்கூறப்பட்டது.

பு. எஞ்சாமையெண்ணி-(பகைவரிடத்துவினைசெய்யுந்திறங்களையெல்லாம்)குறையாமலெண்ணி,இடத்தாற்செயின் - அவ்வெண்ணங்களையரசரிடத்தோடு பொருந்தச்செய்வாராயின், (அச்செயற்கு) அஞ்சாமையல்லால் -தமதுமனத்தைரியமேயன்றி, துணைவேண்டா-பிறிதொருதுணைவேண்டுவதில்லை, எ-று.

வி. தைரியமுடையவராய்நின்று வினைசெய்துமுடிப்பதேவேண்டுவதன்றித்துணைவேண்டாவென்றது, அவ்வினைதவறிப்

போவதற்கேதுவில்லாததிறலே. இவைமூன்றுபாட்டாலும்வி
னைசெய்தற்கு ஆகுமிடமறிதல்கூறப்பட்டது.

௮. சிறுபடையான்செல்லிடஞ்சேரினுறுபடையா
னூக்கமழிந்துவிடும்.

The power of one who has a large army will perish, if he goes into ground where only a small army can act. - - 498

பரி. பெரும்படையுடையவரசனைச்சிறுபடையுடையானையழித்தல்கரு
தியவன்புகலைச்சென்றுசாருமாயினவனாற்றன்பெருமையழியுமென்றவாறு.

வி· செல்லிடமவனுக்குச்செல்லுமிடம்.அழிந்துவிடுமென்பதெழுந்திருக்கு
மென்றாற்போலவொருசொல்.ஊக்கத்தினழிவுடையான்றன்படைப்பெருமை
நோக்கியிடநோக்காதுசெல்வனாயினஃதப்படைக்கொருங்குசென்றுவினைசெ
யலாகாமையானுகப்பயிற்சியின்மையானுகவப்பெருமையாற்பயனின்றித்தான
ழிந்துவிடுமென்பதாம்.

பு. உறுபடையான்-பெரும்படையையுடையவரசன், சிறு
படையான் செல்லிடஞ்சேரின் - மற்றச்சிறுபடையையுடைய
வன்வெல்லநினைத்து அவனுக்குச்செல்லுமிடத்தைச்சென்று
அடைவானாயின், ஊக்கமழிந்துவிடும் - அவனாலேதன்பெரு
மையழிந்துபோம்,எ-று.

வி. செல்லிடம், சிறுபடையானுக்குச்செல்லுமிடம். ஊக்க
த்தினழிவுக்குரியவன் தன்படைப்பெருமைநோக்கிஇடம்நோ
க்காதுசெல்வானானால்அது, அப்படைக்குஒருமிததுச்சென்று
வினைசெய்யலாகாமையினாலாவது பழக்கமில்லாமையினாலாவ
து அப்பெருமையினாலே பயனில்லாமலழிந்துபோமென்ப
தாம்.

௯. சிறைநலனுஞ்சீருமிலரெனினுமாந்த
ருறைநிலத்தோடொட்டலரிது.

It is a hazardous thing to attack men in their own country, although they may neither have power nor a good fortress. - 499

பரி. அரணழித்தற்கருமையும்பெருமையாகியவாற்றலுமுடையரல்லாயினு

ம்வினைக்குரியமாந்தரையவருறைகின்றநிலத்தின்கட்சென்று தாக்குதலரிதெ ன்றவாறு.

வி. நிலத்தோடென்பதுவேற்றுமைமயக்கம். ஆண்மையுடையாரைச்சிறு மைநோக்கியிருப்பின்கட்சென்று தாக்கினவரதுவிட்டுப்போகற்றுணிவினரன் றிச்சாதற்றுணிவினராவராகவேயவர்க்குப்பெரும்படையுடையுமென்பதாம்.

பு. சிறைநலனும்-அழித்தற்குஅருமையாகியகோட்டையும், சீரும்-பெருமையாகியவலிமையும், இலரெனினும்-இல்லாதவ ராயினும், மாந்தர்-வினைக்குரியமனிதரை, உறைநிலத்தோ டு-அவர்வாசஞ்செய்கின்ற நிலத்திற்போய், ஒட்டலரிது-போ ர்செய்தலரிது, எ-று.

வி. நிலத்தில் என்பதற்கு, நிலத்தோடென்றது உருபுமய க்கம். ஆண்மையுடையாரைச்சிறுமைகண்டு அவரிருப்பிடத்தி ற்சென்று போர்செய்யின் அவரதைவிட்டுப்போகக்கூடாததிறு லேசாகத்துணிந்தவராவர், ஆகவேயவர்க்குஅப்பெருப்படை யுடைந்துபோமென்பதாம்.

௰. காலாழ்களரினரியடுங்கண்ணஞ்சா
வேலாண்முகத்தகளிறு.

A fox can kill a fearless, warrior-faced, clephant, if it go into mud in which its legs sink down. - - - - - 500

பரி. பாகர்க்கடங்காவுமாய்வேலாட்களைக்கோத்தகோட்டவுமாயகளிறுகளை யவைகாலாழுமியல்பிற்றுயசேற்றுநிலத்துப்பட்டுழிநரிகொல்லுமென்றவாறு.

வி. முகமாகுபெயர். ஆண்மையும்பெருமையுமுடையாருந்தமக்கேலாநில த்துச்செல்வினவற்றாற்பயணின்றிமிகவுமெளியராலழிவரென்பதுதோன்றநின்ற மையினிதுவுமவ்வலங்காரம். வேலாழ்முகத்தவென்றுபாடமோதுவாருமுளர். வேற்படைகுளித்தமுகத்தவாகியுநரியடுதற்கேதுவாசலினதுபாடமன்மையறி க. இவைமூன்றுபாட்டானும்பகைவரைச்சாரலாகாவிடனுஞ்சார்ந்தழிப்படுங் குற்றமுங்கூறப்பட்டன.

பு. கண்ணஞ்சா-பாகர்க்கு அடங்காதனவுமாய், வேலாண் முகத்த-வேலாட்களைக்கோத்தகொம்புகளையுடையனவுமாகிய, களிறு-யானைகள், காலாழ்களரில்-கால்கள்பதியுந்தன்மைத்தா

D 2

ல்ப சேற்றுநிலத்திலேபோனபோது, நரியடும் - நரிகள்கொல்லும், எ-று.

வி. கொம்பைமுகமென்றது, ஆகுபெயர். ஆண்மையும் பெருமையுமுடையாரும் தமக்கேலாத இடத்திற்சென்றபோது அவற்றாற்பயனின்றிமிகவுமெளியவராலழிவரொன்பதுதோன்ற நின்றதினாலே, இதுவும் ஒட்டலங்காரம். வேலாழ்முகத்தவெனப்பாடமோதுவாருமுண்டு. வேற்படைகுளித்தமுகத்தவாயின் நரியடுதற்கேதுவாதலால், அதுபாடமன்றெனக்க. இவைமூன்றுபாட்டாலும் பகைவரைச்சேரலாகாதவிடமுஞ்சேர்ந்தபோதுண்டாகுங்குற்றமுங்கூறப்பட்டன.

---

௫௧. அதிகாரம். CHAPTER LI.

தெரிந்துதெளிதல். ON REFLECTION BEFORE DECISION.*

பரி. அஃதாவது, அமைச்சர்முதலாயினாரைப்பிறப்புக்குணமறிவென்பனவற்றையுஞ்செயலையுங்காட்சிகருத்தாகமமென்னுமளவைகளானாராய்ந்துதெளிதல். வலிமுதன்மூன்றுமறிந்துபகைமேற்செல்வானுக்குத்தான்வினையுற்றுச்செய்தற்பொருட்டுமறைபோகாமைப்பொருட்டுமிதுவேண்டுதலினவற்றின்பின்வைக்கப்பட்டது.

அதாவது, மந்திரிகள் முதலானவரைப்பிறப்புக்குணம் அறிவு என்பனவற்றையுஞ் செயலையும் பிரத்தியட்சம் அநுமானம் ஆகமமென்னும் பிரமாணங்களாலே யாராய்ந்துதெளிதல். வலிமுதலியமூன்றுமறிந்து பகைமேற்செல்வானுக்குச் சேனைவினை திருத்தச்செய்யும்பொருட்டும் வஞ்சிக்கப்பட்டு ஓடிப்போகாது நிலைநிற்கும்பொருட்டும் இதுவேண்டியிருத்தலால் அவற்றின் பின்வைக்கப்பட்டது.

---

* i. e. The necessity of a king's deliberating well in the choice of his ministers, and other servants.

௧. அறம்பொருளின்பமுயிரச்சநான்கின்
திறந்தெரிந்துதேறப்படும்.

Let (a minister) be chosen, after he has been tried by means of these four things, his virtue, (love of) money, (love of) sexual-pleasure, and fear of (losing his) life.* - - - - 501

பரி. அரசனாற்றெளியப்படுவானொருவனறமும்பொருளுமின்பமுமுயிர்ப்பொருட்டான்வருமச்சமுமென்னுமுபதைநான்கின்றிறத்தான்மனவியல்பாராய்ந்தாற்பின்புதெளியப்படுமென்றவாறு.

வி. அவற்றுளறவுபதையாவதுபுரோகிதனையுமறவோனையும்விட்டவராலிவ்வரசனறவோனன்மையினிவனைப்போக்கியறனுமுரிமையுமுடையானொருவனைவைத்தற்கெண்ணினமிதுதான்யாவர்க்குமியைந்ததுநின்கருத்தென்னையெனக்கூறலோடுசொல்லுவித்தல். பொருளுபதையாவதுசேனைத்தலைவனையுமவனோடியைந்தாரையும்விட்டவராலிவ்வரசனிவறன்மாலையனாகலினவனைப்போக்கிக்கொடையுமுரிமையுமுடையானொருவனைவைத்தற்கெண்ணினமிதுதான்யாவர்க்குமியைந்ததுநின்கருத்தென்னையெனக்கூறலோடுசொல்லுவித்தல். இன்பவுபதையாவதுதொன்றுதொட்டுரிமையொடுபயின்றுளொருதவமுதுமகளைவிட்டவளாலுரிமையுளினொருணின்னைக்கண்டுவருத்தமுற்றுக்கூட்டுவிக்கவேண்டுமென்றென்னைவிடுத்தாளவளைக்கூடுவையாயினனக்குப்பேரின்பமேயன்றிப்பெரும்பொருளுங்கைகூடுமெனக்கூறலோடுசொல்லுவித்தல். அச்சவுபதையாவதொருநிமித்தத்தின்மேவிட்டோரமைச்சனாலேனையோனையவனில்லின்கணழைப்பித்திவரறைபோவானென்னற்குக்குழீஇனொன்றுதான்காவல்செய்தொருவனுவிவ்வரசனம்மைக்கொல்லுவான்சூழ்கின்றமையினதனைநாமுற்படச்செய்துநமக்கினியானொருவனைவைத்தலெண்ணையாவர்க்குமியைந்தது. நின்கருத்தென்னையெனக்கூறலோடுசொல்லுவித்தல். இந்நான்கினுந்திரிபிலனாயவழியெதிர்காலத்துந்திரிபிலனெனக்கருத்தளவையாற்றெளியப்படுமென்பதாம். இவ்வடநூற்பொருண்மையையுட்கொண்டவரோதியதறியாதுபிறரெல்லாமிதனையுயிரொச்சமெனப்பாடந்திரித்துந்தத்தமக்குத்தோன்றியவாறேயுரைத்தார்.

பு. அறம்பொருளின்பம்-தருமமும் பொருளும் காமமும், உயிரச்சநான்கின்-உயிர்ப்பொருட்டால்வரும் பயமுமாகியநான்குதந்திரங்களினுடைய, திறந்தெரிந்து - பலத்தினாலே

---

* The Commentator in his illustrations of this verse, seems to me to have departed from its real meaning; which, I think, is given in the English rendering. He himself says that others give a different explanation of it.

(அரசனுற்சோதிக்கப்படுவாஞெருவன்மனநிலை) ஆராய்ந்தால், தேறப்படும்-பின்புதெளியப்படுவான், எ-று.

வி. இவற்றுள் தருமதந்திரமாவது, புரோகிதனையும்முனிவனையுமனுப்பி அவரால் இந்தஅரசன் தருமவானல்லாததினுலே யிவனை நீக்கித்தருமமும் அதற்குரிமையுமுடையவொருவனைவைக்கும்படி நினைத்தோம் இதுவேயெல்லார்க்குஞ் சம்மதியுன்கருத்தென்னவென்று உபாயத்தோடேசொல்லுவித்தல். பொருளின்தந்திரமாவது, சேனைத்தலைவனையும் அவனேடொத்தவரையுமனுப்பி அவரால் இவ்வரசன் பொருளாசையுடையவனுதலால்இவனை நீக்கிஈகையும் அதற்குரிமையுமுடையவனெருவனைவைக்கும்படி நினைத்தோம் இதுவேயெல்லார்க்குஞ் சம்மதியுன்கருத்தென்னவென்று உபாயத்தோடுசொல்லுவித்தல். காமதந்திரமாவது, நெடுநாளாகஅந்தப்புரத்தில் உரிமையோடுபழகிய தவவேடம்பூண்டவொருமுதிர்ந்த கிழவியையனுப்பி அவளால் அரசன் மனைவியருள் இன்னுள் உன்னைக்கண்டு விரகப்பட்டுக்கூட்டுவிக்கவேண்டுமென்று என்னையனுப்பினுள் அவளைக்கூடுவாயானுல் உனக்குப்பெரிய வின்பமேயன்றிப்பெரும்பொருளுங் கைகூடுமென்று உபாயத்தோடுசொல்லுவித்தல். உயிரச்சத்தந்திரமாவது, ஒருகாரணத்தைமேல்வைத்து ஒருமந்திரியினுலே மற்றப்பேர்களையெல்லாமவன்வீட்டிலேவருவித்து இவர்களரசனைவிட்டுப்போவதற்குயோசனைபண்ணக்கூடினுரென்று தான்காவற்படுத்தி வேறெருவனுலிவ்வரசன் நம்மையெல்லாங்கொல்லும்படியோசனைசெய்கின்றதினுலே நாமேயக்கொலையை முற்படச்செய்து நமக்கினியவனுகிய வொருவனைவைப்பது இங்கேயிருந்தவெல்லார்க்குஞ் சம்மதிநின்கருத்தென்னவென்று உபாயத்தோடேசொல்லுவித்தல். இந்தநான்கு தந்திரங்களாலுமாறுபடாதவனைபோது இனிமேலும் மாறுபடானென்று அநுமானப்பிரமாணத்தினுலே தெளியப்படுமென்பதாம். இந்தவடநூற்பொருளைமனத்துள்வைத்துத்திருவள்ளுவனுரோதியதுணராமற்பிற

ொல்லாம் அறம் பொருளின்பமுயிரொச்சமெனப்பாடந்திருப்பித் தமக்குத்தோன்றியபடியேசொன்னார்கள்.

௨. குடிப்பிறந்துகுற்றத்தினீங்கிவடுப்பரியு
நாணுடையான்கட்டேதெளிவு.

(The king's) choice should (fix) on him, who is of good family, who is free from faults, and who has the modesty which fears the wounds (of sin). - - - - - - - - 502

பரி. உயர்ந்தகுடியிற்பிறந்துகுற்றங்களினின்றுநீங்கிநமக்குவடுவருங்கொலென்றஞ்சாநிற்குநாணுடையவன்கண்ணதேயரசரதுதெளிவென்றவாறு.

வி. குற்றங்களாவனமேலரசனுக்குச்சொல்லியவகையாறுமடிமறப்புப்பிழைப்பென்றிவைமுதலாயவுமாம். நாணிழிதொழிலின்மனஞ்செல்லாமை. இவைபெரும்பான்மையுந்தக்கோர்வாய்க்கேட்டலாகியவாகமவளவையாற்றெளிவன. இவைநான்குமுடையவனையேதெளிகவென்பதாம்.

பு. குடிப்பிறந்து - உயர்ந்தகுடியிற்பிறந்து, குற்றத்தினீங்கி-குற்றங்களினின்றுநீங்கி, வடுப்பரியும் - நமக்குவடுவருங்கொலென்றஞ்சாநிற்கும், நாணுடையான்கட்டேதெளிவு-நாணுடையவன்கண்ணதேயரசரதுதெளிவு, எ-று.

வி. குற்றங்ளாவன, மேலேயரசனுக்குச்சொல்லிய குற்றங்ளாறும் சோம்பல்மறப்புதப்புதல் என விவைமுதலியவுமாம். நாண், இழிதொழிலிலேமனஞ்செல்லக்கூசுதல். இவைபெரும்பாலும் பெரியோர்வாயாற் கேட்பதாகிய ஆகமப்பிரமாணத்தினாலே தெளியப்படுவன. இந்தநான்குமுடையவனையேதெளிகவென்பதாம்.

௩. அரியகற்றாசற்றார்கண்ணுந்தெரியுங்கா
லின்மையரிதேவெளிறு.

When even men, who have studied the most difficult works, and who are free from faults, are (carefully) examined, it is a rare thing to find them without ignorance. - - - - 503

பரி. கற்றற்கரியநூல்களைக்கற்றுமேற்சொல்லியகுற்றங்களற்றார்மாட்டுநுண்ணிதாகவாராயுமிடத்துவெண்மையில்லாமையரிதென்றவாறு.

வி. வெண்மைஅறியாமை. அஃதிவர்மாட்டுளதாவதுமனத்தநிலையாமையானோரோவழியாகலிற்றெரியுங்காலென்றார். காட்சியளவையாற்றெளிந்தாலதுவுமில்லாதாரோதெளியப்படுவரென்பதுகுறிப்பெச்சம். இவ்வளவைகளானிக்குணமுங்குற்றமுந்தெரிந்துகுணமுடையாரைத்தெளிகவென்பதிவைமூன்றுபாட்டானுங்கூறப்பட்டது.

பு. அரியகற்று - கற்கவரியநூல்களைக்கற்று, ஆசற்றார்கண்ணும்-மேலேசொல்லப்பட்ட குற்றங்களெல்லாந்தீர்ந்தவரிடத்தும், தெரியுங்கால்-நுட்பமாக ஆராயுமிடத்து, வெளிறின்மையரிது-அறியாமையில்லாதிருத்தலரிது, எ-று.

வி. வெளிறு, அறியாமை. அது இவரிடத்துண்டாதல் மனநிலைநில்லாததினாலே ஓரோரிடங்களிலாதலால், தெரியுங்காலென்றார். பிரத்தியட்சப் பிரமாணத்தினாலே இதுவுமில்லாதவரோ தெளியப்படுவரென்பது குறைந்துநின்றது. இப்படிக்குறைந்துநிற்பது குறிப்பெச்சமெனக்காண்க. இந்தப்பிரமாணங்களாலேகுணமுங் குற்றமுந்தெரிந்து குணமுடையவரைத்தெளிகவென்பதுதான் இந்தமூன்றுபாட்டாலுங்கூறப்பட்டது.

௪. குணநாடிக்குற்றமுநாடியவற்றுண்
மிகைநாடிமிக்ககொளல்.

Let (a king) consider (a man's) good qualities, let him also consider his faults, and then let him consider which of these are the greatest, and let him judge (of his character) by that which prevails. - - - - - - - - - 504

பரி. குணங்குற்றங்களுளொன்றேயுடையாருலகத்தின்மையினொருவன்குணங்களையாராய்ந்தேனைக்குற்றங்களையுமாராய்ந்துபின்னவ்விருபகுதியுள்ளுமிக்கவற்றையாராய்ந்தவனையம்மிக்கவற்றானேயறிகவென்றவாறு.

வி. மிகையுடையவற்றைமிகையென்றார். அவையாவனதலைமையானாகப்பன்மையானாகவுயர்ந்தன. அவற்றானறிதலாவதுகுணமிக்கதாயின்வினைக்குரியனென்றுங்குற்றமிக்கதாயினல்லனென்றுமறிதல். குணமேயுடையாருலகத்தரியராகலினிவ்வகையாராயுந்தெளிகவென்பதிதனாற்கூறப்பட்டது.

பு. குணநாடிக்குற்றமுநாடி - (குணங்குற்றமென்பனவற்றுள் ஒன்றையேயுடையவருலகத்திலில்லாததினாலே) ஒருவன்

குணங்களைச்சோதித்து ஒழிந்தகுற்றங்களையுஞ் சோதித்து, அவற்றுள்-அந்த இரண்டுபங்கினுள்ளும், மிகைநாடி - மிக்கவற்றைச்சோதித்து, மிக்ககொளல்-அவனையம்மிகுந்தவற்றினாலேயறிந்துகொள்க, எ-று.

வி. மிகையுடையவற்றைமிகையென்றது ஆகுபெயர். அவையாவன,தலைமைபற்றியுயர்ந்தனவும்பன்மைபற்றியுயர்ந்தனவுமாம். அவற்றாலறிதலாவது, குணமிக்கதாயின்வினைக்குரியனொன்றுங் குற்றமிக்கதாயின் உரியரல்லனொன்றுமறிதல். குணமேயுடையவருலகத்தரியராதலாலிவ்வகையாராயுந் தெளிகவென்பது இதனாற்கூறப்பட்டது.

௫. பெருமைக்குமேனைச்சிறுமைக்குந்தத்தங்
கருமமேகட்டளைக்கல்.

A man's deeds are the touch-stone of his greatness and littleness. - - - - - - - - - - 505

பரி. பிறப்புக்குணமறிவென்பனவற்றான் மக்களெய்தும்பெருமைக்குமற்றைச்சிறுமைக்குமுரைகல்லாவதுதாந்தாஞ்செய்யுங்கருமமேபிறிதில்லையென்றவாறு.

வி. இஃதேகதேசவுருவகம்.மக்களதுபெருமையுஞ்சிறுமையுந்தப்பாமலறியலுறுவார்க்குப்பிறகருவிகளுமுளவாயினு முடிந்தகருவி செயலென்பதுதேற்றேகாரத்தாற்பெற்றாம். இதனாற்குணங்குற்றநாடுதற்குக்கருவிகூறப்பட்டது.

பு. பெருமைக்குமேனைச்சிறுமைக்கும் - பிறப்புகுணமறிவு என்பனவற்றால்மனிதரெய்தும்பெருமைக்குமற்றைச்சிறுமைக்கும், தத்தங்கருமமேகட்டளைக்கல் - தாந்தாஞ்செய்யுங்கருமங்களையுரைகல்லாகும் வேறே யில்லை, எ-று.

வி. மனிதரொன்னும்பொன்னையவரவர் செய்யுங்கருமமென்னும் உரைகல்லிலுரைக்கப்பெருமை சிறுமை தெளியப்படுமென நிற்றலால், இது ஏகதேசவுருவகவலங்காரம். மனிதருடைய பெருமைசிறுமைகளைத்தப்பாமலேயறியவேண்டியவர்களுக்கு வேறுகருவிகளிருப்பினும் முடிவாகிய கருவிசெயலேயென்பது,தேற்றேகாரத்தாற்பெறப்பட்டது. இதனாற்குணங்குற்றங்களைநாடுதற்குக்கருவிகூறப்பட்டது.

௬. அற்றாரைத்தேறுதலோம்புகமற்றவர்
பற்றிலர்நாணார்பழி.

Let (a king) avoid choosing men who have no relations; such men have no attachments, and therefore have no fear of crime. 506

பரி. சுற்றமில்லாதாரைத்தெளிதலையொழிகவவருலகத்தோடுதொடர்பிலாகலாற்பழிக்கஞ்சாரென்றவாறு.

வி. பற்றிலரென்பதனாற்சுற்றமென்பதுவருவிக்கப்பட்டது. உலகத்தார்பழிப்பனவொழிதற்கும்புகழ்வனசெய்தற்குமேதுவாகியவுலகநடையியல்புசுற்றமில்லாதார்க்கின்மையினவர்தெளியப்படாரென்பதாம்.

பு. அற்றாரை - சுற்றமில்லாதவரை, தேறுதலோம்புக- தெளிவதையொழிக, அவர்பற்றிலர்-அவருலகத்தோடு தொடர்ச்சியில்லாதவராதலால், நாணார்பழி - பழிக்கு அஞ்சார், எ-று.

வி. பற்றிலரென்றதினாலே,சுற்றம்வருவிக்கப்பட்டது. உலகத்தார் பழிப்பவைவிடுதற்கும் புகழ்பவை செய்தற்குமேதுவாகிய உலகநடை சுற்றமில்லாதவர்க்கு இல்லாததினாலேயவர் தெளியப்படாரென்பதாம்.

௭. காதன்மைகந்தாவறிவறியார்த்தேறுதல்
பேதைமையெல்லாந்தரும்.

To choose ignorant men, through partiality, is the height of folly.* - - - - - - - - - 507

பரி. அன்புடைமைபற்றுக்கோடாகத்தமக்கறியவேண்டுவனவறியாதாரைத்தெளிதலரசனுக்கெல்லாவறியாமையையுங்கொடுக்குமென்றவாறு.

வி. தன்னோடுவரிடைநின்றவன்புபற்றியரசனறிவிலார்மேல்வினையைவைப்பின்ஃதவரறிவின்மையாற்கெடுங்கேட்டாலவர்க்குளதேயன்றிவினைக்குரியாரையறியாமைமேல்வினைவறியாமைமுதலாகவவனுக்கறியாமைபலவுமுளவென்பதாம்.

பு. காதன்மைகந்தா-அன்புடைமைபற்றுக்கோடாக, அறி

* Lit: To lean on the staff of partiality, and make choice of men who are ignorant of what they ought to know, will lead to consummate.

வறியார்த்தேறுதல்-தமக்கு அறியவேண்டுவனவற்றையறியாதவரைத்தெளிவது, பேதைமையெல்லாந்தரும் - அரசனுக்கு எல்லாவறியாமைகளையுங்கொடுக்கும், எ-று.

வி. தனக்குமவனுக்குமிருந்த அன்புபற்றி அறிவிலார்மேல்வினையையரசன் வைப்பானாயின் அவருடைய பேதைமையினாலே அந்தவினைகெடும். கெடவே அவரளவேயன்றி வினைக்குரியவரையறியாமையும் மேல்விளைவு அறியாமையுமுதலியவாக அவனுக்கு அறியாமைபலவு முண்டென்பதாம்.

அ. தேரான்பிறனைத்தெளிந்தான்வழிமுறை
   தீராவிடும்பைதரும்.

Sorrow that will not leave even his posterity will come upon him who chooses a stranger whose character he has not known. 508

பரி. தன்னோடியைபுடையனல்லாதானைப்பிறப்புமுதலியவற்றானுஞ்செயலானுமாராயாதுதெளிந்தவரசனுக்கத்தெளிவுதன் வழிமுறையினுநீங்காததுன்பத்தைக்கொடுக்குமென்றவாறு.

வி. இயைபுதன்குடியோடுகோடாமரபு. இதனானேயதுவும்வேண்டுமென்பதுபெற்றும்.தெளிதலவன்கண்ணே வினையைவைத்தல். அவ்வினைகெடுதலாற்றன்குலத்துப்பிறந்தாரும்பகைவர்கைப்பட்டுக்கீழாய்விடுவரென்பதாம். நான்கனுருபுவிகாரத்தாற்றொக்கது.

பு. தேரான்பிறனை-தன்னோடு ஒருசம்பந்தமுமில்லாதானை, தெளிந்தான் - (பிறப்புமுதலியவற்றாலுஞ்செய்கையாலும் ஆராய்ந்துபாராமல்) தெளிந்த அரசனுக்கு, (அந்தத்தெளிவானது) வழிமுறைதீரா-தன்குடிவழிக்கிரமத்திலுந்தீராத, இடும்பைதரும்-துன்பத்தைக்கொடுக்கும், எ-று.

வி. சம்பந்தம், தன்குடியொடுகோணாதமரபு. இதினாலேயதுவும் வேண்டுமென்பதுபெறப்பட்டது. தெளிதல், அவனிடத்தில் வினையைவைத்தல். அந்தவினைகெடுதலாலே, தன்குலத்திற்பிறந்தாரும் பகைவர்கைப்பட்டுக்கீழாவரென்பதாம். தெளிந்தானுக்கு என்னும் நான்காம் வேற்றுமையுருபுதொக்கிநின்றது.

கூ. தேறற்கயாரையுந்தேராதுதேர்ந்தபிற்
றேறுகதேறும்பொருள்.

Let (a king) choose no one without previous consideration; after he has made his choice, let him unhesitatingly select (for each) such duties as are appropriate. - - - - - - 509

பரி. யாவரையுமாராய்ந்துதெளியாதுதேறுதலொழிகவாராய்ந்தபிற்றெளியும்பொருள்களையையுறுதொழிகவென்றவாறு.

வி. தேறற்கவென்றபொதுமையாலொருவினைக்கண்ணுந்தெளியலாகாதென்பதுபெற்றும். ஈண்டுந்தேறுகவென்றதுதாற்பரியத்தாலையுறவினதுவிலக்கின்மேனின்றது. தேறும்பொருளென்றதவரவராற்றற்கேற்றவினைகளை. பொருளாகுபெயர்.

பு. யாரையும்-யாவரையும், தேராது - ஆராய்ந்துதெளியாமல், தேறற்க-தேறுதலொழிக, தேர்ந்தபின்-ஆராய்ந்தபின்பு, தேறும்பொருள்-தெளியும்பொருள்களை, தேறுக-சந்தேகப்படாதொழிக, எ-று.

வி. தேறற்கவென்றபொதுமையினாலே, எந்தவினையிடத்துந் தெளியலாகாதென்பதுபெறப்பட்டது. இங்கேதேறுக வென்றது, தாற்பரியத்தினாலே சந்தேகத்தினதுவிலக்குதலின் மேல்நின்றது. தேறும்பொருளென்றது, அவரவர்சத்திக்கேற்றவினைகளை. இங்கேபொருளென்றது, ஆகுபெயர்.

ய. தேரான்றெளிவுந்தெளிந்தான்கணையுறவுந்
தீராவிடும்பைதரும்.

To make choice of one who has not been examined, and to entertain doubts respecting one who has been chosen, will produce irremediable sorrow. - - - - - - - 510

பரி. அரசனொருவனையாராயாதுதெளிதலுமாராய்ந்துதெளிந்தவன்மாட்டையப்படுதலுமிவ்விரண்டுமவனுக்குநீங்காததுன்பத்தைக்கொடுக்குமென்றவாறு.

வி. வினைவைத்தபினொருதவறுகாணாதுவைத்தையுறுமாயினதனையவனறிந்தினியிதுதில்லாதென்னுங்கருத்தானவ்வினையைநெகிழ்த்துவிடுமதுவேயன்றிப்

பகைவராலெளிதிற்பிரிக்கவும்படுமாகலாற்றெளிந்தான்கணையுறவுமாகாதாயிற்று. தெளிவிற்கெல்லைகூறியவாறு. இவையைந்துபாட்டானுந்தெளியப்படாதாரிவரொன்பதூஉமவரைத்தெளிந்தாற்படுமிழுக்குந்தெளிவிற்கெல்லையுங்கூறப்பட்டன.

பு. தேரான்றெளிவும்-அரசன் ஒருவனையாராயாதுதெளிவதும், தெளிந்தான்கணையுறவும் - தெளிந்தவனிடத்திற்சந்தேகப்படுதலும், (ஆகியவிவ்விரண்டும்) தீராவிடும்பைதரும்-நீங்காததுன்பத்தைக்கொடுக்கும், எ-று.

வி. வினையையவனிடத்தில்வைத்தபின் ஒருகுற்றமுங்காணமலே சந்தேகப்படுவானாயின், அதையவனறிந்து இனியிதுநில்லாதென்னுங்கருத்தாலந்தவினையைநெகிழவிடுவான். அதுவுமன்றிப்பகைவராலே எளிதிற்பிரிக்கவும்படுவான். ஆதலாலே தெளிந்தவனிடத்திற்சந்தேகமுமாகாதாயிற்று. தெளிவிற்கு எல்லைகூறியபடி. இவையைந்துபாட்டானுந்தெளியப்படாதாரிவரொன்பதும் அவரைத்தெளிந்தாற்படுங்குற்றமும் தெளிவிற்கு எல்லையுங்கூறப்பட்டன.

௫௰௩. அதிகாரம். CHAPTER LIII.

தெரிந்துவினையாடல்.

On deliberation in the employment (of servants).*

பரி. அஃதாவதுதத்தெளியப்பட்டாரையவர்செய்யவல்லவினைகளையறிந்தவற்றின்கண்ணேயாளுந்திறம். அதிகாரமுறைமையுமிதனானேவிளங்கும்.

அதாவது, அந்தத்தெளியப்பட்டவரையவர்செய்யத்தக்க

---

* The manner in which a king should employ his instruments, after having known them, and the works to which they are suited.

வினைகளையறிந்து அந்தவினைகளினிடத்தலைவனாயாளுந்திறம். அதிகாரமுறையுமிதினாலே விளங்கும்.

க. நன்மையுந்தீமையுநாடிநலம்புரிந்த
தன்மையானாளப்படும்.

He should be employed (by a king), whose nature (leads him to) choose the good, after having considered both the evil and the good. - - - - - - - - - 511

பரி. அரசன்முதற்கணொருவினையைத்தன்கண்ணேவைத்தாலதன்கணாவனவுமாகாதனவுமாயசெயல்களையாராய்ந்தறிந்தவற்றுளாவனவற்றையேவிரும்பியவியல்பினையுடையான்பின்னவனாற்சிறந்தவினைகளிலேயாளப்படுமென்றவாறு.

வி. தன்னையுரிமையறிதற்பொருட்டகம்புறங்கட்குநடுவாயதோர்வினையையரசன்றன்கண்வைத்தவழியதன்கணாஞ்செயல்களையேசெய்தவன்பின்னுமவ்வியல்பினனாதல்பற்றியகமாயவினைக்கண்ணேயாளப்படுமென்பதாயிற்று. புரிந்தவென்றவிறந்தகாலத்தான்முன்னுரிமையறிதற்பொருட்டுவைத்தவினையாதல்பெற்றும்.

பு. நன்மையுந்தீமையுநாடி - (அரசன்முதலிலேயொருவினையைத்தன்னிடத்தில்வைத்தால்அதிலே) ஆவனவுமாகாதனவுமாகியசெயல்களைஆராய்ந்தறிந்து, நலம்புரிந்ததன்மையான் - (அவற்றுள்) ஆவனவற்றையே விரும்பியதன்மையையுடையவன், ஆளப்படும்-பின்பு சிறந்தவினைகளிலேயவனாலாளப்படுவான், எ-று.

வி. தன்னுடையநிலைமையறிதற்பொருட்டு உள்ளும்புறமுமாகியவிரண்டிடங்கட்கும் நடுவாகியதொருவினையையரசன்தன்னிடத்தில்வைத்தபோது அவ்வினையினிடத்து ஆகுஞ்செயல்களையேசெய்தவன் பின்னுமப்படியே செய்வானென்பதுபற்றி,யுள்ளானவினையினிடத்து ஆளப்படுவானென்பதாயிற்று. புரிந்தவென்ற இறந்தகாலத்தினாலே,முன்னே நிலைமையறிதற்பொருட்டுவைத்தவினையென்பதுபெறப்பட்டது.

௨. வாரிபெருக்கிவளம்படுத்துற்றவை
யாராய்வான்செய்கவினை.

Let him do (the king's) work who can enlarge the sources (of revenue), increase wealth, and consider (and prevent) the accidents (which would destroy it). - - - - - - - 512

பரி. பொருள்வருவாயில்களைவிரியச்செய்தப்பொருளாற்செல்வங்களைவளர்த்தவ்வாயில்கட்குஞ்செல்வங்கட்குமுற்றவிடையூறுகளை நாடோறுமாராய்ந்து நீக்கவல்லவனரசனுக்குவினைசெய்கவென்றவாறு.

வி. வாயில்களாவன மேலிறைமாட்சியுளியற்றலுமென்புழியுரைத்தனவுமுழவுபசுக்காவல்வாணிகமென்னும்வார்த்தையுமாம். செல்வங்களாவனவாண்டுப்பொருளுமின்பமுமாகவுரைக்கப்பட்டன. இடையூறுகளாவனவரசன்வினைசெய்வார்சுற்றத்தார்பகைவர்கள்வரொன்றிவரான்வருநலிவுகள்.

பு. வாரி-பொருள்வருவாய்களை, பெருக்கி-விரியச்செய்து, வளம்படுத்து - அந்தப்பொருளினாலேசெல்வங்களைவளர்த்து, உற்றவை-(அந்தவருவாய்களுக்கும் பொருளுக்குஞ்செல்வங்களுக்கும்வந்த) இடையூறுகளை, ஆராய்வான்-நாள்தோறுமாராய்ந்துதீர்க்கவல்லவன், செய்கவினை - அரசனுக்குவினைசெய்க, எ-று.

வி. வருவாய்களாவன, முன்னேயிறைமாட்சியுள் இயற்றலுமென்றபோது உரைத்தனவும் உழவுபசுக்காவல் வாணிகமென்பனவுமாம். செல்வங்களாவன, அங்கேபொருளுமின்பமுமாகவுரைக்கப்பட்டன. இடையூறுகளாவன, இராசகாரியஞ்செய்வோர்சுற்றத்தார் பகைவர் கள்வர் என்றிவர்களாலேவரும்விக்கினங்கள்.

௩. அன்பறிவுதேற்றமவாவின்மையிந்நான்கு
நன்குடையான்கட்டே தெளிவு.

Let the choice (of a king) fall upon him who largely possesses these four things, love,* knowledge, a clear mind, and freedom from covetousness. - - - - - - - 513

பரி. அரசன்மாட்டன்புமவனுக்காவனவறியுமறிவுமவைசெய்தற்கட்கலங்கா

* Personal attachment to the king.

மையுமவற்றாற்பொருள்கையுற்றவழியதன்மேலவாவின்மையுமாகியவிந்நான்கு குணங்களையுநிலைபெறவுடையான்மேலதேவினையைவிட்டிருக்குந்தெளிவென்றவாறு.

வி. இந்நான்குநன்குடையவன்செய்கின்றவினைக்கண்யாதுமாராயவேண்டுவதில்லையென்றரசன்றெளிதற்கேதுவாகவினதனையவன்பிறப்பிடனாக்கிக்கூறினார். இவைமூன்றுபாட்டானுமாடற்குரியானதிலக்கணங்கூறப்பட்டது.

பு. அன்பு-அரசனிடத்துவிசுவாசமும், அறிவு-அவனுக்கு ஆவனவற்றைமுன்னூடியறிகிறவறிவும், தேற்றம் - (அந்தவிசுவாசஞ்செய்வதிலும் ஆவனவற்றையறிந்து செய்வதிலும்) மனங்கலங்காமையும், அவாவின்மை - அவற்றாற்பொருள்கைக்குவந்தபோது அதின்மேலாசைவையாதிருத்தலும், இந்நான்கும் - ஆகிய இந்தநான்கையும், நன்குடையான்கட்டே தெளிவு-நிலைபெறும்படியாயுடையவனிடத்ததேயரசன் வினையைவிட்டிருக்குந்தெளிவு, எ-று.

வி. இந்தநான்குமுடையவன் செய்கின்றதொழிலிலேயாதுமாராயவேண்டுவதில்லையென்று அரசன் தெளிதற்குக்காரணமாதலால், அத்தெளிவையவன் பிறப்பிடமாக்கிச்சொன்னார். இவைமூன்றுபாட்டாலும் ஆளுதற்கு உரியவனிலக்கணஞ்சொல்லப்பட்டது.

ச. எனைவகையாற்றேறியக்கண்ணும்வினைவகையான்
வேறாகுமாந்தர்பலர்.

Even when (a king) has tried them in every possible way, there are many men who change, from the nature of the works (in which they may be employed). - - - - - - 514

பரி. எல்லாவகையானுமாராய்ந்துதெளிந்துவினைவைத்தபின்னுமவ்வினையினியல்பானேவேறுபடுமாந்தருலகத்துப்பலரென்றவாறு.

வி. கட்டியங்காரனைப்போலவரசவின்பத்தினைவெஃகிவிகாரப்படுவதல்லது தனக்குற்றமென்றொழிந்துதம்மியல்பினிற்பாரரியராகவின்வேறாகுமாந்தர்பலரென்றார். வினைவைப்பதற்குமுன்னெல்லாக்குணங்களுமுடையராய்வைத்தபின்விகாரப்படுவாரையிடையாயதொருவினையைவைத்தறிந்தொழிக்கவென்பதாம். இதனாலொருவகையாலொழிக்கப்படுவாராக்கூறப்பட்டது.

பு. எனைவகையால்-எல்லாவகையினாலும்,தேறியக்கண்ணும் ஆராய்ந்துதெளிந்துகாரியத்தைவைத்தபின்னும், வினைவகையால்-வினையின்றன்மையினாலே, வேறாகுமாந்தர்பலர்-வேறுபடுகிறமனிதருலகத்திலேபலர், எ-று.

வி. அரசவின்பத்தைவிரும்பிக் கட்டியங்காரனைப்போலவிகாரப்படுவதேதவிர அதைக்குற்றமென்றொழிந்து தம்முடையசுபாவத்திலேநிற்பவர் அரியராதலால், வேறாகுமாந்தர்பலவென்றார். காரியத்தைவைப்பதற்குமுன் எல்லாக்குணங்களுமுடையவராய் வைத்தபின்பு விகாரப்படுவாரையிடையிலேயொருகாரியத்தைவைத்து ஆராய்ந்து நீக்குகவென்பதாம்.இதினாலே யொருவகையாலொழிக்கப்படுவாரைக்கூறப்பட்டது.

௫. அறிந்தாற்றிச்செய்கிற்பாற்கல்லால்வினைதான்
சிறந்தானென்றேவற்பாற்றன்று.

(A king's) work can only be accomplished by a man of wisdom and patient endurance; it is not of a nature to be given to another from mere personal attachment. - - - - - 515

பரி. செய்யுமுபாயங்களையறிந்துசெயலாலுமிடையூறுகளாலும்வருந்துன்பங்களைப்பொறுத்துமுடிவுசெய்யவல்லானையல்லது வினைதானிவனம்மாட்டன்புடையனென்றுபிறனொருவனையேவுமியல்புடைத்தன்றென்றவாறு.

வி. செய்கிற்பாற்கென்பதுவேற்றுமைமயக்கம். அறிவாற்றல்களானல்லதன்பான்முடியாதெனவிதனால்வினையினதியல்புகூறப்பட்டது.

பு. அறிந்து-செய்யுமுபாயங்களையறிந்து, ஆற்றி - (செயலாலும் இடையூறுகளாலும்வருந்துன்பங்களைப்) பொறுத்து, செய்கிற்பாற்கல்லால் - முடிவுசெய்யவல்லவனுக்கேதவிர, வினைதான்சிறந்தானென்றேவற்பாற்றன்று-வினையானதுஅன்புடைமைபற்றிமற்றொருவனைச்செய்யச்சொல்லியேவுந்தன்மையையுடையதன்று, எ-று.

வி. அறிவுபொறுமையன்றியன்பினாலேமுடியாதென இதினாலே வினையின் குணங்கூறப்பட்டது.

௬. செய்வானைநாடிவினைநாடிக்காலத்தோ
டெய்தவுணர்ந்துசெயல்.

Let (a king) act, after having well considered the agent (whom he is to employ), the deed (he desires to do), and the time which is suitable to it. - - - - - - - 516

பரி. முதற்கண்ணேசெய்வானதிலக்கணத்தையாராய்ந்துபின்செய்யப்படும்வினையினதியல்பையாராய்ந்துபின்னவனையுமதனையுங்காலத்தோடுபடுத்துப்பொருந்தவறிந்தவனையதன்கணுடலைச்செய்கவென்றவாறு.

வி. செய்வானதிலக்கணமும்வினையினதியல்புமேலேகூறப்பட்டன. காலத்தோடெய்தவுணர்தலாவதிக்காலத்திவ்விலக்கணமுடையான்செய்யினிவ்வியல்பிற்றாயவினைமுடியுமென்றுகூட்டியுணர்தல்.

பு. செய்வானைநாடி-முன்னேசெய்பவனுடைய இலக்கணத்தையாராய்ந்து, வினைநாடி - பின்புசெய்யப்படும்வினையினுடையதன்மையையாராய்ந்து, காலத்தோடெய்தவுணர்ந்து-பின் அவனையுமவ்வினையையுங் காலத்தோடுசேர்த்துப்பொருந்தவுணர்ந்து, செயல்-அவனையவ்வினையிலேயாளுவதைச்செய்க, எ-று.

வி. செய்வானிலக்கணமும் வினையினதுதன்மையு மேலே சொல்லப்பட்டன. காலத்தோடெய்தவுணர்தலாவது, இக்காலத்திலேஇவ்விலக்கணமுடையவன்செய்தால்இந்தக்குணத்தையுடையதாகிவினைமுடியுமென்றுகூட்டியுணர்வது.

௭. இதனையிதனாலிவன்முடிக்குமென்றாய்ந்
ததனையவன்கண்விடல்.

After having considered, "this man can accomplish this, by these means," let (the king) leave with him the discharge of that duty. - - - - - - - - 517

பரி. இவ்வினையையிக்கருவியாலிவன்முடிக்கவல்லனெனக்கூறுபடுத்தாராய்ந்துமூன்றுந்தம்முளியைந்தவழியவ்வினையையவன்கண்விடுகவென்றவாறு.

வி. கருவிதுணைவரும்பொருளுமுதலாயின. வினைமுதலுங்கருவியும்வினையுந்

தம்முளியைதலாவதோரொன்றோடொன்றேடேனையவிரண்டற்கும் பொருத்தமுண்டாதல்விடுதலதற்கவனையுரியனுக்குதல்.

பு. இதனை-இந்தவினையை, இதனல் - இந்தக்காரணத்திஞலே,இவன்முடிக்குமென்ருய்ந்து-இவன்முடிக்கவல்லனென்று பகுத்தாராய்ந்து, (இந்தமூன்றுமொத்துஇயைந்தபோது) அதனையவன்கண்விடல்-அந்தவினையையவன்பால்வைக்க,எ-று.

வி. காரணம், துணையாகவருகிறவர்களும் பொருளும்முதலாயினவை. செய்பவனுங் கருவியும் வினையும் தம்முளியைவதாவது, ஒவ்வொன்ருேடேமற்றவிரண்டிற்கும் பொருத்தமுண்டாதல். விடுதலாவது, அவனையதற்கு உரியவனுக்குதல்.

௮. வினைக்குரிமைநாடியபின்றையவனை
யதற்குரியனுகச்செயல்.

Having considered what work a man is equal to, let (the king) employ him in that work. - - - - - - 518

பரி. ஒருவனையரசன்றன்வினைசெய்தற்குரியனுகவாராய்ந்துதுணிந்தாற்பின்னவனையதற்குரியனுமாறுயரச்செய்கவென்றவாறு.

வி. உயரச்செய்தலாவததனைத்தானேசெய்துமுடிக்குமாற்றலுடையனுக்குதல். அதுசெய்யாக்காலுங்கெடுமென்பதுகருத்து.

பு. வினைக்குரிமைநாடியபின்றை-ஒருவனையரசன்தன் வினை செய்தற்கு உரியவனுகவாராய்ந்துதெளிந்தாற் பின்பு, அவனையதற்குரியனுகச்செயல் - அவனையதற்கு உரியவனுகும்படியுயரச்செய்க, எ-று.

வி. உயரச்செய்தலாவது, அதனைத்தானே செய்துமுடிக்குஞ்சத்தியுடையவனுக்குதல். இது செய்யாக்காலுங்கெடுமென்பதுகருத்து.

௯. வினைக்கண்வினையுடையான்கேண்மைவேருக
நினைப்பானை நீங்குந்திரு.

Prosperity will leave (the king) who doubts the friendship of the man who steadily labours in the discharge of his duties. 519

பரி. எப்பொழுதுந்தன்வினையின்கண்ணேமுயறலையுடையானவ்வுரிமையாத்

றனக்குக்கோணாயொழுகுகின்றதன்மையையதுபொறாதார்சொற்கேட்டரசன் மாறுபடக்கருதுமாயிற்றிருமகளவனைவிட்டுநீங்குமென்றவாறு.

வி. கோணாயொழுகுகின்றதன்மையாவதுதான்பிறனாய்தில்லாதுகேளிர்செய்யுமுரிமையெல்லாஞ்செய்தொழுகுதல். அவனையவமதிப்பாகக்கொண்டுசேறக்கருதுமாயிற்பின்னொருவருமுட்பட்டுமுயல்வாரில்லையாமாகவேதன்செல்வங்கெடுமென்பதுகருத்து. இந்நான்குபாட்டானுமாடற்குரியானையாளுந்திறங்கூறப்பட்டது.

பு. வினைக்கண்வினையுடையான்கேண்மை - எப்பொழுதுந் தன்வினையினிடத்திலேதானே முயற்சியைச்செய்பவனுடைய நட்பை, வேறாகநினைப்பானை - (அதுபொறாதவர் சொல்லுஞ் சொல்லைக்கேட்டு)மாறுபடநினைக்குமரசனை, நீங்குந்திரு-விட்டு நீங்குவாள்திருமகள், எ-று.

வி. கேண்மை, கேளாயொழுகுந்தன்மை. அதாவது, தான் பிறனாகநில்லாமற் சுற்றத்தார் செய்யுமுரிமையெல்லாஞ்செய் தொழுகுவது. அவனையவமதிப்பாகச்செய்துதண்டிக்கநினைப் பானாயின், பின்னொருவருமுட்பட்டுமுயல்வாரில்லையாம். ஆக வே, தன்செல்வங்கெடுமென்பதுகருத்து. இந்தநான்குபாட் டாலும் ஆளுதற்குரியவனையாளுந்திறங்கூறப்பட்டது.

ω. நாடோறுநாடுகமன்னன்வினைசெய்வான்
கோடாமைகோடாதுலகு.

Let a king daily examine the conduct of his servants; if they do not act crookedly, the world will not act crookedly. - 520

பரி. வினைசெய்வான்கோடாதொழியவுலகுகோடாதாகலானரசனவன்செயலைநாடோறுமாராய்கவென்றவாறு.

வி. அஃதொன்றனையுமாராயவேயதன்வழித்தாயவுலகமெல்லாமாராய்ந்தானாமதனாலவனுரிமையழியாமற்றன்னுள்ளேயாராய்ந்துபோதுகவென்பதாம். இதனாலாண்டவழிச்செய்வதுகூறப்பட்டது.

பு. வினைசெய்வான்கோடாமை-காரியஞ்செய்பவன்கோணா திருக்க, கோடாதுலகு-உலகங்கோணாது, (ஆதலால்) நாடோ றுநாடுகமன்னன்-அரசனவன்செயல்களை நாள்தோறுமாராய் க, எ-று.

வி. அவற்றையாராயவே, யவற்றின்பிற்பட்டவுலகமெல்லா மாராய்ந்தானாவன். அதனாலவனுரிமையழியாமலே தன்னுளா ராய்ந்து செல்கவென்பதாம். இதனாலாண்டபின்செய்வதுகூ றப்பட்டது.

---

௫௩. அதிகாரம். CHAPTER LIII.

சுற்றந்தழால். ON KINDNESS TO RELATIVES.

பரி. அஃதாவதரசன்றன்கிளைஞரைத்தன்னினீங்காமலணைத்தல். வினைசெ ய்வாரைக்கூறியேனைச்சுற்றங்கூறுகின்றாராகவினிது தெரிந்துவினையாடற்பின் வைக்கப்பட்டது.

அதாவது, அரசன் றன்கிளைஞரைத்தன்னிடத்தினின்று நீங் காமலணைத்தல். வினைசெய்வாரைச்சொல்லி மற்றச்சுற்றங்கூ றுகின்றாராதலா லிதுதெரிந்துவினையாடலின்பின்வைக்கப்பட் டது.

க. பற்றற்றகண்ணும்பழமைபாராட்டுதல்
சுற்றத்தார்கண்ணேயுள.

Even when (a man's) property is all gone, relatives will act towards him with their ancient (kindness). - - - 521

பரி. ஒருவன்செல்வந்தொலைந்துவறியனாயவழியும்விடாதுதம்மோடவனி டைப்பழமையையெடுத்துக்கொண்டாடுமியல்புகள்சுற்றத்தார்கண்ணேயுளவா வனவென்றவாறு.

வி. சிறப்பும்மைவறியனாயவழிப்பாராட்டாமைவிளக்கிநின்றது. பழமைப ற்றறுதகாலத்துத்தமக்குச்செய்தவுபகாரம். ஏறொல்லாமவன்பற்றற்றபொழு தேதாழுமவரோடுபற்றறுவராகவினேகாரந்தேற்றத்தின்கண்வந்தது. இதனாற் சுற்றத்ததுசிறப்புக்கூறப்பட்டது.

ப. பற்றற்றகண்ணும்-ஒருவன்செல்வந்தொலைந்துதரித்தி ரனானவிடத்தும், பழமைபாராட்டுதல்-விடாமலே தமக்குமவ னுக்குமிருந்த பழமைப்பண்பினையெடுத்துக்கொண்டாடுந்த

ன்மைகள், சுற்றத்தார்கண்ணேயுள-பந்துக்களிடத்தேயுள்ளனவாம், எ-று.

வி. சிறப்பும்மை, தரித்திரனானபோதுபாராட்டுதலரிதென்பதுவிளக்கிநின்றது. பழைமை, பற்றறாத காலத்துத்தமக்குச் செய்தவுபகாரம். பிறரொல்லாமவன் செல்வமழிந்தபோதேதாமுமவனோடு பற்றைவிட்டு நீங்குவாராதலால், ஏகாரந்தேற்றப்பொருள்படநின்றது. இதனாற் சுற்றத்தது சிறப்புக்கூறப்பட்டது.

உ. விருப்பறாச்சுற்றமியையினருப்பறா
வாக்கம்பலவுந்தரும்.

If (a man's) relatives remain attached to him with unchanging love, it will be a source of ever-increasing wealth. - - 522

பரி. அன்பறாச்சுற்றமொருவனுக்கெய்துமாயினஃதவற்குக்கிளைத்தலறாதசெல்வங்கள்பலவற்றையுங்கொடுக்குமென்றவாறு.

வி. உட்பகையினீக்குதற்குவிருப்பறாச்சுற்றமென்றுந்தானேவளர்க்குமொருதலையாயசெல்வத்தினீக்குதற்கருப்பறாவாக்கமென்றும்விசேடித்தார். தொடைநோக்கிவிகாரமாயிற்று. இயையினென்பததனதருமைவிளக்கிநின்றது. ஆக்கமென்பதாகுபெயர். பலவுமென்றதங்கங்களாறனையுநோக்கி. பலர்கூடிவளர்த்தவினவைமேன்மேற்கிளைக்குமென்பதுகருத்து.

பு. விருப்பறாச்சுற்றமியையின்-அன்பறாதசுற்றமொருவனுக்குவாய்க்குமாயின், அருப்பறா-(அது அவனுக்கு)வளர்தலறாத, ஆக்கம்பலவுந்தரும்-பலசெல்வங்களையுந்தரும், எ-று.

வி. உட்பகையிலே நீக்குதற்கு விருப்பறாச்சுற்றமென்றும், தானேவளர்க்கப்பட்டஒருதலைச்செல்வத்திலேநின்றுநீக்குதற்கு அருப்பறா ஆக்கமென்றும் விசேடித்தார். அரும்பு என்னுமுதனிலைத்தொழிற்பெயர், தொடைநோக்கி அருப்பு எனவிகாரப்பட்டுநின்றது. இயையின் என்றது, அதனருமையைவிளக்கிநின்றது. பலவுமென்றது, ஆறங்கங்களையும். பலர் கூடிவளர்ப்பதினாலே மேன்மேற்கிளைக்குமென்பதுகருத்து.

௩. அளவளாவில்லாதான்வாழ்க்கைகுளவளாக்
கோடின்றிநீர்நிறைந்தற்று.

The wealth of one who does not mingle freely with his relatives, will be like the full waters of a spacious tank, that has no banks.* - - - - - - - - 523

பரி. அச்சுற்றத்தோடுநெஞ்சுகலத்தலில்லாதவன்வாழ்க்கைகுளப்பரப்புக்கரையின்றிநீர்நிறைந்தாற்போலுமென்றவாறு.

வி. சுற்றத்தோடென்பதுஅதிகாரத்தான்வந்தது. நெஞ்சுகலப்புத்தன்னளவுமதனளவுமுசாவுதலான்வருவதாகலினளவளாவென்றதாகுபெயர். வாழ்க்கையென்றதுஉமதற்கேதுவாயசெல்வங்களை. நிறைதலென்னுமிடத்துநிகழ்பொருளின்றொழிலிடத்தின்மேனின்றது. சுற்றமிலலாதான்செல்வங்கடாங்குவாரின்மையிற்புறத்துப்போமென்பதாம்.

பு. அளவளாவில்லாதான்வாழ்க்கை - (தன்சுற்றத்தளவுந் தன்னளவும்) நெஞ்சுகலந்திராதவனுடைய செல்வமானது, குளவளா-குளப்பரப்பு, கோடின்றி-கரையில்லாமல், நீர்நிறைந்தற்று- நீர்நிறைந்ததுபோலும், எ-று.

வி. சுற்றத்தளவு என்பது, அதிகாரத்தால்வருவிக்கப்பட்டது. நெஞ்சுகலப்பு தன்னளவுமதனளவும் உசாவுதலால் வருவதாகலின் அளவளாஎன்றது, ஆகுபெயர். நிறைதலென்னும் இடத்தும்நிகழ்பொருளின்தொழில் இடத்தின்மேல்நின்றது. சுற்றமில்லாதவன்செலவம் தாங்குவாரில்லாததினாலே புறத்துப்போய்விடுமென்பதாம்.

௪. சுற்றத்தாற்சுற்றப்படவொழுகல்செல்வந்தான்
பெற்றத்தாற்பெற்றபயன்.

To live surrounded by relatives, is the advantage to be derived from the acquisition of wealth. - - - - - 524

பரி. செல்வம்பெற்றவதனாலொருவன்பெற்றபயனாவதுதன்சுற்றத்தாற்றன்சூழப்படும்வகையதனைத்தழீஇயொழுகுதலென்றவாறு.

---

* *i. e.* It will flow away; having no one to guard it.

வி. பெற்றவென்பதனுளகரமுமதனுனென்பதனுளன்சாரியையுந்தொடை நோக்கிவிகாரத்தாற்றொக்கன. இவ்வொழுக்குப்பகையின்றியரசாடற்கேதுவாகலினிதனைச்செல்வத்திற்குப்பயனென்றார். இவைமூன்றுபாட்டானுஞ்சுற்றந்தழால்செல்வத்திற்கேதுவுமரணும்பயனுமென்பனகூறப்பட்டன.

பு. செல்வந்தான்பெற்றத்தாற் பெற்றபயன் - செல்வம் பெற்றதினாலேயொருவன்பெற்றபயனாவது, சுற்றத்தால்-தன் சுற்றத்தினாலே, சுற்றப்படவொழுகல்-சூழப்படும்படியதைத் தழுவி நடத்தலாம், எ-று.

வி. தொடைநோக்கிப் பெற்றதாலென்பது, பெற்றத்தா லெனத்தகரவொற்றுவிரிந்து நின்றது. இப்படியொழுகுதல் பகையில்லாமலே அரசனுளதற்கு ஏதுவாதலால், அதைச்செ ல்வத்திற்குப்பயனென்றார். இவைமூன்றுபாட்டானுஞ் சுற்ற த்தைத்தழுவுதல், செல்வத்திற்கு ஏதுவென்பதும் காப்பென் பதும்பயனென்பதுங் கூறப்பட்டன.

௫. கொடுத்தலுமின்சொலுமாற்றினடுக்கிய
சுற்றத்தாற்சுற்றப்படும்.

He will be surrounded by numerous relatives who manifests generosity and affability. - - - - - - - 525

பரி. ஒருவன்சுற்றத்திற்குவேண்டுவனகொடுத்தலையுமின்சொற்சொல்லுதலையு ம்வல்லனாயிற்றம்மிற்றொடர்ந்தபலவகைச்சுற்றத்தானேசூழப்படுமென்றவாறு.

வி. இரண்டுமளவறிந்தாற்றுதலரிதென்பதுதோன்றவாற்றினென்றார். தம் மிற்றொடர்தலாவது சுற்றத்திற்சுற்றமுந்தனதுசுற்றமாயவற்றுற்பிணிப்புண்டுவ ருதல். இவ்வுபாயங்களைவடநூலார்தானமுஞ்சாமமுமென்ப.

பு. கொடுத்தலுமின்சொலுமாற்றின்-ஒருவன்சுற்றத்திற்கு வேண்டுவனகொடுப்பதையும்இன்சொற்சொல்லுதலையும்வல் லனாயின், அடுக்கியசுற்றத்தாற்சுற்றப்படும்-தம்மில்தொடர் ந்த பலவகைச்சுற்றத்தினாலே சூழப்படுவான், எ-று.

வி. இவ்விரண்டும் அளவறிந்துசெய்தலரிதென்பதுதோன் ற, ஆற்றினென்றார். தம்மிற்றொடர்தலாவது, சுற்றத்தின்சு ற்றமும் தன்சுற்றமாகியவற்றுற்கட்டுப்பட்டிருப்பது. இந்த

விரண்டையும் வடநூலார் தானமுஞ்சாமமுமாகியவுபாயங்க ளென்பார்.

௬. பெருங்கொடையான்பேணான்வெகுளியவனின்
மருங்குடையார்மாநிலத்தில்.

No one, in all the world, will have so many relatives (about him), as he who makes large gifts, and does not give way to anger.* 526

பரி. ஒருவன்மிக்ககொடையையுடையனுமாய்வெகுளியைவிரும்பானுமாயி னவனைப்போலக்கிளையுடையாரிவ்வுலகத்தில்லையென்றவாறு.

வி. மிக்ககொடையொன்றனும்வறுமையெய்தாமற்கொடுத்தல். விரும்பா மையிஃதாதற்குவேண்டுவதொன்றென்றளவிறந்துசெய்யாமை.

பு. பெருங்கொடையான்-ஒருவன்மிக்ககொடுப்பதையுடை யவனுமாகி, பேணான்வெகுளி-கோபத்தைவிரும்பாதவனுமா யின், அவனின் மருங்குடையார் - அவனைப்போலே சுற்றமு டையவர், மாநிலத்தில் - பெருமைபொருந்திய இந்தவுலகத்தி லில்லை, எ-று.

வி. மிக்ககொடை, ஒருவிதத்திலும்வறுமையணுகாமற்கொ டுப்பது. வெகுளிவிரும்பாமை, இக்கோபஞ்செல்வத்திற்கு வேண்டுவதொன்றென்று அளவுகடந்து கோபியாதிருத்தல்.

௭. காக்கைகரவாகரைந்துண்ணுமாக்கமு
மன்னநீரார்க்கேயுள.

The crows do not conceal (their prey), but will call out for others (to share with them) while they eat it; wealth will be with those who show a similar disposition (towards their relatives). - 527

பரி. காக்கைகடமக்கிரையாயினகண்டவழிமறையாதினத்தையழைத்த னோடுங்கூடவுண்ணுநிற்குஞ்சுற்றத்தானெய்துமாக்கங்களுமப்பெற்றித்தாயவிய ல்பினையுடையார்க்கேயுளவாவனவென்றவாறு.

வி. அவ்வாக்கங்களாவனபகையின்மையும்பெருஞ்செல்வமுடைமையுமுத லாயின. எச்சவும்மையானறமுமின்பமுமேயன்றிப்பொருளுமெய்துமென்பதுபெ

* வெகுளிபேணான், desires not anger; takes no pleasure in it; restrains it.

றதும். அப்பெற்றித்தாயவியல்பென்றது தானுகர்வனவெல்லாமவருநுகருமாறுவைத்தல்.

பு. காக்கைகரவா-(இரைகண்டபோது) காக்கைகள்ஒளியாமலே, கரைந்துண்ணும்-தம்மினத்தையழைத்து அதனோடுண்ணுநிற்கும், ஆக்கமும்-சுற்றத்தாலெய்துஞ்செல்வங்களும், அன்னநீரார்க்கேயுள- அப்படிப்பட்டகுணத்தையுடையவர்களுக்கேயுளவாம், எ-று.

வி. அந்தச்செல்வங்களாவன, பகையில்லாமைபெருந்தனமுடைமைமுதலாயின. ஆக்கமுமென்ற இறந்தது தழுவிய எச்சவும்மையால், அறமுமின்பமுமேயன்றிப்பொருளுமுண்டாமென்பதுபெறப்பட்டது. அப்படிப்பட்டகுணமென்றது, தானுண்பனவெல்லாமவருமுண்ணும்படிவைத்தல்.

அ. பொதுநோக்கான்வேந்தன்வரிசையாநோக்கி
னதுநோக்கிவாழ்வார்பலர்.

Many relatives will live near a king, when they observe that he does not look on all alike,* but that he looks on each man according to his merit.† - - - - - - - 528

பரி. எல்லாரையுமொருதன்மையானோக்காதரசன்றத்தந்தகுதிகேற்பநோக்குமாயினச்சிறப்புநோக்கியவனைவிடாதுவாழுஞ்சுற்றத்தார்பலரென்றவாறு.

வி. உயர்ந்தார்நீங்குதனோக்கிப்பொதுநோக்கைவிலக்கியெல்லாரும்விடாதொழுகுதனோக்கிவரிசையானெனநோக்கத்தைவிதித்தார். இந்நான்குபாட்டானுஞ்சுற்றந்தழுவுமுபாயங்கூறப்பட்டது.

பு. பொதுநோக்கான்வேந்தன்-அரசனெல்லாரையுமொருதன்மையராகப்பாராமல்,வரிசையாநோக்கின்-தத்தந்தகுதிக்கேற்கப்பார்ப்பானாயின், அதுநோக்கிவாழ்வார்பலர் - அந்தச்சிறப்புநோக்கியவனைவிட்டகலாது வாழுஞ்சுற்றத்தார்பலர், எ-று.

---

* பொது, in one *common*, undistinguishing manner.

† வரிசையா, orderly ; in due proportion to what each deserves.

வி. உயர்ந்தோர்நீங்குவது குறித்துப்பொதுநோக்கத்தை விலக்கியும், எல்லாரும்விடாது சூழ்வதைக்குறித்து வரிசையா நோக்கினென அதைத்தழுவியுங்கூறினர். இந்தநான்குபாட்டாலுஞ்சுற்றந்தழுவுமுபாயங்கூறப்பட்டது.

௯. தமராகித்தற்றுறந்தார்சுற்றமமராமைக்
காரணமின்றிவரும்.

Those who have been friends and have afterwards forsaken him will return and join themselves (to him), when the cause of disagreement is taken away. - - - - - - 529

பரி. முன்றமராய்வைத்துத்தன்னோடமராதியாதானுமொருகாரணத்தாற் றன்னைப்பிரிந்துபோயவர்பின்னும்வந்துசுற்றமாதலவ்வமராமைக்காரணந்தன் மாட்டில்லையாகத்தானேயுளதாமென்றவாறு.

வி. அமராமைக்காரணமின்றியென்றதனான்முன்னஃதுண்டாய்த்துறந்தல் பெற்றும். அஃதாவதரசன்றனெறிகேடவொழுகுதல்வெறுப்பனசெய்தலென் றிவைமுதலாயினவற்றான்வருவது. ஆக்கம்வருவிக்கப்பட்டது.இயற்கையாகவே யன்புடையாராயசுற்றத்தார்க்குச்செயற்கையான்வந்தநீக்கமதனையொழியவொழியுமொழிந்தாலவர்க்கன்புசெய்துகொள்ளவேண்டாபழையவியல்பாய்நிற்குமென்பார்வருமென்றார்.

பு. தமராகி-முன்புசுற்றமாகியிருந்து, தற்றுறந்தார்-(யாதோஒருகாரணத்தால்) தன்னைப்பிரிந்துபோனவர், சுற்றம்-பின்னும்வந்துசுற்றமாதல், அமராமைக்காரணம்-அவ்வமராமையாகியகாரணம், இன்றி-தன்னிடத்தில்லையாக, வரும்-தானேவரும், எ-று.

வி. அமராமைக்காரணமின்றியென்றதினாலே, முன்புஅது உண்டாயிருந்து பிரிந்துபோனதென்பது பெறப்பட்டது. அதாவது, அரசன்தானெறிதப்பிநடத்தல்வெறுப்பனசெய்தலென்றிவைமுதலாயினவற்றால்வருவது. சுற்றமென்புழி, ஆக்கம்வருவிக்கப்பட்டது. இயற்கையாகவேயன்புடையவராகிய சுற்றத்தார்க்குச்செயற்கையினாலே வந்தபிரிவுஅச்செயற்கையொழியவேயொழியுமொழிந்தால் அவர்க்கு அன்புசெய்து

கொள்ளவேண்டாபழையவியல்பாய்த்திற்குமென்பார், வருமென்றார்.

௰. உழைப்பிரிந்துகாரணத்தின்வந்தானைவேந்த
னிழைத்திருந்தெண்ணிக்கொளல்.

When one may have left him, and for some cause has returned, let the king fulfil the object (for which he has come back) and thoughtfully receive him again. - - - - - - 530

பரி. காரணமின்றித்தன்னிடத்தினின்றும்பிரிந்துபோய்ப்பின்காரணத்தான்வந்தசுற்றத்தானையரசனக்காரணத்தைச்செய்துவைத்தாராய்ந்துதழீஇக்கொள்கவென்றவாறு.

வி. வாளாஉழைப்பிரிந்தென்றமையிற்பிரிதற்குக்காரணமின்மைபெற்றும். வருதற்காரணத்தைச்செய்யாதவழிப்பின்னும்பிரிந்துபோய்ப்பகையோடுகூடுமாகலினிழைத்திருந்தென்றுமன்பின்றிப்போய்ப்பின்னுங்காரணத்தான்வந்தமையினெண்ணிக்கொள்கவென்றுங்கூறினார். பிரிந்துபோய்ச்சுற்றத்தாருட்டீமைசெய்யப்போ யதனையொழியவருவானுமதுசெய்யாமற்போய்ப்பின்னன்மைசெய்யவருவானுந்தழுவப்படுமாகலிற்றழுவுமாறுமுறையேயிவ்விரண்டுபாட்டானுங்கூறப்பட்டது.

பு. உழைப்பிரிந்து-(காரணமில்லாமலே) தன்னிடத்துநின்று பிரிந்துபோய், காரணத்தின்வந்தானை-பின்புஒருகாரணம்பற்றிவந்தசுற்றத்தானை, வேந்தனிழைத்திருந்து, அரசனக்காரணத்தைச்செய்துவைத்து, எண்ணிக்கொளல்-ஆராய்ந்து தழுவிக்கொள்க, எ-று.

வி. சும்மாவுழைப்பிரிந்து என்றதினாலே,பிரிவுக்குக்காரணமில்லையென்பதாயிற்று. வருதற்குக்காரணத்தைச்செய்யாதபோது பின்னும் பிரிந்துபோய்ப்பகையோடுகூடுமாதலாலிழைத்திருந்தென்றும், அன்பில்லாமலேபோய்ப்பின்னுங்காரணத்தால் வந்ததினாலே எண்ணிக்கொள்கவென்றுங்கூறினார். பிரிந்துசுற்றத்தாருள் தீமைசெய்யப்போய் அதனை நீங்கவருவானும் அதுசெய்யாமற்போய்ப்பின்பு நன்மைசெய்யவருவானுந்தழுவப்படுவானாதலால், தழுவும் நெறிமுறையேயிவ்விரண்டுபாட்டானுங்கூறப்பட்டது.

ருச. அதிகாரம். CHAPTER LIV.

பொச்சாவாமை. AGAINST FORGETFULNESS.

பரி. அஃதாவது, உருவுந்திருவுமாற்றலுமுதலாயவற்றுன்மகிழ்ந்துதற்காத்த லினும்பகையழித்தன்முதலியகாரியங்களினுஞ்சோர்தலைச்செய்யாமை. மேற்சொல்லியசுற்றத்தாராற் பயனுள்ளதிச்சோர்விலவழியாகவினிதுசுற்றந்தழாலின்பின்வைக்கப்பட்டது.

அதாவது, அழகுஞ்செல்வமும் பலமுமுதலாயினவற்றால் மகிழ்ந்துதன்னைக்காத்தலினும் பகையையொழித்தல் முதலியகாரியங்களினுமறவாதிருத்தல். மேற்சொல்லிய சுற்றத்தாராற்பயனுள்ளதிம்மறவாமையுள்ளபோதாதலினிதுசுற்றந்தழாலின்பின்வைக்கப்பட்டது.

க. இறந்தவெகுளியிற்றீதேசிறந்த
வுவகைமகிழ்ச்சியிற்சோர்வு. .

More evil than excessive anger, is the thoughtlessness which springs from the intoxication of great joy. - - - 531

பரி. மிக்கவுவகைக்களிப்பான்வருமறவியரசனுக்களவிறந்தவெகுளியினுந்தீதென்றவாறு.

வி. மிக்கவுவகைபெருஞ்செல்வம்பேரின்பம்பெருமிதமென்றிவற்றான்வருவது. அளவுபகைவரையடர்த்தற்குங்கொடியோரையொறுத்தற்கும்வேண்டுவது. இறந்தவெகுளியொரோவழிப்பகைவரையுங்கொல்லுமிஃதன்னதன்றித்தன்னையே கோறலினதனினுந்தீதாயிற்று.

பு. சிறந்தவுவகைமகிழ்ச்சியிற்சோர்வு-மிக்கசந்தோஷக்களிப்பினாலே வருமறவியானது அரசனுக்கு, இறந்தவெகுளியிற்றீது-அளவிறந்தகோபத்தினுந்தீதாம், எ-று.

வி. மிக்கசந்தோஷக்களிப்பாவது, பெருஞ்செல்வம்பெரியவின்பம் பெருஞ்செருக்கு என்றிவற்றால்வருவது. கோபத்திற்கு அளவு, பகைவலாட்பொருதற்குங் கொடியோரைத்தண்டித்தற்கும்வேண்டிய அளவு. இறந்தவெகுளி, பகைவரிடத்தாயினொருவேளையவரையுங்கொல்லும், இது அத்தன்மையத

ல்லாததிறுலே தன்னையே கொல்லுமாதலாற்றனினுந் தீதாயிற்று.

௨. பொச்சாப்புக்கொல்லும்புகழையறிவினை
நிச்சநிரப்புக்கொன்றாங்கு.

Forgetfulness will destroy fame, even as constant poverty destroys knowledge. - - - - - - - - 532

பரி. ஒருவன்புகழினையவன்மறவிகெடுக்குமறிவினைநிச்சநிரப்புக்கெடுக்குமாறுபோலவென்றவாறு.

வி. நிச்சநிரப்புநாடோறுமிரவான்வருந்தித்தன்வயிறுநிறைத்தல். அஃதறிவுடையான்கணுண்டாயினவற்கிளிவரவானும் பாவத்தானுமெள்ளற்பாட்டினைவிளைத்தவனன்குமதிப்பினையழிக்குமதுபோலமறவியும்புகழுடையான்கணுண்டாயினவற்குத்தற்காவாமையானுங்காரியக்கேட்டானுமெள்ளற்பாட்டினைவிளைத்தவனன்குமதிப்பினையழிக்குமென்பதாயிற்று. இவையிரண்டுபாட்டானும்பொச்சாப்பினதுகுற்றங்கூறப்பட்டது.

பு. பொச்சாப்பு-ஒருவனுடைய மறவியானது, புகழைக் கொல்லும்-அவனதுபுகழைக்கெடுக்கும், அறிவினை - ஞானத்தை, நிச்சநிரப்பு-நித்தியதரித்திரமானது, கொன்றாங்கு-கெடுத்ததுபோலும், எ-று.

வி. இந்தநித்தியதரித்திரமானது, அறிவுடையோனுக்குளதாயின் அவனுக்கு இழிவினாலும்பாவத்தினாலும் நிந்தையையுண்டாக்கியவனது நன்மதிப்பாகியமேன்மையைக்கெடுக்கும். அதுபோலமறவியும்புகழுடையானுக்குளதாயின் அவன்தன்னைக்காவாததினாலுங்காரியக்கேட்டினாலும் நிந்தையையுண்டாக்கியவனது நன்மதிப்பாகிய மேன்மையைக்கெடுக்குமென்பதாயிற்று. இவையிரண்டுபாட்டாலும் பொச்சாப்பினதுகுற்றங்கூறப்பட்டது.

௩. பொச்சாப்பார்க்கில்லைபுகழ்மையதுவுலகத்
தெப்பானூலோர்க்குந் துணிவு.

The thoughtless will never acquire fame ; this is the clear decision of all the books in the world. - - - - 533

பரி. பொச்சாந்தொழுகுவார்க்குப்புகழுடைமையில்லையவ்வின்மையிந்நிநூ

லுடையார்க்கேயன்றியுலகத்தெவ்வகைப்பட்டநூலுடையார்க்குமொப்பமுடிந்ததென்றவாறு.

வி. அரசர்க்கேயன்றியறமுதலியநான்கினுமுயல்வார்யாவர்க்குமவைகூடாமையிற்புகழில்லையென்பதுதோன்றவெப்பாலோர்க்குந்துணிவென்றார்.

பு. பொச்சாப்பார்க்கில்லைபுகழ்மை-மறவியுடையோர்க்குப் புகழுடைமையில்லை, அது-அவ்வில்லையென்பது, (இந்நூலுடையார்க்கேயன்றி) உலகத்து-உலகத்துள்ள,எப்பாலோர்க்குந் துணிவு-எவ்வகைப்பட்டநூலுடையார்க்குமொப்பமுடிந்ததெளிவாம், எ-று.

வி. அரசர்க்கேயன்றியறமுதலாகிய நான்கினுமுயல்வார் யாவர்க்கும் அதுகூடாமையால், எப்பாலோர்க்குந் துணிவென்றார்.

௪. அச்சமுடையார்க்கரணில்லையாங்கில்லை
பொச்சாப்புடையார்க்குநன்கு.

Just as the coward has no defence (by whatever fortifications he may be surrounded), so the thoughtless has no good (whatever advantages he may possess). - - - - - - 534

பரி. காடுமலைமுதலியவரண்களுள்ளேநிற்பினுமனத்தின்கணச்சமுடையார்க்கவற்றாற்பயனில்லையதுபோலவெல்லாச்செல்வமுடையராயினுமனத்தின்கண்மறவியையுடையார்க்கவற்றாற்பயனில்லையென்றவாறு.

வி. நன்மைக்கேதுவாகலினன்கென்றார். அச்சமுடையார்நின்றவரணழியுமாறுபோலமறவியுடையாருடையசெல்வங்களுமழியுமென்பதாயிற்று.

பு. அச்சமுடையார்க்கரணில்லை-காடுமலைமுதலியகோட்டைகளுள்ளே நின்றாலுமனத்தின்கண் அச்சமுடையார்க்கு அவற்றாற்பயனிலலை, ஆங்கில்லை-அதுபோலவேயில்லை, பொச்சாப்புடையார்க்குநன்கு-எல்லாச்செல்வமுமுடையராயினும்மனத்தினிடத்துமறவியையுடையார்க்கு அச்செல்வத்தாற் பயனின்று, எ-று.

வி. பயன்நன்மைக்கேதுவாதலால், நன்கென்றார். அச்சமு

டையவர் தின்ற அரண்கள் அழிவதுபோல, மறவியுடையார் பெற்ற செல்வங்களும் அழியுமென்பதாயிற்று.

௫. முன்னுறக் காவா திழுக்கியான் றன்பிழை
பின்னூ றிரங்கி விடும்.

The careless man, who provides not against the calamities that may happen, will afterwards think with sorrow of his fault. 535

பரி. தன்னாற்காக்கப்படுந் துன்பங்களை யவை வருதற்கு முன்னேயறிந்து காவாது மறந்திருந்தான் பின்வந்துற்றகாலத்துக் காக்கலாகாமையின் அப்பிழைப்பினை நினைத்திரங்கிவிடுமென்றவாறு.

வி. காக்கப்படுந் துன்பங்களாவன சோர்வுபார்த்துப் பகைவர் செய்வன. ஊற்றின்கணென்புழி யுருபுஞ் சாரியையுமுடன் றொக்கன. உற்றகாலத்துக் காக்கலாகாமையின் இரங்கிவிடுமென்றார். இவை மூன்றுபாட்டானும் பொச்சாப்புடையார்க்கு வருமேதங் கூறப்பட்டது.

பு. முன்னுறக்காவாது - தன்னாற்காக்கப்படுந் துன்பங்களை யவை வருதற்கு முன்னே யறிந்து காவாமல், இழுக்கியான் - மறந்திருந்தவன், பின் - பின்வந்த காலத்திற் காக்கக்கூடாமையால், ஊறு இரங்கிவிடும் - அத்துன்பத்திற்கேதுவாகத் தான் தப்பிப்போனதை நினைத்துத் தானே யழுவான், எ-று.

வி. காக்கப்படுந் துன்பங்களாவன, சோர்வு பார்த்துப் பகைவர் செய்வன. இவை மூன்று பாட்டாலும் பொச்சாப்புடையார்க்கு வருந் துன்பங் கூறப்பட்டது.

௬. இழுக்காமை யார்மாட்டு மென்றும் வழுக்காமை
வாயினஃ தொப்ப தில்.

There is nothing to be compared with unfailing thoughtfulness, at all times, and towards all persons. - - - - 536

பரி. அரசர்க்கு மறவாமைக் குணம் யாவர் மாட்டு மெக்காலத்து மொழிவின்றி வாய்க்குமாயின் அதனையொக்கு நன்மை பிறிதில்லையென்றவாறு.

வி. வினைசெய்வார் சுற்றத்தாரென்னுந் தம்பாலார்கண்ணு மொப்ப வேண்டுதலின் யார்மாட்டுமென்றுந் தாம் பெருகிய ஞான்றுஞ் சுருங்கிய ஞான்று மொப்ப வேண்டுதலின் என்ஞான்று மென்று மெல்லாக் காரியங்களினு மொப்ப வேண்டுத

வின்வழுக்காமையென்றுங்கூறினர். வாயினென்பதுமுதனிலைத்தொழிற்பெயரடியாகவந்தவினையெச்சம். வாய்த்தனேர்படுதல்.

பு. இழுக்காமை-அரசர்க்குமறவாமைக்குணம், யார்மாட்டுமென்றும்-யாரிடத்துமெக்காலத்தும், வழுக்காமைவாயின்-ஒழிவின்றிவாய்க்குமாயின், அஃதொப்பதில்-அதனையொத்ததன்மைவேறில்லை, எ-று.

வி. இராசகாரியஞ்செய்வோர்சுற்றத்தாரொன்னுந்தம்பாற்பட்டவரிடத்தும் வேண்டுதலால் யார்மாட்டுமெனறும், தாம்பெருகியபோதுஞ் சுருங்கியபோது மொப்பவேண்டுதலால் எஞ்ஞான்றுமென்றும்,எல்லாக்காரியங்களிலுமொப்பவேண்டுதலால் வழுக்காமைவாயினென்றுங்கூறினர். வாயினென்பது, வாய் என்னும் முதனிலைத்தொழிற் பெயரடியாகவந்தசெயின்னும் வாய்பாட்டுவினையெச்சம். வாய்த்தல், நேர்படுதல்.

ஏ. அரியவென்றுகாதவில்லைப்பொச்சாவாக்
கருவியாற்போற்றிச்செயின்.

There is nothing too difficult to be accomplished, if a man set about it carefully, with a thoughtful mind. - - - 537

பரி. இவைசெய்தற்கரியனவென்றுசொல்லப்பட்டொருவற்குமுடியாதகாரியங்களில்லை. மறவாதமனத்தானேயெண்ணிச்செய்யப்பெறினென்றவாறு.

வி. பொச்சாவாதவென்பதனிறுதிநிலைவிகாரத்தாற்றொக்கது. அந்தக்கரணமாகவிற்கருவியென்றார். இடைவிடாதநினைவுந்தப்பாதசூழ்ச்சியுமுடையார்க்கெல்லாமெளிதின்முடியுமென்பதாமிவையிரண்டுபாட்டானும்பொச்சாவாமையதுசிறப்புக்கூறப்பட்டது.

பு. அரியவென்று-இவைசெய்தற்கரியனவென்றுசொல்லப்பட்டு, ஆகாதவில்லை-ஒருவற்குமுடியாதகாரியங்களில்லை, பொச்சாவாக்கருவியால்-மறவாதமனத்தினால், போற்றிச்செயின்-எண்ணிச்செய்யப்பெறின், எ-று.

வி. பொச்சாவாதவென்பது,ஈறுதொக்குநின்றது. அந்தக்கரணமாதலிற்,கருவியென்றார். இடைவிடாதநினைவுந்தப்பாதசூழ்ச்சியுமுடையார்க்கு எல்லாக்காரியங்களுமெளிதாகமுடியு

மென்பதாம். இவையிரண்டுபாட்டானும் பொச்சாவாமையி ன்சிறப்புக்கூறப்பட்டது.

அ. புகழ்ந்தவைபோற்றிச்செயல்வேண்டுஞ்செய்யா
திகழ்ந்தார்க்கெழுமையுமில்.

Let (a man) observe and do those things which have been praised (by the wise); if he neglects, and does not perform them, for him there will be no (happiness) throughout the seven births. 538

பரி. நீதிநூலுடையாரிவையரசர்க்குரியனவென்றுயர்த்திக்கூறியசெயல்களைக்கடைப்பிடித்துச்செய்க. அங்ஙனஞ்செய்யாதுமறந்தவர்க்கெழுமையினுநன்மையில்லையாகலானென்றவாறு.

வி. அச்செயல்களாவனமூவகையாற்றலுநால்வகையுபாயமுமைவகைத்தொழிலுமறுவகைக்குணமுமுதலாயசெயல்கள். சாதிதருமமாகியவிவற்றின்வழீஇயார்க்குள்ளதுநிரயத்துன்பமேயாகலினெழுமையுமில்லென்றார். எழுமையாகுபெயர். இதனாற்பொச்சாவாதுசெய்யவேண்டுவனகூறப்பட்டன.

பு. புகழ்ந்தவை - நீதிநூலுடையாரிவையரசர்க்கு உரியன வென்று உயர்த்திக்கூறியசெயல்களை, போற்றிச்செயல்வேண்டும்-மறவாதுசெய்க; செய்யாதிகழ்ந்தார்க்கு-அங்ஙனஞ்செய்யாது மறந்தவர்க்கு, எழுமையுமில்-ஏழுவகைத்தோற்றத்திலும் நன்மையில்லையாதலால், எ-று.

வி. அச்செயல்களாவன, மூவகையாற்றலும் நால்வகையுபாயமும் ஐவகைத்தொழிலும் அறுவகைக்குணமும் முதலிய செயல்கள். குலத்தொழிலாகியவிவற்றின்வழுவினோர்க்குநரகத் துன்பமேயாதலால் எழுமையுமில்லென்றார். எழுமை, ஆகு பெயர். இதனால் மறவாது செய்யவேண்டுவனகூறப்பட்டன.

கூ. இகழ்ச்சியிற்கெட்டாரையுள்ளுகதாந்தம்
மகிழ்ச்சியின்மைந்துறும்போழ்து.

Let (a king) reflect on those who have been ruined by neglect, when his mind is elated with joy. - - - - - 539

பரி. அரசர்தம்மகிழ்ச்சிக்கட்டாம்வலியுறும்பொழுதுமுற்காலத்ததனினுய சோர்வாற்கெட்டவர்களைநினைக்கவென்றவாறு.

வி. காரணங்களோடவர்க்குளதாயவுரிமையைமகிழ்ச்சிமேலேற்றித்தம்மகிழ்ச்சியினென்றுமிகழ்ச்சியுங்கேடுமுடன்றோன்றுமாகலின்மகிழ்ச்சியின்மைத்துறும்போழ்தென்றுங்கூறினார். கெட்டாரையுள்ளவேநாமுமவ்வாறேகெடுதுமென்றதன்கண்மைத்துறாரென்பதுகருத்து. எண்ணுகவென்றுபாடமோதுவாருமுளர்.

பு. மகிழ்ச்சியின்மைந்துறும்போழ்து-அரசர்தமதுமகிழ்ச்சியிலே வலிபடநிற்கும்போழ்து, இகழ்ச்சியில் - (முற்காலத்திலேயம்மகிழ்ச்சியிற்றோன்றிய) சோர்வால், கெட்டாரையுள்ளுக-கெடடுப்போனவர்களை நினைக்க, எ-று.

வி. காரணங்களோடு அவர்க்குள்ளதாகிய வுரிமையைமகிழ்ச்சிமேலேற்றித்தம்மகிழ்ச்சியினென்றும், இகழ்ச்சியுங்கேடுமுடன்றோன்றுமாதலால்மகிழ்ச்சியின்மைந்துறும்போழ்தென்றுங்கூறினார். கெட்டாரைநினைக்கவே, நாமுமவ்வாறுகெடுவோமென்று அம்மகிழ்ச்சியில் வலிகொள்ளாரென்பதுகருத்து. உள்ளுக என்பதற்கு, எண்ணுகவென்றுபாடமோதுவாருமுண்டு.

ம. உள்ளியதெய்தலெளிதுமன்மற்றுந்தா
னுள்ளியதுள்ளப்பெறின்.

It is easy for (a king) to obtain whatever he may think of, if he thoughtfully pursue it. - - - - - - 540

பரி. அரசனுக்குத்தானெய்தநினைத்தபொருளையந்நினைத்தபெற்றியேயெய்துதலெளிதாம்பின்னுமதனையேநினைக்கக்கூடுமாயினென்றவாறு.

வி. அதுகூடாதென்பதொழிந்துநின்றமையின்மன்னொழியிசைக்கண்வந்தது. அதனையேநினைத்தலாவதுமறவியின்றியதன்கண்ணேமுயறல். இவையிரண்டுபாட்டானும்பொச்சாவாமைக்குபாயங்கூறப்பட்டது.

பு. உள்ளியது-அரசன்தானடைய நினைத்தபொருளை, எய்தல்-அந்நினைத்தபடியேயடைவது, எளிதுமன்-எளிதாம், மற்றுந்தான் - பின்னுமவன், உள்ளியதுள்ளப்பெறின்-நினைத்ததையே நினைக்கக்கூடுமாயின், எ-று.

வி. அதுகூடாதென்பது ஒழிந்துநிற்றலால் மன்என்னுமி

டைச்சொல், ஒழியிசைக்கண்வந்தது. அதனையேநினைத்தலாவது, மறப்பில்லாமலேயதனிடத்துமுயற்சிசெய்தல. இவையிரண்டுபாட்டாலும்பொச்சாவாமைக்கு உபாயங்கூறப்பட்டது.

---

௫௫. அதிகாரம். CHAPTER LV.

செங்கோன்மை. On upright government.

பரி. அஃதாவதரசனாற்செய்யப்படுமுறையினதுதன்மை. அம்முறையொருபாற்கோடாதுசெவ்வியகோல்போறலிற்செங்கோலெனப்பட்டது. வடநூலாருந்தண்டமென்றார். அதுசோர்விலாதவரசனாற்செயற்பாலதாகலினிதுபொச்சாவாமையின்பின்வைக்கப்பட்டது.

அதாவது, அரசனாற்செய்யப்படும்நீதியினதுதன்மை. அந்தநீதி, யொருபாற்கோணமற்செவ்வியகோல்போலிருத்தலால் செங்கோலெனப்பட்டது. வடநூலாருந்தண்டமென்றார். இது சோர்விலாத அரசனாற்செய்யத்தக்கதாதலாலிதுபொச்சாவாமையின்பின் வைக்கப்பட்டது.

க. ஓர்ந்துகண்ணோடாதிறைபுரிந்தியார்மாட்டுந்
தேர்ந்துசெய்வஃதேமுறை.

To examine into (the crimes which may be committed), to show no favor (to any one), to desire to act with impartiality towards all, and to inflict (such punishments) as may be wisely resolved on, this is rectitude. - - - - - - - 541

பரி. தன்கீழ்வாழ்வார்குற்றஞ்செய்தாலக்குற்றத்தைநாடியாவர்மாட்டுங் கண்ணோடாதுநடுவுநிலைமையைப்பொருந்தியக்குற்றத்திற்குச்சொல்லியதண்டத்தைநூலோரோடுமாராய்ந்தவ்வளவிற்றாகச்செய்வதே முறையாமென்றவாறு.

வி. நடுவுநிற்றலிறைக்கியல்பாகலினதனையிறையென்றுமுயிரினுஞ்சிறந்தார்கண்ணுமென்பார்யார்மாட்டுமென்றுங்கூறினார்.இறைமையிறையெனவுஞ்செய்வதுசெய்வஃதெனவுநின்றன. இதனாற்செங்கோன்மையதிலக்கணங்கூறப்பட்டது.

பு. ஓர்ந்து-(தன்கீழ்வாழ்வார்குற்றஞ்செய்தால் அக்குற்றத்தை)யாராய்ந்து,கண்ணோடாதுயார்மாட்டும்-யாவரிடத்துந்தாக்ஷிணியப்படாமல், இறைபுரிந்து - நடுவுநிலைமையைவிரும்பி, தேர்ந்து-அக்குற்றத்திற்குச்சொல்லிய தண்டத்தைமந்திரிகளோடோராய்ந்து, செய்வஃதே-அவ்வளவினையுடையதாகச்செய்வதே, முறை-நீதியாம், எ-று.

வி. நடுவுநிற்றல் இறையாகிய அரசனுக்கு இயல்பாதலாலதனையிறையென்றும், உயிரினுஞ் சிறந்தவரிடத்துமென்று சொல்லவந்தவர் யார்மாட்டுமென்றுங்கூறினார். இறைமை இறையெனவும், செய்வது செய்வஃது எனவும்நின்றன. இதினாலே செங்கோன்மையினிலக்கணங்கூறப்பட்டது.

உ. வானோக்கிவாழுமுலகெல்லாமன்னவன்
கோனோக்கிவாழுங்குடி.

When there is rain, the world enjoys prosperity; and when the king rules justly, his subjects prosper. - - - - 542

பரி. உலகத்துயிரெல்லாமழையுளதாயினுளவாகாநிற்குமேயெனினுங்குடிகளரசன்செங்கோலுளதாயினுளவாகாநிற்குமென்றவாறு.

வி. நோக்கிவாழ்தலின்றியமையாமை.வானினாயவுணவைவானென்றுங்கோலினாயவேமத்தைக்கோலென்றுங்கூறினார். அவ்வேமமில்வழியுணவுளதாயினுங்குடிக்கதனாற்பயனில்லையென்பதாம்.

பு. வானோக்கி-மழையைநோக்கி, வாழுமுலகெல்லாம்-உலகத்துயிர்களெல்லாம் வாழாநிற்கும், (ஆயினும்) குடி-குடிகள், மன்னவன்-அரசனுடைய,கோனோக்கிவாழும்-செங்கோலைநோக்கிவாழாநிற்கும், எ-று.

வி. நோக்கிவாழ்தல் இல்லாமற் கூடாமை. மழையினாலாகியவுணவைமழையென்றும், கோலினாலாகிய இன்பத்தைக்கோலென்றுங்கூறினார் அந்தஇன்பமில்லாதபோது உணவிருந்துங்குடிகளுக்கு அதனாற்பயனில்லையென்பதாம்.

ரு. அந்தணர்நூற்குமறத்திற்குமாதியாய்
நின்றதுமன்னவன்கோல்.

The sceptre of the king is the firm support of the Vedas of the Brahmin, and of all virtue. - - - - - - 543

பரி. அந்தணர்க்குரித்தாயவேதத்திற்குமதனாற்சொல்லப்பட்டவறத்திற்குங் காரணமாகநிலைபெற்றதரசனாற்செலுத்தப்படுகின்றசெங்கோலென்றவாறு.

வி. அரசர்வணிகரென்னுமேனையோர்க்குமுரித்தாயினுந்தலைமைபற்றியந்தணர்நூலென்றார். மாதவர்நோன்புமடவார்கற்புங்காவலன்காவலன்றித்தங்காவாதலினீண்டறமென்றதவையொழிந்தவற்றை. வேதமுமறனுமநாதியாயினுஞ் செங்கோலில்வழிநடவாவாகலினதனையவற்றிற்காதியென்றுமப்பெற்றியேதனக்காதியாவதுபிறிதில்லையென்பார்நின்றதென்றுங்கூறினார். இவையிரண்டுபாட்டானுஞ் செங்கோலதுசிறப்புக்கூறப்பட்டது.

பு. அந்தணர்நூற்கும்-பிராமணர்க்குரித்தாகிய வேதத்திற்கும், அறத்திற்கும்-அதினாலேசொல்லப்பட்டதருமத்திற்கும், ஆதியாய்நின்றது-காரணமாக நிலைபெற்றது, மன்னவன்கோல்-அரசனாற்செலுத்தப்படுகின்ற அரசநீதி, எ-று.

வி. அரசர்வணிகரென்னுமற்றையவர்களுக்கு முரித்தாயினுந், தலைமைபற்றியந்தணர்நூலென்றார். மாதவர்நோன்பும் மடவார்கற்புங்காவலன் காவலன்றித்தங்கா. ஆதலின் இங்கேயறமென்றது, அவையொழிந்தனவற்றை. வேதமுந்தருமமும் அநாதியாயினுஞ்செங்கோலின்றியின்நடவாவாகலின் அதனையவற்றிற்கு ஆதியென்றும், அங்ஙனங்கூறியதே ஆதியாவது பிறிதில்லையென்று சொல்லவந்தவர் நின்றதென்றுங்கூறினார். இவையிரண்டுபாட்டானுஞ் செங்கோலின் சிறப்புக்கூறப்பட்டது.

௪. குடிதழீஇக்கோலோச்சுமாநிலமன்ன
னடிதழீஇநிற்குமுலகு.

The world will constantly embrace the feet of the great king who rules his subjects with love. - - - - - - 544

பரி. தன்குடிகளையுமணைத்துச்செங்கோலையுஞ்செலுத்தும்பெருநிலவேந்த னடியைப்பொருந்திவிடாருலகத்தாரென்றவாறு.

வி. அணைத்தலின்சொற்சொல்லுதலுந்தளர்ந்தழிவேண்டுவனகொடுத்தலு முதலாயின. இவ்விரண்டனையும்வழுவாமற்செய்வானிலமுழுதுமாளுமாகலினவ னைமாநிலமன்னனென்றுமவன்மாட்டியாவருநீங்காவன்பினராவராகலினடித ழீஇநிற்குமுலகென்றுங்கூறினார்.

பு. குடிதழீஇ-தன்குடிகளையும் அணைத்துக்கொண்டு, கோலோச்சும் - செங்கோலையுஞ் செலுத்தாநின்ற, மாநிலமன்னன்-பெரியநிலவேந்தனுடைய, அடிதழீஇநிற்குமுலகு-பாதத்தையணைத்துக்கொண்டுவிடாதுநிற்பருலகத்தார், எ-று.

வி. குடிகளையணைத்தலாவது, இன்சொற்சொல்லுதலும்மெலிந்தவிடத்து வேண்டுவனகொடுத்தலுமுதலியன. இந்த இரண்டையும்வழுவாமற் செய்பவன் பூமிமுழுவதும் ஆளுவானாதலால் அவனைமாநிலமன்னனென்றும், அவனிடத்துயாவரும் நீங்காத அன்பினராவராகலின் அடிதழீஇநிற்கு முலகென்றுங்கூறினார்.

௫. இயல்புளிகோலோச்சுமன்னவனாட்ட
பெயலும்விளையுளுந்தொக்கு.

Rain and plentiful crops will ever dwell together in the country of the king who sways his sceptre with justice. - - 545

பரி. பருவமழையுங்குன்றாதவிளைவுமொருங்குகூடிநூல்கள்சொல்லியவியல் பாற்செங்கோலைச்செலுத்துமரசனதுநாட்டின்கண்ணவாமென்றவாறு.

வி. உளியென்பதுமூன்றுவதன்பொருள்படுவதோரிடைச்சொல். வானுநில னுஞ்சேரத்தொழில்பட்டுவளஞ்சுரக்குமென்பதாம்.

பு. பெயலும்-பருவத்தப்பாதமழையும், விளையுளும்-குன்றாதவிளைவும், தொக்கு-ஒருமித்துக்கூடி, இயல்புளிகோலோச்சும்.

நூல்கள்சொல்லியஇயல்பினாலேசெங்கோலைச்செலுத்தாநின்ற மன்னவன்-அரசனுடைய,நாட்ட-நாட்டினிடத்தனவாம்,எ-று.

வி. உளியென்பது, மூன்றனுருபின் பொருள்பட நிற்ப தோரிடைச்சொல். வானும் நிலமுமொத்துத்தொழிற்பட்டுவளந்தருமென்பதாம்.

௬. வேலன்றுவென்றிதருவதுமன்னவன்
கோலதுகோடாதெனின்.

It is not the javelin that gives victory, but the king's sceptre, if it do no injustice.* - - - - - - - 546

பரி. மன்னவனுக்குப்போரின்கண்ணேவென்றியைக்கொடுப்பதவனெறியும் வேலன்றுகோலஃதப்பெற்றித்தாவதுதான்கோடாதாயினென்றவாறு.

வி. கோல்செவ்விதாகியவழியேவேல்வாய்ப்பதென்பார்வேலன்றென்றார். மாண்டவறநெறிமுதற்றேயரசன்கொற்றமென்றார்பிறரும். கோடானென்பது பாடமாயிற்கருவியின்றொழில்வினைமுதன்மேனின்றதாகவுரைக்க.

பு. வேலன்றுவென்றிதருவதுமன்னவன்-மன்னவனுக்குப் போரிலே வெற்றியைத்தருவது அவனெறியும் வேலாயுதமன்று, கோல்-அவனதுசெங்கோலாம், அது-அவ்வாறாவது, கோடாதெனின்-தான்கோணாதிருக்கப்பெறின், எ-று.

வி. கோல்செவ்விதானபோது வேல்வாய்க்குமென்றுசொல்லவந்தவர், வேலன்றென்றார். அறநெறிமுதற்றேயரசன்கொற்றமென்றார்பிறரும். கோடானென்பது பாடமாயின் கருவியின்றொழில் வினைமுதன்மேல் நின்றதாகப்பொருளுணர்க.

௭. இறைகாக்கும்வையகமெல்லாமவனை
முறைகாக்குமுட்டாசெயின்

The king defends the whole world ; and justice, when (it is administered) without defect,† defends the king. - - 547

பரி. வையகத்தையெல்லாமரசன்காக்குமவன்றன்னையவனதுசெங்கோலே காக்குமதனைமுட்டவந்தவழியுமுட்டாமற்செலுத்துவனாயினென்றவாறு.

---

* Lit. if it be not crooked ; swerve not from rectitude. † Or hindrance.

வி. முட்டாமற்செலுத்தியவாறு மகனைமுறைசெய்தான்கண்ணுந் தன்கைக்குறைத்தான்கண்ணுங்காண்க. முட்டாதென்பதனிறுதிநிலைவிகாரத்தாற்றொக்கது இவைநான்குபாட்டானுமதனைச்செலுத்தினனெய்தும்பயன்கூறப்பட்டது.

பு. இறைகாக்கும்-அரசன்காப்பான், வையகமெல்லாம்-உலகத்தையெல்லாம், அவனைமுறைகாக்கும் - அவன்றன்னையவனதுசெங்கோன்முறைமையானதுகாக்கும், முட்டாசெயின்-அதுமுட்டுப்பட வந்தவிடத்தும் முட்டுப்படாமற் செலுத்தவல்லவனாயின், எ-று.

வி. அங்ஙனமுட்டாமற் செலுத்தியதனை, மகனைத்தேர்க்காலிற்கொன்ற சோழனிடத்தும் தனதுகையையறுத்து நீதிநிறுத்தியோனிடத்துங்காண்க. முட்டாது என்பது, ஈறுதொக்கது. இவைநான்குபாட்டாலும் அதனைச்செலுத்ினவனடையும் பயன்கூறப்பட்டது.

அ. எண்பதத்தானோராமுறைசெய்யாமன்னவன்
தண்பதத்தாற்றானேகெடும்.

The king who gives not facile audience (to those who approach him), and who docs not examine and pass judgment (on their complaints), will perish in disgrace. - - - - 548

பரி. முறைவேண்டினார்க்கெளியசெவ்வியையுடையனாயவர்சொல்லியவற்றைநூலோர்பலரோடுமோராய்ந்துநின்றவுண்மைக்கொப்பமுறைசெய்யாதவரசன்றாழ்ந்தபதத்திலேநின்றுதானேகெடுமென்றவாறு.

வி. எண்பதத்தானென்னுமுற்றுவினையெச்சமுமோராவென்னும்வினையெச்சமுஞ்செய்யாவென்னும்பெயரெச்சவெதிர்மறையுட்செய்தல்வினைகொண்டன. தாழ்ந்தபதம்பாவமும்பழியுமெய்திநிற்குநிலை. அல்லவைசெய்தார்க்கறங்கூற்றமாகலிற்பகைவரின்றியுங்கெடுமென்றார். இதனான்முறைசெலுத்தாதானதுகேடுகூறப்பட்டது.

பு. எண்பதத்தான் - (நீதிவேண்டியோர்க்கு) எளிதாகிய சமயத்தையுடையவனாகி, ஓரா-(அவர்சொல்லியவற்றை) மந்திரிகள்முதலிய பலரோடுகூடியிருந்து ஆராய்ந்து, முறைசெய்யாமன்னவன்-நின்றவுண்மைக்கேற்க நீதியைச்செய்யாதவர

சூனவன், தன்பதத்தால்-தாழ்ந்தநிலையிலேநின்று, தானே கெடும் - (ஒருவர்கெடுக்கவேண்டாமல்) தானேகெடுவான், எ-று.

வி. எண்பதத்தானென்னுமுற்றுவினையெச்சமும், ஓராவென்னும்வினையெச்சமும், செய்யாவென்னும்எதிர்மறைப்பெயரெச்சத்துள் முதனிலைவினைகொண்டு முடிந்தன. தாழ்ந்தபதம், பாவமும் பழியுமெய்திநிற்குநிலை. அல்லவைசெய்வார்க்கறங்கூற்றமாதலாற், பகையின்றியுங்கெடுமென்றார். இதினாலே நீதியைச்செலுத்தாதவனது கேடுகூறப்பட்டது.

௯. குடிபுறங்காத்தோம்பிக்குற்றங்கடிதல்
வடுவன்றுவேந்தன்றொழில்.

In guarding his subjects (against injury from others), and in preserving them himself, to punish crime is not a fault in a king, it is his duty. - - - - - - - - - - 549

பரி. குடிகளைப்பிறர்நலியாமற்காத்துத்தானுநலியாதுபேணியவர்மாட்டுக்குற்றநிகழினதனையொழிப்பானொறுத்தல்வேந்தனுக்குப்பழியன்றுதொழிலாகலானென்றவாறு.

வி. துன்பஞ்செய்தல்பொருட்கோடல்கோறலெனவொறுப்புமூன்றவற்றுளீண்டைக்கெய்துவனமுன்னையவென்பதுகுற்றங்கடிதலென்பதனாற்பெற்றாம். தன்கீழ்வாழ்வாரையொறுத்தலறனன்மையின்வடுவாமென்பதனையாசங்கித்தஃதாகாதரசனுக்கவரையக்குற்றத்தினீக்கித்தூயராக்குதலுஞ்சாதித்தருமமென்றார்.

பு. குடிபுறங்காத்து-குடிகளைப்பிறர் நலியாமற்காத்து, ஓம்பி-தானும்பேணி, குற்றம்-அவரிடத்துக்குற்றமுளதாயின், கடிதல்-அக்குற்றத்தைநீக்கும்பொருட்டு அவரைத்தண்டிப்பது, வடுவன்று-அரசனுக்குப்பழியன்று, வேந்தன்றொழில்-அவன்செய்யுந்தொழிலதுவாகலால், எ-று.

வி. துன்பப்படுத்தல், பொருள்கொள்ளல், கொலைசெய்தல் எனத்தண்டநீதி மூவகைப்படும். அவற்றுளிவ்விடத்துக்குப்பொருந்துவன முன்னையவிரண்டுமென்பது, குற்றங்கடி

தலென்பதனாற்பெறப்படும். தன்கீழ்வாழ்வாரைத்தண்டித்தல் தருமமன்றாதலால், வடுவாமென்பதனை ஆசங்கித்து (ஆட்சேபித்து) அங்ஙனமாகாது அரசனுக்கு அவரையக்குற்றத்தினின்று நீக்கிப்பரிசுத்தராக்குதலுஞ் சுயதருமமென்றார்.

௰. கொலையிற்கொடியாரைவேந்தொறுத்தல்பைங்கூழ்
களைகட்டதனொடுநேர்.

For a king to punish criminals with death, is like pulling up the weeds in the green corn. - - - - - 550

பரி. அரசன்கொடியவர்களைக்கொலையானொறுத்துத்தக்கோரைக்காத்தலுழவன்களையைக்களைந்துபைங்கூழைக்காத்ததனோடொக்குமென்றவாறு.

வி. கொடியாரென்றவர்தீக்கொளுவுவார்நஞ்சிடுவார்கருவிற்கொள்வார்கள்வர்ஆறலைப்பார்சூறைகொள்வார்பிறனில்விழைவாரென்றிவர்முதலாயினாரிவரைவடநூலாராததாயிகளென்ப.இப்பெற்றியாரைக்கண்ணோடிக்கொல்லாவழிப்புற்களைக்கஞ்சாதின்றபைங்கூழ்போன்றுநலிவுபலவெய்தியுலகிடர்ப்படுதலிற்கோறலுமரசர்க்குச்சாதிதருமமென்பதாயிற்று. இவையிரண்டுபாட்டானுஞ்செங்கோல்செலுத்தும்வெண்குடைவேந்தர்க்குத்தீயார்மாட்டுமூவகையொறுப்புமொழியற்பாலவல்லவென்பதுகூறப்பட்டது.

பு. கொலையிற்கொடியாரை - கொலைபுரிந்தகொடியவரை, வேந்து - அரசனானவன், கொலையினொறுத்தல்-அக்கொலையினைச்செய்தே தண்டித்துமற்றையோரைப்பாதுகாப்பது,பைங்கூழ்-பயிர்க்கு (உழவனானவன்) களைகட்டதனொடுநேர்-களைகளைந்துகாத்ததனோடொக்கும், எ-று.

வி. இதற்குவேறுபொருள்கூறினார் பரிமேலழகர். எங்ஙனமெனின், கொடியாரை-கொடுமையாளராயினாரை, வேந்து-அரசனானவன், கொலையினொறுத்தல் - கொலையினாலே தண்டிப்பது, எனவுரைத்துக்கொடுமையாளர் யாரெனின், தீயிடுவோர், நஞ்சிடுவோர், கொலைசெய்வோர், கள்வர், வழிபறிப்போர், கொள்ளையிடுவோர், பிறன்மனையாளைவிரும்புவோர் என இவர் முதலியோரென. தீயிடன்முதலிய கொடுமையாளரையங்கவிகாரப்படுத்துவிடுதலன்றியுயிர்க்கொலைசெய்வது

அரசனீதியேயாயினும் அங்ஙனஞ்செய்வோர் பெரும்பாலார் சிறுபாலாரங்ஙனஞ்செய்யாதாராதலாற்பெரும்பாலாரைக் கொன்று இச்சிறுபாலாரைப்பாதுகாத்தரசெய்து பயன்யாதோவென்று ஆசங்கிக்கவிடமுண்டாயிற்று. ஆதலாற்கொலையிற்கொடியாராயினாரை வேந்தொறுத்தலென இக்குறணின்றபடியே யாற்றுநீர்ப்பொருள்கோளாக நேரேபொருள்கொள்வதேசிறந்துகாட்டிற்றுபோலும். இங்ஙனங் கொலையிற்கொடியாரைத்தாட்சண்ணியப்படுக் கொல்லாதபோது புற்களைக்கஞ்சியபைங்கூழ்போன்று உலகநலிவெய்தியிடர்ப்படுமாதலால் கொலைசெய்தலுமரசர்க்குச்சுயதருமமென்பதாயிற்று. இவையிரண்டுபாட்டாலுமரசர்க்குத்தீயோரிடத்து மூவகைத் தண்டநீதியுஞ்செலுத்தவேண்டுமென்பது கூறப்பட்டது.

௫௰௬. அதிகாரம். CHAPTER LVI.

கொடுங்கோன்மை. ON UNJUST* GOVERNMENT.

பரி. அஃதாவதரசனம்முறைபிறழ்ந்துகோடுதற்றன்மை. ஈண்டுமுவமையின்பெயர்பொருண்மேலாயிற்று. செங்கோன்மைக்குமாறாகலினஃததன்பின்வைக்கப்பட்டது.

அதாவது, அரசன் அம்முறையிற்கோணுந்தன்மை. இங்கேயுங்கொடுங்கோன்மையென்பது, உவமையாகுபெயராய் நின்றது. செங்கோன்மைக்கு மறுதலையாதலாலதன் பின்வைக்கப்பட்டது.

௧. கொலைமேற்கொண்டாரிற்கொடிதேயலைமேற்கொண்
டல்லவைசெய்தொழுகும்வேந்து.

More cruel than the man who lives the life of a murderer,† is

---

* Crooked ; contrary to justice and right.

† கொலைமேற்கொண்டான், Who has taken upon him to murder ; who has assumed the character of a murderer.

the king who gives himself to oppress* and act unjustly (towards his subjects). - - - - - - - - 551

பரி. பகைமைபற்றிக்கொல்லுதற்றொழிலைத்தம்மேற்கொண்டொழுகுவாரினுங்கொடியன் பொருள்வெஃகிக்குடிகளையலைத்தற்றொழிலைத்தன்மேற்கொண்டுமுறையல்லவற்றைச்செய்தொழுகும்வேந்தனென்றவாறு.

வி. அவர்செய்வதொருபொழுதைத்துன்பமிவன்செய்வதெப்பொழுதுந்துன்பமாமென்பதுபற்றியவரினுங்கொடியனென்றார். பான்மயக்குறழ்ச்சி. வேந்தென்பதுயர்திணைப்பொருட்கண்வந்தவஃறிணைச்சொல். அலைகொலையினுங்கொடிதென்பதாயிற்று.

பு. கொலைமேற்கொண்டாரின் - பகைபற்றிக்கொல்லுதற்றொழிலைத்தம்மேற்கொண்டு நடப்பாரினும், கொடிது-கொடியன், அலைமேற்கொண்டு - (பொருளைவிரும்பிக்குடிகளை) யலைத்தற்றொழிலைத்தன்மேற்கொண்டு, அல்லவைசெய்தொழுகும்வேந்து - நீதியில்லாதனவற்றைச்செய்து நடக்கின்ற அரசன், எ-று.

வி. அவர்செய்வது ஒருபொழுதைத்துன்பம், இவன்செய்வது எப்பொழுதுந் துன்பமாமென்பதுபற்றியவரினுங்கொடியனென்றார். இன்னுருபு, உறழ்பொருளின் பொருள்படநின்றது. வேந்துகொடிது எனமுடிந்தது, சொல்நோக்கம்பற்றியுயர்திணையஃறிணைமுடிபேற்று நின்றது. அலைத்தல் கொலையினுங்கொடிதென்பதாயிற்று.

௨. வேலொடுநின்றானிடுவென்றதுபோலுங்
கோலொடுநின்றானிரவு.

The request (for money) of him who holds the sceptre, is like the word of him who stands with a weapon (at your breast) and says "give."† - - - - - - - - 552

பரி. ஆறலைக்குமிடத்துத்தனியேவேல்கொண்டுநின்றகள்வனாறுசெல்வானை

---

* அலைமேற்கொண்டான், who has taken upon him to oppress; who has assumed the part of an oppressor.

† *i. e.* It is robbery.

நின்கைப்பொருடாவென்றுவேண்டுதலோடொக்குமொறுத்தநற்றொழிலோடுநின்றவரசன்குடிகளைப்பொருள்வேண்டுதலென்றவாறு.

வி. வேலொடுநின்றானென்றதனாற்பிறரோடுநில்லாமையுமிரவென்றதனாற் கறைப்பொருளன்மையும்பெற்றாம். தாராக்காலொறுப்பனென்னுங்குறிப்பினனாதலினிரவாற்கோடலுங்கொடுங்கோன்மையாயிற்று. இவையிரண்டுபாட்டாலுங்கொடுங்கோன்மையதுகுற்றங்கூறப்பட்டது.

பு. வேலொடுநின்றான் - அடித்துப்பறிக்குமிடத்துத்தனியேவேல்கொண்டு நின்றகள்வன், இடுவென்றதுபோலும்-(வழிச்செல்வானைக்கண்டு) நின்கைப்பொருளைத்தாவென்று வேண்டுதலோடொக்கும், கோலொடுநின்றானிரவு - தண்டநீதியோடுநின்றவரசன் குடிகளைப்பொருள்வேண்டுதல், எ-று.

வி. வேலொடுநின்றானெனவே பிறரோடுநில்லாமையும், இரவு என்றதனால் குடியிறைப்பொருளல்லவென்பதும், பெறப்பட்டன. தாராவிடின்தண்டிப்பேனென்னுங்குறிப்புடையவனாதலால், அரசன் குடிகளையிரந்து பொருள்கொள்வதுங்கொடுங்கோன்மையாயிற்று. இவையிரண்டுபாட்டாலுங்கொடுங்கோன்மையது குற்றங்கூறப்பட்டது.

௩. நாடொறுநாடிமுறைசெய்யாமன்னவ
னாடொறுநாடுகெடும்.

The country of the king will daily fall to ruin, who does not daily examine into and punish* (crimes). - - - 553

பரி. தன்னாட்டுநிகழுந்தீமைகளைநாடோறுமாராய்ந்ததற்கொக்கமுறைமையைச்செய்யாதவரசனாடோறுநாடிழக்குமென்றவாறு.

வி. அரசனுக்குநாடுறுப்பாகலினதன்வினையவன்மேனின்றது இழத்தல்பயனெய்தாமை. மன்னவனாடுநாடோறுங்கெடுமென்றுரைப்பாருமுளர்.

பு. நாடொறுநாடி-தன்னுடையநாட்டிலே நடக்குந்தீமைகளைத்தினந்தோறுமாராய்ந்து, முறைசெய்யாமன்னவன்-அத

* முறைசெய்யார், who does not execute justice.

ற்குப்பொருந்த நீதியைச்செய்யாத அரசன், ஆடோறுநாடு கெடும்-ஆளுந்தோறும் நாடிழப்பான், எ-று.

வி. அரசனுக்குநாடுஅங்கமாதலால், அதன்வினையதன்மேல் நின்றது. இழத்தலாவது, பயனைக்கொள்ளாமை. நாடுநாடோறுங்கெடுமென்றுரைப்பாருமுண்டு.

௪. கூழுங்குடியுமொருங்கிழக்குங்கோல்கோடிச்
சூழாதுசெய்யுமரசு.

The king, who, without reflecting (on its evil consequences), perverts justice, will lose at once both his wealth and his subjects. - - - - - - - - - - - 554

பரி. மேல்விளைவதெண்ணாதுமுறைதப்பச்செய்யுமரசனச்செயலான்முன்னீட்டியபொருளையும் பின்னீட்டுதற்கேதுவாகியகுடிகளையுஞ்சேரவிழக்குமென்றவாறு.

வி. கோடவென்பதுதிரிந்துநின்றது முன்னீட்டியபொருளிழத்தற்கேதுவருகின்றபாட்டாற்கூறுப.

பு. சூழாது-மேலுண்டாவதையோசனைபண்ணாமல், கோல்கோடிச்செய்யுமரசன்-நீதிதப்பச்செய்யுமரசன், (அச்செயலினாலே) கூழுங்குடியுமொருங்கிழக்கும் - முன்புசேர்த்துவைத்தபொருளையும் பின்புபொருள்சேர்ப்பதற்குக்காரணமாகியகுடிகளையுஞ்சேர இழப்பான், எ-று.

வி. கோடவென்பது, கோடியெனத்திரிந்துநின்றது. முன்புசேர்த்துவைத்தபொருள்இழத்தற்குக்காரணம்வருகின்றபாட்டாற்கூறுவர்.

௫. அல்லற்பட்டாற்றாதழுதகண்ணீரன்றே
செல்வத்தைத்தேய்க்கும்படை.

Will not the tears, shed by a people who cannot endure the oppression which they suffer (from their king), become a file to waste away his wealth? - - - - - - 555

பரி. அரசன்முறைசெய்யாமையாற்குடிகடுன்பமுற்றதனைப்பொறுக்கமாட்டாதழுதகண்ணீரன்றேயவன்செல்வத்தைக்குறைக்குங்கருவியாமென்றவாறு.

வி. அழுதகண்ணீரழுதலான்வந்தகண்ணீர் - செல்வமாகியமரத்தையறுக்கும் வாளாயிருக்கின்றது. பொருளியல்: படையோடுவேற்றுமையிலதாகவேகதேசவுருவகம். அல்லற்படுத்தியபாவத்ததுதொழிலதற்கேதுவாகிய கண்ணீர்மேனின்றது. அக்கண்ணீரின் கொடியதின்மையிற் செல்வங்கெடுதிற்றேயுமென்பதுகருத்து.

பு. அல்லற்பட்டு - (அரசனீதிசெய்யாததினாலே) குடிகள் துன்பப்பட்டு, ஆற்றாது-அதைப்பொறுக்கமாட்டாமல், அழுதகண்ணீரன்றே-அழுதகண்ணீரல்லவா, செல்வத்தைத்தேய்க்கும்படை - அவன் செல்வத்தைக்குறைக்குங்கருவியாம், எ-று.

வி. அழுதகண்ணீர், அழுதலால் வந்தகண்ணீர். செல்வமாகிய மரத்தையென்றததினாலே, இது ஏகதேசவுருவகஅணி. துன்பப்படுத்தியபாவத்தினது தொழில், அதற்கேதுவாகிய கண்ணீர்மேல் நின்றது. அக்கண்ணீரிற்கொடியதின்றாதலாற், செல்வம்விரைந்து கெடுமென்பதுகருத்து.

௫௱௫௰௬. மன்னர்க்குமன்னுதல்செங்கோன்மையஃதின்றேல்
மன்னாவாமன்னர்க்கொளி.

Righteous government gives permanence to (the fame of) kings; without that their fame will have no endurance. - - 556

பரி. அரசர்க்குப்புகழ்கடாநிலைபெறுதல்செங்கோன்மையானும்செங்கோன்மையில்லையாயினவர்க்கப்புகழ்கடாமுளவாகாவென்றவாறு.

வி. விகாரத்தாற்றொக்கமூன்றும்வேற்றுமைவிரித்தாக்கம்வருவித்துரைக்கப்பட்டது. மன்னுதற்கேதுபுகழாதலிந்நிலத்துமன்னுதல் வேண்டினிசைநடுகவென்பதனானுமறிக. மன்னுமையொருகாலுநிலையாமை. பழிக்கப்பட்டாலொளி மன்னாவாமாகவேதாமுமன்னாவென்பதாயிற்று. வென்றிகொடைமுதலியவேதுக்களாற்புகழ்பகுதிப்படுதலிற்றன்மையாற்கூறினாரவை யெல்லாஞ்செங்கோன்மையில்வழியிலவாமென்பதாம். இவைநான்குபாட்டானுங்கொடுங்கோலனுயிருனெய்துங்குற்றங்கூறப்பட்டது.

பு. மன்னர்க்கு-அரசர்க்கு, மன்னுதல்-புகழ்கள்நிலைபெறுவன, செங்கோன்மை-அநாயனீதியினாலேயாம், அஃதின்றேல்-அந்நீதியில்லையாயின், மன்னர்க்கொளி-அவர்க்கு அப்புகழ்கள், மன்னாவாம்-நிலைபெறாவாம், (இல்லையாம்) எ-று.

வி. செங்கோன்மையென்றவிடத்து, மூன்றாம் வேற்றுமை யுருபும் அதன்பொருளாகிய ஆக்கமும் வருவிக்கப்பட்டன. மன்னுதற்குக்காரணம்புகழென்பதை, இந்நிலத்துமன்னுதல் வேண்டினிசைநடுகவென்பதினாலுமறிக. நிந்திக்கப்படுவாரா யிற்புகழழியும்அழியவேதாமுமழிவாரென்பதாயிற்று. வெற்றி, ஈகை, கல்வி, வீரமுதலியவற்றாற் புகழ்பாற்படுதலாற்பன் மையாற்கூறினார். அவையெல்லாம் அரையனீதியில்லாதபோது தேய்ந்தொழியுமென்பதாம். இவைநான்குபாட்டாலுங் கொடுங்கோலுடையவன் குற்றங்கூறப்பட்டது.

எ. துளியின்மைஞாலத்திற்கெற்றற்றேவேந்த
னளியின்மைவாழுமுயிர்க்கு.

As is the world without rain, so live a people whose king is without kindness. - - - - - - - 557

பரி. மழையில்லாமைவையத்துவாழுமுயிர்கட்கெவ்வகைத்துன்பம்பயக்கு மவ்வகைத்துன்பம்பயக்குமரசன்றண்ணளியில்லாமையவனாட்டுவாழுங்குடிகட்கென்றவாறு.

வி. சிறப்புப்பற்றித்துளியென்பதுமழைமேனின்றது. உயிரென்பதுகுடிகண் மேனின்றது. மேல்வானோக்கிவாழுமென்றதனையெதிர்மறைமுகத்தாற்கூறியவாறு.

பு. துளியின்மை-மழையில்லாமை, ஞாலத்திற்கெற்று-வையத்துவாழுமுயிர்களுக்கு எவ்வகைத்துன்பம் விளைக்கும், அற்று-அவ்வகைத்துன்பம் விளைக்கும், வேந்தனளியின்மை-அரசனருளில்லாமை, வாழுமுயிர்க்கு-அவனாட்டில்வாழுங்குடிகளுக்கு, எ-று.

வி. பலதுளிசேராவிடின்மழையெனல்கூடாமையாலச்சிறப்புப்பற்றித்துளியென்பது, மழையின்மேலும் உயிரில்லாவிடினுயர்திணையெனல் கூடாதாதலாலச் சிறப்புப்பற்றியுயிரென்பது, குடிகள்மேலு நின்றது. மேல்வானோக்கிவாழுமென்றதனைவலியுறுத்தற்பொருட்டு எதிர் மறைமுகத்தாற்கூறியபடி.

௮. இன்மையினின்னாதுடைமைமுறைசெய்யா
மன்னவன்கோற்கீழ்ப்படின்.

Property gives more sorrow than poverty, to those who live under the sceptre of a king without justice. - - - 558

பரி. முறைசெய்யாதவரசனதுகொடுங்கோலின்கீழ்வாழின்யாவர்க்கும்பொருளினதின்மையினுமுடைமையின்னாதென்றவாறு.

வி. தனக்குரியபொருளோடமைந்தமாற்றுதுமேலும்வெஃகுவானதுநாட்டுக்கைத்தோவயாப்புண்டன்முதலியவருவதுபொருளுடையார்க்கேயாகலினவ்வுடைமையின்மையினுமின்னாதாயிற்று. இவையிரண்டுபாட்டானுமவனாட்டுவாழ்வார்க்குவருங்குற்றங்கூறப்பட்டது.

பு. முறைசெய்யாமன்னவன் - நீதிசெய்யாதவரசனுடைய, கோற்கீழ்ப்படின்-கொடுங்கோலின்கீழ்வாழின், இன்மையினின்னாதுடைமை - (யாவர்க்கும்) பொருளில்லாமையைக்காட்டிலும் பொருளுடைமையின்பமாகாது, எ-று.

வி. தனக்குரியபொருளோடமைந்தும் ஆறாமலேமேலு மாசைப்படுவானுடைய நாட்டிலே கைநோகக் கட்டுணல்முதலியனவருவது பொருளுடையார்க்கேயாதலால் அந்தவுடைமை இன்மையைக்காட்டிலும் இன்பந்தாராததாயிற்று. இவை யிரண்டுபாட்டாலும் அவனதுநாட்டில் வாழ்வார்க்குவருங்குற்றங்கூறப்பட்டது.

௯. முறைகோடிமன்னவன்செய்யினுறைகோடி
யொல்லாதுவானம்பெயல்.

If the king acts contrary to justice, rain will become unseasonable,* and the heavens will withhold their showers. - 559

பரி. மன்னவன்றன்செய்யும்பொருளைமுறைதப்பச்செய்யுமாயினவனாட்டுப்பருவமழையின்றும்வகைமேகம்பொழிதலைச்செய்யாதென்றவாறு.

வி. இரண்டிடத்துங்கோடவென்பனதிரிந்துநின்றன. உறைகோடுதலாவது பெய்யுங்காலத்துப்பெய்யாமை. அதற்கேதுவருகின்றபாட்டாற்கூறுப.

---

* உறைகோடி, rain will fall crookedly, at a wrong time.

பு. முறைகோடிமன்னவன்செய்யின்-அரசன்தான் செய்யும்பொருளை நீதிதப்பச்செய்வானாயின், (அவன்நாட்டிலே) உறைகோடி-பருவமழைதப்பி, வானம்பெயலொல்லாது-மேகம்பொழிதலைச்செய்யாது, எ-று.

வி. இரண்டிடத்துங்கோடலென்பது, கோடியெனத்திரிந்துநின்றது. உறைகோடுதலாவது, மழைவேண்டுங்காலத்திற்பெய்யாமை. அதற்குக்காரணம் வருகின்றபாட்டாற்கூறுவார்.

௰. ஆபயன்குன்றுமறுதொழிலோர்நூன்மறப்பர்
காவலன்காவானெனின்.

If the guardian (of the country) neglects to guard it, the produce of the cows will fail, and the men of six-duties* will forget their book.† - - - - - - - - 560

பரி. காத்தற்குரியவரசனுயிர்களைக்காவானாயினறநில்லாதவனாட்டுப்பசுக்களும்பால்குன்றுமந்தணருநூல்களைமறந்துவிடுவாரென்றவாறு.

வி. ஆபயனுவாற்கொள்ளும்பயன். அறுதொழிலாவனவோதலோதுவித்தல்வேட்டல்வேட்பித்தலீதலேற்றலெனவிவை. பால்குன்றியவியின்மையானுமதுகொடுத்தற்குரியார்மந்திரங்கற்பமென்பனவோதாமையானும்வேள்விநடவாதாராகவேவானம்பெயலொல்லாதென்பதாயிற்று. இவையிரண்டுபாட்டானுமவனாட்டினிகழுங்குற்றங்கூறப்பட்டது.

பு. காவலன்காவானெனின் - காக்கத்தக்கவரசனுயிர்களைக் காவானாயின், (தருமம் நிலைபெறாமல்) ஆபயன்குன்றும்-அவனதுநாட்டுப்பசுக்களும் பால்குறையப்படும், அறுதொழிலோர்நூன்மறப்பர் - அந்தணரும் நூல்களைமறந்துவிடுவார், எ-று.

வி. அறுதொழிலாவன, ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல், எனஇவை. வேட்டல், யாகஞ்செய்தல். பால்குன்றியவியில்லாததினாலேயும் அதுகொடுத்தற்குரி

* The Brahmins. † The Veda. *i. e.* Religion and agriculture will die out of such a country.

ய அந்தணர் மந்திரங்கற்பமென்னும் நூல்களையோதாததினாலேயும் வேள்விநடவாதாம். ஆகவே, மேகங்கள் மழைபெய்யாதென்பதாயிற்று. அவி, நெய். தேவருணவுமாம். இவையிரண்டுபாட்டாலும் அவனது நாட்டிலுண்டாகுங் குற்றங்கூறப்பட்டது.

ருஎ. அதிகாரம். CHAPTER LVII.

வெருவந்தசெய்யாமை. AGAINST ACTING WITH CRUELTY.*

பரி. அஃதாவதுகுடிகளஞ்சுவதும்பகுதியஞ்சுவதுந்தானஞ்சுவதுமாயதொழில்களைச்செய்யாமை. அவைசெய்தல்கொடுங்கோன்மைப்பாற்படுதலினஃதன்பின்வைக்கப்பட்டது.

அதாவது, குடிகளஞ்சுவதும் பகுதியஞ்சுவதும் தானஞ்சுவதுமாகிய தொழில்களைச்செய்யாமை. அவற்றைச்செய்தல் கொடுங்கோன்மையாதலாலிது அதன்பின்வைக்கப்பட்டது.

க. தக்காங்குநாடித்தலைச்செல்லாவண்ணத்தா
லொத்தாங்கொறுப்பதுவேந்து.

He is a king who having equitably examined (any injustice vhich has been brought to his notice), suitably punishes it, so as ;hat it may not be again committed. - - - - 561

பரி. ஒருவன்றன்னின்மெலியார்மேற்சென்றவழியதனைநடுவாகநின்றாராய்ந்து பின்னுமதுசெய்யாமற்பொருட்டவனையக்குற்றத்திற்கேற்பவொறுப்பானேயரசனாவானென்றவாறு.

வி. தக்காங்கொத்தாங்கென்பனவொருசொல். தகுதியென்பதுநடுவுநிலையாதற்றகுதியெனவொன்றுநன்றேயென்பதனானுமறிக. இதனானேதக்காங்குநாடாமையும்பிறிதோர்காரணம்பற்றுதலுமிகவொறுத்தலுங்குடிகளஞ்சும்வினையாதல்பெற்றாம்.

---

* Lit. Against acting so as to cause fear and alarm in the minds of the eople; against *a reign of terror.*

பு. தக்காங்குநாடி - (ஒருவன்தனக்கெளியவன்மீதுகோபங்கொண்டபோது) அதைநடுவாகநின்றுஆராய்ந்து, தலைச்செல்லாவண்ணத்தால்-பின்னுமதுசெய்யாதிருத்தற்பொருட்டு, ஒத்தாங்கொறுப்பதுவேந்து-அவனைக்குற்றத்திற்கு ஒத்திருக்கும்படிதண்டிப்பவனேயரசனாவான், எ-று.

வி. தக்காங்கு ஒத்தாங்குஎன்பன, ஒருசொல். தகுதி, நடுவுநிலைமை. தகுதியெனவொன்றுநன்றேயென்பதினுமறிக. இப்படிச்சொன்னதினாலே, தக்காங்குநாடாமையும் வேறோர்காரணம்பற்றிமாறுபடுதலும் மிக்கதண்டனையுங் குடிகளஞ்சும்வினையாதல் பெறப்பட்டன.

உ. கடிதோச்சிமெல்லவெறிகநெடிதாக்க
நீங்காதுவேண்டுபவர்.

Let him, who desires that his prosperity may long remain with him, put away cruelty, and punish with mildness.* - - 562

பரி. அவ்வொத்தாங்கொறுத்தலுடங்குங்காலளவிறப்பச்செய்வார்போற்றுடங்கிச்செய்யுங்காலளவிறவாமற்செய்கவாக்கந்தங்கணெடுங்காலநிற்றலைவேண்டுவோரென்றவாறு.

வி. கடிதோச்சல்குற்றஞ்செய்வாரதனையஞ்சுதற்பொருட்டுமெல்லவெறிதல்யாவரும்வெருவாமைப்பொருட்டுத்துடங்கினவளவிற்குறைதல்பற்றிமென்மைகூறப்பட்டது. ஓச்சுதலெறிதலென்பனவிரண்டுமுவமைபற்றிவந்தன. இவையிரண்டுபாட்டானுங்குடிகள்வெருவந்தசெய்யாமையதியல்புகூறப்பட்டது.

பு. கடிதோச்சி-(ஒத்திருக்கும்படிதண்டிக்கத்தொடங்குங்கால்) அளவிறந்துசெய்பவர்போலே தொடங்கி, மெல்லவெறிக-செய்யும்போது அளவிறவாமலேசெய்க, நெடிது-நெடுங்காலம், ஆக்கம், செல்வமானது, நீங்காது-தம்மிடத்துநீங்காமலேநிற்றலை, வேண்டுபவர்-விரும்பினவர், எ-று.

---

* Or, let him lift his sceptre with anger, but strike with lenity. The meaning given by the Scholiast is, let him begin by showing a disposition to exercise severity, and end by punishing with mildness.

வி. கடிதோச்சல்குற்றஞ்செய்தோர் அஞ்சுதற்பொருட்டு மெல்லவெறிதல்யாவருமஞ்சாமைப்பொருட்டுத்தொடங்கின வளவிற்குறைதல்பற்றி, மேன்மைகூறப்பட்டது. ஓச்சுதல் எறிதல்என்பனவிரண்டும், ஓச்சுதல்போல எறிதல்போலஎன உவமைபற்றிவந்தன. இவையிரண்டுபாட்டாலுங் குடிகளஞ் சத்தக்கவைசெய்யாமை கூறப்பட்டது.

௩. வெருவந்தசெய்தொழுகும்வெங்கோலனாயி
னொருவந்தமொல்லைக்கெடும்.

The cruel-sceptred king, who acts so as to put his subjects in fear, will certainly and quickly come to ruin. - - 563

பரி. குடிகள்வெருவியசெயல்களைச்செய்துநடக்கும்வெங்கோலனாயினரச னொருதலையாகக்கடிதிற்கெடுமென்றவாறு.

வி. வெங்கோலனென்பதுஈண்டுவாளாபெயராய்நின்றது.ஒருவந்தமொருதலையேகாந்தமென்பனவொருபொருட்கிளவி.அச்செயல்களுங்கேடுகளுமுன்னர் கூறப்படும்.

பு. வெருவந்த-குடிகளஞ்சத்தக்கசெயல்களை, செய்தொழுகும் வெங்கோலனாயின்-செய்துதிரியுங்கோன்மையையுடையவனாயின், ஒருவந்தம்-ஒருதலையாக,(நிச்சயமாக)ஒல்லைகெடும்-விரைந்துகெடுவானரசன், எ-று.

வி. வெங்கோலனென்பது, இங்கேவேண்டாமலே பெயராய்நின்றது. ஒருவந்தம் ஒருதலை ஏகாந்தம் என்பன, ஒருபொருட்கிளவி. அச்செயல்களுங் கேடுகளுமேற்கூறப்படும்.

௪. இறைகடியனென்றுரைக்குமின்னாச்சொல்வேந்த
னுறைகடுகியொல்லைக்கெடும்.

The life of that king will be shortened, and he will quickly perish, of whom the sad word is spoken, "our king is cruel." 564

பரி. குடிகளானம்மிறைவன்கடியனென்றுசொல்லப்படுமின்னாதசொல்லையுடையவேந்தனாயுளுங்குறைந்துசெல்வமுங்கடிதினிழக்குமென்றவாறு.

வி. நெஞ்சநொந்துசொல்லுதலானின்னாமைபயப்பதாயசொல்லையின்னாச்சொல்லென்றார். உறையென்பதுமுதனிலைத்தொழிற்பெயர்.அஃதீண்டாகுபெயராயுறைதலைச்செய்யுநாண்மேனின்றது. அக்குறைதலாவதச்சொல்லிலாதார்க்குள்ளதிற்சுருங்குதல்.

பு. இறைகடியனென்றுரைக்குமின்னாச்சொல்-(குடிகளாலே) நம்மிறைவன்கடுமையையுடையவனென்று சொல்லப்படும் வெஞ்சொல்லையுடைய, வேந்தன்-அரசனானவன், உறைகடுகி-ஆயுளுங்குறைந்து, ஒல்லைகெடும்-செல்வமும் விரைவினிழப்பன், எ-று.

வி. மனநொந்து சொல்லுதலால் துன்பந்தருவதாகியசொல்லை, இன்னாச்சொல்லென்றார். உறை என்பது, முதனிலைத்தொழிற்பெயர். அது இங்கே ஆகுபெயராய் உறைதலைச் செய்யும்நாளின்மேல் நின்றது. அதுகுறைதலாவது, அந்த வெஞ்சொல்லில்லாதவர்க்கு உள்ள அளவிற்சுருங்குதல்.

௫. அருஞ்செவ்வியின்னாமுகத்தான்பெருஞ்செல்வம்
பேஎய்கண்டன்னதுடைத்து.

The great wealth of him who is difficult of access and stern of countenance, is like that which a devil has obtained.* - 565

பரி. தன்னைக்காணவேண்டுவார்க்குக்காலமரியனாய்க்கண்டாலின்னாதமுகத்தினையுடையானதுபெரியசெல்வம்பேயாற்காணப்பட்டாற்போல்வதொருகுற்றமுடைத்தென்றவாறு.

வி. எனவேயிவையிரண்டும்வெருவந்தசெயலாயிற்று. இவைசெய்வானைச்சார்வாரின்மையினவனதுசெல்வந்தனக்கும்பிறர்க்கும்பயன்படாதென்பதுபற்றிப்பேஎய்கண்டன்னதுடைத்தென்றார். காணுதறன்வயமாக்குதல்.

பு. அருஞ்செவ்வி-தன்னைக்காணவேண்டுவார்க்குச்சமயமில்லாதவனாகி, இன்னாமுகத்தான்-கண்டால்துன்பந்தருமுகத்தையுடையவனது, பெருஞ்செல்வம் - பெரியசெல்வமானது, பேய்கண்டன்னதுடைத்து, பேயாற்காணப்பட்டதுபோல்வதொருகுற்றமுடைத்து, எ-று.

---

* Or, looked upon. *i. e.* It will be of no use to any one, it is said.

வி. எனவே, அருஞ்செவ்விஇன்னாமுகமிரண்டும்வெருவந்தசெயலாயிற்று. இவையுடையானைச்சார்வாரில்லாததினாலே, யவன்செல்வந்தனக்கும் பிறர்க்கும் பயன்படாதென்பதுபற்றிப்பேய்கண்டன்னதுடைத்தென்றார். பேய்கண்டபெருந்தனத்தைத்தானுமநுபவிக்கமாட்டாது பிறர்க்குங் கொடாதுபொன்காத்தபூதம்போல வென்றபழமொழிப்படியே காத்துநிற்குமென்பதாம்.

௬. கடுஞ்சொல்லன்கண்ணிலனாயினெடுஞ்செல்வ
நீடின்றியாங்கேகெடும்.

The abundant wealth, of the king whose words are harsh and whose looks are without kindness, instead of abiding with him, will instantly perish. - - - - - - - 566

பரி. அரசன்கடியசொல்லையுமுடையனாய்க்கண்ணோட்டமுமிலனுமாயினவனதுபெரியசெல்வநீடுதலின்றியப்பொழுதேகெடுமென்றவாறு.

வி. வேட்டங்கடுஞ்சொன்மிகுதண்டஞ்சூதுபொருளீட்டங்கட்காமமோடேழு. என்னப்பட்டவிதனங்களுட்கடுஞ்சொல்லையுமிகுதண்டத்தையுமிவரிவ்வெருவந்தசெய்தலுளடக்கினார். கண்ணாகுபெயர். இவைசெய்தபொழுதேகெடுஞ்சிறுமைத்தன்றாயினுமென்பார்நெடுஞ்செல்வமென்றார். நீடுதனீட்டித்தல்.

பு. கடுஞ்சொல்லன் - அரசன்கடுஞ்சொல்லையுமுடையவனாகி, கண்ணிலனாயின் - அதனோடு கண்ணோட்டமுமில்லாதவனாயின், நெடுஞ்செல்வம் - அவனது நீண்டசெல்வமானது, நீடின்றி - நீட்டித்துநில்லாமல், ஆங்கேகெடும் - அப்பொழுதேகெடும், எ-று.

வி. கண், ஆகுபெயர். வெண்பா - வேட்டங்கடுஞ்சொன்மிகுதண்டஞ்சூது பொருளீட்டங்கட் காமமோடேழு - எனப்பட்ட விதனங்களுள் இவர்கடுஞ்சொல்லையுமிகுதண்டத்தையும் இந்த வெருவந்தசெய்தலுளடக்கினார். இவைசெய்தபொழுதே பெருஞ்செல்வமாயினுங் கெடுமென்பார்நெடுஞ் செல்வநீடின்றி யாங்கேகெடுமென்றார்.

௭. கடுமொழியுங்கையிகந்ததண்டமும்வேந்த
னடுமுரண்டேய்க்குமரம்.

Severe words and excessive punishments will be a file to waste away a king's power for destroying (his enemies). - - 567

பரி. கடியசொல்லுங்குற்றத்தின்மிக்கதண்டமுமரசனதுபகைவெல்லுதற்கேற்றமாறுபாடாகியவிரும்பினைத்தேய்க்குமரமாமென்றவாறு.

வி. கடுமொழியாற்றானையுங்கையிகந்ததண்டத்தாற்றேசமுங்கெட்டுமுரண்சுருங்கிவருதலினவற்றையரமாக்கித்திண்ணிதாயினுந்தேயுமென்றற்கடுமுரணையிரும்பாக்கினார். ஏகதேசவுருவகம். அரமென்பதனைத்தனித்தனிகூட்டுக.இவையைந்துபாட்டானுஞ். செவ்வியின்மையின்னாமுகமுடைமைகண்ணோட்டமின்மைகடுஞ்சொற்சொல்லல்கையிகந்ததண்டமென்றிவையுமிவைகள்குடிகளஞ்சும்வினையென்பதூஉமிவைசெய்தானாயுளுமடுமுரணுஞ்செல்வமுமிழக்குமென்பதூஉங்கூறப்பட்டன.

பு. கடுமொழியும்-கடுஞ்சொல்லும், கையிகந்ததண்டமும்-குற்றத்தின்மேற்பட்டதண்டனையும், வேந்தனடுமுரண்-அரசன்தன்பகையைவெல்லுதற்கேற்ற மாறுபாடுடைய வலிமையாகிய இரும்பினை, தேய்க்குமரம்-தேய்க்கும் அரக்கருவியாம், எ-று.

வி. கடுஞ்சொல்லால்சேனையும் கையிகந்ததண்டத்தால் தேசமும்கெட்டுவலிமைசுருங்கிவருதலால் அவற்றையரமாக்கித்திண்மையையுடையதாயினுந்தேயுமென்பதற்கு அடுமுரணை, இரும்பாக்கினார். இது,ஏகதேசவுருவகவலங்காரம்.கடுமொழியுங்கையிகந்ததண்டமுமரமெனக்கூட்டிக்கூறினாராயினுங்கடுமொழியுமரங்கையிகந்ததண்டமும் அரமெனத்தனித்தனி கூட்டுக. இவையைந்துபாட்டாலும் முறையே சமயமின்மையும் இனியமுகமின்மையுங் கண்ணோட்டமின்மையும் கடுஞ்சொற்சொல்லல் கையிகந்ததண்டமென்றிவையுமிவைகுடிகளஞ்சும்வினையென்பதும் இவைசெய்தவன் ஆயுளும் வலிமையுஞ் செல்வமுமிழப்பனென்பதுங் கூறப்பட்டன.

அ. இனத்தாற்றியெண்ணாதவேந்தன்சினத்தாற்றிச்
சீறிற்சிறுகுந்திரு.

The prosperity of the king will waste away, who without reflecting (on his affairs himself), commits them to his ministers, and (when a failure occurs) gives way to anger, and rages against them. - - - - - - - - - 568

பரி. காரியவெண்ணத்தையமைச்சர்மேல்வைத்தவரோடுதானுமெண்ணிச்செ
ய்யாதவரசனப்பிழைப்பாற்றன்காரியந்தப்பியவழித்தன்னைச்சினமாகியகுற்ற
த்தின்கண்ணேசெலுத்தியவரைவெகுளுமாயினவன்செல்வநாடோறுஞ்சுருங்கு
மென்றவாறு.

வி. அரசர்பாரம்பொறுத்துய்த்தலொப்புமையானமைச்சரையினமென்று
ந்தாம்பின்பிழைப்பாதலறிந்தமையானதனையவர்மேலேற்றிவெகுளினவர்வெரீ
இநீங்குவர்நீங்கவேயப்பிழைப்புத்திருமாறுமரசர்பாரமினிதுய்க்குமாறுமிலனா
மென்பதுநோக்கித்திருச்சிறுகுமென்றுங்கூறினார். இதனாற்பகுதியஞ்சும்வினை
யுமதுசெய்தானையெய்துவதுங்கூறப்பட்டன.

பு. இனத்தாற்றி-(காரியத்தைப்பற்றிவந்த எண்ணத்தை)
மந்திரிகள்மேல்வைத்து, எண்ணாதவேந்தன்-தானுமவரோடு
கூடியிருந்து எண்ணிச்செய்யாத அரசன், (அந்தக்குற்றத்தி
னாலே தன்காரியங்கெட்டுப்போனபோது) சினத்தாற்றிச்சீறி
ன்-தன்னைச்சினமாகிய குற்றத்திலேசெலுத்தி அவரைக்கோபி
ப்பானாயின், சிறுகுந்திரு-அவன்செல்வந்தினந்தோறுஞ்சுரு
ங்கும், எ-று.

வி. அரசருடையபாரத்தைப்பொறுத்துச்செலுத்துதலொ
ப்புமையால் அமைச்சரையினமென்றும், பின்பு பிழையாத
லைத்தானறிந்ததினாலே யதனையவர்மேல் வைத்துக்கோபஞ்
செயின் அவர்பயந்து நீங்குவர் நீங்கவேயப்பிழைப்புத்தீருந்
தன்மையும் அரசின்பாரத்தைப்பொறுத்துச்செலுத்துந்தன்
மையுமிலனாமென்பது நோக்கிச்செல்வஞ் சுருங்குமென்றுங்
கூறினார். இதினாலே பகுதியஞ்சும்வினையும் அதுசெய்தவன்
அடையுங்குற்றமுங்கூறப்பட்டன. பகுதி, இராசகாரியஞ்செ
ய்வார்கூட்டம்.

௯. செருவந்தபோழ்திற்சிறைசெய்யாவேந்தன்
வெருவந்துவெய்துகெடும்.

The king who has not provided a defence* for himself, in time of war will be seized with fear and quickly perish.† - 569

பரி. செருவருவதற்குமுன்னேதனக்குப்புகலாவதோரரண்செய்துகொள்ளாதவரசனதுவந்தகாலத்தேமயின்மையான்வெருவிக்கடிதிற்கெடுமென்றவாறு.

வி. பகையைவெருவிச்சேர்ந்தார்நீங்குதலிற்றமியனாய்த்தானும்வெருவிப்பகைவயத்தனாமென்பதாம். இதனாற்றானஞ்சும்வினையுமதுசெய்தானெய்தும்பயனுங்கூறப்பட்டன.

பு. சிறைசெய்யாவேந்தன்-(போர்வருதற்கு முன்னமேதனக்குப்புகலாவதொரு) அரணைச்செய்துகொள்ளாதஅரசன், செருவந்தபோழ்தில் - அதுவந்தகாலத்தில், வெருவந்து-பயந்து, வெய்துகெடும்-விரைவாகக்கெடுவான், எ-று.

வி. சத்துருக்களுக்குப்பயந்து தன்னைச்சேர்ந்தவர் நீங்குதலால், தனியனாகித்தானும்பயந்து அவர்வசத்தனாவனென்பதாம். இதினாலே தானஞ்சும்வினையும் அதைச்செய்தவனடையும் பயனுங்கூறப்பட்டன.

௰. கல்லார்ப்பிணிக்குங்கடுங்கோலதுவல்ல
தில்லைநிலக்குப்பொறை.

The earth bears up no greater burden than a cruel sceptre which attaches to itself ignorant men (as the ministers of its evil deeds). - - - - - - - - - 570

பரி. கடுங்கோலனாயவரசனீதிநூன்முதலியகல்லாதாரைத்தனக்குப்பகுதியாகக்கூட்டாநிற்குமக்கூட்டமல்லதுநிலத்திற்குமிகையாயபாரம்பிறிதில்லையென்றவாறு.

வி. கடுங்கோலென்பதீண்டுநிக்கதண்டத்தின்மேற்றன்றியதனைச்செய்வான்மேற்றாயிற்று. அவனதுசெயற்கிசைவாரையல்லதுகூட்டாமையிற்கல்லார்ப்பிணிக்குமென்றுமேனையவற்றையெல்லாம்பொறுக்கின்றதியல்பாகலினிலத்திற்கு

* In the love of his subjects, as it seems to me.

† Being deserted by all who might help him, and left alone.

ப்பொறையதுவல்லதில்லையென்றுங்கூறினார். நிலக்கென்பதுசெய்யுள்விகாரம். இதனால்வெருவந்தசெய்தலின்குற்றங்கூறப்பட்டது.

பு. கடுங்கோல்-கடுங்கோலனாகிய அரசன், கல்லார்ப்பிணிக்குமதுவல்லது - நீதிநூல்முதலாகிய நூல்களைக்கல்லாதவரைத்தனக்குக்காரியஞ்செய்பவராகக்கூட்டுகின்ற அக்கூட்டமன்றி, இவ்வை நிலக்குப்பொறை-நிலத்திற்குப்பெரும்பாரம்வேறேயில்லை, எ-று.

வி. கடுங்கோலென்பது, இங்கேமிக்கதண்டனைமேல் நிற்பதன்றியதனைச்செய்பவன்மேல்நின்றது. அவனது கடுஞ்செயற்கு இயைவாரையன்றிக்கூட்டானாதலாற் கல்லார்ப்பிணிக்குமென்றும், ஒழிந்தவற்றையெல்லாம்பொறுப்பது இயல்பாதலால்நிலத்திற்குப்பொறையதுவல்லதில்லையென்றுங்கூறினார். நிலத்துக்கு என்பது, நிலக்கு எனவிகாரப்பட்டுநின்றது. இதனால்வெருவந்தசெய்தலின் குற்றங்கூறப்பட்டது.

---

௫௮. அதிகாரம். CHAPTER LVIII.

கண்ணோட்டம். ON A GRACIOUS DEMEANOUR.*

பரி. அஃதாவது தன்னோடுபயின்றாரைக்கண்டாலவர்கூறியனமறுக்கமாட்டாமை. இஃதவர்மேற்கண் சென்றவழிநிகழ்வதாகலினப்பெயர்த்தாயிற்று. மேல்வெருவந்தசெய்யாமையுட்கூறியவதனைச்சிறப்புப்பற்றிவிரித்துக்கூறுகின்றமையினிஃததன்பின்வைக்கப்பட்டது.

அதாவது, தன்னோடுபழகியோரைக்கண்டாலவர்கூறியவற்றைமறுக்கமாட்டாமை. இது, அவர்மேற்கண்சென்றவழிநிகழ்வதாகலிற்கண்ணோட்டமெனப்பட்டது. மேலேவெருவந்தசெய்யாமையுட்கூறியஅதனையே சிறப்புப்பற்றிவிரித்துக்கூறுகின்றதினாலே, இது அதன்பின்வைக்கப்பட்டது.

---

* Lit.: kind looks; a smiling countenance; courtesy; urbanity; affability.

க. கண்ணோட்டமென்னுங்கழிபெருங்காரிகை
யுண்மையானுண்டிவ்வுலகு.

The world exists through that greatest ornament (of princes), a gracious demeanour.* - - - - - - 571

பரி. கண்ணோட்டமென்றுசொல்லப்படுகின்றசிறப்புடையவழகரசர்மாட்டுண்டாகலானிவ்வுலகமுண்டாகாநின்றதென்றவாறு.

வி. கழிபெருங்காரிகையென்புழியொருபொருட்பன்மொழியிவ்வுயிரழகது சிறப்புணரநின்றது.இவ்வழகதற்குறுப்பாகவினுண்மையானெனநிலைபேறுங்கூறினார்.இன்மைவெருவந்தசெய்தலாகலினவர்நாட்டுவாழ்வார்புலியையடைந்தபுல்வாயினம்போன்றேமஞ்சாராமைபற்றியிவ்வுலகுண்டென்றார்.

ப. கண்ணோட்டமென்னும்-கண்ணோட்டமென்றழைக்கப்படுகின்ற (தாட்சணியம்), கழிபெருங்காரிகை-மிக்கசிறப்புடையவழகானது, உண்மையால்-அரசரிடத்துண்டாதலால், இவ்வுலகுண்டு-இந்தவுலகமுண்டாகாநின்றது, எ-று.

வி. கழிபெருங்காரிகையென்றவிடத்து,கழி,பெரு, என்பன ஒருபொருட்பல்மொழி. அவை,அவ்வுயிரினழகின் சிறப்புணரநின்றன. இந்த அழகு அந்தவுயிர்க்கு உறுப்பாதலால், உண்மையான் எனநிலைபேறுங்கூறினார். அது இன்மைவெருவந்த செய்தலாகலின் அவர்நாட்டுவாழ்பவர் புலியையடைந்தபுல்வாயினம்போன்று இன்பமடையாமைபற்றி, உண்மையானுண்டிவ்வுலகென்றார்.

உ. கண்ணோட்டத்துள்ளதுலகியலஃதிலா
ருண்மைநிலக்குப்பொறை.

The prosperity† of the world springs from the kindliness (of kings); the existence of those (kings) who have no (kindliness) is a burden to the earth. - - - - - - - 572

பரி. உலகியல்கண்ணோட்டத்தின்கண்ணே நிகழ்வதாகலானக்கண்ணோட்டமில்லாதாருளராதலிந்நிலத்திற்குப்பாரமாதற்கேயிறிதொன்றற்கன்றென்றவாறு

* Lit.; that very great beauty which is called a gracious countenance.

† உலகநடை, the going forward of the world; the procedure of its affairs in due course; its prosperity

வி. உலகநடையாவதொப்புரவுசெய்தல்புறந்தருதல்பிழைத்தனபொறுத்தலென்றிவைமுதலாயின. அவைநிகழாமையாற்றமக்கும்பிறர்க்கும்பயன்படாதென்பதுபற்றிநிலக்குப்பொறையென்றார். அதற்கென்பதுசொல்லெச்சம். இவையிரண்டுபாட்டானுங்கண்ணோட்டத்தது சிறப்புக்கூறப்பட்டது.

பு. உலகியல்-உலகநடையானது, கண்ணோட்டத்துள்ளது-கண்ணோட்டத்தினிடமாகவேநடப்பதாகலால், அஃதிலார்-அந்தக்கண்ணோட்டமில்லாதவர், உண்மை-உள்ளவராதல், நிலக்குப்பொறை - அந்தநிலத்திற்குப்பாரமாதற்கேயிறிதொன்றிற்கன்று, எ-று.

வி. உலகநடையாவது, ஒப்புரவுசெய்தல் பாதுகாத்தல்செய்தகுற்றங்களைப்பொறுத்தல் எனவிவைமுதலாயினவாம். அவைநடவாமையால் தமக்கும் பிறர்க்கும் பயன்படாதென்பதுபற்றி, நிலக்குப்பொறையென்றார். அதற்கென்பது, சொல்லெச்சம். இவையிரண்டுபாட்டாலுங்கண்ணோட்டத்தின் சிறப்புக்கூறப்பட்டது.

ரு. பண்ணென்னாம்பாடற்கியைபின்றேற்கண்ணென்னாங்
கண்ணோட்டமில்லாதகண்.

What is the value of a song, if it be not fit to be sung? What is the value of eyes in which there is no kindness? - - 573

பரி. பண்ணென்னபயத்ததாம்பாடற்றொழிலொடுபொருந்தமின்றாயினது போலக்கண்ணென்னபயத்ததாங்கண்ணோட்டமில்லாதவிடத்தென்றவாறு.

வி. பண்கண்ணென்பனசாதிப்பெயர். பண்களாவனபாலையாழ்முதலியநாற்றுமூன்று. பாடற்றொழில்களாவனயாழின்கண் வாராதனமுதலியவெட்டும்பண்ணென்முதலியவெட்டுமிடத்தின்கணெடுத்தல்படுத்தனலிதல்கம்பிதங்குடிலமென்னுமைந்தும்பெருவண்ணமிடைவண்ணம்வனப்புவண்ணமுதலியவண்ணங்களெழுபத்தாறுமாம். இவற்றோடியையாதவழிப்பண்ணாற்பயனில்லாதவாறுபோலக்கண்ணோட்டத்தியையாதவழிக்கண்ணாற்பயனில்லையென்பதாம். கண்சென்றவழிநிகழ்தல்பற்றியதனையிடமாக்கினார். இறுதிக்கட்கண்ணென்பதனைக்கண்ணகன்ஞாலமென்புழிப்போலக்கொள்க.

பு. பண்ணென்னும் - பாட்டென்னபயத்ததாம், பாடற்கியையின்றேல்-பாடுதற்றொழிலோடுபொருந்தமின்றாயின், (அ

துபோல) கண்ணென்னும் - கண்ணென்னபயத்ததாம், கண்ணோட்டமில்லாதகண் - கண்ணோட்டமில்லாதவிடத்து, எ-று.

வி. பண், கண், என்பன, சாதியொருமை. பண்களாவன, பாலையாழ்முதலிய நூற்றுமூன்று. பாடற்றொழில்களாவன, யாழிலேவாராதனமுதலியஎட்டும் பண்ணென்முதலியவெட்டும், கண்டத்தில் எடுத்தல்படுத்தல் நலிதல் கம்பிதம் குடிலமென்னுமைந்தும், பெருவண்ணம் இடைவண்ணம் வனப்புவண்ண முதலியவண்ணங்களெழுபத்தாறுமாம். இவற்றொடியையாதவழிப்பண்ணாற்பயனில்லாததுபோலக்கண்ணோட்டத்தோடியையில்லாதவழிக்கண்ணாற் பயனில்லையென்பதாம். இறுதியிலேகண்ணென்றதை - கண்ணகன்ஞாலமென்றாற்போலக்கொள்க.

௪. உளபோன்முகத்தெவன்செய்யுமளவினாற்
கண்ணோட்டமில்லாதகண்.

Beyond appearing to be in the face, what good do they do, those eyes in which is no well-regulated kindness? - 574

பரி. கண்டார்க்குமுகத்தினுளபோற்றோன்றலல்லதுவேறென்னபயனைச்செய்யுமளவிறவாதகண்ணோடுதலையுடையவல்லாதகண்களென்றவாறு.

வி. தோன்றலல்லதென்னுஞ்சொற்களவாய்நிலையான்வந்தன. கழிகண்ணோட்டத்தினீக்குதற்களவினானென்றார். ஒருபயனையுஞ்செய்யாவென்பதுகுறிப்பெச்சம்.

பு. உளபோன்முகத்தெவன்செய்யும் - கண்டார்க்குமுகத்திலேயுளபோலத்தோன்றலல்லது வேறென்னபயனைச்செய்யும், அளவினால் - அளவோடுகூடி, கண்ணோட்டமில்லாதகண் - கண்ணோடுதலில்லாதகண்கள், எ-று.

வி. தோன்றலல்லதென்னுஞ்சொற்கள், அவாய்நிலையால்வந்தன. கழிகண்ணோட்டத்தில்நீக்குதற்கு, அளவினாலென்றார். ஒருபயனையுஞ்செய்யாவென்பது குறிப்பெச்சம்.

௫. கண்ணிற்கணிகலங்கண்ணோட்டமஃதின்றேற்
புண்ணென்றுணரப்படும்.

Kind looks are the ornaments of the eyes ; without these, they will be considered (by the wise) to be merely two sores. - 575

பரி. ஒருவன்கண்ணிற்கணியுங்கலமாவதுகண்ணோட்டமக்கலமில்லையாயினஃதறிவுடையாராற்புண்ணென்றறியப்படுமென்றவாறு.

வி. வேறணிகலமின்மையிற்கண்ணிற்கணிகலமென்றுங்கண்ணகத்தோன்றினுநோய்களானும்புலன்பற்றலானுந்துயர்விளைத்தனோக்கிப்புண்ணென்றுணரப்படுமென்றுங்கூறினார். இவைமூன்றுபாட்டானுமோடாதுநின்றகண்ணின்குற்றங்கூறப்பட்டது.

பு. கண்ணிற்கணிகலம்-ஒருவன்கண்களுக்கிடப்படுமாபரணமாவன, கண்ணோட்டம்-தாட்சணியமாம், அஃதின்றேல்-அந்தஆபரணமில்லையாயின், புண்ணென்றுணரப்படும் - அறிவுடையோரால் அது புண்ணென்றறியப்படும், எ-று.

வி. வேறேயதற்குஆபரணமில்லாததினாலே கண்ணிற்கணிகலமென்றும், கண்ணகத்தோன்றினும்நோய்களாலும்புலனைப்பற்றுதலாலும் பார்த்தலாலும் துயர்விளைத்தலைநோக்கிப்புண்ணென்றுணரப்படுமென்றுங்கூறினார். இவைமூன்றுபாட்டானுங்கண்ணோடாதகண்ணின்குற்றங்கூறப்பட்டது.

௬. மண்ணோடியைந்தமரத்தனையர்கண்ணோ
டியைந்துகண்ணோடாதவர்.

They resemble the trees of the earth, who, although they have eyes, never look kindly (on others).* - - - - 576

பரி. ஓடுதற்குரியகண்ணோடியைந்துவைத்தஃதோடாதவரியங்காநின்றாராயினுமண்ணோடுபொருந்திநிற்கின்றமரத்தினையொப்பரென்றவாறு.

வி. ஓடாதவரென்புழிச்சினைவினைமுதன்மேனின்றது. மரமுங்கண்ணோடியைந்துகண்ணோடாமையினிதுதொழிலுவமமிதனைச்சுவைதமண்ணோடுகூடியமரப்பா

* The comparison of such men to trees arises from the word for eye, கண், signifying both an eye, and a joint of a tree. Such men are mere trees, stocks.

வையென்றுரைப்பாருமுளர்.அஃதுரையன்மைமரக்கண்ணோமண்ணாள்வார்கண்ணென்றீர்கண்டாயென்பதனானுமறிக.

பு. கண்ணோடியைந்து - (தாட்சணியப்படுதற்குரிய) கண்ணோடுகூடியிருந்தும், கண்ணோடாதவர் - தாட்சணியப்படாதவர், மண்ணோடியைந்தமரத்தனையர் - (நடந்துதிரிபவராயினும்) மண்ணோடுபொருந்திநிற்கின்றமரத்தையொப்பர், எ-று.

வி. ஓடாதவொன்றவிடத்துக்கண்ணின்தொழில், அதனையுடையவர்மேல்நின்றது. மரமுங் கண்ணோடியைந்து கண்ணோடாமையின் இது,தொழிலுவமை. இதைச்சுண்ணாம்புமண்ணோடியைந்தமரப்பாவையென்றுரைப்பாருமுண்டு. அதுபொருளல்லவென்பதை மரக்கண்ணோ மண்ணாள்வார்கண்ணென்பதினாலுமுணர்க. மரக்கண், மரத்தின்கணு.

எ. கண்ணோட்டமில்லவர்கண்ணிலர்கண்ணுடையர்
கணணோட்டமின்மையுமில்.

Men without kind looks are men without eyes; those who (really) have eyes are also not without kind looks. - 577

பரி. கண்ணோட்டமில்லாதவர்கண்ணுடையருமல்லர்கண்ணுடையவர்கண்ணோட்டமிலராதலுமில்லையென்றவாறு.

வி. கண்ணுடையராயிற்காட்சிக்கண்ணேயஃதோடுமென்பதுபற்றிக்கண்ணோட்டமில்லவர்கண்ணிலரெனக்கூறிப்பின்னதனையெதிர்மறைமுகத்தான்விளக்கினார். உம்மைபிறந்ததுதழீஇயவெச்சவும்மை.இவையிரண்டுபாட்டானுங்கண்ணோடாதாரதிழிவுகூறப்பட்டது.

பு. கண்ணோட்டமில்லவர்கண்ணிலர் - தாட்சணியப்படாதவர்கண்ணுடையருமல்லர், கண்ணுடையர் கண்ணோட்டமின்மையுமில் - கண்ணுடையவர்தாட்சணியமிலராதலுமில்லை,எ-று.

வி. கண்ணுடையராயின் காட்சியிலோடுமென்பதுபற்றிக், கண்ணோட்டமில்லவர் கண்ணிலரெனக்கூறிப்பின்பதனையெதிர்மறைமுகத்தால்விளக்கினார். இன்மையுமென்றவும்மை, பிறந்

ஈதுதழுவிநின்றது. இவையிரண்டுபாட்டாலுங்கண்ணோட்டமி
ல்லாதவரிழிவுகூறப்பட்டது.

௮. கருமஞ்சிதையாமற்கண்ணோடவல்லார்க்
குரிமையுடைத்திவ்வுலகு.

Those kings who are able to show kindness, without injury to their affairs,* the world will be all their own. - - 578

பரி. முறைசெயலாகியதந்தொழிலழியாமற்கண்ணோடவல்லவேந்தர்க்குரித்தாந்தன்மையுடைத்திவ்வுலகமென்றவாறு.

வி. தம்மோடுபயின்றார்பிறரையிடுக்கண்செய்துழியவரைக்கண்ணோடியொறுதார்க்குமுறைசிதைதன் மேலோர்ந்துகண்ணோடாதென்றமுறையிலக்கணத்தானும்பெற்றாம் முறைசிதையவரும்வழிக்கண்ணோடாமையும்வாராவழிக்கண்ணோடலுமொருவற்கியல்பாதலருமையிற்கண்ணோடவல்லார்க்கென்றுமவ்வியல்புடையார்க்குலகமுழுதுநெடுங்காலஞ்சேறலினுரிமையுடைத்தென்றுங்கூறினார். இதனாற்கண்ணோடுமாறுகூறப்பட்டது.

பு. கருமஞ்சிதையாமல் - நீதிசெயலாகியதந்தொழிலழியாமல், கண்ணோடவல்லார்க்கு-தாட்சணியப்படவல்லஅரசர்க்கு, உரிமையுடைத்திவ்வுலகு - உரித்தாந்தன்மையையுடைத்திவ்வுலகம், எ-று.

வி. தம்மொடுபழகியோர்பிறரைத்துன்பப்படுத்தியக்கால் அவரைக் கண்ணோடித்தண்டியாதார்க்குநீதியழிவு, மேலோர்ந்துகண்ணோடாதென்றமுறை யிலக்கணத்தாலும்பெறப்படும். நீதிசிதையவரும்வழிக்கண்ணோடாமையும் வாராவழிக்கண்ணோடலுமொருவற்கு இயல்பாதலருமையாதலாற் கண்ணோடவல்லார்க்கென்றும், அவ்வியல்புடையார்க்கு உலகமுழுமையும் நெடுங்காலஞ்செல்லுமாதலாலுரிமை யுடைத்தென்றுங்கூறினார். இதினாலேகண்ணோடுதற்குஅளவுகூறப்பட்டது.

---

* *e. g.* To the administration of justice.

௯. ஒறுத்தாற்றும்பண்பினார்கண்ணுங்கண்ணோடிப்
பொறுத்தாற்றும்பண்பேதலை.

Patiently to bear with, and shew kindness to those who grieve us, is the most excellent of all dispositions. - - - 579

பரி. தம்மையொறுக்குமியல்புடையாரிடத்துங்கண்ணோட்டமுடையராய்க் குற்றத்தைப்பொறுக்குமியல்பேயரசர்க்குத்தலையாயவியல்பாவதென்றவாறு.

வி. பண்பினாரென்றதனாலவர்பயிற்சிபெற்றும். ஒறுத்தாற்றும்பொறுத்தாற்றுமென்பனவிரண்டுமொருசொன்னீர்மைத்து.

பு. ஒறுத்தாற்றும்பண்பினார்கண்ணும் - தம்மைநலியுமியல்புடையாரிடத்தும், கண்ணோடி - தாட்சணியப்பட்டு, பொறுத்தாற்றும்பண்பேதலை - அந்தக்குற்றத்தைப்பொறுக்குந் தன்மையேயரசர்க்குமுதன்மையாகியநற்குணமாவது, எ-று.

வி. பண்பினாரென்றதினால், அவர்பழக்கம்பெறப்பட்டது. ஒறுத்தாற்றல்பொறுத்தாற்றலென்பனவிரண்டும், ஒருசொற் பண்பினவாய்நின்றன.

௰. பெயக்கண்டுநஞ்சுண்டமைவர்நயத்தக்க
நாகரிகம்வேண்டுபவர்.

Those who desire (to cultivate that degree of) urbanity which all shall love, will consent to swallow the poison which they have even seen poured out for them. - - - - - 580

பரி. பயின்றார்தமக்குநஞ்சிடக்கண்டுவைத்துங்கண்மறுக்கமாட்டாமையினதனையுண்டுபின்னுமவரோடுமேவுவர்யாவரானும்விரும்பத்தக்ககண்ணோட்டத்தை வேண்டுவாரென்றவாறு.

வி. நாகரிகமாவதுகண்ணோட்டமாதல். முந்தைவிருந்துநட்டோர்கொடுப்பினஞ்சுமுண்பர்நனிநாகரிகரென்பதனானுமறிக. அரசரவரையொறுதுகண்ணோடற்பாலதுதம்மாட்டுக்குற்றஞ்செய்துழியென்பதிவ்விரண்டுபாட்டானுங்கூறப்பட்டது.

பு. பெயக்கண்டுநஞ்சு - பழகினோர்தமக்குநஞ்சிடலைக்கண்டிருந்தும், உண்டமைவர் - மறுக்கமாட்டாமலதனையுண்டுபின்

னுமவரோடுபொழுகுவர், நயத்தக்க-யாவராலும்விரும்பத்தக்க, நாகரிகம்வேண்டுபவர்-தாட்சணியத்தைவிரும்புவோர், எ-று.

வி. நாகரிகம்-தாட்சணியமென்பதை, முந்தைவிருந்துநட்டோர்கொடுப்பினஞ்சுமுண்பர் நனிநாகரிகர் என்பதினுலுமுணர்க. அரசர் அவனைத்தண்டியாமலேதாட்சணியப்படவேண்டுவது தம்மிடத்திற்குற்றஞ்செய்தபோதென்பது இவ்விரண்டுபாட்டாலுங்கூறப்பட்டது.

ருகூ. அதிகாரம். CHAPTER LIX.

ஒற்றாடல். ON THE EMPLOYMENT OF SPIES.

பரி. அஃதாவதுபகைநொதுமனன்பென்னுமுன்றுதிறத்தார்மாட்டுநிகழ்ந்தனவறிதற்கொற்றரையாளுதல்.மேற்சொல்லியவிலக்கணத்தனுயவரசனுக்குத்தன்னுடுசெலுத்துங்காலும்பிறர்நாடுகொள்ளுங்காலும்வேண்டுவனகூறுகின்றாராகலினவ்விருமைக்குமின்றியமையாததாயவிதுமுன்வைக்கப்பட்டது.

அதாவது, பகை, புதுமுகம், நட்பென்ற இம்முத்திறத்தாரிடத்துநடந்தனவறிதற்கு ஒற்றரையாளுதல். மேலேசொல்லப்பட்ட இலக்கணத்தையுடையவனுகிய அரசனுக்குத்தன்னுடுசெல்லும்போதும் பிறர்நாடுகொள்ளும்போதும் வேண்டியவைகூறுகின்றாராதலால், அந்தவிருவகைக்குமின்றியமையாததாகிய இதுமுன்வைக்கப்பட்டது.

க. ஒற்றுமுரைசான்றநூலுமிவையிரண்டுந்
தெற்றென்கமன்னவன்கண்.

Let a king consider as his eyes these two things, a spy, and a book (of laws) universally esteemed.* - - - - 581

பரி. ஒற்றும்புகழமைந்தநீதிநூலுமாகியவிவையிரண்டனையுமரசன்றன்னிரண்டுகண்ணுமாகத்தெளிகவென்றவாறு.

---

* உரைசான்ற, full of praise; praised by all.

வி. ஒற்றுத்தன்கண்செல்லமாட்டாதபரப்பெலாஞ்சென்றுகண்டாண்டுநிகழ்ந்தனவெல்லாமுணர்த்தலானுநூலந்நிகழ்ந்தவற்றிற்குத்தன்னுணர்வுசெல்லமாட்டாதவினைகளையெல்லாஞ்சொல்லியுணர்த்தலானுமிவ்விரண்டனையுமேதனக்கூனக்கண்ணுஞானக்கண்ணுமாகத்துணிந்து கொண்டொழுகுகவென்பதாம். ஒற்றனையொற்றென்றார்வேந்தனைவேந்தென்றாற்போல. தெற்றென்கவென்பதுதெற்றெனென்பதுமுதனிலையாகவந்தவியங்கோள்.அதுதெற்றெனவென்னுஞ்செயவெனெச்சத்தானறிக. இதனுலொற்றினதுசிறப்புக்கூறப்பட்டது.

பு. ஒற்றும்-ஒற்றனையாளுதலும், உரைசான்றநூலும் - புகழ்நிரம்பியநீதிநூலும், இவையிரண்டும்-ஆகியஇவ்விரண்டையும், மன்னவன்கண் - அரசன்தன்னிரண்டுகண்ணுமாக, தெற்றென்க-தெளிக, எ-று.

வி. ஒற்று, தன்கண்செல்லமாட்டாத தூரமெல்லாஞ்சென்றுகண்டு அங்கேநடந்தனவெல்லாவற்றையும்வந்துணர்த்தலானும், நூல் அந்தநடந்தனவற்றிற்குத்தன்னுணர்வு செல்லமாட்டாதவினைகளையெல்லாஞ்சொல்லி யுணர்த்துதலானும், இந்தவிரண்டையுமேதனக்கு ஊனக்கண்ணும் ஞானக்கண்ணுமாகத்துணிந்துகொண்டு நடக்கவென்பதாம். வேந்தனைவேந்து என்றாற்போல, ஒற்றனை ஒற்றுஎன்றார். தெற்றென்க என்பது,தெற்றென்என்பது, முதனிலையாகவந்தவியங்கோள். அது தெற்றெனவென்னுஞ்செயவெனெச்சத்தானறிக. இதினாலேயொற்றினதுசிறப்புக்கூறப்பட்டது.

௨. எல்லார்க்குமெல்லா நிகழ்பவையெஞ்ஞான்றும்
வல்லறிதல்வேந்தன்றொழில்.

It is the duty* of a king to know quickly all that happens, at all times, amongst all men. - - - - - - 582

பரி. எல்லார்கண்ணுநிகழ்வனவெல்லாவற்றையுநாடோறுமொற்றான்விரைந்தறிதலரசனுக்குரியதொழிலென்றவாறு.

வி. எல்லார்க்குமென்றதுமூன்றுதிறத்தாரையும்.நான்காவதேழாவதன்பொருட்கண்வந்தது.நிகழ்வனவெல்லாமென்பதுநல்லவுந்தீயவுமாயசொற்களையுஞ்

* தொழில், work; business.

செயல்களையும்அவைநிகழ்ந்தபொழுதேயவற்றிற்குத்தக்கவழியாகத்தேறுதலா கச்செய்யவேண்டுதலின்வல்லறிதலென்றுமவ்விருதொழிற்குமறிதல்காரணமா கவினதனையேயுபசாரவழக்காற்றொழிலென்றுங்கூறினர். ஒற்றுலென்பததிகா ரத்தான்வந்தது.இதனாலொற்றினுயபயன்கூறப்பட்டது.

பு. எல்லார்க்கும் - எல்லாரிடத்திலும், எல்லாநிகழ்பவை- நடப்பனவெல்லாவற்றையும், எஞ்ஞான்றும்-தினந்தோறும், வல்லறிதல்-(ஒற்றினாலே)விரைந்தறிவது, வேந்தன்றொழில்- அரசனுக்குரியதொழிலாம், எ-று.

வி. எல்லார்க்குமென்றது, பகை, புதுமுகம், நட்பென்ற மூத்திறத்தாரையும். இன்னுமது ஏழாவதன்பொருளிலே நா லாவதுமயங்கிநின்ற உருபுமயக்கம். நடப்பனவெல்லாமென்ப து, நல்லவுந்தீயவுமாகியசொற்களையுஞ்செயல்களையும். அவை நடந்தபொழுதே யவற்றிற்குத்தக்கவழியாகத் தேறுதலாகச் செய்யவேண்டுதலின் வல்லறிதலென்றும், அவ்விருவகைத்தொ ழிற்குமறிதல்காரணமாகலின் அதனையே உபசாரவழக்குப் பற்றித்தொழிலென்றுங்கூறினர். ஒற்றுலென்பது, அதிகார த்தால்வருவிக்கப்பட்டது. இதினாலே ஒற்றின்பயன்கூறப்பட் டது.

> கூ. ஒற்றினொற்றிப்பொருடெரியாமன்னவன்
> கொற்றங்கொளக்கிடந்ததில்.

There is no way for a king to obtain conquests, who knows not the advantage of discoveries made by a spy. - - - 583

பரி, ஒற்றினானேயெல்லார்கண்ணுநிகழ்ந்தவற்றையொற்றுவித்தவற்றனெ ய்துமபயனையாராயாதவரசன்வென்றியடையக்கிடந்ததுவேறொருநெறியில்லை யென்றவாறு.

வி. அந்நிகழ்ந்தனவும்பயனுமறியாதுபகைக்கெளியனாதல்பிறிதிற்றீராமை யிற்கொற்றங்கொளக்கிடந்ததில்லென்றார்.இதற்குக்கொளக்கிடந்ததொருவெ ன்றியில்லையென்றுரைப்பினுமமையும். இதனாலத்தொழில்செய்யாதவழிவருங் குற்றங்கூறப்பட்டது.

பு. ஒற்றினன்-ஒற்றினாலே, ஒற்றி-எல்லாரிடத்துநடந்தவ ற்றையுசாவுவித்து, பொருடெரியாமன்னவன் - அவற்றாலெய்

தும்பயனையாராயாதவரசன், கொற்றங்கொளக்கிடந்ததில்- வெற்றியடையக்கிடந்தது வேறொருவழியில்லை, எ-று.

வி. அங்கேநடந்தனவும் பயனுமறியாது பகைஞர்க்கு எளியவனாவது மற்றொன்றினாலுந்தீராததினாலே,கொற்றங்கொளக்கிடந்ததில்லென்றார். இதற்குக்கொளக்கிடந்ததொருவெற்றியில்லையென்றுரைப்பினும் அமையும். இதினாலே யத்தொழில் செய்யாதவழிப்படுங்குற்றங்கூறப்பட்டது.

௪. வினைசெய்வார்சுற்றத்தார்வேண்டாதாரென்றாங்
கனைவரையுமாராய்வதொற்று.

He is a spy who watches all men, to wit, those who are in the king's employment, his relatives, and his enemies. - - 584

பரி. தங்காரியஞ்செய்வார்சுற்றத்தார்பகைவரென்றுசொல்லப்பட்டவனைவரையுஞ்சொற்செயல்களாலாராய்வானேயொற்றனாவானென்றவாறு.

வி. தம்மென்றதரசனோடுளப்படுத்தி அவனுக்குக்காரியஞ்செய்வார்செய்வனவுஞ்சுற்றத்தார்தன்னிடத்துநாட்டிடத்துஞ்செய்வனவும்பகைவர்தன்னற்றமாராய்தலுமேற்றேறப்படுதலுமுன்னிட்டுச்செய்வனவுமறிந்தவற்றிற்கேற்றனசெய்யவேண்டுதலினிம்மூவகையாரையுமெஞ்சாமலாராயவேண்டுமென்பாரனைவரையுமாராய்வதென்றார்.

பு. வினைசெய்வார்-அரசர்தங்காரியஞ்செய்பவரும்,சுற்றத்தார்-அரசர்பந்துக்களும், வேண்டாதார்-பகைவரும்," என்றாங்கனைவரையும்-என்றுசொல்லப்பட்ட அனைவரையும், ஆராய்வதொற்று - (சொல்லினாலுஞ்செயலினாலும்) ஆராய்பவனேயொற்றனாவான், எ-று.

வி. வினையினையரசனோடுளப்படுத்தவேண்டுதலின் தம்என்பது,வருவிக்கப்பட்டது. அவனுக்குக்காரியஞ்செய்வார் செய்வனவும் சுற்றத்தார் தன்னிடத்தும் நாட்டிடத்துஞ்செய்வனவும் பகைவர்தனதுசோர்வுபார்த்தலும் மேலேபோர்செய்யப்படுதலும் முன்னாடிச்செய்வனவுமறிந்து அவற்றிற்குத் தக்கனசெய்யவேண்டுதலா லிம்மூவகையாரையுங்குறைவில்லா

மலையாராயவேண்டுமென்று சொல்லவந்தவர், அனைவரையு மாராய்வதொற்றென்றார்.

௫. கடாஅவுருவொடுகண்ணஞ்சாதியாண்டு
முகாஅமைவல்லதேயொற்று.

A spy is one who is able to assume an appearance which may create no alarm (in the minds of others), who fears no man's face, and who never reveals (his purpose). - - - 585

பரி. ஒற்றப்பட்டார்கண்டாலையுறுதவடிவோடுபொருந்தியவரையுற்றறிய லுறிற்செயிர்த்துநோக்கியவர்கண்ணிற்கஞ்சாதுநின்றுநான்குபாயமுஞ்செய் தாலுமனத்துக்கொண்டவற்றையுமிழாமைவல்லவனேயொற்றனுவானென்ற வாறு.

வி. கடாஅவென்பதுகடுக்கும்பெயரெச்சத்தெதிர்மறை. ஐயுறுதவடிவாவன பார்ப்பார்வணிகர்முதலாயினோர்வடிவு.

பு. கடாஅவுருவொடு - (உசாவப்பட்டவர் அவனைக்கண்டால்) சந்தேகப்படாதவடிவொடுபொருந்தி, கண்ணஞ்சாது- (அவர்சந்தேகப்பட்டு அறியப்புகின்)தான்சினந்துநோக்கியவர்பார்வைக்கு அஞ்சாமல்நின்று, யாண்டும்-(நால்வகையுபாயங்களையுஞ்செய்தாலும்) எவ்விடத்தும், உகாஅமைவல்லதேயொற்று - (மனத்துள்வைத்ததை) சிதறவிடாதிருக்கவல்லவனேயொற்றனுவான், எ-று.

வி. கடாஅவென்பது, கடுக்கும்என்னும்பெயரெச்சத்திற்கு எதிர்மறையீறுதொக்குநின்றது. ஐயப்படாதவடிவாவன, பார்ப்பார்,வணிகர் முதலாயினோர்வடிவு.

௬. துறந்தார்படிவத்தராகியிறந்தாராய்ந்
தென்செயினுஞ்சோர்விலதொற்று.

He is a spy who, assuming the appearance of an ascetic, goes into (whatever place he wishes), examines into (all that is needful), and never discovers himself, whatever may be done to him. - - - - - - - - - - 586

பரி. முற்றத்துறந்தாராயும்விரதவொழுக்கினராயுமுள்புகுதற்கரியவிடங்க

னெல்லாமுள்புக்காராயவேண்டுவனவாராய்ந்தறிந்தாண்டையாரையுற்றுப்பிடித்தெல்லாத்துன்பமுஞ்செய்துகேட்டாலுந்தன்னைவெளிப்படுத்தாதவனேயொற்றனாவானென்றவாறு.

வி. விரதவொழுக்குத்தீர்த்தயாத்திரைமுதலாயின. செயினுமென்றதறவோரொன்றுசெய்வாரின்மைவிளக்கிநின்றது. மேனால்வகையுபாயத்தினுஞ்சோர்வின்மைசொல்லிவைத்தீண்டுந்தண்டத்தைப்பிரித்துக்கூறியததனதுபொறுத்தற்கருமைச்சிறப்புநோக்கி. இதனுள்படிவமென்றதனைவேடமாக்கித்துறந்தார்வேடத்தராகியென்றுரைப்பாருமுளர்.

பு. துறந்தார்படிவத்தராகி-சந்நியாசிகளாகியுந்தவஞ்செய்வோராகியும், இறந்து-உட்புகாதவிடங்களிலெல்லாம்புகுந்து, ஆராய்ந்து-ஆராயவேண்டுவனவற்றையெல்லாமாராய்ந்தறிந்து, என்செயினும்-அவ்விடத்துள்ளோர்சந்தேகப்பட்டுப்பிடித்து, எல்லாத்துன்பங்களையுஞ்செய்துகேட்டாலும், சோர்விலதொற்று-தன்னைவெளிப்படுத்தாதவனேயொற்றனாவான், எ-று.

வி. தவஞ்செய்வோர், விரதவொழுக்கத்தார் தீர்த்தயாத்திரையொழுக்கத்தார்முதலாயினோர். செயினுமென்றது, துறவறத்தாரொன்றெண்ணிச்செய்யாமையைவிளக்கிநின்றது. மேலே நால்வகையுபாயத்தினுஞ்சோர்வின்மைசொல்லி யதனுளடங்கிநின்ற தண்டத்தை யீங்கும் பிரித்துக்கூறியது, அதனது பொறுத்தற்கருமைச் சிறப்புநோக்கியெனக்காண்க. இதனுள் படிவமென்றதை, வேடமாக்கித்துறந்தார்வேடத்தராகியென்றுரைப்பாருமுண்டு.

எ. மறைந்தவைகேட்கவற்றாகியறிந்தவை
ஐயப்பாடில்லதேயொற்று.

A spy is one who is able to discover what is hidden, and who retains no doubt concerning what he has known.* - 587

பரி. ஒற்றப்பட்டார்மறையச்செய்தசெயல்களையவர்க்குள்ளாயினராற்கேட்

* *i. e.* Who searches it out so thoroughly as to leave no doubt respecting it.

கவல்லனாய்க்கேட்டறிந்தசெயல்களிற்பின்னைப்படாதுதுணியவல்லவனேயொற்றனாவானென்றவாறு.

வி. மறைந்தவைசொல்லுவாரையறிந்தவராயிராமற்சென்றொட்டித்தாமே சொல்லும்வகையதற்கேற்றசொல்லாகச்செயலாகமுன்னேவிளைத்துத் தொடர்பாற்கேட்குங்காலுமுறாதார்போன்றுநின்றுகேட்கவேண்டுதலின்வற்றாகியென்றுங்கேட்டறிந்தவற்றைத்தானேயையுற்றுவந்துசொல்லினரசனாலவற்றிற்கேற்ற வினைசெய்யலாகாமையின்ஐயப்பாடில்லதென்றுங்கூறினார்.இவைநான்குபாட்டானுமொற்றினதிலக்கணங்கூறப்பட்டது.

பு. மறைந்தவை- (உசாவப்பட்டார்) மறைத்துவைத்தசெயல்களை, கேட்கவற்றாகி-(அவர்க்குள்ளாயினாரால்) கேட்கவல்லவனாகி, அறிந்தவை-அங்ஙனங்கேட்டறிந்தசெயல்களில், ஐயப்பாடில்லதேயொற்று-பின்சந்தேகப்படாதுதுணியவல்லவனேயொற்றனாவான், எ-று.

வி. மறைந்தவைசொல்லுவாரையறிந்துஅவர்சந்தேகப்படாமற்புகுந்து ஒன்றிநின்று அவர்தாமேசொல்லும்படியதற்கேற்றசொல்லாயினுஞ்செயலாயினுமுன்னேயுண்டாக்கியத்தொடர்ச்சிபற்றிக்கேட்கும்போதும்அயலார்போலநின்று கேட்கவேண்டுதலால்வற்றாகியென்றும், கேட்டறிந்தவற்றைத்தானே சந்தேகப்பட்டுவந்துசொல்லின் அரசனாலவற்றிற்கேற்ற வினைசெய்யக்கூடாமையின்ஐயப்பாடில்லதென்றுங்கூறினார். இவை நான்குபாட்டாலுமொற்றினதிலக்கணங்கூறப்பட்டது.

அ. ஒற்றொற்றித்தந்தபொருளையுமற்றுமோ
ரொற்றினாலொற்றிக்கொளல்.

Let not a king receive the information which a spy has discovered and made known to him, until he has examined it by another spy. - - - - - - - - 588

பரி. ஓரொற்றனொற்றிவந்தறிவித்தகாரியந்தன்னையும்பிறனோரொற்றனாலுமொற்றுவித்தொப்புமைகண்டுகொள்கவென்றவாறு.

வி. ஒற்றப்பட்டாரோடொத்துநின்றுமாறுபடக்கூறலுங்கூடுமாகலின் ஒருவன்மாற்றத்தேறப்படாதென்பதாம்.

பு. ஒற்றொற்றித்தந்தபொருளையும்-ஓரொற்றனுசாவிவந்த

றிவித்தகாரியத்தையும், மற்றுமோரொற்றினால் - மறுபடியு
மோரொற்றனாலே, ஒற்றி-உசாவி, கொளல்-(ஒப்புமைகண்டு)
கொள்க, எ-று.

வி. உசாவப்பட்டாரோடொத்துநின்றுமாறுபடக்கூறலுமு
ண்டாகலின் ஒருவன்சொல்லை நம்பக்கூடாதென்பதாம்.

கூ. ஒற்றொற்றுணராமையாள்கவுடன்மூவர்
சொற்றொக்கதேறப்படும்.

Let a king employ spics so that one may have no knowledge of the other;* and when the information of tbree agrees together, let him receive it. - - - - - - - 589

பரி. ஒற்றனையாளுமிடத்தொருவனொருவனையறியாமையாள்க. அங்ஙனமா
ண்டவொற்றர்மூவரையொருபொருண்மேல்வேறுவேறுவிட்டாலம்மூவர்சொல்
லும்பயனொலொத்தனவாயினதுமெய்யென்றுதெளியப்படுமென்றவாறு.

வி. ஆயினென்பதுவருவிக்கப்பட்டது. ஒருவனையொருவனறியிற்றம்முளி
யைந்தொப்பக்கூறுவராகலினுணராமையாள்கவென்றுமூவர்க்குநெஞ்சொற்
றுமைப்படுதலும்பட்டாணீடுநிற்றலுங்கூடாமையிற்றேறப்படுமென்றுங்கூறி
னார். இதனனேயஃதொத்திலவாயிற்பின்னுமாராய்கவென்பதுபெற்றாம்.

பு. ஒற்றொற்று-(ஒற்றனையாளுமிடத்து) ஓரொற்றன்மற்
றோரொற்றனை, உணராமையாள்க-அறியாதிருக்கும்படியாள்
க, உடன்மூவர்சொற்றொக்க - அவ்வாறுஆண்டஒற்றர்மூவரை
யொருபொருண்மேல் வேறுவேறுவிடுத்து அம்மூவர்சொல்லு
ம்பயனொலொத்திருக்குமாயின், தேறப்படும்-அதுமெய்யென்று
தெளியப்படும், எ-று.

வி. தொக்கவென்றவிடத்து ஆயின்என்பது, வருவிக்கப்பட்
டது. ஒருவனையொருவனறிந்தால்தம்முளியைந்து ஒப்பக்கூ
றுவராதலாலுணராமையாள்கவென்றும், மூவர்க்கும்நெஞ்
சொருமைப்படுதலும் பட்டால்நீடித்துநிற்றலுங் கூடாமை
யால் தேறப்படுமென்றுங்கூறினார். இங்ஙனங்கூறலால், அது
ஒத்திராவிடிற்பின்புமாராய்கவென்று பெறக்கிடந்தது.

---

* Lit. Let him employ one spy unknown to another spy.

௰. சிறப்பறியவொற்றின்கட்செய்யற்கசெய்யின்
புறப்படுத்தானாகுமறை.

Let not a king publicly confer on a spy any marks of his favor; if he does, he will divulge his own secret. - - - 590

பரி. மறைந்தவையறிந்துகூறியவொற்றின்கட்செய்யுஞ்சிறப்பினையரசன்பிறரறியச்செய்யாதொழிகசெய்தானாயிற்றன்னகத்தடக்கப்படுமறையைத்தானே புறத்திட்டானாமென்றவாறு.

வி. மறையாவதவனொற்றனாயதூஉமவன்கூறியதூஉமாம். சிறப்புப்பெற்றவிவன்யாவனென்றும்பெறுதற்குக்காரணம்யாதென்றும்வினவுவாருமிறுப்பாருமயலாராகலிற்புறப்படுத்தானாகுமென்றார். இவைமூன்றுபாட்டானுமொற்றையாளுமாறுமவராலிகழ்ந்தனவறியுமாறுமறிந்தாற்சிறப்புச்செய்யுமாறுங்கூறப்பட்டன.

பு. ஒற்றின்கட்சிறப்பு - (இரகசியங்களையறிந்துவந்துசொன்ன) வொற்றனுக்குச்செய்யுஞ்சிறப்பை, அறியச்செய்யற்க-அரசன்பிறரறியச்செய்யாதொழிக, செய்யின்-செய்வானாயின், புறப்படுத்தானாகுமறை-(தன்னகத்தடக்கப்படுமிரகசியத்தைத்தானே) வெளிப்படுத்தினவனாவான், எ-று.

வி. மறையாவது, அவனொற்றனாகியதும் அவன்கூறியதுமாம். சிறப்புப்பெற்ற இவன்யாவனென்றும் பெறுதற்குக் காரணம்யாதென்றும் வினவுவோரும் எதிர்மொழிகொடுப்போரும்அயலாராகலால்,புறப்படுத்தானாகுமென்றார். இவைமூன்றுபாட்டாலும்ஒற்றனையாளுந்தன்மையும் அவராலேநடந்தனவற்றையறியுந் தன்மையும் அறிந்தாலவர்க்குச்சிறப்புச் செய்யுந்தன்மையுங்கூறப்பட்டன.

௬௰. அதிகாரம். CHAPTER LX.

ஊக்கமுடைமை. ON ENERGY.

பரி. அஃதாவது மனமவிதலின்றிவினைசெய்தற்கட்கிளர்ச்சியுடைத்தாதல். ஒற்றரானிகழ்ந்தவையறிந்தவற்றிற்கேற்றவினைசெய்வானுக்கிஃதின்றியமையாமையினொற்றாடலின்பின்வைக்கப்பட்டது.

அதாவது, முயற்சிசெய்வதிலே மனஞ்சுருங்காமல் விரிவு

டைத்தாதல். ஒற்றரால்நடந்ததையறிந்து அவற்றிற்கேற்ற வினைசெய்பவனுக்கு இது இல்லாமற்கூடாதாதலாலிது ஒற்றுடலின்பின்வைக்கப்பட்டது.

க. உடையரெனப்படுவதூக்கமஃதில்லா
ருடையதுடையரோமற்று.

Energy marks out the man of property; as for those who are destitute of energy, do they (really) possess what they possess?* - - - - - - - - - - 591

பரி. ஒருவரையுடையரென்றுசொல்லச்சிறந்ததூக்கமவ்வூக்கமில்லாதார்வேறுடையதுதாமுமுடையராவரோவாகாரென்றவாறு.

வி. வேறுடையதென்றதுமுன்னெய்திநின்றபொருளை. உம்மைவிகாரத்தாற்றொக்கது. காக்குமாற்றலிலாதவினதுவுமிழப்பரென்பதாம்

பு. உடையரெனப்படுவது-ஒருவரைஉடையவரென்றுசொல்லச்சிறந்தது, ஊக்கம்-மனத்திட்பமாம், அஃதிலார் - அந்த ஊக்கமில்லாதவர், உடையது - வேறுடைத்தாயிருந்ததை, உடையரோ-தாமுமுடையவராவரோ ஆகார், எ-று.

வி. வேறுடைத்தாயிருந்ததென்றது, முன்னே பெறப்பட்டிருந்தபொருளை. தாமென்பதும்இறந்ததுதழுவிய எச்சவும்மையுமவாய்நிலையாதலால், வருவித்துரைக்கப்பட்டன. காத்தற்கு மனத்திட்பமில்லாததினாலே, முன்பெற்றதுமிழப்பரென்பதாம்.

உ. உள்ளமுடைமையுடைமைபொருளுடைமை
நில்லாதுநீங்கிவிடும்.

The possession of (energy of) mind is true property; the possession of wealth passes away and abides not. - - 592

பரி. உள்ளமுடைமையேயொருவனுக்குநிலைநின்றவுடைமையாவதுமற்றைப்பொருளுடைமைநிலைநில்லாதுநீங்கிப்போமென்றவாறு.

---

* No, is the answer; because they have not the energy to keep it.

வி. உள்ளமாகுபெயர். ஊக்கமுள்ளத்துப்பண்பாகலினதற்குநிலைநிற்றலும் பொருளுடம்பினும்வேறாயழிதன்மாலைத்தாகலினதற்குநிலைநில்லாமையுங்கூறினார். கூறவேயஃதுடைமையன்றென்பதுபெறப்பட்டது.

பு. உள்ளமுடைமை - ஒருவனுக்கு ஊக்கமுடைமையே, உடைமை-நிலைபெற்றவுடைமையாம்,பொருளுடைமை-மற்றப் பொருளுடைமையானது, நில்லாது நீங்கிவிடும்-நிலைபெறாது நீங்கிப்போம், எ-று.

வி. உள்ளத்தின் கிளர்ச்சியையுள்ளமென்றது, ஆகுபெயர். ஊக்கமனப்பண்பாதலாலதற்குநிலையேறும், பொருள் உடம்பினும் வேறாகியழியுந் தன்மைத்தாதலாலதற்கு நிலையின்மையுங்கூறினார். கூறவேயது உடைமையன்றென்பதுபெறப்பட்டது.

௩. ஆக்கமிழந்தேமென்றல்லாவாரூக்க
மொருவந்தங்கைத்துடையார்.

They who are possessed of enduring energy will not trouble themselves, saying, " we have lost our property." - - - 593

பரி. இழந்தாராயினும்யாங்கைப்பொருளையிழந்தேமென்றலமரார்நிலைபெற்றவூக்கத்தைக்கைப்பொருளாகவுடையாரென்றவாறு.

வி. ஆக்கமாகுபெயர். ஒருவந்தமாயவூக்கமென்க. கைத்துகைத்தாயபொருள். கைத்துண்டாம்போழ்தேகரவாதறஞ்செய்மினென்றார்பிறரும். அல்லாவாமைக்கேதுவருகின்றபாட்டாற்கூறுப.

பு. ஊக்கம் - நிலைபெற்றமனத்திட்பத்தை, ஒருவந்தம்-ஒருதலையாக, கைத்துடையார்-கைப்பொருளாகவுடையவர், ஆக்கமிழந்தேமென்று-(இழந்தாராயினும்)யாம்கைப்பொருளையிழந்தோமென்று, அல்லாவார்-மனமயக்கங்கொள்ளார், எ-று.

வி. அல்லாத்தல், மனச்சுழற்சி. ஆக்கம், ஆகுபெயர். ஒருவந்தமென்பதற்குப்பதப்பொருள் முன்னுரைக்கப்பட்டது. கைத்து,கையகத்ததாகியபொருள். மனச்சுழற்சியடையாமைக்கு ஏது வருகின்றபாட்டாற்கூறுவர்.

௪. ஆக்கமதர்வினுய்ச்செல்லுமசைவிலா
ஊக்கமுடையா னுழை.

Wealth will ask for a way to come to the man of unfailing energy. - - - - - - - - - - - 594

பரி. அசைவில்லாதவூக்கத்தையுடையான்மாட்டுப்பொருடானேவழிவினவிக்கொண்டுசெல்லுமென்றவாறு.

வி. அசைவின்மையிடுக்கண்முதலியவற்றாற்றளராமை. வழிவினவிச்சென்று சார்வார்போலத்தானேசென்றுசாருமென்பாரதர்வினுய்ச்செல்லுமென்ருர். எய்தியின்றபொருளினுமதற்குக்காரணமாயவூக்கஞ்சிறந்ததென்பதிவைநான்குபாட்டானுங்கூறப்பட்டது.

பு. அசைவிலாவூக்கமுடையானுழை-சலியாதவூக்கத்தையுடையவனிடத்தில், ஆக்கம்-பொருளானது, அதர்வினுய்-வழிவினவிக்கொண்டு, செல்லும்-போம், எ-று.

வி. சலியாமை, துன்பமுதலியவைகளால்தளராமை. வழிவினவிச்சென்றுசார்வார்பொலத் தானேசென்று சாருமென்றுசொல்லவந்தவர், அதர்வினுய்ச்செல்லுமென்ருர். பெற்றுநின்றபொருளினுமதனைக்காத்தற்குளதுவாகியவூக்கஞ்சிறந்ததென்பதிவைநான்குபாட்டானுங்கூறப்பட்டது.

௫. வெள்ளத்தனையமலர்நீட்டமாந்தர்த
முள்ளத்தனையதுயர்வு.

The length of a flower-stalk will be in proportion to the depth of the water (in which it grows); the height of a man is in proportion to (the greatness of) his mind. - - - - - 595

பரி. நின்றநீரினளவாநீர்ப்பூக்களின்றுளினது நீளங்களதுபோலமக்கடம்மூக்கத்தளவினதாமவருயர்ச்சியென்றவாறு.

வி. மலராகுபெயர். நீர்மிக்கதுணையுமலர்கணீளுமென்பதுபடவெள்ளத்தனையவென்ருர். இவ்வுவமையாற்றவானூக்கமிக்கதுணையுமக்களுயர்வொன்பதுபெறப்பட்டது. உயர்தல்பொருள்படைகளான்மிகுதல்.

பு. வெள்ளத்தனையமலர்நீட்டம் - நின்றநீரினளவாம் நீர்ப்

பூவின்காம்புகளினீளம், (அதுபோல) மாந்தர்தம்முள்ளத்த
னையதுயர்வு-மனிதருடைய தீரத்தளவினதாமுயர்ச்சி, எ-று.

வி. மலரினதுகாம்பைமலரொன்றது, ஆகுபெயர். நீர்நீண்
டளவுமதனுள் நின்றநீர்ப்பூக்களும் நீளுமென்பதுபட, வெள்
ளத்தனையவென்றார். இந்தவுவமையின்வலியினாலே ஊக்கம்
உயர்ந்தவளவும் மனிதருமுயர்வரொன்பதுபெறப்பட்டது. உ
யர்தல், பொருளாலுஞ் சேனையாலுமிகுதல்.

௬௱௯௰௬. உள்ளுவதெல்லாமுயர்வுள்ளன்மற்றது
தள்ளினுந்தள்ளாமைநீர்த்து.

In all that a king thinks of, let him think of his greatness; and if it should be thrust from him (by fate), it will have the nature of not being thrust from him.* - - - - - - 596

பரி. அரசராயினார்கருதுவதெல்லாந்தம்முயர்ச்சியையேகருதுகவவ்வுயர்ச்சிபால்வகையாற்கூடிற்றில்லையாயினுமக்கருத்துத்தள்ளாமைநீர்மையுடைத்தென்றவாறு.

வி. உம்மைதள்ளாமைபெரும்பான்மையாதல்விளக்கிற்று. தள்ளியவழியுந்தாளாண்மையிற்றவறின்றிநல்லோராற்பழிக்கப்படாமையிற்றள்ளர்வியற்கைத்தென்பதாம். மேலுள்ளத்தனையதுயர்வென்பதனையேவற்புறுத்தியவாறு.

பு. உள்ளுவதெல்லாமுயர்வுள்ளல்-(அரசராயினோர்) நினைப்
பதெல்லாம் தம் உயர்ச்சியையேநினைக்க, அது-அந்தவுயர்வு,
தள்ளினும்-விதிவசையாற்கூடாதாயினும், தள்ளாமைநீர்த்து-
தள்ளுபடாமைக்குணத்தையேயுடைத்து, எ-று.

வி. தள்ளினுமென்றவும்மை, பெரும்பாலுந்தள்ளாமையை
விளக்கிநின்றது. தள்ளியபோதுந் தாளாண்மையாகிய முயற்
சியிலே குற்றமின்றி நல்லோராற்பழிக்கப்படாமையால்தள்
ளாதகுணமுடைத்தென்பதாம். மேலேயுள்ளத்தனையதுயர்வெ
ன்பதனையே வலியுறுத்தியவாறாயிற்று.

---

* *i. e.* He will still be great, in the estimation of the wise, from the greatness of the efforts he has put forth to attain it.

௭. சிதைவிடத்தொல்காருரவோர்புதையம்பிற்
பட்டும்பாடூன்றுங்களிறு.

The strong-minded will not faint, even when all is lost; the elephant stands firm, even when surrounded by a shower* of arrows. - - - - - - - - - 597

பரி. களிறுபுதையாகியவம்பாற்புண்பட்டவிடத்துந்தளராதுதன்பெருமையைநிலைநிறுத்துமதுபோலவூக்கமுடையார்தாங்கருதியவுயர்ச்சிக்குச் சிதைவுவந்தவிடத்துந்தளராதுதம்பெருமையைநிலைநிறுத்துவரென்றவாறு.

வி. புதையம்புக்கட்டு. பன்மைகூறியவாறு. பட்டாலென்பதுபட்டெனத் திரிந்துநின்றது. ஒல்காமைகளிற்றுடனும்பாடூன்றுதலுரவோருடனுஞ்சென்றியைந்தன. தள்ளினுந்தவறுதுள்ளியதுமுடிப்பாரென்பதாம். இவைமூன்றுபாட்டானுமூக்கமுடையாரதுயர்ச்சிகூறப்பட்டது.

பு. புதையம்பிற்பட்டும்பாடூன்றுங்களிறு-ஆனையானது கட்டுக்களோடுகூடியஅம்பினாலேபுண்பட்டஇடத்திலும்-தளராமலே தன்பெருமையைநிலைநிறுத்தும், (அதுபோல) சிதைவிடத்தொல்காருரவோர் - தாம்நினைத்தவுயர்ச்சிக்கு அழிவுவந்தவிடத்துந்தளராமலே தமதுபெருமையைநிலைநிறுத்துவரூக்கமுடையவர், எ-று.

வி. புதை,அம்புக்கட்டு. அது,பன்மையைவிளக்கிநின்றது. புதையம்பிற்பட்டாலென்பது, பட்டு எனத்திரிந்துநின்றது. ஒல்காமை, யானையோடும், பாடூன்றுதல், உரவோரோடுஞ்சென்றியைந்து பொருள்படநின்றன. தள்ளினுந்தவறாமலேநினைத்ததுமுடிப்பரென்பதாம். இவை மூன்றுபாட்டாலும் ஊக்கமுடையவரது உயர்வுகூறப்பட்டது.

௮. உள்ளமிலாதவரெய்தாருலகத்து
வள்ளியமென்னுஞ்செருக்கு.

Those who have no (greatness of) mind, will not acquire the joy of saying in the world, "we have exercised liberality." - 598

பரி. ஊக்கமில்லாதவரசரிவ்வுலகத்தாருள்யாம்வண்மையுடையேமென்று தம்மைத்தாமதித்தலைப்பெறாரென்றவாறு.

---

* புதைஅம்பு, a bundle of arrows.

வி. ஊக்கமில்லையாகவேமுயற்சிபொருள்கொடைசெருக்கிவைமுறையே யிலவாமாகலிற்செருக்கெய்தாரென்றார். கொடையென்றியினுயவின்பந்தமக்கல் லதுபிறர்க்குப்புலனாகாமையிற்றன்மையாற்கூறப்பட்டது.

பு. உள்ளமிலாதவர்-மனத்தைரியமாகியவூக்கமில்லாதவர், உலகத்து-இவ்வுலகத்திலே, வள்ளியமென்னுஞ்செருக்கு-யாம் பிறருக்கு உதவிசெய்யத்தக்க ஈகையையுடையோமென்றுதம் மைத்தாமதித்திருக்குமதிப்பை, எய்தார்-அடையார், எ-று.

வி. ஊக்கம் இன்றாகவேமுயற்சியும் பொருளுங்கொடையுஞ் செருக்கும் முறையேயிலவாமாகலிற் செருக்கெய்தாரென்றார். கொடையினும் வெற்றியினுமுண்டாகுமின்பந் தமக்கன்றிப்பிறர்க்குத்தெரியப்படாமையால், தன்மையிடத் தாற்கூறப்பட்டது.

௯. பரியதுகூர்ங்கோட்டதாயினும்யானை
வெரூஉம்புலிதாக்குறின்.

Although the elephant has a large body, and a sharp tusk, yet it fears the attack of the tiger.* - - - - - 599

பரி. எல்லாவிலங்கினுந்தான்பேருடம்பினததுவேயுமன்றிக்கூரியகோட்டையுமுடையதாயினும்யானைதன்னைப்புலியெதிர்ப்படினதற்கஞ்சுமென்றவாறு.

வி. பேருடம்பான்வலிமிகுதிகூறப்பட்டது. புலியின்மிக்கமெய்வலியுங்கருவிச்சிறப்புமுடைத்தாயினும்யானையூக்கமின்மையானஃதுடையவதற்கஞ்சுமென்றவிதுபகைவரின்மிக்கமெய்வலியுங்கருவிச்சிறப்புமுடையராயினுமரசரூக்கமிலராயினஃதுடையவர்க்கஞ்சுவரொன்பதுதோன்றநின்றது. பிறிதுமொழிதல்.

பு. பரியது-எல்லாமிருகங்களிலுந் தான்பெரியதேகத்தையுடையது, (அதுவுமன்றி) கூர்ங்கோட்டது-கூர்மைபொருந்தியகொம்பையுமுடையது, ஆயினும்-அப்படியானபோதைக்கும், புலிதாக்குறின் - புலியெதிர்த்துமோதுமாயின், யானை வெரூஉம்-அதற்குயானையஞ்சும், எ-று.

* Because it is inferior to it in courage and daring. The inference is, that mental strength is superior to bodily strength.

வி. பெரியதேகத்தாற்புலியைக்காட்டிலுந்தேகபலமுங்கொம்புமுதலிய கருவிச்சிறப்புமுடையதாயினுந்தைரியமில்லாததினாலே யானையானது அந்தத்தைரியமுடையபுலிக்கு அஞ்சுமென்ற இக்குறள்பகைவரைக்காட்டிலுமிகுந்த சரீரபலமுஞ்சண்டைசெய்யுங் கருவிகளாகிய ஆயுதச்சிறப்புமுடையவராயினும் ஊக்கமில்லாதவரசர் ஊக்கமுடையவர்க்கு அஞ்சுவரென்பது தோன்றநிற்றலால் இது ஒட்டலங்காரம்.

௬௱. உரமொருவர்க்குள்ளவெறுக்கையஃதில்லார்
மரமக்களாதலேவேறு.

Energy is mental wealth ;* those men who are destitute of it are only trees in the form of men.† - - - - 600

பரி. ஒருவர்க்குத்திண்ணியவறிவாவதூக்கமிகுதியவ்வூக்கமிகுதியில்லாதார்மக்களாகார்மரங்களாவார்சாதிமரங்களோடிம்மரங்களிடைவேற்றுமைவடிவுமக்கள்வடிவேபிறிதில்லையென்றவாறு.

வி. உரமென்பதறிவாதலுரனென்னுந்தோட்டியானென்பதனானுமறிக.மரமென்பதுசாதியொருமை.மக்கட்குள்ளநல்லறிவுங்காரியமுயற்சியுமின்மைபற்றிமரமென்றுமரத்திற்குள்ளபயன்பாடின்மைபற்றிமக்களாதலேவேறென்றுங்கூறினார். பயன்பழமுதலியவுந்தேவர்கோட்டமில்லந்தேர்நாவாய்கட்குறுப்பாதன்முதலியவும். இவைமூன்றுபாட்டானுமூக்கமிலாதாரதிழிவுகூறப்பட்டது.

பு. ஒருவர்க்குள்ளவெறுக்கை - ஒருவர்க்கு மனத்தைரியமே, உரம்-அறிவாவது, அஃதில்லார் - அந்தவூக்கமில்லாதவர், மரம்-மரங்களாவர், மக்களாதலேவேறு-சாதிமரங்களோடிந்தமரங்களிடைவேற்றுமைமக்கள்வடிவேபிறிதில்லை, எ-று.

வி. உரம், அறிவு. மரம்என்றது, சாதியொருமை. மக்களுக்குள்ளநல்லறிவுங்காரிய முயற்சியுமில்லாததினாலே மரமென்றும், மரத்திற்குஉள்ளபயன்படுதலாகிய பயப்பாடில்லாததினாலே மக்களாதலேவேறென்றுங் கூறினார். பயன்படுதலாவது,

---

* Or inward wealth.

† They are mere wooden blocks.

கனிகாய்முதலியதருதலுந்தேவர்கோயில்வீடுகள்தேர்தோணி முதலியவற்றிற்கு அங்கமாதலுமுதலியவாம். இவைமூன்றுபாட்டாலும் ஊக்கமில்லாதவரிழிவுகூறப்பட்டது.

௬௰௧. அதிகாரம். CHAPTER LXI.

மடியின்மை. AGAINST IDLENESS.

பரி. அஃதாவதுகருதியனசெய்யுங்காற்சோம்புதலில்லாமை. ஊக்கமுடையார்க்கோரோவழிக்குணவயத்தான்மடிவருதலேநோக்கியிஃதூக்கமுடைமையின்பின்வைக்கப்பட்டது.

அதாவது, நினைத்தனசெய்யுங் காலைச்சோம்புதலில்லாமை. ஊக்கமுடையார்க்கு ஓரோரிடத்துக்குணவசத்தினாலே மடியுண்டாதலைநோக்கி, இது ஊக்கமுடைமையின் பின்வைக்கப்பட்டது.

க. குடியென்னுங்குன்றாவிளக்கமடியென்னு
மாசூரமாய்ந்துகெடும்.

By the darkness of idleness,* the indestructible lamp of family (rank) will go out and be extinguished. - - - 601

பரி. தான்பிறந்தகுடியாகிய நந்தாவிளக்கொருவன்மடியாகியவிருளடரநந்திப்போமென்றவாறு

வி உலகநடையுள்ளதுணையுமிடையறுதுதன்னுட்பிறந்தாரைவிளக்குதலிற் குடியைக்குன்றாவிளக்கமென்றுந்தாமதகுணத்தான்வருதலின்மடியைமாசென்றுமஃதேனையிருள்போலாதவ்விளக்கத்தைத்தானடர்ந்துமாய்க்குந்வலியுடைமையின்மாசூரமாய்ந்துகெடுமென்றுங்கூறினார். கெடுதல்பெயர்வழக்கமுமில்லையாதல்.

பு. குடியென்னுங்குன்றாவிளக்கம்-தான் பிறந்த குடியாகியநந்தாவிளக்கு, மடியென்னுமாசூர-ஒருவனுடையசோம்பலாகிய இருளடர, மாய்ந்துகெடும்-கெட்டுப்போம், எ-று.

---

* Or, by the approach of the darkness, &c.

வி. உலகநடையுள்ளளவும் இடையறாமலே தன்னுட்பிறந்தாரை விளக்குதலால் குடியைக்குன்றாவிளக்கமென்றும், தாமதகுணத்தினால் வருதலின் மடியைமாசென்றும், அது மற்றையிருள்போலாகாமல் அந்தவிளக்கத்தைத்தான் செறிந்து கெடுக்கும் வலியுடைமையால் மாசூரமாய்ந்துகெடுமென்றுங் கூறினார். இங்கேகெடுதல், பெயர்வழக்கமுமின்றாதல்.

உ. மடியைமடியாவொழுகல்குடியைக்
குடியாகவேண்டுபவர்.

Let those, who desire that their family may be illustrious, put away all idleness from their conduct. - - - - 602

பரி. தாம்பிறந்தகுடியைமேன்மேலுநற்குடியாகவேண்டுவார்மடியைமடியாகவேகருதிமுயற்சியோடொழுகுகவென்றவாறு.

வி. முயற்சியோடென்பது அவாய்நிலையான்வந்தது. நெருப்பிற்கொடியது பிறிதின்மைபற்றிநெருப்பைநெருப்பாகவேகருதுகவென்றற்போலமடியிற்றீயது பிறிதின்மைபற்றிப்பின்னுமப்பெயர்தன்னானேகூறினார். அங்ஙனங்கருதியதனைக்கடிந்துமுயன்றொழுகவேதாமுயர்வருயரவேகுடியுயருமென்பார்குடியைக்குடியாகவேண்டுபவரென்றார். அங்ஙனமொழுகாக்காற்குடியழியுமென்பதுகருத்து. இனிமடியாவென்பதனைவினையெச்சமாக்கிக்கெடுத்தொழுகுகவென்றுரைப்பாருமுளர்.

பு. குடியைக்குடியாகவேண்டுபவர்-தாம் பிறந்தகுடியை மேன்மேலும்நற்குடியாகவேண்டுவோர், மடியைமடியாவொழுகல்-சோம்பலைச்சோம்பலாகவே நினைத்துமுயற்சியோடொழுகுக, எ-று.

வி. முயற்சியோடென்பது, அவாய் நிலையால்வந்தது. நெருப்பிற்கொடியது வேறில்லாமைபற்றி நெருப்பை நெருப்பாகவே நினைக்கவென்றற்போல, மடியினிற்றீயது வேறில்லாமைபற்றிப் பின்னுமப்பெயரினாலேதானேகூறினார். அப்படிநினைந்து அதனை நீக்கி முயற்சிசெய்தொழுகவே தாமுயர்வர் உயரவே குடியுயருமென்பார், குடியைக்குடியாகவேண்டுபவர் என்றார். அப்படியொழுகாவிடிற், குடியழியுமென்

பதுகருத்து. இனி மடியாவென்பதனை, வினையெச்சமாக்கிக் கெடுத்து ஒழுருகவென்றுரைப்பாருமுண்டு.

௩. மடிமடிக்கொண்டொழுகும்பேதைபிறந்த
குடிமடியுந்தன்னினுமுந்து.

The (lustre of the) family of the ignorant man, who acts under the influence of destructive laziness,* will perish, even before he is dead. - - - - - - - - - 603

பரி. விடத்தருவதாயமடியைத்தன்னுள்ளேகொண்டொழுகுமறிவிலாதான் பிறந்தகுடியவன்றன்னினுமுந்துறவழியுமென்றவாறு.

வி. அழிவுதருவதனையகத்தேகொண்டொழுகுதலிற்பேதையென்றுமவனாற் புறந்தரப்படுவதாகலிற்குடிதன்னினுமுந்துறவழியுமென்றுங்கூறினார். ஆக்கத்திற்பிற்படினுமழிவின்முற்படுமென்பதாம்.

பு. மடிமடிக்கொண்டொழுகும்பேதை-(நீக்கிவிடத்தருவதாகிய) சோம்பலைத்தன்னுள்ளே வைத்தொழுகுகின்ற அறிவிலாதான், பிறந்த குடிமடியுந்தன்னினுமுந்து-பிறந்தகுடியவனினுமுந்திக்கெடும், எ-று.

வி. அழிவுதருவதைத்தன்னுட்கொண்டொழுகுதலாற்பேதையென்றும், அவனாலிரட்சிக்கப்படுவதாகலிற்றனனினுமுந்துறக்குடிமடியுமென்றுங் கூறினார். ஆக்கத்திலே பிற்படுமாயினும் அழிவிலே முற்படுமென்பதாம்.

௪. குடிமடிந்துகுற்றம்பெருகுமடிமடிந்து
மாண்டவுஞற்றிலவர்க்கு.

Family (greatness) will be destroyed, and faults will increase, in those men who give way to laziness,† and put forth no dignified exertions. - - - - - 604

பரி. மடியின்கண்ணேவீழ்தலாற்றிருந்தியமுயற்சியிலராயினார்க்குக்குடியுமடிந்துகுற்றமும்பல்குமென்றவாறு.

---

* Or, who takes laziness to his bosom.

† Or, who fall under the power of laziness.

வி. மடிந்தெனத்திரிந்துநின்றவினையெச்சமில்லவொன்றுங்குறிப்புவினைப் பெயர்கொண்டது. குற்றங்கள்முன்னர்க்கூறுப. இவைநான்குபாட்டானுமடியின் றீமைகூறப்பட்டது.

வி. மடிமடிந்து-சோம்பலிலே வீழ்ந்து, மாண்டவுஞற்றிலவர்க்கு-திருந்தியமுயற்சியில்லாதார்க்கு, குடிமடிந்து குற்றம்பெருகும்-குடியுங்கெட்டுக்குற்றமும்பெருகும், எ-று.

வி. மடியவென்பது, மடிந்தெனத்திரிந்து அவ்வினையெச்சம் இல்லவொன்றுங்குறிப்புவினைப்பெயர் கொண்டுமுடிந்தது. குற்றங்கள் பின்னர்க்கூறுவர். இவைநான்குபாட்டானும் மடியினது தீமைகூறப்பட்டது.

> ௫. நெடுநீர்மறவிமடிதுயினான்குங்
> கெடுநீரார்காமக்கலம்.

Procrastination, forgetfulness, idleness, and sleep, these four things, are the ornaments* desired by those whose nature leads them to destruction. - - - - - - - 605

பரி. மடியும்விரைந்துசெய்வனநீட்டித்துச்செய்யுமியல்புமறப்புந்துயிலுமாகியவிந்நான்குங்கெடுமியல்பினையுடையார்விரும்பியேறுமரக்கலமென்றவாறு.

வி. முன்னிற்கற்பாலனாயமடிசெய்யுளோக்கியிடைநின்றது. நெடுமையாகியகாலப்பண்பதற்கணிகழ்வதாயசெயன்மேனின்றது. காலநீட்டத்தையுடையசெயன்முதன்மூன்றுந்தாமதகுணத்திற்றோன்றியுடனிகழ்வனவாகலின்மடியோடொருங்கெண்ணப்பட்டன. இறக்குமியல்புநாருலத்தல் இவைதுன்புறுநீரார்க்கின்புறுத்துவனபோறலின்றுகாட்டியவர்விரும்பிச்கொண்டவழித்துன்பத்திடைவீழ்த்தலினாலந்தார்க்காக்கம்பயப்பதுபோன்றுகாட்டியவர்விரும்பியேறியவழிக்கடலிடைவீழ்க்குங்கலத்தினையொக்குமென்னுமுவமைக்குறிப்புக்காமக்கலமென்னுஞ்சொல்லாற்பெறப்பட்டது. இதற்குவிரும்பிப்பூணுமாபரணமென்றுரைப்பாருமுளர்.

பு. மடி-சோம்பலும், நெடுநீர் விரைந்துசெய்வனவற்றை நீட்டித்துச்செய்யுந்தன்மையும், மறவி-மறப்பும், துயில்-அதிகநித்திரையும், நான்கும்-ஆகியவிந்நான்கும், கெடுநீரார்காம

---

* Some give "ship," as the meaning of கலம்.

க்கலம்-இறக்குந்தன்மையையுடையோர் விரும்பியேறும் மரக் கலமாம், எ-று.

வி. முன்னிற்கவேண்டியமடி, செய்யுளைநோக்கி இடைநின்றது. நெடுமையாகிய காலப்பண்பு, அதில் நடப்பதாகியசெயலின்மேல்நின்றது. நெடுநீர், மறவி, துயில், என்பனமூன்றுந் தாமதகுணத்திற்றோன்றியுடனிகழ்வனவாதலால், மடியோடு ஒருமித்தெண்ணப்பட்டன. இறக்குந்தன்மை, வாழ்நாண்முடிவு, இவைதுன்புறுந்தன்மையோர்க்கு இன்பந்தருவனபோலநின்று தம்மைக்காட்டி அவர் விரும்பிக்கொண்டவழித்துன்பத்திலே வீழ்த்துதலால் வாழ்நாண்முடிந்தார்க்கு ஆக்கத்தைத்தருவதுபோலத்தன்னைக்காட்டி,யவர்விரும்பியேறியபோது கடலிடைக்கவிழ்க்குங் கலத்தையொக்குமென்னுமுவமைக் குறிப்புக்காமக்கலமென்ற சொல்லாற்றலாற்பெறப்பட்டது. இதற்கு, விரும்பிப்பூணும் ஆபரணமென்றுரைப்பாருமுளர்.

> ௬. படியுடையார்பற்றமைந்தக்கண்ணுமடியுடையார்
> மாண்பயனெய்தலரிது.

It is a rare thing for the idle, even if they receive the aid of kings,* to derive any great benefit from it. - - - 606

பரி. நிலமுழுதுமாண்டாரதுசெல்வந்தானேவந்தெய்தியவிடத்துமடியுடையாரதனான்மாண்டபயனையெய்துதலில்லையென்றவாறு.

வி. உம்மையெய்தாமைவிளக்கிநின்றது.மாண்பயன்பேரின்பம். அச்செல்வமழியாமற்காக்குமுயற்சியின்மையினழியுமழியவேதந்துன்பநீங்காதென்பதாம். இதற்குநிலமுழுதுமுடையவேந்தர்துணையாதல்கூடியவிடத்துமென் றுரைப்பாருமுளர்.

பு. படியுடையார்பற்றமைந்தக்கண்ணும் - நிலமுழுமையும் ஆண்டவரசருடைய செல்வந்தானேவந்து சேர்ந்தவிடத்தும்,

---

* Or, even though they should attain the wealth of those who are possessors of the world.

மடியுடையார்மாண்பயனெய்தலரிது - சோம்புதலுடையராயி ஞோர் அதிஞலே திருந்தியபயனைப்பெறுதலில்லை, எ-று.

வி. கண்ணுமென்றவும்மை, எய்தாமையைவிளக்கிநின்றது. திருந்தியபயன், பேரின்பம். அச்செல்வமழியாமற்காக்குமுய ற்சியில்லாததிஞலே யழியும் அழியவேதமது துன்பம் நீங்கா தென்பதாம். இதற்கு, நிலமுழுதுமுடைய வரசர் துணையாகக் கூடியவிடத்துமென்றுரைப்பாருமுண்டு.

எ. இடிபுரிந்தெள்ளுஞ்சொற்கேட்பர்மடிபுரிந்து
மாண்டவுஞற்றிலவர்.

Those who love idleness, and do not engage in dignified exertions, will hear the words of rebuke and reproach. - - 607

பரி. மடியைவிரும்புதலான்மாண்டமுயற்சியில்லாதார்தந்நட்டார்முன்கழு றுதலைமிகச்செய்ததஞற்பயன்காணுமையிற்பின்னிகழ்ந்துசொல்லுஞ்சொல்லைக் கேட்பரென்றவாறு.

வி. இடியென்னுமுதனிலைத்தொழிற்பெயரானட்டாரென்பதுபெற்றும். அவ ரிகழ்ச்சிசொல்லவேபிறரிகழ்ச்சிசொல்லாமையேமுடிந்தது. அவற்றிற்கெல் லாமாறுசொல்லுமாற்றலின்மையிற்கேட்பரென்ருர்.

பு. மடிபுரிந்து-சோம்பலை விரும்புதலாலே, மாண்டவுஞற் றிலவர்-சிறந்தமுயற்சியில்லாதவர், இடிபுரிந்து-(தங்கள் உற வின்முறையார்முன்) இடித்துறுதிகூறப்பட்டு, (அதஞற்பயன் காணுததிஞலே) எள்ளுஞ்சொற்கேட்பர்-பின்னிகழ்ந்துசொ ல்லுஞ்சொல்லையுங்கேட்பர், எ-று.

வி. இடித்தல், உறுதிகூறலால் அதுகூறுவோர் நட்டாரென் பதுபெறப்பட்டது. அவரிகழ்ந்து கூறுவரெனவே, பிறரிகழ் ந்துகூறுதல் கூறுதேயமைந்தது. அவற்றிற்கெல்லாமாறுத்த ரவுசொல்லச்சத்துவமிலராதலாற்கேட்பரென்ருர்.

௮. மடிமைகுடிமைக்கட்டங்கிற்றன்னொன்னார்க்
கடிமைபுகுத்திவிடும்.

If laziness take up its abode in a family, it will make them the slaves of their enemies. - - - - 608

பரி. மடியினதுதன்மைகுடிமையுடையான்கண்ணே தங்குமாயின அஃதவனைத்தன்பகைவர்க்கடியனாந்தன்மையையடைவித்துவிடுமென்றவாறு.

வி. மடியினதுதன்மைகாரியக்கேடு. குடிமைகுடிசெய்தற்றன்மை. அஃததனையுடையவரசன்மேற்றாதறன்னொன்னார்க்கென்றதனானறிக. அடியனாந்தன்மைதாழ்ந்துநின்றேவல்கேட்டல். இவைநான்குபாட்டானுமடிமைக்குற்றங்கள் கூறப்பட்டன.

பு. மடிமை-மடியினதுதன்மை, குடிமைக்கட்டங்கின்-குடிமையுடையவனிடத்துத்தங்குமாயின், தன்னொன்னார்க்கு-தன் பகைவர்க்கு, அடிமைபுகுத்திவிடும் - அடியனாந்தன்மையையடைவித்துவிடும், எ-று.

வி. மடியினதுதன்மை, காரியக்கேடு. குடிமை, குடிசெய்தலாகியதன்மை. அது அதனையுடைய அரசன்மேலாதலைத்தன்னொன்னார்க்கென்றதனாலறிக. அடியனாந்தன்மையாவது, வணங்கிநின்றேவல்செயல். இவைநான்குபாட்டாலும் மடிமையின் குற்றங்கள்கூறப்பட்டன.

௯. குடியாண்மையுள்வந்தகுற்றமொருவன்
மடியாண்மைமாற்றக்கெடும்.

When a man puts away idleness, the reproach which has come upon himself and his family will disappear. - - - 609

பரி. ஒருவன்றன்மடியாளுந்தன்மையையொழிக்கவேயவன்குடியுள்ளுமாண்மையுள்ளும்வந்தகுற்றங்கள்கெடுமென்றவாறு.

வி. மடியாளுந்தன்மைமடியுடைமைக்கேதுவாயதாமதகுணம். குடியாண்மையென்பதும்மைத்தொகை. அவற்றின்கண்வந்தகுற்றமென்றதுமடியானன்றி முன்னேபிறகாரணங்களானிகழ்ந்தவற்றை. அவையுமடியாண்மையைமாற்றிமுயற்சியுடையனாகநீங்குமென்பதாம்.

பு. ஒருவன்மடியாண்மைமாற்ற - ஒருவன்தனது சோம்பற் குணத்தையொழிக்கவே, குடியாண்மையுள்வந்த குற்றங்கெடும்-அவன் குடியுள்ளும் புருடத்தன்மையுள்ளும்வந்தகுற்றங் கெடும், எ-று.

வி. மடியாளுந்தன்மையாவது, மடியுடைமைக்கு ஏதுவாகிய தாமதகுணம். குடியாண்மை என்பது, உம்மைத்தொகை. அவற்றின்கண் வந்தகுற்றமென்பது, இந்தமடியினாலன்றிப் பிறகாரணங்களால் முன்புண்டாயினவற்றை. அப்படிப் பட்டவையும் மடியாண்மையைமாற்றி முயற்சியுடையவனாகவே நீங்குமென்பதாம்.

௰. மடியிலாமன்னவனெய்துமடியளந்தான்
தாஅயதெல்லாமொருங்கு.

The king who never gives way to idleness will obtain entire possession of (the space) passed over by him* who measured (the worlds) with his foot. - - - - - - - 610

பரி. தன்னடியளவானேயெல்லாவுலகையுமளந்தவிறைவன்கடந்தபரப்புமுழுதையுமடியிலாதவரசன்முறையானன்றியொருங்கேயெய்துமென்றவாறு.

வி. அடியளந்தானென்றதுவாளாதுபெயராய்நின்றது. எப்பொழுதும்வினையின்கண்ணேமுயறவினிடையீடின்றியெய்துமென்பதாம். தாவியதென்பதிடைக்குறைந்துநின்றது. இவையிரண்டுபாட்டானுமடியிலாதானெய்தும்பயன்கூறப்பட்டது.

பு. அடி-தன்னடியினதுஅளவினாலே, அளந்தான்-எல்லாவுலகங்களையுமளந்தகடவுள், தாயதெல்லாமொருங்கு - கடந்தவுலகவிரிவுமுழுதையும், மடியிலாமன்னவனெய்தும்- சோம்பலில்லாதஅரசன்வரிசையாலன்றியொருமிக்கப்பெறுவான், எ-று.

வி. அடியளந்தானென்றது, உலகப்பரப்புமுழுமையுங்காட்

* Vishnu; who, it is said, in three strides, passed over three worlds, viz., this world, the lower world, and the upper world.

டுதற்கோர்குறியாய் நின்றது. அவ்வுலகத்தையளந்தகாலத்தில் அது செயப்படுபொருளாகித்தான் வினைமுதலாய் நிற்றலின், எப்பொழுதும் வினையின்கண்ணே முயலுதலால் பூமிமுழுமையுமிடையறவுபடாமலேயெய்துவானென்பதாம். தாவியதென்பது, தாயதென இடைக்குறைந்துநின்றது. இவையிரண்டுபாட்டானும்மடியில்லாதவனடையும்பயன் கூறப்பட்டது.

௬௰௨. அதிகாரம். CHAPTER LXII.

ஆள்வினையுடைமை. ON MANLY EFFORT.

பரி. அஃதாவதிடைவிடாதமெய்முயற்சியுடையனாதல். அஃதாளும்வினையெனக்காரியத்தாற்கூறப்பட்டது. மடிகெடுத்தாலும்வினைமுயற்சியானன்றியாளப்படாமையினிதுமடியின்மையின்பின்வைக்கப்பட்டது.

அதாவது, இடைவிடாதமெய்முயற்சியுடையனாதல். அது ஆளும்வினையெனக்காரியத்தாற்கூறப்பட்டது. மடியைக்கெடுத்தாலும், வினைமுயற்சியாலன்றியாளப்படாமையால், இதுமடியின்பின்வைக்கப்பட்டது.

௧. அருமையுடைத்தென்றசாவாமைவேண்டும்
பெருமைமுயற்சிதரும்.

Yield not to the feebleness which says, "this is too difficult to be done;" labour will give the greatness (of mind) which is necessary (to do it). - - - - - - - 611

பரி. தமதுசிறுமைநோக்கிநாமிவ்வினைமுடித்தலருமையுடைத்தென்றுகருதித்தளராதொழிக. அதுமுடித்தற்கேற்றபெருமையைத்தமக்குமுயற்சியுண்டாக்குமென்றவாறு.

வி. சிறுமைநோக்கியென்பதுபெருமைதருமென்றதனானும்வினைமுடித்தலென்பததிகாரத்தானும்வருவிக்கப்பட்டன. விடாதுமுயலத்தாம்பெரியராவராகவேயரியனவுமெளிதின்முடியுமென்பதாம்.

பு. அருமையுடைத்தென்றசாவாமை-தமதுசிறுமைநோக்கி

நாமிந்தவினையைமுடிப்பது அருமையுடைத்தென்றெண்ணித் தளராதொழிக, வேண்டும்பெருமைமுயற்சிதரும்- அதுமுடித்தற்குவேண்டியபெருமையைத்தமக்குமுயற்சியுண்டாக்கும், எ-று.

வி. சிறுமைநோக்கியென்பது பெருமைதருமென்றதினாலும், வினைமுடித்தலென்பது அதிகாரத்தாலும், வருவிக்கப்பட்டன. அசா, தளர்வு. அசாவாமை, ஐயீற்றுஎதிர்மறைவியங்கோண்முற்றுவினை. விடாதுமுயலத்தாம்பெரியவராவர் ஆகவே அரியனவுமெளிதின்முடியுமென்பதாம்.

உ. வினைக்கண்வினைக்கெடலோம்பல்வினைக்குறை
தீர்ந்தாரிற்றீர்ந்தன்றுலகு.

Take care not to give up exertion in the midst of a work; the world will abandon those who abandon their unfinished work. - - - - - - - - - - 612

பரி. வினையாகியகுறையைச்செய்யாதுவிட்டாரையுலகம்விட்டதனாற்செய்யப்படும்வினைக்கட்டவிர்த்திருத்தலையொழிகவென்றவாறு.

வி. குறையின்றியமையாப்பொருள். அதுபயக்குறையில்லைத்தாம்வாழுநாளே என்பதனானுமறிக. இதற்குவினைசெய்யவேண்டுங்குறையைநீங்கினாரினீங்கிற்றென்றுரைப்பாருமுளர்.

பு. வினைக்குறைதீர்ந்தாரின்-வினையாகியகுறையைச்செய்யாதுவிட்டாரை, தீர்ந்தன்றுலகு - உலகம்விட்டதினாலே, வினைக்கண்-செய்யப்படும்வினையிலே, வினைக்கெடலோம்பல்-தவிர்ந்திருத்தலைப்பாதுகாக்க, எ-று.

வி. பாதுகாத்தலாவது, தவிராமலேவினையைச்செய்தல். குறை, இன்றியமையாப்பொருள். அதை, பயக்குறையில்லைத்தாம்வாழுநாளே என்பதனானுமறிக. பயக்குறை, பயனின்குறைவு. இதற்கு, வினைசெய்யவேண்டுங்குறையைநீங்கினாரினீங்கிற்றென்றுரைப்பாருமுண்டு.

௩. தாளாண்மையென்னுந்தகைமைக்கட்டங்கிற்றே
வேளாண்மையென்னுஞ்செருக்கு.

The lustre of munificence will dwell only with the dignity of laboriousness. - - - - - - - - 613

பரி. முயற்சியென்றுசொல்லப்படுகின்றவுயர்ந்தகுணத்தின்கண்ணேநிலைபெற்றதெல்லார்க்குமுபகாரஞ்செய்தலென்னுமேம்பாடென்றவாறு.

வி. பொருள்கைகூடுதலானுபகரித்தற்குரியார்முயற்சியுடையாரென்பாரவ்வக்குணங்கண்மேல்வைத்துமதுபிறர்மாட்டில்லையென்பார்தங்கிற்றென்றுங்கூறினார். இவைமூன்றுபாட்டானுமுயற்சியதுசிறப்புக்கூறப்பட்டது.

பு. தாளாண்மையென்னும்-முயற்சியென்றுசொல்லப்படுகின்ற, தகைமைக்கண்-உயர்ந்தகுணத்திலே, வேளாண்மையென்னுஞ்செருக்குத்தங்கிற்று - யாவர்க்குமுபகாரஞ்செய்தலென்னுமேம்பாடு நிலைபெற்றது, எ-று.

வி. பொருள்கைகூடுதலால் உபகாரஞ்செய்தற்குரியவர் முயற்சியுடையவரென்று சொல்லவந்தவர், அந்தந்தக்குணங்களின்மேல்வைத்தும், அது பிறரிடத்தில்லையென்றுசொல்லவந்தவர், தங்கிற்றென்றுங்கூறினார். இவைமூன்றுபாட்டாலுமுயற்சியின்சிறப்புக்கூறப்பட்டது.

௪. தாளாண்மையில்லாதான்வேளாண்மைபேடிகை
வாளாண்மைபோலக்கெடும்.

The liberality of him, who does not labour, will fail, like the manliness of a hermaphrodite,* who has a sword in its hand. 614

பரி. முயற்சியில்லாதவனுபகாரியாந்தன்மைபடைகண்டாலஞ்சும்பேடியதனிடைத்தன்கையில்வாளையாளுந்தற்றன்மைபோலவில்லையாமென்றவாறு.

வி. ஆணென்பதுமுதனிலைத்தொழிற்பெயர். பேடிவாளைப்பணிகோடற்கருத்துடையனாயினுமதுதன்னச்சத்தான்முடியாதவாறுபோலமுயற்சியில்லாதான்பலர்க்குமுபகரித்தற்கருத்துடையனாயினுமதுதன்வறுமையான்முடியாதென்ப

* Such a being will not be able to use a sword, through fear ; and the other will not be able to be liberal, through want of money.

தாம். வாளாண்மையென்பதற்குவாளாற்செய்யுமாண்மையென்றுரைப்பாருமுளர். இதனாலஃதில்லாதானதுகுற்றங்கூறப்பட்டது.

பு. தாளாண்மையில்லாதான் - முயற்சியில்லாதவனுடைய, வேளாண்மை - உபகரித்தற்குணமானது, பேடிகைவாளாண்மைபோலக்கெடும் - படையைக்கண்டஞ்சும்பேடியானவளைப் படையிலே தன்கையிலிருந்தவாளையாளுந்தன்மையில்லாதது போல இல்லையாம், எ-று,

வி. ஆள் என்பது, முதனிலைத்தொழிற்பெயர். பேடிவாளைப்பணிகொள்ளக்கருத்துடையவளாயினும் அது தன்பயத்தினாலே முடியாததுபோல, முயற்சியில்லாதவன்பலர்க்குமுபகரிக்கக்கருத்துடையவனாயினும் அது தன்வறுமையினாலேமுடியாதென்பதாம். வாளாண்மையென்பதற்கு, வாளாற்செய்யுமாண்மையென்றுரைப்பாருமுண்டு. இதினாலேமுயற்சியில்லாதவன்குற்றங்கூறப்பட்டது.

௫. இன்பம்விழையான்வினைவிழைவான்றன்கேளிர்
துன்பந்துடைத்தூன்றுந்தூண்.

He who desires not pleasure, but desires labour, will be a pillar to sustain his relations, wiping away their sorrows. - - 615

பரி. தனக்கின்பத்தைவிரும்பானாகிவினைமுடித்தலையேவிரும்புவான்றன்கேளிராகியபாரத்தின்றுன்பத்தினைநீக்கியதனைத்தாங்குந்தூணாமென்றவாறு.

வி. இஃதேகதேசவுருவகம். ஊன்றுமென்றதப்பொருட்டாதன்மதலையாமற்றதன்வீழூன்றியாங்கென்பதனானுமறிக. சுற்றத்தார்நட்டாரதுவறுமையுற்றிர்த்தவர்க்கேமஞ்செய்யுமாற்றலையுடையனாமெனவேதன்னைக்கூறவேண்டாவாயிற்று. காரியத்தைவிழையாதுகாரணத்தைவிழைவானெல்லாப்பயனுமெய்துமென்றதனாற்காரணத்தைவிழையாதுகாரியத்தைவிழைவான்யாதுமெய்தானென்பதுபெற்றும். இதனாலஃதுடையானதுநன்மைகூறப்பட்டது.

பு. இன்பம்விழையான் - தன்பொருட்டுஇன்பத்தைவிரும்பாதவனாகி, வினைவிழைவான் - வினைமுடித்தலையேவிரும்புகின்றவன், தன்கேளிர்-தன்சுற்றத்தாருடைய, துன்பந்துடைத்து-

துன்பத்தைப்போக்கி, ஊன்றுந்தூண்-அக்குடும்பபாரத்தை யூன்றிநின்றுதாங்குந்தூணாம், எ-று.

வி. இது, பாரத்தைவிட்டுத்தாங்குவோனைத்தூணென்றுஉருவகஞ்செய்ததினாலே ஏகதேசவுருவகம். ஊன்றுமென்றதந்குத் தாங்குமென்று பொருளுரைத்ததை, மதலையாமற்றதன் வீழூன்றியாங்குஎன்பதினாலுமறிக. மதலை, தூண். வீழ், ஆலம்விழுது. சுற்றத்தார் நட்பாளருடைய வறுமையையுந்தீர்த்து அவர்க்கின்பஞ்செய்யும்வலிமையையுடையவனாமெனவே, தன்னைக்கூறவேண்டாவாயிற்று. காரியத்தைவிரும்பாது காரணத்தைவிரும்புவானெல்லாப்பயனுமடைவானென்றதினாலே, காரணத்தைவிரும்பாது காரியத்தை விரும்புவோன் ஒன்றும்பெறானென்பது அருத்தாபத்தியாற் பெறப்பட்டது. இதினாலே யாள்வினையுடையானது நன்மைகூறப்பட்டது.

சா. முயற்சிதிருவினையாக்குமுயற்றின்மை
யின்மைபுகுத்திவிடும்.

Labour will produce wealth ; idleness* will bring poverty. 616

பரி. அரசர்மாட்டுளதாயமுயற்சியாவதுசெல்வத்தினைவளர்க்குமஃதில்லாமைவறுமையையடைவித்துவிடுமென்றவாறு.

வி. செல்வமறுவகையங்கங்கள்.வறுமையவற்றுல்வறியராதல். அதனையடைவிக்கவேபகைவரானழிவரென்பதுகருத்து.

பு. முயற்சிதிருவினையாக்கும் - அரசரிடத்து உண்டாகியமுயற்சியவர்செல்வத்தைவளர்க்கும், முயற்றின்மை-அம்முயற்சியில்லாதகுணம், இன்மைபுகுத்திவிடும்-வறுமையைநுழைவித்துவிடும், எ-று.

வி. செல்வம், அறுவகையங்கங்கள். வறுமை, அந்த அங்கங்கள் சிறுகுதல். சிறுகவே, பகைவரலழிவரென்பதுகருத்து.

---

* முயற்றின்மை, not labour.

எ. மடியுளாண்மாமுகடியென்பமடியிலான்
றாளுளாடாமரையினாள்.

They say that the black Múdévi (the goddess of adversity) dwells with laziness, and that Latchmi* (the goddess of prosperity) dwells with the labour of the industrious.† - - - - 617

பரி. கரியசேட்டையொருவன்மடியின்கண்ணேயுறையுந்திருமகண்மடியிலாதானதுமுயற்சிக்கண்ணேயுறையுமென்றுசொல்லுவரறிந்தோரென்றவாறு.

வி. பாவத்தின்கருமையதன்பயனாயமுகடிமேலேற்றப்பட்டது. மடியுமுயற்சியுமுடையார்மாட்டுநிலையையவைதம்மேல்வைத்துக்கூறினாரிவையிரண்டுபாட்டானுமவ்விருமைக்குமேதுகூறப்பட்டது.

பு. மடியுளாண்மாமுகடியென்ப-ஒருவனுடைய சோம்பலிலே தங்குவாள் கரியசேட்டையென்று சொல்லுவர், மடியிலான்-சோம்பலில்லாதவனுடைய, தாளுளாள்-முயற்சியிலிருப்பள், தாமரையினாளென்ப - திருமகளென்றுசொல்லுவர் அறிவுடையோர், எ-று.

வி. மா,கருமை. பாவத்தின்கருமையதன்பயனாகிய சேட்டைமேலேற்றப்பட்டது. மடியும் முயற்சியுமுடையார் நிலையை,மடிமுயற்சிகளின் மேலேற்றிக்கூறினார். முகடி, மூதேவி. தாள், தாளாண்மை. என்பஎன்றதைப்,பின்னுங்கூட்டுக.இவையிரண்டுபாட்டாலும் அவ்விருவகைக்குங் காரணங்கூறப்பட்டது.

அ. பொறியின்மையார்க்கும்பழியன்றறிவறிந்
தாள்வினையின்மைபழி.

Adverse fate is no disgrace to any one; to be without exertion, and without knowing what should be known, this is disgrace. 618

பரி. பயனைத்தருவதாயவிதியில்லாமையொருவற்குப்பழியாகாதறியவேண்டுமவற்றையறிந்துவினைசெய்யாமையேபழியாவதென்றவாறு.

---

* தாமரையினாள், the dweller in the lotus.

† மடியிலான், the not-idle man.

வி. அறியவேண்டுவனவலிமுதலாயின. தெய்வமியையாவழியாள்வினையுடைமையாற்பயனில்லையென்பாரைநோக்கியுலகம்பழிவினைபற்றிப்பழியாதின்மைக்குற்றமுடைமைபற்றியேபழிப்பதென்றார். அதனால்விடாதுமுயல்கவென்பது குறிப்பெச்சம்.

பு. பொறியின்மை - (பயனைத்தருவதாகிய) விதியின்மை, யார்க்கும்பழியன்று-யாவர்க்கும்பழியாகாது, அறிவறிந்து-அறியவேண்டுவனவற்றையறிந்து, ஆள்வினையின்மைபழி - முயற்சியைச்செய்யாமையே பழியாவது, எ-று.

வி. அறியவேண்டுவன, வலியறிதல் முதலாயின. விதியியையாதபோதுமுயற்சியாற்பயனில்லையென்பவரைநோக்கி, உலகம்பழவினைபற்றிப்பழியாதுமுயற்சிசெய்யாதகுற்றத்தைப்பற்றியே பழிப்பதென்றார். அதினாலே விடாது முயற்சியைச்செய்கவென்பது குறிப்பாகக்குறைந்துநின்ற குறிப்பெச்சம்.

௯. தெய்வத்தானாகாதெனினுமுயற்சிதன்
மெய்வருந்தக்கூலிதரும்.

Although it be said that, through fate, it cannot be attained; yet labour, with bodily exertion, will yield its reward.* - 619

பரி. முயன்றவினைபால்வகையாற்கருதியபயனைத்தாராதாயினுமுயற்சிதனக்கிடமாயவுடம்புவருந்தியவருத்தத்தின்கூலியளவுதரும்பாழாகாதென்றவாறு.

---

* The Scholiasts give the following meaning, "although through fate, (one's) labour should not prosper, yet by his bodily exertion, it will yield its reward." After all, according to Tiruvalluvar, labour is stronger than fate; and he, like many other fatalists, is forced to concede, that a man's fate is in his own hands, and that his fortune is shaped by his own industry or idleness. The Scholiasts say, "although a man may be hindered by fate once or twice, yet by many efforts he will succeed, spite of fate." Solomon says, "He becometh poor that dealeth with a slack hand; but the hand of the diligent maketh rich."

வி. தெய்வத்தானாயவழித்தன்னளவின்மிக்கபயனைத்தருமென்பதும்மையாற் பெற்றாம். இருவழியுமபாழாகவின்மையிற்றெய்வநோக்கியிராதுமுயல்கவென்பது கருத்து.

பு. தெய்வத்தான்-விதியினாலே, ஆகாதெனினும்-முயற்சி-தொடங்கியகருமம் பயனைக்கொடாதாயினும், தன்மெய்வருந்தக் கூலிதரும் - ஒருவன் தன்னுடம்புவருந்த முயற்சிசெய்தவருத்தத்தின் கூலியளவுதரும் வீணாகாது, எ-று.

வி. விதியினால் ஆனபோது தன்னளவிற்குமேற்பட்ட பயனைத்தருமென்பது, உம்மையாற்கொள்க. பயனையுங்கூலியையும் விலக்கமாட்டாதாதலால், விதியைநோக்கியிராமல் முயற்சியைச்செய்கவென்பது கருத்து.

௰. ஊழையுமுப்பக்கங்காண்பருலைவின்றித்
தாழாதுஞற்றுபவர்.

They who labour on, without fear and without fainting,* will see even fate (put) behind their back.† - - - - 620

பரி. பயனைவிலக்குவதாயவூழினையும்புறங்காண்பரவ்விலக்கிற்கிளையாதுவினையைத்தாழ்வறமுயல்வாரென்றவாறு.

வி. தாழ்வறுதல்சூழ்ச்சியினும்வலிமுதலியவறிதலினுஞ்செயலினுங்குற்றமறுதல். ஊழொருகாலாகவிருகாலாகவல்லதுவிலக்கலாகாமையிற்பலகான்முயல்வார்பயனெய்துவாரென்பாருப்பக்கங்காண்பரென்றார். தெய்வத்தானிடுக்கண்வரினுமுயற்சிவிடற்பாலதன்றென்பதிவைமூன்றுபாட்டானுங்கூறப்பட்டது.

பு. ஊழையும்-பயனைவிலக்குவதாகிய அவ்விதியையும், உப்பக்கங்காண்பர்-முதுகுகாட்டககாண்பர், உலைவின்றி-அதற்கு இளையாமல், தாழாதுஞற்றுபவர்-தாழ்ந்திராமலே குற்றமறக்கருமஞ்செய்பவர், எ-று.

வி. குற்றமறலாவது, தந்திரத்திலும் வலியறிதலிடனறித

* Or, without weariness and without defect.

† They will see fate show its back and run away, says the Commentator.

விஞுஞ்செயலிலும் பழுதிலாமை. விதியொருகாலிருகாலாகவல் லது விலக்காமையாற் பலகால் முயல்பவர் பயனெய்துவரென் றுசொல்லவந்தவர், உப்பக்கங்காண்பரென்றார். இப்பக்கம், முன்புறம். உப்பக்கம், பின்புறம். ஆதலால், முதுகின்மேல் நின்றது. விதியினாலே துன்பம்வரினும் முயற்சிவிடப்படாதெ ன்பது இவைமூன்றுபாட்டானுங்கூறப்பட்டது.

௬௰௩. அதிகாரம். CHAPTER LXIII.

இடுக்கணழியாமை.

ON PERSEVERANCE IN SPITE OF DIFFICULTIES.*

பரி. அஃதாவது. வினையின்கண்முயல்வான்தெய்வத்தானாகப்பொருளின் மையானாகமெய் வருத்தத்தானாகத்தனக்கிடுக்கண்வந்துழியதற்குமனங்கலங்கா மை. அதிகாரமுறைமையுமிதனானேவிளங்கும்.

அதாவது, வினையினிடத்து முயற்சிசெய்பவன் விதியினாலா வதுபொருளிலாமையினாலாவது சரீரப்பிரயாசத்தினாலாவது தனக்குத்துன்பம்வந்தபோது அதற்கு மனங்கலங்காமை. அதிகாரமுறையுமிதினாலே விளங்கும்.

க. இடுக்கண்வருங்கானகுகவதனை
யடுத்தூர்வதஃதொப்பதில்.

If troubles come, laugh; there is nothing like that, to press upon and drive away sorrow. - - - - - 621

பரி. ஒருவன்வினையாற்றனக்கிடுக்கண்வருமிடத்ததற்கழியாதுண்மகிழ்கவஃ விடுக்கண்ணைமேல்மேலடரவல்லதம்மகிழ்ச்சிபோல்வதுபிறிதில்லையாகலானெ ன்றவாறு.

---

* Or, against losing energy in difficulty: *i. e.* say the Scholiasts, "not suffering the mind to be disturbed and diverted from its purpose, by the troubles which may come, through fate, or want of property, or bodily suffering."

வி. வினையினிது முடிந்துழி நிகழற்பாலதாய மகிழ்ச்சியை யதற்கிடையே யிடுக்கண்வருவழிச் செய்யவே யவனழிவின்றி மனவெழுச்சியானதனைத் தள்ளியக்குறை முடிக்குமாற்றலுடையனுமாகலின தனையடுத்தூர்வதஃதொப்பதில்லென்றார்.

பு. இடுக்கண்வருங்கா னகுக - ஒருவன் விதியினாலே தனக்குத் துன்பம்வருமிடத்து அதற்குச்சலியாமல்மனமகிழ்ச்சியுடையனாகுக, அதனையடுத்தூர்வது - அத்துன்பத்தைய நுசரித்து நடப்பது, அஃதொப்பதில் - அம்மகிழ்ச்சிபோலவதுபிறிதில்லையாதலால், எ-று.

வி. அஃதென்னுஞ்சுட்டு, அடுத்தூர்வதென்பதைச்சுட்டி நிற்றலால், அடுத்தூர்வதாகியவஃதென அடையாக்குக. வினையினிது முடிந்தபோது வரவேண்டியதாகியமகிழ்ச்சியை இடையிலே துன்பம்வந்தபோது வருவிக்கவே அழிவில்லாமல் மனவூக்கத்தினாலேயத் துன்பத்தைத் தள்ளிக்குறையையுமுடிக்கவல்லவனாவானாதலால், அதனையடுத்தூர்வதஃதொப்பதில்லென்றார்.

௨. வெளளத்தனையவிடும்பையறிவுடையா
னுள்ளத்தினுள்ளக்கெடும்.

A flood of troubles will be overcome by the (courageous) thought which the minds of the wise will entertain, even in sorrow.* - - - - - - - - - 622

பரி. வெள்ளம்போலக்கரையிலவாயவிடும்பைகளெல்லாமறிவுடையவன்றன் னுள்ளத்தாலொன்றைநினைந்ததுணையானேகெடுமென்றவாறு.

வி. இடும்பையாவதுள்ளத்தோர்கோட்பாடேயன்றிப்பிறிதில்லையென்பதாஉமதுமாறுபடக்கொள்ளினீங்குமென்பதாஉமறிதல்வேண்டுதலினறிவுடையானென்றுமவ்வுபாயத்திண்மைதோன்றவுள்ளத்தினுள்ளவென்றுங்கூறினார். இவையிரண்டுபாட்டானுமுறையானேயிடுக்கணழியாமைக்குபாயங்கூறப்பட்டது.

பு. வெள்ளத்தனையவிடும்பை - வெள்ளம்போலக்கரையில

* It is said that, as sorrow is only an emotion of the mind, it will perish as soon as the mind yields itself to other thoughts, and so forgets it.

வாய்வருந் துன்பங்களெல்லாம், அறிவுடையானுள்ளத்தினுள்ளக்கெடும் - அறிவுடையவன்தன்தைரியத்தினாலே யொன்றை நினைத்தமாத்திரமேகெடும், எ-று.

வி. துன்பமாவது, மனக்கோட்பாடேயன்றி வேறில்லையென்பதும், அதைமாறுபடக்கொண்டால் நீங்குமென்பதும், அறிதல்வேண்டுதலின் அறிவுடையானென்றும், அந்தவுபாயத்தினெளிமை தோன்றவுள்ளத்தினுள்ளவென்றுங்கூறினார். இவையிரண்டுபாட்டாலும் விதியினாலாகிய துன்பத்திற்கு மனங்கலங்காமைக்கு உபாயங்கூறப்பட்டது.

௫. இடும்பைக்கிடும்பைபடுப்பரிடும்பைக்
கிடும்பைபடாஅதவர்.

They give sorrow to sorrow, who in sorrow do not suffer sorrow.* - - - - - - - - - 623

பரி. வினைசெய்யுங்காலதற்கிடையேவந்ததுன்பத்திற்குவருந்தாதவர்த்துன்பத்தனக்குத்தாந்துன்பம் விளைப்பரென்றவாறு.

வி. வருந்துதலிளைத்துவிடநினைத்தல். மனத்திட்பமுடையராய்விடாதுமுயலவேவினைமுற்றுப்பெற்றுப்பயன்படும்படவேயெல்லாவிடும்பையுமிலவாமாகவினிடும்பைக்கிடும்பைபடுப்பரென்றார். வருகின்றபாட்டிரண்டிற்குமிவ்வாறேகொள்க. சொற்பொருட்பின்வருநிலை.

பு. இடும்பைக்கிடும்பைபடாதவர் - வினைசெய்யும்போது வந்ததுன்பத்திற்குவருந்தாதவர், இடும்பைக்கிடும்பைபடுப்பர்-அத்துன்பத்திற்குத்தாமே துன்பஞ்செய்வர், எ-று.

வி. வருந்துதல்,இளைத்துவிடநினைத்தல்.மனத்திட்பமுடையராய்விடாது முயலவே வினைமுடிந்துபயன்படும். படவேயெல்லாத்துன்பங்களுமிலவாமாதலால் இடும்பைக்கிடும்பைபடுப்பரென்றார். வருகின்றபாட்டிரண்டிற்குமிவ்வாறேகொள்க. இது சொற்பொருட்பின்வருநிலையலங்காரம்.

---

* Such is the clink of the text.

௪. மடுத்தவாயெல்லாம்பகடன்னானுற்ற
இடுக்கணிடர்ப்பாடுடைத்து

Troubles will vanish* before the man, who (struggles against difficulties) as a buffalo (drawing a cart) through deep mire. 624

பரி. விலங்கியவிடங்களெல்லாவற்றுஞ்சகடமீர்க்கும்பகடுபோலவினையை யெடுத்துக்கொண்டுய்க்கவல்லானைவந்துற்றவிடுக்கண்டானேயிடர்ப்படுதலையுடைத்தென்றவாறு.

வி. மடுத்தவாயெல்லாமென்பதுபொதுப்படநின்றமையிற்சகடத்துக்களற்றுநிலமுதலாகவும்வினைக்கிடையூறுகளாகவுங்கொள்க. பகடுமருங்கொற்றியுமூக்கூன்றியுந்தாடவழ்ந்துமரிதினுய்க்குமாறுபோலத்தன்மெய்வருத்தநோக்காதுமுயன்றுய்ப்பானென்பார்பகடன்னானென்றார்.

பு. மடுத்தவாயெல்லாம்-முரணியவெல்லாவிடங்களிலும், பகடன்னான் - வண்டிவிழுக்குமெருமைக்கடாவைப்போலவினையையெடுத்துக்கொண்டுசெலுத்தவல்லவனை, உற்றவிடுக்கண்-பொருந்தியதுன்பமானது, இடர்ப்பாடுடைத்து-தானேதுன்பப்படுதலையுடைத்து, எ-று.

வி. மடுத்தவாயெல்லாமென்பதுபொதுப்படநின்றதினாலே வண்டிலுக்குச்சேற்றுநிலமுதலாகவும், வினைக்கு இடையூறுகளாகவுங்கொள்க. எருமைக்கடாவானது வண்டில்தடைப்பட்டவிடத்தில் நெருங்கிநின்றும் நிலத்திலேமூக்கையூன்றியுங்காலாலேதவழ்ந்து மரிதாகத்தடையறச்செலுத்துவதுபோலச்சரீரப்பிரயாசத்தைப்பாராமல் வினையைமுயன்று செலுத்துவானென்றுசொல்லவந்தவர், பகடன்னானென்றார்.

௫. அடுக்கிவரினுமழிவிலானுற்ற
இடுக்கணிடுக்கட்படும்.

The troubles of that man will be troubled (and disappear), who however thickly they may come upon him, does not abandon (his purpose). - - - - - - - - - 625

பரி. இடைவிடாதுமேன்மேல்வந்தனவாயினுந்தன்னுள்ளக்கோட்பாடுவிடாதானையுற்றவிடுக்கண்டாமிடுக்கணிலேபட்டுப்போமென்றவாறு.

---

* Lit: His trouble will be troubled.

வி, ஒன்றேபலகால்வருதலும்வேறுபட்டனவிராய்வருதலுமடங்கவடுக்கிவரி னுமென்றார். அழிவென்னுங்காரணப்பெயர்காரியத்தின்மேனின்றது. இவைமூ ன்றுபாட்டானுந்தெய்வத்தானுயதற்கழியாமைகூறப்பட்டது.

பு. அடுக்கிவரினும் - இடையாமலேயொன்றின்மேலொன் றாகவந்தனவாயினும், அழிவிலானுற்ற - தான்கொண்டமனக் கோட்பாட்டைவிடாதவனைப்பொருந்திய, இடுக்கணிடுக்கட்ப டும்- துன்பங்களேதுன்பப்பட்டுப்போம், எ-று.

வி. ஒருதுன்பமேபலகால்வருதலும் பலதுன்பங்களொரு கால்வருதலுமடங்க, அடுக்கிவரினுமென்றார். அழிவென்னுங் காரணப்பெயர், மனக்கோட்பாடென்னுங்காரியத்தின்மேல்நி ன்றது. இவை மூன்றுபாட்டாலும் விதியினாலாகியதற்கு அழி யாமைகூறப்பட்டது.

௬. அற்றேமென்றல்லற்படுபவோபெற்றேமென்
றோம்புதறேற்றாதவர்.

Will those men ever cry out in sorrow, "we are destitute," who, (in their prosperity,) give not way to (undue desire) to keep their wealth, saying "we are rich?"* - - - - 626

பரி. வறுமைக்காலத்தியாம்வறியமாயினமென்றுமனத்தாற்றுயருழப்பரோ செல்வக்காலத்திதுபெற்றேமென்றிவறுதலையறியாதாரென்றவாறு.

வி. பெறறவழிவறுமைநோக்கியற்றவழியும்பகுதிவிடாதாகவினல்லற்பாடில் லையாயிற்று. இதனுற்பொருளின்மையானுயதற்கழியாமையுமதற்குபாயமுங் கூறப்பட்டன.

பு. அற்றேமென்றல்லற்படுபவோ-வறுமைக்காலத்திலேயா மெளியமாயினேமென்றுமனத்தால்துயரப்படுவரோ, பெற் றேமென்று - செல்வக்காலத்திலேயிதுபெற்றோமென்று, ஓம் புதறேற்றாதவர்-ஆசைப்படுதலையறியாதவர், எ-று.

வி. பெற்றகாலத்திலதன்மேலாசைவையாததைக்குறித்து அவனைச்சூழ்ந்தசேனைபரிவாரங்கள் அவனைவிட்டுநீங்காதாத

---

* Lit: "we possess."

லால், அல்லற்படுதலில்லையாயிற்று. இதனாற்பொருளின்மையாலாகியதற்கு அழியாமையும்அதற்குஉபாயமுங்கூறப்பட்டன.

எ. இலக்கமுடம்பிடும்பைக்கென்றுகலக்கத்தைக்
கையாறாக்கொள்ளாதாமேல்.

The great will not regard trouble as trouble, knowing that the body is the butt of trouble. - - - - - - 627

பரி. நாற்கதியினுமுள்ளவுடம்புகளிடும்பையென்னும்வாளுக்கிலக்கென்றுதெளிந்துதம்மேல்வந்தவிடும்பையையிடும்பையாகக்கொள்ளாரறிவுடையாரென்றவாறு.

வி. ஏகதேசவுருவகம். உடம்புசாதிப்பெயர். கலக்கமென்னுங்காரியப்பெயர்காரணத்தின்மேனின்றது. கையாறென்பதொருசொல். இதற்கொழுக்கநெறியென்றுரைப்பாருமுளர். இயல்பாகக்கொள்வரென்பதுகுறிப்பெச்சம்.

பு. இலக்கமுடம்பிடும்பைக்கென்று - நால்வகைக்கதியினுமுள்ளதேகங்கள் துன்பமென்கிறவாளுக்கு இலக்கென்றுதெளிந்து, கலக்கத்தை-தம்மேல்வந்ததுன்பத்தை, கையாறு-துன்பமாக, கொள்ளாதாமேல்-கொள்ளாராமேன்மக்கள், எ-று.

வி. உடம்பு, சாதியொருமை. கலக்கமென்னுங்காரியப்பெயர்அதற்குஏதுவாகியகாரணத்தின்மேல்நின்றது. மேல், மேன்மக்கள். இது, சொல்நோக்கம்பற்றித்திணைவழுவமைதியாய்நின்றது. கையாறு, துன்பம். இனிக்கையென்பதையொழுக்கமெனக்கொண்டு கையாறென்பதையொழுக்கநெறியென்றுரைப்பாருமுண்டு. துன்பத்தைத்துன்பமாகக்கொள்ளாரெனவே, சுபாவமாகக்கொள்வரென்பது குறிப்பெச்சமாகக்குறைந்துநின்றது.

அ. இன்பம்விழையானிடும்பையியல்பென்பான்
றுன்பமுறுதலிலன்.

That man never experiences sorrow, who does not seek for pleasure, and who considers trouble to be natural (to man). 628

பரி. தன்னுடம்பிற்கின்பமாயவற்றைவிரும்பாதேவினையாலிடும்பையெய்துதலியல்பென்றுதெளிந்திருப்பான்றன்முயற்சியாற்றுன்பமுறானென்றவாறு.

வி· இன்பத்தைவிழையினு மிடும்பையியல்பென்றதுகாக்கக்கருதினுந்துன்பம்விளைதலினிவ்விரண்டுஞ்செய்யாதானைத்துன்பமுறுதலிலனென்றார்.

பு. இன்பம்விழையான் - தன்உடம்பிற்குஇன்பமாகியவற்றைவிரும்பாதவனாகி, இடும்பையியல்பென்பான் - வினையினாலேதுன்பமடைதல்சுபாவமென்றுதெரிந்திருப்பவன், துன்பமுறுதலிலன் - தன்முயற்சியினாலேதுன்பப்படான், எ-று.

வி. இன்பத்தைவிரும்பினும் இடும்பை இயல்பென்றதுகாக்கக்குறித்தாலுந்துன்பம்விளைதலால், இவ்விரண்டுஞ்செய்யாதானைத்துன்பமுறுதலிலனென்றார்.

௯. இன்பத்துளின்பம்விழையாதான் றுன்பத்துட்
டுன்பமுறுதலிலன்.

He does not suffer sorrow in sorrow, who does not look for pleasure in pleasure. - - - - - - - 629

பரி. வினையாற்றனக்கின்பம்வந்துழியதனையநுபவியாநின்றேமனத்தான்விரும்பாதான்றுன்பம்வந்துழியுமதனையநுபவியாநின்றுமனத்தான் வருந்தானென்றவாறு.

வி. துன்பமுயற்சியான்வருமிடுக்கண். இரண்டையுமொருதன்மையாகக்கோடலிற்பயன்கூறியிலையாயின.

பு. இன்பத்துள் - முயற்சியினாலேதனக்கின்பம்வந்தபோது, இன்பம்விழையாதான் - அதையநுபவித்துநின்றேமனத்தால்விரும்பாதவன், துன்பத்துள் - துன்பம்வந்தபோதும், துன்பமுறுதலிலன் - அதையுமநுபவித்துநின்றேமனத்தால்வருந்தான், எ-று.

வி. துன்பம், முயற்சியால்வருந்துன்பம். இன்பதுன்பமிரண்டையுஞ்சமமாகக்கொள்ளலாற்,பயன்களின்வேறுபாடில்லையாயின.

௬௱௩௰

மு. இன்னாமையின்பமெனக்கொளினாகுந்த
னொன்னார்விழையுஞ்சிறப்பு.

The elevation, which his enemies desire, will be gained by him, who regards trouble as pleasure. - - - - - 630

பரி. ஒருவன்வினைசெய்யுமிடத்துமுயற்சியான்வருந்துன்பந்தன்னையே தனக்கின்பமாகக்கற்பித்துக்கொள்ளுவானாயினதனாற்றன் பகைவர்நன்குமதித்தற்கேதுவாயவுயர்ச்சியுண்டாமென்றவாறு.

வி. துன்பந்தானுமுயிர்க்கியல்பன்றிக்கணிதமாயமனத்திடைநிகழ்வதோர் கோட்பாடாகலினதனைமாறுபடக்கொள்ளவேயதற்கழிவின்றிமனமகிழ்ச்சியுடையனாயதனாற்றொடங்கியவினைமுடித்தேவிடுமாற்றலுடையனாமென்பதுகருத்து. இவைநான்குபாட்டானுமெய்வருத்தத்தானாயதற்கழியாமையுமதற்குபாயமுங்கூறப்பட்டன.

பு. இன்னாமை-ஒருவன்வினைசெய்யும்போதுமுயற்சியால்வருந்துன்பத்தையே, இன்பமெனக்கொளின் - தனக்கு இன்பமாகக்கற்பித்துக்கொள்ளுவானாயின், தன்னொன்னார்விழையுஞ் சிறப்பாகும் - அதினாலேதன்பகைவர்நன்குமதித்தற்குக்காரணமாகியவுயர்ச்சியுண்டாம், எ-று.

வி. துன்பந்தானுமுயிர்க்கியல்பாகாதுஎண்ணப்படுவதாகியமனதிலேதோன்றப்படுவதோர் கோட்பாடாதலின், அதனை மாறிக்கொள்ளவேயதனாலழிவின்றி மனமகிழ்ச்சியுடையவனாகியம்மகிழ்ச்சியால் தொடங்கியவினைமுடித்தேவிடும் வல்லமையுடையவனாவனென்பதுகருத்து. இவைநான்குபாட்டாலுஞ் சரீரப்பிரயாசத்தாலாகியதற்கு அழியாமையும் அதற்கு உபாயமுங்கூறப்பட்டன.

அரசியன்முற்றிற்று.



INDEX VERBORUM.

அகம், 271, 277, 298, 329.
அகலல், 478.
அகற்றல், 372.
அசாவாமை, 611.
அச்சம், 501, 534.
அச்சு, 475.
அஞ்சல், 244, 271, 325, 366, 382, 428, 451, 464, 497, 500, 585.
அடல், 343, 493, 495, 500.
அடி, 544, 610.
அடிமை, 608.
அடுதல், 567.
அடுத்தல், 525, 621, 625.
அணிகலம், 575.
அணுகுதல், 255.
அதர், 594.
அதிர்தல், 429.
அந்தணர், 543.
அமர்தல், 529.
அமைச்சு, 381.
அமைதல், 298, 340, 474, 580, 606.
அம்பு, 597.
அரங்கு, 401.
அரசன், 381.
அரசு, 384, 385, 554.
அரண், 381, 421, 492, 534
அருமை, 248, 377, 419, 413, 462, 483, 489, 499, 503, 565, 606, 611.
அருள், 241, 242, 243, 244, 245, 246, 247, 248, 249, 251, 252, 254, 285.
அலைத்தல், 551.
அல்லவை, 384.
அல்லல், 245, 254, 289, 299, 300, 379, 460, 556, 593, 626.
அல், 246, 254, 266, 274, 337, 626.
அவம், 262, 366.
அவன், 314, 320.
அவர், 361, 364, 365, 366, 367, 368, 369, 370, 513.
அவி, 259, 390.
அவிதல், 420.
அவை, 332.
அழிதல், 280, 359, 421, 461, 498.
அழிவு, 625.
அழுதல், 556.
அளத்தல், 610.
அளவு, 283, 287, 288, 289, 474, 477, 479, 523, 574.
அளறு, 255.
அளாவுதல், 523.
அளி, 390.
அளித்தல், 387, 557.
அறம், 249, 288, 296, 297, 321, 366, 384, 441, 501, 543.
அறிதல், 272, 288, 293, 318, 337, 399, 428, 440, 441, 469, 472, 473, 474, 477, 479, 494, 507, 515, 518, 582, 587.
அறிவு, 287, 315, 331, 355, 358, 372, 373, 382, 421, 422, 423, 424, 426, 427, 430, 452, 454, 463, 472, 507, 513, 532, 618.
அறுத்தல், 248, 249, 268, 275, 311, 312, 345, 346, 349, 350, 365, 367, 369, 465, 502, 506, 522.
அறுப்பு, 522.
அற்கல், 333.
அற்றம், 421, 434.
அற்று, 249, 261, 273, 274, 307, 332, 338, 365, 401, 402, 407, 415, 423, 452.
அனைத்தல், 387, 394, 396, 409, 416.
அனைய, 277, 310, 406, 410, 576.
அனைவர், 384.
அன்ன, 296, 308, 363, 527, 565.
அன்பு, 285, 513.
அன்று, 379, 437, 438, 546.

ஆ, 560.
ஆக்கம், 283, 328, 457, 463, 492, 522, 527, 562, 593, 594.
ஆக்கல், 264, 616.
ஆங்கு, 247, 252, 265, 279, 289, 333, 474, 487, 523, 534, 566.
ஆசு, 503.
ஆசை, 266.
ஆடல், 278, 345, 401, 405.
ஆட்சி, 252.
ஆட்டு, 332.
ஆண்மை, 287, 480, 609, 614.
ஆதல், 248, 262, 270, 273, 283, 285, 315, 317, 328, 344, 372, 452, 461, 478, 630.
ஆதி, 543.
ஆயிரம், 259.
ஆய்தல், 517.
ஆராய்தல், 512, 584, 586.
ஆர்தல், 370.
ஆழ்தல், 500.
ஆளுதல், 242, 244, 245, 251, 331, 383, 447, 511, 589.
ஆள், 500.
ஆள்வினை, 618.
ஆறு, 242, 324, 367, 397, 468, 477, 478.
ஆற்றல், 269, 286, 287, 297, 367, 409, 482, 493, 515, 525, 556, 568, 578.
ஆன்றல், 416.
ஆன்றோர், 413.

இகல், 481.
இகழ்ச்சி, 539.
இகழ்தல், 538.
இடம், 250, 292, 301, 302, 422, 484, 490, 493, 494, 497, 597.
இடர், 624.
இடி, 607.
இடித்தல், 447, 448.
இடுக்கண், 621, 624, 625.
இடும்பை, 347, 508, 510, 622, 623, 627, 628.
இடை, 369, 473.
இணர், 308.
இயலல், 342.
இயல்பு, 333, 344, 382, 452, 545, 572, 628.
இயற்கை, 370, 374.
இயற்றல், 385.
இயைதல், 489, 522, 573, 576.
இரங்கல், 535.
இரண்டு, 581.
இருள், 243, 352.
இலக்கம், 627.
இலங்குதல், 410.
இல், 243, 244, 245, 247, 252, 256, 262, 270, 273, 276, 287, 291, 296, 300, 302, 320, 336, 628, 629.
இவறல், 432.
இழத்தல், 372, 463, 494, 554, 593.
இழுக்கல், 384, 415, 467, 536.
இழுக்கு, 535.
இழைத்தல், 417, 530.
இளிவு, 464.
இருத்தல், 340, 403, 530.
இறத்தல், 283, 310, 432, 476, 531, 586.
இறுதல், 488.
இறை, 388, 432, 436, 541, 547, 564.
இனம், 306, 446, 451, 452, 453, 454, 455, 456, 457, 458, 459, 460 462, 568.
இனிமை, 327, 387.
இன், 525.
இன்பம், 352, 369, 399, 501, 615, 628, 629, 630.
இன்மை, 616.
இன்று, 243, 308, 311, 312, 313, 314, 316, 318, 319, 408, 453, 564, 565.
இன்னாமை, 318, 557, 558, 630.
இன்னா, 336.

ஈகை, 382.
ஈட்டல், 385.
ஈண்டல், 417.
ஈண்டு, 265, 342, 356, 363, 369.
ஈதல், 387, 412, 477, 552.
ஈர்தல், 334.
ஈனல், 311, 361.

உ, 620.
உஞற்றல், 620.
உஞற்று, 604, 607, 609.
உடம்பு, 330, 338, 340, 345, 627.
உடல், 253, 588.
உடன், 309.

உடைமை, 262, 277, 285, 336, 344, 353, 389, 390, 393, 395, 398, 413, 415, 441, 458, 459, 463, 473, 486, 558, 565, 578, 591, 592, 593, 624.
உண்டு, 315, 342, 368, 469, 571.
உண்ணல், 251, 253, 255, 257, 258, 259, 322, 326, 527, 580.
உண்மை, 373, 571, 572.
உணர்தல், 257, 316, 331, 334, 351, 354, 357, 359, 417, 420, 516, 589.
உணவு, 412, 413, 453.
உயர்தல், 272, 346.
உயர்வு, 595, 596.
உயல், 437.
உயிர், 244, 258, 259, 260, 261, 268, 318, 322, 326, 330, 338, 457, 476, 501, 557.
உயிர்நிலை, 255, 290.
உய்த்தல், 313, 376, 422, 440.
உரம், 600.
உரவு, 597.
உரிமை, 518, 578.
உரு, 261.
உருவம், 273, 585.
உலகம், உலகு. } 243, 247, 256, 280, 290, 294, 336, 346, 374, 389, 399, 425, 426, 470, 520, 542, 544, 572, 612.
உலைவு. 620.
உவகை, 304, 432, 531.
உவத்தல், 264, 394.
உழி, 415.
உழை, 530, 594.
உள், 241, 255, 266, 294, 304, 336, 357, 381, 406, 421, 479, 487.
உள்ளம், 282, 294, 309, 357, 438, 591, 595, 596, 598, 600, 622.
உள்ளல், 282, 294, 304, 309, 357, 394, 454, 539, 540, 572, 596, 622
உறங்குதல், 339
உறல், 261, 345, 372, 378, 380, 399, 402, 414, 442, 510, 512, 535, 539, 599, 624, 625, 628, 629.
உறு, 498.
உறுகண், 261.
உறை, 564, 581.
உறைதல், 426, 499, 559, 563.
உகுதல், 585.

ஊக்கம், 382, 463, 473, 486, 498, 591, 593, 594.
ஊக்காமை, 253.
ஊட்டல், 378.
ஊதியம், 449, 461.
ஊரல், 601.
ஊர், 397.
ஊர்தல், 621.
ஊழ், 371, 372, 380, 620.
ஊறல், 396.
ஊறு, 535.
ஊற்றுக்கோல், 415.
ஊன், 251, 252, 254, 255, 256, 258.
ஊன்றல், 597, 615.

எங்ஙனம், 251.
எச்சம், 456.
எஞ்சல், 382, 497.
எஞ்ஞான்றும், 317, 361, 439, 582.
எண், 392.
எண்ணம், 494.
எண்ணல், 264, 438, 462, 467, 470, 494, 497, 530, 568, 628, 630.
எதிர், 429.
எய்தல், 265, 296, 309, 354, 489, 516, 540, 598, 606, 610.
எரி, 308, 435.
எல்லாம், 260, 268, 294, 296, 299, 309, 320, 321, 322, 443, 457.
எவன், 272, 345, 379, 574.
எழில், 407.
எழுதல், 465.
எழுத்து, 392.
எளிமை, 386, 424, 540, 548.
எள்ளல், 470, 491, 607.
எள்ளாமை, 281.
எற்று, 275.
எனல், 244, 246, 254, 256, 291, 292, 309, 321.
எனை, 514.
எனைத்து, 281, 300, 316, 416.
என். 291, 301, 306, 316, 318, 346

ஏக்கறுதல், 395.
ஏதம், 275, 432, 440, 464.
ஏமம், 306.
ஏமருதல், 448.
ஏமாப்பு, 398, 458, 459.
ஏவல், 515.

ஏழு, 538.
ஏறு, 381.
ஏறுதல், 476.
ஏனை, 268, 392, 410, 505.

ஐ, 510.
ஐந்து, 271, 343, 354.
ஐயம், 353, 587.

ஒடுக்கம், 486.
ஒட்டல், 482, 499.
ஒட்பம், 404, 425.
ஒத்தல், 363, 413, 490, 536, 561.
ஒப்பு, 621.
ஒப்புரவு, 480.
ஒருகால், 248.
ஒருங்கு, 343, 554, 610.
ஒருவந்தம், 563, 593.
ஒருவுதல், 422.
ஒல்கல், 597.
ஒல்லல், 472.
ஒல்லை, 563, 564.
ஒழித்தல், 280, 338
ஒழுகல், 246, 286, 278, 294, 326, 359, 444, 445, 446, 474, 482, 524, 551, 563, 602, 603.
ஒழுக்கம், 271, 275, 415.
ஒளி, 267, 390, 556.
ஒள்ளியவன், 487.
ஒறுத்தல், 314, 550, 561, 578.
ஒற்கம், 414.
ஒற்றல், 583, 585.
ஒற்று, 581, 583, 584, 585, 586, 587, 588, 589, 590.
ஒன்னார், 261, 608, 630.
ஒன்று, 253, 257, 259, 291, 300, 323, 357.

ஓச்சல், 544, 515, 562
ஓடல், 496.
ஓடு, 295.
ஓம்பல், 244, 322, 830, 506, 611, 626.
ஓர்தல், 357, 541, 548.

கசடு, 391.
கடல், 496.
கடிதல், 549.
கடுமை, 386, 562, 564, 566, 567, 570.
கடுத்தல். 585.
கடை, 318, 328, 331, 372, 395, 487.
கட்டளைக்கல், 505.
கட்டல், 550.
கணை, 279.
கண். 241, 284, 285, 286, 287, 312, 316, 349, 354, 392, 393, 398, 408, 445, 473, 500, 573.
கண்ணீர், 555.
கண்ணோடல், 576, 579.
கண்ணோட்டம், 571, 572, 573, 574, 575, 577, 578.
கந்து, 507.
கயறு, 482.
கரவு, 288.
கரி, 245.
கருதல், 285, 337, 463, 844, 485.
கருமம், 266, 467, 505, 578.
கருமை, 277.
கருவி, 421, 483, 537.
கரைதல், 527.
கலக்கம், 627.
கலங்கல், 485.
கலம், 605.
கல்வி, 383, 398, 400.
கவிகை, 389.
கழிதல், 378, 404.
களர், 406, 500.
களவு, 283, 284, 286, 287, 288, 289, 290.
களிறு, 500, 597.
களை, 550.
கள்ளம், 282.
கள்ளாமை, 281.
கள்ளல், 282, 290.
கறுத்தல், 312.
கற்றல், 355, 373, 391, 393, 395, 397, 398, 399, 402, 403, 404, 409, 503, 570.
கன்றுதல், 284, 286.

காக்கை, 481, 527.
காட்சி, 258, 352, 386.
காட்டல், 334, 454.
காணுதல், 249, 277, 298, 300, 319, 355, 356, 358, 379, 399, 423, 424, 436.
காதல், 284, 286, 440, 507.
காத்தல், 281, 301, 305, 385, 421. 429, 434, 435, 442, 535, 547, 560.

காப்பாற்றல், 388.
காமம், 360, 399, 402, 605.
காரணம், 270, 529, 530.
காரிகை, 571.
கார், 287.
காலம், 483, 484, 485, 487, 516.
கால், 496, 500.
காவலன், 560.

கிடத்தல், 583.
கிழக்கு, 488.

கீழ், 389, 409.
கீழ்ப்படிதல், 558.

குடம்பை, 338.
குடி, 381, 390, 502, 512, 544, 549, 554, 601, 602, 603, 604, 609.
குடிமை, 608.
குணம், 501.
குதித்தல், 269.
குத்து, 490.
குழாய், 332.
குளம், 523.
குறை, 611.
குற்றம், 272, 433, 434, 436, 502, 504, 549, 601, 609.
குன்றல், 277, 560, 606.

கூகை, 481.
கூடுதல், 269, 394, 484.
கூத்து, 332.
கூம்பல், 425, 490.
கூர்மை, 599.
கூலி, 619.
கூழ், 381, 554.
கூறல், 386.
கூற்றம், 269.
கூற்று, 326.

கெடுதல், 283, 359, 360, 369, 435, 437, 447, 448, 466, 474, 479, 539, 548, 553, 563, 564, 566, 569, 601, 622.

கேடு, 307, 400, 478.
கேட்குதல், 567.
கேணி, 396.
கேண்மை, 441, 519.
கேளிர், 615.
கேள்வி, 413, 414, 416, 417, 418, 419, 423.

கை, 371, 484, 593, 614.
கைகூடல், 269.
கைகூப்பல், 260, 307.
கைத்தல், 389.
கையாறு, 627.
கையிகத்தல், 567.

கொக்கு, 490.
கொடுத்தல், 525.
கொடுமை, 279, 550, 551.
கொடை, 390, 526.
கொம்பு, 476.
கொலை, 323, 329, 550, 551.
கொல், 263, 306, 318, 340, 345.
கொல்லல், 254, 256, 260, 304, 305, 321, 323, 324, 325, 326, 328, 532.
கொள்ளல், 253, 262, 279, 307, 326, 401, 404, 433, 441, 442, 443, 445, 450, 504, 530, 583, 588, 603, 627, 630.
கொற்றம், 583.

கோடல், 520, 546, 554.
கோடி, 337, 377.
கோடு, 279, 523, 559, 599.
கோட்டி, 401.
கோல், 542, 543, 544, 546, 552, 554, 558, 570.
கோள், 311, 312.
கோறல், 254, 321.

சாகாடு, 475.
சாக்காடு, 339.
சாதல், 397.
சாருதல், 323.
சார், 359.
சார்பு, 359, 449.

சாவல், 475, 581.
சான்றோர், 299, 328, 458.

சிதைத்தல், 578, 597.
சிமிழ்த்தல், 274.
சிலர், 270.
சிறப்பு, 311, 358, 590, 630.
சிறத்தல், 515, 531.
சிறுகுதல், 568.
சிறுமை, 412, 431, 451, 498, 505.
சிறை, 499, 569.
சினம், 301, 302, 304, 305, 306, 307, 310, 431, 568.

சீர், 499.
சீர்த்தல், 490.
சீறுதல், 568.

சுடர்தல், 267.
சுடுதல், 267, 293, 306.
சுமத்தல், 488.
சுவை, 253, 420.
சுற்றம், 451, 521, 522, 524, 525, 529, 584.
சுற்றல், 524, 525.

சூழ்தல், 324, 325, 380, 445, 451, 461, 465, 554.

செருத்தல், 259.
செங்கோல், 390, 556.
செய்மை, 358.
செயல், 246, 249, 255, 261, 265, 266, 272, 274, 289, 295, 297, 308, 311, 312, 313, 316, 317, 318, 320, 437, 446, 455, 461, 463, 466, 470, 471, 541, 547, 548, 553, 554, 558.
செயிர், 258, 319, 330.
செரு, 569.
செருக்கு, 346, 431, 598, 613.
செல்லல், 250, 301, 302, 330, 422, 424, 472, 594.
செல்வம், 241, 311, 332, 333, 363, 375, 400, 411, 437, 524, 556, 565, 566.
செவி, 389, 411, 412, 413, 418, 420.
செவ்வி, 565.
செவ்வை, 279.

செறுதல், 335, 421.
செறுநர், 488.
செற்றார், 313, 446.

சேர்தல், 243, 492, 498.
சேர்ந்தாரைக்கொல்லி, 306.

சொரிதல், 259, 376.
சொல், 291, 386, 387, 389, 402, 405, 415, 453, 525, 564, 566, 588.
சொல்லல், 417, 424.

சோர்வு, 405, 531, 586.

ஞாலம், 245, 464, 485, 557.

தகர், 486.
தகுதல், 391, 446, 580.
தகுதி, 416.
தகைமை, 405, 418, 447, 486, 613.
தக்காங்கு, 561.
தங்கல், 389, 472, 608, 613.
தடுத்தல், 450.
தண்டம், 567.
தருதல், 256, 275, 284, 296, 313, 321, 359, 416, 429, 434, 457, 508, 546, 588, 611, 619.
தலை, 295, 317, 322, 325, 357, 394, 405, 411, 444, 488, 579.
தலைப்படுதல், 269, 348, 356.
தலைப்பிரிதல், 258.
தவம், 261, 262, 263, 264, 265, 266, 274, 295.
தவாமை, 361.
தவல், 368.
தவறு, 469.
தழுவல், 425, 544.
தள்ளாமை, 290.
தள்ளுதல், 290, 596.
தனிமை, 338.
தன்மை, 355, 438, 511.

தாக்கல், 486, 599.
தாமரையினான், 617.

தாய், 470, 473.
தாவல், 610.
தாழ்தல், 620.
தாளாண்மை, 613, 614.
தாள், 617.
தானம், 295.
தான், 244, 250, 251, 266, 268, 272, 293, 305, 315, 316, 318, 319, 398, 424, 474, 548.

திரு, 374, 408, 482, 519, 568, 616.
திரிதல், 452.
திறம், 441, 501.
தினல், 252, 254, 256.
தினை, 433.

தீ, 375, 460.
தீர்தல், 292, 348, 482, 508, 510.
தீது, 282, 302, 303, 422, 531.
தீர்த்தல், 612.
தீமை, 291, 330, 450, 511.

துச்சில், 340.
துடைத்தல், 615.
துணிதல், 467.
துணிவு, 383, 533.
துணை, 242, 310, 397, 414, 433, 460, 471, 497.
துப்புரவு, 263, 378.
துயில், 604.
துய்த்தல், 377.
துளி, 557.
துறத்தல், 263, 276, 310, 342, 348, 378, 529, 586.
துன்பம், 267, 368, 369, 615, 628, 629.
துன்னல், 316, 494.

தூ, 455.
தூக்கல், 471, 476, 480.
தூக்காமை, 253.
தூங்கல், 383.
தூண், 615.
தூய்மை, 298, 364, 455, 456.
தூறு, 435.

தெய்வம், 619.
தெரிதல், 329, 462, 501, 503, 510, 583.
தெருளல், 249.
தெளிதல், 353, 464, 508.
தெளிவு, 502, 510, 513.
தெள்ளுதல், 374.
தெறல், 264.
தெற்று, 581.

தேய்த்தல், 555, 567.
தேர், 496.
தேர்தல், 242, 249, 441, 462, 508, 510, 541.
தேறல், 289, 501, 506, 507, 510, 514, 589, 626.
தேற்றம், 513.

தொகுத்தல், 322, 377.
தொக்கல், 589.
தொக்கு, 545.
தொடங்கல், 464, 491.
தொடர், 450.
தொடர்ப்பாடு, 345.
தொட்டல், 396.
தொழில், 394, 428, 549, 582.
தொழுதல், 260, 268.

தோட்கல், 418.
தோய்தல், 308.
தோல், 273.
தோறும், 520.
தோற்றம், 272.
தோன்றல், 371, 479.

நகுதல், 271, 621.
நகை, 304.
நஞ்சு, 580.
நட்பு, 338, 381.
நணுகல், 353.
நயம், 580.
நயவல், 439.
நரி, 500.
நலம், 403, 407, 408, 457, 458, 459, 511.
நனி, 403.
நன்கு, 458, 513, 534.
நன்மை, 242, 823, 324, 375, 379, 416, 439, 450, 460, 469, 511.

நன்று, 252, 259, 297, 308, 323, 328, 379,
404, 422, 456.
நன்னயம், 314.

நா, 335.
நாகரிகம், 580.
நாடல், 242, 504, 514, 516, 518, 520, 553,
561.
நாடு, 397, 545.
நாணல், 314, 483, 506.
நாண், 502.
நாமம், 360.
நாவாய். 496.
நாள், 334, 520, 553.
நான்கு, 501, 513, 605.

நிகழ்தல், 582.
நிச்சம், 532.
நிரப்பு, 532.
நிலம், 307, 383, 386, 413, 452, 496, 499,
526, 544, 570, 572.
நிலை, 255, 290, 325, 331, 370, 449, 489, 544.
நிலைத்தல், 349.
நிலைமை, 273.
நிறைதல், 523.
நிற்றல், 286, 288, 331, 391, 395, 543, 552,
592.
நினைத்தல், 250, 519.

நீங்கல், 246, 341, 352, 353, 358, 383, 495,
502, 519, 562, 592.
நீடுதல், 566.
நீட்டம், 595.
நீட்டல், 280.
நீத்தல், 325, 327, 330, 370, 384, 436, 442.
நீர், 278, 298, 431, 452, 523, 527, 596, 605.

நுணங்கல், 419
நுண்மை, 373, 407, 424.
நுழைதல், 407.
நுனி, 476.

நூங்கு, 460.
நூலோர், 322, 533.
நூல், 373, 410, 440, 543, 560, 581.

நெஞ்சம், } 243, 253, 272, 276, 281, 288,
நெஞ்சு, } 293.
நெடுமை, 495, 496, 562, 566, 605.
நெருநல், 336.
நெறி, 324, 356, 477.

நேர்மை, 550.

நோக்கல், 528.
நோதல், 341.
நோய், 261, 315, 320, 359, 360, 429, 442.
நோன்றல், 261, 344.
நோற்றல், 267, 269, 270.

பகடு, 624.
பகல், 319, 481.
பகுத்தல், 322.
பகை, 304, 434, 450.
பகைவர் 465.
பக்கம், 620.
படி, 606.
படிவம், 586.
படிறு, 271, 275.
படுதல், 266, 269, 272, 279, 348, 379, 408,
468, 556.
படுத்தல், 372, 460, 465, 512, 590, 623.
படை, 253, 381, 498, 555.
பண், 573.
பண்டம், 475.
பண்பு, 389, 469, 579.
பதம், 548.
பயத்தல், 292, 352, 406, 439, 461.
பயன், 354, 524, 560, 606.
பரி, 599.
பரிதல், 376, 502.
பருவம், 482, 490.
பலர், 270, 278.
பல், 242, 275, 322, 337, 342, 373, 459, 468.
பழமை, 521.
பழி, 433, 506, 618.
பழித்தல், 280.
பறத்தல், 338.
பற்றல், 347, 360, 438.
பற்று, 275, 347, 349, 350, 506, 521, 606.
பனை, 433.

யார், 256, 317, 447, 618.
யாழ், 279.
யானை, 599.
யான், 300, 346, 423.

வகுத்தல், 377, 385.
வகுத்தான், 377.
வகை, 377, 465, 514.
வஞ்சம், 271.
வஞ்சித்தல், 276, 366.
வடு, 502, 549.
வட்டு, 401.
வணங்கல், 419.
வண்ணம், 561.
வயறு, 412.
வரம், 296.
வரிசை, 528.
வருந்தல், 468, 619.
வருதல், 264, 303, 319, 356, 530, 609, 625.
வரை, 480, 488.
வலி, 250, 273, 380, 471, 473.
வலை, 348.
வல், 273, 365, 387, 496, 578, 582, 585, 587.
வல்லை, 480.
வழங்கல், 245, 477.
வழி, 461, 508,
வழுக்கல், 536.
வளம், 460, 512.
வளி, 245.
வள்ளல், 598.
வறுமை, 408.
வன்கண்மை, 276.
வன்மை, 444, 446.

வாய், 415, 419, 423, 424, 536, 624.
வாய்மை, 291, 292, 295, 298, 300, 364.
வாரி, 512.
வாழ்க்கை, 330, 435, 479, 523.
வாழ்தல், 276, 337, 392, 420, 479, 528, 542, 557.
வாழ்நாள், 326.
வாள், 334, 614.
வானம், 353, 559.
வானோர், 346.
வான், 272, 542.

விக்குள், 335.
விடல், 267, 280, 314, 343, 347, 350, 422, 450, 451, 476.
வித்து, 361.
வியத்தல், 439, 474.
விருப்பு, 522.
விரைதல், 474.
விலங்கு, 410.
விலை, 256.
விழித்தல், 339.
விழுமம், 284, 313, 363, 400.
விழைதல், 615, 628, 629, 630.
விளக்கம், 601.
விளக்கு, 299.
விளித்தல், 332.
விளைவு, 284, 545.
விளுவுதல், 594.
வினை, 244, 279, 321, 327, 329, 367 439, 455, 456, 463, 471, 514, 584, 611, 615.

வீதல், 284, 289.

வெகுளி, 302, 309, 360, 526, 531.
வெகுளுதல், 308.
வெங்கோல், 563.
வெய்தல், 569.
வெருவந்தம், 563, 569.
வெருவுதல், 599.
வெல்லல், 481, 495.
வெளிறு, 503.
வெள்ளம், 595, 622.
வெறுக்கை, 600.

வேட்டல், 259.
வேட்டுவன், 274.
வேண்டுதல், 257, 263, 265, 280, 281, 316, 320, 342, 343, 357, 362, 470, 562.
வேந்தன், 382, 389, 390, 481, 528, 530, 549, 550, 551, 557, 561, 563, 567, 568, 569, 582.
வேர்த்தல், 487.
வேல், 500, 546, 552.
வேளாண்மை, 613, 614.
வேறு, 374, 514, 519, 600.

வை, 435.
வைத்தல், 388.
வையகம், 547.
வையம், 353.

CORRIGENDA.

Page 35	Note	for கள்ளாமை, read எள்ளாமை.
		,, bless, read bliss.
,, 59	,,	,, mahims, read mahimá.
,, 61	,,	,, sholiasts, read Scholiasts.
,, 83		,, 329, read 339.
,, 89		,, 463, read 346.
,, 232	,,	add *folly*.
,, 272	,,	,, உறை, read முறை.